நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

(பாகம் - 2)



நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்
(பாகம் - 2)

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

இரண்டாம் பதிப்பு : ஜூலை, 2008

G100237O

894.8115
TAM

விலை ரூ. 300/-

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !'' என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்தது மில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம்.

அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.


அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



உரை : 20 **நாள் : 14.03.1983**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1983-84ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை கூறுகின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப் பட்டபோது பத்திரிகையாளர்கள் என்னையும் மற்றுமுள்ள கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்ட போது இந்த நிதிநிலை அறிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள கொடுமையான வறட்சிக்கு தீர்வு காண்பதற்குரிய வகையிலோ துன்பப்படுகின்ற மக்களுக்கு நல்வாழ்வை அளிக்கின்ற விதத்திலோ அமையவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

குறிப்பாக அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதையும் கோடிட்டு காட்டியிருக்கிறோம்.

குடும்பம் ஒன்றுக்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று பல நாளாக இந்த அரசின் சார்பில் முழங்கப்பட்டு வருகின்ற அந்த முழக்கம் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதன் மூலமாக எப்படி நிறைவேற்றப்பட இயலும். அது சாத்தியக்கூறு அல்ல. எனவே இது மக்களை திசை திருப்புகின்ற அல்லது ஏமாற்றுகின்ற ஒரு அறிவிப்பாகத்தான் இருக்கமுடியும் என்பதையும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலும் மற்றும் உள்ள கட்சிகளின் சார்பிலேயும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

பொதுவாக நிதிநிலை அறிக்கையில் ஆண்டுதோறும் வருவாய் உயர்ந்து கொண்டே போகின்ற நிலையை நம்மால் காணமுடிகிறது. நான் கடந்த ஆண்டுகூட எடுத்துக் கூறியிருக்கிறேன். 1966-67 இந்த ஆண்டில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் கால கட்டத்தில் இந்த மாநிலத்தினுடைய வருவாய் கணக்கு 188 கோடி ரூபாயாக இருந்தது.

1968-69லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலக்கட்டத்திலே வருவாய் ரூ.248 கோடியாக இருந்தது. 1975-76ம் ஆண்டு கழக ஆட்சிக் கலைக்கப்படுவதற்கு முன்பு, இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி, மாநிலத்தினுடைய வருவாய் ரூ.501 கோடியாக இருந்தது. இன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ள இந்த அறிக்கையில் அந்த 501 கோடி ரூபாய் மூன்றரை மடங்காக உயர்ந்து 1774 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது அல்லது வளர்ந்திருக்கிறது. இந்தப் பெருக்கத்திற்கு அல்லது வளர்ச்சிக்கு காரணம், 1975-76லே 98 கோடி ரூபாயாக இருந்த விற்பனை வரி, இப்போது 710 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975-76ல் 50 கோடியாக இருந்த மது ஆயத்தீர்வை இப்போது 160 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975-76ல் 13 கோடி ரூபாயாக இருந்த மோட்டார் வண்டி வாகன வரிகள், இன்றைக்கு 82 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும், 1975-76ல் 21 கோடி ரூபாயாக இருந்த முத்திரைத் தாள் வருமானம் இப்போது 62 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இவைகளின் காரணமாக 1774 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கை மூன்றரை மடங்கு உயர்ந்து இருக்கிறது என்று குறிப்பிட்டாலும் கூட, பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டடிருக்கிறது. 1975-76ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட அளவிற்காவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்,

உதாரணத்திற்கு என்று எடுத்துக் கொண்டாலும்கூட கல்வித் துறைக்கு 1975-76ல் 118 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டது. மூன்றரைமடங்கு வருமானம் பெருகியுள்ள இந்த நேரத்தில் 403 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கப்பட்டுள்ளது 355 கோடிதான். அதாவது 48 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையிலே விகிதாச்சார கணக்குப் பார்த்தால், முக்கியமான துறைகளில் 1975-76லே ஒதுக்கப்பட்டதைவிட, இப்போது குறைவான தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் காணலாம். கல்வித்துறையில் 1975-76ல் 23.64 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது வைக்கப்பட்டுள்ள 1983-84ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 20.01 சதவீதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மருத்துவத்துறையில் 1975-76ல் 6.19 சதவீதம், இப்போது 5.13 சதவீதம்தான். கூட்டுறவுத் துறையில் 0.92 சதவீதம், இப்போது 0.56 சதவீதம்தான். தொழில்கள், ஊரகத்தொழில்கள் போன்றவைக்கு 1975-76ல் 0.79 சதவீதம், இப்போது 0.58 சதவீதம்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. தொழிலாளர் நலனில் 1075-76ல் 0.67 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இப்போது 0.56 சதவீதம்தான்.

பாசனத்துறைக்கு 1975-76ல் 3.94 சதவீதம் ஒதுக்கப் பட்டது. இப்போது 2.32 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. சாலைகள், பாலங்கள், இவைகளுக்கு 1975-76ல் 4.20 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டது. இப்போது 3.80 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காட்டு வளத்திற்கு 1975-76ல் 0.66 சதவீதம், ஒதுக்கப்பட்டது. இப்போது 1983-84ல், 0.57 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலைகளில் செலவழிப்பதற்காக கைதிகளின் வசதிகள் போன்றவைகளுக்காக 1975-76ல் 0.88 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 0.40 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல்துறைக்கு 1975–76ல் 5.30 சதவீதம், இப்போது 4.29 சதவீதம், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு 1975-76ல் 1.16 சதவீதம், இப்போது 0.58 சதவீதம்தான்.

501 கோடி ரூபாய் வருமானம் வந்த 1975-76ல் ஏறத்தாழ, 6 கோடி ரூபாய் பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றபோது, 1983-84ல் அதாவது இப்போது 1774 கோடி ரூபாய் வருமானம் வருகின்றபோது 15 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி இருக்கவேண்டும். ஆனால் 5 கோடி ரூபாய் குறைவாக பிற்பட்டோர் நலனுக்காக 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இவை, வளர்ச்சிப் பணிகளில் அல்லது பல்வேறு துறைகளில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நிலைகளை உருவாக்குவதற்குப் பயன்பட முடியாது என்பது என்னுடைய குறைபாடாகும்.

திட்ட ஒதுக்கீடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. 1982-83 ஆம் ஆண்டிலே திட்டத்திற்காக ஒதுக்கீடு, மத்திய ஒப்புதல் 711 கோடி ரூபாய் நமக்குக் கிடைத்தது. ஆனால் 1982-83ஆம் ஆண்டுக்கான செலவுகள் 795.93 கோடி ரூபாய் என்று நிதியமைச்சரே பத்திரிகையாளர்களிடத்திலே அறிவித்திருக்கிறார். நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட் டிருக்கிறார். ஒப்புதல் கிடைத்தது 711 கோடி ரூபாய்க்கு, 1982-83ல். ஆனால் அதற்கும் மாறாக நாம் செலவழிக்க வேண்டிய மொத்தத் தொகை, அது 795.9 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 796 கோடி ரூபாய் செலவாகி இருக்கின்ற நேரத்தில் 1983-84ஆம் ஆண்டுக்கு ஒரு ஆயிரம் கோடி ரூபாயாவது கேட்டிருந்தால்தான் இன்னும் அதிகத் திட்ட உதவியை, ஒப்புதலை நாம் பெற்றிருக்க முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் இறுதியில் 27 அல்லது 28ஆம் தேதி வாக்கில் திருச்சியிலே பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது அவர்கள் கேட்ட கேள்விக்கு விடையிறுத்த நேரத்தில் 800 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் கேட்கப் போவதாகக் கூறினார்கள். 1982-83லே 796 கோடி ரூபாய் திட்ட செலவாகி இருக்கும்போது 800 கோடி ரூபாய்க்குத்தான் அதாவது 796 கோடி ரூபாயுடன் 4 கோடி ரூபாய் உயர்த்தித்தான் நாங்கள் கேட்பதாக இருக்கிறோம் என்று நவம்பர் மாதத்திலே கூறிவிட்டு பிறகு திட்டக்

குழுவினை டெல்லிக்குச் சென்று சந்திக்கின்ற நேரத்தில் 845 கோடி ரூபாய்தான் நம்மால் பெற முடிகின்றது என்றால் அதற்குக் காரணம் நாம் முன்கூட்டியே செய்த தவறுதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பத்திரிகையாளரிடத்திலே பேசும் போதும் அல்லது இந்த அவையில் பேசுகின்ற நேரத்திலும் ஆயிரம் கோடி அல்லது 1200 கோடி ரூபாய் அளவுக்கு திட்டத்திற்கான ஒப்புதல் தேவை என்று நிதியமைச்சரோ மற்றவர்களோ ஆளும் கட்சி சார்பிலே எடுத்துக்கூறி இருப்பார்களேயானால் 845 கோடி ரூபாய் என்று ஒரு குறைந்த திட்ட ஒதுக்கீட்டிற்கான ஒப்புதலைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார். 845 கோடிக்கு திட்டக்குழு ஒப்புதல் அளித்திருக்கின்றது என்றாலும் கூட செலவு 893 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று குறிப்பிடு கின்றார். இப்படி 893 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்ற நேரத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருந்தால்தான் நாம் 900 கோடியாவது பெற்றிருக்க இயலும். எனவேதான் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசியபோது 800 கோடி ரூபாய் எங்களுக்குப் போதுமானது. எனவே அதைத்தான் கேட்பதாக இருக்கிறோம் என்று திருச்சியிலே நிதியமைச்சர் அவர்கள் கூறியது நமக்கு வரவேண்டிய ஒப்புதல் தொகைக்கு ஒரு இடையூறாக குறுக்கீடாக அமைந்துவிட்டதோ என்று ஐயுறுகிறேன்.

மாநிலங்களுக்கு மத்தியிலிருந்து தரப்படுகின்ற உதவியைப் பற்றி, அதாவது நபர்வாரியாகக் கணக்கீடு செய்து தரப்படுகின்ற அந்த உதவியைப் பற்றி மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி.சவான் அவர்கள் பாராளுமன்றத்திலே ஒரு அறிக்கையைத் தரும்போது குறிப்பிடுகிறார். மாநிலங்களுக்கு நபர்வாரி உதவியைப் பொறுத்தவரையில் இராஜஸ்தானுக்கு ரூபாய் 60; உத்தரப்பிரதேசத்திற்கு ரூபாய் 48; மேற்கு வங்கத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு

32 ரூபாய்தான் கொடுத்தார்கள். அவர்கள் வாதாடி, போராடியதன் காரணமாக மேற்கு வங்கத்திற்கு கிடைத்த நபர்வாரி மாநில உதவி 65 ரூபாய். இராஜஸ்தானுக்கு 60 ரூபாய். உத்தரப்பிரதேசத்திற்கு 48 ரூபாய். மேற்கு வங்கத்திற்கு 65 ரூபாய். தமிழ்நாட்டுக்கு 34 ரூபாய்; எனவே இந்த நிலையிலே இருக்கும்போது நம்முடைய கோரிக்கை குறைவாக இருந்ததால்தான் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய மத்திய உதவி கிடைக்காமல் போய் விட்டது என்ற குறைபாட்டை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசாங்கத்தினுடைய சார்பில் நடைபெறுகின்ற தொழில்கள், கார்ப்பரேஷன்கள் இவைகள் எல்லாம் எப்படி நடை பெறுகின்றன என்பதை நான் அல்ல இதே அவையில் 27.1.83 அன்று வைக்கப்பட்டுள்ள Comptroller and Auditor-General of India அவர்கள் தந்த அறிக்கை என்ன கூறுகிறது என்பதை கொஞ்சம் கவனத்தில் நாம் கொள்ள வேண்டும். தமிழ்நாடு சிமெண்டு கார்ப்பரேஷன் 1979-80ம் ஆண்டு நஷ்டம் 273 இலட்ச ரூபாய். 1980-81 நஷ்டம் 258 லட்ச ரூபாய்.

அந்த அறிக்கை 1980-81 வரையில்தான் முடிவுற்று 1983ஆம் ஆண்டு இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அந்த அளவு கணக்கைதான் அந்த அறிக்கையின் மூலம் பெற முடிந்தது. லாபம் வந்து கொண்டிருந்த சில போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இப்போது நடக்கத் தொடங்கியிருக்கின்றன என்ற கணக்கினையும் அந்த அறிக்கை எடுத்து இயம்ப தவறவில்லை. சேரன் போக்குவரத்துக் கழகம் 1979-80ல் 1.41 லட்சம் ரூபாய் லாபத்தில் நடைபெற்றது. 1980-81ல் 1.06 லட்ச ரூபாய் நஷ்டம் அடைகின்ற அளவுக்கு தாழ்ந்து போயிருக்கிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம் 1979-80ல் லாபம் 18.33 லட்ச ரூபாய் 1980-81 நஷ்டம் 117.74 லட்ச ரூபாய். அண்ணா போக்குவரத்துக் கழகம் 1979-80ல் லாபம் 2.13 லட்ச ரூபாய். 1980-81ல் நஷ்டம் 17.85 லட்ச ரூபாய். பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 1979-80ல் நஷ்டம் 50.90 லட்ச ரூபாய். 1980-81ல் நஷ்டம் 117.26 லட்ச ரூபாய்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் 1979-80ல் லாபம் 1.90 லட்ச ரூபாய். 1980-81ல் நஷ்டம் 57.74 லட்ச ரூபாய். தமிழ்நாடு பாரஸ்டு பிளான்டேஷன் கார்ப்பரேஷன் 1979-80ல் நஷ்டம் 9.11 லட்ச ரூபாய். 1980-81ல் நஷ்டம் 20.89 லட்ச ரூபாய். இதுபோல மொத்தம் 19 தொழில்களில் ஏற்பட்டுள்ள நஷ்டம் 1979-80ல் 7 கோடி ரூபாய் என்றும் 1980-81ல் 9 கோடி ரூபாய் என்றும் இந்த அவையில் அரசின் சார்பில் வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. இதற்கு அடுத்த ஆண்டுகளில் மேலும் மேலும் நஷ்டம் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட நஷ்டத்தை நாம் இங்கே எடுத்துக்காட்டுகின்ற காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய நாங்கள் கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எதிர்க்கட்சி தலைவரே நஷ்டங்களை சுட்டிக்காட்டியிருக்கின்ற காரணத்தினால் நாங்கள் அதை ஈடு செய்ய வேண்டிய அவசியத்திற்கு பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக் கிறது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த நஷ்டங்களுக்குக் காரணம் கட்டணத்தை உயர்த்தாதது அல்ல என்பதையும் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறாத காரணத்தினால் - நிர்வாக இயந்திரத்தில் பழுது இருக்கிற காரணத்தினால் - ஆக்கப்பூர்வமான பணிகள் இந்தத் தொழில்களில் நிர்வாக ரீதியாக நடைபெறாத காரணத்தால் இத்தகைய நஷ்டத்திற்கு இந்தத் தொழில்கள் ஆளாகி யிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்று மிகப்பெரிதாக இந்த மாநிலத்தில் விவாதிக்கப் படுகின்ற பிரச்சினை உணவுப் பிரச்சினை. நான் இந்த உணவுப் பிரச்சினை குறித்து சில கருத்துக்களை விவரமாகக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்பு நான் ஏதோ மத்திய அரசுக்குச் சார்பாக வாதாடுகிறேன் என்று யாரும் தயவுசெய்து கருதிக் கொள்ளவேண்டாம். இப்போது அவர்கள் 5 ஆயிரம் டன் அரிசியும் 5 ஆயிரம் டன் கோதுமையும் அனுப்பியிருப்பது எதிர்கட்சித் தரப்பில் உள்ளவர்களும், ஆளும் கட்சித் தரப்பில் உள்ளவர்களும் எடுத்துக்காட்டியதுபோல ''யானைப் பசிக்கு

சோளப் பொறிபோல்'' என்பதை நான் மறுக்கவில்லை. ஏற்றுக்கொள்கிறேன். எத்தனை தவறுகள், குறைபாடுகள் மாநில அரசு மீது மத்திய அமைப்பால் அல்லது மத்திய அரசால் சுட்டிக்காட்டப்பட்டால்கூட இந்தியா ஒரு நாடு என்கிற கொள்கையை கடைப்பிடிக்கின்ற தேசிய உணர்வுக்கு முக்கியத்துவம் தருகின்ற மத்திய அரசு மாநில மக்களுடைய கஷ்டங்களை அறிந்து உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க உடனடியாக முன்வர வேண்டும் என்பதிலே இரு வேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

5 ஆயிரம் டன் அரிசி அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 7 மணி நேரம் உண்ணா விரதம் இருந்தார்கள். அடையாளமாக ஒரு 7 ஆயிரம் டன்னாவது அனுப்பியிருக்கலாம். அதுகூட அனுப்பாமல் 5 ஆயிரம் டன் அரிசியை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது பெரிய பிரச்சினை மத்திய தொகுப்புக்கும் மாநில அரசுக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வாதப்பிரதி வாதங்கள். மத்திய தொகுப்பு என்றால் ஏதோ டெல்லியிலே களஞ்சியங்கள் கட்டி வைத்து அதற்கு எல்லா மாநிலங்களிலும் இருக்கிற அரசுகள் அரிசியையோ அல்லது உணவு தானியங்களையோ அனுப்பி வைக்க வேண்டுமென்பது பொருள் அல்ல. அந்த அந்த மாநிலங்களிலே மத்திய தொகுப்பு களஞ்சியங்களும் அலுவலகங்களும் இருந்து அந்தந்த மாநிலங்களில் உள்ள உபரியான தானியங்களை அந்தத் தொகுப்புகளுக்கு அளிப்பதும் அப்படி சேகரிக்கப் பட்ட உணவு தானியங்களை இந்தியாவிலே எப்போது ஒரு மாநிலத்தில் ஸ்கேர்சிட்டி, உணவுப்பற்றாக் குறை, வருகிறதோ அந்த நேரத்திலே உணவு தானியங்களை அந்த மாநிலங்களுக்கு அளிப்பதுதான் மத்திய தொகுப்பின் வேலையே தவிர வேறல்ல. ஏன் என்றால் மத்திய அரசுக்கு இந்த மாநிலங்களிலே இருக்கிற நிலங்களைத் தவிர வேறு தனியாக நிலங்கள் சாகுபடி செய்வதற்கு இல்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே மத்திய தொகுப்புக்கு ஒவ்வொரு மாநிலமும் தருகிற அரிசி அல்லது உணவு தானியம் இவையெல்லாம் பற்றாக்குறை மாநிலங்களுக்காக

முன்னேற்பாடாக முன்னெச்சரிக்கையாக தரப்படுகிற ஒன்றே தவிர வேறுஅல்ல.

மேலவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாநோன்பு இருப்பதாக அறிவித்த அந்தக் கட்டத்தில் ஒரு அறிக்கையைப் படித்தார்கள் அல்லது பேசினார்கள். அது ஏடுகளிலே வெளிவந்திருக்கிறது. அப்போது அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். 1971ல் 50 ஆயிரம் டன் அரிசி தமிழ் நாட்டிலிருந்து மத்திய தொகுப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1972-73ஆம் ஆண்டில் 1 லட்சத்து 11 ஆயிரம் டன் தமிழ்நாட்டிலிருந்து மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது. 1975-76இல் 2 லட்சத்து 93 ஆயிரம் டன் தமிழகத்திலிருந்து மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது. இவைகளைக் கூறிவிட்டு 1979ஆம் ஆண்டிலே கொடுத்த 2 லட்சம் டன் அரிசியை மைய அரசு பெற்று கொள்ள தாமதம் காட்டியது அல்லது தயக்கம் காட்டியது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே பேசினார்கள். உண்ணாவிரதத்திற்கு முதல் நாளன்று பேசினார்கள். எல்லா ஏடுகளிலும் அந்த செய்தி வெளிவந்திருக்கிறது. தமிழக அரசு மத்திய தொகுப்புக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக்கழக அரசு இங்கே கோலோச்சிய ஆண்டுகள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மறந்து இருக்கமாட்டார்கள். அவைத் தலைவர் அவர்களே, தாங்களும் மறந்திருக்கமாட்டீர்கள், நம்முடைய மின்துறை அமைச்சரும் மறந்து இருக்கமாட்டார்கள். ஆகவே 1971ஆம் ஆண்டு 50 ஆயிரம் டன் அனுப்பியதானாலும் 1972-73ஆம் ஆண்டு 1 லட்சத்து 11 ஆயிரம் டன் அனுப்பியதானாலும் 1975-76ஆம் ஆண்டு 2 லட்சத்து 93 ஆயிரம் டன் அனுப்பியதானாலும் அது கழக ஆட்சிக் காலத்திலே அனுப்பப்பட்ட அரிசியாகும். 1979ஆம் ஆண்டிலே கொடுத்தோம், எடுத்துக்கொள்ளவில்லை, தயக்கம் காட்டினார்கள் என்றெல்லாம் முதலமைச்சர் சொல்கின்ற அந்த காலகட்டத்தில் மத்தியில் இருந்த அரசு ஜனதா அரசு என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. 1970-71ல் கழக ஆட்சிக் காலத்திலே 50 ஆயிரம் டன் மத்திய தொகுப்புக்குத் தந்த போது தமிழ்நாட்டினுடைய உணவு

உற்பத்தி எவ்வளவு? நான் 1971ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் உள்ள நிதிநிலை அறிக்கைகள் அத்தனையையும் இங்கே கைவசம் வைத்திருக்கிறேன், சந்தேகம் ஏற்பட்டால் சான்று காட்டுவதற்காக. அதன்படி 1970-71இல் கழக ஆட்சியிலே உணவு உற்பத்தி எவ்வளவு என்று நிதிநிலை அறிக்கையிலே அன்றைக்கு சுட்டிக்காட்டப்பட்டது 70 லட்சம் டன். அந்த 70 லட்சம் டன்னிலேதான் 50 ஆயிரம் டன் மத்திய தொகுப்புக்கு தரப்பட்டது. முதலமைச்சர் குறிப்பிட்டபடி 1972–73ல் ஒரு லட்சத்து 11 ஆயிரம் டன் தரப்பட்டபோது தமிழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, தஞ்சை, தென்னாற்காடு போன்ற பல மாவட்டங்களில் கழனிகள் எல்லாம் கரைபுரண்டு வந்த ஆற்று வெள்ளத்தால் மண் மேடிட்டு, பல கோடி ரூபாய் செலவிடப்பட்டு அந்த மண்மேடுகளை எல்லாம் கரைத்து, வெட்டியெடுத்து மீண்டும் வயல்களை காணவேண்டிய ஒரு பயங்கரமான சூழ்நிலை. அந்த சூழ்நிலையில் கூட 1972–73ல் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல 1 லட்சத்து 11ஆயிரம் டன் அரிசியை கழக அரசு மத்திய தொகுப்பிற்கு தந்துள்ளது, 1975–76 வறட்சி காலம், அப்போது இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை படித்த நான் இப்படியே சொல்லியிருக்கிறேன், வறட்சி துயர் தணிப்புப் பணிகளுக்காக திட்டத்திற்கு அப்பால் மேலும் 20 கோடி ரூபாய், 1975–76 வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டதிலேயிருந்து அது வறட்சி காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நாடும் அறியும். ஆனால் அந்த வறட்சி காலத்திலே முதலமைச்சர் மேலவையிலே குறிப்பிட்டதைப் போல 1975, 1976ல், 2 லட்சத்து 93ஆயிரம் டன் தமிழக அரசு மத்திய தொகுப்பிற்கு ஒதுக்கியிருக்கிறது. 1979ல் அன்றுள்ள அரசு, கொடுத்ததை ஏற்றுக் கொள்ளவில்லை; தாமதம் காட்டினார்கள் என்று சொல்லப்பட்டாலும்கூட, 1978ல் கொடுத்தார்களா என்றால் இல்லை. 1978லே உணவு உற்பத்தி குறைவா என்றால் கிடையாது. 1978ம் ஆண்டு 74 லட்சம் டன் உணவு உற்பத்தி என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. 1970–71லே 70 லட்சம் டன் உற்பத்தி

ஆகக்கூடிய சூழ்நிலையிலிருந்தபோது நாம் 50 ஆயிரம் டன் அன்றிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் 74 லட்சம் டன் உற்பத்தியான போது 1978ல் அன்றுள்ள அரசு கொடுக்கவில்லை என்பதை மறந்துவிட இயலாது. 1978-79 நிதிநிலை அறிக்கையின்படி 87 லட்சம் டன் உற்பத்தி. 87 லட்சம் டன் உற்பத்தியான போதும் இந்த அரசு மத்திய அரசு தொகுப்பிற்கு அரிசி அனுப்பவில்லை. 1980-81ல் நம்முடைய நாவலர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையின்படி, உணவு உற்பத்தி 89 இலட்சம் டன். அப்போது மத்திய தொகுப்பிற்கு இந்த அரசு அரிசி தரவில்லை. 1981-82ஆம் ஆண்டில் நாவலர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையின்படி அறிவித்தது 92 இலட்சம் டன் உற்பத்தியாகும் என்று; ஆனால் உற்பத்தியானதாக பிறகு சொல்லப்பட்டது 85 இலட்சம் டன். அப்போதும் மத்திய தொகுப்பிற்கு இந்த அரசு அரிசி அனுப்பவில்லை. 1982-83ஆம் ஆண்டு அறிக்கையில் 96 இலட்சம் டன் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்ன போதிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை என்பதையும், வறட்சியால் இந்த மாநிலம் பாதிக்கப்பட்டது என்பதையும் நாங்கள் மறந்து விடவில்லை; ஆனால் நான் கேட்பதெல்லாம், 1978-79, 1980-81, 1981-82 ஆகிய மூன்று ஆண்டுகளில் மத்திய அரசின் தொகுப்பிற்கு ஏன் அனுப்பவில்லை? இங்கே வேளாண்மைத் துறை நல்லமுறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. வேளாண்மைத்துறையில் ஆண்டிற்காண்டு வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் நிதி நிலை அறிக்கையில் பெருமையாகக் கூறிவிட்டு மத்திய தொகுப்பிற்கு வழங்க வேண்டியதை ஏன் வழங்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

1982-83ஆம் ஆண்டில் இந்த அவையில் வைக்கப்பட்ட ''நுகர் பொருள் வழங்கல் கொள்கை விளக்கக் குறிப்பு'' என்னுடைய கையில் இருக்கிறது. அதிலே அரசின் சார்பில் என்ன குறிப்பிட்டிருக்கிறீர்கள்? ''மாநிலத்தில் பல பகுதிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, வழக்கமான உபரி மாவட்டங்களான வடாற்காடு, செங்கல்பட்டு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் நெல்

மற்ற பொருள்கள் உற்பத்தி குறைந்துவிட்ட இந்த நேரத்திலும் நிலைமை கட்டுக்கடங்காமல் போக அனுமதிக்கப்படவில்லை; இந்திய அரசின் மத்திய தொகுப்பிலிருந்து அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் ஒதுக்கீடு செய்யப்பட இந்த அரசு மத்திய அரசைக் கேட்டு வந்தது. அவர்கள் மாதம் ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் என்ற அளவிற்கு ஒதுக்கீடு செய்தார்கள். இந்த அளவு நாம் கேட்டதை விட குறைவாக இருந்தாலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தக்க தருணத்தில் செய்த உதவிக்கு இந்த அரசு நன்றி கூறிக்கொள்கிறது. ஆக சென்ற ஆண்டு 60 ஆயிரம் டன் மாதம் ஒன்றுக்கு மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசுக்கு அரிசி தரப்பட்டிருக்கிறது, என்பது இந்த அவையிலே வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின் மூலமே உணர்த்தப்படுகிறது. அப்படி 60 ஆயிரம் டன் கொடுத்தவர்கள் இந்த ஆண்டு ஏன் கொடுத்திருக்கக்கூடாது? அதாவது தமிழக அரசு மத்திய தொகுப்பிற்கு தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகள் கொடுக்காதிருந்தபோதே, 60 ஆயிரம் டன் கொடுத்த மத்திய தொகுப்பு அல்லது மத்திய அரசு இப்போதும் ஏன் தந்திருக்கக்கூடாது என்கிற கேள்வி இயல்பாக எழும்.

ஆனால், அப்படிப்பட்ட கேள்வி வேகமாக அல்லது உணர்வு பூர்வமாக எழுகிற நேரத்தில், அதைத் தடுக்கிற வகையில் அல்லது அந்தக் கேள்விக்கு ஒரு தயக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் டெல்லிக்குச் சென்று திரும்பிய நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பத்திரிகை நிருபர்களிடையேயான பேட்டி அமைந்துவிட்டது என்பதை நான் கூறாமல் இருக்க முடியாது. 18.2.1983 அன்று டெல்லியிலிருந்து திரும்பிய முதல் அமைச்சர் அவர்களை நிருபர்கள் சந்தித்துக் கேட்கிறார்கள். நிருபர் : 85,000 டன் அரிசியில் ஓரளவாவது ஈடுகட்ட வேண்டுமென்று கேட்டீர்களா? அதற்கு முதலமைச்சருடைய பதில் ''அதை இப்பொழுது சொல்ல முடியாது. அவர்களுக்கே நெருக்கடி இருக்கிறது. இந்தியா முழுவதற்கும் சென்ற ஆண்டு கையிருப்பி லிருந்த அரிசியை விட இப்பொழுது அவர்களிடத்திலே அரிசி குறைவு.''

இப்படிச் சொல்லிவிட்ட பிறகு நாம் எங்களுக்கு அரிசி தர வேண்டுமென்று போராடுவதற்கான உரிமையை, நம்மை அறியாமல் விட்டுக் கொடுத்து விடுகிறோமா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுத் துறையிலே, மிக முக்கியமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டு வருகின்ற - நல்ல முறையிலே என்று சொல்ல மாட்டேன். ஏதோ நிறைவேற்றப்பட்டு வருகின்ற - சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 134 கோடி செலவழிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆந்திராவில் ஏறத்தாழ - இங்கே 67 இலட்சம் அல்லது 65 இலட்சம் பிள்ளைகள் என்றால், ஆந்திராவிலேயும் - 63லிருந்து 64 இலட்சம் பிள்ளைகளுக்குச் சத்துணவு– ரொட்டியும், பாலும் தருவதற்கு ரூ.80 கோடி செலவாகும் என்று ஆந்திர நிதி அமைச்சர் அண்மையிலே வெளியிட்ட கருத்து, எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது.

இதிலே, இன்னொரு வேடிக்கை, சத்துணவிற்காக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் மாதந்தோறும் சுமார் 20,000 டன் அரிசி வாங்கப்படுகிறது. இந்த அரிசி எந்த விலைக்கு வாங்கப்படுகிறது என்றால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 1 கிலோ ரூ.4க்கு வாங்குகிறது. ஆனால் சத்துணவுத் திட்டத்திற்காக, அதை அரசுக்கு அல்லது அரசினுடைய துறைகளுக்குக் கொடுக்கும்போது, ஒரு ரூபாய் 75 காசுக்குக் கொடுக்கிறது. அதாவது, ஒரு கிலோவிற்கு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ரூ. 2¼ நஷ்டம் என்றால், மாதத்திற்கு 20,000 டன்னுக்கு ரூ. 4½ கோடி; ஆண்டுக்கு ரூ.50 கோடி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு நஷ்டம். அந்த நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டியது அரசின் பொறுப்பு என்று நாம் எடுத்துக் கொள்வோமேயானால், 134 பிளஸ் 50 ஆக, சத்துணவிற்காக ரூ. 184 கோடி செலவழிக்கப்படுகிறது.

இதை நான் சொல்கிற காரணத்தாலேயே, திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் சத்துணவிற்கு இந்தத் திட்டத்திற்கு எதிரிகள் என்று இங்கும் பேசலாம் வெளியிலும்

பேசலாம். ஆனால், இந்த மன்றத்திலே அவைக் குறிப்பிலே என்னுடைய பேச்சு ஏறியிருக்கிறது. சத்துணவுத் திட்டம் பற்றி சில மாற்றுக் கருத்துக்களை நாங்கள் சொன்னோமே தவிர, புறம்பான கருத்துக்களை நாங்கள் எடுத்துக்கூறவில்லை. இந்த முறையினால் ஊழல்கள் பெருகிடக்கூடும். தவறுகள் நடந்திடக் கூடும். எனவே இதற்குப் பதிலாக வேறு ஒரு மாற்று முறையின் மூலம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கலாம் என்ற கருத்தைத்தான் இந்த அவையில் நான் குறிப்பிட்டிருக் கிறேன்.

ஆனால் இங்கும் வெளியிலும் தேர்தல் பிரச்சாரங் களிலும் 'சத்துணவு போடுகின்ற முதலமைச்சருக்கா? அல்லது சத்துணவு வேண்டாம் என்கிற கருணாநிதிக்கா' என்கிற அளவுக்குக் கேள்விகள் விசுவரூபம் எடுத்து ஏதோ சத்துணவு திட்டத்திற்கே நாங்கள் விரோதிகள் என்பதைப் போன்ற ஒரு பாவனை, அதற்குக் காட்டப்பட்டதை உள்ளபடியே நான் வேதனையோடு குறிப்பிடுகின்றேன். சத்துணவு சத்துணவாக இருக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்தே தவிர வேறு அல்ல.

5000 அல்லது 10000 அல்லது 20,000 ரூபாய்க்கு ஒரு சத்துணவுக் கூடம் கட்டப்படுகிறதென்றால், அந்தக் கூடத்தினுடைய திறப்பு விழாவுக்கு ரூ. 2 இலட்சம், ரூ.3 இலட்சம் செலவழிக்கப்பட்டால், இந்த வீண் விரயங்கள் எல்லாம் தவிர்க்கப்படக்கூடாதா என்று நாங்கள் கேட்பது சத்துணவுத் திட்டத்திற்கு நாங்கள் எதிரிகள் என்று ஆகிவிடாது.

நம்முடைய நிதியமைச்சர், ரேஷன் கார்டுகளுக்கு இருபது கிலோ அரிசி மாதம் ஒன்றுக்குத் தரப்படுகிறது என்று குறிப்பிட்டார். ஆனால் நம்முடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னிடத்திலே ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதாவது தென்னாற்காடு மாவட்டத்தில் 1.2.1983 முதல் 15 நாட்களுக்கு ஒரு கார்டுக்கு மூன்று கிலோ அரிசிதான் தரப்படுகிறது. அதாவது 1.2.1983 முதல் மூன்று கிலோ அரிசி 15 நாளைக்கு; மாதத்திற்கு ஆறு கிலோ அரிசிதான் தரப்பட்டது. அதையும் இப்பொழுது மாற்றி 1.3.1983 முதல்

இரண்டு கிலோ அரிசிதான் தரப்படுகிறது 15 நாளைக்கு; மாதத்திற்கு நான்கு கிலோ அரிசிதான் தரப்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருக்கின்ற உணவுப் பிரச்சினையைப் போல, மின்சார வெட்டுப்பிரச்சினை. இதன் காரணமாக எந்த அளவிற்கு இந்த மாநிலம் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே விரிவாக எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். மழை பெய்யவில்லை. எனவே புனல் மின்சாரம் இல்லை என்று காரணம் காட்டப்பட்டாலும், புனல் மின்சாரம் இல்லாவிட்டால் என்ன, அனல் மின்சாரத்தையாவது நீங்கள் அக்கறைகாட்டி அதைப் பெருக்கி வசதிகளைத் தந்தீர்களா என்றால் இல்லை என்ற பதில்தான் இன்றைக்கு எங்களுக்குக் கிடைக்கிறது.

நான் கேள்விப்படுகிறேன். அது ஒரு வேளை தவறாக இருக்குமேயானால் பிறகு மின்துறை அமைச்சரவர்கள் நிதியமைச்சரிடத்தில் சொல்லி திருத்தம் கூடத்தரலாம். நான் கேள்விப்பட்டவரையில், மத்திய அரசு, ''கோல் இந்தியா லிமிடெட்'' வாயிலாக தூத்துக்குடி,எண்ணூர் மின் நிலையங் களுக்கு 1,80,000 டன் மாதந்தோறும் நிலக்கரி ஒதுக்கீடு'' செய்திருப்பதாகவும், இதில் 80,000 டன் கூட நாம் எடுத்து வருவதாகத் தெரியவில்லை என்றும் எனக்குத் தகவல்.

கல்கத்தாவில் ''கரன் சந்த் தாப்பா'' என்ற ஒரு கம்பெனிக்குதான் இந்தக் கான்ட்ராக்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதிலே பலர் டென்டர் கேட்டும்கூட, குறிப்பாக கல்கத்தாவிலே ''கரன் சந்த் தாப்பாவுக்கு'' ஐந்தாண்டு காலமாக அவரே கான்ட்ராக்ட் எடுக்கின்ற சூழ்நிலை உருவாகி யிருக்கிறது.

அந்தக் கம்பெனி வேறு பல மின்சார வாரியங்களுக்கு, டெல்லியிலே உள்ள மின்சார வாரியங்களுக்கு எல்லாம் இந்த நிலக்கரியை சப்ளை செய்ய வேண்டியிருப்பதால் நம்முடைய தேவையை நிறைவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். இப்பொழுது மறுபடியும் டெண்டர் போட்டபொழுது ஐந்தாண்டுகளுக்குப்

பிறகு ஒரு டெண்டர் போட்டபொழுது, வேறு சிலர் குறைந்த தொகைக்கு டெண்டர் கேட்டாலும்கூட அவர்களுக்கு டெண்டர் தரப்படாமல் அதே ''கரன் சந்த் தாப்பா'' என்ற இந்தக் கம்பெனியை அழைத்து அவர்களை குறைத்துக் கொள்ளச் சொல்லி ஐந்தாண்டுக் காலமாக எந்த அளவு டெண்டர் அவர்கள் போட்டு வாங்கிக் கொண்டிருந்தார்களோ அதை அவர்கள் குறைத்துக் கொண்டு, அவர்களுக்கு மறுபடியும் தரப்பட்டிருப்ப தாகக் கேள்விப்படுகிறேன். அப்படித் தரப்பட்டிருந்தால் இந்த ஐந்தாண்டுக் காலமாக நாம் அதிகமாகக் கொடுத்தது வீண் நஷ்டம்தானே, இழப்புதானே என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

இதை அவையிலே நான் முதலில் குறிப்பிட்டதைப் போல 27.1.83ல் வைக்கப்பட்ட, Comptroller and Auditor - General of India தந்த அறிக்கையில் 1980-81ஆம் ஆண்டுக்கான நிலவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அடுத்தடுத்த ஆண்டுக்கான அறிக்கைகள் பிறகு வெளிவரக்கூடும். 1980-81இல் மட்டும் எவ்வளவு நிர்வாக சீர்கேடுகள் இருந்தன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

Against the normal of 35 to 45 days for erection, more than 6 months were taken for erection in a large number of cases; in a few cases, the delay in erection was 1 to 4 years resulting in locking up of large funds for longer periods.

அதாவது 35 முதல் 45 நாட்களுக்குள் நடைபெற்று முடியவேண்டிய பவர் டிரான்ஸ்ஃபார்மர் நிறுவுகிற பல வேலை ஆறு மாதங்களுக்கும் மேலும் சிலவற்றில் ஓராண்டு முதல் நான்காண்டு வரையிலும் நடைபெற்று நீண்ட நாட்களுக்கு அதிகமாக பணம் முடங்கப்பட காரணமாக இருந்திருக்கிறது என்று Comptroller and Auditor - General of India அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

Thirty-eight transformers of small capacity with an aggregate capacity of 37.25 MVA were lying idle.

38 டிரான்ஸ்ஃபார்மர்கள் வேலையில்லாமல் தூங்கிக் கிடக்கின்றன.

There was considerable delay in repairing failed transformers. As on 28th February 1981, 36 transformers were awaiting repairs for periods for more than one to three years.

ஆகவே, 164 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 36 டிரான்ஸ் பார்மர்கள் பழுது பார்க்கப்படுவதற்கு மூன்று ஆண்டு காலம் வரையில் காத்துக் கிடந்தன என்றும் அந்த அறிக்கை குற்றம் சாட்டுகிறது. இந்த மின்சாரத் துறையில் எந்த அளவுக்கு காரியங்கள் தாமதமாக நடைபெறுகின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதே அறிக்கையில் 103ஆம் பக்கத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 46 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கனடா நாட்டுக் கம்பெனியால் விற்கப்பட்ட 2 டிரான்ஸ்பார்மர்கள் கொரட்டூரில் 25.11.1976ல் பழுது பட்டன. எண்ணூர் மின்நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட ஜூன் 1977 வரையில் டிராக்டர்கள் கிடைக்காததால், தாமதமாக எடுத்துச் செல்லப்பட்டது. எப்போது செப்டம்பர் 1977ல் அதிலே ஒரு டிரான்ஸ்பார்மர் சோதிக்கப்பட்டு அதற்குத் தேவையான துணைக்கருவிகள் நிச்சயிக்கப்பட்டன. நிச்சயிக்கப்பட்ட பிறகு, கனடா கம்பெனிக்கு, அந்தத் துணை கருவிகளுக்கான விலைப்பட்டியல் கேட்டு, பிப்ரவரி 1978லே எழுதினார்கள். ரிப்பேர் ஆனது 1976ல். அந்த ரிப்பேருக்கான டிரான்ஸ்பார்மருக்கு துணைக் கருவிகள் கேட்டது பிப்ரவரி 1978ல். பிப்ரவரி 1978ல் இரண்டு துணைக் கருவிகள் விலைப்பட்டியலிலே சேர்க்கப்படவில்லை என்பது பிறகு ஞாபகத்திற்கு வந்து மறுபடியும் அது குறித்து தகவல் கேட்டு, 1979 ஜனவரியில் தகவல் கிடைத்தது. பிறகு இறக்குமதி உரிமம் 1981 ஜனவரியில் கிடைத்து, துணைக் கருவிகள் வந்து சேர்கின்றன. அதற்குப் பிறகும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட 1982 பிப்ரவரி மாதம் வரையில், அந்தக் கருவிகள் பொருத்தப்படவில்லை. அந்த டிரான்ஸ்பார்மர் அப்படியே கிடக்கிறது. இது ஒரு டிரான்ஸ்பார்மருடைய நிலை. பழுதான இன்னொரு டிரான்ஸ்பார்மர் 1982 பிப்ரவரி மாதம் வரை சோதனை செய்யப்படவேயில்லை என்று அறிக்கை கூறுகிறது. ஆக 1976ல் பழுதான டிரான்ஸ்பார்மர்கள் இரண்டு பழுது பார்க்கப்பட, 1976லிருந்து எடுக்கப்பட்ட முயற்சிகள் தாமதமாகி, தாமதமாகி எடுத்த முயற்சிகள்

முறையாக எடுக்கப்படாத காரணத்தால், 6 ஆண்டுகளுக்குப் பிறகு 1982ஆம் ஆண்டிலிருந்துதான் அந்த வேலைகள் என்றால், இன்னமும் முடிந்ததா என்று அந்த அறிக்கையில் வைக்கப்படுகிற வரை தெரியவில்லை என்று சொல்கின்ற அளவுக்கு அந்த அறிக்கை அலையிலே வைக்கப் பட்டிருக்கிறது.

The stock of sick transformers had increased from 692 as on 31st March 1978 to 1362 as on 31st March 1980 due to insufficiency of repairing facilities and inadequacy of staff.

1978ல் 692 ஆக இருந்த பழுதுபட்ட டிரான்ஸ் பார்மர்கள் 1980ல் 1362 ஆக பெருகிவிட்டன என்றும் அறிக்கை குறை கூறுகிறது.

Due to delay in processing the tenders for purchase of transformers and making purchases of additional requirement from another firm at higher rate resulted in an additional expenditure of Rs.13.63 lakhs to the Board.

டிரான்ஸ்பார்மர் வாங்குவதில், டெண்டர்களைப் பரிசீலிக்க ஏற்பட்ட தாமதத்தால், 13 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே அறிக்கையில் 149 ஆம் பக்கத்தில் மின்சாரம் சப்ளை செய்யும்பொழுது இடையிலே அதிகமான அளவிற்கு வீணாக்குவதை, விரயத்தை, தடுப்பதற்காக ஷென்ட் கெபாசிட்டர்ஸ் பொருத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 44 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 ஷெண்ட்கெபாசிட்டர்ஸ் வரவழைக்கப்பட்டு, 1977–ஆம்ஆண்டு ஜனவரி மாதத்தில் இது பெறப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஷென்ட் கொபசிட்டர்ஸ் பொருத்தப்பட்டதா என்றால், இல்லை. 1977 செப்டம்பர் மாதம் வரையிலே பொருத்தப்படவில்லை. பிறகு தலைமைப் பொறியாளர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார். இன்னும் 6 மாதத்திற்குள்ளே பொருத்தப்படாவிட்டால் அந்த இயந்திரம் கெட்டுவிடும் என்று அவர் எச்சரித்திருக்கிறார். இதற்குப் பிறகும், இன்னும் சீரான செயல்முறைத்திட்டம் இல்லாததால், 1981ஆம் ஆண்டு இதில் 3 இயந்திரங்கள் மாத்திரம் பொருத்தப்பட்டு, இன்னும் ஒன்று பிப்ரவரி 1982 வரை

பொருத்தப்படவில்லை என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகளால், புனல்மின்சாரம் நமக்குக் கிடைக்காவிட்டாலும், அனல் மின்சாரத்தை நாம் பெற முடியாத அளவுக்கு, நாம் முயற்சிகளிலே தயக்கம் காட்டியதும், பல்வேறு நிர்வாகக் கோளாறுகள், முறைகேடுகள் ஏற்படுவதன் காரணமாகவும், இன்றைக்கு மின்வெட்டினால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், அவதிப்படுகின்றார்கள். கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல. இந்த மாநிலத்திலே ஆக வேண்டிய உற்பத்தி எத்தனை கோடி ரூபாய்க்கு இன்றைக்கு ஆகாமல் பெரு நஷ்டத்திற்கு இந்த மாநிலம் ஆளாகி யிருக்கிறது என்பதையும் நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 26 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்து அறவித்திருக்கிறார்கள். 1 கோடி ரூபாய்க்கு வரிச்சலுகை 26 கோடி ரூபாய்க்கு வரிச்சுமை. இதிலே நுழைவு வரி ஒன்று விதிக்கப்பட்டிருக்கிறது. இது நுழைவு வரியா, அல்லது குழைவு வரியா என்பது விரைவிலே தெரியும். போகப் போகத் தெரியும். நிதி அமைச்சர் அவர்கள் பதிலிலே தெரியும். இது 1852ஆம் ஆண்டு பாளையக்காரர் களுடைய காலத்திலே இப்படிப்பட்ட ஒரு வரி போடப் பட்டதாக கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் எழுதிய நூல் ஒன்றில் காணப்படுகிறது. 1852ஆம் ஆண்டு பாளையக் காரர்களுடைய காலத்திலே போடப்பட்ட இந்த வரி, கிட்டத்தட்ட 131 ஆண்டுகளுக்குப்பிறகு இந்த ஆட்சியில் போடப்பட்டிருக்கிறது. நாவலருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். ஒன்றாக இருந்த காலத்தில், கழக ஆட்சி நடைபெற்ற காலத்தில் மறைந்துவிட்ட மேயர் முனுசாமி அவர்கள் இந்த வரி போடவேண்டுமென்று பல முறை என்னிடத்தில், நாவலர் இடத்திலே, பேராசிரியர் இடத்தில், அமைச்சர்கள் இடத்தில் வாதாடியிருக்கிறார்கள். அந்த வரியை, அதிலே வருகின்ற பலனை, அரசு அனுபவிக்கக் கூடாது என்றும், மாநகராட்சி மன்றத்தினுடைய பணிகளுக்காக

அந்த வரி மூலமாக கிட்டுகின்ற வருமானம் செலவிடப்பட வேண்டும் என்றும், எனவே அந்த வரியை விதிக்க வேண்டும் என்றும் என்னிடத்திலே நண்பர் முனுசாமி பல முறை கேட்டும் கூட நான் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்துவிட்டோம். அந்த வரி விதிக்கப்படவில்லை. இப்போது விதிக்கப்பட்டு இருக்கிறது. சர்க்கரை, துணி, புகையிலை, சிமெண்ட், காகிதம் மருந்து ஆகிய இத்தனை பொருட்கள் மீது, எல்லா வணிகர்களும் இன்றைக்கு சேர்ந்து கோரஸ் பாடுகிறார்கள். பஜனை பாடுகிறார்கள். இனிமேல் எங்களுடைய வாழ்வே போயிற்று. ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவன சீத்தாராம் என்று, தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆகவே இப்படி அவர்கள் பஜனை பாடிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவிற்கு கடைகள் அடைப்பு என்றும், பேரணிகள் என்றும் வியாபாரிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரியை நீக்க வேண்டுமென்பது என் கருத்து மாத்திரமல்ல நுழைவு வரி என்ற தலைப்பே நீக்கப்படவேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து மாத்திரம் அல்ல. இந்த வரிசையிலே அமர்ந்திருக்கின்ற அத்தனை பெயர்களுடைய கருத்து என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் நான் அதிக வேகமாகப் பேசுகின்ற காரணத்தால் ஒரு வேளை ஆதாயம் வேறு யாருக்காவது போய்ச் சேரக்கூடும். என்றாலும் கூட நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. யாராவது ஆதாயம் பெறட்டும். நகர்ப் புறங்களிலே வாழ்கின்ற நண்பர் திரு. நெடுமாறன் எடுத்துக் காட்டியதைப்போல 33 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக வணிகர்கள் தங்களுடைய சுயலாபத்திற்காக என்ன விலை கொடுத்தாலும், என்ன தியாகம் செய்தாலும் அதை அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எல்லாம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சிக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே இந்த வரியை நீக்க வேண்டுமென்பதில் எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் சாதாரண வணிக மக்களுடைய பிரதிநிதிகள் இந்த அவையிலே

இல்லாமல் இருந்தாலும்கூட, அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வருகிறார்கள் என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரிக்குப் பதிலாக, அதற்கு ஈடான தொகையை நீங்கள் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. நான் நிருபர்கள் பட்ஜெட்டைப் பற்றிக் கேட்டபோதுகூட சொன்னேன். இந்த பிளென்டிங், பாட்டிலிங் தொழிற்சாலைகளை மாவட்ட சாராய விற்பனை உரிமங்களை அரசே நடத்தி அல்லது கூட்டுறவுத்துறை மூலம் நடத்தினால், தனிப்பட்டோர் அடிக்கின்ற கொள்ளை லாபங்களைத் தடுத்து நிறுத்தலாம் என்று கூறி இருக்கிறேன்.

நான் ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் என்று ஆரம்பிக்கிற நேரத்தில், தயவு செய்து யாரும் குறுக்கிட வேண்டாம். அது குறித்த பல விவரங்கள் இராமமூர்த்தி கமிஷனில் ஆய்வில் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதைப்பற்றி நான் எதுவும் பேசப்போவது இல்லை. சில புள்ளி விவரங்களை மாத்திரம் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சி, ஆளும் கட்சி மற்றும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் தொழிற்சாலைக்கு, 750 எம்.எல்.கொண்ட பாட்டில் கொண்ட சாராயத்திற்கு, அரசு நிர்ணயித்துள்ள விலை 7 ரூ. 41 காசு. 750 எம்.எல் கொண்ட ஒரு பாட்டிலுக்கு ப்ளன்டிங் அன்ட் பாட்டிலிங் தொழிற் சாலைக்கு இந்த அரசாங்கம் அனுமதித்துள்ள விலை 7 ரூ. 41 காசு. இதிலே சில பிரேக்அப் சில சில பகுதிகளாக சில சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ரூ.7.41 காசில் எக்சைஸ் டியூடி 3 ரூபாய் நியாயம். விற்பனை வரி 44 காசு– ஏற்றுக் கொள்கிறேன். சர்சார்ஜ் 2 காசு – தவறு இல்லை. வரியாக 3 ரூபாய் 46 காசு மொத்தம். 7 ரூபாய் 41 காசில் இந்த 3 ரூபாய் 46 காசு போனால் மீதமுள்ள 3 ரூபாய் 95 காசு இருக்கிறதே, அதை நாம் கவனிக்க வேண்டும். இந்த 3 ரூபாய் 95 காசில் காஸ்ட் ஆப் ஸ்பிரிட் எரிசாராயத்தின் விலை அந்த ப்ளண்டிங் தொழிற்சாலைக்கு 85 காசு. காலி

பாட்டிலுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை 2 ரூபாய். அந்த பாட்டிலுடைய மூடிக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை 25 காசு. லேபிள் போட அரசு அனுமதித்துள்ளது 5 காசு. பேக்கிங் மெட்டிரியல் அரசு அனுமதித்துள்ளது 17 காசு. டிரான்ஸ்போர்ட் 30 காசு. வேஸ்ட் 4 காசு. இவையன்னியில் வெளிப்படை யாகவே அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப் பட்டுள்ள லாபம் 29 காசு. ஆக ரூ.3.95 காசு என்ற வகையில் அது வருகிறது.

காலி பாட்டிலுக்கு 2 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலே மாத்திரம் அவர்களுக்கு 1.25 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அந்த அதிபருக்கு லாபம் கிடைக்கிறது. ஏனென்றால் குறைந்த விலைக்கு பழைய பாட்டில்களை அவர்கள் கடைகளில் இருந்து வாங்கிக் கொள்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் அவர்கள் வாங்கியிருக்கின்ற பாட்டில்களின் கணக்கைப் பார்த்தால் - அவர்கள் 60,000 பாட்டில்கள் வாங்கினோம். ஒரு லட்சம் பாட்டில்கள் வாங்கினோம் என்று எழுதியுள்ள கணக்குகளைப் பார்த்தால் அவர்கள் திருப்பித் திருப்பி அந்த பழைய பாட்டில்களைக் கடையில் இருந்து வாங்கியிருப்பார்கள் - புதிய பாட்டில்களை வாங்கியிருப்பது குறைவாகத்தான் இருக்கும். அப்படியே புதிதாகப் போய் பாட்டில்களை வாங்குகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும், ஒரு பாட்டிலுக்கு விலை 1 ரூபாய் தானே தவிர, இரண்டு ரூபாய் அல்ல. ஆகவே 1 ரூபாய் லாபம் அதிலே கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்.

மூடிக்கு 25 காசு என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலே அதிக பட்சம் அந்த மூடிக்கு 15 காசு என்று வைத்துக் கொள்ளலாம். ஆகவே, அதிலே 10 காசு லாபம் கிடைக்கிறது. பேக்கிங் மெட்டீரியல்ஸ் - இது வார்த்தை அலங்காரம்தானே தவிர பேக்கிங் மெட்டீரியல்ஸ் என்று என்ன செய்யப் படுகிறது. நம்முடைய சோடா, கலர், ஆரஞ்சு வியாபாரிகள் போட்டு அனுப்புகிறார்களே அப்படிப்பட்ட மரப்பெட்டிகளில் அவைகள் வைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. அதற்கு 17 காசா! அதிலே 15 காசு மிச்சம். காரணம் நிரந்தரமாக அந்தப் பெட்டியை அவர்கள் செய்து வைத்து இருக்கின்றார்கள்.

இவ்வளவு லாபம் போதாது என்று அதிகாரப் பூர்வமாக வெளிப்படையாக நாம் அவர்களுக்கு அனுமதித்துள்ள லாபம் 29 காசு. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துப் பார்த்தால் நான் சொன்ன கணக்குப்படி - காலி பாட்டிலுக்கு 1.25 காசு லாபம், மூடியில் 10 காசு லாபம், பேக்கிங் மெட்டீரியல்ஸ் மூலம் 15 காசு லாபம், அனுமதிக்கப்பட்ட லாபம் 29 காசு - இந்த அடிப்படையில் - ஒரு பாட்டில் சாராயத்திற்கு 1 ரூபாய் 79 காசு லாபம் கிடைக்கிறது. 1 ரூபாய் 79 காசு என்று வந்தாலும் அதிலே ஒரு 29 காசு குறைத்துக் கொண்டாலும் 1 ரூபாய் 50 காசு லாபம் என்று வைத்துக்கொண்டால், எவ்வளவு லாபம் வரும்?

ஒரு மாதத்தில் எத்தனை பாட்டில் விற்பனை ஆகிறது? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரை விவாதத்தின் போது பதில் அளிக்கின்ற நேரத்தில் - நான் எதிரேதான் அமர்ந்திருந்தேன் - சொன்ன கணக்கு சென்ற ஆண்டு 52 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனையானது. இந்த ஆண்டு 84 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனையானது என்று சொன்னார். அண்ணா சமாதியில் ஆண்டுதோறும் உறுதிமொழி எடுத்துக் கொண்டோம், 52 லட்சம் லிட்டர், 84 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது,அது வேறு விவகாரம். இந்த 84 லட்சம் லிட்டர் சாராயம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்த அந்தக் குறிப்பின்படி பார்த்தால் 750 எம்.எல். கொண்ட பாட்டில்களில் அடைக்கப்பட்டால், 1 கோடியே 12 லட்சம் பாட்டில் ஆகிறது. முதலமைச்சர் கொடுத்த குறிப்புப்படி 84 லட்சம் லிட்டர் 750 எம்.எல்.கொண்ட பாட்டில்களில் கொடுத்தால், 1 கோடியே 12 லட்சம் பாட்டில்கள் ஆகின்றன.

முதலிலே சொன்ன இலாபம் ஒரு பாட்டிலுக்கு 1½ ரூபாய். ஒரு கோடியே 12 இலட்சம் பாட்டிலுக்கு ஒரு மாதம் மட்டும் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய், ஆண்டு ஒன்றுக்கு இலாபம் 20 கோடியே 16 இலட்சம் ரூபாய்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவ அவர்களே, இந்த விஷயம் இராமமூர்த்தி கமிஷனிலே இருக்கிறது என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத்

தெரியும். அதற்குப் பிறகு யார் நடத்துகிறார், கொடுத்தது தவறா இல்லையா என்ற விவரங்களைச் சொல்ல வேண்டியது இராமமூர்த்தி கமிஷன். இப்போது அது பற்றி விவரங்களைச் சொல்வது நீதி விசாரணைக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் யார் நடத்துகிறார் என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், அது ஏற்கெனவே கெசட்டில் நோட்டிஃபை செய்யப்பட்டிருக்கிறது. அதைத்தான் ரெஃபர் செய்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இராமமூர்த்தி கமிஷன் இது பற்றி நீதிவிசாரணை நடத்தி வருகிறது. அது நாங்களே போட்ட கமிஷன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் கொடுத்ததிலே தவறு இருந்தாலும் சரி அல்லது யாரிடத்திலே கொடுத்தோம் என்பதிலே தவறு இருந்தாலும் சரி, என்ன தவறு நடந்திருக்கிறது அல்லது நடக்கவில்லை என்பதைப்பற்றி கமிஷன் விசாரிக்கிறது. இதிலே ஒரு உள்நோக்கம் வைத்துக் கூறப்படுகிற காரணத்தால் அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அதில் இருக்கிறது. மேலும் இதுபற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி : ** ** பெயரை எடுத்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இது பற்றி எல்லாம் சொல்லும்போது, உள்நோக்கத்தோடு கூறப்படுகிறது. இராமமூர்த்தி கமிஷன் விசாரிக்கிறது. அந்தக் கமிஷன் விசாரணைக்கு இடையூறு செய்வதுபோல் இருக்கிறது. ஆகையால் நாங்கள் கொடுத்தோமா,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இல்லையா, யாருக்குக் கொடுத்தோம், எவ்வளவு கொடுத்தோம் என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : பெயரைத்தான் சொல்லக் கூடாது; பெயரை எடுத்துவிடலாம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ** என்பதும் விசாரணையில் இருக்கிறது.

திரு. துரைமுருகன் : கன்சர்ன்டு மினிஸ்டர் சொல்லி விட்டார்; அதன்பிறகு ஏன் இவர் குறுக்கிடவேண்டும்? அப்படியானால் நாங்களும் குறுக்கிடவேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். பெயரை நீக்குவதோடு ** என்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே எல்லாம் இராமமூர்த்தி கமிஷன் விசாரிக்கின்ற காரணத்தால் உள் நோக்கத்தோடு கூறப்பட்ட அந்தப் பகுதியை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மந்திரி சொன்னால் உடனே நீக்கிவிட வேண்டுமா?

கலைஞர் மு. கருணாநிதி : ***

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அவை எல்லாம் அந்த என்குயரியில் வரும். அதனால் தான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : பினாமியில் பெற்றிருந்தால் அதுவும் 'டெர்ம்ஸ் ஆப்ஃ என்குயரி'யில் வரும் என்று அமைச்சர் திருநாவுக்கரசு சொல்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ** ** என்றெல்லாம் போடப் பட்ட குற்றச்சாட்டுகளைத்தான் உண்டா இல்லையா என்று விசாரிக்கத்தான் என்குயரி கமிஷன் போடப்பட்டிருப்பதாலே, அதைக் குறித்து பொதுவாகத்தான் பேசவேண்டும். ஆகவே, இது சம்பந்தமாகக் குறிப்பிட்டுச் சொன்னவைகளை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று கருதுகிறேன். ஆகவே அந்தக் கருத்துக்கள் நீக்கப்படுகின்றன.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தக் காரணத்திற்காக ராமமூர்த்தி கமிஷன் போடப் பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் ** அப்படி வரும்... சமயத்தில்...

ஸ்பிரிட்டிலே தண்ணீர் கலந்து கொடுப்பதனால் 20 கோடி ரூபாய் லாபம். உண்மை என்னவென்றால் இன்னும் கொஞ்ச காலத்தில் தண்ணீர்தான் விலை உயர்ந்த பொருளாக இருக்கும். அதனால் எவ்வளவு லாபம் வரும் என்று சொல்ல முடியாது – அத்தோடு மாவட்ட மொத்த சாராய வியாபாரம், உரிமம் சிலருக்குத் தரப் பட்டிருக்கிறது. அதிலே உள்ள பிரச்சினைகளும் ராமமூர்த்தி கமிஷனிலே இருக்கிற காரணத்தால், அவைகளைப் பற்றியும் பேச விரும்பவில்லை. பிளண்டிங் பாட்டில்களை யூனிட்டிலே வாங்கி, சில்லரை வியாபாரிகளுக்குக் கொடுக்கிற வேலைகளுக்கு மாத்திரம் ஒரு பாட்டிலுக்கு அந்த மாவட்ட சாராய மொத்தவிற்பனை நிலையம் இருக்கிறதே,அதற்கு அரசு அனுமதித்துள்ள லாபம் 51 காசு அதன்படி 1 கோடியே 12 லட்சம் பாட்டில்களுக்கு மாதத்திற்கு 50 லட்சம் ரூபாய் அவர்களுக்கு லாபம். வருடத்திற்கு 6 கோடி ரூபாய். நான் முதலிலே சொன்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

20 கோடியும், இந்த 6 கோடியையும் இணைத்தால் 26 கோடி ரூபாய்.

ஆக அதை அரசு உடைமையாக ஆக்கிவிட்டால் அல்லது கூட்டுறவுத் துறையின் மூலம், அந்த விற்பனையை நடத்தினால், அந்த 26 கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டிய நிலைமை நம்முடைய நாவலர் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்காது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கழக ஆட்சி காலத்திலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இப்போது இருப்பதைப் போல ஓரளவு ரத்து செய்யப்பட்ட நிலை அப்போது அல்ல. ஒத்திவைக்கப்பட்டது. பிறகு 2, 3 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் முழுமையாக மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது கூட யோசித்தோம். அரசின் சார்பாக நடத்தலாமா என்று. 2, 3 வருடத்திற்குள்ளாக அரசு இப்படிப்பட்ட பெரிய தொழிலை எடுத்து நடத்துவது என்பது அரசுக்குப் பெரிய நட்டத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தால், அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டோம். இப்போது அரசே எடுத்து நடத்துவதற்கு, எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அரசைப் பற்றிக் கூறப்படுகிற அந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் கூட - கமிஷன்கள் எல்லாம் கூட வேண்டாம் இப்போதே ஒரு அறிவிப்பு – அத்தனை பிளண்டிங் பாட்டில் தொழிற்சாலைகளையும், சாராய மது வியாபாரங்களையும், அந்த ஐ.எம்.எஃப்.எஸ். தொழிற்சாலைகளையும் அரசே எடுத்து நடத்தலாம் அல்லது கூட்டுறவுத் துறை மூலம் நடத்தலாம் என்று வருமேயானால், உங்கள் மீது தூவப்படுகிற மாசுகூட மறைந்துவிடும், அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதைத்தான் நிதியமைச்சர் அவர்களின் இறுதி உரையிலிருந்து தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து இதில் ஒரு வேடிக்கையான விவரம்.750 எம்.எல்.பாட்டில் 2 ரூபாய். ஆனால் 375 எம்.எல்.பாட்டில் 1 ரூ.50 காசு. 750 எம்.எல்.அளவில் பாதியளவே உள்ள 375 எம்.எல்.பாட்டில் விலை ரூ.1.50 காசு. ஆனால் 150 எம்.எல்.பாட்டில் விலை 1 ரூ.25 காசு. ஆனால் எப்படி?

ஒவ்வொன்றும் விலையில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள் – 750 எம். எல். 2 ரூபாய், 375 எம்.எல். ரூ. 1.50 காசு, 150 எம்.எல் ரூ. 1.25காசு. இப்படி கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிக்கிறார்கள். தனியார்களுடைய அந்தக் கொள்ளை முயற்சிகளைத் தடுத்து, அவைகளிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு, ''நம் மாநிலம் விடுபடுவதற்கு பொருளாதாரத்திலே நமக்கு ஒரு நல்ல சூழ்நிலை உருவாவதற்கு, இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்தவோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தவோ முன் வருமா என்ற வினாவை நமது நிதியமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான் இரண்டு விஷயங்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டுவிட்டு என்னுடைய உரையை முடித்துவிடலாம் என்று கருதுகிறேன். இன்று இந்தியா முழுவதும் பிற்படுத்தப் பட்ட மக்களாலே, தாழ்த்தப்பட்ட மக்களாலே, அவர்களுடைய பிரதிநிதிகளாலே குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளாலே வலியுறுத்தப்படுகின்ற ஒன்று, மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை உடனடியாக மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும். கர்நாடக மாநிலத்திலே அமைந்துள்ள புதிய அரசின் சார்பிலே கவர்னர் அவர்களாலே படிக்கப்பட்ட அந்த உரையில் மண்டல் கமிஷன் அறிக்கை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. மண்டல் கமிஷனின் சிபாரிசுகளை அமல்படுத்தவேண்டுமென்று கர்நாடக அரசு மத்திய அரசை வலியுறுத்தும் என்று கர்நாடக அரசின் சார்பாக அளிக்கப்பட்ட கவர்னர் உரையின் மூலமாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராக இல்லாத கர்நாடக மாநிலத்தில், பிற்பட்ட சமுதாயத்தைச் சேராத ஒருவர் முதல்வராக இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, அந்த ஜனதா ஆட்சியிலே மண்டல் கமிஷன் சிபாரிசுகளை மத்திய அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்ற ஒரு கொள்கைக் குறிப்பைக் கவர்னர் வாயிலாகத் தந்திருக் கிறார்கள். ஆனால் அண்ணாவின் பெயரால் நடைபெறுகின்ற அறக் கட்டளைகளிலிருந்து வருகின்ற வார இதழ்களில் கூட –

நான் வேதனையோடு சொல்கிறேன் - அதிலேகூட மண்டல் கமிஷன் அறிக்கைக்கு விரோதமான கருத்துக்கள் எழுதப்படுகின்ற அந்தக் காட்சியைக் காண்கின்றபோது எத்தகைய முரண்பாடு அண்ணாவின் பெயரால் நடைபெறுகின்றது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லாமல் இருக்க முடியவில்லை. மண்டல் கமிஷன் அறிக்கையைத் தயாரித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் அளித்தபோது, திரு. மண்டல் அவர்கள் கூறிய உருக்கம் மிகுந்த வாசகத்தை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். ''இந்திய அரசியல் சட்டம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வகை செய்திருந்தும் பதவிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பங்கு மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கின்றது. உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகள், வெளிநாட்டு தூதர் பதவிகள், மத்திய மாநில தேர்வாணைக்கழக பதவிகள், பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் பதவிகள் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மேலும் எனக்கு முன்னால் அமைக்கப்பட்ட கலேல்கர் கமிஷன் பரிந்துரைக்கு ஏற்பட்ட கதிதான் என்னுடைய கமிஷன் பரிந்துரைக்கும் ஏற்படுமோ என்று என்னிடம் சாட்சியம் அளித்த பெரும்பான்மையோர் கவலை தெரிவித்திருக்கிறார்கள். இந்தியக் குடிமக்களில் பெரும் பான்மையோராக உள்ளவர்களின் சமூகரீதியாலும், கல்வித் துறையாலும் பிற்படுத்தப்பட்டவர்களாக உள்ளவர்களின் நம்பிக்கை சிதறடிக்கப்படுமோ என்ற கவலையோடு இருக்கிறேன்'' என்று பரிந்துரையை திருமதி இந்திரா காந்தி அவர்களிடத்திலே கொடுத்து இப்படிக் கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. மண்டல் அவர்கள் காலமாகி விட்டார்கள். அவர்களுடைய பரிந்துரையும் காலமாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. அதை வலியுறுத்தக்கூடிய மிகப் பெரும் பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு.

சில புள்ளிவிவரங்களைப் பார்த்தால் இது எவ்வளவு முக்கியமான பணி என்பதை நாம் அறிவோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீடு என்பதற்குச் சில

ஆபத்துக்கள் இடையிலே வந்து பிறகு நீங்கி இன்றைக்கு இட ஒதுக்கீடுகள் இருக்கின்றன. இது மாநிலத்தைப் பொறுத்த மட்டில் உள்ள நிலை. என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் கூட தமிழ்நாட்டிலே இட ஒதுக்கீடு நடந்து கொண்டிருக்கின்றது என்று நிருபர்கள் கூட்டம் ஒன்றில் பதிலளித்து மண்டல் கமிஷன் அறிக்கையை நான் வரவேற்கிறேன் என்று கூட அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு அதற்கு முரணான பல கருத்துக்கள் சில அமைச்சர்களால் எடுத்துக் கூறப்பட்டு இருக்கின்றன. அந்தப் பயத்தின் காரணமாக ஒன்றைச் சொல்கிறேன். இது மத்திய அரசின் சார்பாகச் செய்யவேண்டிய காரியமாக நாம் வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சில புள்ளிவிவரங்கள் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், அமைச்சகங்கள், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் எல்லாம் பணியாற்றுகின்றவர்களின் விவரத்தைப் பார்த்தால் கிரேட் ஒன் என்ற முதல் நிலை அதிகாரிகளின் பதவிகள் மொத்தம் 1,74,043,இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 9,885. அதாவது ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேரில் தாழ்த்தப்பட்டவர்கள் 9,885 பேர். அதாவது 5.68 சதவீதம்தான். பிற்படுத்தப்பட்டவர்கள் 8,162 பேர். அதாவது ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேரில் பிற்படுத்தப்பட்டோர் 8,162 பேர்தான் மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறார்கள். இரண்டாம் நிலை அதிகாரிகளின் பதவிகள் மொத்தம் 9,12,786. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,964. அந்த 9 இலட்சத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் 97,029. அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் 19 சதவீதம். பிற்படுத்தப் பட்டோர் 10.63 சதவீதம்.

மொத்த பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்று கின்றவர்களின் எண்ணிக்கை அதாவது எல்.ஐ.சி. போன்ற மத்திய சார்புடைய பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்று கின்றவர்களின் எண்ணிக்கை, முதல் நிலை அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 80,994. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 3,652, பிற்படுத்தப்பட்டவர்கள் 3,719 அதாவது தாழ்த்தப் பட்டவர்கள் 4.51 சதவீதமும் பிற்படுத்தப்பட்டவர்கள்

4.59 சதவீதமும்தான். இரண்டாம் நிலை அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 3,65,785. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 68,566 அதாவது 18.74 சதவீதம், பிற்படுத்தப்பட்டவர்கள் 36,242 அதாவது 9.97 சதவீதம். இன்னொரு வேதனை மத்திய அரசினுடைய அமைச்சகங்கள் செக்ரட்டேரியட் துறைகளில் மோசமான நிலை. அதிகாரிகள் பதவிகள் மொத்தம் 11,707. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 840. 11,707லே தாழ்த்தப் பட்டவர்கள் 840 பேர் மத்திய அரசு அமைச்சகங்களில் செக்ரட்டேரியட் துறைகளில் பொறுத்த வரையில் இன்னும் கேவலம் பிற்படுத்தப்பட்டவர்கள் 303 பேர். இரண்டாம் நிலை அதிகாரிகள் பதவிகள் மொத்தம் 43,803. அதிலே தாழ்த்தப் பட்டவர்கள் 5,985. பிற்படுத்தப்பட்டவர்கள் 1,742. மூன்றாம் நிலை நான்காம் நிலை அலுவலர்களின் எண்ணிக்கை மத்திய அரசு அமைச்சகங்களில் செக்ரட்டேரியட்களில் 17,829. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 5,518. பிற்படுத்தப்பட்டவர்கள் 1500 பேர். ஆக இந்திய திருநாட்டில் 52 சதவீதம் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்கள் 22.5 சதவீதம். இந்த 52 சதவீத பின்தங்கிய மக்களில் மத்திய அரசு வேலைகளில் அவர்களுக்கு 12.55 சதவீதம் இன்றைக்குக் கிடைக்கிறது என்பதை மனதிலே கொண்டு அவர்களுக்கு மண்டல் பரிந்துரை கூட குறைவானது. 27 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று கூறிவிட்டு அதன்னியில் பொதுத் தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்களுக்கும் அவர்கள் தகுதிமூலம் வருவது தடுக்கப்படக்கூடாது என்பதை மண்டல் கமிஷன் மிக முக்கியமாக பரிந்துரையைச் செய்திருக்கிறது. இந்தப் பரிந்துரையை மாநில அரசு ஒரு கொள்கைக் குறிப்பாக கவர்னர் உரையிலும் குறிப்பிடவில்லை. நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய வரவு-செலவுத்திட்டத்திலும் குறிப்பிடவில்லை என்பது வருந்தத் தக்கது. நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலாவது மண்டல் கமிஷன் அறிக்கையை வலியுறுத்துகின்ற வகையில் மாநில அரசு பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுசரணையாக இருக்கிறது என்ற கருத்தை எடுத்துக்கூறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இறுதியாக மாநில சுயாட்சி பற்றி இந்த அவையில் ஒரு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிது. ஏற்கெனவே தனியார் மசோதா மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தரப்பட்ட ஒரு விவாதம் இந்த நிதிநிலை அறிக்கையிலும் அந்த விவாதம் தொடர்ந்து இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 7ஆம் பக்கத்தில் தன்னாட்சி தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடு கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். நேற்றையதினம் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. சங்கரையய்யா அவர்கள் சொன்னார்கள் தி.மு.கவும் அ.தி.முகவும் மாநில சுயாட்சி பற்றிப் பேசுவது குறித்து நான் மெத்தவும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது இன்றைக்கு நாங்கள் பேசுகின்ற பிரச்சினை அல்ல. என்றைக்குப் பிரிவினைக் கொள்கையை கைவிட்டோமோ அன்று முதல் மாநில சுயாட்சி குறித்து திராவிட முன்னேற்ற கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்கிய அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரையில் மாநில சுயாட்சிக் கொள்கையை மிகத் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றது. இது அண்ணா சொன்னாரா என்று 1974ஆம் ஆண்டு இங்கே கேட்கப்பட்டு அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு கழக ஆட்சியில் ராஜமன்னார் தலைமையில் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த பெரியவர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்களையும் முன்னாள் நீதிபதியாக இருந்த சந்திராரெட்டி அவர்களையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு மத்திய மாநில உறவுகள் ஆராயப்பட்டு அவர்களுடைய மிக விரிவான பெரிய அறிக்கை அரசுக்குத் தரப்பட்டு அந்த அறிக்கை கட்சியின் சார்பிலே திருவாளர்கள் செழியன், மாறன் இவர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் ஆராயப்பட்டு, பிறகு அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டு இந்த அவையிலே தீர்மானமாக முன்மொழியப்பட்டு வழி

மொழியப்பட்டு பெரும்பாலான வாக்குகளில் அந்தத் தீர்மானம் 1974ஆம் ஆண்டில் இந்த அவையில் நிறைவேறியது. அப்படி நிறைவேறிய போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அண்ணா தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர்களும் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிடவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தை அவர்கள் ஆதரிக்கவும் முன்வரவில்லை. அது மாத்திரமல்ல, மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரிப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரத்தை வலுப்படுத்துவதாகும் என்று அப்படிப்பட்ட கருத்தைக்கூட அன்றையதினம் உள்ளேயும் வெளியேயும் எடுத்துச் சொல்லப்பட்டதாக எனக்கு நினைவு. ஆனால் இப்போதுகூட அண்ணா அவர்கள் விளக்கமாகச் சொல்லவில்லை என்ற ஒரு கருத்து ஆளுங்கட்சி உறுப்பினர்களால் இந்த அவையிலே கூறப்பட்டதை நான் இந்த அவையிலே இல்லாமல் உடல் நலக்குறைவின் காரணமாகப் பத்திரிகைகளில் மாத்திரம் படித்துத் தெரிந்துகொண்டேன். அண்ணா அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். வலுவான மத்திய அரசு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பது தவறு, மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களானால் அளவுக்கு மீறி அதிகாரங்களை தாங்கித் தாங்கி பாதுகாப்பு போன்ற விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது. 28.7.1968இல் அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி மாநாட்டில் பேசியது. அது மாத்திரமல்ல, இன்னும் தீவிரமாக அந்த மாநாட்டிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாட்டுப் பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் பெற சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளலாம். பின்னர் மாநிலங்கள் விரும்பித்தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை நான் தலைவராகவும் நாவலர் திராவிட முன்னேற்றக்

கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இருந்த காலத்திலே அந்தக் கருத்தை ஒரு புத்தமாகவே 'அண்ணா மாநில சுயாட்சி முழக்கம்' என்ற தலைப்பிலே வெளியிட்டிருக்கிறோம். அதை மறந்து போகாமல் நிதியமைச்சர் அவர்கள் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே தன்னாட்சி வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். தன்னாட்சி வேறு, தனியாட்சி வேறு, எத்தனையோ மேடைகளிலே நாங்கள் இதைப் பற்றி விளக்கங்களை அளித்திருக்கிறோம். இந்த இரண்டு கட்சிகளும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாக இருந்தபோது வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே ''இந்திய அரசியல் முறை – பெடரலிசம் - கூட்டாட்சி முறை'' என்று வர்ணிக்கப் பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிகபட்சம் சாய்ந்திருப்பதால் அதிகாரத் துறையிலே நிதித் துறையிலே மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால் அதே நேரத்திலே இந்தியா வலுப்பெற்று இருக்கவேண்டுமென்ற லட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்த துறையிலே வலுவாக இந்தியா இயங்குவதற்கு மத்திய அரசு செயல்படவேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு இதர அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குகின்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த மறுபரிசீலனை செய்யவேண்டு மென்று கருதுகிறோம். அந்த நோக்கத்தோடு அரசு அமைத்த வல்லுநர் குழு அறிக்கை கொடுத்த பிறகு அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியிலே மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும் என்று 1971ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிகிறோம். ஆனால் தன்னாட்சி, சுயாட்சி என்று கூறப்படுகிற நிலை இருந்த போதிலும் மாநில சுயாட்சி பற்றி இந்த அவையில் பலர் பேசிய போதிலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அண்ணா அப்படிச் சொன்னாரா என்று கேள்வியை எழுப்பிய நேரத்திலேயும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொச்சிக்குச் சென்றபோது அங்கே நிருபர்கள் கூட்டத்திலே அவர்கள் அளித்த பதில் இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து ஆகிய பத்திரிகைகளிலே வந்து இருப்பதை மாத்திரம் நான் படிக்கிறேன்.

The Tamil Nadu Chief Minister Mr. M. G. Ramachandran said here today that he would welcome my move for the joint effort by the States for more powers to States. Any such move would have the full support of the Tamil Nadu Government. He said answering to questions to a crowed press conference, but we are not for State autonomy, he clarified.

நாங்கள் மாநில சுயாட்சி என்ற அந்தக் கொள்கைக்கு 'Far' அல்ல; ஆதரவு அல்ல என்ற வகையில் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விளக்கமும் நான் அங்கே சொன்னேன். அந்த பத்திரிகையிலே வராததற்கு நான் பொறுப்பல்ல. ஸ்டேட் அட்டானமி என்று சொன்னாலே பிரிவினை என்ற ஒருபொருள் அதிலே தொக்கி நிற்பதாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஆகவே அந்த வார்த்தையை நான் மறுக்கிறேன் என்ற சொன்னேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதை ஹிந்துவில் சரியாகப் போட்டிருக்கிறார்கள்.

"Differentiating between autonomy and additional powers for States Mr. Ramachandran said he was hesitant to use the term 'more autonomy' because it was being understood as separation."

மாநில சுயாட்சி என்று சொன்னால் அது பிரிவினை வாதம் ஆகிவிடும் என்பதற்காக அப்படிச் சொல்லத் தயங்குவதாக முதலமைச்சர் சொன்னதாக இப்போது சொன்ன கருத்தைச் சரியாக வெளியிட்டிருப்பதாகக் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய நாவலர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். திரு முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி. இதற்கு நாவலர் அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். அந்த முன்னுரையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தியா ஒரு நாடல்ல. அது பல்வேறு மொழிவழி தேசிய இனங்களைக்கொண்ட ஒரு துணைக்கண்டம் என்பதையும் வரலாற்றுச் சூழ்நிலையின் காரணமாக இந்தியா

ஒரு நாடாக ஆக்கப்பட்டுள்ளதால் மொழிவழி தேசிய இனங்கள் அமைந்த பகுதிகள் இந்தியாவின் உள்ளடங்கிய தனித்தனி மாநிலங்களாகக் காட்சியளிக்கின்றன என்பதையும் மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை கேட்பதாகாது என்பதையும், இந்தியாவில் மாநிலங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சுயாட்சித் தன்மை பெறுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு இந்தியா வலிவு பெற்ற நாடாகத் திகழும் என்பதையும் நம்முடைய நாவலர் அவர்கள் அந்த முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்தின் : தலைவர் அவர்களே, எனக்கு விளக்கம் தந்ததற்காக அல்ல, என்னுடைய பேச்சுக்கு அவரே விளக்கம் தந்ததற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். தன்னாட்சி என்பதோ தனியாட்சி என்பதோ அது பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை என்றாலும் அதிக அதிகாரம் வேண்டும் என்பதில் இந்தக் கட்சி யாருக்கும் பின்வாங்கவில்லை என்பதைக் குறிப்பிடும்போது மாநில சுயாட்சி என்பதை நாட்டுப் பிரிவினை என்ற பெயரிலே ஆங்கிலத்திலே அதற்கு அர்த்தம் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதற்காக அதை நான் கூறவில்லை என்பதை அங்கே குறிப்பிட்டேன் என்று சொன்னபிறகும், ஏதோ நான் அதிக அதிகாரங்கள் கூடாது என்ற வகையிலே அப்படிப்பட்ட ஒரு கருத்திற்கு நான் சொந்தக்காரனாகிக் கொண்டிருக்கிறேன் என்பது போன்ற நினைப்பை ஏற்படுத்த முயலவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் தெளிவாக, திட்டவட்டமாக மாநில சுயாட்சிக் கொள்கையிலே இருக்கிறது. நாம் எல்லாம் ஒன்றாக இருந்தபோது நாம் அளித்த தேர்தல் அறிக்கையிலே மாநில சுயாட்சி என்று குறிப்பிட்டதை இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. விரும்பாது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படவே ஏற்படாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுயாட்சிக்கும், தன்னாட்சிக்கும் வித்தியாசம்

இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதிலே நாங்களும் பின்வாங்கவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியானால் மாநில தன்னாட்சி என்ற வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என் வாயால் சொல்வதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறார் என்று எண்ணுகிறேன். நான் அழுந்தந்திருத்தமாகச் சொல்கிறேன். அதிக அதிகாரம் தன்னாட்சி உரிமை என்பதை இந்த அரசு, இந்தக் கட்சி நிச்சயமாக விரும்புகிறது என்பதையும், ஆனால் நாட்டுப் பிரிவினை என்பதை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதற்காக அந்த விளக்கம் தருவதையே நாங்கள் எதிர்க்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : மாநில சுயாட்சி கேட்பது நாட்டுப் பிரிவினை என்று யாராவது கூறுவார்களானால் அவர்களுக்கு மாநில சுயாட்சி கொள்கைக்கு அடிப்படையிலே விரோதிகளாக இருக்கிறார்கள் என்றுதான் பொருள். மாநில சுயாட்சி கேட்டு அப்போதே இந்த வாதம் இருந்த காரணத்தால் தான் நாவலர் அவர்கள் இந்த விளக்கம் அளித்தும் நான் படித்துக் காட்டினேன். அதே போல அண்ணா அவர்களும் இதே அவையிலே பேசினார்கள். 27.6.67ல் அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதிலே ஒளிவு மறைவு இல்லை. அதைச் சொல்வதற்கு வெட்கப்பட ஒன்றுமில்லை. திராவிட நாடு என்பது தனியாக இருந்தால்தான் தொழில் வளர்ச்சி பெற முடியும் என்று சொன்னோம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணம் இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். அதை விட்டுவிடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்பட

வேண்டும் என்பதற்குத் திராவிட நாடு கேட்டோம். மொழி பாதுகாப்புக் கொள்கையை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பலவிதங்களில் பெறவேண்டும் என்பதற்காக கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை என்று இந்தக் காரணங்களை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திய அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார். அண்ணா சொன்னாரா என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்டபோது இங்கே அமர்ந்திருக்கின்ற மின்துறை அமைச்சர் அவர்கள் எழுந்து நின்று, இதோ பாருங்கள் அண்ணா சொல்கிறார் என்று இல்லஸ்ட்ரேட்டட் பத்திரிகையை சான்றாகப் படித்துக் காட்டினார்கள்.

அண்ணா அவர்களுடைய அழகான வண்ணப் படத்தைப் பாருங்கள். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி 26.9.1965ல் மாநில சுயாட்சி அங்கேயும் எவ்வளவு மறைமுகமாக இருக்கின்றது என்பதை நான் நினைவூட்டுகிறேன். அண்ணாவை இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி நிருபர் கேட்கிறார்.

"What are the main aims of the D.M.K.?"

1965ம் ஆண்டு கேட்கிறார். அண்ணா சொல்கிறார்;

"A Dravid Union within the Indian Constitution."

திராவிடக் கூட்டுறவு அல்லது திராவிடக் கூட்டமைப்பு என்று சொன்னாரே தவிர, அண்ணா அப்பொழுதும் அகில இந்தியா என்பதை, இந்தக் கட்சியை அகில இந்தியக் கட்சியாக ஆக்க வேண்டுமென்பதை அண்ணா அன்றைக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசி வரையிலே ஏற்றுக் கொள்ளவில்லை. அடுத்து வருகிறார்.

'The re-shaping of the Constitution, so it becomes effectively federal', fuller autonomy to the States. Proportional representation which seeks to solve the problem of Communal minorities, democratic socialism and eradication of castes.'

இது அண்ணா அவர்கள் அன்றைக்கு அந்த வாரப் பத்திரிகை ஆசிரியருக்குச் சொன்ன பதில். அது மாத்திரமா? அந்த நிருபர் கேட்கிறார் மறுபடியும் :

'Am I right in assuming that the D.M.K. has never had any idealism and is having always based its policy on expediency rather than on principles?'

கொள்கைகளைவிட சாதாரண விஷயங்களுக்கு, அவ்வப்போது சந்தர்ப்பத்துக்கேற்ப தி.மு.க. நடந்து கொள்கிறது என்று நான் மதிப்பிடலாமா என்ற கேட்டபோது அண்ணா சொல்லியிருக்கிறார்.

'Your assumption is wrong'.

உங்களுடைய மதிப்பீடு தவறு.

'Federalism - Full autonomy'.

முழுமையாக சுயாட்சி, தன்னாட்சி வெறும் அதிகாரமல்ல.

'Full autonomy for the State egalitarianism and are these not principles?',

இவைகள் எல்லாம் கொள்கைகள் அல்லவா? நாங்கள் கேட்கின்ற முழுமையான மாநில சுயாட்சியும் சமத்துவமும் சமதர்மமும் உங்களுக்குக் கொள்கையாகப்படவில்லையா என்று அண்ணா அவர்கள் திரும்ப, நிருபரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். எனவே மாநில சுயாட்சிக்கு 1974ஆம் ஆண்டு இங்கே தீர்மானம் நிறைவேற்றிய பொழுது அப்பொழுது எதிரே இருந்த அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். 'நீங்கள் கேட்கிற காரணத்தால், கருணாநிதி கேட்கிற காரணத்தால் நாங்கள் மாநில சுயாட்சிக்கு ஆதரவளிக்க முடியாது' என்று, அப்பொழுது இன்றைய முதலமைச்சர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எம். ஜி. ஆர் அவர்களும் மாநில சுயாட்சி தேவையில்லை, மக்கள் சுயாட்சி என்கின்ற ஒரு கருத்தை நாட்டில் பரப்பி வந்தார்கள். அந்த அடிப்படையிலே அன்றைக்கு அண்ணா தி.மு.க. எம்.எல். ஏக்கள் 'கருணாநிதி கேட்கிற காரணத்தால் நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று சொன்னார்கள். அப்பொழுதே நான் சொன்னேன். 'ஒரு காலத்திலே நீங்கள் ஆளுங்கட்சியாக வந்து நாங்கள் எதிர்க்கட்சியாக அமர்வோமேயானால், இப்படி ஒரு

தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்களேயானால் அதை வரவேற்கிற முதல் ஆளாகக் கருணாநிதி இருப்பான்' என்று நான் அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் நான் அரசுக்குச் சொல்கிறேன். மாநில சுயாட்சித் தீர்மானத்தை, அரசின் சார்பில் இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு விரைவிலே ஒரு சட்ட முன்வடிவைக்கொண்டு வாருங்கள். அதை நிறைவேற்றித்தர, ஏகமனதாக நிறைவேற்றித்தர திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக குடிக்கத் தண்ணீரின்றி மக்கள் குமுறுகின்ற சூழ்நிலைக்கு விடிவுகாணாமல், விலைவாசி ஏற்றம் விஷம் என ஏறுவதற்குப் பரிகாரம் காணாமல், அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் க்யூ அங்கிங்கெணாதபடி நிற்கின்ற அவல நிலையை அகற்றுவதற்கு வழிவகை காணாமல், இருட்டறையில் உள்ளதடா நாடு என்று பாவேந்தர் பாடியது போல் தமிழ்நாடு இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் தொழிலாளிக்குத் தொல்லையும், விவசாயிக்கு வேதனையும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு மிரட்டலும் நிறைந்த ஒரு நிலையிலே இந்த வரவு-செலவுத் திட்டம் வந்திருக்கிறது. வெறும் விளம்பரத்திற்கு மாத்திரம் இந்த அரசு தன்னைப் பயன்படுத்திக்கொள்கிறதே அல்லாமல், நற்பணிகளுக்குத் தன்னைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

கடைசியாகச் சொல்கிறேன். இதோ என் கையிலே இருப்பது இந்திய வரலாறு 6ஆம் வகுப்புப் புத்தகம். இந்திய வரலாறு நூலில் அலெக்சாண்டர் வருகிறார். சமண, பௌத்த மதங்கள் வருகின்றன. எல்லோரும் வருகிறார்கள். எல்லோரும் வந்து சுதந்திரம் வருகிறது. சுதந்திரம் வந்த பிறகு, இந்தச் சரித்திரப் புத்தகத்தில் நேரு இந்தியாவினுடைய பிரதமர் ஆகிறார்.

இராஜாஜி கவர்னர்-ஜெனரலாகிறார். அதோடு இந்த வரலாறு முடிகிறது. அதற்குப் பிறகு இந்தியத்துணைக் கண்டத்திலே ஏற்பட்ட எமர்ஜென்சிக்குப் பிறகு ஏற்பட்ட ஜனதா ஆட்சிக்கு இந்த இந்திய வரலாற்றுப் புத்தகத்திலே

இடம் உண்டா? கிடையாது. திடீரென்று மாறுகிறார்கள். இராஜாஜி கவர்னர்-ஜெனரலாக வந்ததோடு முடித்துவிட்டு, அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் என்று போட்டு, இந்திரா காந்தி தலைமையில் புதிய மந்திரிசபை டெல்லிமாநகரில் 1980ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் தேதி பதவியேற்றது என்பதோடு நிறுத்தியிருக்கிறார்கள்.

காமராஜர் இங்கு ஆண்டது பற்றி அந்நூலில் கிடையாது. இங்கே பெரியவர் பக்தவச்சலம் ஆண்டதுபற்றிக் கிடையாது. அண்ணா ஆட்சி புரிந்தது கிடையாது. அடியேன் தலைமையிலே ஆட்சி நடந்தது. அது கிடையாது. அது வேண்டாம். அது வராது. ஏனென்றால் அன்னை அஞ்சுகம் நிலையங்களெல்லாம் மாற்றப்படுகிற நேரத்தில் என்னுடைய பெயர் இதிலே வரும் என்று நான் எதிர்பார்க்க முடியாது. அதிலே திடீரென்று 80ஆம் ஆண்டு மே மாத இறுதியில் ஒன்பது மாநிலங்களில் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று திரு எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையின் கீழ் மந்திரிசபை அமைத்தது என்று அவருடைய படம், பெரிய படம் பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. காமராஜருடைய படம் உண்டா? பக்தவத்சலத்தினுடைய படம் உண்டா? இவைக ளெல்லாம் கிடையாது. இவர்கள் இடையிலே ஆட்சியிலே இருந்திருக்கின்றார்கள். நான் பாவி, என்னுடைய படம் தேவையில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் படம் பெரிய அளவில் வெளியிடப்பட்டிருக்கிறது. வெளியிடப் பட்டு, கீழே குறிப்பு என்ன தெரியுமா? இந்தியப் பிரதமர், தமிழ் நாட்டு முதலமைச்சர் ஆகியோருடைய படங்களைச் சேகரித்து உங்கள் படத் தொகுப்புப் புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளவும். 'இதையும் சேர்த்து இந்திய வரலாறு ஆறாம் வகுப்புப் பாட நூல் வெளி வந்திருக்கிறது என்றால் வெறும் விளம்பர வெளிச்சத்திற்காக நடைபெறுகின்ற அரசாங்கமாக இருக்கிறதே தவிர நாட்டிலே இருக்கின்ற வேதனைகளைப் போக்குகின்ற அரசாக இது இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு கூறி அமைகின்றேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : ஒரு தன்னிலை விளக்கம். பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது நான் பேசுகையிலே திராவிட முன்னேற்றக்கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தத் தன்னாட்சிக் கொள்கையை ஆதரிப்பதை வரவேற்கிறேன் என்று கூறினேன் என்று சொல்லி எவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கையை வைத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு 74ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானம் வந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் 1964ஆம் ஆண்டிலே ஏற்பட்ட நேரத்திலேயிருந்து அது தன்னாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடக்கூடிய 71-76ஆம் ஆண்டுக் கால கட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு சட்டப்பேரவையில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே அதை ஆதரிப்பதற்கு எங்களுக்கு அன்றைக்கு வாய்ப்பில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சட்டமன்றத்தில் அப்பொழுது இடம் பெறாத மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி நான் எதையும் சொல்லவில்லை. சட்டமன்றத்தில் இடம் பெற்றிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல் சட்டத்தை அதற்காகத் திருத்த வேண்டும் மாநில சுயாட்சிக்காக என்பதை அன்றைக்கு எதிர்த்தது என்பதைதான் குறிப்பிட விரும்புகிறேன்.

உரை : 21 **நாள் : 11.04.1985**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே!

1985-86ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் முதலில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்பு, இந்த அவையிலே சில உறுப்பினர்கள் மேலவையினுடைய மரபு மரியாதை காப்பாற்றப்பட வேண்டும், மேலவைக்கும் பேரவை போன்ற சரி சமமான மரியாதை, வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் முறையீடுகளை வைத்தார்கள். தாங்களும் அதற்கு ஏற்ற வகையில் அவைகள் கவனிக்கப்படும் என்று கூறியதன் மூலம் இந்த மேலவையினுடைய மரபும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றீர்கள். என்னுடைய இந்த உரையினுடைய தொடக்கத்திலே, இந்த மேலவை எத்தகைய பெருமைமிக்க அவை இது என்பதையும், யார் யார் எல்லாம் இந்த அவையிலே இடம் பெற்றிருக் கிறார்கள் என்பதையும், இன்றைக்கு இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்ற நாம் எண்ணிப்பார்க்கிற நேரத்தில், மிகச் சிறந்த – சிலாக்கியமான - பெருமைக்குரிய ஒரு இடத்தில் நாமெல்லாம் அமர்ந்திருக்கிறோம் என்கின்ற உணர்வு ஏற்படாமல் போகாது. குறிப்பாகச் சொல்லவேண்டுமே யானால், பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்தவரும், ஆங்கிலப் புலமை மிக்கவரும், வாதத்திறமை

வல்லுனருமான டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார் அவர்கள் வீற்றிருந்த அவை இந்த அவை. பம்பாயிலே ஆளுநராகப் பொறுப்பேற்று அரசியல் அரங்கத்திலே நல்ல வித்தகர் என்ற அளவுக்கு செல்வாக்குப் படைத்த டாக்டர் பி.வி.செரியன் அவர்கள் அமர்ந்திருந்த அவை இந்த அவை. மற்றும் ''ஆந்திர கேசரி'' என்று சிறப்பிக்கப்பட்ட டி.பிரகாசம் அவர்கள் அமர்ந்திருந்த அவை இந்த அவை. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அமர்ந்திருந்து கருத்துக்களை பொங்கிய அவை இந்த அவை. திரு. சர்க்கரை செட்டியார், டாக்டர் வி.கே.ஜான், டாக்டர் மகமத் உஸ்மான், முதல்வராக இருந்து பணியாற்றிய திரு. ஓ.பி.இராமசாமி ரெட்டியார், நீதிக்கட்சியின் தூண்கள் என்று பாராட்டப்பட்ட பண்பாளர் பி.டி.இராசன், ஏ.ஆர்.தாமோதரன், திரு.வி.வி.இராமசாமி மற்றும் திரு கே.பாலசுப்பிரமணிய ஐயர், திரு. ஏ.எம்.அல்லாப் பிச்சை, திரு. பாஷ்யம் ஐயங்கார், டாக்டர் ஏ.சீனிவாசன், மிகப்புகழ்பெற்ற டாக்டர் குருசாமி முதலியார், திருமதி கிளப்வாலா ஜாதவ், தமிழறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு. முத்துரங்க முதலியார், பெரியவர் பக்தவத்சலனார், இன்றைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக வீற்றிருக்கின்ற திரு. ஆர். வெங்கட்ராமன், மறைந்து விட்ட நம்முடைய திரு. ராஜாராம் நாயுடு, டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், ஆதித்தனார், திரு. பி.வி.ராஜமன்னார், திரு. பதஞ்சலி சாஸ்திரி, டாக்டர் நடேசன், இன்று பேரவையிலே எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற உ.சுப்பிரமணியம் அவர்களுடைய தந்தை திரு. உடையப்பா, ராஜா சர் முத்தையா செட்டியார், பேரறிஞர் அண்ணா அவர்கள், என்னுடைய அன்புக்குரிய நண்பர் இந்நாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., பெரும் புலவர் டாக்டர் சிதம்பரநாதன், தேசியக்கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்கள் அமர்ந்து அலங்கரித்த அவை இந்த அவையாகும்.

இந்த அவையில் கற்றறிவாளரான தமிழறிஞரான தாங்கள் இன்றைக்குத் தலைமையேற்று இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். அதுவும் இந்த அவைக்குரிய பெருமைகளிலே ஒன்றாகும். இந்த அவையில் இன்றைக்கு

894.8115
TAM
G00237O

வீற்றிருக்கின்ற நாமெல்லாம் இப்படிப்பட்ட ஒரு பாரம்பரியம் மிக்க பெரியவர்கள், சான்றோர்கள் இருந்த இடத்திலே அமர்ந்திருக்கிறோம் என்கின்ற உணர்வோடுதான் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே பெருமை அடைகின்றோம்.

நம்முடைய அரசியல் கருத்து மாறுபாடுகளின் காரணமாக வெளியில் மேடைகளில் ஒருவரையொருவர் விமர்சிப்பது, விமர்சிக்கிற நேரத்திலே காரசாரமான வார்த்தைகள் பரிமாறிக்கொள்ளப்படுவது, இவைகள் எல்லாம் நீண்ட நெடு நாட்களாக இந்திய நாட்டு வரலாற்றில், குறிப்பாகத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் பழகிப்போன ஒன்றாக ஆகிவிட்டன என்றாலும்கூட, அவைகள் தவிர்க்க முடியாதவைகள் என்று ஆகிவிட்டாலும்கூட, அவற்றிலே ஓரளவாவது கண்ணியம் இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டு, அதுவும் மீறப்படுகிற நிலைமைகளிலேகூட வெளி மேடைகளில் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்கிற நிலைமைகள் இருந்தாலும்கூட, இந்த அவையோடு இணைத்து அப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லப்படுகிற நேரத்தில், அது இந்த அவையினுடைய பெருமையைக் குறைப்பதாக இருப்பதாக நான் கருதுகிறேன்.

அதிலும் குறிப்பாக என்னுடைய அன்புக்குரிய நண்பரும், தமிழகத்தின் நிதி அமைச்சர் பொறுப்பைப் பெற்றிருப்பவருமான நாவலர் அவர்கள் அண்மையிலே பட்டுக்கோட்டைக் கூட்டத்திலே பேசியதாக ஒரு செய்தி வந்து, நானும் அதை டேப் ரிக்கார்டரிலே கேட்டேன். தஞ்சாவூர்-திருச்சி 'மாலை முரசு' பத்திரிகையில் கூட அந்தப் பேச்சு வெளியாகியிருக்கிறது. அங்கே நாவலர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ''ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற்று வருகிற யோக்கியதை இல்லாமல் 30 தி.மு.க. எம்.எல்.ஏக்களின் ஓட்டுக்களை வாங்கி எம்.எல்.சி ஆகி மக்களைச் சந்திக்கும் யோக்கியதை இல்லாத கருணாநிதி தேர்தலைப் பற்றிப் பேசுகிறார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். நாவலர் என்னைப் பற்றி வேகமாக, காரசாரமாகப் பேசியிருந்தாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன். ஆனால் இந்த அவைக்கு வருபவர்கள் மக்களுடைய வாக்குகளைப்

பெற யோக்யதை இல்லாதவர்கள்தான் என்பதைப்போல் இந்த அவையினுடைய தரத்தை அவர்கள் மதிப்பிட்டிருப்பது உள்ளபடியே இந்த அவைக்கு பெருமை சேர்ப்பதாகாது என்பதால்தான், இந்த அவையின் சார்பாக வாதாடுகிறேனே தவிர, எனக்காக நான் வாதாடவில்லை. என்னுடைய தகுதி, திறமை, யோக்கியதை இவைகளைப்பற்றிப் பேசுவதற்கு நாவலர் அவர்களுக்கு உரிமை உண்டு. ஏனென்றால் இந்த இயக்கத்தில், திராவிட இயக்கத்தில் எனக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவிற்கு நாவலர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இளந்தாடி நெடுஞ்செழியனாக வந்த காலத்திலிருந்து கடந்த 40,45 ஆண்டுக்காலமாக எனக்குப் பழக்கமுள்ளவர். எனவே அவர் இதைவிட கடுமையான வார்த்தைகளை, காரமான வார்த்தைகளைச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் ஏதோ வெளியே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவர்கள்தான், அந்த யோக்கியதை இல்லாதவர்கள் தான் ஒரு 30 எம்.எல்.ஏக்களின் ஓட்டுக்களை வாங்கி எம்.எல்.சியாக ஆகிவிடுகிறார்கள் என்று இந்த அவையைப்பற்றிக் குறிப்பிடும்போது, அது நேர்த்தியானதாக இல்லை. இந்த அவையில் யார் யாரோ இருக்கிறோம்; தேர்தலில் நிற்காதவர்களும் இந்த அவைக்கு வந்திருக்கிறோம். தேர்தலில் நின்று தோற்றுவிட்ட பிறகு இந்த அவைக்கு வந்தவர்களும் இருக்கிறோம். இந்த அவையில் அப்படி வந்தவர்கள் அமைச்சர்களாகவும் வீற்றிருக்கிறோம். நான் அவர்களையெல்லாம் நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட மாட்டேன். நியமனத்தின் மூலமாக இந்த அவையில் இடம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். எனவே அமைச்சர் பெரு மக்கள், மிகப்பொறுப்பான பதவியிலிருப்பவர்கள், அந்த அவையில் முன்னவராக இருப்பவரே இந்த அவையைக் குறித்து ஏதோ மக்களுடைய ஆதரவைப் பெற முடியாதவர்கள்தான் இந்த அவைக்கு வருகிறார்கள், அந்த யோக்கியதை அற்றவர்கள்தான் இந்த அவைக்கு வருகிறார்கள் என்று கூறுவது அவ்வளவு நேர்த்தியானதாக இல்லை. வரவேற்கத் தக்கதாக இல்லை. அது கண்டிக்கத்தக்க ஒரு கருத்தாக இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக இந்த

அவையினுடைய பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே இந்த அவையினுடைய முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கும் எனக்கும் எத்தனை ஆண்டுக்கால பழக்கம், எவ்வளவு பாசம், எவ்வளவு அன்பு இவைகள் எல்லாம் இடையிலே ஏற்பட்ட அரசியல் புயல் காரணமாக, சில கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டிருந்தாலும், காரசாரமாக சொற்கள் வீசப்பட்டிருந்தாலும், மறந்துவிட முடியாதவை. ஆனால் அவரும் இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவருடைய பேச்சு 31.3.1985 ''அண்ணா'' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அறநிலையத்துறை அமைச்சர், என்னுடைய அன்பிற்குரிய மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள் பேசியிருக்கிறார். ''மேலவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது பெரியவர் திரு. இராகவானந்தம் அவர்கள் பேசினார். புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர்களுக்காகச் செய்த நன்மைகளை எடுத்துக் கூறி அழகாகப் பேசுகிறார். அப்போது கருணாநிதி - விதவை போல் உட்கார்ந்திருக்கும் கருணாநிதி, இவ்வளவு நல்ல காரியங்களைத் தொழிலாளர் நல அமைச்சராக இருந்து செய்ததால்தான் உங்கள் பதவி பறிக்கப்பட்டதா என்று கேட்கிறார்.''

நான் அன்றைக்கு பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பார்த்து ''பதவி பறிக்கப் பட்டதா'' என்றுகூட கேட்கவில்லை. ''தொழிலாளர் நல அமைச்சராக இருந்து இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்த உங்களுக்கு இதுதான் பரிசா?'' என்று கேட்டேன். அது எதுவானாலும் சரி, அப்போது அவையிலே உட்கார்ந்திருந்த கருணாநிதி என்று சொல்லியிருந்தாலும்கூட பரவாயில்லை. திரு. இராகவானந்தம் பற்றி நான் சொன்ன கருத்து தவறானது என்று விமர்சிப்பதற்கான உரிமை அவருக்கு உண்டு. ஆனால் அப்போது கருணாநிதி - விதவைபோல உட்கார்ந்திருக்கும் கருணாநிதி என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது இந்த

அவையில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் ஏதோ விதவைகள் என்பதைப் போலவும், விதவைகள் என்றாலே அவர்கள் ஏதோ வெறுக்கத்தக்கவர்கள், சமுதாயத்தில் வேண்டப்படாதவர்கள் அல்லது அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் என்கிற அளவுக்கு ஒரு இழிவான முறையில் என்னைக் குறிப்பிட்டதன் மூலம் இந்த அவையினுடைய பெருமை குறைக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாக இருக்கிறது.

இவைகளை இங்கே எடுத்துச் சொல்லுவதற்குக் காரணம் என்னைப்பற்றி, என்னுடைய கருத்துக்களைப்பற்றி, நான் சார்ந்திருக்கிற இயக்கத்தைப்பற்றி எவ்வளவு கடுமையான விமர்சனம் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் நாம் அனைவரும் கலந்து பழகி கருத்துரைகளைப் பரிமாறிக் கொள்கிற இந்த அவையைக் குறித்து - நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அத்தகைய பெரியவர்கள் எல்லாம் இருந்த இந்த அவையைக் குறித்து கற்றறிந்த சிலம்புச் செல்வரான தாங்கள் தலைமையேற்று நடத்துகிற இந்த அவையைக் குறித்து - இனிமேல் இப்படிப்பட்ட விமர்சனம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பேசியதாக ஒரு குறிப்பை, ''அண்ணா'' பத்திரிகையில் வந்தது என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். 'அண்ணா' பத்திரிகையில் எப்படி வந்திருக்கிறது என்று நான் பார்க்க வில்லை. ஆனால் அன்றைக்குப் பேசுகின்றபோது இப்படிப் பேசவில்லை என்பதைத் திட்டவட்டமாக மறுக்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் அந்தக் கூட்டத்திலே இருந்தார்கள். அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, அப்போது டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று குறிப்பிட்டுப் பேசியிருப்பேன். வெறும் கருணாநிதி என்று குறிப்பிடுவதில்லை. அடைமொழி யோடு பெரியவர்களைப் பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகளை பத்திரிகைகள் எப்போதும் அவரவர் விருப்பப்படி விட்டு விட்டு வெளியிடுகிறார்கள். எல்லா பத்திரிகைகளுக்கும் இது

பத்திரிகை தர்மமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது – முரசொலி உட்பட. கருணாநிதி என்று போட்டிருந்தால், அப்படி நான் பேசவில்லை. அப்படி கருணாநிதி அவர்கள் விதவையாக அங்கே உட்கார்ந்திருக்கிறார் என்று இந்த அவையைப்பற்றிக் குறிப்பிடும்போது குறிப்பிடவில்லை. அங்கே ஆயிரக் கணக்காக கூடியிருந்தவர்களுக்குத் தெரியும். கலைஞர் அவர்கள் மறுத்து ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதற்கு நம்முடைய முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள் என்று புரட்சித் தலைவரை ஒப்பிட்டுப் பேசுகின்றபோது, திரு. இராகவானந்தம் அவர்களைப்பற்றி அந்தக் கருத்தை வெளியிட்டேனே தவிர, இங்கே குறிப்பிட்டதைப் போன்று 'அண்ணா' பத்திரிகையில் கருணாநிதி விதவை உணர்வோடு உட்கார்ந்திருக்கிறார்கள் என்று வந்திருந்தால் அது தவறு, அப்படி பேசப்படவில்லை. வேறு காரணத்திற்காக வேறு இடத்திலே ஒரு சொற்றொடரில் உவமானமாகப் பயன்படுத்தப்பட்டதை இணைத்து இங்கே போட்டிருக்கிறார்கள். இந்த அவையைக் குறித்தோ, இங்கே அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களையோ அல்லது தலைவரைக் குறித்தோ தரக்குறைவாகப் பேசவில்லை, பேசுகின்ற எண்ணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, என்னுடைய கையில் இருப்பது 'அண்ணா' பத்திரிகை. அதிலே வந்திருப்பது தவறு என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, அதைப்பற்றி எதையும் பேசவிரும்ப வில்லை. அவருடைய கட்சியின் அதிகாரபூர்வமான ஏட்டில் தவறாக வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருப்பதை நான் மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு 'அண்ணா'விலும் வருகிறது, இன்னுமொரு கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு 'முரசொலி' யிலும் வருகிறது. எல்லோரும் ஒரே உணர்வோடு பழகியிருந்த கருத்தை, அவர்களே ஒத்துக்கொண்டபடி, அரசியல் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துவது என்பதைப் பற்றிப் பழகிக் கொண்டிருக்கிற முறையில் இந்த உணர்வுகள்

வெளியிடப்பட்டிருக்கின்றன. இரண்டு பேருக்கும் இந்த நடைமுறை பொருந்துகிறது.

கலைஞர் மு. கருணாநிதி : மறுபடியும் அதையே வலியுறுத்துகிறார். அவர் தாலி கட்டிக்கொண்டவராக இருக்கட்டும். நான் விதவையாகவே இருந்து விட்டுப் போகிறேன். ஆனால் நான் விதவையாக இருந்தாலும் இருப்பேனே தவிர, பல பேருக்கு நிச்சயமாகத் தாலி கட்டிக் கொள்ள மாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பேசியது. இதுவும் 'அண்ணா' பத்திரிகையில் வந்த கருத்துதான். தமிழகம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எவ்வளவு சீர்குலைந்து சின்னாபின்னமாக இருந்தது என்பதை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அனகாபுத்தூர் கூட்டத்தில் 7.4.1985ல் அவர் பேசிய பேச்சு 'அண்ணா' ஏட்டில் வெளியாகியிருக்கிறது. ''1967–ல் பாடுபட்டுப் பெற்ற ஆட்சியை அண்ணா அவர்களுக்குப் பிறகு கருணாநிதி சின்னாபின்னம் ஆக்கினார். இவர் முதல்வராக ஆனவுடன் அண்ணா கண்ட ஆட்சி வீழ்த்தப்பட்டது.'' இது நிதியமைச்சர் நாவலர் அவர்களின் சொற்பொழிவிலே ஒரு பகுதி. ஆனால் நான் அதற்குப் பதில் அளிப்பதைவிட நாவலர் அவர்களைக் கொண்டே அதற்குப் பதில் அளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நெருக்கடி காலக் கொடுமைகளை எதிர்த்த காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1976ஆம் ஆண்டு சனவரி திங்கள் இறுதி நாளில் கலைக்கப்பட்ட பிறகு, நாவலர் அவர்கள் 'முரசொலி' யில் தொடர்ந்து பல கட்டுரைகளை அவருக்கே உரிய தனித்தமிழ் நடையில் எழுதியிருக்கிறார். 24.4.1976 'முரசொலி'யில் நாவலர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி அதிலே ''திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி'' வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு முன்பு கொடுத்து வந்த சுமார் 2.75 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன்களை சுமார் 35 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்திற்று. 31 கோடி ரூபாயாக இருந்த குறுகிய காலக் கடன்களை சுமார் 75 கோடி ரூபாயாக ஆக்கிற்று.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உழவுத்தொழில் வளர்ச்சிக்கும் கைத்தொழில் பெருக்கத்திற்கும், பொறியியல் தொழில் மேம்பாட்டிற்கும், கூட்டுறவுத் துறையை ஒல்லும் வகை எல்லாம் பயன்படுத்திவந்ததை நல்லறிவு படைத்த நடுநிலையாளர்கள் யாரும் மறந்திருக்க முடியாது. கழக அரசு பாடுபட்டு வந்ததன் காரணமாகத்தான் 1966ல், 54 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை, 1976–ல் 80 லட்சம் டன்னாக பெருக்கிக் காட்ட முடிந்தது என்று 1976ஆம் ஆண்டு நாவலர் அவர்கள் 'முரசொலி' பத்திரிகையிலே கட்டுரை எழுதினார்கள். இன்றைக்கு அவர் தந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தாலும், அதிலே கூட இப்போதுள்ள அறிக்கையில், உணவு உற்பத்தி 80 லட்சம் டன் அல்லது 84 லட்சம் டன் என்கின்ற அளவுக்கு எதிர்பார்க்கப் படுகிறது என்றுதான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் பேசிய பேச்சுக்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கின் றார்கள். நான் பேசியது, 1967லே அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அமைத்தார்கள். 1976வது ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதியன்று, டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருந்த ஆட்சி வீழ்த்தப்பட்டது. அப்படி வீழ்த்தப்பட்ட ஆட்சியை மறுபடியும் புரட்சித் தலைவர் அவர்கள் தூக்கி நிறுத்தினார்கள் என்று சொன்னேனே தவிர, கலைஞர் தலைமையில் ஆட்சி சின்னாபின்னப்பட்டது என்ற கருத்தை நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால், நானும் அப்போது பொறுப்பிலே இருந்திருக்கிறேன். 1976 வரை நானும் இருந்திருக்கிறேன். அதை நான் எப்படிச் சொல்வேன் என்பதைச் சிந்திக்க வேண்டும். வீழ்ந்துவிட்டது. வீழ்ந்துவிட்ட அந்த ஆட்சியைத் தூக்கி நிறுத்தினார் என்ற அளவுக்குத்தான் சொன்னேன்.

மற்றொன்று, கலைஞர் அவர்கள் முதலிலே சொன்ன கருத்து பற்றி இப்போதே சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். அவர்கள் எந்த அளவுக்கு மதிப்பு என்னிடம் வைத்திருக்கின்றார்கள். நான் அவரிடம் எந்த அளவுக்கு

மதிப்பு வைத்திருக்கிறேன் என்றும் நாங்கள் அறிவோம். அவர்களே எடுத்துச் சொன்ன மாதிரி அரசியல் விமர்சனம் செய்கின்ற சமயங்களில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். பட்டுக்கோட்டையிலே பேசியபோதுகூட, இந்த அவையைக் கேவலப்படுத்த வேண்டுமென்றோ, இந்த அவையை அவமானப்படுத்த வேண்டும் என்றோ நான் எதையும் எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் அவர் பொதுமக்களிடையே தேர்தலுக்கு நின்று, மக்களுடைய வாக்குகளைப் பெற்று, சட்டமன்றப் பேரவையிலே முதல் இடத்திலே உட்கார்ந்திருந்த கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக 30 எம்.எல்.ஏக்கள் வாக்குகளை மட்டும் வாங்கிக் கொண்டு மேலவையிலே வந்து உட்கார வேண்டிய அவசியம் இல்லை. அங்கே நின்றிருக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் சொன்னேனே தவிர, அவையைக் கேவலப்படுத்த வேண்டுமென்றோ அல்லது அவைக்கு இருக்கின்ற உரிமைகளை குறைக்க வேண்டும் என்றோ சொல்லவில்லை. இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அதை அறிவோம். மேலவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் நாங்களும் அறிவோம். இதே அவைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். அவரை நீங்களும் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்தக் கருத்திலேதான் நான் சொன்னேன். இந்த அவையின் மதிப்பைக் குறைக்கவில்லை. அவர்கள் பொதுமக்களிடையே நின்று வாக்குகள் பெற்று அந்த அவைக்கு வந்திருக்கலாம். இங்கே வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள். இங்கு பத்திரிகைகளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு பேசினாலும், வெளியிலே பேசியதை வைத்துப் பேசினாலும் யாரும் எந்த முடிவுக்கும் வர

முடியாது. அவர்களே 'இல்லை' என்று மறுத்து விடுகின்றார்கள். இங்கே அவரவர்களே விளங்கவைத்து பேசி புரிந்து கொள்ளவும், சமாதானமாகப் போகவும் ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதால், நான் அதை வரவேற்கிறேன். கூடுமான வரையில் பத்திரிகைகளை வைத்துக் கொண்டு நாம் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தால் அதற்கு இந்த நிலைமைதான் ஏற்படும் என்பதை நினைவூட்டுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வெளியிலே பேசுவது, பத்திரிகையிலே வருவது இவற்றையெல்லாம் வைத்து இங்கே பேசுவது சில நாட்களாக அனுமதிக்கப்பட்டுவிட்ட காரணத்தினாலே, அதுவும் இந்த அவை பற்றிய குறிப்புகள் என்கின்ற காரணத்தினாலேயே, அதுவும் நாவலர் அவர்கள் இருந்து நடத்திய ஆட்சியைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது என்ற காரணத்தினாலேயே, அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டினேனே தவிர, வேறல்ல. அவர்கள் சொல்லிவிட்டார்கள். அண்ணா அவர்கள் பாடுபட்டு 1967லே உருவாக்கிய ஆட்சியை கருணாநிதி சின்னாபின்னம் ஆக்கினார் என்று தான் பேசவில்லை என்றும் 'அண்ணா' பத்திரிகையிலே வந்தது தவறு என்றும் அவர்கள் சொல்லி விட்டார்கள். இனி தவறைத் திருத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு 'அண்ணா' பத்திரிகைக்குரியது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

நான் இங்கே சொல்லவந்தது, 1976ஆம் ஆண்டு, அவர்கள் எழுதிய கட்டுரையில், கழக ஆட்சியிலே தமிழகத்திலே எந்த அளவிற்கு வளம் செறிந்து இருந்தது என்பதற்கும், தமிழகம் முற்போக்குப் பாதையிலே நடந்தது என்பதற்கும் இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் தந்த விளக்கங்கள் என்பதற்காக அவைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார், ''கழக அரசு பாடுபட்டதன் காரணமாக 1966–ல் 54 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை 1976–ல் 80 லட்சம் டன்னாக பெருக்கிக் காட்ட முடிந்தது'' என்று சொல்லியிருக்கிறார். 1976–லே 80 லட்சம் டன்னாக நாங்கள் பெருக்கிக் காட்டியிருக்கிறோம் என்று அப்போதே

குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது ஒன்றும் அதிகமாக உயர்ந்து விடவில்லை என்பதையும், எதிர்பார்க்கப்படுகிற அந்த உணவு தானியங்கள் 82 அல்லது 85 லட்சம் டன் அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன். 1966–ல் 11,000 சிறு தொழில்கள் இருந்ததாகவும், பிறகு 1976–ல் 50,000 சிறு தொழில்கள் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் சிறப்பாக இயங்குகின்றன என்றும் 24.4.1976 கட்டுரையில் நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பம்ப் செட் பற்றி அவர்கள் குறிப்பிடும்போது, மின் இறைவைகளைப் பயன்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. ஒன்பது ஆண்டு களுக்கு முன்னால் 1967–ல் 2¾ லட்சம் பம்ப் செட்டுகள் இருந்தன, மின் இறைவைகள் இருந்தன. இடைக்காலத்தில் கழக ஆட்சியில் 4¾ லட்சம் மின் இறைவைகள் பெருக்கப் பட்டன. ஆக 7½ லட்சம் மின் இறைவைகள் பயன்படுகின்றன. இந்த வகையில் தமிழ்நாடுதான் முன்னோடியாக இருந்து வருகிறது. இந்தியா முழுவதுமுள்ள மின் இறைவைகளில் மூன்றில் இரண்டு பங்கு மின் இறைவைகள் தமிழ்நாட்டில் மட்டுமே இருக்கின்றன. இது 27.3.1976 முரசொலியில் நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரை. அவர்கள் மேலும் குறிப்பிடுகிறார்கள் ‘‘சாலைகளின் நீளத்தைப் பொறுத்து மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு ஐந்தாம் இடத்தில் இருக்கிறது. தமிழ்நாடு அளவுக்குப் பரப்புள்ள மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடுதான் சாலைகள் நீளத்தைப் பொறுத்து முதலிடத்தைப் பெறுகிறது. காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, கழக ஆட்சியில் தமிழ்நாட்டில் பொருளாதாரம் சீர்கெட்டு விட்டது. பணமெல்லாம் காலியாகிவிட்டது, நிதி ஆதாரங்கள் பாழ்படுத்தப்பட்டு விட்டன. திட்டங்கள் நிறைவேற்றவில்லை என்று பொய்யுரைகள் புகன்றாலும் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும் நல்லறிவாளர்கள் தமிழ்நாட்டில் சிலபல ஆண்டுகளாக நிலவி வரும் பொருளாதார நிலையைப் பாராட்டவே செய்வார்கள்’’ என்று 1976–ல் நாவலர் அவர்கள் கட்டுரை தீட்டினார்கள்.

''1975ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற திறமைப் போட்டியில் அகில இந்தியாவில் தொழில் வளர்ச்சித் திறனில் தமிழ்நாடுதான் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறதென்று தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டுக்கு குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் வழங்கப்பட்டது.'' 9.6.1976ல் நாவலர் தீட்டிய கட்டுரை இது ''திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது தமிழ்நாடு பரவலாகவும், பொதுவாகவும் பொருளாதார வளர்ச்சி பெற்று, இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தது என்பது வேறு மாநிலத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் நடுநிலை நின்று ஆராய்ந்து வெளியிட்ட முடிவிலிருந்து அறிந்து கொள்ளலாம். 11.5.1970ல் முரசொலியில் நாவலர் தீட்டிய கட்டுரை இது.

அந்த நாவலர்தான் இன்றைய தினம் நிதி அமைச்சருடைய பொறுப்பை ஏற்று, இந்த அவையின் முன்னாலே நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், 1985-86ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் தமிழக அரசின் வருவாய் 2,368.42 கோடி ரூபாய் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த நிதி நிலை வளர்ந்துள்ள வரலாற்றை சற்று திரும்பிப் பார்த்து கவனித்தால், எப்படிப்பட்ட பெரும் வளர்ச்சி தமிழக அரசின் வருவாய்த் துறையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எளிதாக உணர்ந்துகொள்ள முடியும். 1938-39ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கிலே இந்த அரசாங்கத்தின் வருவாய் 16.14 கோடி ரூபாய், அது இப்போது 2,368கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 1966-67ல் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது அந்த ஆட்சி நிறைவுறுகின்ற அந்தக் காலக்கட்டத்தில் 188.72 கோடி ரூபாயாக வருவாய்த் துறைக்கணக்கிலே வருவாய் இருந்தது. 1975-76ல் கழக ஆட்சி கலைக்கப்பட்ட அந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தின் வருவாய்த் துறை கணக்கிலே ரூபாய் 501 கோடி ரூபாயாக இருந்தது. எனவே இதைக் கணக்கிடும்போது, இப்போது 4½ மடங்கு அதிக வருவாய் உள்ளது, 501 கோடி ரூபாயிலிருந்து 10 ஆண்டுக் காலத்தில் 4½ மடங்கு அதிகமாகி 2,368.42 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வருவாய்த் துறையிலே நம்முடைய வருவாய்

உயர்ந்திருக்கிறது. ஆனால் வருமானம் உயர்ந்துள்ள அளவுக்கு பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கப்படுகின்ற தொகை உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், சற்று ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையிலே நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகம் வளர்ச்சியில் கீழ்நோக்கிப் போய்விட்டது என்று சிலர் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 7,8 ஆண்டுகளாக தமிழகம் எதிலும் பின்தங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள. 1976-77ல் கல்விக்காக ஒதுக்கியது ரூ.141 கோடி. ஆனால் இன்று ரூ.468 கோடியாக அது உயர்ந்துவிட்டது என்று சொல்லி ஒவ்வொரு துறை பற்றியும் அவர்கள் பேரவையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் 1975-76ல் கழக ஆட்சியின்போது மொத்த வருமானம் 501 கோடி ரூபாய். அந்தத் துறைக்கு அன்றைக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட இன்றைக்கு 4½ மடங்கு அதிக வருவாய் வந்துள்ள காலகட்டத்தில் அதே விகிதத்தில் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கியுள்ள தொகையில் பெரும் வேறுபாடு இருக்கிறது. 1975-76ல் 501 கோடி ரூபாய் வருமானம் வந்தபோது கல்விக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒதுக்கியது 118 கோடி ரூபாய். அதாவது மொத்த வருவாயில் 23.64 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. இப்பொழுது 23.64 சதவிகித அளவுக்கு ஒதுக்குவது என்றால் 559.80 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக கல்விக்காக 468 கோடி ரூபாய்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அதாவது 19.06 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 20.01 சதவிகிதம்தான் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அதைவிடவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல் இன்னும் சில முக்கியமான துறைகளுக்கு

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தைவிட இந்த ஆட்சியிலே குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1975-76ல் மருத்துவத்திற்காக 6.19 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 4.58 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்காக 1975-76ல் 0.92 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 0.50 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1975-76ல் ஒதுக்கியதுபோல் இந்த ஆண்டும் கூட்டுறவுத்துறைக்கு 92 சதவிகிதம் ஒதுக்குவதாக இருந்தால், 21 கோடியே 79 லட்சம் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கியிருப்பதோ 11 கோடியே 78 லட்சம்தான் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தொழில்களைப் பொறுத்தவரை, ஊரகத் தொழில்களையும் சேர்த்து 1975–76ல், 79 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க 1985–86ல் 71 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலனுக்கு 1975-76ல் 0.67 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 0.52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசனத்திற்கு 1975-76ல் 3.94 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 2.4 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலைகள், பாலங்களுக்கு 1975-76ல் 4.20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 3.08 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காட்டு வளத்திற்கு 1975-76ல் 0.66 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 0.52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலைகளில் வசதிகளுக்காக 0.88 சதவிகிதம் 1975-76ல் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 0.34 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறைக்கு 1975-76ல் 5.36 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 3.89 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்டோர் நலத் துறைக்கு 1975-76ல் 1.16 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 0.49 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு கூட பிற்பட்டோர் நலத்துறைக்கு 0.58 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அதையும் விட குறைவாக அதாவது 0.49 சதவிகிதம்தான் ஒதுக்கப்

பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக 1975-76ல் 1.9 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 1.86 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எனவே முக்கியமான எல்லாத் துறைகளுக்கும் கழக ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தைவிட, இப்போது குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக்கத்தான் கூறுகிறேனே அல்லாமல் வேறல்ல.அப்படி ஒதுக்கப்பட்ட இந்தத் தொகைகளாவது முழுமையாக அந்தந்தத் துறைகளுக்கு அல்லது திட்டங்களுக்குச் செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்றால், டெல்லியில் உள்ள கணக்குத் தணிக்கை அதிகாரி (Comptroller and Auditor - General of India) தனது அறிக்கையில் கூறியிருக்கிற விபரங்கள் நமக்கெல்லாம் அதிர்ச்சி அளிக்கத்தக்கவையாக இருக்கின்றன. நாம் மத்திய அரசிடம் தொகையை அதிகப்படுத்திக் கேட்டு வாங்கினால் மட்டும் போதாது. மாநிலத்தின் வருவாயை அதிகப்படுத்தினால் மட்டும் போதாது. புதிய புதிய திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது, அவைகளுக்கு ஒதுக்குகிற பணத்தை உரிய முறையில் செலவழிக்க வேண்டு மென்பதற்காக அல்லது திருத்திக் கொள்ள வேண்டுமென்ப தற்காகத்தான் இவைகளை கூறுகிறேனேயல்லாமல், வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1982-83ஆம் ஆண்டுக்கான தணிக்கை அதிகாரியின் அறிக்கையைத்தான் நாம் பார்க்கிறோம். அடுத்த ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை அவைக்கு அறிவிக்கப்படவில்லை.

1982-83ஆம் ஆண்டுக்கான கணக்குத் தணிக்கை அதிகாரியின் விபரத்தின் அடிப்படையில் பார்த்தால், வருவாய்க் கணக்கில் 561.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 397.72 கோடி ரூபாயும், மூலதனத் துறையில் 174.78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 147.37 கோடிதான் செலவு செய்யப் பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது

வருவாய் துறையில், ரூபாய் 163.38 கோடியும், மூலதனச் செலவில் ரூபாய் 27.37 கோடியும் செலவழிக்கப்படவில்லை.

இதை சதவீத அடிப்படையில் பார்த்தால், 29 சதவீதம் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து செலவழிக்கப்படவில்லை என்று தெரிகிறது. வருவாய்த் துறையில் முக்கியமாக எந்தெந்தத் துறைகளில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், சமூகப் பாதுகாப்பு சமூக நலம் இந்தத் துறையில் 31.98 கோடி ரூபாயும் செலவழிக்கப்படவில்லை. கல்வித் துறையில் 22.83 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. குடிநீர் வழங்குதல், பொதுமருத்துவம் என்ற துறையில் ரூ.7.44 கோடி செலவழிக்கப்படவில்லை. தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு இந்தத் துறையில் 4.92 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. உணவுத்துறையில் 51.47 கோடி ரூபாயும், சாலைகள், பாலங்கள் இந்தத் துறையில் 12.85 கோடி ரூபாயும் செலவழிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறையில் 11.95 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. மேலும் பல துறைகளில் ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படாமல் மீதப்பட்டிருக்கிறது. நில வருவாய் துறையில் 12.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 3.02 கோடி ரூபாய் செலவழிக்கப் படவில்லை. வேளாண்மைத் துறையில் 63.73 கோடி ஒதுக்கப்பட்டிருக்க அதிலே 16.27 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை.

இன்னொரு அதிர்ச்சியான செய்தி, நகர்ப்புற வளர்ச்சிக்காக ரூபாய் 24.66 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, அதிலே 22.23 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. பாசனத்திற்காக ரூபாய் 43.51 கோடி ஒதுக்கப்பட்டிருக்க 4.56 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை.

இவை மட்டுமல்லாமல், இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற பெயரில் ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறையில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டு அல்லது ரத்து செய்யப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், குடிப்பழக்கம் தீதானது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்க, 137.11 லட்ச ரூபாய்

1982-83ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டதில், கிட்டத்தட்ட 93 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டதாக அந்தத் தணிக்கை அறிக்கை கூறுகிறது. அதற்கான காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், ''குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விளம்பரம் செய்வதற்காக 100 லட்சம் ரூபாய் அந்தத் தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆயத்தீர்வை கமிஷனர் 1982-83ஆம் ஆண்டு மே மாதம் தயாரித்து ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பினார். அப்படி அனுப்பியதை அரசு ஏதோ காரணம் கூறி திருப்பியனுப்பிவிட்டது. ஆனால் மாற்றுத்திட்டம் இது வரையில் கமிஷனரால் தயார் செய்து அனுப்பப்படாத காரணத்தால், 93 லட்சம் ரூபாய், கிட்டத்தட்ட 113 லட்ச ரூபாயில் 93 லட்ச ரூபாய் செலவழிக்கப்படாமல் அது சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது'' என்பதையும் நான் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நிதியமைச்சர் தன்னுடைய உரையில் 20 அம்சத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற தமிழ்நாடு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் தமிழ்நாடு தலைசிறந்த பணியில் ஈடுபட்டிருக்கிறது என்று 1982-83ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது என்று இப்போது அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் கூறியிருக் கிறார்கள்.

20 அம்சத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றவில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டு பேரவையிலும், மேலவையிலும் அப்போது எழுப்பப்பட்ட போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் அதற்கு நாம் விளக்கங்களை வழங்கியிருக்கின்றோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, இருபது அம்சத் திட்டத்தைச் சரியாக நிறைவேற்றவில்லை என்று குறை கூறிப்பேசியவர் களுக்கு அதற்காக ஒரு கண்டனத் தீர்மானமே கொண்டுவரப் பட்ட போது, நாம் அளித்த பதிலைவிட, கல்கத்தாவிலிருந்து வருகின்ற ஒரு பத்திரிகையில் வெளியான புள்ளி விவரங்களைக்

கொடுத்தால், சிறப்பாக இருக்கும். 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்று கல்கத்தாவிலிருந்து வருகிற பத்திரிகை, 1976ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்கள் 19ஆம் நாள் வெளியான பதிப்பில் சொல்கிறது. இருபது அம்சத் திட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு முதல் ஆறே மாதங்களில் எந்த அளவிற்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டி அந்த ஏடு தெளிவாக விளக்கியது.

அதாவது, அஸ்ஸாம் மாநிலத்தில் 3,112 பேருக்கும், இமாசல பிரதேசத்தில் 4,802 பேருக்கும், குஜராத் மாநிலத்தில் 5,877 பேருக்கும் கர்நாடக மாநிலத்தில் 6,759 பேருக்கும், மேற்கு வங்கத்தில் 6,813 பேருக்கும் பீகாரில் 11,780 பேருக்கும், ராஜஸ்தானில் 12,909 பேருக்கும், கேரளாவில் 13,475 பேருக்கும், ஒரிஸ்ஸாவில் 14,049 பேருக்கும், அரியானாவில் 14,207 பேருக்கும், பஞ்சாபில் 14,445 மத்தியப் பிரதேசத்தில் 17,372 பேருக்கும் மகாராட்டிரத்தில் 17,498 பேருக்கும், ஆந்திராவில் 19,436 பேருக்கும், உத்தரப் பிரதேசத்தில் 21,549 பேருக்கும், தமிழ்நாட்டில் 21,680 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டதாக அது கூறுகிறது. அதாவது எட்டு கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில் 21,549 பேருக்கும், நான்கு கோடி சொச்சம் மக்கள்தொகையாக இருந்த தமிழகத்தில் 20 அம்சத் திட்டம் பிறப்பிக்கப்பட்ட ஆறே மாத காலத்தில் 21,680 பேருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

அது மட்டுமல்ல, 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்கிற அதே ஏடு ஒவ்வொரு மாநிலமும் எத்தனை சதவீதம் மின் வசதியைக் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தையும் கூறுகிறது. அதில், அருணாசலப் பிரதேசம் 1.9 சதவீதமும், சிக்கிம் 2.8 சதவீதமும், திரிபுரா 3.4 சதவீதமும், மேகாலயா 4.3 சதவீதமும், அஸ்ஸாம் 6.3 சதவீதமும், மணிப்பூர் 11.3 சதவீதமும், பீகார் 15.5 சதவீதமும், மத்தியப் பிரதேசம் 16.3 சதவீதமும் நாகாலாந்து 18.1 சதவீதமும் ராஜஸ்தான் 20.2 சதவீதமும், ஒரிஸ்ஸா 21 சதவீதமும்,

மேற்குவங்கம் 25.2 சதவீதமும், ஜம்மு–காஷ்மீர் 26 சதவீதமும் உத்தரப் பிரதேசம் 27.7 சதவீதமும், குஜராத் 34 சதவீதமும், இமாசலப் பிரதேசம் 37.9 சதவீதமும், ஆந்திரா 39.5 சதவீதமும், கர்நாடகா 52 சதவீதமும், மராட்டியம் 53.8 சதவீதமும், பஞ்சாப் 74.9 சதவீதமும், கேரளா 94.3 சதவீதமும், தமிழ்நாடு 98 சதவீதமும், அரியானா 100 சதவீதமும் மின் வசதியைச் செய்திருப்பதாகக் கூறுகிறது. அதாவது அரியானா என்பது, தமிழ் நாட்டிலுள்ள ஒரு மாவட்ட அளவேயுள்ள ஒரு மாநிலம் என்கின்ற காரணத்தால், அங்கே நூறு சதவீதம். அரியானா போன்று பல பகுதிகளைக் கொண்ட – நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு மடங்கு அதிகமான பரப்புள்ள தமிழ்நாட்டில் அன்றைக்கு 98 சதவீதம் கிராமப்புறங்களில் மின் வசதியைச் செய்து கொடுத்திருக் கிறோம். ஆகவே இருபது அம்சத் திட்டங்கள் இந்த ஆட்சியில் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலும் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டன என்று காட்டுவதற்காக இவற்றைக் குறிப்பிட்டேன். அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருபது அம்சத் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னாலேயே கூட அந்தத் திட்டங்கள் எல்லாம் படிப்படியாக இங்கே நிறைவேற்றப் பட்டன என்கின்ற புள்ளிவிவரங்களை நானும், மாண்புமிகு நாவலர் அவர்களும் கூட அன்றைக்கு சட்டப்பேரவையிலே எடுத்து விளக்கி இருக்கிறோம் என்பதற்காகத்தான் இதை இங்கே எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் – அதாவது வரவு செலவுத் திட்டத்தின் மீது பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் வழங்கும்போது - தமிழகம் எந்த அளவிற்கு எந்த எந்தத் துறைகளில் வளர்ந்திருக்கின்றது என்ற பட்டியல் தரப்படும் என்று கூறிவிட்டு விவரங்களைத் தந்திருக்கின்றார்கள். ஆனால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் அந்த வளர்ச்சி எல்லாம் ஒரு சிலரை பணக்காரர்களாக்கத்தான் பயன்படக்கூடிய வளர்ச்சியே தவிர, மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதல்ல. அப்படியானால் சத்துணவுத் திட்டம், சிறார்களுக்கு சீருடை வழங்குதல் இவைகள் எல்லாம் மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய

திட்டங்கள் என்பதை நான் மறுக்கவில்லை. சத்துணவு இன்னும் சத்துணவாகப் போடப்பட வேண்டுமென்பதிலும், சீருடை அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்பதிலும் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் இன்னும் பொருளாதாரத் துறையிலே வேலைவாய்ப்புகளைப் பெற்று தங்களையும், தங்களுடைய குழந்தைகளையும் காப்பாற்றக் கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புக்களை தமிழ்நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள் பெற்றிருக்கிறார்களா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். வேலைவாய்ப்பு இல்லாத மக்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறதா? இந்த வினா நமக்கு எந்த விளக்கத்தை அளிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதைக் கடமையாகக் கருதுகிறேன். இந்த அரசின் சார்பிலே வெளியிடப்பட்டுள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற நூலில் வேலைவாய்ப்பைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது? அந்தப் புத்தகத்தில் வேலைவாய்ப் பின்மையைப் பொறுத்த வரையில், ஏனைய மாநிலங்களைவிட தமிழ்நாடு மிகவும் மோசமான நிலையிலே உள்ளது என்று கூறுவது சாலப் பொருத்தமாகும். அகில இந்திய அளவில் வேலை பெற்றவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், தமிழகத்திற்குத்தான் முதலிடம். அதாவது 12.63 சதவீதம். அடுத்து வருவது ஆந்திரம் 12.49 சதவீதம். அடுத்து வருவது மராட்டியம் 11.93 சதவீதம், படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய பிரச்சினை பற்றி இந்த அரசு வெளியிட்டுள்ள அந்த நூலில், படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுடைய பிரச்சினைதான் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். மேலும் வேலை தேடி அலையும் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1983ஆம் ஆண்டு மட்டும் வேலைவாய்ப்பு கேட்டு பதிவு செய்து கொண்ட விண்ணப்பதாரர்களுடைய எண்ணிக்கை 5,25,767 இவர்களைச் சேர்த்து மொத்தமாக இந்தப் பதிவேட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை 15,36,391 ஆக 15,36,391 பேர்கள் வேலை வாய்ப்புக் கோரி அந்தப் பட்டியலில் தங்களுடைய பெயர்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் காட்டாது. அதை அரசே

ஒத்துக்கொண்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலே அதை அவர்களே விரிவாக வெளியிட்டிருக்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்டுவது குற்றச்சாட்டுக்காக அல்ல. நிலைமையை விளக்குவதற்காக, தமிழகத்தினுடைய பொருளாதார நிலைமை பற்றி 1984ஆம் ஆண்டு 'இந்து' பத்திரிகை எழுதிய தலையங்கத்தில் குறிப்பிட்ட சில பகுதிகள் மிக முக்கிய மானவை. தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலைமை பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கணிப்பு எந்தவிதமான மகிழ்ச்சியையும் தருவதாக இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தை வகித்த போதிலும், தனி நபர் சாகுபடி நிலத்தைப் பொறுத்தவரை இந்த மாநிலம் இந்தியாவில் 11வது இடத்தை வகிக்கிறது. கனிப் பொருள் கிடைப்பது குறைவு. சத்தற்ற உணவு, குறைந்த போஷாக்குதான் அன்றாட நிலவரம். தேசிய சர்வே மதிப்பீட்டின்படி, தமிழ் நாட்டில் 57.2 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இந்தியாவின் சராசரி 48.13 சதவீதம்தான். மின்சார உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகிய இரு மிகப் பெரிய துறைகளில் ஏற்பட்டிருக்கும் முடக்கம் தீர்க்கப்பட வேண்டும். இந்தியாவில் மின்சார உற்பத்தி 81 சதவீதமாக இருக்கிறது. தமிழகத்தின் நிலை மிகக் குறைவாக இருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள அனல் மின் உற்பத்தி நிலையங்கள் பெருமைப்படும் அளவுக்குச் செயல்படவில்லை. இந்த மாநிலத்தின் மின்சாரப் பற்றாக்குறை சூட்டை ஆற்றுவதற்கு பயன்படும் தண்ணீர் பற்றாக்குறை, பாய்லரில் ஏற்படும் குறைகள், தரமற்ற நிலக்கரி, அந்த நிலக்கரியை வடக்கே உள்ள சுரங்கங்களிலிருந்து இறக்குமதி செய்யும்போது ஏற்படும் போக்குவரத்துத் தடங்கல் ஆகியவை காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இவை அனைத்தும் மாநில மின்சார போர்டு நிர்வாகத்துக்கு விடுக்கப்படும் அறை கூவல். ஆனால் மாநில மின்சார வாரியம் இந்த அறைகூவலை, சிந்திக்கும் ஆற்றலை உருவாக்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மின்சார உற்பத்தியில் ஏற்படும் தடுமாற்றங்கள் தொழில் வளர்ச்சி முதலீட்டைத் தடை செய்வதாக இருக்கின்றன. புதிய தொழில் திறமையைக்

கவர்வதற்குச் செய்யப்படும் ஆக்கபூர்வமான முயற்சி இன்னும் ஒரு தரத்தை எட்டவில்லை. இந்தத் தொழில்களைப் பரவலாக்கும் நோக்கத்தோடு மாவட்டத் தொழில் வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், கிராமங்களில் தொழில்கள் வளருகின்ற அளவுக்கு இந்த மையங்கள் வேகமாகப் பணியாற்றவில்லை. இந்த மாவட்ட மையங்களை மேற்பார்வையிட 1978ஆம் ஆண்டு மாநில அளவில் அமைக்கப்பட்ட குழு 1982, அக்டோபர் மாதம் வரை ஒரு முறைகூட கூடவில்லை என்பதை விமர்சகர்கள் உறுதியாகக் காட்டுகிறார்கள். இம்மாநிலம் திறமையானவர்களைக் கொண்டிருந்தபோதிலும், முக்கியமாக எது தேவைப்படுகிறது என்றால், நன்கு ஆராய்ந்து எடுக்கப்படும் திட்டமும், நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற உறுதியும்தான் என்று 25.1.1984 'இந்து' பத்திரிகைத் தலையங்கத்திலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. நிதியமைச்சர் துண்டு விழுகிற நிலையைச் சமாளிக்க, வருமானத்தைப் பெருக்க சில வரிகளை விதித்திருக்கிறார்கள். நான் அதைப்பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் வருமானத்தைப் பெருக்குவதற்கு வேறு பல வழிகளும் இருக்கின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் சாராயத்தின் மீதுள்ள ஆயத்தீர்வையை – பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 4–லிருந்து ரூபாய் 6 ஆகவும், விற்பனை வரியை 6 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம் ஆகவும் உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி வரியை உயர்த்தியிருப்பது அரசாங்கத்தினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்காக என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ''அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்க வழி சொல்ல வேண்டியது எதிர்க்கட்சிகளுடைய கடமை. குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை. ஆனால் அவைகள் நியாயமாகவும் உண்மையாகவும், ஏற்றுக் கொள்ளத்தக்கவையாகவும் இருக்க வேண்டும்'' என்ற கருத்தை டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையில் பதில் சொல்லும்போது வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நான் ஏற்கனவே பலமுறை சொன்ன

விவரத்தையே இந்த அவையிலும் சொல்லுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளாக நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் 9 சாராயக் கலவைத் தொழிற் சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகள்தான் தமிழகத்திற்குத் தேவையான முழுஅளவு சாராயத்தையும் விற்பனை செய்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் ஒரு பாட்டில் சாராயத்திற்கு அனுமதித்துள்ள விலை ரூ.7.41 காசு. ஒரு பாட்டில் என்றால் 750 மில்லி லிட்டர் கொண்டது. ஒரு லிட்டருக்கு ரூபாய் 11.88 காசு என்றால் 750 மில்லி லிட்டர் கொண்ட ஒரு பாட்டில் ரூபாய் 7.41க்கு விற்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த விலை எவ்வாறு அனுமதிக்கப்படுகிறது என்று பார்த்தால், எரிசாராயத்திற்கு ஆகிய மொத்த விலை 85 காசு மட்டும்தான். ஆனால் இந்தச் சாராயத்தோடு தண்ணீர் கலக்கப்பட்டு அது பாட்டிலில் அடைக்கப்பட்டு அது விற்பனைக்காக வருகிற நேரத்தில் ஒரு பாட்டில் சாராயத்தின் விலை ரூபாய் 7.41 காசு ஆகிறது. அது எந்த வகையில் என்றால் எக்சைஸ் வரி ரூபாய் 3, விற்பனை வரி 44 காசு. சர்சார்ஜ் 0.02 காசு ஆக மொத்தம் ரூபாய் 3.46 காசு. இவை போக எரிசாராயத்திற்கு 85 காசுதான். காலி பாட்டிலுக்கு இந்த அரசு நிர்ணயித்திருக்கிற விலை 2 ரூபாய். பாட்டில் மூடிக்கு 25 காசு. லேபிளுக்கு 5 காசு. பேக்கிங் மெட்டிரியலுக்கு 17 காசு. போக்குவரத்துச் செலவு 30 காசு. வேஸ்ட்டேஜ் 4 காசு. பிறகு அனுமதிக்கப்பட்ட லாபம் 29 காசு. ஆக மொத்தம் ரூபாய் 7.41 காசு. இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எரி சாராயத்திற்கு ஒரு பாட்டில் விலை 85 காசுதான். ஆனால் அது பாட்டிலில் அடைக்கப்பட்டு இவ்வளவு சடங்குகளும் செய்யப்பட்டு வெளியே போகிறபோது, ஒரு பாட்டில் எரி சாராயத்தின் விலை ரூபாய் 7.41 காசு என்று ஆகிறது. ஒரு பாட்டில் ஒன்றுக்கு தொழிற்சாலை 29 காசு லாபம் எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கமே அனுமதித்திருக்கிறது. காலி பாட்டிலுக்கு இந்த அரசு 2 ரூபாய் அனுமதிக்கிறதே எந்த ஒரு கலவைத் தொழிற்சாலையாவது அவ்வப்போது புதிய பாட்டில்களை வாங்கி உபயோகிக்கின்றதா என்றால் இல்லை.

பழைய பாட்டில்களையே சில்லறைக் கடைகளில் 50 காசு, 70 காசு என்று விலைக்கு வாங்கி திரும்பத் திரும்ப அவைகளையே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் அறிந்தோ அறியாமலோ தொழிற்சாலைகளுக்கு ஒரு காலி பாட்டிலுக்கு அனுமதிக்கிற லாபம் ரூபாய் 1.25 காசு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதைத் தவிர மூடிக்கு 25 காசு அனுமதிக்கிறது என்றால் அதில் 10 காசுக்கு மேலாகாது. அந்த வகையில் பாட்டில் மூடி ஒன்றுக்கு 15 காசு லாபம் தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது. அதைப் போலவே 'பேக்கிங் மெட்டிரியல்' என்பதைப் பொறுத்தவரையில், அவ்வப்போது 'பேக்கிங் மெட்டிரியல்ஸ்' என்று வாங்கிப் பயன்படுத்துவதில்லை. சோடா கலர் இவைகளை விற்பனை செய்கிறார்களே அதற்காகப் பயன்படுத்துகிற நிரந்தரமான மரப்பெட்டிகளையே திரும்பத் திரும்ப வரவழைத்து அவைகளில்தான் இந்த சாராய பாட்டில்களை வைத்து அனுப்புகிறார்கள். அதற்காக அரசாங்கம் தொழிற்சாலைக்கு பாட்டில் ஒன்றுக்கு 17 பைசா அனுமதித்தால்,அதன் மூலம் 10 பைசா நிச்சயமாக லாபம் தொழிற்சாலைக்குக் கிடைக்கும். இவைகளைத் தவிர போக்குவரத்து, வேஸ்டேஜ் என்றெல்லாம் சொல்லப்படுவது வெறும் வார்த்தைகளே தவிர, உண்மையில் நடக்கிற செலவு அல்ல. எனவே ஒரு பாட்டிலுக்குக் கிடைக்கிற லாபம் காலி பாட்டில் மூலம் 1.25, மூடி மூலம் 15 காசு, பேக்கிங் மெட்டிரியல் மூலம் 10 காசு மற்றவையும் சேர்த்து ஆக மொத்தம் ரூபாய் 1.79 காசு தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கிறது.

இதிலே கூட கொஞ்சம் தயவு தாட்சண்யம் வைத்து 29 பைசா எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவுக்கு என்று கழித்து விட்டால், ஒரு பாட்டிலுக்கு அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் நிச்சயம் ரூபாய் 1.50க்குக் குறையவே குறையாது. ஒரு பாட்டிலுக்கு 1.50 ரூபாய் கிடைக்கும். தமிழகத்திலே மாதம் ஒன்றுக்கு எத்தனை பாட்டில்கள் விற்பனை ஆகின்றன என்று பார்த்தால், 1983ஆம் ஆண்டில் 84 இலட்சம் லிட்டர் மாதம் ஒன்றுக்கு சாராய விற்பனை என்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் தெளிவாக

திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். எவ்வளவுதான் அண்ணா சமாதியில் நின்று போதித்தாலும், அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் 84 இலட்சம் லிட்டராக இருந்தது இப்போது அது பெருகி, மாதம் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இந்த 9 கலவைத் தொழிற்சாலைகளும், 1.50 இலட்சம் லிட்டர் சாராயத்தை 750 மில்லி பாட்டில்களில் அடைத்தால் 2 கோடி பாட்டில்கள் ஆகின்றன. நான் ஏற்கெனவே சொன்னேன் பாட்டில் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் லாபம் என்று. ஆகவே 2 கோடி பாட்டில்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் லாபம் வருகிறது. மாதம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் என்றால் ஆண்டுக்கு 36 கோடி ரூபாய் அந்த 9 தொழிற்சாலைகளுக்கு லாபமாகக் கிடைக்கிறது. இது 9 குடும்பங்களுக்குப் போய்ச் சேருகிறதா அல்லது இவைகள் எல்லாம் பினாமியாக ஒரே குடும்பத்திற்குப்போய்ச் சேருகிறதா என்ற ஆராய்ச்சியில் நான் இந்த அளவிலே இறங்க விரும்பவில்லை. 9 பேருக்குச் சென்றாலும், ஒருவருக்குச் சென்றாலும், அதை அரசு ஆராய்ந்து பார்த்து, 36 கோடி ரூபாய் இலாபத்தை, வருமானத்தை அரசே பெறுகிற அளவிற்கு ஏன் அதை அரசுடைமையாக்கக் கூடாது என்று நிதியமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

இதை 1983ஆம் ஆண்டு நான் பேரவையிலே விளக்கிப் பேசினேன். நான் பேசிய பிறகு, அதன் விளைவாக என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். விவரம் எனக்குத் தெரியாது, இருந்தாலும் நன்றி கூறிக் கொள்கிறேன் - சாராய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே எடுத்துக் கொண்டது. அதன் காரணமாக பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வந்தது. அதிலேகூட சிறு தவறு ஏற்பட்டு, பல கோடி ரூபாய் வருமானம் வந்ததால் அதிலே ஏழு எட்டு கோடி என்று நினைக்கிறேன் வருமான வரி கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு, அதைத் தவிர்க்கும் வகையில் deVneFe என்ற முறையில் மாற்றப்பட்டு, வருமான வரி கட்டவேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டு, அரசாங்கக் கார்ப்பரேஷன் மூலமாக சாராய மொத்த வியாபாரத்தை எடுத்து நடத்துவதால் அந்த மொத்தப் பணமும் அரசாங்கத்திற்கு, கிட்டத்தட்ட

10 கோடி ரூபாய் அளவிற்கு கிடைக்கும் என்று கருதுகிறேன். ஆகவே நான் கூறுகிற இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் அந்த 9 பேருக்குக் கிடைக்கும் 36 கோடி ரூபாய் லாபத்தை, வருமானத்தை - இது அவர்கள் காட்டுகிற லாபம், காட்டாத லாபம் வேறு - அரசாங்கம் பெற வழி இருக்கிறது. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திலே மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருவோம், கடைகளையே மூடுவோம் என்று அறிவித்திருப்பதால், இந்த நான்கைந்து மாதங்களுக்காக அவைகளை எடுக்க வேண்டுமா என்று ஒரு வேளை கேட்கக்கூடும். அப்படி இருந்தால் எடுக்கத் தேவையில்லை. வருகிற செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சர் அவர்களுடைய வாக்குறுதி நிறைவேற்றப்படுமானால், மதுவிலக்கு மீண்டும் வருமானால், அதை நிறைவேற்றவேண்டிய அவசியமில்லை, எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனால் உறுதிமொழிகள் எத்தனையோ முறை கொடுத்ததைப்போல, இந்த ஆண்டும் தரப்பட்டது. எனவே செப்டம்பர் மாதம் மதுவிலக்கு வராது என்று திட்டவட்டமாக உங்களுக்குத் தெரியுமேயானால், நீங்கள் இதை எடுத்துக்கொள்வதன் மூலமாக தனியாருக்குப் போகும் 36 கோடி ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்ற வழிவகை இருக்கிறது என்று ஏதாவது திட்டவட்டமான யோசனைகளை சொல்லக்கூடாதா என்று கேட்கின்ற நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

பேரவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கான பதிலுரையில் நாவலர் அவர்கள், ''ஏழாவது நிதிக்கமிஷன் கையாண்ட அணுகுமுறை, வாய்ப்பாடு பின்பற்றப்பட்டிருந்தால் தமிழகத்திற்கு அதிகப்படியாக 380 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஊக்கம், செயலாற்றும் திறன், நியாய ரீதியாக தமிழகத்திற்கு உரிய நிதி பங்கீடு செய்யப்படவில்லை'' என்றும் ''மத்திய நிதி உதவி ஒதுக்கீடு, மாநிலத்தில் மத்திய அரசின் முதலீடு மற்ற மாநிலங்களைவிட இங்கே குறைந்து கொண்டே வருகிறது'' என்றும், ''எட்டாவது நிதிக்கமிஷன் நியாயம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம். அதற்குப் பதில் தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது'' என்றும்

கூறியிருக்கிறார். இவைகளையெல்லாம் மத்திய அரசிடம் வாதாடி போராடிப் பெற்ற தமிழக அரசை நோக்கி எதிர்க்கட்சிகள் சார்பிலே சாட்டக்கூடிய குற்றச்சாட்டுகள் என்றாலும், அந்தக் குற்றச்சாட்டுக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டு நாவலர் அவர்களே ''மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது, நிதிக்கமிஷன் வாயிலாக வஞ்சிக்கிறது'' என்ற பேருண்மையை ஒத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து அவரும் சோக கீதம் பாடி இருக்கிறார் என்றாலும்கூட அந்த அளவிற்கு அவர் நிலைமைகளை விளக்கியிருப்பதற்காக நான் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசினுடைய உதவிகளை மாநில அரசு பெறுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எந்த அளவுக்கு இந்த அரசுக்கு ஒத்துழைப்புத்தர முடியுமோ அந்த அளவுக்கு வழங்கப்படும். கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் அப்படிப்பட்ட ஒத்துழைப்பை அங்கே தந்திருக்கிறார்கள். சட்டமன்றத்திலேயும் தந்திருக்கிறார்கள். அதேபோல் ஒத்துழைப்புத்தந்து, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நம் தமிழக அரசுக்கு உதவிகள் கிடைப்பதற்கு கழகம் ஒத்துழைக்கும் என்ற உறுதியை நான் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நாவலர் அவர்கள், அவர்களுடைய பதில் உரையிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ''மாநிலங்களுக்கு மைய நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, 1951ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்கம் செய்ய தொடர்ந்து வற்புறுத்துவோம். இப்போது 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்க மத்திய அரசு முன்வந்துள்ளதன் காரணமாக நல்ல திட்டங்களை வைத்து வளமான சமுதாயத்தை உருவாக்கும் பணியிலும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றியும்கூட, தமிழகத்திற்கு ஊக்குவிக்கும் வகையில் பரிசு கிடைப்பதற்கு பதிலாக தண்டனை வழங்கப் பட்டுள்ளது'' என்று நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மத்திய அரசைக் குறை கூறியிருக்கின்றார்கள்.

இவ்வாறு தன்னுடைய பதில் உரையிலே விளக்கியிருக்கும் நாவலர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிற பட்ஜெட்டைப் பார்த்தால், பக்கம் 59ல் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ''மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும் போது 1971ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்த போதிலும்'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1951தான் சரியான முடிவு என்பதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. 1971 என்று எடுத்துக்கொண்டு தண்டனை வழங்குகின்றது என்று பதில் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள் நாவலர் அவர்கள். வரவு-செலவுத் திட்டத்திலே, எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற புத்தகங்களிலே பார்க்கிறோம். ஆங்கிலத்திலேகூட அப்படித்தான் இருக்கின்றது.

"The Government of India have taken the right decision of freezing the population of State at the 1971 level."

என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒருவேளை தமிழிலே தவறுதலாக வந்துவிட்டதோ 'சரிவு' என்பது, சரி என்று வந்து விட்டதோ என்பதைப் பற்றிப் பார்க்க ஆங்கிலத்திலே படித்துப் பார்த்தேன். 'ரைட் டெசிஷன்' என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பட்ஜெட் உரையிலே 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை அடிப்படையாக வைத்திருப்பது ''ரைட் டெசிஷன்'' என்று பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டுவிட்டு பதில் உரையிலே,''அது ஒரு தண்டனை, 1951தான் சரியான அடிப் படை'' என்று குறிப்பிட்டிருப்பது விநோதமாக இருக்கிறது. இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது குடும்பநலத் திட்டத்தின் மூலம் ஏற்படுகின்ற விளைவுகளைக்

கருத்தில் கொள்ளாமல், 1951ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து அந்தந்த மாநிலங் களுக்குப் பங்கீடு செய்தால், குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றுவதால் மாநிலங்கள் பாதிக்கப்படமாட்டா என்ற கருத்தைத்தான் தொடர்ந்து சொல்லி வந்திருக்கிறோம். நாம் பல முறைகள், பல இடங்களில் வற்புறுத்திவந்தும் கூட, கடைசியிலே இந்த அளவிற்காவது வந்திருக்கின்றார்களே என்று சொல்கின்றேனே தவிர வேறல்ல. இப்போது 1971ஆம் ஆண்டுக் கணக்கு என்று ஏற்றுக் கொள்கின்ற அளவிற்குத்தான் வந்திருக்கின்றார்கள். அது நாம் ஏற்றுகொள்கின்ற முழுமுடிவு என்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. சரியான முடிவு என்றால் இந்த அளவிற்காவது வந்திருக்கின்றார்களே என்றுதான் சொல்கிறேன். அந்த அளவிற்கு ஒரு ஐட்டத்திற்கு வந்திருக்கின்றார்களே தவிர, மற்றொரு ஐட்டத்திற்கு 1981ஆம் ஆண்டு என்று சொல்லியிருக்கின்றார்கள். அதில் 1971ஆம் ஆண்டு அளவிலே கூட ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றார்கள். அவர்கள் இப்போதும் அப்படித்தான் சொல்கின்றார்கள். நாங்கள் 1951ஆம் ஆண்டு என்று இருந்தால்தான் நமக்கு முழுமையான நியாயம் கிடைக்கும் என்று சொல்கிறோம்.

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 1971ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தபோதிலும் - ஒரு வேளை நாவலர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்த குறிப்பைப் படிக்கும்போது அதைப் படிக்கத் தவறி இருக்கலாம். அதனால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம் - 'சரியான முடிவு' என்று நாம் சொல்லக்கூடாது. ''ஒரு முடிவு எடுத்திருந்தபோதிலும்'' என்றுதான் நாம் சொல்லியிருக்க வேண்டும். அது சரியான முடிவு என்று நாமே ஒத்துக் கொண்டால், அது தீமையாக முடியும் என்பதற்காகச் சொல்கிறேன். மாநில அரசின் மீதும், மாநிலத்தின் மீதும்,

மாநில அரசு பெற வேண்டிய நிதியின் அளவின் மீதும் நாம் அக்கறை கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இப்படி யெல்லாம் சொல்கின்றேனே அல்லாமல் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

ஆக நாமே 'சரியான முடிவு' என்று சொல்லிவிட்டால், பிறகு ''நீங்களே சரியான முடிவு', 'ரைட் டெசிஷன்' என்று சொல்லிவிட்டீர்கள், ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்'' என்று அவர்கள் கேட்கக்கூடும். இது நாவலர் அவர்கள் கவனத்திற்கு வராமல், அதிகாரிகள் எழுதிக் கொடுக்கும்போது அப்படி ஆகியிருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

மத்திய அரசு,எந்த வகையில் மாநில அரசைப் புறக்கணிக்கிறது என்று மேலும் உதாரணங்கள் பார்க்கும்போது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய மாநில அரசுகளின் பங்கு 50:50 என்ற அளவில் இருந்தது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 25.8 சதவிகிதம் மத்திய அரசின் உதவி என்ற அளவுக்குக் குறைந்தது. ஐந்தாம் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு 26.5 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்தது. 6ஆம் திட்டத்தில் 21 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்தது. மத்திய அரசின் பங்கு குறைந்து தற்போது மாநில அரசின் பங்கு 79 சதவிகிதம் என்ற அளவுக்கு ஆகியிருக்கிறது. இது மத்திய அரசு தொடர்ந்து மாநிலங்களுக்கு இழைத்து வருகின்ற தீமைகளில் ஒரு கூறு என்று நானும் இந்த அரசோடு சேர்ந்து, எடுத்துக்காட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

மத்திய அரசு எழுப்பிய மொத்தக் கடன் தொகையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 76 சதவிகிதம் மாநிலங்களுக்கு என்று வரையறுக்கப்பட்ட நிலை மாறி கடன் தொகையில் மாநிலங்கள் பங்கு இப்போது 25 சதவிகிதம்தான் என்று குறைந்து, மீதியுள்ள 77 சதவிகிதம் மத்திய அரசுக்கு என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இவைகளெல்லாம், நாவலர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டதுபோல, நம்முடைய தமிழ் மாநிலம் நிதிக் கமிஷனால், மத்திய அரசால் வஞ்சிக்கப்படுகிறது என்பதற்கு மேலும் உள்ள ஆதாரங்களாகும். எனவேதான் மத்திய அரசோடு

வாதிடுகின்ற அந்தப் போர்க்குணம் மாநில அரசுக்குத் தேவை என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் மாநிலங்கள் போதுமான அதிகாரங்களைப் பெற்று மத்தியிலே ஒரு உண்மையான கூட்டாட்சியும், மாநிலங்களிலே சுயாட்சியும் ஏற்பட வேண்டுமென்ற கருத்தை நாம் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். 1985-86ஆம் ஆண்டிலே மாத்திர மல்ல, 1983-84ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட நம்முடைய நாவலர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். 'தன்னாட்சி' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மாநில சுயாட்சி என்று குறிப்பிடவில்லை. 'தன்னாட்சி' என்று குறிப்பிட்டார்கள். தேசீய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடு கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டுமென்று 1983-84ல் குறிப்பிட்டார்கள். நான் 1983-84ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அந்த அவையிலே பேசும்போது, நாவலர் அவர்களின் அந்தக் கருத்தை வரவேற்றுப் பேசி, மாநில சுயாட்சி பற்றி 1974ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சட்டமன்றப் பேரவையிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை ஏற்காவிட்டாலும் மாநில சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா அவர்கள் சொல்லவில்லை என்று குறிப்பிட்டாலும், அப்போது நானும், நாவலர் அவர்களும், அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் பெருமக்களும் அண்ணா அவர்கள் எந்தெந்த நேரத்தில் மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று விளக்கமளித்து, அதற்குப் பிறகு அவர்கள் வெளிநடப்புச் செய்து, பிறகு மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழக சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றி, அந்தத் தீர்மானம் இங்கேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. 1983ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விவாதிக்கும் போது – நான் அதற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு மாநில சுயாட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்று 1983-84லும் குறிப்பிட்டார்கள். 1985–86ஆம் ஆண்டுக்கான இந்தப் புத்தகத்திலும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஸ்டேட் அடானமி, மாநில

சுயாட்சி என்ற சொல்லை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா, ஒப்புக் கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை. நான் அப்போதே கேட்டேன். முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொச்சிக்கு ஒரு முறை 1983ஆம் ஆண்டு சென்றிருந்தபோது, மாநில சுயாட்சி பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது,

The Tamil Nadu Chief Minister Thiru M.G.Ramachandran said here today that he would welcome any move for joint effort by the southern states for more powers to States. Any such move would get the full support of Tamil Nadu Government, he said answering at a crowded Press Conference. "But we are not for State Autonomy, he clarified."

என்ற எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் வாசகத்தைப் படித்துக் காட்டினேன். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு, ''இன்னொரு விளக்கத்தையும் அங்கே சொன்னேன், அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள், அது பத்திரிகையில் வராததற்கு நான் பொறுப்பல்ல, ஸ்டேட் அட்டானமி என்று சொன்னால் பிரிவினை என்ற பொருள் கொடுத்துவிடும். ஆகவே அந்த வார்த்தையை மாத்திரம் மறுக்கிறேன் என்று சொன்னேன். அது பத்திரிகையில் வரவில்லை'' என்று 1983ஆம் ஆண்டில் குறிப்பிட்டார். நான் உடனே சொன்னேன். ''இல்லை, இல்லை, நீங்கள் சொன்னது 'இந்து' பத்திரிகையில் வந்தது, அதையும் படித்துக் காட்டுகிறேன்'' என்று படித்துக் காட்டினேன்.

"Differentiating between autonomy and additional powers for States, Mr.M.G.Ramachandran said he was hesistant to use the term 'State Autonomy' because it was being understood as 'separation.'

மாநில சுயாட்சி என்று சொன்னால் அது பிரிவினை வாதம் ஆகிவிடும் என்பதற்காக அப்படிச் சொல்ல தயங்கியதாக மாண்புமிகு முதல்வர் கூறியதாக 'இந்து' பத்திரிகையில் வந்ததை சட்டசபையில் 14.3.1983 அன்று நான் படித்துக் காட்டினேன். அப்பொழுது அவர்கள் 'ஸ்டேட் அட்டானமி' என்ற வார்த்தையை ஒத்துக்கொள்ள முடியாது.

அது பிரிவினை என்கின்ற வாதத்தைக் கிளப்புகிறது என்றும் சொன்னார்கள். அப்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரைகளை எல்லாம் நான் எடுத்துப் படித்தேன். மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை வாதம் ஆகிவிடாது என்ற தன்னாட்சிக்கும் தனி ஆட்சிக்கும் உள்ள அந்த வேறுபாட்டை, முரண்பாட்டை மாண்புமிகு நாவலர் அவர்கள் தனக்கே உரிய தனித்தமிழில் விளக்கியவைகளை எல்லாம் எடுத்து அந்த அவையில் படித்திருக்கிறேன். இந்த அவையிலே அதுபற்றி விவாதம் வந்தபோது கூட, நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் ஒரு தேசியவாதி என்கிற முறையில், இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதிகளிலே ஒருவர் என்கிற முறையில், இங்கே எதிர்ப்புக் குரல் அப்போது கிளப்பப்பட்ட போது, இங்குள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. ராஜாராம் நாயுடு போன்றவர்கள், மற்றவர்கள் எல்லாம் அதைக் குறித்து எதிர்ப்பாகப் பேசும்போது, ''இது பிரிவினையில் கொண்டுபோய் விட்டு விடாதா?'' என்று பேசியபோது, நம்முடைய அவைத்தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் ''நானே இந்திய நாட்டினுடைய விடுதலைக்காக போரிட்டவன், ஒரு தேசியவாதி. நான் சொல்கிறேன், இது பிரிவினை வாதம் அல்ல. இது 1937-38ஆம் ஆண்டிலிருந்தே சொல்லப்பட்டு வருகின்ற ஒரு கோரிக்கை, எனவே இது பிரிவினை வாதிகளால் சொல்லப்படுகின்ற வாதம் என்று கூறுவது தவறு'' என்று குறிப்பிட்டு விட்டு மேலும் ஒன்றை அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கே அப்போது ஓர் அறைகூவல் விடுத்தார்கள். ''நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு என்ன செய்யப்போகிறது? அது எனக்குத் தெரிய வேண்டும். தீர்மானம் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு விட்டது. இங்கும் நிறைவேற்றப் போகிறோம். அதற்கு அப்புறம் என்ன நிலைமை? கொள்கை ரீதியிலே மத்தியில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். அதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. பிரச்சாரம் வேண்டுமென்று

முதல்வர் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். நாளைக்குக் கூட சென்னையில், மயிலையில் நானும் கலைஞரும் பேசுகிறோம். மாநில சுயாட்சிப் பிரச்சாரம்தான். ஒன்றை மறந்துவிட வேண்டாம். இந்த விஷயத்தில் நாம் போதிய அளவு பிரச்சாரம் செய்திருக்கிறோம். ஆக நாம் நடவடிக்கை எடுக்க தாமதிப்பதானது அது நம்மையே பலவீனப்படுத்திவிடும் என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் தாமதிக்க அவசியம் இல்லை, தேவையில்லை என்று எண்ணுகிறேன்'' என்று அன்றைக்கு நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் துணைத்தலைவராக இருந்து வீர முழக்கமிட்டார்கள். இன்னும் சொன்னார்கள். யாரோ சொன்னார்களாம் ம.பொ.சி.கொள்கையை கலைஞர் எடுத்துக் கொண்டார் என்று. ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல, அடக்கத்தால் மட்டுமல்ல, சத்தியமாகச் சொல்கிறேன், இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தமல்ல. அகில உலகின் அரசியல் சாஸ்திரம், சரித்திரம் இது. 1781ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சகாப்தம் பின்னால் விரிவடைந்து வருகிறது. நாடு நாடாக பவனி வருகிறது. அதற்காக ஒரு இயக்கத்தைத் துவங்கியவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமேயொழிய, தத்துவமே எனக்கு ஏகபோகமல்ல. கலைஞர் என் கையில் இல்லை. நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன். அவரது ஆட்சியை வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எங்கோ கிடந்த எளியவனான என்னை அழைத்து வந்து செக்ரட்டேரியட்டில் ஓர் ரூம் எனக்குக் கொடுத்து இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன், நான் இப்படி நெடுநாள் அறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க விரும்ப வில்லை. இந்த அறையை விட்டு இந்த மாநில சுயாட்சிக்காக சிறைபுகவே விரும்புகிறேன். உங்களுடைய ராஜ்யத்தின் சிறைச்சாலைகளில் எனக்கும் என் தோழர்களுக்கும் இடம் பார்த்து வையுங்கள். அந்தச் சிறைச்சாலைகளைத் திறந்து வையுங்கள், இன்னொரு முறை இந்த ஏழைத் தொண்டன் நோயாளியாகி சிறையில் அடைபட்டு அங்கு உயிர்

விடுவேனானால் எனது அஸ்தியிலே தோன்றுகின்ற பல லட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேடி என்னை விட 19 வயது குறைந்தவரான கலைஞருக்கு உதவி செய்வார்கள்'' என்று அன்றைக்கு அவர்கள் முழக்கமிட்டார்கள். ஆனால் தொடர்ந்து அவர்கள் குறிப்பிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இப்பொழுது என்னைக் குறிப்பிட்டு வைத்து, நான் விவாதத்திலே பிரச்சினைக்கு உள்ளாக விரும்பவில்லை. தாங்கள் விளக்கியதைப் பார்த்தால், நான் ஏதோ அதை கைவிட்டு விட்டதைப் போல அல்லது அதிலிருந்து பிறழ்ந்து விட்டதைப் போல சொல்கிறீர்களா? இவ்வளவு நீளமாக விவாதத்திற்கு என்னை இழுப்பது அவ்வளவு சரியானதாக எனக்குத் தோன்றவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : நீங்கள் அதைக் கைவிடவுமில்லை. கைவிட்டுவிட மாட்டீர்கள் என்பதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும். அப்பொழுதே இதற்காக மிகப் பெரிய போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பதுதான் தங்களுடைய கருத்தாக இருந்தது. இன்னும் சொல்லப் போனால், ஒரு போராட்டத்தைக்கூட தாங்கள் நடத்தினீர்கள். சிறைச்சாலைக்கும் சென்றீர்கள். நான் அவைகளை எல்லாம் சொல்வதற்கு முன்பு முந்திக் கொண்டீர்கள். நடத்தினீர்கள். அதற்குப் பிறகு இரண்டு, மூன்று மாதங்களுக்குள் எல்லாம் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு நாட்டில் பல்வேறு நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டுவிட்டன. ஆனாலும் மாநில சுயாட்சிக் கொள்கை, அன்றைக்கு தமிழ்நாடு அளவில் தமிழரசுக் கழகத்தின் சார்பில், அவைத்தலைவர் அவர்களால் பிரச்சாரம் செய்யப்பட்டு, மாநில அளவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, தமிழ் மாநிலம் மட்டுமல்லாமல் காஷ்மீரம் வரையில், மேற்கு வங்கம் வரையில், ஆந்திரா வரையில் உள்ள தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, மாநில சுயாட்சிக்

கருத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவர்கள் எண்ணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கான மாநாடும் போடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சாரம் தொடர்ந்து நடக்க வேண்டும். அப்படி நடைபெற்றால், இந்தியா உண்மையான கூட்டாட்சியுள்ள நாடாக, உண்மையான ஃபெடரல் செட்டப்பில் மாநிலங்கள் அமைந்தால்தான், நாவலர் கூறுவதைப் போல மக்களோடு நெருக்கமான தொடர்பு கொண்ட மாநிலங்கள் அமைய முடியும். இந்த மண்ணைப் பாதுகாக்கிற கடமையை மட்டும் கையில் வைத்திருக்கிற மத்திய அரசுக்கு இந்த நாட்டைப் பாதுகாக்கிற சூழ்நிலை ஏற்பட முடியும். எனவேதான் மாநில சுயாட்சிக் கொள்கையில் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்தமாக தொடர்ந்து பணியாற்றி வருகிறது. அவைத் தலைவர் அவர்கள் எழுப்பிய போர்க்குரல் இன்றைக்கு மங்கிவிடவில்லை என்பதையும், அதற்குச் சாதகமாக என்றென்றும் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்பதையும் நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த அரசு தொடர்ந்து குழப்பமான சிந்தனைகளை, ஸ்டேட் அட்டானமி என்றால் அது பிரிவினை என்று முதலமைச்சரே சொல்கிற அளவுக்கு ஒரு வேறுபட்ட, முரண்பட்ட கொள்கையை உருவாக்காமல் தடை போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாவலர் அவர்கள் அங்கே இருக்கிற காரணத்தால், மாநில சுயாட்சியின் தன்மை பற்றி பல முறை சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டத்திலும் 'ஸ்டேட் அட்டானமி' மாநில சுயாட்சி, தன்னாட்சி போன்றவைகள் இடம் பெற்று வருகின்றன. அதற்காக நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நமது நிதியமைச்சர் நாவலர் அவர்கள், ஸ்ரீலங்கா பிரச்சினைப்பற்றிப் பேசுகையில், ஸ்ரீலங்கா அகதிகளுக்காக நாம் அளித்து வருகிற சலுகைகள், உதவிகள் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி அதிகமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. அமைச்சர்கள் படித்திருக்கலாம். ஜூனியர் விகடன் ஏட்டில், ஸ்ரீலங்கா அகதிகள் எப்படியெல்லாம்

அதிகாரிகளாலும், ஒப்பந்தக்காரர்களாலும் ஏமாற்றப்படுகிறார்கள், விரட்டியடிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து, இரண்டு வாரம் கட்டுரை எழுதினார்கள். ஜூனியர் விகடன் ஒரு கட்சி சார்புடைய ஏடல்ல. உங்களுக்குத் தெரியும். அது திராவிட முன்னேற்றக் கழகத்தையும் விமர்சிக்கும், அ.தி.மு.க.வையும் விமர்சிக்கும். மற்ற கட்சிகளையும் விமர்சிக்கும். அதே நேரத்தில் நாட்டிலே நிலவுகின்ற குறைபாடுகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்கிற ஏடாக இருக்கிறது அது. என்னைக்கூட சில சமயங்களில் விமர்சித்து பல நேரங்களில் தாக்கி அதிலே எழுதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில உண்மைகள் அந்த ஏட்டில் வெளிவருகின்ற நேரத்தில், அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஸ்ரீலங்கா அகதிகளாக இருப்பவர்களின் நிலைமைகளை அந்தப் பத்திரிகை கட்டுரை எழுதியும், புகைப்படங்கள் எடுத்தும் வெளியாக்கியிருப்பதை நாவலர் அவர்களின் பார்வைக்குத் தருகிறேன். அவர்களுக்காக கட்டித்தரப்பட்ட வீடுகள், ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டப்பட்ட மறுநாளே இடிந்து விழுந்து, பச்சைக் கற்களாகக் காட்சியளிக்கின்றன. அப்படி இடிந்த வீடுகளில் இருந்த அவர்களது கார்டுகள், அந்த ஒப்பந்தக்காரர்களால் ஏமாற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட சம்பங்களும் அங்கே நடந்திருக்கின்றன. மத்திய அரசு தருவதாக வாக்களித்துள்ள கடனை நம்பி, தமிழக அரசு அவர்களுக்கு வழங்கி வருகிற கடன்கள், இடையிலே இருக்கிற அரசாங்க அதிகாரிகளாலும், அவர்களுடன் ஒப்பந்தம் பேசிக் கொண்டிருக்கிற காண்ட்ராக்டர்களாலும் பிடுங்கப்பட்டு, அந்த அகதிகள் இன்றைக்கு ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதுக் கோட்டை மாவட்டத்திலும் நீலகிரி மாவட்டத்திலும் அவர்கள் படும் பாட்டை அந்த ஏடு விளக்கமாகக் காட்டியிருக்கிறது. அதைப் படிக்க வேண்டும். முன்னாலேயே அதைப் படித்திருந்தால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்ரீலங்காவிலிருந்து துரத்தப்பட்டு, பரிதாபமாக இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்திற்கு வரும் அகதிகளை மேலும் இங்கே அவமானப்படுத்துவது ஏமாற்றுவது, தமிழகமும் இப்படித்

தானா என்று அந்த அகதிகள் எண்ணிவிடக்கூடாது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்பதை இங்கே பேசிய உறுப்பினர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அருமை நண்பர் திரு. பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களும், சட்டமன்றக் கட்சித் துணைத்தலைவராக இருக்கிற அருமை நண்பர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் மற்றவர்களும் இது குறித்து விளக்கியிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்த வரையில், நம் கழகத்தை பொறுத்தவரையில், ஒரு போராட்டத்தை நடத்துவது என்ற ஒரு முடிவை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அந்தப் போராட்டம் நடத்தத் தேவையில்லையென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறவில்லை என்பதையும் நாவலர் அவர்கள் இங்கே நேற்றைய தினம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

சர்வகட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்த சர்வகட்சிக் கூட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கருணாநிதி ஏன் போகவில்லை என்று நம்முடைய அவையினுடைய மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். எழுப்பியது மாத்திரம் அல்ல, கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற சர்வகட்சி கூட்டங்கள் பற்றியெல்லாம் கூட அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் அந்த சர்வகட்சிக் கூட்டம் ஒன்றுக்கும் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில், அ.தி.மு.க.வினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த என்னுடைய அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வரவில்லை என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. ''அவர் வரவில்லை என்பதற்காக நீங்கள் வராமல் இருந்துவிட்டீர்களா?'' என்று கேட்டால், ''அவர்கள் வரவில்லை. ஆகவே வராமல் இருந்துவிட்டேன்'' என்று அல்ல. பிரச்சினைதான் எங்களுக்கு முக்கியம். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைக்காக 1983ஆம் ஆண்டு நடந்த இரண்டொரு கூட்டங்களில் நான் கலந்துகொண்டு

கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றேன். ஒருமுறை நான் கூறிய கருத்துக்களை ஏற்காத காரணத்தால், நாங்கள் தனிமைப்படுத்தப்பட்ட நேரத்தில், எங்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு கூட செய்திருக்கின்றோம். எனவே நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால், நான் கழகம் நடத்துகின்ற போராட்டத்திற்காக கடந்த மாதம் 31 ஆம் தேதி இந்த மாதம் முடிய என்னுடைய சுற்றுப்பயணத் தேதிகளை வெளியிட்டு 4,5 ஆம் நாட்களிலும் 6ஆவது நாளிலும் பிறகு 8,9, 10ஆம் நாட்களிலும் சென்னையிலே இருப்பதாகவும், மற்ற நாட்களில் வெளியூர் போவதாகவும் சுற்றுப்பயண நாட்கள் செய்தித் தாளில் வந்திருக்கிறது. இருந்தாலும்கூட நான் 2ஆம் தேதி எங்கிருக்கிறேன் என்று பார்த்து அந்தக் கூட்டத்தைக் கூட்டியிருப்பதுபோல இருக்கிறது. 2ஆம் தேதி கூட்டம் என்று 31ஆம் தேதி எனக்கு அறிவிப்பு கிடைத்தது.

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில், அவரவர்களுக்கு என்று தனிப்பட்ட கருத்துக்கள் இல்லை. ஒருமுகமாக எங்கள் செயற்குழுவிலும், பொதுக் குழுவிலும் எடுக்கப்படும் கருத்துக்களைத்தான் நாங்கள் சர்வகட்சிக் கூட்டத்திலே எதிரொலிப்போம் என்கிற வகையில் முதல்நாள் கூட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், திரு. டி.ஆர்.பாலு அவர்களும், மறுநாள் கூட்டத்திற்கு எங்கள் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் திரு. கந்தப்பன் அவர்களும், திரு. டி.ஆர்.பாலு அவர்களும் சென்று கழகத்தினுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். 1983ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. இன்னமும் பிரதமர் திரு. இராஜீவ் காந்தியைச் சந்தித்து மனுக்கொடுப்பது என்ற நிலையே இருந்தால் அது போதுமானதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் 1983ஆம் ஆண்டில் கொடுத்த மகஜருக்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ''இலங்கையிலுள்ள தமிழர்களின் பாதுகாப்புக்கு உறுதியை ஏற்படுத்தவும், நிர்வாகத்தில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தவும், ஐ.நா.சபை

உலகம் முழுவதுமிருந்து பார்வையாளர்களைக் கொண்ட குழு ஒன்றை உடனடியாக நியமிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தப் பிரச்சினை ஐ.நா.சபையில் உடனடியாக எழுப்பப்பட வேண்டும். இலங்கை அரசும், இராணுவமும் கட்டவிழ்த்து விட்டிருக்கிற படுகொலைகளுக்கு ஒருமுற்றுப்புள்ளி வைக்க, ஐ.நா.வின் பாதுகாப்புக் கவுன்சிலில் உடனடியாக இந்தப் பிரச்சினை எழுப்பப்படவேண்டும். இலங்கைக்கு ஐ.நா. சபையின் படைகளை அனுப்புவதன் மூலம் மாத்திரமே இதனைத் தடுத்து நிறுத்த முடியும். அதே சமயத்தில் இலங்கையில் நடைபெறுகின்ற இனப்படுகொலையை நிறுத்த, கூட்டு சேரா நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற்றிட வேண்டும். காமன்வெல்த் நாடுகளுக்கிடையே இதற்கான தீர்வைக் கேட்டிட வேண்டும். உயர்மட்ட, உலக அளவிலான தூதுக்குழு ஒன்று இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர், இந்தியப் பாதுகாப்புப் படை அமைச்சர், தமிழகத்திலிருந்தும் சில பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழு ஒன்று எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில், இலங்கைக்கு அனுப்பப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். பங்களாதேஷ் மக்கள் பாதிப்புக்கு ஆளான நேரத்திலும், பாலஸ்தீனிய அகதிகள் பிரச்சினையிலும் உலக முழுவதும் எடுக்கப்படும் அதே வழிமுறைகளை எல்லாம், மேலும் தாமதம் ஆவதற்கு முன்பு இந்தக் குழு நன்கு தெரிந்து வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்திய அரசு, இலங்கைத் தமிழர்களை - அவர்கள் சிங்கள குடியுரிமை பெற்றவர்களானாலும், இந்தியர்க ளானாலும், நாடற்றவர்களானாலும் – அவர்கள் துயரங்களைத் துடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று நம்முடைய கோரிக்கைகளை எல்லாம் அந்த முறையீட்டிலே வைத்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே 1983ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் கொடுக்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இடையிலே பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். காவிரி நீர் பிரச்சினையிலே 1972ஆம் ஆண்டிலே தீர்மானம் போடப்பட்டு, அதற்கு சர்வ கட்சிக்

கூட்டம் போடப்பட்டு மத்திய அரசிடம் மனு கொடுக்கப் பட்டது. ஆனால் மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கே நினைத்த மாதிரி செய்யவில்லை என்ற கருத்திலே சொல்லப்பட்டாலும் கூட, தொடர்ந்து மத்திய அரசாங்கத்தோடு பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, மத்திய அரசோடு பேச வேண்டாம், எந்தவிதமான ஒப்பந்தமும் இல்லை என்று ஒதுக்கி வைத்துவிடவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்சினையிலே நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மனு கொடுத்தோம். அந்த மனுவின்மீது மத்திய அரசும் செவி சாய்க்கவில்லை. ஆகவே மத்திய அரசாங்கத்தோடு பேசுவதில் பயன் இல்லை என்று இந்த அரசை மட்டும் உறுப்பினர் குறை சொல்வது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : மன்னிக்க வேண்டும். நான் இந்த அரசைக் குறை கூறவே இல்லை. இங்கே மாத்திரம் அல்ல, நான் பேசுகின்ற போராட்ட விளக்கப் பொதுக்கூட்டத்தில் இந்த அரசைக் குறை கூறி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இந்த அரசு தன்னால் இயன்ற அளவுக்குத் தன்னுடைய கடமையைச் செய்து வருகிறது என்றுதான் நான் திட்டவட்டமாகச் சொல்கின்றேன். மத்திய அரசை நான் கண்டிக்கிற நேரத்தில் கூட மத்திய அரசை வலியுறுத்துவதற்காக இந்தப் போராட்டமே தவிர மத்திய அரசை எதிர்த்து இந்தப் போராட்டம் என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசை வலியுறுத்துவதற்காகத்தான் என்று சொல்கின்றோம். காவிரிப் பிரச்சினையிலே கூட தமிழக அரசு அன்றைக்கு இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கையாளுகிற நேரத்தில், பல இடங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதைப் போலத் தான் அரசு தன்னுடைய கடமையைச் செய்கிறது. அதோடு சேர்ந்து எங்களுடைய கடமையை நாங்கள் செய்கிறோம். அப்போது விவசாயிகள் போராட்டம் நடத்தியதைப் போல நாங்களும் போராட்டம் நடத்துகிறோம். அவ்வளவுதான். வேறல்ல. ஆனால் காவிரிப் பிரச்சினையோடு ஸ்ரீலங்காவிலே தினமும் செத்துக் கொண்டிருக்கிற தமிழர்களுடைய

பிரச்சினையை ஒப்பிடுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஏனென்றால் காவிரிப் பிரச்சினை இன்னும் தீராவிட்டாலும்கூட, அந்த ஒப்பந்தம் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட ஒப்பந்தம் அல்ல. சில பேர்கள் தவறாகக்கூடப் பேசுகிறார்கள். 1974லோடு காலாவதியாகிவிட்ட ஒப்பந்தமல்ல காவிரி ஒப்பந்தம். அது புதுப்பிக்கப்பட வேண்டியது. உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்றும், எப்படிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னோமே தவிர,அது காலாவதியாகி விட்ட ஒப்பந்தம் அல்ல. எனவே தண்ணீர் வருகிற நேரத்திலே எல்லாம் நாம் அன்றைக்கிருந்த அரசோ, இன்றைக்கு இருக்கிற அரசோ, அன்றைக்கிருந்த முதலமைச்சரிடத்திலே கேட்ட நேரத்திலே எல்லாம், விவசாயிகளைக் காய விடாமல், கூடுமானவரையில் கர்நாடக அரச தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே காவிரிப் பிரச்சினையையும் ஸ்ரீலங்காவிலே தினம் தினம் செத்துக் கொண்டிருக்கிற தமிழன் அழிவுப் பிரச்சினையையும் ஒன்றோடொன்று நாம் பொருத்தம் பார்ப்பது அவ்வளவு சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து...

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மத்திய அரசோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தீர்கள் என்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்துகின்றேன். அது மட்டுமல்ல, காவிரிப் பிரச்சினையிலே கூட உச்சநீதி மன்றத்திலே வழக்கு போட்டு, மத்திய அரசு வழக்கை வாபஸ் செய்து விடுங்கள் என்று சொன்னபோது, மத்திய அரசு சொன்னதைக்கேட்டுக் கொண்டு அந்த வழக்கை உங்களுடைய அரசு வாபஸ் பெற்றது. திரு. முரசொலி மாறன் அவர்கள் வழக்கைப் போட்டார்கள். ரிவர் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டின் கீழ் விரைவாக முடிக்க வேண்டுமென்று நாம் வழக்கைப் போட்டோம். ''அந்த வழக்கை நீங்கள் வாபஸ் பெறுங்கள்'' என்று மத்திய அரசு கேட்டபோது, தஞ்சை நிலத்திலே உள்ள நிலச்சுவான்தார்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதகமாக இருந்தாலும்கூட, அந்தச் சமயத்திலே மத்திய அரசு சொன்னதைக் கேட்டு, நீங்கள் வாபஸ் செய்து கொண்டீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : உங்களை எல்லாம் கேட்டுக் கொண்டுதான் வாபஸ் பெறப்பட்டது. அதுமாத்திரமல்ல. காவிரிப் பிரச்சினை இவ்வளவு பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டுமென்று துணைத்தலைவர் அவர்கள் தயாராக இருந்தால், நானும் விவாதிக்கத் தயாராக இருக்கின்றேன். காவிரிப் பிரச்சினை மிக நுணுக்கமாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை. ஐம்பது பேரை வைத்துக் கொண்டு விவாதிக்கக்கூடிய பிரச்சினையல்ல அது. அந்தப் பிரச்சினைகளினுடைய நுணுக்கங்கள் சாதாரணமானதாக இல்லை. இவைகளை எல்லாம் பற்றி நாம் ஆழமாக விவாதிக்க வேண்டும். அந்த ஒப்பந்தம் எப்படி ஏற்பட்டது? அந்த ஒப்பந்தத்தில் உள்ள சிக்கல்கள் என்ன? கர்நாடக அரசு என்ன சொல்கிறது? இவைகளைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டும். அன்றைக்கு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உறுதி அளித்தார்கள், ''நீங்கள் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள்; வழக்கு இருக்கும் போது என்னால் மூன்று மாநில அமைச்சர்களையும் வைத்துப் பேச முடியாது; மூன்று மாநில அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேச இயலாது, எனவே வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டால் மூன்று அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேச முடியும்'' என்று சொன்னார்கள், அப்படிப் பேசி, கடைசியாக முடிவும் எடுக்கப்பட்டது, திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தலைமையிலே உட்கார்ந்து பேசி முடிவு எடுக்கப்பட்டு கையெழுத்துப் போடுகிற நேரத்திலே, நாங்கள் எதைச் சொல்லிவிட்டு எந்த முடிவை ஏற்றுக் கொண்டோமோ அது கையெழுத்துக்கு வரும்போது மாற்றப்பட்டிருந்த காரணத்தால், நானும் திரு.சாதிக் பாட்சா அவர்களும், திரு. ப.உ.சண்முகம் அவர்களும், திரு. மாதவன் அவர்களும், டில்லிக்குச் சென்று அதை எதிர்த்து, கையெழுத்துப் போடாமல் திரும்பி வந்து விட்டோம், ஆகவே நீங்களே தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. காவிரிப் பிரச்சினையில் அன்றைக்கு என்ன ஒரு நிலையை தமிழக அரசு எடுத்ததோ அதே நிலையைத்தான் இன்றைக்கும் தமிழக அரசு எடுத்து வருகிறது. அந்த வகையிலே காவிரிப் பிரச்சினையிலே விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதிலே எதிர்க்கட்சியாக

இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், ஒரே கருத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஸ்ரீலங்கா பிரச்சினை அப்படியல்ல என்பதைத் தெரிவிப்பதற்கு முன்பு, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் தம்பி என்று சொல்வதா அல்லது நண்பர் என்று சொல்வதா என்றே தெரியவில்லை. இருந்தாலும்...

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, திராவிட இயக்கக் குடும்பத்திலே இருப்பவர்கள் சகோதரர்கள் என்ற உணர்வை நாங்கள் ஒப்புக் கொண்டபோது என்னைத் தம்பி என்றே அவர்கள் சொல்லலாம். (கைதட்டல்).

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, என்னை அகதி என்று வர்ணித்த, அருமைத் தம்பி...

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்கு முன்னாலே, என்னை ''கிறுக்கன்' என்று வர்ணித்த 'முரசொலி' பத்திரிகையும் இருக்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அப்படி வர்ணிக்கவில்லை. அப்படிச் சொன்னதாக ஏதாவது அந்தப் பத்திரிகையிலிருந்து எடுத்துக் காட்டினால், நான் வருத்தம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றைக்கும் நான் அப்படி எழுதியது கிடையாது. பேசியதும் கிடையாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், அமைச்சரும் அண்ணன், தம்பி உறவு கொண்டாடுவதற்கு நான் தடையாக இருக்கவில்லை. பார்லிமெண்டரி முறையிலே அந்த வார்த்தைகள் அவசியம் இல்லை என்ற மரபு உலகத்திலே உண்டு. இலண்டன் பார்லிமெண்டிலே கூட தொகுதியைச் சொல்லித்தான் உறுப்பினர்களைக் குறிப்பிடுவார்களே யொழிய, பெயரைச் சொல்லமாட்டார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எனவே நிறைவேற்றப்படுகிற சர்வகட்சித் தீர்மானம் எப்படி

அமைகிறதோ அதைப் பொறுத்து எங்களால் முடிவெடுக்கப் படும் என்ற நிலையை கழகத்தினுடைய பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.பழனிவேல் ராஜன் அவர்களும் இங்கே விளக்கியிருக்கிறார்கள்.

இப்படி தாமதாவதைக் குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில், இந்திய இராணுவத்திடம், துப்பாக்கி இருப்பது நவராத்திரியிலே கொலு வைத்து அழகு பார்ப்பதற்காகவா என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, வேடிக்கையாக ஒரு நாட்டுப் பாடல் பாடுவார்கள். ஸ்ரீலங்காவிற்கு தன் கணவனை அனுப்பி வைக்கிறாள் மனைவி ஒருத்தி. அவன் திரும்பி வருகிறான். அவனைப் பார்த்து மனைவி கேட்கிறாள். ''கண்டிக்குப் போன மச்சான் கடல் கடந்து போன மச்சான், எனக்கு என்ன மச்சான் வாங்கி வந்தாய்?'' என்று கேட்கிறாள். அதற்குக் கணவன் பதில் சொல்லுகிறான்; கண்டியிலே ஆறு மாதம்; கப்பலிலே ஆறு மாதம், சீக்கிலே ஆறு மாதம் செலவழித்து போச்சுதடி'' என்கிறான் கணவன். அதைப் போல ஸ்ரீலங்காவிலே இனப் படுகொலைகள் நடந்து மூன்று மாதங்களாகின்றன. மாதங்கள் முடிந்தனவே தவிர, பிரச்சினைகள் முடியவில்லை. கவலை தெரிவிப்பதிலே 10 நாள், கண்டனம் தெரிவிப்பதிலே 10 நாள், திரு. நரசிம்மராவை அனுப்ப 10 நாள், பிறகு திரு. பார்த்த சாரதியை அனுப்ப 10 நாள் என்று தன்னுடைய கவலையை, ஆழ்ந்த வேதனையை அமைச்சர் அவர்கள் அதிலே தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆமாம், இவ்வளவையும் ஒன்று தவறாமல் படிப்பதற்கு உங்களுக்கு எங்கே நேரம் கிடைக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : எல்லாவற்றையும் படிக்காவிட்டாலும், நான் என்ன எழுதுகிறேன் என்பதை நிச்சயமாகப் படித்துப் பார்ப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கலைஞர் மு. கருணாநிதி : அதுமட்டுமல்ல, ஈழத் தமிழகம் அமைய வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அமைச்சராக இருக்கிற மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களின் கருத்துக்கும், மேலவை உறுப்பினராக இருக்கிற டாக்டர் சனார்த்தனம் கருத்துக்கும் வேறு சில அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய கருத்துக்கும் ஒற்றுமை இருக்கிறது. அமைச்சரவையில் இருக்கிற மற்றவர்கள் எப்படிக் கருதுகிறார்களோ அல்லது முதலமைச்சர் அவர்கள் எப்படிக் கருதுகிறாரோ எனக்குத் தெரியாது.

மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களே சொல்லியிருக்கிறார். ''சிங்களவர்களோடு தமிழர்கள் சேர்ந்து வாழ வேண்டும் என்று யார் சொன்னாலும், அவர்கள் ஜெயவர்த்தனேவின் கைக்கூலிகள், ஜெயவர்த்தனேவின் கங்காணிகள். மானமுள்ள தமிழர்களாக, மனிதாபிமானமுள்ள தமிழர்களாக அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக அவர்கள் இல்லை, திராவிட இயக்கத்தைச் சார்ந்த எவனும், தமிழனுக்குப் பிறந்த எவனும் ஸ்ரீலங்காவிலே தமிழனுக்குத் தனி நாடு கூடாது என்று சொல்லமாட்டான்''. தம்பியே இப்படி அறைகூவல் விடும்போது அண்ணன் தனி நாடு கூடாது என்றா சொல்வான். எனவேதான் தம்பியே இந்த அளவுக்கு அறைகூவல் விட்டபிறகு அங்கே தனி நாடு தேவையில்லை என்று கூற முடியுமா? ஆனால் அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களின் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறாரா இல்லையா என்று பார்த்தால், 28.10.1983 அன்று சட்டசபையில் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாக பத்திரிகையில் வந்திருக்கிறது. அவர் சொல்லியிருக்கிறார், ''சோமசுந்தரமோ காளிமுத்துவோ என்னை மீறிப் பேசமாட்டார்கள். எந்தக் கருத்தைச் சொல்வதானாலும் அவர்கள் பேசுவதற்கு முன்னால் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் பேசுவார்கள். எங்களுக்குள் கருத்து ஒற்றுமை இல்லை என்றால், அமைச்சரவையைக் கலைத்துவிட்டு வெளியேறுவோம்'' என்று பேசியிருப்பது அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களின் வாசகங்களுக்கு தந்திருக்கின்ற ஒப்பந்த முத்திரையாக அல்லது அனுமதி

முத்திரையாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். எனவே ஈழத் தமிழகம் அமைய வேண்டும் என்ற ஒருமித்தக் கருத்துக்களை பிரதமரிடம் எடுத்துச் சொல்லப்படும் அளவுக்கு ஒரு கையெழுத்து இயக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இரண்டொரு பிரச்சினைகளைப் பற்றி மட்டும் சொல்லிமுடித்துவிட விரும்புகிறேன்.

இது நாவலர் அவர்களுக்கு நன்கு தெரியும். இரண்டாண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சொல்லப்பட்டது. இது இந்திய வரலாறு. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்திய வரலாறு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சட்டமன்றப் பேரவையில் காட்டினேன். முதலமைச்சர் கூட கல்வியமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு இதுபற்றி விசாரிக்கச் சொல்லியும், பிறகு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. நாம் சொல்கிறோம் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று. ஆனால் இங்கே நாமே மாநிலத்தைப் புறக்கணிக்கிறோம். தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆறாவது வகுப்புக்கான வரலாறு. இதில் எதோடு வரலாறு நின்றுவிடுகிறது என்றால் ஜவஹர்லால் நேரு இந்தியாவின் பிரதமர் ஆகிறார். இராஜாஜி கவர்னர்–ஜெனரலாகிறார். பிறகு திரு. சஞ்சீவ ரெட்டி குடியரசுத் தலைவராகிறார். அதற்குப் பிறகு திரு. லால் பகதூர் சாஸ்திரி, திருமதி இந்திராகாந்தி, திரு. மொரார்ஜி தேசாய், திரு. சரண்சிங் ஆகியவர்கள் பிரதமர்களாகப் பணியாற்றி னார்கள் என்று முடிகிறது.

ஒரு காலகட்டத்தில், அதாவது 1977ஆம் ஆண்டு – சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவைத் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சி பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப் பட்டு புதிய கட்சியான ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது என்ற குறிப்பை இந்த வரலாற்றில் மறைப்பதற்கு என்ன காரணம்.

அதுமறைக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இருபதாண்டுக் காலம்

ஆட்சி புரிந்த காங்கிரஸ் ஆட்சியை மாற்றிவிட்டு அண்ணா முதலமைச்சராக வந்தார். அது ஏன் குறிப்பிடவில்லை? அது கிடையாது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அது ஏன் குறிப்பிடப்படவில்லை? பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அதுவும் இல்லை. அது ஏன் குறிப்பிடப்படவில்லை? பிறகு அடியேன் இருந்தேன். அதைக் குறிப்பிடவேண்டாம். என் பெயரே இருக்கக்கூடாது என்று எண்ணுகின்ற இந்த அமைச்சரவையில் என் பெயர் எடுக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் அதே புத்தகத்தில் நம்முடைய முதலமைச்சர் படம் மாத்திரம் பெரிய அளவில் போடப்பட்டு, அடுத்து திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் படம் போடப்பட்டு, பிறகு திரு. சஞ்சீவ ரெட்டி அவர்களின் படம் போடப்பட்டு அதற்குக் கீழே, இந்தியப் பிரதமர், தமிழ்நாட்டு முதலமைச்சர் ஆகியோர் படங்களைச் சேகரித்து ஒட்டிக்கொள்ளவும் என்று மாணவர்களுக்குக் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். நான் அப்போதே சொன்னேன். அடுத்த பதிப்பிலேயாவது மாற்றுங்கள் என்று சொன்னேன். அதை பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. படத்தை மாற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. அதுவும் இருக்கட்டும். திரு. காமராஜர், திரு. பக்தவத்சலம் ஆகியவர்கள் இருந்த காங்கிரஸ் ஆட்சி 1967-ல் மாற்றப்பட்டு புதிய ஆட்சி அண்ணா அவர்களின் தலைமையில் வந்தது என்ற சரித்திரக் குறிப்பு இடம்பெற வேண்டும். அதைப் போலவே தொடர்ந்து பல ஆண்டுக் காலம் இருந்து வந்த காங்கிரஸ் ஆட்சி மத்தியிலே மாற்றப்பட்டு, ஜனதா ஆட்சி வந்தது என்ற சரித்திரக் குறிப்பு இருக்கவேண்டும். சரித்திரத்திலே உண்மை மறைக்கப்படக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தேன். இப்போது மறுபதிப்பு வந்திருக்கிறது. அதிலே இந்த மாற்றம் இல்லை. திரு. சஞ்சீவ ரெட்டி அவர்களின் படத்திற்குப் பதிலாக திரு. ஜெயில் சிங்கின் படம் மாத்திரம் போட்டு இந்திய வரலாறு என்று வந்திருக்கிறது. ஆறாம் வகுப்புப் புத்தகமாக வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் படத்தை மாத்திரம் போட்டுவிட்டு, அண்ணா அவர்களுடைய படமோ பெயரோகூட சரித்திரக் குறிப்பிலே இடம் பெறாமல்

இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைத் தலைவர் அவர்களே, இறுதியாக இரண்டு நிமிடங்கள் தருவீர்கள் என்று கருதுகிறேன். என்னுடைய கையில் இருப்பது அகரமுதலி. இப்பணி ஆரம்பித்து வருவதற்கு நீங்கள்தான் காரணம். அகரமுதலி தயாரிக்கிற முயற்சியை தமிழக அரசு மேற்கொள்ளவேண்டும் என்று இந்த அவையில் நீங்கள் - வேண்டுகோள் விட்டீர்கள் என்று சொல்லமாட்டேன் - தங்களுடைய அனுபவத்தையும் வயதையும் ஒட்டி ஆணையிட்டீர்கள். அன்றைக்கு அந்த ஆணையை நான் ஏற்றுக்கொண்டு செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலியை தேவநேய பாவாணர் அவர்களைக் கொண்டு தொடங்கப்படும் என்று இந்த அவையிலேயே இதே இடத்திலேயே நின்று அறிவித்தேன். அந்த நூல் பத்தாண்டுகளுக்குப் பிறகு இப்போது வெளிவந்திருக்கிறது. அதில் பதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. அதில் "தமிழக அரசின் தனி மகவாய்ப் பிறந்து கல்வித் துறை பாலூட்ட, தமிழ்ப் பல்கலைக்கழகம் சீராட்ட, சான்றோர் அரவணைக்க தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் மடியில் தவழ்ந்து தளர்நடை பயிலும் இத்துறைப் பணிகள் வளர்ந்து பெருக வள்ளன்மை சுரந்து வண்டமிழ்க்கு வாழ்வளிக்கும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வெளியிடுகிற நேரத்தில் யார் இருந்தார்களோ அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு பதிப்புரை எழுதுவதில் தவறில்லை. அதை நான் மறுக்கவில்லை. அந்தப் பதிப்புரையின் முற்பகுதியில் எப்போது தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும்போது, "கடந்த ஈராயிரம் யாண்டு இலக்கிய வரலாற்றில் எவரும் தொடவியலாத சொற்பிறப்பு ஆராய்ச்சியில் வாகை சூடியவர் பாவாணர். அரை நூற்றாண்டுக் காலம் அயராது சொல்லாராய்ச்சி செய்து, சொற்பிறப்புக் காண்பதில் ஒப்புயர்வற்ற செந்தமிழ் ஞாயிறாய்ச் சுடரொளி வீசி தன்னிகரற்றுத் தண்டமிழ்ப் புலமைவாய்ந்த பெருமகனாரின் தனித்தன்மை வாய்ந்த கண்டுபிடிப்புகளுக்கு நூல்வடிவம்

தரவும், அவருடைய ஆய்வுகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் மக்களின் வேணவாவை ஏற்கவும் தமிழக அரசு முன் வந்தது. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் தனித்தன்மையும் தமிழர் பண்பாடு துலக்கம் பெறவும், அவர் கொள்கையைப் பின்பற்றி உருவாகும் சொற்பிறப்பு அகரமுதலியில் பிற கொள்கைகளின் தலையீட்டைத் தவிர்க்கவும் பாவாணர்க்குத் தனித்த துறை ஏற்படுத்தித் தர அரசு விரும்பியது. அதன்படி 1974ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழக அரசின் கல்வித் துறையின் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாவலர் அவர்களே அதிலே என் பெயரும் இல்லை, உங்கள் பெயரும் இல்லை என்பதைக் குறிப்பிட்டு இவ்வளவு குறுகிய நோக்கம் கொண்ட அரசாக இந்த அரசாங்கம் இருக்கும்போது, எங்களுடைய ஒத்துழைப்பை மாத்திரம் எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்பதை மாத்திரம் கேட்டு அமைகிறேன்.

உரை : 22 நாள் : 3.4.1986

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ளதையொட்டி கடந்த சில நாட்களாக நடைபெறுகிற விவாதங்கள் மூலமாக விமர்ச்சிக்கப்படுவதை தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இந்த அறிக்கையின்மீது கூற விரும்புகிறேன்.

முதலில் மாண்புமிகு நிசியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் ''இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம் புதிய வரிகள் ஆயத் தீர்வை ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம், இரும்பு, நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல், பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத் தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன'' என்கிற உண்மை இந்த அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, வேறு மாநில முதலமைச்சர்கள் எல்லாம் இப்படிப்பட்ட விலை உயர்வு அறிவிக்கப்பட்ட நேரத்தில், தங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்திருந் தாலும் கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சார்பாக அப்படிப்பட்ட கண்டனங்கள் தெரிவிக்கப்படாவிட்டாலும்கூட, இது ஏழை எளிய நடுத்தரவர்க்கங்களைப் பாதிக்கக்கூடிய ஒன்று என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்

உணர்ந்து இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

மற்றொன்று, ''இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலுவான இந்தியாவும், மக்களை வாழவைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமைய வேண்டும்.'' என்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சி அமைய வேண்டும். அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும், கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பல்வேறு அரசியல் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது என்ற கருத்தையும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இது, தொடர்ந்து 2,3 ஆண்டுக்காலமாக ஆளும் கட்சியில், குறிப்பாக இந்த அரசில் ஏற்பட்டுள்ள ஒரு முன்னேற்றம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் மாநில, சுயாட்சி என்ற அந்தச் சொற்றொடரேகூட அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்ற கருத்து ஆளும் கட்சி உறுப்பினர்களால் 1974ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சொல்லப்பட்டு, 1974ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது நிறைவேற்றப்பட்ட அந்தக் காலக்கட்டத்திலேகூட ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்த அந்தக் கொள்கையை இன்றைக்கு நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையின் வாயிலாக ஏற்று அண்ணா அவர்களின் அந்தக் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என்ற அளவில் நான் அதனையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கை தமிழ் பதிப்பில் 28ஆம் பக்கத்தில் நிதியமைச்சர் அவர்கள் மொத்த நிதிநிலைமை பற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டுகளில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் வருவாய்க் கணக்கில் வருவாயையும், வருவாய்க் கணக்கில் செலவையும் குறிப்பிட்டுவிட்டு,

நடப்பாண்டு வருவாய்க் கணக்கின் வருவாயையும், வருவாய்க் கணக்கின் செலவையும் குறிப்பிடுவது வழக்கம். இந்த பல்லாண்டுக்கால நிதிநிலை அறிக்கை உரை முறையை இந்த ஆண்டு மாற்றி, மொத்த நிதிநிலை பற்றி வருவாய்க் கணக்கின் வரவும் செலவும் அமைச்சர் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை. ஆனால் 'பட்ஜெட்' மெமோரென்டம் நிதிநிலைக் குறிப்பு என்ற தனிப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு வேளை உறுப்பினர்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையை மாத்திரம் படித்துவிட்டு, பெரிய புத்தகத்தைப் படிக்காமல் இருந்துவிடுகிறார்கள் என்பதற்காக வருவாய்க் கணக்கு எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள உறுப்பினர்களுக்கு வேலை தருகிற வகையில் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். அப்படியிருந்தாலும், அப்படி குறிப்பிடப்பட்டுள்ள அந்த விவாதத்திலேகூட சில குழப்பங்கள் உருவாகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இந்த நிதிநிலைக் குறிப்பில், தமிழில் தரப்பட்டுள்ள குறிப்பில் ''1985–86 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம், சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டபோது, வருவாய்க் கணக்கின் வருவாய் ரூபாய் 2,368.46 கோடியாகவும், செலவு ரூபாய் 2,314.86 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் 53.60 கோடி உபரியாகவும் இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. வருவாய்க் கணக்கு வரவில் 209.68 கோடியும், வருவாய்க் கணக்குச் செலவில் 42.03 கோடியும், இருக்கும் என்று கடைசியாகத் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் காட்டுகின்றன'' இதை மாத்திரம் படித்தால், உறுப்பினர்கள் பெரும் குழப்பத்திற்கு ஆளாவார்கள். ஏனென்றால் 1985–86ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 2,368 கோடி என்று சொல்லிவிட்டு திருத்திய மதிப்பீட்டில் 209 கோடி என்றும் அச்சிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலே வழங்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையிலே இந்தத் தவறு இல்லை. ஆங்கில புத்தகத்தில்,

Latest estimates, however, indicate an increase of Rs. 209.68 crores under Revenue Receipts as well as an increase of Rs. 42.03

crores under Revenue Expenditure என்று increase என்ற ஆங்கிலச் சொல் தமிழ்ப் பதிப்பில் விடப்பட்ட காரணத்தால் ரூ. 2,368 கோடியிலே இருந்த வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 209 கோடியாக திருத்திய மதிப்பீட்டில் குறைந்துவிட்டது போன்ற தோற்றத்தை மாத்திரமல்ல, குழப்பத்தை உருவாக்கும். ஆங்கிலப் பதிப்பைப் படித்தால்தான், தமிழிலே உள்ள குழப்பத்தைப் போக்க முடியும் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரிஜினலாக தமிழிலே எழுதி பிறகு ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க வில்லை, ஆங்கிலத்திலே எழுதி தமிழில் மொழிபெயர்ப்பது என்பது நீண்டகாலமாக நடந்து வருகிறது. தங்கள் காலத்திலேயிருந்து அப்படி நடந்து வருகிறது. அதை மாற்றினால் நல்லது, அவர்கள் காலத்திலேயே நான் மேலவையிலேயே இதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆங்கிலத்திலேயிருந்து தமிழிலே மொழிபெயர்ப்பாகி யிருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாங்களே 'ஒரிஜினல்' என்ற வார்த்தையைத்தான் பயன்படுத்தி னீர்கள். எனவே அந்த அளவுக்கு ஆங்கிலம் நம்மோடு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் தவறாக உபயோகிக்கின்றார்கள். ஒரிஜினலாக தமிழிலேயே எழுதி இருந்தால், இந்தத் தவறு வந்திருக்காது என்றுதான் நான் சொல்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: வருவாய்க் கணக்கில் 1985–86இல் திட்ட மதிப்பீடு, பட்ஜெட் எஸ்ட்டிமேட் ரூ. 2,368.46 கோடி வரவு, திருத்திய மதிப்பீடு, பட்ஜெட் எஸ்ட்டிமேட் ரூ. 2,578.44 கோடி வரவு என்று இருக்கிறது. அதாவது வரவில் ரூ. 209 கோடி அதிகமாகக் காட்டப் பட்டிருக்கின்றது. 1985–86 செலவுக் கணக்கில் 2,314.86 கோடி என்று காட்டப்பட்டிருக்கின்றது. திருத்திய மதிப்பீடு ரூ. 2,356,89 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. எனவே,

திட்டமிட்டதிலேயே செலவுக்கணக்கில் திருத்திய மதிப்பீடு 42 கோடி ரூபாய்தான் அதிகமாகி இருக்கின்றது. இந்த ஒப்புவமையை நாம் உற்று நோக்கவேண்டும். அதாவது வருவாய்க் கணக்கிலே ரூ. 209 கோடி அதிகமாகி இருக்கின்றது. செலவுக் கணக்கில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 49 கோடிதான் அதிகமாகி இருக்கிறது. இது நாம் செலவழிப்பதற்காக ஒதுக்கிய, திட்டங்களுக்காக ஒதுக்கிய பணம். சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்பதைத்தான் சூசமாகத் தெரிவிக்கிறது. இந்த ரூ. 42 கோடி திருத்திய மதிப்பீட்டில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை நோக்கும்போது, அதிலே கூட நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்ட ரூ. 60 கோடி வெள்ள நிவாரண செலவையும் கழித்துவிட்டால், அரசு செலவழிக்க திட்டமிட்டதிலேயே ரூ. 18 கோடியைச் செலவழிக்கவில்லை என்ற உண்மையும் புலனாகிறது. செலவு கணக்கில் திருத்திய மதிப்பீடு ரூ. 2,356.89 கோடி என்று இருந்தது. அரசு சரியாகச் செலவழிக்காத காரணத்தினால், அதிலே ரூ. 60 கோடி வெள்ள நிவாரண நிதி என்று ஒதுக்கப் பட்ட காரணத்தால் நீங்கள் திட்டமிட்டதிலேயே 18 கோடி ரூபாய் செலவழிக்காமல் 2,296.89 கோடிதான் செலவாகி யிருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

எப்போதுமே திட்ட மதிப்பீட்டைவிட திருத்த மதிப்பீடு, ரிவைஸ்ட் எஸ்ட்டிமேட் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் இந்த அரசு 209 கோடியை வரவுக் கணக்கிலே அதிகமாகக் காட்டிவிட்டு செலவுக் கணக்கிலே ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்காமல் திட்டப்பணிகளை நிறைவேற்றாத அரசாக இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. மேலும் இதற்கு எடுத்துக்காட்டு வேண்டும் என்றால், 1985–86 பட்ஜெட் எஸ்ட்டிமேட்டில் திட்ட மதிப்பீடு வருவாய்க் கணக்கில் ரூ. 53.60 கோடி உபரி, சர்ப்பிளஸ், என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 1985–86 திருத்திய மதிப்பீட்டில் உபரி ரூ. 221.25 கோடியாக உயர்ந்திருக்கின்றது. இந்த உபரி உயர்ந்திருப்பதற்குக் காரணம், நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், திட்டப் பணிகள் செம்மையாக நடைபெற வில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும்.

திட்டங்களுக்காக வகுத்து ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தர வேண்டுமென்றால்; ஐ.ஆர்.டி.பி. ஒருங்கிணைத்த ஊரக வளர்ச்சித் திட்டம், இன்டக்ரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம். இதற்கு 1985–86 திட்ட மதிப்பீடு 29.5 கோடி ரூபாய். ரிவைஸ்ட் எஸ்ட்டிமேட், திருத்திய மதிப்பீடு 17.55 கோடி ரூபாயாக இருக்கின்றது. ஆக கடந்த ஆண்டு இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் குறைவாகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 11.61 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டு மேலும் 3 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ஊரக வேலைவாய்ப்பு தேசீயத் திட்டம் N.R.E.P. (National Rural Employment programme) 1985–86இல் திட்ட மதிப்பீடு Budget Estimate 53.48 கோடி ரூபாய். ஆனால் செலவழிக்கப்பட்ட பிறகு திருத்திய மதிப்பீடு 40.81 கோடி ரூபாய். சுமார் 13 கோடி ரூபாய் இதிலே குறைத்து செலவழிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த R.L.E.C.P. இதில் அரசினுடைய குறிப்புகளிலும், நிதிநிலைக் குறிப்பிலும், பட்ஜெட் – இதில் அரசினுடைய குறிப்புகளிலும், பட்ஜெட் மெமோராண்டத்திலும் சொல்லப்பட்ட விளக்கம். Prime Minister's Employment Guarantee Scheme for Rural Landless Labourers - பிரதமரின் கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் 1985–86இல் பட்ஜெட் எஸ்ட்டிமேட் 65 கோடி ரூபாய். ஆனால் திருத்திய மதிப்பீடு 34.43 கோடி ரூபாய். எனவே கடந்த ஆண்டு 31 கோடி ரூபாய் குறைவாகச் செலவழித்தவர்கள், இந்த ஆண்டு அதே 34 கோடி செலவழிக்கப்போவதாக, 1986–87இல் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மாநில அளவிலே இந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப் போகிற திட்டத்தில் இந்த அளவுக்கு பெருந் தொகை குறைக்கப்பட்டு, செலவழிக்கப்படாமல் இருப்பது அந்தத் திட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

1986–87 மாநில ஆண்டுத் திட்டம் ஆன்யுவல் பிளான் இதைப்பற்றி பக்கம் 27இல் பட்ஜெட் மெமோரண்டத்தில், நிதிநிலை குறிப்பில் என்ன கூறப்பட்டிருக்கின்றதென்றால், 1985–86 வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதை விட இப்போது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1985–86 மாநிலத் திட்டம் பட்ஜெட் எஸ்ட்டிமேட்டில் 1.102.05 கோடி ரூபாய் என திட்டமிட்டு ஒதுக்கிவிட்டு, திருத்திய மதிப்பீட்டில், ரிவைஸ்டு எஸ்ட்டிமேட்டில் 1,068.89 கோடி ரூபாய் என்று குறைத்திருப்பதைக் காணும்போது, சுமார் 34 அல்லது 35 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்குச் செலவழிக்கப்படவில்லை என்று தெளிவாகிறது. செம்மையாக, விரிவாகத் திட்டமிட்டுப் பணிகள் நடைபெற வில்லை என்பதற்கு இது மற்றொரு உதாரணமாகும். நடப்பு ஆண்டுக்கு, 1,199 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளார்கள் என்றாலும், கடந்த ஆண்டு அனுபவத்தைப் பார்க்கும்போது, இதையாவது முழுமையாகச் செலவழிப்பார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மாநில ஆண்டுத் திட்டத்தில், ஆன்யுவல் பிளானில், முக்கியமான தனித் தலைப்புகளைப் பார்க்கும்போது, எனக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. பட்ஜெட் மெமோராண்டம் பக்கம் 27இல் ரிசர்ச் - எடுகேஷன் ஆராய்ச்சியும், கல்வியும் என்ற தலைப்பில் 1985–86 திட்ட மதிப்பீடு 4.90 கோடி ரூபாய். திருத்த மதிப்பீடு 1985–86இல் 3.57 கோடி ரூபாய். அதாவது 1.33 கோடி ரூபாய் குறைவாகச் செலவிடப்பட்டிருக்கிறது. Special Area Programme for Rural Development இது முக்கியமானது. ஊரக வளர்ச்சி சிறப்பு வசதித் திட்டம்; இதற்கு 1985–86 ஆன்யுவல் பிளானில் 41.75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் திருத்திய மதிப்பீட்டில் 30.08 கோடி ரூபாய்தான் குறிப்பிடப்பட்டிருக் கிறது. அதாவது 11.67 கோடி ரூபாய் குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பார்த்தால் ஊரக வளர்ச்சி என்ற சிறப்புத் திட்டத்தில் 30 கோடிக்கும் குறைக்கப்பட்டு ரூ. 25.86 கோடி என்றுதான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. இது ஆன்யுவல் பிளான், மாநில ஆண்டுத் திட்டத்தை தீவிரமாக நடத்துவதற்கு பயன்படாது என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பார்த்தால் சமுதாய நல வளர்ச்சி – இது முக்கியமான தலைப்பு. இதில் 1985–86 திட்ட மதிப்பீடு பட்ஜெட் எஸ்ட்டிமேட் 28.07 கோடி ரூபாய். ஆனால் 25 கோடி ரூபாய்தான் அதற்கு திருத்த மதிப்பீட்டிலே குறிப்பிடப்பட்டு, இரண்டையும் பார்க்கும்போது, குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. 3 கோடிக்கு குறைவாகச் செலவிட்டு, இந்த ஆண்டு மீண்டும் 3 கோடி குறைத்து, 22.53 கோடி ரூபாய் என்ற அளவுக்குத்தான் சமுதாய நலத் திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, பாசன மேம்பாடு மிக முக்கியமான ஒன்று என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதிலே 1985–86 திட்ட மதிப்பீடு 63.62 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப்பீடு 52.97 கோடி ரூபாய். சுமார் 11 கோடி ரூபாய் குறைத்து செலவிடப்பட்டிருக்கிறது. மின் விசை மேம்பாட்டுக்காக 1985–86இல் போட்ட திட்ட மதிப்பீடு ரூபாய் 325.95 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப்பீடு வெறும் 300 கோடி ரூபாய். இதிலே 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. குடிநீர் வழங்கலும், கழிவு நீர் அகற்றலும் என்பது மிக மிக அத்தியாவசியமான பிரச்சினை. இதில் 1985-86-க்கான திட்ட மதிப்பீடு 153 கோடி ரூபாய். ஆனால் திருத்திய மதிப்பீட்டில் செலவிடபட்டதோ வெறும் 123.18 கோடி ரூபாய். ஆக, 30 கோடி ரூபாய் செலவிடப்படவில்லை. சமூக நலத்திற்காக 1985–86இல் பட்ஜெட் எஸ்ட்டிமேட்படி ஒதுக்கப்பட்டது 43.85 கோடி ரூபாய். ஆனால் செலவழிக்கப்பட்டதோ 40.62 கோடி ரூபாய். எனவே 3 கோடி ரூபாய் குறைத்து செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு அந்த 40 கோடி ரூபாயும் 39 கோடி ரூபாய் என்று ஆகி, 1 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் 16வது பக்கத்தில் 21வது பாராவில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். ‘‘மது விலக்கை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம், 1986–87ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986–87ஆம் ஆண்டிற்குரிய வரவு–செலவுத் திட்டம்

வகுக்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதை நானும் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தந்திருக்கிற பெரிய புத்தகத்தில் நிதிநிலைக்கான குறிப்பையும் படித்துப் பார்த்தேன். அதில் 4வது பக்கத்தில் மாநில ஆயத்தீர்வை என்கின்ற குறிப்பு வரும்போது, 1985–86இல் திருத்த மதிப்பீட்டின்படி 230.82 கோடி ரூபாய் வருவாய் மாநில ஆயத்தீர்வை மூலம் அரசு பெறுகிறது. என்றும், 1986–87இல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 200.43 கோடி ரூபாய்தான் வரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், 30 கோடி ரூபாய் குறைவாகக் காட்டப் பட்டுள்ளது. அதற்குக் காரணம் என்ன என்று கூறும்போது, 1987 ஜனவரியிலிருந்து மீண்டும் மது விலக்குக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வர உத்தேசித்துள்ளதால், மாநில ஆய்வுத் தீர்வையின் மூலம் 30 கோடி ரூபாய் வருவாய் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் பட்ஜெட் மெம்மோரண்டத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், ஜனவரி 1987இல் இருந்து மதுவிலக்கைக் கொண்டு வருவதால் 30 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ள புள்ளிவிவரம் சரியா அல்லது 1986–87 நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்கு நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் அரசுக்கு 60 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்களே, நிதி அமைச்சர் அவர்கள், இதில் எது சரி என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, இந்த அவையிலே ஓர் அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் அளித்தார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எம்.பி.எஸ். அவர்கள் அப்போது குறுக்கிட்டு சில விளக்கங்களைக் கேட்டார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து பாதிக்கப்பட்டு வருகிறார்களே தமிழ் அகதிகள், அவர்களுக்காக இதுவரை 555.47 லட்சம் ரூபாய் செலவிட அரசால் அனுமதிக்கப்பட்டது என்று அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் தெரிவித்தார்கள். அப்போது திரு. எம்.பி.எஸ். அவர்கள் குறுக்கிட்டு, 1983இல் இருந்து இதுவரை செலவிடப்பட்ட தொகை குறித்து ஒரு துணை வினா கேட்டார்கள். மத்திய அரசு ஒதுக்கியுள்ள

தொகை மற்றும் மாநில அரசு ஒதுக்கியுள்ள தொகை இரண்டுக்கும் விளக்கம் தேவை என்று சொன்னார்கள். மத்திய அரசு இதற்கான தொகையைத் தருவதில் காலதாமதம் ஏற்படுவதனால், மாநில அரசு இதற்கான செலவுகளை முதலில் செய்து கொண்டிருக்கிறது என்று அப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் கேட்ட போதும், இந்த ஸ்ரீலங்காவாழ் தமிழர்கள் பிரச்சினையில் மைய அரசு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் என்று கேட்டதற்கு, 5 கோடியே 55 லட்சம் ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில் ஐந்தாம் பக்கத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ''தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ள, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி வந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, இவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில் இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வுப் பணிகளுக் காகவும், இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது'' என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கும் நிதிநிலை அறிக்கையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், தமிழக அரசே இந்தத் தொகையை ஒதுக்கி யிருப்பதாகத் தோற்றம் அளிக்கும். ஆனால் ஒரு கேள்விக்குப் பதில் சொன்ன மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் தெரிவித்தபோது, இது முழுவதும் மத்திய அரசு அளித்துள்ளது. 5 கோடியே 55 லட்ச ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசு முழுவதையும் அளிக்கிறது

என்று சொன்னது சரியா, அல்லது மாநில அரசு அளிக்கிறது என்று சொல்வது சரியா, அல்லது இதுவரையில் மத்திய அரசு 5.55 கோடி ரூபாய் அளித்துள்ளது என்று அமைச்சர் சொன்னார்களே, அது சரியா, அல்லது 45 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்காக செலவிடப்பட்டது என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சரியா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1975–76 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, மூலதனக் கணக்கு உட்பட அரசினுடைய வருமானம் ரூ.563 கோடியாக இருந்தது. இப்போது வைத்துள்ள அறிக்கையின்படி மூலதனம், வருவாய்க் கணக்கு இரண்டும் இணைந்த வருமானம் 3,275 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது. அதாவது ஆறு மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் இதுவரையில் நான் படித்துக் காட்டிய விபரக் குறிப்புக்களைப் பார்த்தால், இந்த அவையில் தரப்படும் விவரங்களைப் பார்த்தாலும், அல்லது நாட்டிலே பல்வேறு பகுதிகளிலும் நேரிலே சென்று கண்டாலும் சரி, இந்த வருவாய் 6 மடங்காக உயர்ந்திருப்பதற்கு ஈடாக, வளர்ச்சித் திட்டங்கள் 6 மடங்காக ஏற்பட்டிருக்கின்றனவா இந்த மாநிலத்தில் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கு ஒரு பதில், 'இல்லை' என்பதுதானே தவிர, வேறல்ல. 500 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று இருந்த நேரத்தில், எனக்குக்கூட நன்றாக நினைவு இருக்கிறது. 1957 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவையில் இருந்தபோது, எங்கள் பக்கத்தில் திரு. எம்.பி.எஸ். அவர்கள் அமர்ந்திருந்த அந்த நேரத்தில், அப்போது நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை அவையில் அளித்தபோது குறிப்பிட்டார்கள், ''என்னுடைய வாழ்க்கையில் நிதியமைச்சர் பொறுப்பில் இருந்து, 100 கோடி ரூபாய்க்கான வரவு-செலவுத் திட்டத்தை இன்றைக்கு இந்த அவை முன்பு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி நூறு கோடி ரூபாயிலிருந்து

வளர்ந்து 500 கோடி ரூபாய் என்று பெருகி இன்றைக்கு 3,275 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆறேழு மடங்கு அதிகமாகியிருக்கிற இந்தக் கட்டத்தில், வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றனவா என்றால், அப்படி அமையவில்லை என்பதுதான் என்னுடைய குறை என்பதை இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

1986ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் தேதி, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில், 23ஆம் பக்கத்தில் ''வீடில்லாதவர் களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் மிகப் பெரிய திட்டத்தை அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடை கிறேன். ஆதி திராவிடர் மக்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர்கள் ஆகிய மக்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளும், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏனைய குடும்பங்களுக்கு 5 லட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படும். இந் நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதிய அளிக்க வேண்டுமென்று பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் மக்களுக்குக் குடியிருப்புக்கள் கட்டி முடிக்க வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்.'' பிப்ரவரி 23ஆம் நாள் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்பு பிப்ரவரி 20, 21, 22 ஆகிய நாட்களில் ஆளுங்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், உள்ளாட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விளம்பரங்களில் எல்லா வீடுகளிலும் வெளியிடப் பட்டபோது, அதில் ''தாழ்த்தப்பட்டோர், நரிக்குறவர், நலிந்த பிரிவினர், வாழ்வில் உயர்ந்திட வழி பிறக்கிறது. 30 இலட்சம் வீடுகள், மூன்றே ஆண்டுகளில்'' என்று கொட்டை எழுத்துக் களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆளுநர் உரையில் ''முப்பது இலட்சம் மக்களுக்கு வீடுகள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளும் கட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரங்களில் ''முப்பது இலட்சம், வீடுகள் மூன்று ஆண்டுகளில்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில், ''ஆதி திராவிடர்,

பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது.'' நாவலர் இந்த இடத்திலே பெருமூச்சு விட்டுக்கொள்கிறார், ஏனென்றால் அவர் எண்ணிப்பார்க்கிறார். இப்படி ஒரு திட்டம் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது என்று கூறும் போது பெருமூச்சு விட்டுக்கொண்டு அப்படி நிறைவேற்றப் படும் என்று மாண்புமிகு நாவலர் கோடிட்டுக் காட்டுகிறார் என்றால், குடிசைவாழ் மக்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்கும் என்கிறார். மாண்புமிகு நாவலர் மொழியிலே கூறுவது என்றால், 'குடிசைவாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்துகொடுப்பது ஏழ்மைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவதும், வீடு கட்ட உதவுவது, தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித்தர ஊக்குவிப்பது போன்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்'' என்று நாவலர் அவர்கள் மெதுவாக அந்த இடத்தை விட்டு தந்திரமாக நழுவுகிறார். கட்டித் தரப்படும் என்ற அந்தச் சொல்லை மாற்றிவிட்டு வசதி செய்து கொடுக்கப்படும், வசதிகள் மேம்படுத்தப்படும், கடன் உதவி அளிக்கப்படும், வீடுகள் கட்ட உதவப்படும், தொழில் நிறுவனங்கள் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, பின்னால் 26 கோடிரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஓர் அரசு இப்படி 30 இலட்சம் வீடுகள் அல்லது 30 இலட்சம் மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை படிப்படியாகத்தான் நிறைவேற்றும் என்பது நாவலருக்குத் தெரியும். என்ன செய்வது, நாவலருக்கேகூட பிடிக்காத சில திட்டங்கள் தீவிரமாக அறிவிக்கப்பட்டுவிடு கின்றன. திட்டங்கள் பிடிக்காது என்றல்ல, அவசர அறிவிப்புகள் அவருக்குப் பிடிக்காது என்பது அவரோடு நான் பல ஆண்டுக்காலம் பழகியவன் என்ற முறையில் நன்கு

புரிந்துக்கொண்டிருப்பவன். அந்தக் காரணத்தினால்தான், ''நான் என்ன செய்வது? ஆளுநர் உரையில் குறிப்பிட்டு விட்டார்கள்'' என்று பெருமூச்சு விட்டுவிட்டு இப்படியெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கட்டித்தரப்படும் என்றும் திட்டவட்டமாக அறிவிக்காமல், அடுத்தமுறை யாராவது இதைப்பற்றிக் குறிப்பிட்டால், ''நான் கட்டித் தரப்படும் என்றா சொன்னேன், வசதி செய்து கொடுக்கப்படும், வசதிகள் மேம்படுத்தப்படும் என்று அல்லவா சொன்னேன்'' என்று தப்பித்துக்கொள்ள அவருக்குத் தெரியும் என்கிற காரணத்தில்தான் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

ஒரு வீடுகட்ட பத்தாயிரம் ரூபாய் ஆகும் என்று வைத்துக்கொண்டால் கூட, ஏற்கெனவே ஆதி திராவிடர் மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் வீடுகள் கட்டும்போது 5,000 ரூபாய், 6,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று அந்த அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு, அதன் மதிப்பு இருந்தது. இப்போது ஒரு வீடு கட்டுவதற்கு பத்தாயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டால்கூட, 30 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு 3,000 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளுக்குத் தேவைப்படும். ஆனால் இப்போது இந் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கும் பணம் 26 கோடி ரூபாய்தான். இது போதுமா என்கிற விளக்கம் எனக்குத் தேவை. இந்த வீடுகள் யாருக்கும் கட்டித் தரப்படும் என்ற குறிப்பில், ''வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு 30 இலட்சம் வீடுகள்'' என்று சொல்லப்படுகிறது. அப்படி முப்பது இலட்சம் வீடுகள் என்றாலோ அல்லது 30 இலட்சம் பேருக்கு வீடுகள் என்றாலோ, அந்தக் கணக்கில் உள்ள சில விவரங்களை நான் புரிந்துகொள்ள விரும்புகிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்பற்றி சில வேறுபட்ட கருத்துக்கள் நாட்டிலே உலவிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழக அரசின் சார்பில் இந்த அவையிலே வைக்கப்பட்ட போது, 1981–82 ஆம் ஆண்டு தொழிலாளர் நலன் பற்றிய கொள்கைக் குறிப்பு வைக்கப்பட்டபோது, அதில் குறிப்பிடப் பட்டிருந்ததாவது,

"State Planning Commission has estimated roughly 62 percent of the rural population and 53 per cent of the urban population in the State are living below the poverty line."

62 சதவீதம் கிராம மக்களும், 53 சதவீதம் நகர்ப்புற மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று 1981-82ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட புள்ளிவிவரம் குறிப்பிடுகிறது. இந்த அரசினுடைய மாநிலத் திட்டக் கமிஷனால் தயாரிக்கப்பட்ட ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற புத்தகம் 14.11.1983இல் இந்த அவையில் வைக்கப்பட்டது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுதியுள்ள முன்னுரையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை நமது மாநிலத்தில்தான் அதிகம் என்பதை வருத்தத்தோடு ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது; தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம் என்று பெருமை கொண்டாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் எண்ணிக்கை மிகப் பெரும் அளவில் இருக்கும் மாநிலங்களில் 3வது இடத்தில் நாம் இருக்கிறோம் என்று கூறினார்கள். நாவலர் அவர்கள் திருப்பூரிலே பேசும்போது, இப்போது தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள் எண்ணிக்கை 36.9 சதவீதம் பேர் என்ற அளவுக்குக் குறைந்திருப்பதாகக் கூறினார்கள். எப்படி இந்தத் திடீர் குறைவு ஏற்பட்டது என்று எனக்கு விளங்கவில்லை. நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சர் அவர்கள் பேரவையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் 4வது இடத்திலே இருப்பதாகக் கூறியதாகப் பத்திரிக்கையிலே செய்தியை நான் படித்தேன். தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் 3வது இடத்தில் இருக்கும்போது, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கு மேலே இருந்தது என்றால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 4வது இடத்திற்கு இறங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் வறுமைக்கோட்டின் சதவீதம் 36 என்று எப்படிக் குறையுமென்று எனக்குத் தெரியவில்லை. நாவலர் அவர்கள் வாதத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டு பார்த்தாலும் கூட ஐந்து கோடி மக்களின் 36 சதவீதம் என்ற கணக்குப்படி 1 கோடி, 50 இலட்சம் பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள். இதில் 30 இலட்சம்

பேர்களுக்கு மாத்திரம் வீட்டுவசதி என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மீது 1 கோடியே 50 இலட்சம் பேர்களுக்கு யார் வீடு கட்டுவது என்ற கேள்வி எழும். இந்த அரசு அவர்களுக்கு வீடுகளை 3 ஆண்டுகளுக்குளேயே கட்டித் தருமென்று சொல்கிறது. அந்த மூன்று ஆண்டுகளுக்குள் என்றால் நான் மகிழ்ச்சியடைவேன். இந்த ஆண்டு 26 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி தரப்படவே இல்லை. அந்தத் திட்டத்தைத் தொடங்க முடியுமா என்ற ஐயப்பாட்டிற்கு அரசு விளக்கம் தர வேண்டும். எனவே எந்த சிந்தனையும் இல்லாமல் அடிக்கடி தேர்வு வரும்போதெல்லாம் இப்படிப்பட்ட மகத்தான, பிரம்மாண்டமான அறிவிப்புகளை வழங்குவது இந்த அரசுக்கு வாடிக்கையாக இருக்கிறது.

அடுத்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை. One job for each family அது மகத்தான அறிவிப்பு. ஏற்கெனவே 1983–84 நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நாவலர் அவர்கள் 'குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பில் 'அத் திட்டங்களுக்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன; இந்த நிதியாண்டில் 15 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது' என்று இந்த அவையிலும் அந்த அவையிலும் படித்தார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற தலைப்பில் அதற்கு 15 கோடி ரூபாய் அந்த நிதியாண்டில் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். அதற்குப் பிறகு 1984–85இல் நிதிநிலை அறிக்கையை எடுத்துப்பார்த்தேன். அதில் 'குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. 1985–86 நிதிநிலை அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். அதிலும் 'குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. நண்பர் திரு. சுப்பு அவர்கள் அழகாகச் சொல்வார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்றால், அந்தந்தக் குடும்பத்தில் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு. சுப்பு அவர்கள் சொல்லக்கூடும்...

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நாவலர் அவர்கள் அன்றைக்கே சொல்லிவிட்டார்கள். வேலை இருக்கிறது, பார்த்துக்கொள்ள வேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி: அதைப்போல கர்ப்பவதி களுக்கு பேறுகாலத்திற்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு 150 ரூபாய் தரப்படுமென்று ஒரு பெரிய அறிவிப்பு; அதைப் பார்த்து தாய்மார்கள் எல்லாம் இந்த 150 ரூபாய்க்காக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மீறலாமா என்று கூட யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில் மதுரை மாவட்டத்தில் கொட்டம்பட்டி என்ற ஊருக்கு மட்டும்தான் முதலில் பணம் தரப்படுமென்று சொல்லப்பட்டது. இன்றைக்கு கொட்டம்பட்டியிலுள்ள தாய்மார்களுக்குத் தரப்படவே இல்லை. பிறகு கொட்டம்பட்டி தொடரவே இல்லை. அதைப்போலத்தான் சென்னையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புத் தருவது என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிவித்தார். 3 சக்கர வண்டிகளைத் தயாரித்து – முதலில் வெள்ளோட்டமாக 5 வண்டிகளை விட்டு – அதிலே பட்டதாரிகள் காய்கறிகளை மலிவான விலையில் விற்பனை செய்வார்கள் என்றும், அவரவர்கள் வீட்டிற்கே இந்த வண்டிகளில் கொண்டுவந்து விற்பார்கள் என்றும், வீட்டிலுள்ள பெண்டிர் அங்கேயே காய்கறிகளை வாங்கிக் கொள்கிற அளவுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சொல்லி இப்படி 5 வண்டிகள் 500 வண்டிகளாகப் பெருகும், பிறகு திருச்சி, கோவை, சேலம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கு காய்கறிகளை விற்கிற மகத்தான வேலை தரப்படும் என்றும், அந்த சைக்கிள்களுக்கான ஸ்பேர் பார்ட்ஸ், உதிரிப் பாகங்கள் செய்வதற்காகக் கிராமப்புறங்களில் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. அந்தத் திட்டமும் தொடங்கியதோடு சரி, தொடரவே இல்லை.

பிறகு பாம்புக்கடி வைத்தியம் என்று ஒரு திட்டம். ஒவ்வொரு ஊரிலும் பாம்பு கடித்தால், அதற்கு வைத்தியம் செய்தால், அவர்களுக்கு இவ்வளவு ஊதியம் என்று சொல்லி, திட்டம் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்கேயும் பாம்புகள் கடிக்காமல் பயந்து கொண்டு பதுங்கிப் போய்விட்டனவோ எனக்குத் தெரியவில்லை. அதற்குப் பிறகு அந்தத் திட்டம்பற்றி விவரமே இல்லை. இது எப்படி

இருக்கிறது என்றால், ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்படும் போது, பிரம்மாண்டமாக அறிவித்துவிட்டு, கடைசியில் ஒன்றுமில்லை என்று முடிகிறது. பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர் என்றால் கட்டிற்கால்கள் போல் 3 பேர் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டியதைப் போல் நீங்களும் இரண்டு விரலைக் காட்டியே இந்த நாட்டை ஏமாற்றிவிடலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மீண்டும் மதுவிலக்குச் சட்டம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மதுவிலக்குச் சட்டம் மீண்டும் வரும் என்பதைக் குறிப்பிடும்போது அதை ஒரு மகிழ்ச்சியோடு, திட்டவட்டமாக மதுவிலக்குச் சட்டம் மீண்டும் வந்தே தீரும் என்று குறிப்பிடாமல் வழக்கமாக எத்தனையோ பிரச்சினை களுக்கெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே பீடிகை இருக்கும்போது இதற்கு மட்டும் எந்தப் பீடிகையும் இல்லாமல் – மதுவிலக்குத் திட்டம் மீண்டும் அமுல்படுத்தப் படுகிற காரணத்தால் இப்படியெல்லாம் வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக் கிறார்களே அல்லாமல், மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக மீண்டும் வரும் என்று அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. ஆனால் பேரவையில் பதிலுரையில் நிச்சயமாக மதுவிலக்குச் சட்டம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியினுடைய பொதுக்குழு கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிற கட்டத்தின் அடுத்த பகுதியில், மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் மீண்டும் கள்ளச் சாராயம் பெருகும் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு, இதனாலே பல பேர் சிறைச்சாலை களுக்குச் செல்ல வேண்டி வரும் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டும், காவலர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படும் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பயமுறுத்தல்கள் தோன்றுகின்ற காரணத்தால், எனக்குச் சில ஐயப்பாடு எழுகிறதே தவிர வேறொன்றுமில்லை. நீங்கள்

அறிவிப்பதையெல்லாம் சந்தேகப்படுவதா என்றால், எங்களின் முன் அனுபவம் அப்படி இருக்கிற காரணத்தால், சந்தேகப்படுகிறோம்.

1979ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது அண்ணா பத்திரிக்கையில் 2.12.1979 தேதியில் வெளியாகியிருக்கிறது. 'என் உயிர் இருக்கும் வரை, நான் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி அல்லது பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்து நான் ஓய்வு எடுத்தாலும் சரி – இதை இங்கே கோடிட்டுக்கொள்ள வேண்டும். வேறு ஒருவரைப் பதவியில் உட்கார வைத்துவிட்டு நான் ஓய்வு எடுத்துக் கொண்டாலும் சரி, என் இறுதி மூச்சு வரை மது விலக்குக் கொள்கையை நான் நிறைவேற்றுவேன் என்று என்னைப் பெற்ற அன்னைமீது உறுதி எடுத்துக்கொள்கிறேன்' என்று 1979ஆம் ஆண்டில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அன்றைக்கு சபதம் செய்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டது. கடைகள் திறக்கப் பட்டன. மதுவிலக்கு தளர்த்தப்பட்டது. இரத்து செய்யப்பட்டது.

மீண்டும் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி அண்ணா பிறந்தநாள் முதல் என் உயிர்க்கொள்கையான மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உறுதியாகக் கூறப்பட்டது என்ற செய்தி 23.7.1984 அன்று தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு செய்தி ஏடுகளில் வெளிவந்தது. அதற்குப் பிறகு பொதுத்தேர்தல் நேரத்திலும், தேர்தல் முடிந்த பிறகும் மதுவிலக்கு கொண்டுவரப்படும் என்று அமைச்சர்கள் எல்லாம் மேடைக்கு மேடை பேசினார்கள். ஆனால் என்னவாயிற்று மதுவிலக்கைத் தளர்த்தி தாய்மார்களின் கண்ணீரைச் சிந்த வைக்கமாட்டேன் என்று தாய்மார்களின் கண்ணீரைக் காட்டி மதுவிலக்கைத் தளர்த்தமாட்டேன் என்று சொன்னதும் நம் முதலமைச்சர்தான். அதற்குப் பிறகும் இதைத் தீவிரப்படுத்து வேன் என்று சொல்லி, குடிப்பவர்களை நாடு கடத்துவேன் என்று சொல்லுகிற அளவுக்குச் சட்டம் கொண்டு வருவேன் என்று சொல்லி சட்டம் கொண்டு வந்ததும், அப்படிப்பட்ட சட்டம் கொடுமையானது, பயங்கரமானது, சர்வாதிகார நாட்டில்கூட இப்படிப்பட்ட சட்டம் இருக்காது என்று நாங்கள்

கண்டித்தும்கூட அதையெல்லாம் மீறி பெரும்பான்மை காரணமாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி அதற்குப் பிறகு தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மதுக் கடைகளை மீண்டும் திறக்கிறேன் என்று சொல்லித் திறந்ததும், இந்த முதலமைச்சர்தான். இப்படி மதுக்கடைகளை மூடுவதற்கும், தாய்மார்களின் கண்ணீர். மீண்டும் திறப்பதற்கும், தாய்மார்களின் கண்ணீர். திரும்பவும் மூடுவதற்கும் தாய்மார்களின் கண்ணீர் என்று மாறி மாறிச் சொல்லும் சூழ்நிலை 1979ஆம் ஆண்டுமுதல் வாக்குறுதியாகத் தரப்பட்ட காரணத்தால்தான், இந்த வாக்குறுதியாவது காப்பாற்றப்படுமா என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறதே தவிர வேறல்ல.

தொழில் வளர்ச்சியில் நம்முடைய மாநிலம் மிகவும் முன்னேற்றம் அடைத்திருப்பதாக குறிப்புகளைக் காட்டியிருக் கிறார்கள். மத்திய அரசு நம்முடைய மாநில தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பெரும் திட்டங்களை அளிக்க வில்லை என்ற குறைபாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். குறிப்பாக சேதுசமுத்திரத் திட்டம் எத்தனையோ ஆண்டுகளாக அவ்வப்போது இருக்கின்ற தமிழக அரசாங்கங்களால் தமிழ்நாட்டின் சார்பாக சென்றிருக்கின்ற தி.மு.க பாராளுமன்ற உறுப்பினர்களானாலும் சரி. அ.தி.மு.க. உறுப்பினர்களானாலும் சரி, வேறு கட்சி உறுப்பினர்களானாலும் சரி, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் களானாலும் சரி, அவர்கள் அத்தனை பேரும் பாராளு மன்றத்திலே வலியுறுத்தி, நினைவூட்டத் தவறவில்லை. அதைப் போலவே திண்டுக்கல் – கரூர் அகல இருப்புப்பாதை. இந்த இரண்டு திட்டங்களையும் மாநில அரசு பலமுறை கோரியும், மாநில அரசின் சார்பாக பல்வேறு கட்சிகள், எதிர்க் கட்சியாக இருந்தாலும்கூட எங்களைப் போன்ற கட்சிகள் வாதாடியும் கூட, பிரதமரிடம் விண்ணப்பம் தந்தும்கூட இந்த இரண்டு பெரிய திட்டங்களையும் நிறைவேற்ற மத்திய சர்க்கார் முன்வரவில்லை, அதற்காக முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது எங்களுக்குள்ள மாபெரும் குறைபாடு. நாங்கள் அதைக் கண்டித்திருக்கிறோம், எதிர்த்திருக்கிறோம், அதுபற்றி பலமுறை பேசியிருக்கிறோம். ஆனாலும் கூட மத்திய அரசு

தரவில்லை என்கின்ற அந்தக் காரணத்தை மாத்திரம் சொல்லிக் கொண்டிராமல் மாநில அரசும், தொழில் அமைச்சரும் அக்கறை காட்ட வேண்டும். அப்படி சரியான முறையில் அடிக்கடி காட்டப்படவில்லை என்பதற்கு என்னிடத்திலே ஒன்றிரண்டு உதாரணங்கள் இருக்கின்றன.

என்னுடைய கையிலே இருப்பது 'டிட்கோ' வெளியிட்ட ஒரு எழில்பொருந்திய மலர். இந்த மலருக்கு ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் அவர்கள் அக்டோபர், 1985இல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார். பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் 1985ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். கவர்னர் திரு. குரானா 1985ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். நம்முடைய தொழில் அமைச்சர் 1985 அக்டோபர் மாதம் 8ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். வாழ்த்து தாமதமாக வந்தது என்று நான் குறை சொல்ல விரும்பவில்லை. இந்த மலர் 1986க்குப் பிறகு வெளியிடப்பட்டு, அதாவது பிப்ரவரி 4ஆம் தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். ஜனாதிபதி அவர்கள் வாழ்த்தை 1985லே அனுப்பியும், பிரதமர் 1985ஆம் ஆண்டு அனுப்பியும், முதலமைச்சர் தன்னுடைய வாழ்த்தை தாமதமாக அனுப்பினாரே என்று நான் குறை சொல்லவில்லை. பிப்ரவரி 4, 1986க்குப் பிறகு இந்த மலர் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். இதிலே தொழிலமைச்சர் அனுப்பிய வாழ்த்தில்,

"It is a commendable achievement of TIDCO in having successfully implemented 31 projects in the joint sector and 7 in the public sector." என்று அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகின்ற நேரம் புரட்சித் தலைவர் மருத்துவமனையில் இருந்த நேரம்.

கலைஞர் மு. கருணாநிதி: அது 1985இல் இல்லை; அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லுகிறார்கள். நான் அவர் தாமதமாக வாழ்த்து அனுப்பியதைப் பற்றிக் கூறவில்லையே! இந்த மலர் 1986க்குப் பிறகு வந்தது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். இந்த மலரில்,

"Ariyalur Cement works: A dry process cement plant was setup with an installed capacity of 5 lakh tonnes per annum. (Cement production at a capital cost of Rs. 28.76 crores). The unit commenced commercial production in August 1979. The plant is located at Ariyalur in Ariyalur taluk of Tiruchirappalli District. The plant provides direct employment of 916 persons ina backward area besides providing indirect employment in areas such as transportation of raw materials, finished goods, etc."

ஆனால் இதே அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ்இல், இது குறித்து 1985-86 இண்டஸ்ட்ரியல் பாலிசி அண்டு புரோகிராம்ஸ் என்ற தலைப்பில் வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில்,

"Ariyalur Works is a dry process plant having an installed capacity of 5 lakh metric tonnes per annum." என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. சிமெண்ட் புரோடக்ஷன் ஆகஸ்ட் 1, 1979 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாள்வரை இந்த 5 லட்சம் மெட்ரிக் டன்ஸ் என்பதை எங்கேயாவது தொட்டு இருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை.

1978-80இல், 1,15,919 மெட்ரிக் டன்கள், 8 மாதங்களுக்கு. 1980-1981இல் 2,46,736 மெட்ரிக் டன்ஸ், 1981-82இல் 2,84,350 மெட்ரிக் டன்ஸ், 1982-83 இல் 2,47,300 மெட்ரிக் டன்ஸ், 1983-84இல் 3,01,366 மெட்ரிக் டன்ஸ், 1984-85இல் 2,84,366 மெட்ரிக் டன்ஸ் ஆகத்தான் இருக்கின்றது. ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்ட இந்த 5 இலட்சம் மெட்ரிக் டன்ஸ் என்பதைத் தொடவே இல்லை. அது மாத்திரமல்ல, இதிலே This unit has been incurring losses என்று இருக்கிறது, ஆக இது நஷ்டத்திலே நடந்துகொண் டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு பப்ளிக் செக்டார். இது நஷ்டத்திலே நடந்துகொண்டிருக் கின்றது. இதற்காக ஒரு அழகான மலர் போடப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டுக்காரர்கள் அந்த மலரை வாங்கிப் பார்த்தால், அது நஷ்டத்திலே ஓடுகின்றதா அல்லது அதிலே உற்பத்தி வருகிறதா என்று தெரிந்துகொள்ள முடியாது. இந்த நிலையிலேதான் அந்த மலர் இருக்கின்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அரியலூர் சிமெண்ட் ஆலையில் சில சிக்கல்கள் காரணமாக, அதில் சாம்பல் அதிகமாக வந்துவிடுகிறது என்ற பிரச்சினை காரணமாக, அதிலே தீவிரமாக ஈடுபட்டு, தற்போது அது சரியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு அது இலாபத்திலே ஓடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: 5 இலட்சம் மெட்ரிக் டன் டார்க்கெட் வந்ததா என்பதைப்பற்றித்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் இன்னும் வரவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி: நான் சொன்னதை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை, இல்லை ஏற்கெனவே பல சிக்கல்கள் இருந்தன. சாம்பல் அதிகமாக வந்துவிட்டது. அதனால் பல சிக்கல்கள் வந்து, அதை இப்போது மாற்றியிருக்கிறோம். அதிலே ஒரு வருடகாலமாக தீவிர கவனம் செலுத்தி முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக் கிறோம். இந்த ஆண்டு இலாபத்தில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: இதே மலரில், 'புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன்' அதாவது திட்டம். ஜாயிண்ட் செக்டார் புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன். உற்பத்தியிலே இருக்கின்ற ஜாயின்ட் செக்டார் தொழில்கள் என்கின்ற அந்த தலைப்பில் வருகிறது. ஒரு தொழிற்சாலை சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிட்டெட், குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் இதற்கு ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மூலதனம். அந்த மூலதனத்தோடு தொடங்கப்பட்டது. அதிலே 60 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்றெல்லாம் இந்த மலரில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கும் அழகான படம் போட்டு ஒரு மலர் வெளியிட்டிருக்கின்றார்கள். நான் கடந்த 28ஆம் தேதி அறந்தாங்கிக்கு புதுக்கோட்டை வழியாகச் சென்றிருந்தேன். அப்போது அந்தப் படத்திற்குரிய அந்த ஆலை அங்கே

இருக்கின்றதா என்று பார்த்தேன். இருந்தது, ஆனால் மூடிக்கிடந்தது. ஆனால் இங்கே என்ன சொல்லப்பட்டிருக் கின்றது என்றால் ஜாயிண்ட் செக்டார் புராஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன் என்ற தலைப்பில் அந்த ஆலையினுடைய பெயர் வந்திருக்கின்றது. அது பல மாத காலமாக மூடிக் கிடக்கிறது. பழுதடைந்து, தூசிகள் படிந்து அங்கே உள்ளே கூட செல்ல முடியாத அளவில் இருக்கின்றது. நான் செல்லும் வழியில், சாலை ஓரத்திலேயே அமைந்திருந்ததால், நேரில் சென்று பார்க்க முடிந்தது. அசிட்டிக் ஆசிட் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை, எனவே மலரை அழகாகத் தயாரித்துவிட்டால் மட்டும் போதாது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடியிருக்கின்றார்கள்.

‘மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால்,

குளிர் மலர் சோலை கோவென் றழாதோ?‘

என்று பாடியிருக்கிறார்கள். அதுபோல, மலர் வெளியிடுகின்ற நேரத்தில் அதிலே உள்ள தொழிற்சாலைகள் எப்படி இருக்கின்றன என்பதற்கு இன்னும் உதாரணங்கள் தொடர்ந்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்குக் காட்ட முடியும். அவர்கள் இனிமேலாவது நிர்வாகத்தில் உள்ள குறைகளைக் கண்டறிந்து, அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கின்றேனே அல்லாமல் வேறல்ல.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர்களே, கார்போராண்டம் தொழிற்சாலைபற்றிச் சொன்னார்கள். அதுபற்றி குறிப்பு என்னிடமில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். இந்த ஆண்டு பொதுத் துறைகள் எல்லாவற்றிற்கும் இலாபம் வரும் வகையில் தற்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர்களே, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நாவலர் அவர்கள் அறிக்கையை நிறைவு செய்கிற கட்டத்திற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிடுகிறார். ‘நீதி, நேர்மை, சட்டம், திட்டம், ஒழுங்கு, தேவை ஆகியவற்றின்

அடிப்படையில் வகுத்துத் தந்தும் ஆட்சிபுரிய வேண்டும் என்ற குறள் நெறிக் கருத்திற்கு இணங்க இந்த அரசு செயல் ஆற்றி வருகிறது' என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நீதி, நியாயம் இவைகளுக்கெல்லாம் மதிப்பு தராமலும், இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாமலும் இந்த அரசு நடைபெறுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.

நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டவோ அல்லது ஆதாரங்கள் இல்லாமல் யார்மீதும் அவதூறு கூறவோ இந்தக் கருத்தை இங்கே எடுத்துவைக்க நான் விரும்பவில்லை. நீதிமன்றம் சில தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்புகளை மாத்திரம் படிக்கிறேன். அந்தத் தீர்ப்புகளைப் படிக்கும்போது, அதன் அடிப்படையிலே, மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறள் நெறிக்கு ஒப்ப இந்த அரசு நடைபெறுகிறதா என்ற அந்தக் கேள்விக்கு பதில் கிடைக்கிறதா என்று ஆய்ந்தால் மாத்திரம் போதுமானது. தங்கவேலு என்பவர் ஒரு விவசாயியின் மகன். இவர் பி.எஸ்.சி. அக்ரி. வேளாண்மை, 1984-85ஆம் ஆண்டு படிப்பதற்கு மனுச் செய்திருந்தார். இந்த மனு செய்வதற்கு முன்பு அரசாங்கம் 26-8-1983, அரசு ஆணை எண் 1531, வேளாண்மை என்ற எண்ணின்படி ஒரு நல்ல திட்டத்தை வகுத்து, அறிவித்தது. அது என்னவென்றால், பி.எஸ்.சி. (வேளாண்மை) படிப்பதற்கு விவசாயியினுடைய மகன்களுக்கும், மீனவர்களுடைய மகன், மகளுக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன்படி பி.எஸ்.சி. (வேளாண்மை) பிரிவில் 20, 25 இடங்கள் ஒதுக்கப் பட்டன. அரசாணை, 1640, வேளாண்மை, தேதி 14.08.1984இன்-படி விவசாயிகள், மீனவர்கள் மகன்களைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு விவசாயிகளின் மகன்கள், மீனவர்களின் மகன்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க தன்னுடைய கவனத்தைச் செலுத்தும் என்ற சீரிய நோக்கத்தோடு, பொதுவாக அந்தத் தேர்விலே தேர்வு செய்யப்படுகிறவர்களை பொறுக்கி எடுத்து அறிவித்தது. இந்தக் குழு கூடி பி.எஸ்சி. (வேளாண்மை)

படிப்புக்கு தேர்ந்தெடுத்த நபர்கள் குறித்த ஒரு வழக்கு. அந்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. மோகன் அவர்கள் தெரிவித்த கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கான வழக்கறிஞர் தேர்வு சம்பந்தப்பட்ட பதிவுப் புத்தகத்தை கோர்ட்டில் தாக்கல் செய்தார். நான் அதைக் கவனமாகப் பார்த்தேன். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் முறையீடுகள் அதில் இருந்தன. அவைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இந்தப் பிரிவில், அரசாங்கத் துறையிலே பணியாற்றுகிறவர்களின் வீட்டுப் பிள்ளைகள், தங்களுக்குச் சொந்தத்தில் நிலம் இருப்பது ஒன்றையே ஆதாரமாக வைத்து, இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியதாகும். அவர்கள் ஏழை விவசாயிகள், ஏழை மீனவர்கள். இவர்களுக்காக என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசாங்கத் துறைகளிலே பணியாற்றுகிறவர்கள் அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருப்பதை வைத்து, அவர்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியது. இப்படி ஒதுக்கீட்டு இடங்களை குறிப்பிட்ட ஒதுக்கீட்டுக்கு தகுதியுடையவர் களுக்கு வழங்காமல், கேட்பவர்களுக்கு எல்லாம் கொடுப்பது என்பது அரசு ஒதுக்கீட்டு முறைக்கு மாறானதாகும். இவர்கள் அரசு விதித்துள்ள ஒதுக்கீட்டு முறையை கவனத்தில் எடுத்துக் கொண்டார்களா என்பதே கேள்விக்குரிய ஒன்று. அரசுப் பணியில் இருப்பவர்களுடைய பிள்ளைகளும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள், ஏழை மீனவர்கள் போன்றவர்களுடைய நிலையை உணர்ந்து கருணையுடன் அவர்களுக்கு உதவுவதற்காக அரசு இந்த ஒதுக்கீட்டு முறையைக் கொண்டுவந்தது. ஆனால், இந்தக் குழு அந்த விதியைக் கடைப்பிடிக்கவில்லை. முழுத் தோல்வையும் செல்லாது என்று சொல்வதுதான் முறையாக இருக்க முடியும். ஆனாலும் தேர்ந்தெடுக்கப்படாத மற்றவர்கள் மனு எதுவும் போடவில்லை. அப்படிச் சொல்வதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பாதிக்கப்படலாம். ஆகவே, பாதிக்கப்பட்ட இவர்கள் பி.எஸ்சி. வேளாண்மை படிக்க சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறேன் என்று நீதிபதி அவர்கள் தன்னுடைய தீர்ப்பில் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன குறிப்புகளின் அடிப்படையில் ஒன்றை விளக்கமாகச் சொல்கிறேன். வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பும்போதே, சான்றிதழையும் சேர்த்து அனுப்புகிறார்கள். பல்கலைக் கழகம் அவர்கள் அனுப்புகின்ற சான்றிதழையும் சேர்த்தே இந்தக் குழுவுக்கு அனுப்புகிறது. ஆனால் மதிப்பெண்களின் அடிப்படையில்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். நீதிபதியின் தீர்ப்பின் அடிப்படையில் இதுபற்றி பல்கலைக்கழகத்திற்கு எழுதி இப்போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் போன்றோர் அடங்கிய ஒரு குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கிறோம்.

கலைஞர் மு. கருணாநிதி: அரசு நல்ல உணர்வோடு, நல்ல நோக்கத்தோடு இதனைச் செய்திருந்தாலும், அந்தக் குழுவானது அரசின் நோக்கத்துக்கு ஏற்ப இதனைக் கவனிக்கவில்லை என்று நீதிபதி சுட்டிக்காட்டியதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். வேளாண்மைச் செயலாளர், பல்கலைக்கழகப் பதிவாளர் இவர்கள் எல்லாம் இதில் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள். அரசே நல்ல நோக்கத்தோடு ஒரு ஆணையைப் பிறப்பிக்கிறது. அப்போது வேளாண்மைத் துறை அமைச்சர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அமைச்சர்கள் இடம் பெற்றிருக்கிற ஒரு குழுவே அரசு ஆணைக்கு மாறாகச் செயல்பட்டிருக்கிறது. அட்வகேட் ஜெனரல் அவர்களும் இதில் வாதாடப் போயிருக்கிறார். நீதிபதியே குறிப்பிட்டுள்ள வாசகங்களில் கூற வேண்டுமே யானால்,

"It is surprising that persons working in the Government service on the strength of owning the required extent of wet garden or dry land have come to be included under this category. This is a serious flaw. When the Government passes an order on reservations, it is the bounded duty of the Committee to have kept the Government Order in mind and followed not only the rather of the same but the spirit as well. But that has not been done at all

in this case. "The resultant position will be that the entire selection will have to be set aside. But, unfortunately, the petitioner has not impleaded all the selected candidates. Besides, setting aside the entire selection will cause immense hardship to the selected candidates who are now pursuing the course. Therefore, it appears to me just and proper to provide remedy to the petitioner alone. Accordingly I hereby direct that the petitioner be admitted to B.Sc.(Agri.) Course with effect from 16th December 1985." என்று கால உணர்வை மனதிலே வைத்துக்கொண்டு அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நீதிபதி அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தமிழிலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னபோதே நான் அதைப் புரிந்துகொண்டேன், ஆங்கிலத்திலேயும் சொல்ல வேண்டுமென்பதற்காகக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். சிறு விவசாயிகள் என்று சான்றிதழ் வாங்கி விண்ணப்பம் அனுப்புகிறார்கள். அப்படி சான்றிதழுடன் வந்த விண்ணப்பத்தை அப்படியே பல்கலைக் கழகத்திலிருந்து குழுவுக்கு அனுப்புகிறார்கள். மக்கள் பெற்றிருக்கும் மதிப்பெண்களின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். நான் அதுபற்றிய முழு விவரங்களையும் தர வேண்டுமென்றாலும் தரத் தயாராக இருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: நீதிமன்றத்திற்குச் சென்ற இந்த வழக்கினுடைய முழுவிவரங்களும், அது சம்பந்தமான பட்டியலும், வழக்கினுடைய முழு விசாரணைகள் மற்றும் நீதிபதியினுடைய தீர்ப்பு பற்றிய முழுவிவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன. நானே தங்களிடம் தருகிறேன். பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சரும் பார்த்துக் கொள்ளலாம். அதையெல்லாம் பார்த்துவிட்டு, அமைச்சர் தரப்பு வாதங்களையெல்லாம் கேட்டுவிட்டுத்தான், நீதிபதி அவர்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: டாக்டர் கலைஞர் அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொள்கிறேன். எங்களுக்கு

வந்திருக்கிற பட்டியல் பல்கலைக் கழகம் அனுப்பியிருக்கிற பட்டியல். இதிலே நிலங்கள் வைத்திருக்க கூடியவர்கள், சிலபேர் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வேறுவிதமான சான்றுகளைத் தந்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதிலே இருக்கிற சிக்கல் அதுதான். அதைக் களைய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கலைஞர் மு. கருணாநிதி: மற்றொன்று, இதுவும் நீதிமன்றத்தில் தீர்ப்பை ஒட்டியதுதான். சற்று தாமதமாக வழங்கப்பட்ட தீர்ப்பென்றாலும், 4.12.1985 அன்று இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் இதை இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக, எம்.பி.ஏ. படிப்புக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்கில், தலைமை நீதிபதி திரு. எம்.என். சந்தூர்க்கர் அவர்களும், நீதிபதி திரு. வெங்கடசாமி அவர்களும் அளித்த தீர்ப்பு மிகவும் முக்கியமானது. அதற்கு முன்னாலேயே உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னதாகவே, பல்கலைக் கழகத்தின் தேர்வுக் குழு கூடி, தேர்வுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையைத் தாக்கல் செய்தபோதும், தேர்வில் நடைபெற்ற ஊழல்கள் குறித்து விபரமாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. உயர்நீதிமன்றமும் அந்தத் தேர்வுக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட, தேர்வுக் குழுவின் அறிக்கை இது. இதில் சொல்லப் பட்டிருக்கிறது.

The following discrepancies were observed and the committee resolved to record the following facts.

The Committee observed that the marks given by the following Committee Members were erased and changed by someone other than the respective Committee Members.

அதாவது குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பெயர்களைக் கொண்டவர்களின் மார்க்குகளை ஒருவர், அதாவது அந்தக் குழுவில் இல்லாத ஒருவர் 'எரேஸ்' செய்து மாற்றியிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'The Committee observed that the following candidates' marks are erased and changed by someone other than the respective Committee Members.

அதுவும் வேறு தொனி அல்ல.

In the light of the observations of changes in the interview marks, the Committee after discussing with the Professor and the Head of Management Studies, decided to invite Mr. D.V. Suresh Kumar, Reader, Management Studies. Accordingly Mr. Suresh Kumar was requested to appear before the Committee and the Committee understood that Mr. D.V. Suresh Kumar had erased and changed the marks. During our discussion it was brought to the notice of the Committee that these changes were made by D.V. Suresh Kumar with the knowledge of the Head of the Department. This statement was not denied by the Head of the Department. However, Mr. Suresh Kumar had accepted the corrections and was willing to change the marks back to their original positions." The following discrepancies were observed in the case of Forward Caste candidates. The candidate with Hall Ticket No. 2262 was absent for the test.

3262 என்ற எண்ணுடைய டிக்கட்காரர் அந்த டெஸ்ட்டுக்கே வரவில்லை.

But he was called for the personal interview and group discussion.

The candidate with Hall Ticket No. 1088 has not secured enough marks in the test.

டெஸ்டில் 1088 எண்ணுள்ள அந்த வேட்பாளர் தேவையான மார்க்கைப் பெறவில்லை என்றாலும்கூட, அதற்கான லிஸ்டில் அவர் பெயர் இல்லையென்றாலும்கூட,

But she was called for the interview. The candidate with Hall Ticket No. 1088 has not secured enough marks in the test to appear in the merit list; but she was called for the interview. The Committee has observed that the following numbers have secured enough marks to appear in the merit list but were not called for the interview:-

Hall Ticket Nos. 1183, 1261, 1392.

ஹால் டிக்கட் 1183, 1261, 1392 எண்ணுள்ள இவர்கள் எல்லாம் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தும், அவர்கள் இண்டர்வியூவிற்கு அழைக்கப்படாமல் மெரிட் இல்லாதவர் களும், யார் யார் ஆப்சென்ட் ஆனார்களோ அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்'' இதுதான் அந்தக் கமிட்டியின் விசாரணை.

The Committee observed that one number (1498) in the register showing the rank order has been erased and changed.

அதாவது 71 மதிப்பெண் வாங்கிய 2030 எண்ணுள்ளவனுக்குக் கிடைத்த மதிப்பெண்களை 2025 என்ற எண்ணுள்ளவனுக்குக் கெட்டிக்காரத்தனமாக மாற்றிவிட்டார்கள். இதையெல்லாம் அந்தக் குழு ஆராய்ந்தது.

Due to this change the Committee has taken up the task of tracing the relative number and located the following answer sheets with Hall Ticket No.

Hall Ticket No. 2063 Marks 40

2025 Marks 30

2030 Marks 71

Out of the three numbers, the candidate with the Hall Ticket No. 2025 was given the mark of the candidate with Hall Ticket No. 2030.

The Committee observed that due to this change of Test mark from one person to another the candidate with Hall Ticket No. 2025 was called for the interview and the candidate with Hall Ticket No. 2030 was not called for the interview. The candidate with Hall Ticket No. 2025 was able to appear in the final list due to this change of marks from another candidate.

The Committee has accidentally got hold of a record containing the list of candidates, tentatively worked out for identifying the probable candidates. The Committee has noticed that

this exercise was done independently probably before the Committee met on 17th July 1979 for Selection of candidates. Mr. D.V. Suresh Kumar has agreed that he has worked out the list (with the knowledge of the professor). The Committee has taken the above document and resolved that this document be handed over to the Vice-Chancellor immediately.

இது துணைவேந்தரிடத்திலே உடனடியாகத் தரப்பட்டது. இவ்வளவு தவறுகளை, மோசடிகளைப் பற்றிய உண்மைகள் துணை வேந்தரிடத்திலே தரப்பட்டன. இவ்வளவு கொடுத்தும் துணைவேந்தர் இவற்றின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. யாருக்கு இடம் தருவதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அல்லது யார் தூண்டுதல் மீது இந்த ஏற்பாடுகள்ண் செய்யப்பட்டன? எனக்குத் தெரியாது. ஆனால் இது சம்பந்தமாக ஆளுநரிடத்திலே கொடுத்த முறையீடு கவனிக்கப்படாத காரணத்தினால், ஒரு பத்திரிக்கைக்காரர், 'ஹரி என்பவர் என்று கருதுகிறேன்' அவர் உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடுத்தார். அதன்மீது உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் தீர்ப்பளிக்கின்றபோது அது காலம் கடந்து கொடுக்கப்பட்ட வழக்கு என்று கூறி தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆனாலும் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் அந்தத் தீர்ப்பில் சில குறிப்புகளை எழுதி அந்தத் தீர்ப்பின் நகலை ஆளுநருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் என்ன எழுதி அனுப்பியிருக்கிறார்கள் தெரியுமா?

In these circumstances when an allegation with regard to the tampering of marks of certain candidates has been brought to the notice of this Court, notwithstanding the fact this has taken place in the year 1979, in the interest of purity of academic atmosphere of the University and equality in the interests of the fairness and reputation of Madras University, we think the Chancellor (Governor) along with a copy of the Minutes which are kept in the sealed envelope for such action as the Chancellor may deem fit to take in this case.

இவ்வாறு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் தீர்ப்பளித்த தீர்ப்பின் நகலை

ஆளுநருக்கு அதாவது பல்கலைக் கழக வேந்தருக்கு அனுப்பி நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் அதுகுறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடைசியாக, மற்றொரு தீர்ப்பைக் குறித்துக் கூறுகிறேன். இதுபற்றி வேறொரு அவையிலே விவாதம் நடந்திருப்பதால், அதைப்பற்றி அதிகமாகக் கூறி பிரச்சினை யாக்க விரும்பவில்லை. 'பிரிண்டிங் டெக்னாலஜீ'யில் லித்தோ கிராபி படிப்பதற்கு மாணவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள் என்றால், அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.யில் ஆங்கிலத்தில் எடுத்த மதிப்பெண்ணையும், விஞ்ஞானத்தில் எடுத்த மதிப்பெண்ணையும் கூட்டி, அதன் பின் 'இன்டர்வியூ'விற்கு 30 மதிப்பெண்கள் என்று வைத்து, இன்டர்வியூவில் எடுக்கிற மதிப்பெண்ணையும் சேர்த்து, இறுதியிலே இவற்றில் அதிக மதிப்பெண்கள் வாங்குகிறவர் களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டுமென்பது நியதி. சென்ற தடவை இந்நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண் 137 என்று கணக்கிடப்பட்டிருக் கிறது. இதிலே பி. சீனிவாசன் என்பவர் ஆங்கிலத்தில் 62 மதிப்பெண்களும், விஞ்ஞானத்தில் 58 மதிப்பெண்களும் ஆக மொத்தம் 120 மதிப்பெண்கள்தான் எடுத்திருக்கிறார். அவருக்கு 'இண்டர்வியூ'வில் 6 மதிப்பெண்கள் தரப்பட்டிருக் கின்றன. இவ்வாறு அவர் 126 மதிப்பெண்கள்தான் பெற்றிருக்கிறார். ஆனால் ஒருவர் இடம் கிடைக்க வேண்டு மானால், குறைந்த அளவுக்கு 137 மதிப்பெண்களாவது பெற்றிருக்க வேண்டும். ஆனால் 126 மதிப்பெண் பெற்ற சீனிவாசனுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் மதிப்பெண் 140 வாங்கியதாகப் பதிவு செய்யப்பட்டு அவருக்கு இடம் தரப்பட்டது. ஆனால் அவர் இண்டர்வியூவில் வாங்கிய மார்க்கையும் சேர்த்து பிளஸ் 6 ஆக மொத்தம் 126 தான். ஆனால் 140 மார்க் அவர் வாங்கியதாக அவருக்கு இடம் தரப்பட்டது.

அதைப்போலவே சிவக்குமார் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெற்ற அடிப்படை மார்க் 123. நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண் இரண்டே இரண்டு மார்க். ஆக மொத்தம் 123, பிளஸ் 2, 125 தான். அவருக்கு 143 மார்க் என்று போட்டு

இடம் தரப்பட்டிருக்கிறது. ஆறுமுகசெல்வம் என்பவர் எஸ்.எஸ்.எஸ்.சி.யில் பெற்ற அடிப்படை மார்க் 110, நேர்முகத் தேர்வில் பெற்ற மார்க் 18½, ஆக மொத்தம் 118½ மார்க்தான். ஆனால் இவருக்கு 137 மார்க் கடைசி மார்க் போட்டு இடம் கொடுக்கப்படுகிறது. நேர்முகத் தேர்விலே பதிவு செய்த மார்க்குகளின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. நீதிமன்றத்தில் அதைத் தங்களுடைய கையெழுத்து என்று அதற்குத் தொடர்புடைய பிரின்சிபாலே ஒத்துக்கொண்டிருக் கிறார். அதை 'ரஃப்ஷீட்' என்று எல்லாம் கூட சுப்ரீம் கோட்டில் நடைபெற்ற வழக்கில் சொல்லப்பட்டது. 'ரஃப்ஷீட்' என்றால் 'அன்பாலிஷ்டு' என்று அர்த்தம். ஒரு 'ரஃப்' ஆகப் போடுகிறோம். அனுமார் படம் போட ஆரம்பித்து, 'ரஃப்' ஆகப் போடுகிறோம் என்று சொல்லி, பிறகுப் பைனலாக' படம் போடும்போது இராமர் படமாகப் போட முடியாது. அனுமார் படம் படம் போடுவதற்காக ரஃபாக படம் போட்டால், அது அனுமாராகத்தான் இருக்க முடியும். அந்தத் தாளை உச்ச நீதிமன்றத்தில் காட்டும்போது, அதை 'ரஃப்ஷீட்' என்கிறார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் அதை ஒத்துக்கொள்ள வில்லை. ஒத்துக்கொள்ளாத நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுள்ளது. மார்க் குறைவாக பெற்ற மாணவன் என்று அந்தக் கல்லூரிகளால் கூறப்பட்ட வேல்முருகன் என்ற மாணவனுக்கு இடம் தரவேண்டும் என்று சமரசமாக முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்த மாணவர் 129 மார்க் வாங்கியதாக சொல்லப்பட்டது. ஆனாலும் சுப்ரீம் கோர்ட்டில் சமரசமாக முடிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு வேல்முருகன் தவறு செய்தவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடருகிறார். அந்த வழக்கில் அந்தக் கல்லூரியுடைய முதல்வரால் ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் அந்த முதல்வர் குறிப்பிடுகிற வாசகம்:-

I, K. Mohan Rao, do hereby solemnly affirm and sincerely state as follows:-

I am the Principal, Institute of Printing Technology, Madras.

It is true that I expressed my regret since it was pointed out by their Lordships of the Supreme Court that it is an irregularity and the Supreme Court was pleased to accept my apology.

சுப்ரீம் கோர்ட் என்னுடைய அப்பாலஜியை ஏற்றுக்கொண்டு விட்டது. மன்னிப்பை ஏற்றுக்கொண்டு விட்டது என்று ஹைகோர்ட்டில் சொல்கிறார். அது மாத்திரமல்ல.

'I submit that since it is true that the handwriting is mine and since the Supreme Cout pointed out that such procedure is irregular. I sincerely expressed regret'

என்று அவர் ஒத்துக்கொண்டார். ஆகவே இது பிரின்சிபாலே உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஒத்துக்கொண்ட தகவல். இன்னும் சொல்லப்போனால், நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியிருக்கிறார். வருத்தம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த முறைகேட்டிற்கு அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவருக்கு ஏதோ நல்லாசிரியர் விருது தரப்பட்டதாக நான் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அது உண்மையோ அல்லது தவறோ எனக்குத் தெரியாது.

இறுதியாக, நான் ஒன்றிரண்டை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எரிச்சல் கொண்டு பேசுவது, அல்லது யாரையும் பழிவாங்குவது என்கிற முறையில் இந்த அரசு தன்னுடைய தொடர் பயணத்தை அந்த வகையில் நடத்தாமல், அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் மீது பழி வாங்குகிற போக்கு, ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகும் இன்னும் நீடிக்கிறது. அது முறையல்ல. அந்தத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்ற நிதியமைச்சர் அவர்களை நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தலைமைச் செயலக ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கு அவர்களைத் தற்காலிகமாகத் தள்ளிவைத்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை. மேலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று அச்சுறுத்தல் இவைகளிலிருந்து

அவர்களை விடுவித்து, தலைமைச் செயலகம் சீராகச் செயல்படுவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 'எரிச்சல்' என்று குறிப்பிட்டேன். அதில் ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் முடிவுற்று எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கே பொறுப்புகளை வகிக்க இருக்கிறார்கள். நான் உண்மையிலே அறந்தாங்கி சென்றிருந்தேன். அறந்தாங்கியில் நடைபெற்றது நாவலர் அவர்களுக்குக்கூடத் தெரியும். திரு. ஏ.பி.ஆர். ஜனார்த்தனம், எல்.இ.டி.டி.டி. என்பவர் நீண்ட காலமாக, 20 ஆண்டுக் காலமாக ஆசிரியராக இருந்தார். 7 ஆண்டுக் காலமாக துணைத் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று பணியாற்றியிருக்கிறார். இந்தத் தேர்தலுக்காக அவர் பணி விலகி தேர்தலில் நின்று அறந்தாங்கி நகராட்சியிலே, நகராட்சித் தலைவர் வெற்றிப்பெற்றிருக்கிறார். நகராட்சித் தலைவர் ஏற்கெனவே பள்ளி ஆசிரியராகவும் இருந்தார், துணைத் தலைமையாசிரியராகவும் இருந்தார் என்ற காரணத்திற்காக அறந்தாங்கி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற இருந்த ஒரு ஐம்பெருவிழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஐம்பெரும் விழா என்றால் அரசியல் விழாவல்ல. இலக்கிய மன்ற விழா, சிறு சேமிப்பு விழா, ஆண்டு விழா, என்று இப்படி ஐந்து விழாக்களை ஏற்பாடு செய்து, நகராட்சித் தலைவரான திரு. ஏ.பி.ஆர். ஜனார்த்தனம் அவர்களை அழைத்திருந்தார்கள். அந்த விழா 24.3.1986 அன்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் 24.3.1986 அன்று ஒரு முக்கிய அறிவிப்பு என்று கரும்பலகையில் எழுதி 'பள்ளி சார்பில் இன்று நடைபெறுவதாக இருந்து ஐம்பெரும் விழா தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது' என்று அறிவிக்கப்பட்டது. இதைக் குறித்து மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தெரிவித்தால் தெரிந்துகொள்ள முடியும். அறந்தாங்கி பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. விசாரித்தால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்கு காரணம் அங்கே இருக்கிற சீ.ஈ.ஓ. பள்ளி அதிகாரி, ஆசிரியர்களை அச்சுறுத்தி அவரே அதற்காக உத்தரவிட்டு, 'எப்படி கட்சித் தலைவரை வைத்து நீங்கள் விழா நடத்தலாம்'

என்று மிரட்டியிருக்கிறார். நகராட்சித் தலைவர் ஒருவர் நகராட்சிப்பள்ளி விழாவுக்குச் செல்வது என்பது அவ்வளவு பெரிய குற்றமா? அப்படியென்றால் இப்போது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நகராட்சித் தலைவர்களை, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை இந்த அரசு எப்படி நடத்தப்போகிறது என்பதற்கு இது ஒரு முன்னுதாரணமாக ஆகிவிடாதா என்று கூற விரும்புகிறேன். எனவே இந்த நிலைமைகளை எல்லாம் விட்டுவிட்டு அரசு செம்மையாக, சீராக ஆட்சியை நடத்த வேண்டும். அதற்காகத்தான் இத்தனை குறைபாடுகளை நான் எடுத்துக்காட்டினேனே தவிர, வேறு அல்ல என்று தெரிவித்துக்கொள்வதோடு, இன்னும் நிறைய பேச வேண்டும் என்று நான் விரும்பினாலும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் 11 பேர்களைப் பற்றியும்.....

இன்னும் அதிகமாகச் பேச விரும்பினாலும் எனக்கு இருக்கிற சங்கடமெல்லாம் நான் ஏதாவது பேசப் போய், 11 பேர் பதவி விலகி இருக்கிற நேரத்தில், அந்தப் பழி என்மீது வந்து சேரக்கூடாது என்ற எண்ணத்தில் இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

உரை : 23 நாள் : 03.04.1989

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பாடலோடு தொடங்கப்பட்ட நிதிநிலை அறிக்கை குறித்த விவாதங்களுக்குப் பதிலளிக்கும் போதும், அவருடைய பாடலையே நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

'கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ!

காரிருள் தான் சூரியனை மறைப்பதுண்டோ!

பேரெதிர்ப்பால் உண்மை தான் இன்மையாமோ!

(மேசையைத் தட்டும் ஒலி.)

என்று அந்தப் புரட்சிக் கவிஞன், பல ஆண்டுகளுக்கு முன்பு பாடிவைத்த அந்த உண்மை வரிகளை உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு என்னுடைய பதிலுரையைத் தொடங்கு கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில் ஆளும் கட்சியின் சார்பிலும், எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க. சார்பிலும் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ஜனதா தளம், தமிழ்நாடு பார்வர்டு பிளாக், தமிழ்நாடு ஜனதாக் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பிலும், எதிர்க்கட்சிக்கு அடுத்த கட்சியாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி சார்பிலும் சற்றொப்ப 50க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

அரசின் சார்பிலே நான் தயாரித்து இந்த அவை முன்னால் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை அப்படியே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய வேத புத்தகமென்று நான் சொல்ல முன்வரவில்லை. குறைபாடுகள்

இருக்கலாம்; குற்றங்கள் கூட இருக்கலாம்; அவைகளை யெல்லாம் சரிசெய்துகொள்ளக்கூடிய அரிய யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய கட்சியின் சார்பில் தெரிவிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். இன்றைக்குக் காலையிலே என்னுடைய அருமை நண்பரும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவருமான அப்துல் லத்தீப் அவர்கள் ஜனநாயகத்தி னுடைய மாண்பு குறித்து விளக்க உரை ஆற்றியிருக்கிறார்கள். ஜனநாயகம், ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள், என்கின்ற இரண்டு பக்கங்களைக் கொண்ட ஒரு நாணயம். நாணயம் தவறுகின்றவர்கள் சில பேர் எதிர்க்கட்சிகளிலே வந்து விடுகிற காரணத்தால், ஜனநாயக நாணயம் சில நேரங்களிலே செல்லாததாக ஆகிவிடக்கூடும் என்கின்ற அச்சத்தின் பாற்பட்டுத்தான் அப்துல் லத்தீப் அவர்கள் காலையிலே அந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

பொதுவாக இந்த அவையின் முன்னாலே வைக்கப் பட்டுள்ள வரவு–செலவுத் திட்டம் குறித்து நாட்டிலே உள்ள சில ஏடுகள் எல்லாம் எவ்வாறு கருத்து அறிவித்திருக்கின்றன என்பதைச் சுருக்கமாக இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 29.3.1989 நாளிட்ட, எக்கனாமிக் டைம்ஸ் (Economic Times) - 'Tamilnadu's rosy creams' என்ற தலைப்பில்,

"The Tamil Nadu Chief Minister Mr. M. Karunanidhi, has struck a balance between discretion and valour in producing additional resource mobilisation to the tune of Rs. 50 crores in the coming year. Moreover, the Budget has something to offer to almost everybody. For the industrialist, there is promise of stepped up outlay on power as well as three new growth centres. For the agriculturist, there is a whole new package of drought relief and debt relief. For the Scheduled Castes, Scheduled Tribes and the Most Backward Communities as well as women and the unemployed, the Budget spells out special schemes to implement the DMK's poll assurances" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தமிழ்நாட்டின் மலரும் எதிர்பார்ப்புகள்' என்ற தலைப்பில் வருமாண்டில் 50 கோடி ரூபாய் வரை நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக ஒரு நடுநிலையான கொள்கையைத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் வேகத்துக்கும், விவேகத்துக்குமிடையே நின்று வகுத்திருக் கிறார். அநேகமாக எல்லாத் தரப்பு மக்களையும் நிறைவு செய்யும் வகையில் நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. தொழிலதிபர்களுக்குக் கூடுதல் மின்சாரமும், மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்க உறுதியும் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம், மற்றும் வறட்சி நிவாரணம் அளிக்கும் வகையில் புதிய சலுகைகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் வேலையில்லாதவர்களுக்கும், மகளிருக்கும் சில சிறப்புத் திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, எல்லா வகையிலும் தி.மு. கழகம் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைந்துள்ளது என்பது அந்தத் தலையங்கத்தின் சாராம்சம்.

அடுத்து, "Financial Express" - 29th March 1989 -

"The Chief Minister Karunanidhi was able to make a soft-landing with his Budget for 1989-90. The Flight has been made smooth by the readiness, though belatedly, to off-load cargo in the shape of certain financial Plan targets. All said and done, the Chief Minister, who also holds the Finace portfolio, has done well in managing the pressure-cooker of State finances to provide for a wide range of reliefs and funds for enlarged scale of welfare measures" என்று குறிப்பிடுகிறது.

"News Time" - - 28th March 1989 இதழில் "A Welfare Budget" என்ற தலைப்பில்,

"When does a populist Budget become a welfare Budget?"

"When it is presented by an Opposition Government" என்று தெரிவிக்கப்படுகிறது.

எப்போது மக்கள் நிதிநிலை அறிக்கை, மக்கள் நல ஆதரவு நிதிநிலை அறிக்கையாக ஆகிறது என்று கேட்டு அதற்குப் பதில் அளிக்கிறது, மாநிலத்தில் ஒரு எதிர்க்கட்சி அரசு அமைந்து நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும்போது தான் என்பதாக.

"Hindu" 27-3-1989 - பத்திரிகை

"Poll promises fulfilled" என்ற தலைப்பில்.

"The Chief Minister Karunanidhi, on Saturday, announced a number of welfare measures in the Budget for 1989-90 in fulfilment of the promises made in the D.M.K. Election manifesto" என்று குறிப்பிடுகிறது.

"News Today" **என்ற ஏட்டில்** 27.3.1989இல் "Welfare-oriented Budget" என்ற தலைப்பில்,

"The Tamil Nadu Government was faced with three problems a precarious financial position, and urgency for encouraging an improvement in the development exercise and the need to redeem the Election promises. It should be said to the credit of the D.M.K. Government that its Budget for 1989-90 is charted specifically to tackle these three issues to a creditable extent." அதாவது, தமிழக அரசு மூன்று பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஒரு புறம் கடுமையான நிதிப் பற்றாக்குறை, மறுபுறம் வளர்ச்சிப் பணிகளில் தீவிரம் காட்டவேண்டிய அவசியம், இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டிய கட்டாயம், இந்த இக்கட்டான பிரச்சினைகளைத் தி.மு. கழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை சாமர்த்தியமாகச் சமாளித்ததோடு மட்டுமல்லாமல், மக்களின் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும் ஈடு கொடுத்து அமைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றது.

அதனையொட்டித்தான் இங்கே பல்வேறு கட்சிகளின் சார்பில், எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய உறுப்பினர்களே கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே பலவற்றை வரவேற்றுப் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி நான் வெகுவான விவரங்களை நீங்கள் சுட்டிக்காட்டிய அடிப்படையிலே ஆராய்வதற்கு முன்பு, தொடர்ந்து நாம் வலியுறுத்தி வருகின்ற மாநில உரிமைகள், மாநில அதிகாரங்கள் இவைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும்.

நம்முடைய லத்தீப் அவர்கள் பேசும் பொழுதும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே வீரையன் அவர்கள் நேற்று உரையாற்றிய பொழுதும், அதைப் போலவே நம்முடைய பி.எச். பாண்டியன் அவர்கள் உரையாற்றிய பொழுதும், பூவராகன் அவர்கள் உரையாற்றிய பொழுதும், தமிழ்நாடு ஜனதாக் கட்சியினுடைய தலைவர் விஜயராகவன் அவர்கள் இங்கே உரையாற்றிய பொழுதும் மாநில உரிமைகள் எந்த அளவிற்கு மத்திய அரசினால் பறிக்கப்படுகின்றன, அவைகளையெல்லாம் நாம் பெறுவதற்குத் தொடர்ந்து குரல் கொடுத்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இன்று நேற்றல்ல, மாநில உரிமைகள் வேண்டும்; இன்னும் சொல்லப்போனால் மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களுக்கும் அமையப்பெறவேண்டுமென்ற கருத்தை நாம் அல்ல, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களேகூட இந்தியா சுதந்திரம் பெறுகிற அந்தக் காலக்கட்டத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்து இருக்கிறார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி 1945ஆம் ஆண்டு இந்திய மக்கள் முன்னால் வைத்த தேர்தல் பிரகடனத்தில் இந்தியக் கூட்டாட்சி என்பது அதன் பல்வேறு பகுதிகளிலும் விரிந்து இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். அந்தப் பகுதிகளுக்கு, அதாவது மாநிலங்களுக்கு, அதிகபட்சம் சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான, முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்தபட்ச அதிகாரங்களைக் கூட்டாட்சி அரசிற்கும் தேவைப்படும் பகுதிகள் அதாவது மாநிலங்கள் விரும்பினால் ஏற்கும் பொதுவான, அதிகாரங்கள் கொண்ட பொதுப் பட்டியலும் இருக்கலாம்.

அதைத் தொடர்ந்து 1947ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப்பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள

நிலப்பகுதிகளும் வேறு வெளியே உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும், அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்போதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் தனித்த சுயாட்சி உள்ள பகுதிகளாகச் செயல்படும், எஞ்சிய அதிகாரங்களும் அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், அவைகள் அனைத்தும் மறந்து போனவைகளாக, தொடர்ந்து மறுக்கப்படக் கூடிய கொள்கைகளாக காங்கிரஸ்காரர்களால் ஆகிவிட்டன என்பதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களும், நாட்டிலே உள்ள அரசியல்வாதிகளும் மிக நன்றாக அறிவார்கள்.

ஆனால், நாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அமைத்த இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல இராஜமன்னார் குழு, அந்த குழுவினுடைய பரிந்துரைகளை இந்த அவையில் 1974ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானம் தொடர்ந்து இன்று நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில், மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு, முழுமையான சுயாட்சித் தன்மையோடு விளங்கவேண்டுமென்கிற குரல் பரவத் தொடங்கியிருக்கிறது. கர்நாடகத்தில், கேரளாவில், ஆந்திராவில், மேற்கு வங்கத்தில், அஸ்ஸாமில், அரியானாவில் என்று இப்படிப் பல்வேறு மாநிலங்களில் உருவாகியிருக்கிற, உரக்க ஒலிக்கத் தொடங்கியிருக்கிற இந்தக் குரல் எதிர்க்கட்சிகளுடைய ஆட்சிகள் இல்லாத, காங்கிரஸ் ஆட்சிகள் இருக்கிற மாநிலங்களில் கூட பரவத் தொடங்கி யிருக்கிறது.

இதைத்தான் அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள்: இந்தக் கருத்தை வைத்து உடனடியாக நான் ஒரு பெரும் போராட்டம் நடத்த விரும்பாவிட்டாலும்கூட மாநிலங்கள் அதிக உரிமை பெறவேண்டும். மாநில சுயாட்சி பெறவேண்டுமென்ற இந்தக் கருத்தைப் பரப்புகிற பணியையே ஒரு போராட்டமாக இந்தியா முழுவதும் நடத்த வேண்டுமென்று அண்ணா அவர்கள் அன்று தன்னுடைய மரணத்தறுவாயில் எழுதிய இறுதிக் கடிதத்தில் 'ஹோம் லேண்ட்' பத்திரிகையில் குறிப்பிட்டார்கள். அதையொட்டி

இன்றைக்கு இந்தியா முழுவதிலும் இந்தக் கொள்கை பரவியிருக்கிறது. அதே நேரத்தில் மாநில அரசுகள் இன்றுள்ள சூழ்நிலையில் மத்திய அரசு நிர்வாகத்தின்கீழ் இயங்க வேண்டிய இந்த நிலையில், நிர்வாக மோதல்களை, தேவையற்ற அளவிற்கு உருவாக்கிக் கொள்ளாமல், மாநில சுயாட்சிக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, நிர்வாகத்தில் மோதல் ஏற்படக் கூடாது. உறவிற்கு கை கொடுப்போம் – நிர்வாகத்தில்; அதே நேரத்தில் நம்முடைய உரிமைகளுக்குக் குரல் கொடுப்போம் என்ற அந்த மொழிக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, அன்றும் சரி, இன்றும் சரி, தன்னுடைய கொள்கைகளை வகுத்துக் கொண்டு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

இங்கே படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையானாலும், இன்றைக்கு விவாதிக்கப்பட்டு நிறைவுற்ற நிலையில் பதிலளிக்கப்படுகிற இந்தச் சூழ்நிலையானாலும் சரி, அரசியல் சட்டத்தின் பாற்பட்டு, நடைபெறுகிற செயல்களே தவிர, விரோதமான செயல்கள் அல்ல. கவர்னர் அவர்கள் கடந்த 25ஆம் தேதியன்று நிதிநிலை அறிக்கை சட்டமன்றத்திலே வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கிறார்கள், ஆணையிடுகிறார்கள். அதற்கேற்ப, அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையிலேதான் கவர்னர் குறிப்பிட்ட அந்த நாளில் நிதிநிலை அறிக்கை இங்கே படிப்பதற்கு நாங்கள் முன் வருகிறோம். நிதிநிலை அறிக்கை படிக்கப்படுகிற நேரத்திலே ஒரு குழப்பம் ஏற்படுத்தி, அந்த நிதிநிலை அறிக்கை வழங்கப்படும்போது அவைகள் கிழித்தெறியப்பட்டும், சுக்குநூறாக ஆக்கப்பட்டும் ஒரு அமளியை உருவாக்கிவிட்டு, பிறகு நிதிநிலை அறிக்கையை நான் படிக்கத் தொடங்கியபோது, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை வெளியாகிவிட்டது என்று எடுத்துச் சொல்லி, எனவே நிதியமைச்சர் ராஜினாமாச் செய்யவேண்டும் என்று கூறக்கூடிய வாய்ப்புகூட உண்டு. அதனால்தான் நிதி நிலை அறிக்கை படிக்கிற நாளில், அந்த அலுவலைத் தவிர, வேறு அலுவல் இருக்கக்கூடாது என்று ஏற்கெனவே இருந்த சபாநாயகர்கள் முடிவு எடுத்து, அரசியல் சட்டத்தின்

அடிப்படையில் வரவு–செலவுத் திட்டத்தை இந்த அவையின் முன்னால் நான் வைத்தேன்.

அன்றைக்கு நடைபெற்ற அமளி துமளிகளைப் பற்றியெல்லாம் நான் இங்கே மீண்டும் நினைவூட்டவோ, அவைகளை விரிவாகப் பேசவோ விரும்பவில்லை. ஏன் என்றால், நாங்களும் நீங்களும் சேர்ந்து மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. அதற்காகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையே தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கை தயாரிக்கப்படும்போது, நம்முடைய நிதி நிலவரங்கள், திட்டங்கள் இவைகளைப் பற்றியும் கொஞ்சம் நெஞ்சிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இந்த அறிக்கையில்கூட அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, இங்கே பேசிய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஏதோ இந்த அரசு வந்த பிறகுதான் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றவில்லை என்பதைப்போல ஒரு குற்றத்தைச் சுமத்தினார். அல்ல. நடப்பு ஆண்டு என்பது பிப்ரவரி–மார்ச் ஆகிய இந்த 2 மாதங்கள் மாத்திரமல்ல. நடப்பாண்டிலே இவைகள் மிச்ச சொச்ச மாதங்களே தவிர வேறு அல்ல. 1988–89 என்கின்ற இந்த ஆண்டு முழுவதும் குடியரசுத் தலைவருடைய ஆட்சி நடைபெற்ற ஆண்டாகும். இந்த ஆண்டிலேதான் தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்திற்கு 1,457 கோடி ரூபாய் அங்கீகாரம் கிடைத்துவிட்டது என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஏன், தேர்தல் வரப்போகிறது என்ற காரணத்தினால், தேர்தல் பிரச்சாரத்திற்காக அதைப் பயன்படுத்திக்கொள்ள, திட்டத்திற்கு 1,457 கோடி ரூபாய்க்கு அனுமதி கிடைத்துவிட்டது என்ற ஒரு போலிப் பிரச்சாரம் ஒரு மாய்மாலப் பிரச்சாரம் அன்றைக்கு நடைபெற்றது. அது குறித்து, அன்றைக்கு 13.2.1988 தினமணிப் பத்திரிக்கையில் நம்முடைய மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்கள் ஒரு செய்தி விடுத்தார்கள். 'தமிழகத்தின் வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்குமான திட்டப் பணிகளுக்கு 1,457 கோடி ரூபாய் வழங்க சம்மதித்ததற்காக பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் திட்டக் குழுவிற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் ஜி.கே. மூப்பனார் நன்றி தெரிவித்து உள்ளார்'

என்று ஒரு செய்தியும் அதைத் தொடர்ந்து அதே பத்திரிக்கையில் 'தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து, மத்திய உள்துறை துணை மந்திரி ப. சிதம்பரம் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்' என்று ஒரு செய்தியும் அதிலே வந்தது. ஆனால் உண்மை என்னவென்றால், தமிழ்நாடு அரசு கேட்டது 1,430 கோடிதான். திட்டத்திற்காகக் கேட்டதே 1,430 கோடி. ஆனால் திட்டக்குழு ஒதுக்கியது 1,457 கோடி. ஏன் என்பது உங்களுக்குப் புரியும். தேர்தல் ஆண்டு என்பதால், நீங்கள் கேட்டது 1,430 கோடியாக இருந்தாலும், நாங்கள் 1,457 கோடி ஒதுக்குகிறோம். என்று அறிவித்தார்கள். 27 கோடி ரூபாய் அதிகம் பெற்றுவிட்டோம் என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டார்கள். இதிலே திட்டத்திற்கான முழுத் தொகையும், மத்திய அரசே கொடுப்பது அல்ல, திட்டம் என்றால் திட்டத்திற்கான ஒப்புதல், அதற்குப் பெயர்தான் திட்டத்தை ஒத்துக் கொண்டோம் என்பது. அவர்கள் ஓரளவு பணம் தருவார்கள். ஒரு திட்டத்திலே மூன்றிலே ஒரு பங்குகூட மத்திய அரசினுடைய உதவி கிடைக்காது. நாம் இந்த மாநிலத்திலே உருவாக்கிக் கொள்கின்ற ரிசோர்சஸ், நிதி ஆதாரங்கள், அவைகளைக் கொண்டுதான் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் இதில் உண்மை என்னவென்றால் 1987–88 ஆம் ஆண்டைவிட, 207 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டாலும் கூட. வாக்களித்தபடி எந்த ரிசோர்சும் கவர்னர் ஆட்சியிலே திரட்டப்படவில்லை. அதனால் கவர்னர் ஆட்சியில் 1,457 கோடி என்பது, 1,202 கோடி ரூபாய் என்று திட்டம் குறைந்தது. அதற்கு 60 நாளில் பொறுப்பேற்றிருக்கிற நாம் நிச்சயமாகக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டியது குடியரசுத் தலைவருடைய ஆட்சிதான்.

அந்தக் காலத்திலேதான் 409 திட்டங்கள் கைவிடப் பட்டன. 409 திட்டங்கள் கைவிடப்பட்டும். 1987–89ஆம் ஆண்டை விட 135 கோடி ரூபாய் குறைந்துவிட்ட ஒரு நிலையும் அன்றைக்கு உருவானது. திட்டத்தைக் குறைத்தும் 1988–89 ஆம் ஆண்டு இறுதிப் பற்றாக்குறை ஏறத்தாழ 175

கோடி. இந்தச் சூழலிலே சென்ற ஆண்டுத் திட்டம் 1,202 கோடி ரூபாய் என்று இருந்ததை, நாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு டெல்லி சென்று திட்டக் குழுவோடு விவாதித்து 1,202 கோடி ரூபாய் என்று வகுக்கப்பட்டிருப்பதை, அதற்கான ஒப்புதலை 1,360 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு இந்தத் திட்டத்தை அதிகப்படுத்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே நாம் இங்கே 5,100 கோடி ரூபாய்க்கான பட்ஜெட்டைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட ஒரு பட்ஜெட்டைப் பற்றி விவாதிக்கும் போது, எவ்வளவு அக்கறையோடு, ஆர்வத்தோடு, உண்மையோடு, மக்களுடைய பிரச்சினைகளை மையமாக வைத்து நடந்துகொள்ள வேண்டும் என்கிற பொறுப்போடு உறுப்பினர்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் பூரிப்பு அடைகிறேன். உங்களையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, ஏற்கெனவே தொடங்கிய திட்டங்கள், தொடர வேண்டிய திட்டங்கள், புதுத் திட்டங்கள் ஆகியவற்றிற்காக நாம் செலவிட வேண்டியிருப்பதால் இப்போது துண்டு விழப் போகிற தொகை 65 கோடியும், கவர்னர் ஆட்சியிலே துண்டு விழுகிற தொகை 154 கோடியும் சேர்த்து 219 கோடி ரூபாய் மொத்தமாகத் துண்டு விழுகிற பட்ஜெட்டாக நாம் தரவேண்டி யிருந்தது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசை நம்பி இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற முடியாது என்று பி.எச். பாண்டியன் அவர்கள் நேற்றைக்குச் சொன்னார்கள். நம்புவது என்பது வேறு. அவர்களைத் தொடர்ந்து வலியுறுத்துவது என்பது வேறு. தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருப்போம். நம்பிக்கையோடு வலியுறுத்திக் கொண்டே இருப்போம். குடியரசுத் தலைவருடைய ஆட்சியில் ஏற்பட்ட பற்றாக் குறையைச் சரிக்கட்ட வேண்டிய பொறுப்பும் உதவ வேண்டிய கடமையும் மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தால் நம்பிக்கையோடு நாம் வற்புறுத்துவோம் என்பதை மீண்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சூழலில் வழக்கமாக மாநில அரசு மேற்கொள்ளுகிற வேளாண்மை வளர்ச்சித் திட்டம், கல்வித்திட்டம், மீன் வளர்ப்புத் திட்டம், வனவளத் திட்டம், நீர்ப்பாசனத் திட்டம், மின் இணைப்புத் திட்டம், தொழில், மக்கள் நல்வாழ்வுத் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்ற வழக்கமான திட்டங்களைச் செயல்படுத்துவதில், ஒழுங்காகச் செயல்படுத்துவதில், முனைப்பாகச் செயல்பட வேண்டிய இந்த அரசு தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படி நிறைவேற்றுகிற வகையிலேதான் ஆளுநர் உரையிலே பேசும்போது பல உறுப்பினர்கள், எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய பல உறுப்பினர்கள் கூட, தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் எங்கே, எங்கே என்றெல்லாம் கேட்டார்கள் நாம் அந்தத் தேர்தல் வாக்குறுதிகளை எந்த அளவிற்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை ஓரளவு சுருக்கமாக எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எம்.ஜி.ஆருடைய ஆட்சியில் கடன்களை ரத்து செய்திருக்கிறார். உண்மை. ஆனால் அப்படி ரத்து செய்த கடன்களுக்காக கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கட்ட வேண்டிய பாக்கித் தொகை 67 கோடி ரூபாய் இன்னமும் கட்டப்படவில்லை. அதை கட்டவேண்டிய பொறுப்பு நம்முடைய தலையிலே விழுந்து இருக்கிறது என்பதை அறிக்கையிலேயே நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன். அது மாத்திரம் அல்ல, இப்போது விவசாயிகளுக்கு இந்த அரசு அறிவித்துள்ள கடன் ரத்தின் மூலம், மேலும் ஒரு 39 கோடி ரூபாய் நாம் அந்த சொசைட்டிகளுக்குக் கட்ட வேண்டியிருக்கிறது. அதுவும் அரசுக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு சுமை. கைத்தறியாளர்களுடைய சொசைட்டிக்குக் கடந்த ஆட்சியில் ரிபேட் கொடுக்கவேண்டிய பாக்கி 3 ஆண்டுகளுக்கு 26.15 கோடி. அதையும் நாம்தான் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது. தற்போது ரிபேட்டாக சேர்க்கப்பட்டுள்ளது 15 கோடி. அதையும் நாம்தான் தரவேண்டும், இந்த ஆட்சியில். அரிசி விலையை மத்திய சர்க்கார் திடீர் என்று உயர்த்தியதால் சப்சிடி கொடுக்கிற வகையில் 23 கோடி ரூபாய் கூடுதலாக நாம் செலுத்த வேண்டியது இருக்கிறது. ஆக மொத்தம் 170 கோடி ரூபாய் ஒரு புதிய சுமை. கடந்த பல ஆட்சிதொட்டு

இன்றைக்கு மத்திய சர்க்கார் அரிசி விலையை ஏற்றிய இந்த நிலை வரையில் 170.15 கோடி ரூபாய் சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டிய கஷ்டம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கை இங்கே நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே இந்த 60 நாளிலேதான் நம்முடைய தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். நான் அவைகளை யெல்லாம் ஒரு வரியில் சொன்னால் போதும் என்று நினைக்கிறேன். சட்டமன்ற மேலவை அமைக்கின்ற தீர்மானம், மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துதல், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் உறுப்பினர் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக நீட்டித்தல், ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்களை ஓரளவு திரும்ப அளித்தல், மகளிருக்கு 30 சதவிகிதம் அரசுப் பணியில் ஒதுக்கீடு செய்தல், அரசுப் பணியில் சேர்வோருக்கு வயது வரம்பை 30 என உயர்த்துதல், விவசாயிகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தாமத நிலுவைத் தொகைக்கான அபராத வட்டியை அறவே ரத்து செய்தல், சத்துணவுக்கூட ஊழியர்களைப் பகுதி நேர நிரந்தர அலுவலர்களாக ஆக்குதல் ஆகியவை.

இந்த நிதி நிலை அறிக்கையில் பல்வேறு துறைகள் பற்றிய குறிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதி களையும் நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். விவசாயிகளுடைய பழைய கூட்டுறவுக் கடன் பாக்கி ரத்துக்காக ஏற்கனவே கட்டவேண்டிய தொகையும் சேர்த்து 106 கோடி ரூபாய்; ஆரம்பச் சுகாதார நிலையங்களை உருவாக்க 8.31 கோடி ரூபாய்; ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை அளிக்க 3.40 கோடி ரூபாய்; ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க 20 கோடி ரூபாய், ஆதிதிராவிடர்களுக்கும், மீனவர்களுக்கும் இலவச கான்கிரீட் வீடுகளைக் கட்ட 49 கோடி ரூபாய்; ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்குப் பட்டப்படிப்புவரை இலவசக் கல்வியளிக்க 2.25 கோடி ரூபாய்; ஊரகப் பகுதிகளில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தர 6 கோடி ரூபாய்; வீட்டு மனைகளை ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்க 2.35 கோடி ரூபாய்; ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த

பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வியளிக்க 50 இலட்சம் ரூபாய்; வறுமையில் உழலும் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் 8ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்துத் தேறினால் அவர்களுக்குத் திருமணச் செலவு வழங்க 6 கோடி ரூபாய்; வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கருவுற்ற மகளிருக்கு நிதியுதவிக்காக 4 கோடி ரூபாய்; விவசாயிகள் பயன்படுத்தும் பம்ப் செட்டுகள் உள்ளிட்ட விவசாயச் சாதனங்களுக்கு தற்போது விதிக்கப்பட்டு வரும் விற்பனை வரியை ரத்துச் செய்கின்ற வகையிலே வருவாய் இழப்பு 4 கோடி ரூபாய்; பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றுதலும், வணிக நல அமைப்பை ஏற்படுத்துதலும், இதற்காக வருவாய் இழப்பு 50 இலட்சம்; வணிக நல வாரியத்தை ஏற்படுத்த 2 கோடி ரூபாய் என்ற வகையிலே இந்தச் செலவினங்கள்.

ஏனைய தேர்தல் வாக்குறுதிகள் – அவைகளையும் வரிசைப் படுத்திக் கூற விரும்புகிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி ஆகிய நாட்களில் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்க 14 கோடி ரூபாய். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள எல்லாத் தாய்மார்களுக்கும், ஆடவருக்கும் ஆண்டு தோறும் இலவச கைத்தறி வேட்டி, சேலை வழங்க 27.20 கோடி ரூபாய். முதியோர் உதவித் தொகையை உச்ச வரம்பு இல்லாமல் எல்லோருக்கும் 60 வயதடைந்த அனைத்து விவசாயத் தொழிலாளிகள், அனாதைகள், ஆதரவற்ற விதவைகள் அனைவருக்கும் – இத்தனை பேருக்குத்தான் என்ற எண்ணிக்கையின்றி 35 ரூபாயை 50 ஆக உயர்த்திக் கொடுக்க சுமார் 4 லட்சம் பேர்களுக்கு 21 கோடி ரூபாய். விவசாயத் தொழிலாளர், சிறு விவசாயிகள், நெசவாளர், மீனவர், கல்லுடைப்போர், பாரம் தூக்குவோர், பளுவண்டி இழுப்போர், கைவினைஞர், கட்டிடத் தொழிலாளர் போன்ற தினக் கூலி வேலை பார்ப்போர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் குடும்பத்திற்கு 2,000 ரூபாய் வழங்குகின்ற இந்தத் திட்டத்திற்காக 5 கோடி ரூபாய்; விபத்துக்களில் கட்டிடத் தொழிலாளர்கள், லாரி, ஆட்டோ

ரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்குகின்ற திட்டம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவித்துக்கொள்கின்றேன்.

அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்திக் கொடுக்க 1 கோடி ரூபாய். மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர், புதிய வாகனங்கள் வாங்க, குறைந்த வட்டியிலே கடன்வழங்கத் திட்டம் மேற்கொள்ள 25 இலட்சம் ரூபாய். சென்னை மாநகராட்சியில் சாலைகள், துப்புரவு வசதி போன்ற வசதிகளை விரிவாக்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு அதற்காக 20 கோடி ரூபாய் செலவழிக்கப்படவிருக்கின்றது.

நம்முடைய இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய நண்பர் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அழகர்சாமி அவர்கள் பேசும்போது தர்ம சிந்தனையோடு இந்தப் பணிகளை நாம் ஆற்றுகிறோம் என்றாலும், ஏழைகளுக்காக ஏழை எளியவர்களுக்காக ஆற்றுகிறோம் என்றாலும் மக்கள் ஏழ்மையை போக்கக்கூடிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். நாங்களும் பலமுறை அந்தக் கருத்தை எடுத்துக் கூறியிருக்கின்றோம். அந்த வார்த்தைகளை மனதிலே கொண்டுதான் மக்களின் ஏழ்மையைப் போக்குவதற்கு வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், புதிய புதிய தொழில்களை உருவாக்கவும், உற்பத்தியைப் பெருக்கவுமான திட்டங்களைத் தீட்டவேண்டும் என்பதை மனதிலே கொண்டு, அது பற்றியும் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

வளர்ந்து விட்ட விஞ்ஞான உலகத்தில் மின்சாரம்தான் எல்லாவற்றிற்கும் உயிர்நாடியாக இருக்கின்றது. அந்த மின்சார உற்பத்தியிலும், அதன் தொடர்பாகத் தொழிற்துறை வளர்ச்சியிலும் அதனைக்கொண்டு வேலை வாய்ப்பினைப் பெருக்குவதிலும் குறிப்பாக, பின்தங்கிய மாவட்டங்களைத் தொழில் வளம் உள்ள இடங்களாக மாற்றுவதிலும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி அதன் மூலம் ஏழ்மையை அகற்றலாம் என்பதிலும் இந்த அரசு முயற்சிகளை மேற்

கொண்டு வருவதோடு தொழில் முயற்சிகள் பற்றித் தொழிற் துறை மானியத்தில் விரிவாக விவாதிக்கலாம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது, அவைகள் எல்லாம் மக்களிடம் போய்ச் சேரவேண்டும் என்று திரு. பூவராகன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை நான் நிதிநிலை அறிக்கையிலேயே 85வது பாராவிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இவைகள், மக்களிடத்திலே போய்ச் சேருவதற்கு வழி என்ன என்று சொல்லியிருக்கிறேன்.

இவை சரியாகப் போய்ச் சேர்வதில்லை என்பதற்கு உதாரணம் சொல்லவேண்டுமேயானால், இப்போது புதிதாக ஒரு பட்டியலைச் சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேகூட, விபத்திலே இறந்துவிடும் சில பேருக்கு நிதியுதவி செய்வதாக அறிவிக்கப்பட்டது. மரம் ஏறும் தொழிலாளி, பூச்சி மருந்து அடிக்கும் தொழிலாளி, கிணறு வெட்டும் தொழிலாளி, பனை மரம் ஏறி பதநீர் இறக்குவோர் என்று இப்படி. அதோடு சேர்த்து, இப்போது விவசாயத் தொழிலாளி, சிறு விவசாயி, சலவைத் தொழிலாளர்கள், செருப்புத் தைப்போர், தீப்பெட்டித் தொழிலாளிகள், மர வேலைப் பணியிலே ஈடுபடுவோர், கூடை முடைவோர், கல் உடைப்போர், கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியவர்களோடு, லாரி, ஆட்டோ ரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர், எல்லாக் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்திலே சிக்கி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் தரப்படும் என்று நான் இங்கே அறிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் கடந்த காலத்திலே இதிலே எல்லாருக்கும் இல்லாவிட்டாலும், சில பகுதியினருக்கு இது போன்ற விபத்து உதவி தரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. தரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. நான் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நான் பார்த்த சில செய்திகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

பெரியண்ண நாடார், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர், விபத்திலே இறந்த தேதி 5.8.1986. 1986ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 5ஆம் தேதி இறந்துவிடுகிறார். அவருக்கு உதவிக்கு ஆணை பிறப்பித்த தேதி 31.3.1989. இறந்தது 1986இல் குடும்பத்திற்கு உதவிக்காக நான் வந்து ஆணை பிறப்பிக்கிறேன். வி. செல்லையா, குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் விபத்திலே இறந்தது 27.3.1979. இப்போது நான் ஆணை பிறப்பிக்கிறேன், 31.3.1989இல். 10 ஆண்டு களுக்குப் பிறகு அந்தப் பணத்தை வாங்க யார் இருக்கிறார் களோ எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட அளவிற்குத் தான் பூவராகன் சொன்னதைப்போல, உரிய அளவில் போய்ச் சேரவில்லை.

அது மாத்திரமல்ல, பெரியார் மாவட்டத்தில் ராமசாமி நாடார், அவர் விபத்திலே இறந்தது 4.6.1984இல். அவருக்கு உதவி அளிக்கப்பட்டது இப்போது 29.3.1989இல்தான். நான் கையெழுத்திட்டு உதவிப் பணத்தை அனுப்பியிருக்கிறேன். அதைப் போல், ஏ. சுடலைமணி நாடார், அவர் விபத்திலே இறந்தது 8.5.1985இல்; அவருக்கு 16.2.1989லேதான் நாம் உதவி அளித்திருக்கிறோம். கே. அப்புக்குட்டி 21–2–1987இல் விபத்தில் இறந்தார், அவருக்கு 16.2.1989இல்தான் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. பேச்சிமுத்து 2–6–1987இல் விபத்தில் இறந்தார். இப்போது 16.2.1989லேதான் உதவி அளிக்கப் பட்டிருக்கிறது. சென்னியப்பன் 16.4.1987இல் விபத்தில் இறந்தார். அவருக்கு 16.2.1989இல்தான் உதவி அளிக்கப் பட்டிருக்கிறது. ஒரு கோப்பில் நான் இதையே எழுதினேன். நாராயணசாமி தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் விபத்திலே இறந்தது 6–12–1981இல். அவருக்கு ஆணை பிறப்பித்து மீண்டும் பணம் அனுப்பியது 3–3–1989இல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தக் கோப்பில் இதையே எழுதினேன். நான் அந்தக் கோப்பில் எழுதும்போது '1981இல் விபத்தில் மாண்டவர் குடும்பத்திற்கு 1989இல் உதவி அளிப்பது வேதனையான விசித்திரம். இது போன்றவற்றில் விரைவான நடவடிக்கைக்கு வழி வகுத்திட வேண்டும்' என்று எழுதினேன். எனவேதான் இது போன்ற நிலைமை இனிமேல் வராமல் நிச்சயமாக இந்த அரசு

பணியாற்றும். 'சொன்னதைச் செய்வோம் (மேசையைத் தட்டும் ஒலி) செய்வதையும் செவ்வனே செய்வோம்' என்று திரு. பூவராகன் போன்றவர்களுக்கும், மற்றுமுள்ள எதிர்க்கட்சி, தோழமைக்கட்சி நண்பர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் பணிகள் சீராக நடைபெற வேண்டும் என்ற ஒரு எண்ணத்தில் பல கட்சித் தோழர்களும் அதிலே உள்ள குறைபாடுகள், முறைகேடுகள் இவைகளை யெல்லாம் அறிவித்த காரணத்தால் திடீர் என்று ஒரு மாற்றம், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த மாற்றம் நல்ல மாற்றமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்ததிலே தவறு இல்லை. ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் அந்த கிராம அதிகாரிகள், மாற்றப்பட்டுப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட காரணத்தினாலே பல சிக்கல்கள் எழுந்து இருப்பதை இன்றைக்கு எங்களால் உணர முடிகிறது. அந்த அதிகாரிகள் அந்தக் கிராமத்தில் இருப்பது இல்லை. அடங்கல் போன்றவை, மற்ற கணக்கு வழக்குகள் இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள அந்த கிராமத்திலுள்ள அனுபவசாலிகள் இருந்திட வேண்டும். அவர்கள் மீது குறைகள், சிறுசிறு குறைபாடுகள் அவர்கள் பணம் கேட்கிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள், ஊழல் நடக்கிறது என்கின்ற அந்தக் குறைபாடுகளில் எல்லாம் சில பலவற்றில் உண்மை என்றாலும்கூட அது அறவே நீக்கப்பட்டுவிட்டக் காரணத்தால் கிராமப்புறத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். கிராமக் கணக்குகூட சரியாக எழுதுவதற்கு கிராமங்களில் ஆள் இல்லை, இன்னும் சொல்லப்போனால் ஜனன, மரண கணக்குகூட சரியாக எழுதப்படாத ஒரு சூழ்நிலை கிராமங்களிலே இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி அமைத்து, அதே நேரத்தில் புதிதாக இந்தப் பணியில் சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு எந்தவித மான பாதகமும் வராமல் எப்படி இதைமாற்றி அமைக்கலாம் என்பதை அறிவதற்காக முன்னாள் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி லட்சுமிகாந்தன் பாரதி அவர்களைத் தலைவராகக் கொண்டு, வருவாய்த் துறைச் செயலாளர், வருவாய்

நிர்வாகத் துறை இணை ஆணையர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அது தன்னுடைய பணியைத் தொடங்கி விரைவிலே அறிக்கையைத் தர இருக்கிறது. அந்த அறிக்கையைப் பெற்று அரசு உடனடியாக அதை ஆராய்ந்து செயல்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் மக்களின் நல்வாழ்வுக்காக அரசு செலவிடுகின்ற தொகை உரிய முறையில் அவர்களுக்குப் போய்ச் சேரவும், மனித நேயத்தோடு மருத்துவப் பணியாளர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றவும், மருத்துவ நிர்வாகங்கள் ஒழுங்கு படவும் ஆராய்ந்து அறிக்கை தர டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் தலைமையில் டாக்டர் ஏ. வேணுகோபால், டாக்டர் சாம் மோசஸ் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்கள் பல பகுதிகளுக்குச் சென்று தங்கள் பணிகளை ஆற்றி வருகிறார்கள். விரைவில் அவர்களுடைய அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அதனைப் பரிசீலித்து அதற்கு ஏற்ப மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அண்மையிலே தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்துத் தமிழக தொழில் வளர்ச்சி மேன்மை பெறவேண்டும் என்பது குறித்து நான் விவாதித்ததின் அடிப்படையில் தொழில் வளர்ச்சி குறித்து அடிக்கடி கருத்துப் பரிமாற்றங்கள் செய்துகொள்ள மாநில அளவில் தொழில் அதிபர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழு அமைத்திடவும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிலே யார், யார் இருக்க வேண்டும் என்று தேர்வு செய்து அவர்களை அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், இந்தியாவிலேயே முதன் முதலாக கழக ஆட்சியிலேதான் தமிழ்நாட்டில் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டது. அப்போது மத்திய அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தியாவிலே நடைபெற்ற அந்த முதல் முயற்சியைப் பாராட்டி அரசுக்குக்

கடிதம்கூட எழுதி இருந்தார். பாராட்டிப் பேசியதும் உண்டு. ஆனால் கடந்த காலத்தில் அந்தக் குழுவினுடைய பணிகள் சீராக அமையவில்லை. யார், யாரோ தலைவராக வந்தார்கள். எப்படி வாரியங்களுக்குத் தலைவர்களை நியமித்தார்களோ அதே போல் அந்த மாநில திட்டக்குழுவுக்கும் யார் யாரோ தலைவராக வந்தார்கள். அதனால் சீராக அதனுடைய பணிகள் நடைபெற வில்லை. எனவே அதை மீண்டும் புதுப்பித்து முதலமைச்சரே அந்த மாநிலத் திட்டக்குழுவுக்குத் தலைவராக இருப்பது என்றும், அந்த திட்டக் குழுவில் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், பொறியியல் வல்லுநருமான டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களும், விவசாயத் துறையில் உலகப் பிரசித்திப் பெற்ற விஞ்ஞானியும் முன்னாள் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவருமான, டாக்டர் எம்.எஸ். சாமிநாதனும், தமிழ்நாட்டின் தலைசிறந்த பொருளாதார நிபுணர், சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம்.எஸ். ஆதிசேஷையா அவர்களும், குஜராத் மாநில முன்னாள் தலைமைச் செயலாளர், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. எம். சிவஞானம் அவர்களும், மருத்துவக் கல்லூரி இயக்குநராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற டாக்டர் திருமதி. ரமணி சிவராமன் ஆகியோரையும் கொண்ட திட்டக் குழுவையும், அதில் முழு நேர உறுப்பினராக (Evaluation and Applied Research) வல்லுநர் திரு. சிதம்பரம் அவர்களையும் கொண்ட மாநிலத் திட்டக்குழு அமைக்கப்படுகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டக்குழு 1990–95இல் மாநிலத்திற்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் பணியினை உடனடியாகத் தொடங்கும்.

பல உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, பேசிய 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்களில் சுமார் 25 உறுப்பினர்கள், பாசனங்களைப் பற்றி, ஆறு, குளம், ஏரிகளைப் பற்றி, தங்களுடைய தொகுதிகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே முதன்மை வகிப்பவர் நம்முடைய பி.எச். பாண்டியன் அவர்கள். ஏனென்றால்,

தன்னுடைய தொகுதிக்கு ஏராளமானவற்றைச் செய்துவிட்டு, இன்னும் போதாது போதாது என்று, தெருவுக்கு, வீதிக்கு, வீட்டுக் கெல்லாம் வசதிகள் வேண்டும் – தன்னுடைய வீட்டுக்கு அல்ல – ஊரிலேயுள்ள வீடுகளுக்கு வசதிகள் வேண்டுமென்று சொன்னார். அதைப்போல் பலரும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இன்றுள்ள சூழ்நிலையில், ஆறுகள், குளங்கள், ஏரிகள் இவைகளைப் பெரும்பாலும் பயன்படுத்திவிட்டோம். இருந்த போதிலும் இன்னும் பயன்படுத்த வேண்டிய நீர் நிலைகள் இருக்கின்றன. அந்த நீர் நிலைகளின் கொள்ளளவை அதிகமாக்கி, மழைக்காலத்திலே நீரைத் தேக்குகின்ற அந்த ஆற்றல் மிகு பணிகளை எல்லாம் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, ஆறுகள், வாய்க்கால்கள், ஏரிகள், கிணறுகள், குளங்கள் போன்ற இந்தப் பாசன வசதிகளைப் பற்றித் தேர்தல் அறிக்கையிலேயும் நாங்கள் குறிப்பிட்டு இருக்கிறோம். பாசன மேம்பாடு நிலைக்குழு அமைக்கப்படும் என்று சொன்னோம். எனவே அதன்படி மத்திய பொருளாதார நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் முன்னாள் உறுப்பினராகவும், தமிழக அரசின் முன்னாள் பொதுப்பணித் துறைச் செயலாளராகவும் இருந்த ஆர். திருமலை அவர்களுடைய தலைமையில், முன்னாள் தலைமைப் பொறியாளர்களான எஸ்.பி. நமச்சிவாயம், எஸ். பஞ்சநாதம், ஏ. மோகன கிருஷ்ணன், எஸ். நாகேஸ்வர ராவ், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி. ராஜகோபாலன் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து செயலாற்றக்கூடிய ஒரு குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவின் கன்வீனராக தலைமைப் பொறியாளர் (பாசனம்), பணி புரிவார் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்தி, சீரமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 'இந்து அறநிலையத் துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழு' அமையும் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டோம். அதற்கேற்ப தவத்திரு குன்றக்குடி அடிகளார், முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார், திருவரங்கம் திருமலை

ஐயங்கார், காஞ்சி மடத்தைச் சேர்ந்த செந்தில்நாதன், திருமதி. ராதா தியாகராஜன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு 3 மாத காலத்தில் அறிக்கை தரவேண்டுமென்ற வேண்டுகோளோடு அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

தேசியமயக் கொள்கையைப் பற்றி இங்கே எதிர்க் கட்சியினுடைய உறுப்பினர் சாத்தூர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேசினார். அவர் இப்போது இல்லா விட்டாலும் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையல்லவா? எனவே நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கும்போது அதைப்பற்றி விளக்குகிறேன் என்று அன்றைக்கே குறிப்பிட்டேன். தேசியமயக் கொள்கையில், பஸ்களைப் பொறுத்து உங்களுடைய கொள்கை என்ன என்று கேட்டபோது, அப்படி இப்படி என்றார். அதற்கு எனக்கு அர்த்தம் புரியவில்லை. எங்களுடைய தேசியமயக் கொள்கை, கழக ஆட்சியினுடைய தேசியமயக் கொள்கை தெளிவானது என்பது உங்களுக்குத் தெரியும். கழக ஆட்சிக் காலத்திலே மகாலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான ஏ.பி.டி., டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அன்டு ராமன் ஆகிய இந்தப் பெரிய பஸ் நிறுவனங்களெல்லாம் தேசிய மயமாக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களாக மாற்றப்பட்டன. ஏ.பி.டி. சேரன் போக்குவரத்துக் கழகமாகவும், டி.வி.எஸ்., பாண்டியன் போக்குவரத்துக் கழகமாகவும், எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அன்டு ராமன் ஆகிய இரு நிறுவனங்களும் சோழன் போக்குவரத்துக் கழகமாகவும் மாற்றப்பட்டதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

1973இல் மாவட்ட வாரியாகப் பேருந்துகளைத் தேசிய மயமாக்குகின்ற சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது. அதன்படி முதலாவதாக நீலகிரி மாவட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. உடனடியாகப் பேருந்து அதிபர்கள் அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றார்கள். உயர்நிதிமன்றத்தில் நம்முடைய அரசுக்கு சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பேருந்து

அதிபர்கள் அப்பீல் செய்து கொண்டார்கள். அதற்கிடையில் ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது உங்களுக்குத் தெரியும். ஆக, நாங்கள் கொண்டு வந்த தேசிய மயமாக்கும் கொள்கையை எதிர்த்து, 'ஹைகோர்ட்டிலே' வழக்குப் போட்டபோது உயர்நீதிமன்றம் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்துப் பேருந்து முதலாளிகள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த நேரத்திலே கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. ஆக, கலைக்கப்பட்டதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது. அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற ஒரு வேடிக்கையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஏகப்பன் என்கிற ஒருவர் ஒரு வழித்தடத்திற்காக ஒரு அப்பீல் செய்கிறார். மதுரை – குமுளி என்ற ஒரு பெரிய வழித்தடத்திற்குத் தனக்கு உரிமை வேண்டுமென்று கேட்டு அப்பீல் செய்கிறார். அரசு அதை எதிர்க்கிறது. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. அரசு ஏகப்பன் என்ற தனி பஸ் முதலாளியினுடைய அந்தக் கோரிக்கையை எதிர்க்கிறது. அவர் 'எஸ்.டி.ஏ.டி.க்கு, செல்கிறார். அங்கே அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைக்கிறது. உடனே அரசு அதை எதிர்த்து ஹைகோர்ட்டுக்குச் செல்கிறது. ஹைகோர்ட்டிலே ஏகப்பனுக்கு சாதகமாகத் தீர்ப்பு கிடைக்கிறது. உடனே அரசு அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் ஏகப்பனுக்கு விரோதமான தீர்ப்பு; அரசுக்குச் சாதகமான தீர்ப்பு. அரசு என்ன செய்திருக்க வேண்டும்? 'ஏகப்பா; போப்பா' (சிரிப்பு) என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லவில்லை. ஏகப்பனுக்குப் பாதகமாகத் தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகும் சுப்ரீம் கோர்ட்டில் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்த பிறகும், ஏகப்பனுக்குச் சாதகமாக அந்த வழித் தடத்தைத் தருகிறது. அதற்கு எதற்காக அந்த வழக்கு? ஏன் சுப்ரீம் கோர்ட் வரையிலே போகவேண்டும்? இது ஒரு தேசியமயக் கொள்கை. இது அவர்களைப் பொறுத்த வரையிலே ஒரு தேசியமயக் கொள்கை, அவர்கள் அன்றைக்கு அதை நிறைவேற்றினார்கள்.

இதற்கிடையிலேதான் 3 பேருந்துகளை, 5 பேருந்துகள் என்று மாற்றினார்கள். அதிலும்கூட சில வழித்தடங்கள் விடப் பட்டன. அதிலே பல கட்சிக்காரர்கள்கூட 5 பஸ்கள் இருந்து

விட்டுப் போகட்டும் என்ற அந்தக் கருத்தைக்கூட இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதோடு நில்லாமல் தேசியமயக் கொள்கையினுடைய கழுத்தையே நெரித்து, அதனுடைய உயிரையே அறவே போக்குகின்ற அளவுக்கு 1987ஆம் ஆண்டு இதே மன்றத்தில் ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. அப்போது திரு. ரமணி அவர்கள் இங்கே இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) எல்லோரும் இருந்தார்கள். அதை எதிர்த்திருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் எதிர்த்திருக் கிறார்கள். இடதுசாரி மனப்பான்மை கொண்ட அத்தனை பேரும் எதிர்த்திருக்கிறார்கள். வெளிநடப்பு எல்லாம் அன்றைக்குச் செய்திருக்கிறார்கள்.

1987ஆம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்ட அந்தக் கொள்கைக்கு விரோதமாக ஒரு மசோதா, ஒரு 'அமென்ட்மென்ட்', திருத்த மசோதா இந்த அவையிலே கொண்டுவரப்பட்டது. என்ன அந்த மசோதாவின் கருத்து என்றால் தேசிய மயமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'பஸ் ரூட்' வழித்தடங்கள் உட்பட எல்லா வழித்தடங்களிலும் தனியார் வழித்தட உரிமை கோரினால் தடையின்றிக் கொடுக்கவேண்டும். இது திருத்தம். என்ன ஆவது தேசியமயமாக்கப்பட்ட கொள்கை? கேட்டால் தடையின்றிக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முன்பே சுப்ரீம் கோர்ட் ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி நிறைவேற்றியிருந்த தேசியமயக் கொள்கையை ஆதரித்து, தீர்ப்பு வழங்கிவிட்டது. இது ஒரு சமதர்மத் திட்டம். தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த இந்தத் திட்டத்தை சுப்ரீம் கோர்ட் ஏற்றுக் கொள்கிறது என்று ஆணையிட்டு, அது தீர்ப்பு அளித்துவிட்டது.

அதற்கிடையே இவர்கள் இந்த மசோதாவை, திருத்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன்பே; இந்த மசோதாவிலே காணப்படுகின்ற கருத்துக்களைச் செயலாக்கு கின்ற வகையில் எல்லாக் காரியங்களையும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பிறகு மசோதா நிறைவேற்றப் பட்டது. வழித்தடங்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டன.

தேசிய மயமாக்கப்பட்டக் கொள்கை திருத்த மசோதா இல்லாமலே சாகாமல் செத்துவிட்டது. இருந்தாலும் திருத்த மசோதாவை, அழுத்தந்திருத்தமாக நிறைவேற்றினார்கள். நிறைவேற்றப்பட்ட பிறகு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வேண்டும். ராஷ்டிரபதியினுடைய ஒப்புதல் அதற்குத் தேவை. அந்த ஒப்புதல் இதுவரை வராமலே இருந்தது.

அந்த ஒப்புதல் சில நாட்களுக்கு முன்பு வந்துவிட்டது. அந்த ஒப்புதலை இப்போது வெளியிட்டால் என்ன ஆகும்? பஸ் நேஷனலைசேஷன் என்ற கொள்கை அறவே கொல்லப்பட்டு விடும். அதற்காக இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து கையெழுத்து இட்டுவிட்டார். அந்த ஒப்புதல் சமீபத்தில் இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த ஒப்புதலோடு வந்த மசோதாவைச் சட்டமாக நாங்கள் வெளியிட்டுவிட்டால் தேசியமயக் கொள்கை அறவே ஒழிந்துவிடும் என்பதற்காக அமைச்சரவைக் கூட்டத்தை உடனே நாங்கள் கூட்டி அதில் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்றால், இந்த மசோதாவை, சட்டமாக வெளியிட வந்துள்ள ஒப்புதலை வெளியிடுவதில்லை என்று அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எப்படியோ நிலையை கெடுக்கப்பட்டுவிட்டது; தேசியமயக் கொள்கையின் நிலைமை கெடுக்கப்பட்டுவிட்டது; இதை வெளியிடாததன் மூலம் இப்போது இந்த வழித்தடங்கள் பற்றிய உரிமை தருவதும் தராததும் நம்முடைய கையிலேயே இருக்கிறது. இதனால் நமக்கு வசதிப்படும் போதெல்லாம் – இன்றைக்கு நான்காயிரம் பேர் தனியாக பஸ்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நமக்குப் பணவசதி ஏற்பட்டு இன்னின்ன வழித் தடங்களிலே பஸ்களை விடலாம் என்று எண்ணுகின்ற நேரத்தில் எல்லாம் அதை எடுத்துக் கொள்கிற அந்த வழித்தடங்களில் பஸ்களை விடுகின்ற உரிமை இதை வெளியிடாததன் மூலம் இந்த அரசு அந்த உரிமையைப் பெறுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி குறித்து இதுவரை வந்துள்ள விவரங்களின் மீது 23 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இந்த அரசு ஆணையிட்டு இருக்கிறது. உடனடியாக 25 கோடி ரூபாய் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தை ஏன் இதுவரையில் கூட்டவில்லை என்று எல்லாம் கேட்டார்கள். நாங்கள் வந்து 60 நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள்ளே 15, 16 தேதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். முதலிலேயே கூட்ட இருந்தோம். அப்போது பட்ஜெட் தயாரிக்கிற பணி மும்முரமாக இருந்த காரணத்தாலும், பல இலாக்கா அமைச்சர்களோடு கலந்து பேசி வரவு–செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான விவரங்களைச் சேகரிக்க வேண்டியிருந்த காரணத்தாலும், அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து பேச இயலாது என்பதாலும், சட்ட சபை நடைபெற்று பட்ஜெட் விவாதத்தில் இங்கிருப்பவர்கள் சொல்கிற குறைபாடுகளை எல்லாம் தொகுத்துக் குறித்து வைத்துக் கொண்டு அதன்பின் கலெக்டர்களிடத்திலே இது பற்றி எல்லாம் விவாதித்து நல்ல முடிவு எடுக்கலாம் என்பதாலும்தான் வருகிற 15, 16 தேதிகளில் மாவட்டக் கலெக்டர்களுடைய கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். அதிலே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எவ்வளவு தேவைப்படும் என்பதைத் தெரிந்து மத்திய அரசுக்கு நம்முடைய தேவையைத் தெரிவிப்போம். வறட்சி நிவாரணப் பணிகள் போர்க்கால வேகத்தில் நடைபெறும் என்பதை உறுதியாக உங்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையை தட்டும் ஒலி).

வேறு சில அறிவிப்புகளையும், வரிச் சலுகைகளையும் அறிவிப்பதற்கு முன் மகிழ்ச்சியோடு நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திரு. பொன் விஜயராகவன் அவர்கள் ஒரு கிளப் பற்றிய செய்தியை இங்கே கேட்டார்கள். நம்முடைய திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் வேட்டி கட்டிக் கொண்டு போனதைப் பற்றிச் சொன்னார்கள். நான் இந்த அவையிலேயே பதில் சொன்னேன். எனக்கு இன்று 'மெட்ராஸ் கிரிக்கெட் கிளப்லே' யிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது.

Madras Cricket Club

The Hon'ble Chief Minister of Tamil Nadu,

Fort St. George, Madras.

Sir,

Sub: Dress regulations of our Club

We are indeed sorry for the unfortunate incident involving Mr. Justice V.R. Krishna Iyer in the matter of dress regulations of our Club. In deference to your wishes and those of the hon. Members of the Legislative Assembly, we have henceforth decided to amend the existing dress regulations of the Club to enable us to extend service to persons who wear Indian dress including dhoties.

Thanking you,

(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய அறிவிப்புக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோன்று ஜிம்கானா போன்ற கிளப்களிலும் இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. அங்கேயும் இது போன்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மடல் அதற்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக அமையும் என்று நான் கருதுகிறேன். மற்றவர்கள் அதைப் பின்பற்ற வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில அறிவிப்புகளைத் தர விரும்புகிறேன். திருமயம் சட்டமன்ற உறுப்பினர் ஆலவயல் திரு. சுப்பையா அவர்கள் நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்றபோது இயற்கைச் சீற்றங்களால் குடிசைவாழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது அரசு தரப்பிலே இருந்து அளிக்கப்படும் உதவி

400 ரூபாய் மாத வருமான வரம்புக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது என்றும், இந்த வரம்பை அறவே நீக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். தற்போதுள்ள முறைப்படி தீ விபத்து வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகின்ற விபத்துக்களால் அல்லலுறுகின்ற மக்களுக்கு உதவி அளிப்பதில் வருமான வரம்பு 400 ரூபாய் என்று கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றது. இம்முறை பின்பற்றப்படுவதால், தாமதங்களும், தடங்கல்களும் ஏற்படுகின்றன. குடிசைவாழ் மக்கள் பாதிக்கக்கூடிய நேரத்தில் இனிமேல் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு வருமான வரம்பு இன்றி நிவாரணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்விச் சலுகை பெறுவதற்குப் பெற்றோர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 5,000 என்பதை ரூபாய் 12,000 ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் நலனுக்காக குடியரசுத் தலைவர் ஆட்சியிலே கல்விச் சலுகை வழங்க பெற்றோர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 12 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டது, அதை மேலும் உயர்த்தி ரூபாய் 15 ஆயிரம் என்று இந்த ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

வாகன வரி, வரவு செலவுத் திட்டத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வேன்களில் அனுமதிக்கப்படும் இருக்கை அளவினை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, இருக்கை அளவு 12 ஆக உயர்த்தப்பட்டது. அதே நேரத்தில் இருக்கை ஒன்று வரி விகிதம் ஒவ்வொரு கால ஆண்டுக்கும் ரூபாய் 150 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருக்கை அளவு 6லிருந்து 12ஆக உயர்த்தியது. இப்படிப்பட்ட ஊர்திகள் பல இன்னல்களுக்கு உட்படாமல் செயல்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்த வேன்கள் வாடகைக்கு விடப்படுவதால், வரி விகிதமும் ஒழுங்குப்படுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வரவு–செலவு அறிக்கை வெளியிட்ட பின்

வேன் உரிமையாளர்கள் வரி விகிதம் சற்று அதிகமாக இருக்கிறது என்று சொல்லி இதனால் தொழில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறதென்றும் குறிப்பாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய அருமை நண்பர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ், எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையிலே சிலரும், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் என்னைச் சந்தித்தார்கள். 'மொத்த வரிவிகிதம் 250 என்று இருந்ததை மாற்றி, இருக்கை ஒன்றுக்கு மொத்தமாக ரூ. 250 என்று இருந்ததை மாற்றி, இருக்கை ஒன்றுக்கு ரூ. 150 என்று மாற்றுவதால் மொத்தமாக வரி ரூ. 1,800க்கு உயரும்' என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

வேன்கள் ஒட்டக் கூடிய உரிமையாளர்கள் பலர் ஒரே வேனை வைத்துத் தொழில் செய்து கொண்டிருப்பதாலும் மற்றும் உள்ளூர் போக்குவரத்து பாதிக்காத அளவுக்கு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் 12 இருக்கை என்ற உச்ச வரம்பின் அடிப்படையிலே ரூ. 1,000 என்று ஒட்டு மொத்தமாக வரி விதிப்பது என்று முடிவு செய்யப்படுகிறது. அதற்கு அந்த வேன் உரிமையாளர்களும் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.

ஓட்டல் வரியைப் பற்றி இங்கு பேசப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 லட்சத்திற்கு மேல் வியாபாரம் நடக்கின்ற ஓட்டல்களுக்கும் உணவு விடுதிகளுக்கும் 5 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருப்பதைச் சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி அதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அறவே அந்த வரியை ரத்து செய்ய முடியாது. ஏனென்று சொன்னால், ஆடம்பர ஓட்டல்களில் ரூம் வாடகையிலிருந்து சாப்பாடு வரையில் அதிகக் கட்டணம் விதித்து வசூலிப்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. எனவே, ரூ. 10 லட்சத்திற்கு மேல் வியாபாரம் நடக்கும் ஓட்டல்கள், உணவு விடுதிகள் வரிவிகிதம் 5 சதவிகிதம் என்பதை மாற்றியமைத்து ஒட்டுமொத்த வரியாக, கம்பௌண்டிங் முறையில் விதிக்கலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கிறது. இதிலே விருப்பம் இல்லை என்றால் 'ஆப்ஷன்' முறையில், 5 சதவிகிதம் கட்டுபவர்கள் கட்டலாம் அல்லது 'கம்பௌண்டிங்' முறையிலே இணங்குகின்றவர்களும்

இணங்கலாம். எனவே அது குறித்து விரைவிலே பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் மின்வாரியத் திற்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை தாமதமாகக் கட்டியதற்கு விதிக்கப்பட்ட அபராத வட்டி அறவே ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த சலுகை 31.3.1989க்குள் கட்டியிருந்தால் பொருந்தும். தற்போது உறுப்பினர்கள் பலருடைய வேண்டுகோளை ஏற்று இந்தக் காலத்தை நீட்டித்துத்தர – இதனை ஏற்று 30.09.1989 வரைக்கும்; நிலுவையில் உள்ள தொகையை முழுமையாக கட்டினாலே அபராத வட்டி அறவே ரத்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்கள் மூலம் கோழிமுட்டை தருவதாகவும் 15 நாட்களுக்கு ஒருமுறை கோழிமுட்டை தருவதாகவும், பிறகு கோழிகளை வளர்ப்பதன் மூலமாக வாரத்திற்கு ஒருமுறை கோழி முட்டை தருவதாகவும் சொல்லி யிருந்தேன். இப்போது அந்தத் திட்டம் 'எம்.ஜி.ஆர். திட்டம், எம்.ஜி.ஆர். திட்டம்' என்று சொல்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் காமராசர் கொண்டு வந்த திட்டம்தான் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே விரிவாக்கப்பட்ட திட்டம். இன்னும் சொல்லப்போனால், ஜஸ்டிஸ் ஆட்சி காலத்திலே சர்.பி. தியாகராஜ செட்டியார் அவர்கள் கொண்டு வந்த திட்டம் மதிய உணவுத் திட்டம். பிறகு காமராசர் அவர்களாலே விரிவாக்கப்பட்டு, பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே விரிவாக்கப்பட்டு இப்போது நம்மால் மேலும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த கோழி முட்டைகளைத் தருகின்ற வகையில் அதற்கு ஒரு அடையாளபூர்வ சலுகை யாக கோழித் தீவனம் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற 2 சதவிகிதம் விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய நம்முடைய அன்பில் பொய்யாமொழி என்று கருதுகிறேன், அவரும் மற்றும் வேறு சில உறுப்பினர்களும், மாணவர்களுக்கு பேனாவுக்கு, பென்சிலுக்கு எல்லாம் வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள். ஆனால் இங்கிற்கு அளிக்கக் கூடாதா

என்று கேட்டார்கள். அதை ஏற்று, பேனாவுக்கு உபயோகப்படுத்துகிற இங்குக்கு மாத்திரம் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதற்காக பிரிண்டிங் இங்க், டூப்ளிகேட் இங்க், லித்தோ இங்க் இவற்றுக்கெல்லாம் நிச்சயமாக வரி விலக்குக் கிடையாது. எழுதப் பயன்படுத்துகிற பேனாவிற்கு உபயோகப்படுத்தப்படும் இங்குக்கு மாத்திரம் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

மற்றொரு முக்கியமான பிரச்சினை, இங்கே கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களால் எழுப்பப்பட்டிருக்கிறது. அது விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்தபட்ச ஊதியம் பற்றியது. இதற்காக ஏற்கெனவே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அரசுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் பற்றிய பரிந்துரையை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறது. பரிந்துரைகள் படி ஏற்கனவே இருந்த நிலை என்ன வென்றால் ஏர் மாடுகளோடு உழவுக்கு போகும் விவசாயத் தொழிலாளிக்கு முன்பு 8 ரூபாயாக இருந்தது தற்போது 32 ரூபாயாக ஆக்கப்படுகிறது. நில உடமையாளர்களுடைய ஏர் மாடு கொண்டு உழுவதற்கு ஏற்கெனவே ரூபாய் 11 என்று இருந்தது அது இப்பொழுது 16 ரூபாயாக ஆக்கப்படுகிறது. அறுவடை செய்தல், களத்திற்கு எடுத்துச் செல்லுதல், கதிர் அடித்தல், தூற்றுதல், அளவிடுதல், கட்டுதல் போன்ற தொழில் செய்யும் தொழிலாளிக்கு முன்பு ரூபாய் 11ஆக இருந்தது. அது இப்போது 16 ரூபாயாக அல்லது கண்டு முதலில் 8இல் ஒரு பங்கு இதில் எது அதிகமோ அது என்று நிர்ணயிக்கப் படுகிறது. நெல்லைத் தவிர மற்ற தானியங்கள் பயிர் செய்யும் தொழிலாளிக்கு ஏற்கெனவே 11 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 16 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. விதைத்தல், நாற்றுப்பறித்தல், நாற்று நடுதல் போன்ற விவசாயத் தொழிலாளிக்கு, 8 ரூபாய் இருந்தது இப்பொழுது 16 ரூபாய் விதைத்தலுக்கு, 15 ரூபாய் நாற்று நட, களை எடுக்க 14 ரூபாய் என்று ஆக்கப்படுகிறது. மற்றத் தொழில்களான அண்டை போடுதல், கொத்துதல், தேனி வளர்த்தல், கோழி வளர்த்தல்,

பண்ணைத் தொழில், மரம் ஏறுதல் இதற்கெல்லாம் 10 ரூபாய் என்று இருந்ததை 16 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். பண்ணை ஆளுக்கு மாதம் 210 ரூபாயாக இருந்தது இனிமேல் 375 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 1985–86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அப்போதைய ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் கவிஞர் கண்ணதாசன் நினைவாக காரைக்குடியில் ஒரு மணி மண்டபம் அவருக்காகக் கட்டப்படும் என்று அறிவித்தார்கள் – ஆனால் அறிவிப்பு அறிவிப்பாக இருக்கிறது. அண்மையில் நான் தேர்தல் நேரத்தில், நம்முடைய இராம. நாராயணன் அவர்களுக்காக காரைக்குடிக்குச் சென்றபோது என்னிடத்தில் தரப்பட்ட கோரிக்கையை ஏற்று விரைவிலே கண்ணதாசன் நினைவு மண்டபம் காரைக்குடியில் எழுப்பப்படும், என்று சொன்னேன். இந்த ஆண்டிலேயே அது ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து பணி நடைபெற்று, விரைவில் அந்த மண்டபம் – என்னுடைய நண்பருக்கு என்னிடம் ஆயிரம் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் கூட ஆரம்பத்தில் என்னுடன் பழகிய அந்த நண்பருக்காக, நல்ல கவிஞருக்காக, தமிழ் கவிஞருக்காக – அந்த மண்டபம் கட்டப்படும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இட ஒதுக்கீடுகள் பற்றி இங்கே பேசப்பட்டது. இன்னும் இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. இந்த ஒதுக்கீடு பற்றிப் பேசும்போது வன்னியர்கள் எல்லாம் எங்களுக்கு விரோதிகள் என்று சொன்னார்கள். நேற்றைக்குத் தான் நான் எண்ணிப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலே எத்தனை வன்னியர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். 24 வன்னியர்கள் தி.மு.க.வில் மட்டும் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள், அதேபோல தோழமை கட்சியிலிருந்து 4 வன்னியர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று இங்கே சொல்கிறார்கள். ஆக, அவ்வளவு வன்னியர்கள் இங்கே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் வன்னியருக்காகப்

பாடுபட்டதாகச் சொல்லும் காங்கிரஸ் கட்சியிலிருந்து எத்தனை பேர் இங்கே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோம், ஆக. அவர்கள்தான் கணக்கைச் சொல்ல வேண்டும். ஆக, வன்னியருடைய எதிரி கருணாநிதி என்று சொல்லியும்கூட, கழகம்தான் என்று சொல்லியும்கூட, 24 வன்னியர்கள் இங்கே தி.மு.க. சார்பில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். எனவே, வன்னியர் சமுதாயத்தினரையும் எங்களையும் மோத விட்டு வேடிக்கை பார்க்க யார் எண்ணினாலும் அது நடவாது. வன்னியர் சமுதாயம் மாத்திரமல்ல. தமிழ்நாட்டிலே உள்ள எந்த ஒரு சமுதாயத்துடனும் தி.மு.க.வை மோத விட முடியாது. காரணம் இது ஒரு சமுதாய இயக்கமாக இருக்கிறது. இதனுடைய அடிவேரே, ஆணி வேரே தந்தை பெரியார் அவர்களால் ஊன்றப்பட்டது. அவர்களால் அடி வேரும், ஆணி வேரும் வளர்க்கப்பட்டது. பிறகு அது செழித்து வளர்வதற்குரிய முயற்சி பேரறிஞர் அண்ணா அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, இந்த ஆணி வேரும், இந்த பெரும் தருவும் யாராலும் வீழ்த்தப்பட முடியாத சமுதாய தருவாக இருக்கிறது. முதலிலே எங்களுக்கு சமுதாயம், அடுத்து பொருளாதாரம், அடுத்துதான் அரசியல், எனவேதான் ஆட்சியைக் கலைக்கிறோம் என்று யார் யாரெல்லாமோ மிரட்டும் போதெல்லாம்கூட போனால் பரவாயில்லை. என்று நாங்கள் சொல்வதற்குக் காரணம் நாங்கள் எல்லாம் ஆரம்பத்தில், தொடக்கத்தில் அரசியலுக்காக எங்களை எல்லாம் ஒப்படைத்தவர்கள் அல்ல.

எங்களுடைய வீட்டிலே எங்கள் தாயிடத்தில் வாய்க்கரிசி போட்டுக் கொண்டு வெளியே கிளம்பும் போதெல்லாம் சமுதாயப் பணியாற்றுவதற்காக கிளம்பியவர்களே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. அதுதான் பெரியார் அவர்களுடைய, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை.

அந்தக் கொள்கைகளுக்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. எனவே எந்தச் சமுதாயத்தையும் எங்கள் மீது விரோதமாகத் தூண்டிவிட யார் எண்ணினாலும், அது நடவாது. நாங்கள் கொண்டு வந்த இந்த இட ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன்

அவர்களுக்குக்கூட கருத்து வேறுபாடு இருக்கலாம். அது ஆசையின் பாற்பட்டது. அதை அவர்கள் சொல்லித்தான் தீர வேண்டும். எனக்குத் தெரியும். சொல்லித்தான் தீரவேண்டும். இருந்தாலும் கூட திரு. சட்டநாதன் அவர்கள் அந்தச் சமுதாயத்தில் ஒரு மேதை. அவர்கள் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்து, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தக் குழுவிலே பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர் இந்த இட ஒதுக்கீட்டைப் பற்றி என்ன சொல்கிறார் என்றால், 'இந்தப் புதிய ஒதுக்கீடு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும், அதிலும் குறிப்பாக வன்னிய சமூகத்தினருக்கும் நிச்சயமாகப் பலனளிக்கும்; முதலாவது பிற்பட்டோர் கமிஷனில் நானும் இதே நோக்கங்களுக்காகத் தான் பாடுபட்டேன். அந்தக் கமிஷனில் இருந்த மற்ற இரண்டு உறுப்பினர்கள் மாற்றுக் கருத்து அளித்திருந்தார்கள், அதனால்தான் அந்தப் பரிந்துரைகளை அப்போது அரசு ஏற்காமல் விட்டுவிட்டது என்று திரு. சட்டநாதன் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. அம்பாசங்கர் அவர்களும் ஒரு குழுவின் தலைவராக இருந்து பணியாற்றியவர்கள். அவர் சொல்கிறார், 'சமுதாயத்தில் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு வந்த சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு சமூக நீதி வழங்க வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன், பிற்பட்ட வகுப்புகளுக்கு இருந்த 50 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து 20 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பிரித்து, சமுதாயத்திலே மிகுந்த நலிந்த பிரிவினருக்கு முதலமைச்சரவர்கள் வழங்கி இருக்கிறார்கள்; முதலமைச்சரின் குறிக்கோள் மிகத் தெளிவானது என்பதை இதற்காக ஒரு தனித் துறையையே உருவாக்கி, அதற்குத் தலைவராக அந்தச் சமுதாயத்தை சேர்ந்த ஒருவரையே நியமித்திருப்பதும், இந்தத் துறையை தனது பொறுப்பிலேயே வைத்திருப்பதும் தெளிவாக்குகிறது; பிற்பட்டோரில் மிகப் பெரும்பான்மையாகவுள்ள வன்னியர்கள் இந்தச் செய்கையால் பெரிதும் பயன் பெறுவார்கள் என்று அவர் சொல்கிறார். அதைப் போலவே பெரியவர் திரு. மாணிக்கவேலர், அவருடைய பாராட்டில், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கல்விக்கு

மாத்திரம் இட ஒதுக்கீடு கொடுத்தார்கள், வேலைவாய்ப்புக்கான இட ஒதுக்கீடு இல்லை; ஆனால் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கு கல்விக்கு மட்டு மல்லாமல், வேலை வாய்ப்புக்கும் இட ஒதுக்கீடு கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது என்று கூறியிருக்கிறார். மேலும் வன்னியர் உள்பட மிகவும் பிற்பட்டோருக்கும், சீர் மரபினருக்கும் 20 சதவிகிதம் இந்த அரசின் மூலமாக பள்ளி, கல்லூரிகளில் படிப்பதற்கும், அரசாங்க வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது என்று திரு. மாணிக்கவேலர் அவர்கள் கருத்து அறிவித்திருக்கிறார்கள். இந்த இட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு, அவர்கள் முன்னேற வேண்டு மென்ற அளவுக்கு ஒரு தனி இலாக்கா அமைக்கப்பட்டு விட்டது. அதனுடைய பணிகள் விரைவிலே தொடங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கிடையிலே நாம் கடந்த கவர்னர் உரையிலே 100 கோடி ரூபாய் வருமானத்திற்கான வழி வகைகளைக் கண்டோம். அதையெல்லாம் விளக்க வேண்டிய அவசியம் கிடையாது. அது எப்படி வந்தது, ஏன் வந்தது என்று நான் சொல்லவில்லை. அவர்களே சொல்லிக் கொண்டார்கள். கடந்த ஆட்சியில் இன்னின்ன வரிகள் தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தால், எக்சைஸ் வரி அறவே ரத்து செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டு ஒன்றுக்கு 20 கோடி இழப்பு ஏற்பட்டு, 7 ஆண்டுகளில் 140 கோடி இழப்பு ஏற்பட்டது என்று சொன்னபோது, அவர்களாகச் சொல்லிக் கொண்டார்கள், 'எம்.ஜி.ஆர்.ஐ – ஊழல் என்று சொல்கிறாய், என்றெல்லாம் சொல்லிக்கொண்டார்கள். அது அவர்கள் சொல்லிக்கொண்டதே தவிர, நாங்கள் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனால் நிலவரங்களைச் சொல்லும்போது, அதனால் பாதிக்கப்படுகிறவர்கள், நம்மைத் தாக்குவது தவறு. நான் நிலவரங்களைத்தான் சொல்கிறேன்.

அடுத்து, என்.ஆர்.ஐ திட்டம் என்பது ஒன்று. என்.ஆர்.ஐ. திட்டம் என்றால், அயல்நாட்டில் வாழும் இந்தியர்களை இந்தியாவில் தொழிற் திட்டங்களில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் திட்டம். இதை மத்திய அரசுகூட

ஆதரித்திருக்கிறது. அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், அவர்களை இங்கே தொழில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் திட்டம் அது. ஆனால் தொழில்வளம் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அந்தத் திட்டம் ஒரு சில தனிநபர்களுடைய சொந்த ஆதாயத்திற்காக, அன்னியச் செலாவணி மோசடி போன்றவை களுக்காக, இங்கே, இருந்து அங்கே போய், அங்கேயிருந்து இங்கே வந்து, வெள்ளைப் பணமாக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறபோது, அந்த 'என்.ஆர்.ஐ.' திட்டத்தைக் கவனிக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. அதனால்தான் இந்த அரசு மிகக் கண்காணிப்போடு நம்முடைய அதிகாரிகளைக் கொண்டு பார்த்து, நானும் இரவு பகல் விழித்து பல கோப்புகளையும் பார்த்து, நிலைமை என்ன என்று ஆராய்ந்தபோதுதான் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் பெறுமானமுள்ள, 40 கோடி ரூபாய் சொத்து, 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கு பழனி பெரியசாமி என்பவருக்கு பல்லவா ஓட்டல் கார்ப்பரேஷன் கட்டுவதற்குத் தரப்பட்டிருக்கிறது.

அதிலே எல்லோரும், தொடர்புடைய அமைச்சர்கள் எல்லோரும் கையெழுத்துப் போட்டார்கள். கடைசியாக யார் கையெழுத்துப் போடவேண்டுமோ அவர் உட்பட அத்தனை பேரும் கையெழுத்துப் போட்டார்கள். யார் யார் இந்தத் திட்டத்திற்கு வருகிறீர்கள் என்று டெண்டர் விடப்படவில்லை. அதற்கு பப்ளிசிடி கிடையாது. இப்படிப்பட்ட ஜாயின்ட் செக்டாருக்கு யாராவது அயல் நாடுகளிலே வாழ்கிற இந்தியர்கள் – என்.ஆர்.ஐ. பர்சன்ஸ் வருகிறீர்களா என்று ஒய்டு பப்ளிசிடி எதுவும் கொடுக்கப்படாமலேயே பழனி பெரியசாமி என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம். அதை ஒன்றே முக்கால் கோடி ரூபாய் என்று குறைந்த மதிப்பீடு செய்து அந்தத் தொகையைக் கூட அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளாமலேயே, அதையும் அரசாங்கத்தினுடைய ஷேர் ஆக அந்தக் கூட்டுத் துறை முயற்சிக்குப் போட்டு, 40 கோடி ரூபாய் சொத்தைக் கொடுத்தது. இந்த 40 கோடி ரூபாய் தனி நபருக்குப் போவதை, இந்த அரசு பொறுப்பேற்றதும் தடுத்து நிறுத்தி 40

கோடி ரூபாய் சொத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையை தட்டும் ஒலி).

அது மாத்திரமல்ல, நான் அப்போதே சொன்னேன், பைல்கள் அணிவகுக்கும் என்று. இன்னும் தொடர்ந்து அணிவகுக்கும்; இன்றைக்குச் சில அணிவகுக்கின்றன. மாமல்ல புரத்திலே ஒரு முறைகேடு. மாமல்லபுரத்திலே அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு ஓட்டலை லாபத்திலே நடத்தி வந்தது. ஆண்டொன்றுக்கு ரூ. 1 லட்சம் அல்லது 1½ லட்சம் லாபம் பெற்று வந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான அந்த ஓட்டலை ஒரு ஜாயின்ட் செக்டார் கூட்டு நிறுவனம் – என்ற பெயரிலே மாற்றினார்கள். அதற்கு ஒரு ஆளைப் பிடித்தார்கள். அதற்கு பப்ளிசிடி கொடுத்தல்ல. அவர் பெயர் என்ன தெரியுமா? 'மோகன் ராவ் தண்டமுடி' (பணமே தண்டமாகப் போகிறதல்லவா ஆகவே தண்டமுடி). மோகன்ராவ் தண்டமுடி என்பது அவர் பெயர். அவர் அந்நிய நாட்டில் வெளிநாட்டிலே வாழ்கிற இந்தியராம். கோடம்பாக்கத்தில்தான் இருக்கிறார் அவர்! (பலத்த சிரிப்பு). அந்த மோகன்ராவ் தண்டமுடிக்கு– என்.ஆர்.ஐ. திட்டத்தின் அடிப்படையில் அந்த ஓட்டலை ஒப்படைக்கக் கடந்த அரசு முடிவு செய்தது. அந்த ஓட்டலுடைய மதிப்பு என்ன தெரியுமா? அதிகாரிகளுடைய குழு மதிப்பீட்டின்படி 1 கோடியே 60 லட்சம் ரூபாய். மாமல்லபுரத்திலே இருக்கிற நம் டூரிஸ்ட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ஓட்டலின் மதிப்பு அதிகாரிகள் போட்ட மதிப்புப்படி 1 கோடியே 60 லட்சம் ரூபாய். அதற்குப் பொதுப் பணித்துறை பரிந்துரை செய்தது. ரூ. 93 லட்சம். ஆனால் அரசாங்கம் இந்த 93 லட்சத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை; 1 கோடியே 60 லட்சத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை; அந்தக் கூட்டுத் துறை நிறுவனத்திற்கு இவர்கள் போட்ட சொத்து மதிப்பு ரூபாய் 56.44 லட்சம்! கடந்த ஆட்சியில் இந்த அளவுக்கு மதிப்பிடப்பட்டு அவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டது. ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவுக்குத் தொகை குறைத்து மதிப்பிடப்பட்டு, கொடுக்கப்பட்டுவிட்டது. அதாவது இந்த ரூ. 56 லட்சத்திலும், ரூ. 52 லட்சம் அரசாங்கத்தின் முதலீட்டுக்காக

சரி செய்து கொண்டு மீதியுள்ள 4 லட்சம் ரூபாயை அரசாங்கம் அந்தக் கூட்டுத் துறை நிறுவனத்திற்குக் கடனாக வழங்கி ஆணை பிறப்பித்தது. இந்த சுற்றுலாத் திட்டம் இலாபகரமாக நடக்க வாய்ப்பு உள்ளதா என்று ஆய்வு செய்து முடிவெடுப்பதற்கு முன்பாகவே என்.ஆர்.ஐ. காரர்கள் தங்கள் பங்கு முதலீட்டைச் செலுத்துவதற்கு முன்பாகவே, தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்குச் சொந்தமான சொத்துக்களை, குத்தகை அடிப்படையிலே அந்த மோகன்ராவ் தண்டமுடிக்கு மாற்றிவிட்டார்கள். எதுவும் நடக்கவில்லை, அந்த நிறுவனம் சரியாக நடக்குமா என்று ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கவில்லை. அவர் தன்னுடைய பங்குத் தொகையை முழுவதுமாகச் செலுத்தவுமில்லை. அதற்குள் மோகன்ராவ் தண்டமுடிக்கு எல்லாப் பொறுப்புகளையும் மாற்றிவிட்டார்கள். இது குறித்து அக்கவுண்டன்ட் ஜெனரல் பலமான ஆட்சேபணைகள் பலவற்றை எழுப்பினார். அதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. யார் ஆட்சேபணை எழுப்பினாலும் கவலைப்படாத அரசு, எனவே இதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அப்போது பல புகார்கள் வந்தன.

அப்போது கவர்னர் ஆட்சி நடந்தது. கவர்னர் என்ன பண்ணினார் தெரியுமா? அதிகாரிகள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை நியமித்தார். உடனே மூப்பனார் அவர்கள் சொல்லக் கூடும். நாங்கள்தானே முதல் கல்லை எடுத்தோம். அதற்குப் பிறகுதானே கருணாநிதி ஊழலைக் கண்டுபிடித்தார் என்று சொல்லலாம். கல் எடுத்தவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. கல்லை எடுத்ததோடு சரி. அந்த அதிகாரிகள் குழு என்ன செய்தது என்றால் சுற்றுலாத் துறையின் சொத்து மதிப்பு 1 கோடியே 60 லட்சம் என்ற மதிப்பிட்டது. கவர்னர் ஆட்சியிலே 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு என்.ஆர்.ஐ. மோகன்ராவ் தண்டமுடி முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் குறைத்துக் கொடுக்க இப்படி ஒரு ஏற்பாடு என்பதும் தெரிய வந்தது. அதைக் குறைத்து மதிப்பிடுவதற்குக் காரணம் அவர் முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் குறைத்துக் கொடுக்க இந்த ஏற்பாடு! எனவே நம் அரசு அந்த அறிக்கையைப் பார்த்து சில உண்மைகளைப் புரிந்து கொண்டது. விலை உயர்ந்த பொது சொத்துக்களைப்

புரிந்து கொண்டது. விலை உயர்ந்த பொது சொத்துக்களை மிகக் குறைவாக மதிப்பீடு செய்து அவசரம் அவசரமாக தனியாரின் பொறுப்புக்கு மாற்றி முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் குத்தகை என்ற அடிப்படையிலே தனியாருக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்ட திட்டம், அரசின் பொது சொத்தையே மூல தனமாகக் கொண்டு தனியாருக்குச் சாதகமாக அமைக்கப்பட்டதிலிருந்து, பொது நலனைவிட தனி நலனே மேலோங்கி நிற்கிறது. இவ்வாறு சரியான நெறிமுறைகளைப் பின்பற்றாமல் எடுக்கப்பட்ட ஒரு முடிவின் பயனாக, மாமல்லபுரம் சுற்றுலா மையத்தில் பணியாற்றி வந்த 100 பணியாளர்களைத் தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகமே திரும்பப்பெற வேண்டிய நிலைமையும், அதனால் சுற்றுலாத் துறைக்கு கூடுதல் செலவும் ஏற்பட்டுவிட்டது. எனவே உண்மையான சுற்றுலா வளர்ச்சி நோக்கத்தோடு இந்தத் திட்டமும் உருவாக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டு அரசுக்குச் சொந்தமான விலை உயர்ந்த சொத்துக்களை மீண்டும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே திரும்பப்பெற்று நடத்த வேண்டுமென்று அரசு இப்போது ஆணையிட்டு இருக்கிறது. இது ஒன்று.

அடுத்ததாக, சென்னை – திருவான்மியூர் – மகாபலிபுரம் கடற்கரைச் சாலையில் உள்ள திருவிடந்தை கிராமத்தில் இதே மோகன்ராவ் தண்டமுடி அவரோடு ஒரு கூட்டுத்துறைத் திட்டம் ஒன்று இதற்கு 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அப்போது எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் நோய்வாய்ப்பட்டு இருக்கிறார்; 1985இல் திரும்பி வந்து அவர் கையெழுத்துப் போடுகிறார்; 1985லே அதே டேட்டிலே நான் அந்தப் பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை, கையெழுத்தை மட்டும் சொல்கிறேன். இந்தத் திட்டத்திற்கு நிலம் எங்கே பிடித்தார்கள் தெரியுமா? திருவிடந்தை கிராமத்திலுள்ள அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான 299 ஏக்கர் நிலத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டது. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது மாதிரி அருள்மிகு

நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டது. இதற்கு செங்கை–அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவர் இருந்தார், உங்களுக்கு தெரியும் அவர் யார் என்று அவர் இந்த நிலத்துக்கு மதிப்பீடு என்ன செய்தார் தெரியுமா, வேண்டுமென்றல்ல, ஏக்கர் ஒன்றுக்கு பத்து ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிட்டார். அவர் சொன்னதைச் செய்தார். அந்த ஆலய தக்கார், ஏக்கர் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார். அந்த நிலங்களின் அரசாங்க மதிப்பீடு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய். எனவே மொத்த மதிப்பீடு 3 கோடி ரூபாய் ஆகிறது. ஆனால் இந்த 3 கோடி ரூபாய் நிலத்தை, அதுவும் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்து மோகன்ராவ் தண்டமுடிக்குக் கொடுக்க ஆணை வெளியிடப்பட்டது. அதில் அடி முதல் நுனி வரையிலுள்ள அனைவரும் கையெழுத்திட்டார்கள். இந்த அரசு இப்போது அந்த ஆணையை ரத்துச் செய்து. ஆலயத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயப் பொறுப்பிலிருந்து போய்விடாமல் 31 மார்ச்சு 1989இல் உத்திரவு போட்டுள்ளது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, திருவான்மியூர் – மகாபலிபுரம் சாலையிலுள்ள மற்றொரு இடம். அதற்குப் பெயர் முட்டுக்காடு, அங்கே, கழக ஆட்சியில் ஊனமுற்றவர்களுக்கு ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும். அங்கேயும் இதே தண்டமுடி வந்துவிடுகிறார். இதே 1984ஆம் வருடம் டிசம்பர் 3ஆம் தேதி ஆணை எண். 585, அரசாங்க நிலம் சுமார் 50 ஏக்கர். இந்த 50 ஏக்கர் நிலத்திற்கு செங்கை–அண்ணா மாவட்ட வருவாய் அதிகாரி பரிந்துரை செய்தது மொத்த மதிப்பு 6 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய். அவர் பரிந்துரை செய்தது 50 ஏக்கருக்கு. அப்போதே அதனுடைய மதிப்பு 70 லட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும். இது சம்பந்தமாகவும் அரசாணை இப்போது பிறப்பிக்கப்பட்டு அதையும் ரத்து செய்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதையெல்லாம்விட இன்னொரு அநியாயம் வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே இதே மோகன்ராவ் தண்டமுடியோடு இணைந்து தமிழ்நாடு சுற்றுலாத் துறை, கூட்டுத் துறையில் ஒரு திட்டம் வகுத்து, 83 கிரவுண்ட் நிலத்தில், நட்சத்திர ஹோட்டலும் வணிக வளாகமும் அமைக்க 1984 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை என். 625. அதிலுள்ள கையெழுத்துப் போட வேண்டியவர்கள் எல்லாம் போட்டு விட்டார்கள். மேற்படி நிலம் கிரவுண்ட் 1.5 லட்சம் ரூபாய் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்பிட்டார். ஆனால் நில நிர்வாக ஆணையர், கிரவுண்ட் ஒன்றுக்கு 2.33 லட்சம் என்று மதிப்பிட்டார். ஆனால் அரசு மதிப்பீடு கிரவுண்ட் ஒன்றுக்கு 3.5 இலட்சம். இதன்படி நிலத்தின் மொத்த மதிப்பு சுமார் 3 கோடி ஆகும். இந்தத் திட்டம் குறித்து இந்த அரசு இப்பொழுது ஆராய்ந்தது. இது தொடர்பான திட்ட அறிக்கை இதுவரையில் அரசுக்குத் தரப்படவில்லை. வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள இடம் பூங்கா போன்ற பொது நோக்கத்திற்காக ஒதுக்கப் பட்டது. அதை வணிகப் பகுதியாக மாற்ற எம்.எம்.டி.ஏ. அனுமதித்து ஆணை எதுவும் பிறப்பிக்கவும் இல்லை.

நான் குறிப்பிட்ட திருவிடந்தை, முட்டுக்காடு, வள்ளுவர் கோட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களுக்கும் அனுமதி அளித்து அரசு ஆணைகள் 1984ஆம் ஆண்டு டிசம்பரிலே பிறப்பிக்கப்பட்டு, 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலமைச்சருடைய ஒப்புதலும் பெறப்பட்டிருக்கிறது. பிசினஸ் ரூல்ஸ் (அலுவலக நடைமுறை) 2வது அட்டவணை சட்டம் 8 மற்றும் 14இன் படி இது போன்ற கொள்கை முடிவுகள் அமைச்சரவையில் விவாதித்து முடிவெடுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் இந்த இனங்களில் அவ்வாறு செய்யப்படவே இல்லை. இதையெல்லாம் கருத்திற்கொண்டு இந்த முடிவுகளையெல்லாம் அரசு மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டங்களின் தொடர்பான மூன்று அரசு ஆணைகளையும் ரத்து செய்து இதன் மூலம் ஏழரைக் கோடி ரூபாயை மீட்டு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரம் அதிகமாகிவிட்டது. இன்னும் பல நிதித் துறை தொடர்பான பல்வேறு மானியங்கள் இருக்கின்றன. ஆகவே இதையெல்லாம் பற்றி பல அமைச்சர்கள் கொள்கை விளக்கங்களைத் தர இருக்கின்றார்கள். நீங்கள் பேச இருக்கின்றீர்கள். இருந்தாலும் ஒன்றே ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஏன் இங்கிருந்து வெளியேறினார்கள் என்று தெரியவில்லை. வெளியேற வேண்டுமென்றே வந்தார்கள். அ.தி.மு.க.வினர் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் வெளியேறியதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

காலையிலே நண்பர் குமரி அனந்தன் அவர்கள் கடலூரில் நடைபெற்ற ஒரு சம்பவம் பற்றிச் சொன்னார்கள். நான் அது பற்றி உடனடியாக விசாரித்தேன். அது தனிப்பட்ட தகராறு என்றும் சொல்லப்பட்டது; கட்சித் தகராறு என்றும் சொல்லப் பட்டது. சரியான விளக்கம் வரவில்லை.

நம்முடைய ரமணி மற்றும் நம்முடைய நூர் முகமது இவர்களெல்லாம்கூட கன்னியாகுமரி சம்பவம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அங்கும் கொலைதான் நடைபெற்றது. பத்து நாள் காத்திருந்து, எனக்கு விவரம் கிடைத்த பிறகுதான் அதை இங்கே ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு பேசப்பட்டது.

திரு. குமரி அனந்தன் இன்று காலை ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு உடனே அவையை ஒத்தி வைத்துப் பேச வேண்டுமென்று சொல்லும்போது, அது இயலாத காரியம், நாளைக்கு நான் அதைப்பற்றி விவரமறிந்து பேசுகிறேன். நாளைக்கு இதை அட்ஜர்ன்மெண்ட் மோஷனாகக் கொடுங்கள் என்று சொன்னேன். அதையும் கேட்காமல் அவர்கள் வெளியேறி விட்டார்கள். அதற்காக நான் மிகுந்த வருத்தப்படுகிறேன்.

வெளியேறுவதற்கென்றே வருகின்றவர்கள் சில பேர். திடீர் என்று வெளியேறிவிட்டவர்கள் சில பேர். அந்த முறையிலே வெளியேறிவிட்ட காங்கிரஸ் நண்பர்களுக்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள்

ஒரு புதிய உறவை இன்றைக்கு வளர்த்துக் கொண்டு அதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்தி விடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைக்கு நான் ஒரு செய்தியைப் படித்தேன். ஒரு பெண் துணி துவைத்த ஒரு பெண், துவைத்த துணிகளை யெல்லாம் பிழிவதற்காகத் தன் கையிலெடுத்து முறுக்கிய பொழுது அவருக்கும் தெரியாமல் அந்தத் துணிகளுக்குள்ளே ஒரு பாம்பு இருந்து கையைத் தீண்டி அந்தப் பெண் இறந்துவிட்டாள் என்று ஒரு செய்தி வந்தது. காங்கிரஸ் காரர்களே, துணியைப் பிழியும்போது உள்ளே பாம்பு இருப்பதைப் பார்க்காமல் பிழியாதீர்கள் என்று மாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு இந்த நிதிநிலை மீது தரப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுக்கும் நன்றி கூறி இந்த அளவில் அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவ ருடைய அனுமதியோடு திரு. கே. ரமணி அவர்கள்.

திரு. கே. ரமணி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பசி கொஞ்சம் குறைந்திருக்கிறது. தலைவரவர்களே சென்ற பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி இந்த மன்றத்தில் நமது முதலமைச்சரவர்கள் மாநகராட்சித் தேர்தலைப் பற்றிச் சொல்லும்பொழுது 18 வயது ஆனவர்களுக்கு ஓட்டு வேண்டும். உரிமை வேண்டும். அதைக் கொடுக்கக் கூடிய முறையில் இந்தத் தேர்தலைக் கொஞ்சம் தள்ளி வைத்துக்கூட அந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று நாங்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் களும், மற்ற பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மற்ற நண்பர் களும் இங்கே பேசினார்கள். அப்பொழுது அவர்கள் ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட்டார்கள். ஓட்டர் பட்டியல் தயாராகிக் கொண்டிருக்கிறது, உடனடியாக மாநகராட்சித் தேர்தல் நடத்த வேண்டுமென்பதற்காக, நீண்ட காலம் ஒத்தி வைக்கப்பட்டது, இனி அவ்வாறு இருக்கக்கூடாது என்பதற்காக இதைக் கொண்டு வருகிறோம், இத்தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு முடிவடைவதற்குள், 18 வயதுக்கான ஓட்டர் பட்டியல் நாடு முழுவதற்கும் மத்திய சர்க்கார் உத்தரவிட்டு

தயாராகிக் கொண்டிருக்கிறது. அது தயாராகி வருமேயானால் இந்த நிதி நிலை அறிக்கை இப்பொழுது நாம் விவாதித்து அவர் நமக்குப் பதில் கொடுத்திருக்கும்படியான இந்த அறிக்கை விவாதத்திற்கு வரக்கூடிய இந்தக் கூட்டத்தில் அந்தச் சட்டம் வருமேயானால் அந்த ஓட்டர் பட்டியல் தயாராகி முடிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் ஒரு சட்டத் திருத்தத்தையாவது கொண்டு வந்து 18 வயது அடிப்படை யிலேயே தேர்தல் நடத்தலாம் என்று கூறப்பட்டது. இப்போது முஸ்லீம்கள் மத்தியில் அவர்களுடைய நோன்பு காலம் எல்லாம் இருப்பதையொட்டி இதை ஒத்தி வைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆகவே மறுபடியும் இந்தத் தேர்தலை ஜூன் மாதத்தில் நடத்துகிற அளவிற்கு ஒத்திவைத்து – அதற்குள்ளாக நிச்சயமாக ஓட்டர் பட்டியல் முடிந்து விடுமென்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் அந்த வேலை துரிதமாக கீழே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 18 வயது ஓட்டர் பட்டியல் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கு கொஞ்சம் ஜூன் மாதம் வரையில் ஒத்திவைத்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையை நானும் எழுப்பி அவர்களுக்கு ஆதரவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கனவே கேட்டுக்கொண்டதைப்போல, இப்போது அரசின் நிலையென்ன என்று அறிவிப்பதுதான் முறையாக இருக்கும். ஏனென்றால் தேர்தலை குறித்து ஆயத்தங்களைச் செய்யக் கூடியவர்கள் செய்யமுடியும். எனவே அதனை அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு வேண்டுகோள். தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி போன்ற நாட்களில் வழங்கப்படுகிற சலுகைகளை ரம்ஜானிற்கும் வழங்க வேண்டும் என்று எங்கள் சார்பாக வேண்டுகோள் வைக்கப்பட்டது. எனவே, தீபாவளிக்கும், தமிழ்ப் புத்தாண்டிற்கும் வழங்கப்படுகிற சலுகைகள் ரம்ஜானிற்கும், கிறிஸ்துமஸ்ஸிற்கும் சேர்த்து வழங்கினால் அது முறையாக இருக்கும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ரம்ஜான் என்பது பட்டினி கிடக்க வேண்டிய நாள். எனக்குத் தெரிந்தது கூட இஸ்லாமிய சகோதரர் அவர்களுக்குத் தெரியவில்லையே... (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, அந்த மாதம் நோன்பு வைத்து ரம்ஜான் திருநாள் வருகிறது. எனவே, அந்த ரம்ஜான் திருநாள் என்பது அதிகமாகச் சாப்பிடக் கூடிய நாள். ஆகவே, அந்த வாய்ப்பை கிறிஸ்துமஸ்ஸிற்கும், ரம்ஜானிற்கும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதிகமாகச் சாப்பிடுகிற காரணத்தால்தான் ஏற்படுத்த முடியுமா என்று யோசிக்கிறோம். (சிரிப்பு).

தலைவர் அவர்களே, நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 18 வயது வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென்ற கருத்திலே இங்கே கருத்துப் பரிமாற்றம் நடைபெற்று வாக்கெடுப்பு நடைபெற்றபோதுகூட அவர்கள் இதில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்து அவர்களுடைய எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். எனவே இந்த 18 வயது உள்ளவர்கள் வாக்களிக்கவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். விரைவில் 18 வயது வாக்காளர் களுடைய பட்டியல் பூர்த்தி அடைந்து விடுமானால் இன்றைக்குக் கொண்டு வருகிற சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து உடனடியாக இரண்டு மாதத்திற்குள் தேர்தல் நடத்த முடியுமென்றால், நடத்துவதாக நான் சொல்லியிருக்கிறேன். 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் 23.5.1989க்குள் அதாவது மே மாதத்திற்குள் முடிந்துவிடுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவே, மே மாதத்திற்குள் முடிந்து விடுமென்கிற கருத்து இருக்கிறது. அதே நேரத்தில், மே மாதம் 12 ஆம் தேதியன்று தேர்தலை நடத்துவது என்பது இயலாது. ரம்ஜான் பண்டிகை இருக்கிற காரணத்தால் வாக்கு சேகரிக்க, பிரச்சாரம் செய்ய இயலாது என்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பிலும், வெளியே உள்ள மற்ற முஸ்லீம் இயக்கங்களின்

சார்பிலும் கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. எனவே, அவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரைவில் இந்த 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் முடிந்து விடுமென்ற தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால், மே மாதத்தில் முடிந்து விடுமென்ற தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால், 18 வயது வாக்காளர்களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும். விரைவில் ஜூன், ஜூலையில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை...

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது எங்களுடைய கட்சியின் சார்பாக பேசும்போது பல்வேறு துறைகள் குறித்துச் சொல்லப் பட்டிருந்தும். தொழிலாளர் நலன் சம்பந்தமாக ஒன்றும் இல்லையென்று குறைபட்டுக் கொண்டோம். அது சம்பந்தமாக கடந்த காலத்தில் வேறு விதமாக நடந்திருக்கிறது. எனவே அது சம்பந்தமாக ஏதாவது விளக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கை வரும்போது அது பற்றி விளக்கமாகப் பேசலாம்.

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, நீண்ட நேரம் நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்த உரைக்கு நாங்கள் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். அவர்கள் முதலாவதாக இந்த வரவு–செலவுத் திட்டம் ஆரம்பித்த போதும் சரி, அதற்கு பதில் உரை அளிக்கின்றபோதும் சரி, தொல்லை கொடுக்கவேண்டும் என்று முன் கூட்டியே முடிவு செய்து தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இது கண்டிக்கத்தக்க ஒன்று. இந்தச் சமயத்தை நான் அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. வன்னியர்களுக்கு 20 சதவீதம், 30 சதவீதம் வேண்டும் என்று சொன்னதற்கு, அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் என்று என்னைப் பற்றிச் சொன்னார்கள். நான் அப்போதே சொன்னேன். வாதத்திற்குச் சொல்லவில்லை.

முதலமைச்சர் அவர்களுக்கு நியாயத்தைத்தான் நான் எடுத்து வைக்கிறேன். இரு பெரும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, ஒருவருக்கு 20 சதவீதம் என்றும் இன்னொரு பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு 30 சதவீதம் என்றும் இருப்பது குறித்து இந்த நேரத்திலே பசிவேளையாக இருக்கிறது. கடைசி வகுப்பு நடத்துகின்ற ஆசிரியருடைய நிலையைப் போன்று இருக்கிறது முதல்வர் அவர்களுக்கு. எனவே நான் நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை – அவர்கள் ஆர அமர யோசித்து, ஒரு நல்ல முடிவிற்கு, இந்தச் சட்டமன்றம் இருக்கின்ற சமயத்திலே சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். இப்போதே சொல்லவேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விரைவில், அட்மிசன், வேலை வாய்ப்புகள் போன்ற விஷயங்கள் எல்லாம் வருகின்றன, ஜூலை மாதத்தில், அதற்குப் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சிலும் சரி, பட்ஜெட் விவாத உரையிலும் சரி, நமது இன்றைய தமிழக முதல்வர் அவர்கள், அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோது, சிவகங்கையை மையமாகக் கொண்டு இயங்குகிற பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்பதை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவிப்பேன் என்று அவர்கள் சொன்னதை மீண்டும் மீண்டும் இருமுறை வலியுறுத்தி இந்தச் சபையில் பேசியிருக்கிறேன். நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன். இதை அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஜாதிப் பெயர்கள் இருக்கக்கூடாது, பட்டப் பெயர்களாக என்பது ஒரு கொள்கை. இருந்தாலும் சில நேரங்களில் ஜாதிப் பெயர்களே சிலருடைய பெயர்களாக இருக்கின்றன. நாத்திக இயக்கம் என்று தங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிற கம்யூனிட்டு இயக்கத்திலே கூட ஏ.எஸ்.கே.

ஐயங்கார் என்று சொன்னால்தான் புரியும். அந்த ஜாதிப் பெயரைச் சொல்ல வேண்டியிருந்தது. அதே போல ஜி.டி. நாயுடு என்று சொன்னால்தான் புரியும். அதேபோல ஜி. டி. ஏன் வருகிறார் என்று சொன்னால் புரியாது. ஜாதிப் பெயர்களை மாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, சென்னையிலே கூட நுங்கம்பாக்கத்தில் குட்டி மேஸ்திரி தெருவில் மேஸ்திரியை அழித்துவிட்டார்கள். இது இப்போது குட்டித் தெரு என்று இருக்கிறது. சைதாப்பேட்டையில் குயவர் தெருவில் குயவரை அழித்துவிட்டார்கள். வெறும் தெரு என்றிருக்கிறது. அதே போல், பூங்கா நகரில், நான் பேசிய ஒரு பொதுக் கூட்டத்திற்கு எதிரில் அண்ணா பிள்ளை தெரு என்று ஒரு தெரு இருந்தது. அதிலே பிள்ளை என்ற எழுத்தை அழித்துவிட்டார்கள். நான் பேசும்போது சொன்னேன். அண்ணாவிற்கு தமிழ்நாட்டிலே ஆயிரம் தெருக்கள் இருக்கின்றன. அண்ணா பிள்ளைக்கு ஒரே ஒரு தெருதான் இருந்தது. அதையும் கொடுத்து விட்டீர்களே என்று சொன்னேன். அதனால் சில பெயர்களை ஜாதியின் பெயரால் குறிப்பிடும் போதுதான் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, என்னதான் சொன்னாலும் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று சொன்னால், அது தேவர் திருமகனைக் குறிப்பிடாது என்ற காரணத்தால் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று அந்த மாவட்டத்திற்கு பெயர் அழைக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி.)

உரை : 24 நாள் : 28.3.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, திரு. வீராசாமியைப் பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில் * அதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அரிசி பேரத்திலே சம்பந்தப்பட்டதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா பொது மேடைகளிலே பேசி அது பத்திரிகையிலே வந்து 6 கோடிரூபாய் ஊழல் என்று வந்து, இப்படிப்பட்ட அவதூறுகள் வருகிற நேரத்திலே இது சுதந்திரமா. இது அடக்குமுறை அல்லவா என்றெல்லாம் யாரையும் கேட்கக் கூடாது. அவரவர்கள் தாங்கள் நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ள நீதிமன்றத்தின் துணையை நாடவேண்டியிருக்கிறது. அதன்படி அரசின் சார்பிலே செல்வி ஜெயலலிதா மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலே அவர்கள் அதை விளக்கி இருக்கிறார்கள். உண்மையிலேயே பேரம் நடந்ததா இல்லையா என்பதை நீதிமன்றம் சொல்ல இருக்கிறது. எனவே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கும்போது. திரு. வீராசாமி* என்று சொன்ன அந்தச் சொற்களை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும். நீதிமன்றத்திலே இருக்கிற எந்த வழக்குத் தொடர்பாகவும் பொதுவாகவே பேசுவதே கூடாது. எனவே அமைச்சர் தொடர்பான அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நான் மணியை அடிக்காமலேயே உங்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறேன். நீங்களும் அதை மதித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இருக்கிறீர்கள். முடித்தால் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, உங்களுக்கு நான் உதவியாக இருக்கிறேன். வழக்கில் சம்பந்தப் பட்டார் என்று மட்டும் சொல்கிறேன். குற்றச்சாட்டு பின்னால் நிரூபிக்கப்பட்டால் பேசிக்கொள்ளலாம்.

இங்கே மாண்புமிகு திரு. சீனிவாசன் ஒன்றைச் சொன்னார். இங்கே பலபேர் கட்சித் தலைவர்கள் இன்று வழக்கு மன்றத்திலேபோய் வழக்கு போடுகிறார்கள் என்று. என்னிடத்திலே நான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வேடிக்கையான ஒரு வழக்கு வந்தது. அந்த வழக்கு என்ன வென்றால், சென்னையிலே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திலே ஒன்றிரண்டு எம்.எல்.ஏ.க்களின் மனைவிகளும் சேர்ந்து உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்தச் சங்கத்திலேயிருந்து முதலமைச்சரைப் பார்க்கமுடியவில்லை என்று நீதிமன்றத்திலே ஒரு வழக்கு போட்டார்கள்.

பலமுறை முதலமைச்சருக்கு மனு கொடுத்தார்கள். செயலாளருக்குக் கொடுத்தார்கள். உதவியாளருக்கும் கொடுத்தார்கள். யாரும் பார்க்கவில்லை. கடைசியிலே, பார்த்தார்கள் வழக்கறிஞர் ஒருவர் துணை கொண்டு நீதி மன்றத்திலே போய் ஒரு வழக்குபோட்டு, நாங்கள் முதலமைச்சரைப் பார்ப்பதற்கு ஒரு வழி செய்யுங்கள் என்று கேட்டார்கள். உடனே நீதிமன்றம் ஒரு டைரக்ஷன் கொடுத்து, முதலமைச்சர் இந்த கைவிடப்பட்ட பெண்களைப் பாருங்கள் என்று சொன்னார்கள். உடனே முதலமைச்சரும் அவர்களுக்கு ஒரு நாள் இன்டர்வியூ கொடுத்துப் பார்த்தார். கோரிக்கைகளை எல்லாம் சொன்னார்கள். மறுபடியும் அவர் சொன்னார், திரும்ப மறுபடியும் அடுத்துப்பார்க்கிறேன் என்றார். ஆனால் திரும்ப இப்போது பார்க்க முடியவில்லை, முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை, எதிர்க் கட்சித் தலைவரையாவது பார்ப்போம் என்று என்னிடத்திலே கொண்டு வந்து ஒரு வழக்கைக் கொடுத்து, நாங்கள் மீண்டும் வழக்கு மன்றம் போவதா அல்லது முதலமைச்சரைப் பார்க்க முடியுமா என்று கேட்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன்

என்றால், எங்கள் தலைவரைக் கேலி செய்கிற நீங்கள், ஒரு முதலமைச்சருக்கே இந்த நிலைமை வருகிறது என்று சொன்னால், நீங்கள், ஒரு கட்சியை நடத்துகிற எங்களைக் கேலி செய்கிற நிலைமைக்கு வரலாமா? அவர் என்னென்ன பேசினார் என்பது எனக்குத் தெரியாதா? எனவே, மாண்புமிகு திரு.துரைமுருகன் அவர்கள் இங்கே பேசிய பேச்சுக்கும், மாண்புமிகு திரு. ரகுமான்கான் பேசிய பல பேச்சுக்களுக்கும், நேரத்தில், காலத்தில் நிச்சயமாக என்னுடைய பதில்களைச் சொல்கிறேன் என்று தெரிவித்து, நீங்கள் மணி அடிப்பதற்கு முன்னாலேயே முடிக்க வேண்டும் என்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாக ஆற்றியுள்ள உரைகளுக்கும், அதிலே எடுத்துச் சொல்லப்பட்டுள்ள நல்ல கருத்துக்களுக்கும் இந்த மாமன்றத்தில் அரசின் சார்பாக என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பலரும் பேசவேண்டும், பலருக்கும் பேசுகின்ற வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதற்காகப் பொதுவிவாத நாட்களை மேலும் கூட நீட்டித்துத் தந்து பலருடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத்திலே அறிந்துகொள்கின்ற வாய்ப்பை இந்த அவையிலே அரசு பெற்றிருக்கின்றது.

இன்றைக்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நம்முடைய இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சில பல தவறுகளை தனக்கே உரிய உணர்ச்சி வேகத்தோடு குறிப்பிட்டார்கள் என்றாலும்கூட, பல ஆக்கபூர்வமான கருத்துக்களை இங்கே அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த மன்றத்தில் வழங்கப்பட்டுள்ள பல கருத்துக்கள் இந்த அரசு தொடர்ந்து நல்லமுறையிலே பணியாற்றுவதற்கும், மக்கள் நலத் திட்டங்களை

நிறைவேற்றுவதற்கும் பயன்படக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு எண்ணிப் பாக்கிறேன். சில நேரங்களிலே விவாதத்திலே வெப்பம் தோன்றினாலும்கூட அதற்கு மாறாக ஒளி தோன்றவும் தவறவில்லை. அப்படிப்பட்ட ஒளிக்கீற்றுகள் இந்த விவாதத்தின் மூலமாக எனக்கும் என் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசிற்கும் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணி நான் பெருமையடைகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பல செய்திகளை, இந்த மாமன்றத்திலே நீண்ட நெடுநாட்களாக விவாதிக்கப்பட்டு அதற்கு விடையளிக்கப்பட்டு முடிந்து போன பல செய்திகளை எல்லாம்கூட, மீண்டும் அவற்றிற்குப் புத்துயிர் ஊட்டுகின்ற வகையிலே இன்றைக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நான், அவற்றிற்கு எல்லாம் என்னுடைய நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. சில ஆக்கப்பூர்வமான கருத்துக்களுக்கு, இந்த அரசை நடத்துவதற்கு இந்த அரசின் சார்பாக மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு மற்றும் பல்வேறு பிரிவு மக்களுக்கு என்னென்ன காரியங்கள் செய்யப்படவேண்டும், எத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும், எத்தகைய சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்பன போன்ற அந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்று அவ்வழி நடத்திட இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்கள் எங்களுக்குத் துணையாக நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த விவாதத்தை முதன் முதலாகத் தொடங்கி வைத்த நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள் இது ஒரு கணக்குப்பிள்ளை எழுதுகிற, கணக்கு வாத்தியார் போடுகிற கணக்கு மாதிரி இருக்கிறது என்று சொன்னார். நல்லவேளை என்னை அவர் கணக்குத் தெரியாத மாணவன் என்று சொல்லாமல் கணக்கு வாத்தியார் என்று சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். வாத்தியார் என்று சொன்னால் அவருடைய தலைவரையும் கூட குறிப்பிடும். அந்த வகையில் அவர் என்னை அவருடைய தலைவரையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கணக்கு வாத்தியார் என்று பாராட்டியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். கணக்கு

வாத்தியார் கணக்குப் போடுவது போல்தான் இருக்கிறது. இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு, இவ்வளவு பற்றாக்குறை என்று சொல்லப்பட்டு இருக்கிறதே அல்லாமல் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய எந்த நல்ல திட்டமும் இதில் அறிவிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார். அவர் ஏறத்தாழ 70க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட வரவு செலவுத் திட்டப் புத்தகத்தில் முதலில் இரண்டொரு பக்கங்களில் சொல்லப்பட்டு இருக்கிற புள்ளிவிவரங்களையும், இறுதியிலே பற்றாக்குறை நிமித்தமாக சொல்லப்பட்டு இருக்கிற சில புள்ளி விவரங்களையும் மட்டும் படித்துவிட்டு இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு என்று மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன்.

எந்த மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். பினாமி நில ஒழிப்புக்கான சட்டம் இந்த கூட்டத்தொடரிலே வர இருக்கிறது. பேருந்துகள் படிப்படியாக தேசியமயமாக ஆக்கப்படுவதற்கான திட்டம், அதற்கான சட்டம் இந்தத் தொடரிலே வர இருக்கிறது. கிராமங்களில் 24 ஆயிரம் பேர் மக்கள் நலப் பணியாளர்கள் அன்னியில் 10 ஆயிரம் பேர் நகர்ப்புறத்திலும் நியமிக்கப் படுவார்கள் என்ற அறிவிப்பு இந்த அறிக்கையில் செய்யப்பட்டு இருக்கிறது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நான் வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டு இருந்ததைத் தவிர நீராரும் கடல் உடுத்த என்ற தமிழ்த் தாய் வாழ்த்து, அது கடந்த காலத்தில் கழக ஆட்சியில்தான் தமிழ்த் தாய் வாழ்த்தாக எதனைக் கொள்ளலாம் என்று சிந்தித்தபோது மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய அந்தத் தமிழ்த் தாய் வாழ்த்தினையே ஏற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டு அதிலே வருகின்ற சில வரிகள் வாழ்த்திலே அமங்கலமாக வரக்கூடும் என்ற காரணத்தால் அவற்றை எல்லாம் விலக்கி விட்டு நீராடும் கடல் உடுத்த என்ற தமிழ்த்தாய் வாழ்த்தினை அரசு விழாக்களில் வாழ்த்தாக அமைத்ததும் கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சியில்தான். அதன் தொடர்பாக நெல்லையில் அவருடைய பெயரால் பல்கலைக் கழகம்.

வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 21 ஆயிரம் வீடுகள் 117 கோடி ரூபாய்ச் செலவில்; 50 கோடி ரூபாய்ச் செலவில் 12 ஆயிரம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்; நகர்ப்புறத்தில் 1 லட்சம் வீடுகள் மேம்படுத்தும் திட்டம்; இராயபுரம் பகுதியில் 13 கோடி ரூபாய்ச் செலவில் மேம்பாலம்; பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அதனைக் கொல்லுகின்ற கொடுமையைத் தடுக்க புதிய, கடுமையான ஒரு சட்டம்; சென்னையில் ஹஜ் பயணிகள் தங்குவதற்கு விடுதி; 21 நகரங்களில் முதல் கட்டமாக நவீன கழிப்பறைத் திட்டம்; நடப்புக் கூட்டத் தொடரிலே 'லோக் ஆயுக்த்' போன்ற ஒரு மசோதா; பெரிய மாவட்டங்களுக்கு 2 மாவட்ட வருவாய் அதிகாரிகளும், 2 ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகளும் நிர்வாக உதவிக்காக நியமிக்கப்படுதல்; அனைத்துப் பொருட்களுக்கும் பலமுனைவரி நீக்கம் செய்யப்பட்டு ஒரு முனை வரி அறிமுகம்; பல்வேறு பொருட்களுக்கு வரி குறைப்பு வரி நீக்கம் போன்ற சலுகைகள்; 46 கோடி ரூபாய்ச் செலவில் 46 ஆயிரம் மகளிர்களுக்கு சேலம், தென் ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; பிற்படுத்தப்பட்டவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கடந்த ஆண்டு 20 கோடி ரூபாய் என்று இருந்த ஒதுக்கீடு 30 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும், சீர் மரபினருக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம், புதிய ஆரம்பப் பள்ளிகள் 439 தொடங்கப்படும் திட்டம்; ஆதி திராவிடர்களுக்கு 40 புதிய விடுதிகள்; 40 ஆயிரம் இலவச வீட்டு மனைகள்; 47 ஆயிரம் இலவச கான்கிரீட் வீடுகள்; மீனவர்களுக்கு 6 ஆயிரம் இலவச வீடுகள்; பாவேந்தர் பாரதிதாசன், அண்ணல் அம்பேத்கார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கான தொடக்கம்; கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு சிலை; மேலும் 1,200 இடைநிலை ஆசிரியர்கள் நியமனம்; விவசாயிகளுடைய பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணச் சலுகை – 10 குதிரைத் திறன் வரையில் 75 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக குறைக்கப்பட்ட செய்தி; புதிய தொழிற்சாலைகளை

அமைப்பதற்காணத் திட்டம்; கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறியுடன் கூடிய 2 ஆயிரம் வீடுகள்; புதிய தொழில் முனைவர்களுக்கு விற்பனை வரிச் சலுகை; பல்வேறு புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள்; சாலைகள் ஏற்படுத்துவதற்கான திட்டம்; இன்னோரன்ன, பல மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தும்கூட, எந்தத் திட்டமும் இல்லை யென்றுதான் எதிர்க்கட்சியின் சார்பிலே விவாதம் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து பேசிய என்னுடைய நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு கவிதையைக்கூட படித்தார்.

''தமிழ் என்கின்ற தங்கச் சீப்பு எப்போதும்
உள்ளது உங்கள் கைகளில்''

என்று அதை ஒத்துக் கொண்டார்.

''இருந்தும் பயன் என்ன?
நீங்கள்தான் ஒவ்வொரு நாளும்
உங்களில் சில தமிழர்களை
மொட்டை அடிக்கிற முயற்சியில்
உள்ளீர்களே''

என்று, யாரோ எழுதிய கவிதையோ அல்லது அவரே சொந்தத்தில் எழுதிய கவிதையோ தெரியாது: அதைப் படித்துக் காட்டினார்; ஆக, தங்கச் சீப்பு தமிழ்; அது என் கையிலே இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டார். சீப்பு எனக்கு இப்போது பயன்படுவது இல்லை, அதிகமாக. (சிரிப்பு) திரு. பீட்டர் ஆல்போன்ஸ் போன்றவர்களுக்குப் பயன்படுவதற் காகத்தான் அந்தத் தங்கச் சீப்பு என்னுடைய கையிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). பயன்படும் என்று நம்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. செங்கோட்டையன் அவர்கள் ஒரு உவமையின் மூலமாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை வர்ணித்தார்.

''ஆழ்கடலிலே மூழ்கி முத்துக்களை
முதலமைச்சர் எடுத்து வருவார்''

என்று எதிர்பார்த்தேன்; ஆனால்,

''சிப்பிகளை எடுத்து வந்திருக்கிறார்'' என்று சொன்னார்.

முத்துக்களை, சிப்பிகளை எடுத்த பிறகுதான், உடைத்துப் பார்த்து, அதிலிருந்து எடுக்க வேண்டும். எனவே, அவரும், நான் சிப்பிகளை எடுத்து வந்ததை ஒத்துக்கொண்டு இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி). சிப்பிக்குள்ளேதான் முத்து இருக்கிறது என்று இலக்கியச் செல்வருக்கு நன்றாகத் தெரியும்: மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன். எனவே, சிப்பிக்குள்ளே முத்து இருக்கிறது.

முத்து இருப்பதைப் போன்று பல நல்ல செய்திகள், பல நல்ல திட்டங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே அமைந்து இருப்பதை, பொருளாதாரத் துறையிலே மிகப் புகழ் பெற்று விளங்குகின்ற ''எக்கனாமிக் டைம்ஸ்'' – 22.31.990ல், இந்த வரவுசெலவுத் திட்டம் வந்தவுடன் அந்தப் பத்திரிகை இவ்வாறு எழுதுகிறது:

"It is no mean achievement that the closing deficit for the current year has been brought down from an estimated Rs. 325.07 crores to Rs. 160.74 crores despite new expenditure commitments on account of the Government's determination to carry out the D.M.K.'s poll promises and the grant of central pay scales to State government employees. By plugging the loopholes in Excise Administration, the Government has reaped a rich harvest of Rs. 134 crores as additional revenue. This single stroke of fiscal adroitness had contributed largely to keeping down the current year's deficit. These are the right setting for a take off in resource mobilisation. The extention of further concessions of electricity tariff to agricultural pump-sets reflects the rural bias of the Government."

அதற்கு, தமிழாக்கமாக, 'தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட தீர்மானமாக இருந்ததாலும், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள விகிதத்தைக் கொடுத்ததாலும் ஏற்பட்ட புதிய செலவினங்கள் இருந்தும்கூட, நடப்பு ஆண்டின் இறுதிப் பற்றாக்குறையை

325.07 கோடி ரூபாயிலிருந்து 160.74 கோடி ரூபாயாகக் குறைத்தது சாதாரணமான சாதனையல்ல. ஆயத்துறை நிர்வாகத்தில் காணப்பட்ட ஓட்டைகளையெல்லாம் அடைத்ததால் அரசுக்கு 134 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டியது. ஆயத்துறை நிர்வாகத்தில் மேற்கொண்ட இந்த ஒரே ஒரு நடவடிக்கை, சிறந்த, செம்மையான நிதி நிர்வாக சாதுரியமாகும்; இதுதான் நடப்பு ஆண்டின் நிதிப்பற்றாக் குறையைக் குறைத்திடப் பெரிதும் காரணமாக இருந்தது; நிதி ஆதாரங்களைத் திரட்டி, பெருக்குவதற்கு இது ஒரு சரியான பின்னணியாகும். விவசாய பம்ப் செட்டுகளுக்கு மேலும் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அரசின் ஊரக வளர்ச்சி குறித்த அக்கறையினை தெளிவாக எடுத்துக்காட்டும் என்று 'எக்கனாமிக் டைம்ஸ்' இவ்வளவு அற்புதமான ஒரு விமர்சனத்தை இந்த அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து எழுதி வெளியிட்டு இருக்கின்றது.

மத்திய மாநில அரசு உறவுகளைப் பற்றித் தொடர்ந்து நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில், குறிப்பாக, அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலம் முதல் நாம் சுட்டிக்காட்டி வருகின்றோம். அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி, இடையிலே அ.தி.மு.க. ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி, மீண்டும் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமாக தொடர்ந்து மலர்ந்து இருக்கின்ற இந்த நேரமாக இருந்தாலும் சரி, மத்திய மாநில உறவுகளில் மேலும் செம்மையான ஒரு நிலை உருவாக வேண்டுமென்றும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் கையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழல் மாநில அரசுகளுக்கு இருந்திருக்கக்கூடாது என்றும் நாம் கூறிவந்திருக்கின்றோம். இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக வாய்த்திருக்கின்ற மாண்புமிகு திரு. வி. பி. சிங், அவர்கள் அண்மையில் கேரளத்தில் ஆற்றியிருக்கின்ற ஒரு உரை நமக்கெல்லாம் ஆறுதல் அளிக்கின்ற வகையில் அமைந்த ஒரு உரையாகும். அவர்கள் சொன்னார்கள், நமது மாநிலங்களில் இருக்கின்ற அரசுகள், மத்தியிலே இருக்கின்ற அரசைப் பார்த்து யாசகம் கேட்கின்ற அரசுகளாக இருக்கக் கூடாது, நமக்குக் கிடைக்கின்ற ஒன்றை மாநில சகோதரர்களோடு

பகிர்ந்து கொள்ளக்கூடிய அந்தச் சகோதர உணர்ச்சியை நாம் பெறுவோம். கிடைப்பது ஒரு கேக்காக இருந்தாலும் அதை ஒவ்வொரு மாநில சகோதரர்களுடனும் பகிர்ந்து கொள்வோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்பதை இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நாமும் வலியுறுத்திக் காட்டியிருக்கின்றோம்.

நண்பர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசிய போது, காஷ்மீர் கலவரங்களை எடுத்துச் சொல்லி, அதைப் போன்று அரசியல் சட்டத் திருத்தங்கள் நம்முடைய மாநிலங் களுக் கெல்லாம் வந்தாகவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். காஷ்மீரை மாத்திரம் இன்றைக்கு உரிமைக்கு அழைத்து, மாநில உரிமைகளுக்காக வாதாடுவதைவிட நாம் தொடர்ந்து சொல்லிவருகின்ற மாநில சுயாட்சிக் கொள்கை வெற்றிபெற இன்றைக்கு மத்தியில் அமைந்திருக்கின்ற அரசு பேருதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு, அந்த அரசினுடைய பலத்தை மேலும் பெருக்கி அத்தகைய ஒரு தீர்மானம் அரசியல் சட்டத்திலேயே வடிவு எடுக்கின்ற வகையில், நாம் பணியாற்றிட வேண்டும்.

காஷ்மீர் நிலவரம் அரசியல் ரீதியாக இங்கே வரவேண்டுமேயல்லாமல், இன்றைக்கிருக்கின்ற காஷ்மீர் நிலவரம் இந்தியாவிலேயே எங்கும் வரவேண்டாம், அதைப் போல பஞ்சாப் நிலவரமும் இந்தியாவில் எங்கும் வரவேண்டாம் என்பதுதான் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுடைய பிரார்த்தனையாக இன்றைய தினம் இருந்து வருகிறது என்பதையும் இங்கே ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களைத் தலைமை அமைச்சராகக் கொண்டிருந்த மத்திய அரசு – நிதிநிலை அறிக்கையாக இருப்பதால் இதைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். ஒன்பதாவது நிதிக் குழு ஒன்றை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட அந்தக் குழு, சரியாகச் செயல்பட வில்லை. அதிலே இருக்கவேண்டிய அளவுக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கையும் இல்லை என்ற கருத்தை, தமிழக அரசின் சார்பாக நானும், கேரளத்தின்

சார்பாக முதலமைச்சர் திரு. நாயனார் அவர்களும், மேற்கு வங்கத்தின் சார்பாக முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்களும், டில்லியில் நிருபர் களிடத்திலே பேசும்போது அப்போதே குறிப்பிட்டிருக்கிறோம். எனினும் கடந்த கால அரசு நியமித்த ஒன்பதாவது நிதிக்குழுவினுடைய அறிக்கையை, இன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள அரசு பெற்று, அதை அவையில் வைக்க இருக்கிறது. எனக்கிருக்கின்ற அச்சமெல்லாம் அந்த சிபாரிசுகளை அப்படியே இன்றுள்ள மத்திய அரசு நிறைவேற்ற முற்படுமேயானால், மாநிலங்கள், அதிலும் குறிப்பாக தமிழ்நாடு பெரிதும் ஏமாற்றப்படும் என்பதை நான் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். அந்த ஒன்பதாவது நிதிக் குழுபற்றி நிதிநிலை அறிக்கையிலே கூட குறிப்பிட்டு, மாநில அரசினுடைய அதிருப்தியை நான் தெரிவித்திருக்கிறேன். அந்த அறிக்கையை நீங்கள் படித்திருப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

''உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' என்பது இந்திரா காந்தி அம்மையார் ஆண்ட காலத்தில் மாத்திரமல்ல, இன்றைக்கு திரு.வி. பி. சிங் அவர்கள் பிரதமராக இருக்கிற இந்த நேரத்திலும் நாம் தேசீய முன்னணியின் ஒரு அங்கமாக இருந்தாலும், அந்தக் கருத்திலிருந்து இந்த அரசு பின்வாங்குகிற அரசல்ல என்ற வகையில் ஏழாவது நிதிக் குழு – அதாவது 1979–84 ஆம் ஆண்டுகளுக்காக அமைந்த அந்த ஏழாவது நிதிக் குழு ஆயத் தீர்வையில் 40 சதவீதம் மாநிலப் பங்காக வழங்கியது. எட்டாவது நிதிக் குழு அதை 45 சதவீதமாக உயர்த்தி, அதில் 5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கியது. எனவே முதலில் இருந்த 40 சதவீதம் என்ற பங்கு மாநிலங்களுக்குக் குறையாமல் அப்படியே இருந்தது. 40-ஐ, 45ஆக உயர்த்தி பற்றாக்குறை மாநிலங்களுக்கு 5 சதவீதம் ஒதுக்கிய காரணத்தால் முதலிலே 7-வது நிதிக் குழுவிலே வந்த அந்த 40 சதவீதம் அப்படியே இருந்தது. 9வது நிதிக்குழுவினுடைய முதல் அறிக்கையிலே இதே விகிதாச்சாரம் பின்பற்றப்பட்டது. ஆனால் இறுதி அறிக்கையிலே அந்த விகிதாச்சாரம் நாம் ஏமாறுகிற

அளவுக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதை அறிக்கையிலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அதாவது மற்ற மாநிலங்களுக் கெல்லாம் 37.575 சதவீதம், பற்றாக்குறை மாநிலங்களுக்கு 7.425 சதவீதம் என்று அது மாற்றப்பட்டு விட்டது. இதனால் மாநிலங்களுக்கு ஏற்கெனவே கிடைத்துவந்த அதாவது 7வது, 8வது நிதிக் குழுவில் கிடைத்து வந்த 40 சதவீதம் என்கிற பங்கு 37.575 என்ற சதவீதமாகக் குறைந்துவிட்டது. எனவேதான் அறிக்கையிலே நான் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். மத்திய அரசுக்கு, மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கை 50 சதவீதமாக உயர்த்தி அதில் எல்லா மாநிலங்களுக்கும் 42.5 சதவீதம் என்று வழங்கிவிட்டு – ஏற்கெனவே இருந்த 40க்கு மேலே 2.5 என்று, அதாவது 42.5 சதவீதமாக வழங்கிவிட்டு – எஞ்சிய 7.5 சதவீதத்தை ஏற்கெனவே கொடுத்த 5க்கு மேல் 2.5 என்று உயர்த்தி பற்றாக்குறை மாநிலங்களுக்கு அளிக்கலாம் என்ற கருத்தை மத்திய அரசுக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையின் மூலமாக நான் தெரிவித்திருக்கிறேன். அதையே கடிதமாக பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும், மத்தியிலே உள்ளவர் களுக்கும் நான் தெரிவித்திருக்கிறேன்.

9வது நிதிக் குழு தமிழ் நாட்டின் வருவாய் ஆதாரங்கள், திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகள் ஆகியவற்றை எல்லாம் கணக்கிடும்போது ஒரு பெரிய தவறு செய்திருக்கிறது. என்ன தவறு என்றால் தமிழ்நாட்டினுடைய வரவு–செலவில் உபரியாகப் பணம் இருக்கும் என்ற ஒரு தவறான கணக்கை 9வது நிதிக் குழு தொடங்கி, அந்த உபரித் தொகையையும் மிக அதிகமாகக் கணக்கிட்டு, மின்சார வாரியத்திற்கு நாம் வழங்குகிற மானியம், உணவுக்கு நாம் தருகின்ற பல கோடி ரூபாய் மானியம், இதைப் போன்ற மானியத் தொகைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் உபரித் தொகை அதிகமாக இருக்கும் என்ற பொருத்தமற்ற வாதத்தை 9வது நிதிக் குழு ஆரம்பித்து, சாதாரணமாக திட்டம் சம்பந்தமாக மத்திய அரசினுடைய மானியம் அல்லது கடன் ஆகியவற்றை மத்திய திட்டக் குழுதான் ஒதுக்கீடு செய்யும் என்ற நிலைக்கு மாறாக தன்னுடைய கருத்தை 9வது நிதிக் குழு அறிவித்திருக்கிறது. 5

ஆண்டுகளுக்கு 9வது நிதிக் குழு ஒதுக்கக்கூடிய தொகை, இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களுக்கு 9,000 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் இன்றைக்கு ஒரு அடிப்படைக் கருத்தை மையமாகக் கொடுத்ததன் காரணமாக இந்த 9,000 கோடி ரூபாயில் நம்முடைய தமிழ் நாட்டினுடைய பங்கு 43.79 கோடி ரூபாய் என்கிற அளவுக்குக் குறைந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே தேசிய வளர்ச்சிக் குழுவின் (National Development Council) மாநில முதலமைச்சர்கள் எல்லாம் அமர்ந்து பிரதமர் தலைமையிலே கருத்துக்களைத் தெரிவிக்கின்ற அந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் 'காட்கில் ஃபார்முலா' படி நமக்கு வந்திருக்க வேண்டிய தொகை அதாவது அந்த 'ஃபார்முலா' கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இந்த 9,000 கோடி ரூபாயில் இந்த மாநிலத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய தொகை 400 கோடி ரூபாய். ஆனால் கடந்த கால மத்திய அரசு நியமித்த 9வது நிதிக்குழு உபரித் தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நிர்ணயித்த காரணத்தால் 400 கோடி ரூபாய்க்குப் பதிலாக, அதாவது திட்டக் குழுவின் வேலையை நிதிக் குழு ஏற்றுக் கொண்ட காரணத்தால் 400 கோடிக்குப் பதிலாக 43 கோடி ரூபாய் என்ற அளவுக்குத்தான் தமிழ்நாட்டிற்கு இன்றைக்குக் கிடைத்து இருக்கிறது.

இதிலே கூட இன்னொரு அநியாயத்தைச் சொல்ல வேண்டும் என்றால் இந்த 9,000 கோடி ரூபாயில் அதாவது 5 ஆண்டுக்கான 9,000 கோடி ரூபாயில் உத்திரப்பிரதேசத்திற்குக் கிடைப்பது 2,886 கோடி ரூபாய், பீகாருக்குக் கிடைப்பது 1,374 கோடி ரூபாய். மத்திய பிரதேசத்திற்குக் கிடைப்பது 1,047 கோடி ரூபாய். மேற்கு வங்கத்திற்குக் கிடைப்பது 998 கோடி ரூபாய். இராஜஸ்தானிற்குக் கிடைப்பது 960 கோடி ரூபாய். ஆந்திராவிற்குக் கிடைப்பது 341 கோடி ரூபாய். கேரளாவுக்குக் கிடைப்பது 412 கோடி ரூபாய். தமிழ்நாட்டிற்குக் கிடைப்பது 43 கோடி ரூபாய். கர்நாடகத்திற்கு எதுவும் இல்லை. இங்கேதான், இந்த நிதிக் குழுவில் பங்கேற்றிருந்த நீதிபதி திரு. ஷக்தர் குரேஷி

அவர்கள் மறுப்புக் குறிப்பு எழுதினார்கள். நாம் அதை எண்ணிப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நீதிபதி ஷக்தர் குரேஷி அவர்கள் எழுதிய மறுப்புக் குறிப்பில் குறிப்பிடுகிறார்:

"Right from the inception, there was hostile criticism in the Press about the Commission's composition. Its Chairman and Members were labelled as Henchmen of the Government of India. There was as apprehension in the minds of several State Governments that this commission may not be impartial and that it may make the recommendations which will be favourable to the Centre at the cost of the States, Especially those ruled by the political Parties different from the one in power at the Centre.

The Commission did try to dispel the apprehensions and to reassure the State Governments and others of its independence impartially and fair approach. The situation would have been avoided if the States work taken into confidence and the composition and the terms of reference of the Commission..."

அதாவது ஆரம்பம் முதற்கொண்டு பத்திரிகையிலே கமிஷனைப் பற்றி கடுமையான விமர்சனங்கள் இருந்து வந்துள்ளன. கமிஷனின் தலைவரும் உறுப்பினர்களும் மத்திய அரசின் எடுபிடிகள் என முத்திரையிடப்பட்டுள்ளார்கள். இந்தக் கமிஷன் பாரபட்சமற்ற முறையில் செயல்படாது. அது மத்திய அரசுக்குச் சாதகமான பரிந்துரைகளைச் செய்யும். அதுவும் மத்தியிலே ஆட்சியிலே இருக்கிற கட்சிக்கு மாறுபட்ட கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் என்ற ஐய உணர்வு பல மாநில அரசுகளுக்கு இருந்தது.

கமிஷன் இந்த ஐயத்தைப் போக்கி சுதந்திரத் தன்மையும், நடுநிலைமையும் தேசிய அணுகுமுறை ஆகியவற்றை மாநில அரசுகளுக்கு உணர்த்தவும் உறுதி செய்யவும் முயல்கிறது. கமிஷனின் அமைப்பைப் பற்றியும், செயலாக்கம் பற்றியும் முன்பே மத்திய அரசு மாநில

அரசுகளுக்குத் தெரிவித்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை தோன்றியிருக்காது என்று கூறிவிட்டு, கார்ப்பரேட் வரி அன்றைக்கு திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார்கள் – அந்த கார்ப்பரேட் வரி, கம்பெனி வரிகள் கூட மாநிலங்களுக்குத் தராததை நீதிபதி குரேஷி அவர்கள் வன்மையாக அதிலே கண்டித்து தன்னுடைய மறுப்புக் குறிப்பை எழுதியிருக்கிறார்.

இதிலேயிருந்து நன்றாகப் புரிகிறது, அன்றைக்கு மத்திய அரசிலே இருந்தவர்கள், அமைத்த நிதிக் குழுவிலே உள்ளவர்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடு மாநிலங்களைப் பார்த்திருக்கிறார்கள். அதனால்தான் உத்தரப்பிரதேசத்திற்கு ரூ.2,886 கோடியும், அப்போது பொம்மை தலைமையிலே அரசாளப்பட்ட கர்நாடகத்திற்கு ஒன்றுமே இல்லாத நிலைமையும், நம்முடைய தமிழ்நாட்டிற்கு கேட்கவேண்டாம் – ஏதோ ரூ. 43 கோடியும், கேரளத்திற்கு ரூ. 400 கோடியும், ஆந்திரத்திற்கு, என்.டி.ஆர். தலைமையிலே இருந்த ஆந்திரத்திற்கு ரூ. 340 கோடியும் என்று ஆக்கி, உத்தரப் பிரதேசத்திற்கு ரூ. 2,874 கோடி, பீகாருக்கு ரூ.1,374 கோடி, மத்தியப்பிரதேசத்திற்கு ரூ. 1,047 கோடி என்கின்ற அளவுக்கு ஆயிரத்தைத் தாண்டி அவர்களுக்கெல்லாம் கொடுத்து மீதி ஒதுக்கப்பட்டு இருக்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் காணுகிறோம். இதை மத்திய அரசுக்கு இந்த அவையின் மூலமாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இதை மீண்டும் பரிசீலனை செய்து, இந்த நிதிக் குழுவினுடைய அறிக்கை மாநிலங்களை ஏமாற்றக்கூடிய ஒன்று, மாநிலங்களிடத்திலே பாரபட்சம் காட்டக்கூடிய ஒன்று. அது மாத்திரமல்லாமல், அதற்கென எடுத்துக்கொண்ட அடிப்படையே தவறானது. திட்டக் குழு ஆற்றவேண்டிய பணியை நிதிக் குழு எடுத்துக்கொண்டது அதைவிடத் தவறானது என்ற எங்களைப் போன்ற முதலமைச்சர்களுடைய கருத்துக்களுக்குச் செவி சாய்த்து, மத்திய அரசு இதிலே மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் பல்வேறு ஆக்கப் பூர்வமான பிரச்சினைகள், அவர்களுக்கு எழுந்துள்ள

ஐயப்பாடுகள் இவை எல்லாம் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. கொள்முதல் பற்றி நம்முடைய ஜனதா தளக் கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது நுகர்பொருள் வழங்கு துறையைப் பொறுத்தவரையிலே கொள்முதலைச் சரியாகச் செய்யவில்லை என்கின்ற ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். நான் அவருக்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டில் நெல் கொள்முதல் பணி திறம்பட நடைபெற்று வருகிறது. 16.3.1990 வரை 9,57,711 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது சென்ற ஆண்டில் இதே நாளில் 4207,19, மெட்ரிக் டன்கள்தான் கொள்முதல் செய்யப்பட்டது என்பதை நினைவுகூரும்போது, இது மிக அதிகமானது என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஒவ்வொரு பகுதிக்கும் பொது விநியோக முறையில் எவ்வளவு அரிசி தேவை என்பது ஏற்கெனவே கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கு ஏற்பத்தான் அரிசி முன்கூட்டியே அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 19 நவீன ஆலைகளை இயக்கி வருகிறது. இவற்றின் மொத்த அரவைத் திறன் 4.86 இலட்சம் மெட்ரிக் டன் நெல் ஆகும். இவை அன்றி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரவை முகவர்களை அமர்த்தி அவர்கள் மூலமும் நெல் அரவை செய்யப்படுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன ஆலைகளுக்குத் தேவைப்படும் நெல் போக மீதி நெல் அரவை முகவர்கள் மூலம் அரவை செய்யப்பட்டு அவை அரசு பொது வினியோகத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. நெல் கொள்முதல் செய்யும்போது தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், நெல்லின் தரம் குறித்து சான்று வழங்கிய பின்புதான் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அவ்வாறு கொள்முதல் செய்த நெல் கிடங்கு வசதிகளுக்கு ஏற்பவும், அமர்த்தப்பட்ட லாரிகளுக்கு ஏற்பவும் வெவ்வேறு மாவட்டக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அரிசி முகவர்களிடமிருந்து பெறப்படும் அரிசியின் தரமும் சரிபார்த்த பிறகுதான் வழங்கப்படுகிறது.

பொதுவாக இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் தோழமைக் கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. லத்தீப் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களும் இன்றைக்கு அரிசியின் விலை உயர்த்தப்பட்டிருப்பதைப் பற்றி எடுத்துச் சொல்லி, இது மிகக் கடுமையான உயர்வு என்றெல்லாம் பேசி வாதிட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் இன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டாக்கள். அதுபோல அன்றைக்குப் பேசிய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்களும் மற்றும் உறுப்பினர்களும் இந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த அரசு இந்த அரிசிக்கு எவ்வளவு மானியம் இதுவரையிலே வழங்கி வந்து, இன்னமும் அது வழங்க வேண்டியிருக்கிறது என்ற கணக்கை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

சாதாரண ரக, அதாவது மோட்டா ரக அரிசியை எடுத்துக் கொண்டால் அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு அடக்க விலை ரூபாய் 3.73 ஆகிறது. விலை உயர்த்தப்பட்டதற்கு முன்பு இந்த அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டபோது ரூபாய் 1.73க்கு வழங்கப்பட்டது. எனவே, கிலோ ஒன்றுக்கு அரசு மானியம் 1 ரூபாய் 98 காசு தர வேணடியிருந்தது. சாதாரண அரிசி மொத்தம் வழங்கியது 4.15 லட்சம் டன்கள் ஆகும். சாதாரண அரிசி மூலமாக மாத்திரம் அரசுக்கு இழப்பு அதாவது மோட்டா ரகம் மூலமாக மாத்திரம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது 82 கோடியே 21 லட்சம் ரூபாயாகும்.

சன்ன ரக அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு அடக்க விலை அரசுக்கு ரூபாய் 3.88 ஆகிறது. மக்களுக்கு அது கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.25க்கு வழங்கப்பட்டது. ஆக, கிலோ ஒன்றுக்கு அரசுக்கு இழப்பு மானியமாக ஆன செலவு ரூபாய் 1.63. சன்னரக அரிசி மொத்தம் வழங்கப்பட்ட அளவு 7.75 லட்சம் டன்கள் இந்த அரிசியின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 126.02 கோடி ரூபாய்.

மிகச் சன்னரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.11. பொது வினியோகத்தில் வழங்கியபோது இதன் விலை ரூபாய் 2.50. இதனால் கிலோ ஒன்றுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய் 1.61. மொத்தம் வழங்கப்பட்ட மிகச் சன்ன ரக அரிசியின் அளவு 8.10 லட்சம் டன்கள். இதன் மூலமாக மட்டும், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 130.65 கோடி ரூபாய். எனவே இந்த மூன்று ரக அரிசிக்கு – மோட்டா ரகம், சன்ன ரகம் மற்றும் மிகச் சன்ன ரகம் ஆகிய இந்த ரக அரிசியும் ஏறத்தாழ 20 லட்சம் டன்கள் வாங்கிய வகையில் அரசுக்கு இழப்பு – வாங்கி குறைந்த விலைக்கு விற்ற வகையில் அரசு மானியமாகக் கொடுத்தது 338.88 கோடி ரூபாய். இந்தத் தொகையை அரசு மானியமாகத் தர வேண்டிய சூழ்நிலை. இப்போது இதிலேதான் கொஞ்சம் விலையை ஏற்றியிருக்கிறோம்.

அப்படிப் பார்த்தால்கூட மோட்டா ரக அரிசியின் அடக்க விலை ரூபாய் 3.73. விற்கப்படும் விலை இப்போது 2 ரூபாய். அரசுக்கு இதிலே கிலோ ஒன்றுக்கு இழப்பு ரூபாய் 1.73. 4.15 லட்சம் டன் அரிசி மூலமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய் 71.84 கோடி.

சன்ன ரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.88. விற்கப்படும் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.00. இதனால அரசுக்கு ஏற்பட்ட இழப்பு, கிலோ ஒன்றுக்கு 88 பைசா. ஆக, 7.75 லட்சம் டன்னுக்கு ஏற்பட்ட இழப்பு 67 கோடியே 89 லட்சம் ரூபாய்.

மிகச் சன்ன ரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.11. இப்போது விற்கப்படும் விலை ரூபாய் 3.50. இதனால் அரசுக்கு கிலோ ஒன்றுக்கு ஏற்பட்ட இழப்பு 61 பைசா. ஆக, 8.10 லட்சம் டன்னுக்கு அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 49 கோடியே 65 லட்சம் ரூபாய். ஆக, இந்த மூன்று ரக அரிசிக்கும் சேர்த்து அரசுக்கு இழப்பு ரூபாய் 189 கோடியே 38 லட்சம் ஆகிறது.

300 சொச்சம் கோடியிலிருந்து 180கோடி என்கிற அளவுக்கு அந்த மானியத் தொகை குறைந்து வந்திருக்கிறது. ஆனால் சத்துணவுக்காக வாங்கப்படும் அரிசிக்குத் தருகின்ற

மானியம் 110 கோடி, இலவச அரிசி ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குக்கூட இலவச அரிசி வழங்குவதற்கு, 3 தடவை வழங்குவதற்கு 36 கோடி. ஆக 335.38 கோடி ரூபாய் இப்போதும் நாம் மானியமாக வழங்க வேண்டியிருக்கிறது. எனவே ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவிலே இருந்த இந்த மானியத் தொகை இந்த விலை ஏற்றங்களுக்குப் பிறகு, நம்முடைய மொத்தத் தேவையினை மனதிலே வைத்துப் பார்க்கும்போது, 335.38 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆகியிருக்கிறது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஏனென்றால் அண்டையில் இருக்கிற மாநிலங்களின் விலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கே 2 ரூபாய் சாதாரண அரிசி என்றால், கர்நாடகத்திலே ரூ. 2.70 காசு, சன்ன அரிசி இங்கே 3 ரூபாய் என்றால் கர்நாடகத்திலே ரூ. 3.65 காசு. அங்கே மிகச் சன்னரக அரிசி விற்பனை இல்லை. கேரளாவில், இங்கே 2 ரூபாய் என்றால் அங்கே மோட்டா அரிசி ரூ. 2.66 காசு. சன்ன அரிசி இங்கே 3 ரூபாய், கேரளாவிலே ரூ.3.27 காசு. மிகச் சன்னம் இங்கே ரூ.3.50, கேரளாவிலே ரூ. 3.48. 2 காசுதான் குறைவு. மராட்டியத்திலே, இங்கே 2 ரூபாய் மோட்டா அரிசி, அங்கே ரூ. 2.90. சன்ன அரிசி ரூ. 3.60, மிகச் சன்னம் ரூ. 3.85. ஒரிஸ்ஸாவிலே ரூ. 3.80 வரையிலே விற்பனையாகிறது. ரூ. 2.95லேயிருந்து ஆரம்பமாகி ரூ. 3.80 வரையிலே விற்பனையாகிறது. மேற்கு வங்கத்தில் ரூ. 2.83 சாதாரண அரிசி, சன்னம் ரூ. 3.49, மிகச் சன்னம் ரூ. 3.71. எனவேதான் இந்த அரிசி விலையை ஏற்ற வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதேயல்லாமல் வேறல்ல.

நான் அன்றைக்குச் சொன்னதுபோல், அரிசி விலை ஏறி இருந்தாலும்கூட, மக்களுக்குப் பல நல்வாழ்வுத் திட்டங்கள், பல்வேறு உதவித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள், விவசாயிகளுக்குப் புதிது புதிதாக வழங்கப்பட்டு வருகிற சலுகைகள், கடன்கள் ரத்து, அவர்கள் வாங்குகிற கருவிகளுக்கு விற்பனை வரியிலே சலுகை, இதுபோன்ற பல்வேறு காரியங்களால் அவர்களுக்கு ஓரளவு தாங்குகிற சக்தி ஏற்பட்டிருக்கிறதென்ற சூழ்நிலையிலேதான் இதையும்

தாங்கிக்கொள்வார்கள், இல்லாவிட்டால் ஒரு பெரிய பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்திலே ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்துத்தான் இதைச் செய்கிறோம். ஆனால் ஒன்று, இன்னும் பத்து நாளிலோ, 20 நாளிலோ மத்திய அரசு மீண்டும் அரிசியின் விலையை ஏற்றக்கூடும். நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். மத்திய அரசு அப்படி ஏற்றுகிற நேரத்திலே நம்முடைய மாநில அரசு இந்த விலையைவிட அதிக விலையாக அந்த விலையை உயர்த்தாது என்ற உறுதியை மாத்திரம் என்னால் இப்போது அளிக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் அரிசியின் விலை என்ன, அவர்கள் என்ன வழிமுறைகளைக் கையாள்கிறார்கள் என்பதையும் சொன்னால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ஏற்கெனவே பத்திரிகைகளிலே விளம்பரம் மூலமாகவே அரசு சொல்லி யிருக்கிறது. ஆந்திராவிலே 2 ரூபாய். எப்படி 2 ரூபாய் என்றால் யாருக்கு என்றால், 500 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்குத்தான். 501 ரூபாய் உள்ளவர்களுக்குக் கிடையாது. 2 ரூபாய் அங்கே அரிசி விலை. 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு அந்த இரண்டு ரூபாய் அரிசி கிடையாது. வெளி மார்க்கெட்டில் 4 ரூபாய், 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும். நான் நேரிலே அறிந்தது. அதைக்கூட மாற்றித்தான் ஆக வேண்டுமென்றும், இல்லாவிட்டால் கட்டுப்படியாகாது என்று இன்றைய முதலமைச்சர் திரு. சென்னா ரெட்டி அவர்கள் என்னிடம் பேசும்போது சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதுதான் அங்குள்ள நிலைமை.

விவசாயிகளுடைய கடன்களைப் பற்றி மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பை ஒட்டி இங்கேயும் நம்முடைய உறுப்பினர்கள் கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். மத்திய அரசு விவசாயிகளுடைய கடன் 10,000 ரூபாய்வரை என்பதற்குச் சில நிபந்தனைகளை எல்லாம் போட்டு, அது அவர்களாகவே விரும்பி வேண்டுமென்றேதராமல் இருக்கிற கடன்களுக்கு

அல்ல; கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிற கடன்களுக்கு. அதுமட்டுமல்லாமல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் மண்டலக் கிராமிய வங்கிகள் Regional Rural Banks இவற்றிலே நீண்டகால மற்றும் குறுகிய காலக் கடன்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 2.10.1989 அன்று தவணை கடந்த நிலுவைத் தொகைகளுக்கு மாத்திரம் இந்த நிவாரணம் பொருந்தும் என்று சொல்லியுள்ளது. வேண்டுமென்றே கடனைக் கட்டாமல் நிலுவையாக வைத்துள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன்களைப் பற்றி மத்திய அரசு, மாநில அரசுக்குத் தெளிவான வழிகாட்டிகளைத் தரவில்லை என்று திரு. ரமணி அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு நான் இந்த மாமன்றத்திலே பதில் சொல்லியிருக்கிறேன். மத்திய நிதி அமைச்சர் திரு. மதுதண்டவதே அவர்கள் 23ஆம் தேதியிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதை இந்த மாமன்றத்திற்குத் தகவலுக்காகத் தர நான் விரும்புகிறேன்.

My dear Karunanidhi,

You would have no doubt seen the announcement made in the Budget speech on 19th March 1990 in regard to the New Debt Relief Scheme in respect of farmers, artisans and weavers. For ready reference, I am enclosing an extract of the relevant portion of the speech. I should appreciate if you could kindly introduce a scheme on the same lines in respect of Co-operative Banks within your purview. An immediate decision needs to be taken by you as it is important to ensure that there is no problem in re-cycling of bank credit, for ensuing kharif season. In order to help the State Governments in working out the debt relief scheme on the same pattern as the Central Government, I am asking NABARD to get in touch with the State Co-operative Banks. I am also requesting the Chairman, NABARD, to provided any assistance that may be needed in finalising the scheme as early as possible. I shall also be happy to discuss the matter with you, if necessary.

Yours sincerely,

MADHU DANDAVATHE.

என்று நேற்றைக்கு முன்தினம் எனக்குக் கடிதம் வந்து இருக்கிறது. அங்கே நிதிநிலை அறிக்கையிலே என்ன கருத்தைச் சொன்னார் என்கின்ற அந்தத் தொகுப்பும் எனக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கெனவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கடந்த காலத்தில் சிறு விவசாயிகளுக்கு 67 கோடி ரூபாய் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டதை, கவர்னர் ஆட்சிக்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொண்ட இந்த அரசு தன்னுடைய சுமையாக ஏற்றுக்கொள்ள நேரிட்டது. ஏனென்றால் அவர்கள் கடன் ரத்து செய்தார்கள்; விவசாயிகள் விடுபட்டார்கள். ஆனால் அந்தக் கடனைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தரக்கூடிய அந்தப் பொறுப்பை அவர்கள் முற்றாக நிறைவேற்றவில்லை. எனவே அதிலே 67 கோடி ரூபாயை இந்த அரசு பொறுப்பேற்று அவர்களுக்குத் தரவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. அதைத் தந்தோம்.

கவர்னர் ஆட்சியிலே, மத்தியிலே இராஜீவ் காந்தி ஆட்சி இருந்த நேரத்தில் நபார்டு எல்லா மாநிலங்களுக்கும் இதைக் கண்டிப்பாக அறிவித்து விட்டது. ''இனிமேல் இப்படிக் கடன்களை ரத்து செய்யக் கூடாது; ரத்து செய்தால் கூட்டுறவு வங்கிகள் மேலும் விவசாயிகளுக்குக் கடன் தருவதற்கு நாங்கள் பண உதவி செய்யமாட்டோம்; நாங்கள் ஆதரவு அளிக்கமாட்டோம்'' என்று சொல்லி விட்டார்கள். கவர்னர் ஆட்சியிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு நாங்கள் கடன்களை ரத்து செய்வது இல்லை என்று நபார்டுக்கு அவர்கள் கடிதம் எழுதி அதற்குப் பிறகுதான் நபார்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிட முன்வந்தது.

இந்தச் சூழ்நிலையில் தேர்தல் அறிக்கையிலே சிறு விவசாயிகளுடைய கடன்கள் ரத்து செய்யப்படும் என்று அறிவித்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களில் தவணை கடந்த தொகைகள் அனைத்தையும் அறவே ரத்து செய்தும், குறுகிய மத்திய காலக் கடன்கள் மீது உள்ள அபராத வட்டியையும் அறவே தள்ளுபடி செய்தும்,

நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்திவைக்கப்பட்டுள்ள வட்டியையும் அறவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் முடிவு எடுத்து, 12.5.1989ல் ஆணை பிறப்பித்தது. இப்படி ஆணை பிறப்பித்த பிறகு நபார்டு அதற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்து, நாங்கள் அதற்கு இணங்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். பிறகு நம்முடைய அதிகாரிகள் எல்லாம் அங்கே சென்றார்கள். பெரும் படையெடுப்புச் செய்தார்கள். மாநிலத்திலே இருந்து அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லாம் அங்கே சென்று பேசினார்கள். சில உறுப்பினர்கள்கூட பேசும்போது குறிப்பிட்டார்கள். நீங்கள் ரத்து செய்துவிட்டதாகச் சொல்கிறீர்கள். ஆனால் அந்தக் கடனை வசூலிக்க வேண்டும் என்று ஆணைகள் வந்து கொண்டு இருக்கின்றனவே என்று கேட்டார்கள். நான் அப்போதெல்லாம் உண்மையைச் சொல்லப் பயந்து கொண்டு இருந்தேன். இப்போது பயம் நீங்கிவிட்டது. காரணம் மது தண்டவதே அவர்களுடைய கடிதத்திற்குப் பிறகு அந்தப் பயம் நீங்கி விட்டது. பயப்படாதே, நபார்டு நம் பக்கம் இருக்கிறது. நபார்டு உதவி செய்யும் என்று சொன்ன பிறகு, பயம் நீங்கிவிட்டது. நபார்டுக்கு என்ன சொன்னோம் என்றால், நாங்கள் கடனை வசூலிப்போம் என்று எல்லோருக்கும் எழுதிவிடுகிறோம் என்று சொன்னோம். அதிகாரிகளுக்கு என்ன சொன்னோம் என்றால், அப்படிக் கடிதம் வரும்; நாங்கள் அடிப்பதுபோல் அடிப்போம்; அழுவதுபோல் அழுங்கள்; ஆனால் யாரும் வசூலிக்காதீர்கள் என்று சொல்லி, அந்த 39 கோடி ரூபாய் கடனை வசூலிக்காமலே, அதேநேரத்திலே நபார்டுகாரர் களுடைய கண்ணில் 'சத்துணவுப் பொடி காட்டினாரே' அதுமாதிரி பொடி தூவி, நாங்கள் ஒரு தந்திரமாக அதைச் செய்து அந்த 39 கோடி ரூபாய் கடன் ரத்துக்கும் வழி செய்து இருக்கிறோம்.

இப்பொழுது மத்திய சர்க்கார் அறிவித்த அந்தக் கடன் நிவாரணத்தை எந்த அளவிற்கு, எந்த நிலையில், எந்த அடிப்படையிலே தமிழ்நாட்டிலே நாம் அறிமுகப்படுத்தலாம் என்பது குறித்து மத்திய நிதியமைச்சரே குறிப்பிட்டிருப்பதைப் போல, நான் காவிரி பேச்சுவார்த்தைக்காக ஐந்தாம் தேதியன்று டெல்லிக்குச் செல்லும் பொழுது, இந்தக் கடன் நிவாரணத்தைப்

பற்றி நிதியமைச்சரைச் சந்தித்துப் பேசி முடித்து ஒரு நல்ல முடிவோடு வருவேன் என்று நம்புகின்றேன். நீங்கள் என்னை வாழ்த்தி அனுப்புவீர்கள் என்று கருதுகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள், ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சொன்னதைச் செய்யவில்லை என்று அந்த வாசகத்திற்கு மறுப்பாக ஒரு குற்றச்சாட்டை அவர்கள் சொன்னார்கள். அவர்கள் என்னுடைய தமிழை ஏற்றுக் கொண்டார்கள். தமிழுக்குத் தலைவணங்குவதாகச் சொன்னார்கள். தமிழ் நர்த்தனம் ஆடுகிறது, என்றெல்லாம் சொன்னார்கள். அன்றைக்கு அவர்கள் பேசியதைக்கூட நம்முடைய பேராசிரியர் எழுந்து, படிக்கிறாரே படிக்கலாமா என்றுகூடக் கேட்டார்கள். நான் குறிப்புதான் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். அது உண்மையல்ல. குறிப்பு அல்ல. முழுவதும் எழுதிப் படித்தார். காரணம் என்னுடைய முகத்தைப் பார்த்துப் பேச அவருக்குக் கொஞ்சம் கூச்சம். அதனால்தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட வேண்டுமென்று வீட்டிலே இருக்கும் பொழுது எண்ணுகிறார். நேராக வந்தால் சொல்லக் கூச்சம். எனவே, எழுதியதைப் படித்துவிட்டுப் போய் விடுவோம் என்று படித்துவிட்டுப் போய் விடுகிறார்.

அப்படி அன்றைக்கு அவர் படித்தபொழுது ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார். சிறுதொழில் தொடங்குவதற்கு அரிசன மலைவாழ் மக்களைப் பொறுத்தவரை 15,000 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றும், தொடங்கப்படும் முதலீட்டில் இருபது சதவீதம் பங்குத் தொகை வழங்கப்படும் என்றும் அரசு முடிவெடுத்து இரண்டு கோடி ஒதுக்கியிருந்தது. ஆயினும் அந்தப் பணம் இதுவரை செலவிடப்படவில்லை என்று கூறியிருந்தார்கள்.

இதற்கு விளக்கம் என்னவென்றால், தாழ்த்தப்பட்டவர் களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக மத்திய அரசு முன்பிருந்தே – ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினை தாட்கோவுக்குத் தமிழக அரசு மூலம் வழங்குகிறது. பயனாளிகள் வங்கி மூலம் அரைப் பங்கு கடனாகப் பெறும் பொழுது மீதிபங்கு மைய அரசு கொடுக்கும்

பணத்திலேயிருந்து மானியமாகவோ அல்லது குறியீட்டுக் கடனாகவோ தாட்கோ வழங்குகிறது. தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் இத்தொகை வழங்கப்படுகிறது. இதுகாறும் இது சிறிய தொகையாக ஐ.ஆர்.டி.பி. முறைப்படி செலவிடப்பட்டது. இதனால் தாழ்த்தப்பட்டவர்களுடைய பொருளாதாரக் குறிப்பு பொருளாதாரம் குறிப்பிட்டுச் சொல்லும் அளவில் மேம்பாடு அடையவில்லை. எனவே, 1989 நவம்பர் திங்களில் தமிழக அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்தது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசு கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியை ரூ. 15,000, 20,000 என்று கடன்களாக கொடுக்கின்ற அந்த நிலையும் உண்டு. அதோடு இன்னொரு புதிய நிலையை எடுத்து ஒரு பகுதியைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஆர்வமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை சிறு தொழில்களை உருவாக்கி, அதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவது தான் அந்தத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

ஐந்து இலட்சம் ரூபாய் திட்டம் வகுத்து நான்கு இலட்ச ரூபாய் வங்கியிடம் கடன் பெற வேண்டும். அதற்கு வங்கி கோரும் 25 பர்சென்ட் தொகையைத் தனி நபர்கள் கொடுக்க இயலாததால் தாட்கோ அதனை 15,000 ரூபாய் மானியமாகவும் 85,000 ரூபாய் பத்து வருஷங்களுக்கு 4 சதவீத வட்டிக்கான கடனாகவும் கொடுக்கிறது. இது இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் கடந்த ஆண்டு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் வங்கிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கடன் கொடுக்கத் தயங்கின. தாழ்த்தப்பட்டவர்களாயிற்றே என்று பிணையம் கேட்டார்கள். உடனடியாக 23.2.1990 இல் வங்கித் தலைவர்களையும், ரிசர்வ் வங்கி அதிகாரிகளையும் நம்முடைய ஆதிதிராவிடர் நலச் செயலாளர் அழைத்துப் பேசி, தாழ்த்தப்பட்டவர்கள் சிறு தொழில் அதிபர்களின் நிலைக்கு உயர வேண்டுமேயானால் பிணையம் இல்லாமல் அவர்களுக்கு கடனுதவி வழங்க வேண்டுமென்று

கேட்டுக்கொண்டதன் பேரில், வங்கிகள் உதவி செய்ய முன் வந்தார்கள்.

1974,75 இல் இது போன்ற ஒரு திட்டத்தை அன்றைக்கு இதே அரசு ஆரம்பித்து பல தடைகள் ஏற்பட்டு அது கைவிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 46 தனி நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் மேலும் 30 தனி நபர்களுக்கு உதவிகள் வழங்கப்படும். எனவே 76 பேர் 30.3.1990க்குள் பயன் அடைவார்கள் என்ற நல்ல செய்தியை நான் திரு. ஆல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் ரூ.20 கோடியை ரூ.2 கோடி என்று சொல்லி யிருப்பார்கள் என்று கருதுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே ரூ.20 கோடிதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறுதொழில் தொடங்குவற்குத் தேவையான நிதி உதவி அளிக்க 20 கோடி ரூபாயில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தான் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருக்கிறோம். அதனுடைய நிலைமை என்னவென்றால், 1981–82 லேயிருந்து இந்தச் சிறப்பு உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து மத்திய அரசு அன்றைக்கிருந்து, 1981–82 லேயிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பழங்குடி மக்களுக்காக ஒரு தொகையை வழங்கி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் தொகையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்பது நிபந்தனை. ஆனால் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசு வழங்கிய தொகை முழுமையாகச் செலவிடப்படாமல் மீதம் வைக்கப்பட்டு விட்டது. இதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் தொகை முழுமையாக செலவிடப்படாமல் மீதம் வைக்கப்பட்டு ஒரு திரண்ட தொகையாக, அப்படி செலவிடப்படாமல் குவிந்த தொகையாக 1981–82ம் ஆண்டில் செலவிடப்படாத

தொகையாக ரூ.1.93கோடி. 1985–86ஆம் ஆண்டில் செலவிடப்படாத தொகையாக உயர்ந்தது ரூ.17.57 கோடியாகும். தாழ்த்தப்பட்டவர்களுக்காக தரப்பட்ட பணம் 1985–86ஆம் ஆண்டில் செலவிடப்படாமல் மிகுந்தது ரூ.17.57 கோடி. 1987–88 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 32.03 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. இந்த நிலையை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டு 1988–89 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவி 13 கோடி ரூபாயாக இருக்க, தமிழக அரசு ரூ.20.87 கோடி செலவழித்து 7 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்தது. அதனால் செலவிடப்படாமல் குவிந்து இருந்த தொகை 32 கோடி ரூபாயிலிருந்து 24.16 கோடி ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்தது. நடப்பாண்டில் 1989–90 ஆம் ஆண்டில் மத்திய அரசு 14.19 கோடி ரூபாய் வழங்கியது. தமிழக அரசு 20.11கோடி ரூபாய் செலவழித்தது. அதாவது 5.9 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்தது. எனவே, இப்போது அது 20.24 கோடி ரூபாயாக 30 கோடி ரூபாய் குவிந்த தொகையை 20 கோடி ரூபாய் என்ற அளவில் குறைத்து இருக்கிறோம் என்றால் இரண்டு ஆண்டுக் காலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டங்கள் ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும். மத்திய அரசு தருகிற தொகையும், மாநில அரசு தருகிற தொகையும் ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும் என்று எடுத்த முயற்சிகளின் காரணமாக 32 கோடி ரூபாயாக குவிந்திருந்த தொகையை இன்றைக்கு 20 கோடி அளவிற்குக் குறைத்து இருக்கிறோம். வரும் ஆண்டில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன் மத்திய அரசு வழங்கக்கூடிய உதவி 13 கோடி ரூபாய் நம்முடைய அரசு 12 கோடி ரூபாய் மேலும் செலவழித்து 25 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய திரு. ரமணி அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் திரு. வரதராசன் அவர்களும், மற்றும் தொழிற் சங்கங்களில் ஆர்வம் உடைய நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளர்களுடைய

நலனில் இந்த அரசு மேலும் அக்கறை காட்ட வேண்டுமென்று சொன்னார்கள்.

தொழிலாளர்கள் சுரண்டப்படுவது, அச்சுறுத்தப் படுவது, அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவது, அவர்கள் வாழ்வு இழந்து வாடிவதங்கி தெருவில் நிற்பது போன்ற இந்த நிலைமைகளை எல்லாம் இந்த அரசு ஏற்காது என்பதும், இந்த அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிற நான் பாட்டாளிகளுடைய பிரச்சினையில் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் கடந்த காலங்களில் எப்படியெல்லாம் தொழிற்சங்கத் தலைவர்களோடு இணைந்து நின்று போராடி இருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுகூட எப்படியெல்லாம் அவர்களுக்காக வாதாடி இருக்கிறேன் என்பதும், நான் அவர்களுக்கெல்லாம் நினைவூட்ட வேண்டிய அவசியம் இல்லை. அனுபவ ரீதியில் அவர்கள் அதை மிக நன்றாக உணர்வார்கள்.

திரு.ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டம், தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் சட்டம் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தும் சட்டம், சம்பளப் பட்டுவாடச் சட்டம், பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், தொழிற்சாலை சட்டம், ஈ.எஸ்.ஐ. சட்டம் போன்ற சட்டங்கள் சரிவர அமல் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதிலே ஒவ்வொன்றாக சில விளக்கங்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் அதாவது நீக்கல், முறைப்படுத்துதல் என்ற சட்டத்தைப் பொறுத்தவரையில் மாநில மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, அதிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகள், நிர்வாகப் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி தொழில் நிறுவனங்களில் இருக்கிற ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்கி முறைப்படுத்துதல் பற்றி ஆராய்ந்து ஆலோசனை வழங்கி அதன்மீது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை எப்படி நீக்க வேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்று இருக்கிறதே அல்லாமல், அவ்வாறு

நீக்கப்பட்ட தொழிலாளர்களை, கான்ட்ராக்ட் தொழிலாளர்களைத்தான் அதே இடத்தில் நியமிக்க வேண்டுமென்று சட்டத்தில் வழி வகுக்கவில்லை. அதைப் பிடித்துக் கொண்டு இன்றைக்கு நிர்வாகங்கள் நம்மிடத்தில் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கான சட்டமாறுதலைச் செய்ய இந்த அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறித் தொழிலாளர்களுக்கான நலச் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரையில் வழக்கு நடந்து, இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பு வந்துவிட்டதால், இந்தச் சட்டத்தை அமல் நடத்த எந்தவிதமான தடையும் இப்போது இல்லை. ஆனால் ஒரே ஒரு பிரச்சினை என்னவென்றால், கைத்தறித் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, ஒன்றுபடுத்தி, பணியாற்ற இன்னும் அதிகமான அதிகாரிகளும், பணியாளர்களும் அரசுக்குத் தேவைப்படுகிறார்கள். அதற்கான திட்டம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளது, விரைவில் அது நடைமுறைப்படுத்தப்பட ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதிலே சட்ட அமலாக்கம் தீவிரப்படுத்தப்படும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின்படி 31.12.1989 வரையில், 6,275 தொழிற்சாலைகளில் 16,537 தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். எந்த நிர்வாகத்திலேயாவது இந்தச் சட்டம் அமலாக்கப்படுவதில் குறைகள் இருந்து, அவை குறிப்பிட்டுக் காட்டப்பட்டால் தக்க நடவடிக்கை எடுத்து, அந்தக் குறைகள் களையப்படும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சம்பளப் பட்டுவாடாச் சட்டம் பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், இ.எஸ்.ஐ. சட்டம் ஆகிய சட்டங்கள் செயல்படுவதிலும் தயக்கமோ, தாமதமோ காணப்பட்டால், அவற்றைக் களைந்து மேற்படி சட்டங்களை

நடைமுறைப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைச் சட்டங்கள் செயல்படும் விதம், இந்தியாவிலே மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில்தான் மிக நேர்த்தியாக இருக்கிறது என்று தொழிற்சாலை நடத்துகிறவர்களே கூட நம் மீது கொஞ்சம் வருத்தப்படுகிறார்கள். அந்த அளவிற்குத் தொழிற்சாலைச் சட்டங்களை இந்த அரசு மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிக நேர்த்தியாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. அதிலும் இன்னும் குறைபாடு இருக்குமானால், திரு. ரமணியைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால் இந்தக் குறைகளைக் களைவதற்கு அரசு தயாராக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வடலூர், சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலையைப் பற்றி இங்கே கூறப்பட்டது, ''லே–ஆப்'' பற்றி. நண்பர் திரு.கோவிந்தராஜன் அவர்கள் இங்கே சில வினாக்களை எழுப்பி இருக்கிறார்கள். அது குறித்தும் ஆராய்ந்ததில் ''லே–ஆப்'' என்றால் பாதிச் சம்பளம் உண்டு என்றாலும் கூட, அந்த பாதிச் சம்பளத்திலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் எந்த நேரத்திலும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சமும், ஐயமும் இருக்கின்ற காரணத்தால் இந்த ''லே–ஆப்' 'புக்கான காரணங்கள் என்ன என்பதை இன்னும் தீவிரமாக ஆராய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தியிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, மேலும் தீவிரமாக ஆராய்ந்து இந்த ''லே–ஆப்'' கொடுமையிலிருந்து தொழிலாளர்கள் விடுபட அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். சரக்கு வாகன வரியினால், பொருள்களுடைய விலை ஏறும் என்று அவர்களும் குறிப்பிட்டார்கள், மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சரக்கு வாகனங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆம்னி பஸ் பற்றி இணைத்துச் சொன்னார்கள். ஆம்னி பஸ்ஸுக்கு 2,000 ரூபாய் என்பது கர்நாடகத்திலே கூட போடப்பட்டு

இருக்கிற வரிதான் என்பதைச் சொன்னார்கள். உயர்நீதி மன்றத்திற்கு அந்த வழக்கு சென்று, கர்நாடகத்தில், உயர்நீதி மன்றம் அந்த வரிசெல்லும் என்று தீர்ப்பு அளித்தது. உச்ச நீதிமன்றத்திலே அதற்கு ஒரு ஸ்டே தரப்பட்டிருக்கிறதே அல்லாமல் இன்னும் வழக்கு முடிவு அடையவில்லை. இருந்தாலும் அவர்களுக்காவது நமக்கும் ஆகட்டும். ஏன் என்றால், கர்நாடகத்திற்கும் நமக்கும் காவிரி தொடர்பாக இருக்கிற காரணத்தால், இந்த ஆம்னி பஸ்ஸும் தொடர்பாக இருக்கட்டும் என்ற முறையில் இந்த 2,000 ரூபாய் வரியை இப்போது நாம் மாற்றுவதற்கு இல்லை என்பதை – அவர்கள் கோரிக்கை விடுத்து எத்தனையோ நிறைவேற்றி இருக்கிறேன், இதை நிறைவேற்ற முடியாமைக்காக நான் திரு. குமரி அனந்தன் அவர்களிடத்திலே என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது முடிந்த முடிவல்ல. நீதிமன்றத்தினுடைய உத்தரவை எதிர்பார்ப்போம் என்று அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். சரக்கு வாகனங்களுடைய இந்த வரியினால், விலைவாசி அதிகமாகி, அதன் காரணமாக உயர்ந்துவிடாது, வேறு காரணங்கள் உண்டு.

பொதுவாக சரக்கு வாகனங்களுடைய மொத்த எண்ணிக்கை நம்முடைய மாநிலத்திலே 83 ஆயிரம். இந்த 83 ஆயிரத்தில் நான் குறிப்பிடுகின்ற அதிக வரி செலுத்த வேண்டிய, 15 ஆயிரம் கிலோகிராமுக்கு மேற்படுகின்ற சரக்கை ஏற்றிச் செல்லுகின்ற வாகனங்களுடைய எண்ணிக்கை 33 ஆயிரம் ஆகும். இந்தப் பிரிவை உதாரணமாக வைத்து, வரிப் பளுவைக் கணக்கிட்டால், காலாண்டு வரி விகிதம் ரூ.1,600லேயிருந்து .1,840 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. தற்போது வெளிச் சந்தையில், இம்மாதிரியான வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும்போது ஒரு கிலோமீட்டருக்கு 3 ரூபாய் 40 காசு வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதில் தற்போதுள்ள வரி விகிதப்படி வரியின் பங்கு ரூ.10.67 காசாக இருக்கிறது. இந்த வரி உயர்வினால், ஒரு கிலோமீட்டருக்கு மேலும் ரூ.1.6 காசுதான் கூடுகிறது. உயர்த்தப்பட்ட வரி வீதத்திற்கு பிறகும் மொத்தமாக வரியினுடைய பங்கைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது ரூ.12.27 காசுதான், அதாவது வரி உயர்வு 0.47 சதவீதம்

அளவுதான் இது இருக்கிறது. அதனால் அந்த அளவிற்கு விலைவாசி உயர்வது கட்டுப்படியாகத்தான் இருக்கக்கூடும். இது அதிகமானது அல்ல என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமாக அவையிலே பேசப்பட்டது மதுவிலக்கு பிரச்சினையாகும். 1971ஆம் ஆண்டு கருணாநிதிதான் இந்த அநியாயத்தைச் செய்தான்.

அது வரையில் மது என்றால் என்னவென்றே ஒரு தலைமுறைக்கே தெரியாது இருந்தது என்றெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, நம்முடைய இலக்கியச் செல்வர் உட்பட மற்றும் மதுவிலக்கைத் தீவிரமாக ஆதரிக்கின்ற நண்பர்கள் அனைவரும் உணர்ச்சிப்பூர்வமாக தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். 1971லே தான் மதுவிலக்கைக் கொஞ்ச நாளைக்கு ஒத்திவைக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மாமன்றத்திலே அன்றைய தினம் நான் அறிவித்தேன். 1971ல் என்னுடைய அருமை நண்பர் திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளராக இருக்கிறார். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் கோவையிலே நடைபெற்ற பொதுக் குழுவிலே தான் மதுவிலக்கை ஒத்தி வைப்பது என்கின்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அது ஆராயப்பட்டு, அந்தத் தீர்மானம் செயல்வடிவம் பெற்றது.

1971க்கு முன்பே 1969ல் 13.9.1969ல் மாலை முரசு பத்திரிகையில் நண்பர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர் களுடைய கவனத்திற்கும் கொண்டு வருவது நலம் என்று கருதுகிறேன். 13.9.1969 எம்.ஜி.ஆர் அறிக்கையில் சொல்கிறார் – ‘‘மதுவிலக்கு அமலில் இருந்தாலும் பர்மிட் உள்ள பணக்காரர்கள் சட்டத்தின் உதவியோடு சாதாரணமாகக் குடிக்கிறார்கள். ஏழைகளும் மதுக் கஷாயம் போன்றவற்றை சட்டத்தின் உதவியோடு குடிக்கிறார்கள். இவை இரண்டையும் மதுவிலக்குச் சட்டம் தடை செய்ய இயலவில்லை. பர்மிட்டிற்கு மாநில அரசும், மதுக் கஷாயத்திற்கு மத்திய

அரசும் தடை போடவில்லை. இருந்தாலும் மதுவிலக்குச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதில் சிலருக்குத் தண்டனை கூட கிடைக்கிறது. ஆனால் மதுவிலக்கினால் எந்தத் தீமையும் குறையவில்லை. எந்தத் தீமையைப் போக்க மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டதோ, அது முன்பைவிட இப்போது அதிகமாக உள்ளது. குடிப்பவர்கள் தங்களையும் கெடுத்து, தங்கள் குடும்பங்களையும் கெடுத்துக்கொள்கிறார்கள். மதுவிலக்கு பூரணமாக அமல்படுத்தபட பர்மிட்களையும், மதுக் கஷாயத்தையும் உடனடியாகத் தடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்தாலும் அதைச் சுற்றியுள்ள மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. அந்த மாநிலங்கள் மதுவினால் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்று வருகின்றன. ஆனால் தமிழ்நாடு அந்த நஷ்டத்தை ஏற்றுக் கொண்டே வருகிறது. ஆனால் யாருமே மது அருந்தாது இருக்கச் செய்ய முடியாத நிலையிலே உள்ளது. பணம் இழந்தாலும், லட்சியம் பூரணமாக நிறைவேறியபாடில்லை. மேலே கூறப்பட்ட கருத்தும், கொள்கையும் என்னுடையது மட்டுமல்ல, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இது உடன்பாடு ஆனது. அவருக்கு மாறுபாடு இருக்குமானால், எனது அறிக்கைக்கு மாற்று அறிக்கை விடுத்து இருப்பார். ஆகவே கலைஞருடைய கொள்கையும் என்னுடைய கொள்கையும் ஒன்றுதான். இதை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும் – எல்லோரும் உணர்ந்துகொள்ளவேண்டும் – மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட இந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்ற இலட்சியப் பிடிப்பைவிட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும், அதிக பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்து கூற முடியும்'' என்று எனது அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கே சொன்னார்.

அதுமட்டுமல்ல, அவர் ஆனந்தவிகடன் பத்திரிகையில் ''நான் ஏன் பிறந்தேன்'' என்ற அந்த நீண்ட தொடர் கட்டுரையிலேகூட அப்போதே, புள்ளி விவரங்களை

1971க்குப் பிறகுதான் மக்களே குடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு தலைமுறைக்கே கள் என்றால் என்னவென்றே தெரியாது என்று எல்லாம் சொல்லப்பட்ட வாதங்கள் எல்லாம் பொடிப் பொடியாக நொறுங்க, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்தவிகடன் பத்திரிகையிலே எழுதிய கட்டுரையிலே வந்த புள்ளி விவரத்தைப் படிக்கின்றேன்.

''மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்ட குற்றங்களுடைய எண்ணிக்கை மாத்திரம் – கண்டுபிடிக்கப்படாதவை வேறு – பதிவு செய்யப்படாத குற்றங்கள் வேறு – 1961 ஆம் ஆண்டு 1,12,889 பேர். ஆக கருணாநிதி என்கின்ற கயவன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வராததற்கு முன்பே 1969 ஆம் ஆண்டு 1,12,889 பேர் இந்த வழக்கிலே சிக்கியிருக்கிறார்கள். சிக்காதவர்கள் வேறு. 1962ல், 1,29,977 பேர், 1963ல் 1,23,006 பேர், 1964ல் 1,37,716 பேர், 1965ல் 1,65,052 பேர், 1966ல் 1,89,548 பேர், 1967ல் 1,90,713 பேர், 1968ல் 2,53,607 பேர், 1969ல் 3,06,555 பேர், 1970ல் 3,72,472 பேர்''. இப்படி ஒரு கணக்கை அன்றைக்கே நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்தவிகடன் பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, 1971க்குப் பிறகுதான் ஒரு தலைமுறைக்கு கள் என்றால் இன்னதென்று தெரியும். அதற்கு முன்பெல்லாம், அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், சோமா, சுரா என்ற பானங்களின் பெயர்கள்தான். கள்ளையும் சாராயத்தையும் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய கசடன், கயவன், கருணாநிதிதான் என்று சொன்ன வாதத்தை நொறுக்குகின்ற வகையில்தான் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் புள்ளி விவரத்தை அன்றைக்கே ஆனந்தவிகடன் பத்திரிகையில் தந்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் தம்பி திரு. இராதா, அவர்கள் சொல்லக்கூடும். நீங்கள் திரு. எம்.ஜி.ஆரைப் பின்பற்றித்தான் எதையும் செய்கிறீர்கள் என்று, சில விஷயங்களில், சில உண்மைகள் திரு.இராதா அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நானும் திரு. எம்.ஜி.ஆரும் சில நேரங்களில் அவர் என்னைப் பின்பற்றுவதும் நான் அவரைப் பின்பற்றுவதும் உண்டு – அது உங்களுக்குத் தெரிந்திருக்க

நியாயம் இல்லை. அப்படிப் பின்பற்றியிருக்கிறோம் பல விவகாரங்களில், 1971 லேதான் சட்டம் வருகிறது. 1969 லேயே எம்.ஜி.ஆர் அதைப் பின்பற்றிப் பேசியிருக்கிறார் என்றால் இது கலைஞருக்கு உடன்பாடான விஷயம்தான் என்று திரு. எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார் என்றால், நாங்கள் அப்பொழுதே, முன்பே, பேசிவைத்துக் கொண்டுதான் திரு. எம்.ஜி.ஆர். வெளியிட்ட அறிக்கை அது என்பதை இன்று எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு உணர்ந்திருக்க முடியாது. எனவே, இருக்கிற நிலைமையைக் கருதி, தோல்வியுற்ற ஒன்றை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, இந்தச் சமுதாயத்தை மேலும் அழுக்குப் படிந்த சமுதாயமாக ஆக்க வேண்டுமா என்கின்ற அந்த முனைப்பான கேள்விக்கு இடையிலே எழுந்த பதிலாகத்தான் அந்த முடிவு ஏற்பட்டது.

இங்கே நம்முடைய திரு. உகம்சந்த் சொன்னார். இதற்கு ஒரு அவசரச் சட்டமா, சாதாரணச் சட்டம் கொண்டு வந்திருக்கக் கூடாதா என்று. அவர்களுடைய ஆட்சியிலே ஒன்றல்ல, 5 அவசரச் சட்டங்கள் – இந்த மதுவிலக்குக்காக 5 அவசரச் சட்டங்கள், 23.5.1981 அன்று ஒரு அவசரச் சட்டம் – தமிழ் நாடு மதுவிலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம், 1981 என்று அதற்குப் பெயர். அதை அடுத்து, 20.7.1981 அன்று மீண்டும் ஒரு அவசரச் சட்டம் – தமிழ்நாடு மதுவிலக்கு மூன்றாவது திருத்த அவசரச் சட்டம் இந்த இரண்டு அவசரச் சட்டங்களையும் சேர்த்து ஒரே சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. பின்னர் 1.12.1982ல் மீண்டும் ஒரு அவசரச் சட்டம். அது தமிழ்நாடு மது விலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம் 1982 என்பதாகும். அது மாநிலங்களிடையே மது வகைகள் கடத்தப்பட்டதைத் தடுக்கவும் அதன்மூலம் ஆக ஆயத் தீர்வை, மற்றும் விற்பனை வரி இழப்பைத் தடுத்து நிறுத்தவும், அதற்கென சோதனைச் சாவடி நிறுவுவதற்கும், நீதிமன்றங்கள் தடை ஆணை வழங்குவதற்கான அதிகாரத்தைத் தடுத்து நிறுத்தவும் வழிவகை செய்தது. பிறகு 27.5.1983 அன்று ஓர் அவசரச் சட்டம். தமிழ்நாடு மதுவிலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம். பிறகு 8.10.1985ல் ஓர் அவசரச் சட்டம். இப்படி 5 அல்லது 6 அவசரச் சட்டங்கள் அன்றைக்குப் பிறப்பிக்கப்பட்டன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவசரச் சட்டங்களினால் 1981 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லப்பட்டு, இந்தப் பேரவையில் விவாதிக்கப்பட்ட பிறகு, நிர்வாகத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிற அவசரச் சட்டமே ஒழிய, பேரவையில் விவாதிப்பதற்கு முன்பு இந்த அவசரச் சட்டங்கள் வரவில்லை, (குறுக்கீடு) அதற்கு முன்னால் கொண்டு வர வேண்டுமா வேண்டாமா என்பதை இந்தப் பேரவை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், 1971ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் இந்த மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதற்கு ஒப்புக் கொண்டார்கள் என்றால், அன்றைய தினம் தமிழ்நாடு அரசினுடைய நிதிநிலை மிகவும் மோசமாக இருந்த காரணத்தால் அந்த நிதிநிலையைச் சரியான முறையில் சீராக்க வேண்டுமென்ற காரணத்திற்காக அன்றைக்கு அவர் ஆதரித்தார். வேறு காரணம் இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பிறகு மீண்டும் அவர் ஏன் அதைக் கொண்டு வந்தார். அதற்கு விளக்கம் இல்லை.

பிறகு, 21.3.1981ல் அ. தி. மு. க. அரசினுடைய நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப் பெற்றது. அதில் சொல்கிறார்கள். ''மதுவிலக்குக் கொள்கையைச் செம்மையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதியாகவே இருந்து வந்ததையும், என்றாலும் சட்டவிரோதமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத்தனமாகக் குடிக்கப்பட்டும் வந்ததையும், அனுமதியின்றி கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள் பல இன்னல்களுக்கு உள்ளாவதைக் கண்டு, நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அனுமதிச் சீட்டு பெற்று மது வகைகள் அருந்தும் முறையில் மாற்றங்கள்

செய்யப்பட்டன. இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்யமுடியும் என்று இந்த அரசு கருதுகிறது.

அதை ஒட்டித்தான் மதுவிலக்கைத் தளர்த்தி, சட்டம் கொண்டு வரப்பட்டது; விவாதங்கள் நடைபெற்றன. 30.3.1981ல் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது கூறுகின்ற அருமையான வாசகம் ''மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதிலே தோல்வி ஏற்பட்டது என்பதுதான் எங்களுடைய எண்ணம். அந்த எண்ணம் ஈடேறவில்லை. யார், யாரோ முயன்றும் அந்த எண்ணம் ஈடேறவில்லை. புத்தர் முயன்று பார்த்தார். முடியவில்லை, மகாவீரர் முயன்று பார்த்தார் முடியவில்லை.'' வள்ளுவர் முயன்று பார்த்தார், முடியவில்லை. நாயன்மார்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை.ஆழ்வார்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பட்டினத்தடிகள், இராமலிங்க அடிகள் எல்லாம் முயன்று பார்த்தார்கள். முடியவில்லை. மகாத்மா காந்தியடிகள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பெரும் தலைவர் காமராஜர் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. வள்ளுவர் கூட முயன்று பார்த்தார்கள், முடியவில்லை (சிரிப்பு).

''களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்தூரி இயற்று.

அதாவது, குடித்தவனைத் திருத்துவது என்பது எப்படி இருக்கும் என்றால், தண்ணீருக்குள் மறைந்து இருப்பவனை விளக்கு கொண்டு தேடுவது மாதிரி இருக்கும்'' என்று சொல்கிறார். எனவே, இது முடியாத காரியம் என்று வள்ளுவரும் சொல்லி விட்டார் என்று நாவலர் அந்த

நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டார்.

சட்டமன்ற மேலவையில் இந்த மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வின்போது திரு. எஸ். டி. சோமசுந்தரம், அண்ணா தி. மு. க. வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக இருக்கிற எஸ். டி. எஸ். அவர்கள் 31.8.1981ல் பேசியது என்ன தெரியுமா?

''இன்றைக்கு மதுவிலக்கு ரத்து செய்யப்படும் நிலையில், அதனால் ஏற்படும் சங்கடங்களைப் போக்க திருத்தச் சட்ட முன்வடிவு இன்றைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதைக் கொண்டுவர வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு ஏன் அரசு வந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு தன்னால் இயன்றதைச் செய்தது. சமுதாயத்தில் சிலர் மது அருந்த பழக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களை எவ்வளவு கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கினாலும் அவர்களை அதிலிருந்து மீட்டுக்கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. மது கிடைக்காதவர்களுக்கும் கள்ளச் சாராயம், கள்ளக் கள் சமுதாய விரோதிகளிடமிருந்து கிடைத்தது. அவர்கள் அதை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலையில் சமுதாயத்தையும் காப்பாற்ற வேண்டும்: மக்கள் உடல் நலத்தையும் காப்பாற்ற வேண்டும். இந்த இக்கட்டான நிலையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒன்றைச் சொல்லலாம். வீட்டிலே நன்றாகக் காய்ச்சி வடிகட்டி, அதில், இருக்கின்ற கிருமிகளைக் கொன்று தண்ணீரைக் குடிப்பது நல்லது. குளத்தில் உள்ள தண்ணீர் அவ்வளவு நல்லதல்ல. இருந்தாலும் சிலர் அதைக் குடித்துவிடுகிறார்கள். சாக்கடைத் தண்ணீர் இன்னமும் மோசமானது. மது குடிக்காமல் இருப்பது வீட்டிலே இருக்கும் காய்ச்சிய தண்ணீரைக் குடிப்பதற்குச் சமம். குளத்துத் தண்ணீரைக் குடிப்பது அரசு கொடுக்கும் மதுவுக்குச் சமம். அதைக் கொடுக்காவிட்டால் சாக்கடைத் தண்ணீரைக் குடித்து விட்டு சாகிறார்கள். இதிலிருந்து காப்பாற்றத்தான் மக்களை நல்ல தண்ணீர் குடிக்க

வைப்பதற்குத்தான் இந்த முயற்சியை மேற்கொண்டிருக் கிறோம். சாக்கடைத் தண்ணீரைக் குடிக்காமல் இருப்பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது'' என்று அன்றைய அமைச்சர் நண்பர் எஸ். டி. எஸ். பேசினார். இதைத் தொடர்ந்து தான் அண்ணா தி. மு. க. ஆட்சியில் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் மதுவிலக்கு சம்பந்தமான சட்டங்கள், திட்டங்கள் எல்லாம் மாற்றப்பட்டன.

இந்த அறிவிப்பினை ஒட்டி 1.5.1981ல் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 1981 வரையில் தமிழ்நாட்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது பானங்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் இல்லை. 1981க்குப் பிறகு இந்த மதுபானங்கள் தயாரிக்கிற உரிமையை நான்கு தனி நபர்களுக்கும் கூட்டுறவுத் துறை நிறுவனத்திற்கும் அரசு அளித்தது. ஐ. எம். எஃப். எஸ்., கள், சாராயம் மதுபானங்கள் விற்பனை 1.5.1981 முதல் தொடங்கியது. ஆனால் குடிப்பவர் பெர்மிட் ஒன்று பெற வேண்டுமென்று விதிமுறைகளில் கூறப்பட்டது. இருந்தாலும் அந்த பெர்மிட் முறை நடைமுறையில் இதுவரை சரியாகச் செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் மிக நன்றாக அறிவார்கள்.

கள்ளுக் கடைகள் ஏலம் முறையிலே அனுமதிக்கப் பட்டன. சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டு சாராயத்தை விநியோகம் செய்கின்ற மொத்த வியாபாரம் 15 தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தனி நபர்களால் உற்பத்தி செய்யப்பட்டு, தனி நபர்கள் மொத்த வியாபாரிகளாக விநியோகம் செய்யும் திட்டத்தின்கீழ் ஆரம்பத்தில் சில்லறைக் கடைகள் மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டன. இவ்வாறு 1983 ஜூலை 27க்கு முன்பு சில்லறை வியாபாரம் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே விடப்பட்டன. பிறகு 'டாஸ்மார்க்' நிறுவனம் எடுத்துக் கொண்ட பின்பு, அந்த டெண்டர் முறை பின்பற்றப்படாமல், விண்ணப்பங்கள் பெற்று 'நாமினேஷன்' முறையில் தனிப்பட்டவர்களை ஏஜெண்டுகளாக நியமித்து விற்பனை செய்துவந்தது. இந்த முறை அரசியல் சட்டத்திற்கு,

விதிமுறைகளுக்கு விரோதமானது என்றும் புறம்பானது என்றும் எதேச்சாதிகாரமாக விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிக்காரர்களுக்கு சலுகை கொடுக்கும் விதத்திலும் தேர்வு முறை நடைபெற்றது என்றும் ஒரு சிலர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றனர். உச்ச நீதி மன்றம் இந்த வழக்கை விசாரிக்க 15.7.1986 என்று தேதி குறிப்பிட்டது. நாமினேஷன் முறையிலே கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று சிலர் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றார்கள். 15.7.1986ல் இந்த வழக்கை விசாரிக்க உச்ச நீதிமன்றம் தேதி குறித்தது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இந்த வழக்கில் சட்டப்படி குற்றச்சாட்டுகள் வலுவானதாகவும், மறுக்க முடியாததாகவும் இருந்த காரணத்தை அரசு மனத்தில் கொண்டு, இந்த முறை நீடித்தால் உச்ச நீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு உள்ளாகவேண்டிவரும், அதனால் பல விளைவுகளுக்கும் ஆளாக நேரிடும் என்று எண்ணி, எந்தத் தேதியில் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க தேதி குறித்ததோ அந்தத் தேதி முதல் சில்லறை வியாபாரத்தை நாமினேஷன் முறையிலிருந்து திரும்பப் பெற்று மறுபடியும் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலேயே கொண்டுவர முடிவு செய்து, அதற்கான அவசரச் சட்டத்தை அன்றைக்கிருந்த அரசு பிறப்பித்தது. இந்தமுறை 31.12.1986 வரை, அதாவது இறுதியாக கள் மற்றும் சாராயக் கடைகளை மூடுகிற வரையிலும் இருந்து வந்த முறையாகும். அப்போது 14.3.1983 அன்று சட்டப் பேரவை எதிர்க்கட்சியிலே இருந்த நான் சாராய உற்பத்தியையும் விநியோகத்தையும் அரசோ அல்லது கூட்டுறவுத் துறை நிறுவனமோ ஏன் மேற்கொள்ளக் கூடாது என்று கேட்ட கேள்வியை அடிப்படையாகக் கொண்டு அன்றைக்கு இருந்த அரசு ஒரு ஃபைலையே ஆரம்பித்தது, ஒரு கோப்பையே ஆரம்பித்தது. இப்போதுதான் தெரியும் எனக்கு, என்னுடைய பேச்சை வைத்து அரசு அப்போது ஒரு கோப்பையே ஆரம்பித்திருக்கிறது என்று. அதில் எதிர்க்கட்சித் தலைவருடைய வேண்டுகோளை தீவிரமாகப் பரிசீலித்து அரசு மொத்த வியாபாரத்தை மட்டும் டாஸ்மாக்கிடம்

கொடுப்பதற்காக டாஸ்மாக் நிறுவனத்தை 27.7.1983 முதல் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் நிறுவியது. இருந்தாலும் சாராய உற்பத்தியையும் தனி நபரிடமிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலித்து அது இயலாத காரியம் என்று கைவிட்டு விட்டது. எதை இயலாது என்று அந்த அரசு கைவிட்டதோ அதைத்தான் இந்த அரசு இயலும் என்று ஒரு செயல்திட்டமாக உருவாக்கி இன்றைக்குப் புதிய மதுவிலக்குக் கொள்கையின்படி மலிவு மது பானத்தை தயாரிக்கும் முழுப் பொறுப்பையும் அரசு நிறுவனமான டாஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளது. அதே போல டாஸ்கோ நிறுவனம் தயாரிக்க இருக்கிற அந்த மலிவு விலை மது பானங்களை விற்கின்ற மொத்த விற்பனை உரிமையை தனி நபர்களுக்குக் கொடுக்காமல் டாஸ்மாக் நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளது.

சில்லறை விற்பனை முறையிலே பல்வேறு கொள்கைகளை பல்வேறு காலக் கட்டங்களில் நிலைமைக்கு ஏற்ப கடைப்பிடித்து வந்த அ.தி.மு.க. அரசின் கொள்கைக்கு மாறாக, சில்லறைக் கடைகளை ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே இந்த அரசு நடத்த முடிவு செய்து அறிவித்துள்ளது. ஏலம் மற்றும் டெண்டர் என்று சொன்னவுடன் அதை சரியாகப் புரிந்து கொள்ளாமல் சில பேர்கள் ஏலம் என்பது ஒரு முறை போலவும், டெண்டர் என்பது வேறு முறை போலவும் கருதிக் கொண்டு அந்த டெண்டரைக் கட்சிக்காரர்களுக்குக் கொடுப்பதற்காகத் தான் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல.

ஒரு அப்–செட் பிரைஸ் கடைகளுக்கு நாம் முடிவு செய்கிறோம். 50 ஆயிரம் என்று அப்–செட் பிரைசை முடிவு செய்து கொண்டு டெண்டர் விடுகிறோம். 8 பேர் 9 பேர் டெண்டர் கேட்கிறார்கள். சீல்டு டெண்டர். அதிலே நாம் 50 ஆயிரம் என்று வைத்திருக்கிறோம், ஒருவர் 60 ஆயிரம் கேட்கிறார், ஒருவர் 70 ஆயிரம் கேட்கிறார், ஒருவர் 90 ஆயிரம் கேட்கிறார் என்றால், 90 ஆயிரம்தான் டெண்டரில் அதிகப்படியானது என்றால் அந்த டெண்டரை வைத்துக்கொண்டு ஆரம்பிக்கப்படும். அப்செட் பிரைஸ் 90 ஆயிரத்திலிருந்து ஆரம்பிப்போம் என்ற நிலையில் பிறகு

ஏலம் கேட்கலாம். ஆக டெண்டர் கேட்பவர்களுக்கே கொடுத்து விடவில்லை. யாருமே ஏலம் கேட்காவிட்டால்தான் 90 ஆயிரம் டெண்டர் கேட்டவருக்குக் கொடுக்கப்படும். 90 ஆயிரம் டெண்டர் கொடுத்த பிறகு, ஏற்கெனவே 50 ஆயிரம் டெண்டர் கொடுத்தவர்கூட 95 ஆயிரத்திற்கு என்று லட்சத்திற்கு என்று ஏலம் கேட்கலாம். எனவே டெண்டர் என்பது அப்செட் பிரைசை நிர்ணயிப்பதற்காக இருக்கிற முறையே தவிர வேறு அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்பற்றிப் பேசிய உறுப்பினர்கள் எல்லாம், அதிலும் குறிப்பாக நம்முடைய வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜேந்திரன் அவர்கள் இந்தக் கருத்துக்களுக்காக 3 நாட்கள் இந்த அவையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். அவர் பேசிய நாள் ஒன்று, தம்பி திரு. புகழேந்தி அவர்களுக்குப் பதில் சொன்ன நாள் ஒன்று, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் இந்த நாள் ஒன்று. ஆக 3 நாட்களைப் பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய கருத்துக்களையெல்லாம் அவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்குச் சொன்னார், காந்தியடிகளோ அல்லது அண்ணாவோ அல்லது காமராசரோ அவர்கள் எல்லாம் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால், அவர்களுடைய கல்லறைகளே குலுங்கும் என்று சொன்னார்.

எதிர்க்கட்சி வரிசையிலே நல்ல வார்த்தைகளாகப் போட்டு பேசக் கூடிய நபர்களில் அவரும் ஒருவராக இருக்கிறார் என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் இந்த மாமன்றத்திலே இருந்து இன்னும் 4,5 ஆண்டுகளுக்குப் பிறகு நாமெல்லாம் கலைந்து சென்று மீண்டும் இந்த அவைக்கு வருகின்ற நேரத்தில் இதைவிடத் திறமையான பேச்சாளர்களாக இருந்திட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஒருவேளை திரு. ஆல்போன்ஸ் கூறுவதைப் போல நீங்களே நல்ல ஆட்சியை அமைத்தாலும் அமைக்கலாம். ஏனென்றால் ராமனுக்கு 14 ஆண்டு வனவாசம், 12 ஆண்டு தருமனுக்கு வனவாசம். எங்களுக்கு 5 நாள் சிறைவாசம் அதனால் ஆட்சியை அமைப்போம் என்று சொன்னார். அது எல்லாம் ஆண்டுக் கணக்கிலே வாசம். இது நாள் கணக்கிலே

வாசம். அமைக்க முடியுமா என்பது கேள்விக் குறி. இருந்தாலும், அமைப்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. உங்களைப் போல நல்ல இளைஞர்கள், எதிர்காலத்திலே இந்த நாட்டினுடைய நிலையை உயர்த்துவதற்கு, இந்த மக்களை முன்னேற்றுவதற்குப் பயன்படுவார்களேயானால், நான் ஒரு மூத்தவன்; வயதானவன் என்கின்ற முறையில் – என்னுடைய வீட்டாரெல்லாம் வந்திருக்கிறார்கள், இருந்தாலும் (சிரிப்பு) சொல்கிறேன். வயதானவன் என்கிற முறையில் உங்களை எல்லாம் வாழ்த்துவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு.சா. பீட்டர் ஆல்போன்ஸ்: வயதானவர் என்று சொன்னாலும், எங்கள் முதல்வர் அவர்கள் கவர்ச்சிகரமாக இருக்கிறார் என்று சொல்லுவதில் எங்களுக்கு மகிழ்ச்சி (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நன்றி கூறிக் கொள்கிறேன். என் வீட்டினரை நினைத்து (சிரிப்பு).

அவர் சொன்னார். நான் திரும்பவும் நினைவூட்ட விரும்புகிறேன். அண்மையில் ஏப்ரல் திங்கள், 1989ல் Probe India என்ற பத்திரிகையில், 'மிஸ்ரா' என்ற துணை ஆசிரியர். எழுதுகிறார். அவர் எழுதிய கட்டுரை முழுவதையும் படிக்க நேரம் இல்லை. அதிலே ஒரு பகுதியை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன். எவ்வளவு உருக்கமான கட்டுரையாக இருக்கிறது அது என்பது உங்களுக்கு அப்போது தெரியும். ஆங்கில வாசகத்தைக் கூட நான் படிக்க விரும்பவில்லை. தமிழ் வாசகத்தை மாத்திரம் படிக்கிறேன், தமிழ் ஆக்கத்தை மாத்திரம். அவர் சொல்கிறார்:

''போர்பந்தரில் மகாத்மா காந்தியின் சொந்த ஊரில், ஒரு கள்ளச் சாராய வியாபாரி, தரைக்கு அடியில் பெட்ரோலைச் சேமிப்பதைப் போல, பெரிய குளம் கட்டி 50 ஆயிரம் லிட்டர் சாராயத்தைத் தேக்கி வைத்திருக்கிறார். பெட்ரோல் பங்க் போலவே, அவரது கடையில் ஒரு கை பம்பு இருக்கிறது. கை பம்பை அடித்தால், பாதாளத்திலிருந்து பாய்ந்து வருகிறது சாராயம். எங்கோ, தொலை தூரத்தில், டெல்லி ராஜ்காட்டில், மகாத்மா காந்தி தனது சமாதியில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். தனது பிறந்த

வீட்டிற்குப் பக்கத்திலே, நான்கு ரூபாய் தந்தால், கள்ளச் சாராயம் ஒரு முழு கிளாஸ் அளவுக்குக் கிடைக்கிறது என்பதை காந்தி அறிய நேர்ந்தால், சமாதியின் அடியிலேயே நெளிவார்.''

இது மிஸ்ரா, Probe India-விலே எழுதிய கட்டுரையாகும். அதற்காகத்தான் அதை நான் இங்கே படித்துக் காட்டினேன்.

இன்னொன்று; இது நாடாளுமன்றத்திலே நடைபெற்றது. குமாரி மணிபென், அண்மையிலே இறந்துவிட்டதாய், அவர்கள் பிரதமர் இந்திரா காந்தியைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக. அதைக் குறித்து, அன்னை இந்திரா காந்தி அவர்கள், 1976 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே பதில் சொல்லும்போது, குறிப்பிடுகிறார்கள்.

"... Kumari Maniban also spoke of people's drinking. Now you know that we are trying to launch movement against alcoholic drinks. But what about the paragen of virtue in this respect in the State of Gujarat? During the Assembly elections, I had heard of liquor being distributed by a tanker. The other day, we all read of deaths in Surat due to imbibing of illicit liquor."

''குமாரி மணிபென் பொதுமக்கள் குடிப்பதைப் பற்றி பேசினார். உங்களுக்கு எல்லாம் தெரியும். நாங்கள் குடிப்பழக்கத்திற்கு எதிராக ஒரு இயக்கத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மதுவிலக்குக் கொள்கையிலே, மாதிரி மாநிலம் எனப் பேசப்படும் குஜராத்தில் என்ன நிலைமை? சட்டமன்றத் தேர்தல்களின்பொழுது, டேங்கரில் கொண்டு வந்து சாராய விநியோகம் செய்யப்படுவதாக அந்த நேரத்திலே கேள்விப்பட்டேன். சூரத்தில், சமீபத்தில் கள்ளச்சாராயம் அருந்தி, பலபேர் மரணம் அடைந்ததை செய்தித்தாள்களிலே படித்தேன்'' என்று அவர் சொன்னார். இது 'குமாரி மணிபென்' இங்கே 'குமரி அனந்தன்' (சிரிப்பு) அவர் 28.3.1981ல் இந்த மாமன்றத்திலே ஒன்றைப் பேசினார். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நான் உங்களுக்கு சொல்லிக் கொள்வேன்''... (குறுக்கீடு) ஒரு எழுத்துக்கூட

மாற்ற மாட்டேன். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நான் உங்களுக்கு சொல்லிக் கொள்வேன். தீண்டாமை எப்படி ஒரு மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து கொண்டிருக் கிறதோ, அதைப் போல், இருக்கவேண்டும். இந்தியாவிலே, ஒரு பகுதியிலே ஒருவன் தீண்டத்தகாதவன்: இன்னொரு பகுதியிலே தீண்டத்தக்கவன் என்ற நிலையே இல்லை. அவன், அலை வீசுகின்ற கன்னியாகுமரியிலிருந்து, மலை முகடாக இருந்து கொண்டிருக்கிற இமயத்தின் உச்சி வரை வாழ்ந்து கொண்டிருக்கின்ற எவனாக இருந்தாலும் சரி, தீண்டாமையைப் பின்பற்றக்கூடாது என்பதற்காக அது மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக எப்படி இருக்கிறதோ, அதைப்போல, கள்ளைக் குடிக்காதே என்று சொல்லுகிற அந்தக் காரியமும், மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து, தீண்டாமையைப் போலவே, கடுமையாக மத்திய அரசாங்கம் இதையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பகுதியிலே இருக்கிறவன் குடிக்கலாம்; அந்தப் பகுதியிலே இருக்கிறவன் குடிக்கக் கூடாது என்று சொல்கிற நியாயமற்ற ஒரு நிலை இருக்கிறது பாருங்கள்.

அதை மத்தியிலே உள்ள மத்திய அரசாங்கம் முறியடிக்க வேண்டும். தீண்டாமையைத் தனது பொருளாக எடுத்துக் கொண்டதைப் போல, கள் குடிப்பது என்பதையும் மதுக் கடைகளைத் திறப்பது என்பதையும் கூடாது என்று சொல்கின்ற முயற்சியை மத்திய அரசாங்கம் தனது பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்ற கருத்தை அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்.

இதே கருத்தைத்தான், லோக் சபாவில் 30.7.1980 இல் ரத்தன் சிங் என்பவர் அன்னை இந்திராகாந்தியைப் பார்த்துக் கேட்கிறார் ஒரு கேள்வி.

ரத்தன் சிங், சபாநாயகரைப் பார்த்து 'சார்' என்று விளித்து விட்டு,

"This is a very important question. The Prohibition policy of this Government has not been spelt out?whether this Government is for Prohibition or against Prohibition. So far, there is confusion

as far as that aspect is concerned. I would like to ask the Prime Minister whether she is aware of the fact that, in one advertisement, a liquor Vendor from Ulhasnagar in Bombay had, in the centre of an advertisement, put a photograph of the Hon. Prime Minister, Indira Gandhi. giving the impression that the Prime Minister is exhorting all the people of India to consume more Liquor. I want to know whether the Government would take prompt action against such people and whether the Government would spell out its policy regarding Prohibition."

''சார், இது மிக முக்கியமான கேள்வி, இந்த அரசு மதுவிலக்கை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பது தெளிவாக்கப்படவில்லை. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் இதுவரை குழப்பமான ஒரு நிலையே நீடித்திருக்கிறது. பம்பாய் உல்லாஸ் நகரைச் சேர்ந்த ஒரு சாராய வியாபாரி வெளியிட்டுள்ள விளம்பரத்தின் மத்தியில் பிரதம அமைச்சர் இந்திரா காந்தியின் படம் இடம் பெற்றுள்ளதே, இது மக்களை மேலும், மேலும் குடிக்க அழைப்பதைப்போன்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிறதே, அந்த விளம்பரத்தைப் பற்றி அறிவாரா, அந்த மாதிரி விளம்பரம் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அரசு தனது மதுவிலக்குக் கொள்கையை தெளிவாக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதற்கு அன்னை இந்திரா காந்தி சொல்கின்ற பதில்:

"Sir, I have not seen this advertisement. I can say that it is very wrong to use either my photograph or the photograph of any public person, especially one who does not drink. Our Party's policy is that people should not drink. But the question is whether the Prohibition policy as followed has led to that result or not. This is our concern. That is why, in the earlier period, we had thought that we should lay stress on temperance rather than Prohibition as such. Somehow, we have to work out a policy. So far, I am sorry to say, the Prohibition policy has not worked in any place, not even in Gujarat where so much effort was made to this end"

இந்த ஆங்கிலத்திற்குத் தமிழ் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தப் பாலிசி வெற்றி

பெறவில்லை என்பதை அம்மையாரே ஒத்துக்கொண்டு, இந்தக் கொள்கையிலே உடன்பாடு உண்டு, ஆனால் இந்தக் கொள்கையைச் சட்டமாக்குவதில் வெற்றி பெறமுடியவில்லை என்பதை வருத்தத்தோடு இந்திரா காந்தி அவர்களே சொல்கிறார்கள்.

ரத்தன் சிங் கேட்கிறார்:

'I am thankful to the Prime Minister. But, I want to say that the gentleman who had put the advertisement happens to be the President of the local Congress (I)."

'இந்த விளம்பரத்தை வைத்தவன் வேறு யாருமல்ல, அம்மையார் அவர்களே, பம்பாயிலே உள்ள லோக்கல் காங்கிரஸ் கட்சித் தலைவர்தான் அந்த விளம்பரத்தை வைத்தார்.

இந்திரா காந்தி பதில் :

"I do not know about it. We will lookinto it."

என்று சொல்லிவிடுகிறார்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று படித்துக் காட்டியது எனக்கு மிகுந்த தெம்பை அளிக்கிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம்கூட அந்த நிலையிலே உறுதியாக இருக்க வேண்டும். அது அகில இந்தியாவிற்கும் வரவேண்டும் என்பதையும், அதே நேரத்திலே அவர்களிடம் வேண்டுகோள் விட்டுச் சொல்கின்ற அந்தக் காரியத்தை விடாப்பிடியாக இங்கே வலியுறுத்துவதற்கு நான் பிறந்த பூமியிலே நான் இருக்கிறேன் என்பதையும், தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய கொள்கையிலே மாறுபாடு இல்லை என்பதை மிகத் தெளிவாக அது காட்டுகிறது.

இன்னும் ஒன்று. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களும், நாமும் சேர்ந்து இருக்கின்ற இந்த அவையிலிருந்தே ''மத்திய அரசாங்கமே, நீ முழு மதுவிலக்கைக் கொண்டு வா'' என்று சொல்கின்ற தீர்மானத்தைக் கூட நாம் நிறைவேற்றலாம். இரண்டாவது செய்தி (குறுக்கீடு) மன்னிக்கவேண்டும். ஒன்றே ஒன்று.

பம்பாயிலே ஒருவர் லோக்கல் காங்கிரஸ்காரர் என்று சொன்னால், அவர் தவறு செய்திருந்தால் அது தவறேதான். மனிதனுடைய உடலிலே விரல் ஒன்று அழுகிப் போய்விட்டது என்றால் அதனை வெட்டி எறிவதிலே தவறில்லை. உடலைக் காப்பதற்காக, அப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களை வெட்டி எறிந்து விட்டு, நாங்கள் இந்தக் காங்கிரசை காப்பாற்றுவதற்கு என்றும் தயாராக இருப்போம் என்பதையும் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முனைகிறார். நம்முடைய ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி இருந்தபோதே செய்திருக்கலாம், அகில இந்தியாவிற்கு. அதை விட்டு விட்டு, இப்போது உங்களுக்கு உங்கள் ஆட்சி இல்லை. இப்போது போய் திரு. வி. பி. சிங் ஆட்சியைப் பார்த்து, மது விலக்கைக் கொண்டு வா என்று சொல்வது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கின்ற காரியம். இருந்தாலும் முயற்சிப்போம். நீங்களும், நானும் சேர்ந்து முயற்சிப்போம். இந்திய அளவிலே அது வருமேயானால், எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். இந்தியா முழுமையும் – அவர் அடிக்கடி சொல்கின்ற, குமரி முதல் இமயம் வரை இந்தக் கொள்கை அமலாக்கப்படுமானால், நமக்கு மகிழ்ச்சிதான், நம்முடைய இலக்கியத்திலே கூட மது போற்றப்பட்டு இருக்கிறது. (சிரிப்பு).

நம்முடைய அம்மையார் பொன்னம்மாள் அவர்கள் அன்றைக்கு கண்ணீர் மல்க மிக உருக்கமாகப் பேசினார்கள். இடையிலே பேராசிரியர் குறுக்கிட்டு ஏதோ ஒரு செய்தியை சொல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் முழுவதுமாக அன்றைக்கு அழுது இருப்பார்கள். எனக்குத் தெரியும். நம்முடைய இலக்கியத்திலே கூட மது இருக்கிறது. இலக்கியம் நிறைய படித்து இருப்பார் இலக்கியச் செல்வர். எத்தனையோ இடங்களிலே மது வருகிறது.

திரு. குமரி அனந்தன்: சில இடங்களிலே கடும் பேரல் என்ன என்று எல்லாம் வருகிறது. சங்கத் தமிழ் எழுதியவருக்குத் தெரியாதது அல்ல. ஆனால் அது வருகிறது

என்பதற்காகவே ஒத்துக் கொள்ளப்பட்டது என்பது அல்ல சமுதாயத்திலே. மது என்பது தேன் என்ற வகையிலும் வந்து இருக்கிறது. அதனாலே மது உண்ட என்று சொல்லுகிறபோது வண்டைச் சொல்லுவதும் உண்டு. அதனாலே அது கள் என்றோ அல்லது வேறு ஒன்று என்றோ சொல்வதற்கு இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ஒரு இலக்கியச் சண்டை. சிறிய சண்டை இப்போது. ''சிறிய கள் பெறினே எமக்கீயு மன்னே, பெரிய கள் பெறினே யாம் பாடத்தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே'' அதாவது கள் என்றே வருகிறது. புறநானூறு 235வது பாடலில். ஔவையாரே பாடியது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாடியவர் ஒரு அம்மையார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதுதான் ஔவையார் என்று சொன்னேன். ஔவையாரும் ஒரு அம்மையார்தானே (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன்: ஔவையார் கள் குடித்தார் என்பதை நான் ஒத்துக் கொள்வதற்கு இல்லை. அந்தக் கிழவி குடித்தாள் என்பதை இந்தக் குமரி ஒத்துக் கொள்ளவில்லை (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இலக்கிய ஆராய்ச்சியில் 3 ஔவையார்களைச் சொல்கிறார்கள். சில புலவர்கள் 18 ஔவையார்களைச் சொல்கிறார்கள். அதே போல் அதியமானோடு இருந்த ஔவையார் பாடிய பாட்டு அது. அதாவது கொஞ்சமாகக் கள் இருந்தால் எங்களுக்குக் கொடுப்பான், அதியமான். நிறைய இருந்தால் நாங்களும் அவனும் சேர்ந்து சாப்பிடுவோம் என்று ஔவையார் பாடினார். அதற்காகச் சொன்னேன்.

ஏன் நம்முடைய இதிகாசங்களில் எல்லாம் இல்லையா என்ன? எவ்வளவோ இருக்கிறது. அன்றைக்குக் கூட அம்மையார் சொன்னார், இந்தக் கள் குடித்தால், சாராயம் குடித்தால், மலிவு விலையில் கருணாநிதி மதுவை விற்க ஆரம்பித்தால் என்ன என்ன ஆகும் தெரியுமா? வீட்டிலே

மனைவிக்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் மகளைக் கற்பழிப்பான்; பக்கத்து வீட்டுப் பெண்ணைப் போய்க் கற்பழிப்பான் என்று சொன்னார். இது எல்லாம் மது அருந்தாமலேயே புராணக் காலத்தில் நடந்து இருக்கிறது. நடக்காமல் இருக்கிறதா?

திரு. ரா. சொக்கர்: தலைவர் அவர்களே, புராணக் காலத்தில் எத்தனையோ நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கலாம். அல்லது தீமைகள் பயக்கக்கூடிய விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கலாம். முதலமைச்சர் சொன்னார் என்றால் அதை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய மன நிலையில் இருக்கிறார்கள். ஆகவே நல்ல விஷயங்களைச் சொல்லி, மது அருந்துவதால் உள்ள தீமைகளைச் சொல்லி, நிதிப் பற்றாக்குறைக்காக இதை அறிமுகப்படுத்தி இருக்கிறோம் என்ற அளவில் மட்டும் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் இந்த வாதத்தில் மாறுபடுகிறேன். நிதிப் பற்றாக்குறைக்காக அல்ல. சமூக நீதி நிலை பெற வேண்டும் என்பதற்காக, நிதிப் பற்றாக் குறைக்காக அல்ல. நிதிப் பற்றாக்குறை என்றால் கஜானா காலியாக இருந்தபோது ஆட்சிக்கு வந்தோம். அப்போதே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கலாம். நிதிப் பற்றாக் குறைக்காக நிச்சயமாக அல்லவே அல்ல. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்திலே கொண்டுதான். நான் புராணங்களைச் சொன்னதற்காக வருத்தப்படக் கூடாது. நான் சொல்ல வந்தது எதற்காக என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மது அருந்துவதால்தான் ஒருவன் கெடுகிறான் என்பது அல்ல. அவனவன் மனோநிலையில் அவன் கடவுளாக இருந்தால் கூடக் கெடுகிறான்.

பிரம்மா, திலோத்தமையை உற்பத்தி செய்கிறான். அந்த அவருடைய மகளை, அழகான பெண்ணாக உற்பத்தி செய்ததும் அந்தப் பெண் மீது அவருக்கு மையல் ஏற்பட்டது. துரத்திக்கொண்டே ஓடினார். பெண்ணைக் கற்பழிக்க முயற்சிக்கிறார். புராணம். அவர் என்ன மலிவு விலை மதுவா அருந்தி இருந்தார்? இல்லை. (சிரிப்பு) இந்திரன் ஒரு முனிவருடைய மனைவி அகலிகையைக் கற்பழித்தார்; மது

அருந்தி விட்டா சென்றார்? இல்லை. சந்திரன் குரு பத்தினியை, தாரையைக் கற்பழித்து அவளோடு கூடிக் கிடந்தான். அவன் மலிவு விலை மதுவா அருந்தி இருந்தான்? இல்லை. இது எல்லாம் ஒரு மன நிலையே தவிர, மது அருந்தியதால்தான் இது எல்லாம் என்று குற்றம் சொல்லக்கூடாது. இவற்றைச் சொல்லுகிற காரணத்தால், புராணங்களை மேற்கோள் காட்டுவதால், சங்க இலக்கியங்களை மேற்கோள் காட்டுவதால் நான் மது அருந்த வேண்டும் என்று வாதிடுகிறவன் அல்ல. எப்படி இங்கே தம்பி திரு. இராதா, எதிர்க்கட்சித் தலைவர், அதனுடைய தீமைகளை எடுத்துச் சொல்லி தன்னுடைய குடும்பத்தில் ஏற்பட்ட அந்தக் கொடுமையைச் சொன்னார். அதைப் போல மதுவினால் வருகின்ற தீமைகளை நாம் நாட்டுக்கு எடுத்துச் சொல்வோம்; சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

சிகரெட் பிடிக்கக் கூடாது என்று சொல்கிறோம். அதே நேரத்தில் சிகெரெட் விற்பனையைத் தடுப்பது இல்லை. உலகம் முழுவதும் சிகெரெட்டினால் வரும் தீமைகள் அந்த சிகெரெட்டில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் சிகெரெட் இன்றைக்குப் புழக்கத்தில்தான் இருக்கிறது. நம்மால் நிறுத்த முடியவில்லை; நம்மால் சட்டம் போட்டு தடுக்க முடியவில்லை. நான் படித்துக் காட்டினேனே இவை எல்லாம் வெறும் புள்ளி விவரங்களா? 3 லட்சம் பேர், 4 லட்சம் பேர் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன், அதிகார வர்க்கமேகூட அதற்கு உடந்தையாக இருக்கிறது. எதற்காக உண்மைகளை மறைக்க வேண்டும்? நம்முடைய மனசாட்சிக்கு விரோதமாக எதற்காகப் பேச வேண்டும்? நான் ஒத்துக் கொள்கிறேன், நான் தோல்வியை ஒத்துக் கொள்கிறேன். 12 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப் பட்டிருக்கிறது கள்ளச் சாராய வியாபாரிகளிடமிருந்து என்று நம்முடைய போலீஸ் அதிகாரி திரு. தேவாரம் சொல்கிறார் என்றால் அதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. அபராதமாக 12 கோடி ரூபாய் கட்டக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நிலைமை என்றால் எவ்வளவு கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டு இருக்கும்

என்றுதான் வருத்தப் படுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. எனவே இந்தச் சமுதாயம் சீர்பட வேண்டும். இன்றுள்ள இந்தச் சூழ்நிலையில் எல்லோரும் குடிக்கப் போவதில்லை. என்னதான் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டாலும்கூட, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் 8 சதவீதத்திற்கு மேல் இந்த மக்கள் தொகையிலே குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கை யாரும் சொல்லவில்லை. இதுவரையிலே அதே கணக்குதான்.

முன்பு, திரு. காமராஜர் ஆட்சியானாலும் சரி; பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய ஆட்சியானாலும் சரி; அதற்குப் பிறகு இவற்றை ஒத்தி வைத்த திமுக ஆட்சியானாலும் சரி, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதை மீண்டும் கொண்டு வந்த அந்தக் காலமானாலும் சரி; பிறகு அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். ஆட்சி புரிந்து, அவர் கொஞ்ச காலம் மதுவிலக்கை தீவிரமாகக் கடைபிடித்தாரே அந்தக் காலமானாலும் சரி; அதற்குப் பிறகு அவர் ஒத்தி வைத்தாரே, ரத்த செய்தாரே அந்தக் காலமானாலும் சரி; இந்தத் தீமையை நாங்கள் உணராதவர்கள் அல்ல. இந்தத் தீமையைப் பற்றி அது அகற்றப்பட வேண்டுமென்பது பற்றி நாங்கள் உங்களோடு முழு மனதோடு ஒத்துப் போகின்றோம். அதிலே இருவேறு கருத்துக்கு இடமே இல்லை.

தம்பி திரு. ராஜேந்திரன் அன்றைக்கு 'யதார்த்தம்' என்ற ஒரு அருமையான வார்த்தையைப் பயன்படுத்தினார். யதார்த்த நிலையை நாம் இன்றைக்குப் பார்க்க வேண்டும். வீம்புக்கு இன்றைய தினம் நாம் இந்தக் காரியத்தைச் செய்தே தீருவோம் என்று சொல்லுவதால் பொருளாதாரம் மாத்திரமல்ல. சமுதாயத்தினுடைய ஒழுக்கமேகூட இன்றைக்குக் கெட்டுப் போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைச் சொன்னேன். முதலிலே, 1971லே இது கொண்டுவரப்பட்டபோது கூட இதற்காக ஒரு பிரச்சாரக் குழு கட்சி சார்பிலே அமைக்கப்பட்டு, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அதற்குத் தலைவராக இருந்து, திரு. மதுரை முத்து போன்றவர்கள் அதிலே குழு

உறுப்பினர்களாக அமைந்து, அந்தக் குழு கொஞ்ச நாள் பணியாற்றியது. அதற்குப் பிறகு திரு. எம்.ஜி.ஆர். உடைய ஆட்சிக் காலத்திலே மீண்டும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட நேரத்தில் அவர்கள் ஒரு பிரச்சார இயக்கமே நடத்த வேண்டுமென்று, 1 கோடி ரூபாய் கூட அதற்காக ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட பணம், 5, 6 ஆண்டுக் காலமாக செலவழிக்கப்படவேயில்லை என்று நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தலைவராக இருக்கின்ற பொது கணக்குக் குழு அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக் கிறது. 1 கோடி ரூபாய், 1981-82லே ஒதுக்கப்பட்ட அந்தத் தொகை செலவழிக்கப்படவேயில்லை.

1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பாரா 79ல் குடிப்பதால் விளையும் தீமைகளைப் பற்றிய பிரச்சாரத்தை அரசு தீவிரமாக மேற்கொள்ள, திரைப்படங்கள், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், பாடல்கள் போன்றவற்றின் மூலம், மது விலக்கு பற்றி பிரச்சாரம் செய்வதற்காக முதல் தவணையாக ரூபாய் 1 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவித்து இருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பணம் செலவழிக்கப்படவே யில்லை. திரும்ப அரசாங்கக் கருவூலத்திற்கு சென்று விட்டது என்பதை மிகுந்த வேதனையோடு திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பொது கணக்குக் குழு அறிக்கையிலே, இறுதியாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர், காட்டிக் கொடுப்பதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. அவர் தெரிவித்து இருப்பதைத்தான் நான் இப்போது சொல்கின்றேன். குமரி அனந்தனைப் போன்றவர்கள் செயலாளராக இருந்து மதுவிலக்கு பிரச்சாரக் குழுவை நடத்தட்டும், ஒரு கோடி அல்ல, 5 கோடி ரூபாய் மதுவிலக்கு பிரச்சாரத்திற்காகச் செலவழிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கப்படும். செலவழிக்கப்படும். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் கணக்கை ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளலாம். செலவழித்து இருக்கிறோமா இல்லையா என்ற கணக்கை ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளலாம்.

மலிவு விலையில் மது கொடுக்கிறார்கள். ஆகவே இந்த ஆட்சி ஒழிய வேண்டும்; இந்த ஆட்சியை அகற்றுவதற்கு கொடி பிடிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஒரு கட்சி பாண்டிச்சேரியிலே தேர்தலிலே நின்றது. நின்றது என்று நான் சொல்லித்தான் உங்களுக்கெல்லாம் தெரியும். அந்தக் கட்சியினுடைய – பாட்டாளி மக்கள் கட்சி – தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னார்கள் தெரியுமா? எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது அந்தத் தேர்தல் அறிக்கை. ''கள், சாராயக் கடைகளை அரசே ஏற்று நடத்தும்'' தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். குறைந்த விலையில் கள், சாராயம் விற்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், இங்கே போராட்டம் என்றால், தி.மு.க. மீது உள்ள ஒரு அலர்ஜி; ஒரு வெறுப்பு; ஒரு எரிச்சல்; ஒரு கோபம் என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மதுப் பழக்கத்தை நிறுத்துவது என்பதும், இதை அகற்றுவது என்பதும் ஒரு சமுதாயப் பிரச்சினை என்பதை மனதிலே கொள்ள வேண்டும். எனவே பிரச்சார இயக்கங்கள் இதற்கு முடுக்கிவிடப்பட வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைக்கு 'லோக குரு' சங்கராச்சாரியார்கூட மலிவு விலை மதுவை எதிர்த்துப் பேசியிருக்கிறார். அவர் தன்னை தமிழக அளவிற்குச் சுருக்கிக் கொண்டு பேசுகிறார் என்றால் தமிழ் நாட்டின் மீது மட்டும் அவருக்கு அவ்வளவு கவலை. உலகத்திற்குக் குருவாக இருக்கிற அவர், இருந்தாலும் உலகத்தைப் பற்றிக்கூட கவலைப்படாமல் தமிழ் நாட்டைப் பற்றி மாத்திரம் கவலைப்படுகிறார் என்றால் அவரைப் போன்றவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சாரத்திற்கு ஆணி வேராக இருக்கவேண்டும். சேவா சங்கங்கள், மாதர் சங்கங்கள் இவர்களெல்லாம் கூட அரசோடு ஒத்துழைக்க வேண்டும். என்ன செலவானாலும் எந்த வகையிலே யானாலும் இந்த மது தீதானது என்பதை மக்களிடத்திலே பிரச்சாரம் செய்ய இந்த அரசு எவ்வளவும் செலவழிக்கத் தயாராக இருக்கிறது.

அதே நேரத்திலே உங்களுக்கு உறுதியளிக்கிறேன். மதுக்கடைகள், கோயில், கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் இங்கெல்லாம் நிச்சயமாக அமைக்கப்பட மாட்டாது என்ற உறுதியைத் தருகின்றேன். கடைகளில் குடிப்பதை நிச்சயமாக அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியளிக்கிறேன். பொதுத் துறையில் தமிழ்நாடு ஸ்பிரிட் நிறுவனம் உற்பத்தி செய்யும். பொதுத் துறையில் டாஸ்மாக் நிறுவனம் மொத்த வினியோகம் செய்யும். சில்லறை விற்பனைக் கடைகளில், நான் முதலிலேயே கூறியுள்ளபடி ஏலம் மற்றும் டெண்டர் முறைகளில் அனுமதிக்கப்படுவதால், லஞ்சத்திற்கோ, ஊழலுக்கோ இடம் இல்லாமல் நடக்கும் என்ற உறுதியை சொல்லிக் கொள்கிறேன்.

சில அறிவிப்புகளை, இந்த மாமன்றத்தில், உங்களுடைய ஒப்புதலுக்காக, என்னுடைய பேச்சின் இறுதியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்சினையில் வாதாடுகின்ற வகையில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் நான் ஒன்றைப் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். கோவை பொதுக் குழுவில், மதுவிலக்கைத் தளர்த்த வேண்டுமென்று சொன்ன நேரத்திலும், அதற்குப் பின்னால் திண்டுக்கல் தேர்தலில் தோல்வியடைந்த நேரத்திலும், கோவைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்ட நேரத்திலும், உங்கள் ஆட்சியின் கடைசிக் காலத்தில் பூரண மதுவிலக்கைக் கொண்டு வருவோம் என்று அறிவித்து, அன்றைக்கு முழு மதுவிலக்கை நீங்கள் கொண்டு வந்தீர்கள். அதற்குப் பின்னால் நீங்கள் மீண்டும் ஆட்சியில், மதுவிலக்கு வருகிறது என்று சொன்ன நேரத்தில், வாதாடிய நேரத்தில், ஆதரித்துப் பேசிய பேச்சுக்கள் எல்லாம் இந்த மன்றத்தின் குறிப்பேடுகளில் இருக்கின்றன. இதை ஒரு வாதப் பிரச்சினையாகக் கருதாமல் ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருதி, மீண்டும் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். தேர்தலை மட்டுமே கருதக்கூடாது. தேர்தலில் தோற்றால் ஒத்தி வைப்பது. மீண்டும் வந்தால் அறிவிப்பது, மறுபடியும் தேர்தல் வந்தால் மாற்றுவது என்ற நிலை வேண்டாம் என்று

தயவுசெய்து நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சமுதாய நிலையில் நீங்கள் இதை அணுக வேண்டும். இதற்கு ஆதாரம் இருப்பதாகக் கூறி மதுவைக் கொண்டுவர வேண்டுமென்பது அவசியமில்லை. இதற்கான வருவாயை எத்தனையோ வழிகளில் தேடிக் கொள்ளலாம். நீங்கள் தயவு செய்து மது விலக்குக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் இதற்கு இறுதியாகப் பதில் சொல்கிறேன். இப்போது சில அறிவிப்புகளைப் பற்றிச் சொல்வதாகச் சொன்னேன். புதிய வரிகள் பற்றி, நம்முடைய இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அது குறித்து சில சலுகைகளை நான் இங்கே அளிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் விற்பனை வரி அமைப்பில் 193 பொருட்கள் மாத்திரம் ஒரு முனை வரிவிதிப்பின் கீழும், மீதமுள்ள எல்லாப் பொருட்களும் பலமுனை வரிவிதிப்பின் கீழும் இருந்ததை, வணிகர்களின் நலன் கருதி, இனி எல்லாப் பொருள்களும் ஒரு முனை வரிவிதிப்பின் கீழ் வரும் என்றும், பலமுனை வரிக்கு உட்பட்ட பொருள்கள் அனைத்தும் இதுவரை 10 சதவீதமும் அதற்கு மேலும் என்ற அளவிற்கு வரி செலுத்துவதற்கு மாறாக, இனி 8 சதவீதம் வரி மட்டுமே செலுத்தினால் போதும் என்ற வரி அமைப்பு மாற்றியமைக்கப் பட்டது. அந்த அடிப்படையில், ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின்மீது விதிக்கப்படும் வரி விதிப்பு முறை பல ஆண்டுகளாக சிக்கலான சூழலில் இருந்து வந்தது. அதைத்தான் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை ஒழுங்குபடுத்தும் வகையில், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10 லட்சத்திற்கும் அதற்கு மேலும் வியாபாரம் செய்கிற ஓட்டல்களின் உணவுப் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீது 5 சதவீதம் வரி விதிக்க அறிவிக்கப்பட்டது. பிறகு, நடுத்தர ஓட்டல்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற, கோரிக்கையும் ஏற்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம்

ரூபாய்க்கு மேல் 15 லட்சம் வரை வியாபாரம் செய்யக் கூடிய ஓட்டல்களுக்கு, கூட்டு வரி முறை (Compounding tax) ஏற்படுத்தப்பட்டது.

அவர்கள் பேசும் போது கர்நாடக மாநிலத்தைப் பற்றி சொன்னார்கள். கர்நாடகத்தில் 1 லட்சம் ரூபாய் turnover இருந்தாலே கூட அங்கே வரி இருக்கிறது. ஆனால் நாம் 10 லட்சம் ரூபாய் முதல் 15 லட்சம் ரூபாய் வரையிலும் compounding tax turnover என்று வைத்திருக்கிறோம். ரூ. 15 லட்சத்திற்கு மேல் வியாபாரம் செய்யப்படுகிற ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில், விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள் மீது 5 சதவீதம் பலமுனை வரி இருக்கும் என்று முன்பு தீர்மானிக்கப்பட்டது. இந்த வரிவிதிப்பை எதிர்த்து ஓட்டல் உரிமையாளர்கள் சிலர் உயர்நீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார்கள். பிப்ரவரி மாதத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழு இந்த வரி விதிப்பு முழுமையாகச் செல்லும் என்று தீர்ப்பு அளித்தனர். இதை எதிர்த்து, அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார்கள். உச்ச நீதிமன்றம் இதற்குத் தடையாணை எதுவும் வழங்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் வரிவிலக்கை எப்படியும் பெற வேண்டுமென்று முயற்சியில் சில தவறான போக்கில் ஓட்டல் உரிமையாளர்கள் இறங்கியுள்ளதாக எனக்குத் தகவல்கள் வந்துள்ளன. ஏற்கனவே சிறு தொழில் அதிபர்கள் கூட்டத்தில் நான் திருச்சியில் பேசும்போது, செயற்கை வைர வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை நீக்கவேண்டு மென்ற கோரிக்கையைப் பற்றி அரசு பரிவுடன் ஆய்ந்து கொண்டிருந்தபோது, அந்த செயற்கை வைர வியாபாரிகள் தவறான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்து குறித்தும், அதன் காரணத்தால் செயற்கை வைரத்திற்குத் தொடர்ந்து வரி விதிப்பு நீடிக்க இருக்கிறது என்றும் தெரிவித்திருந்தேன்.

இந்தச் செய்தியை ஏடுகளிலே கண்ட ஹோட்டல் உரிமையாளர்கள் அவசரம், அவசரமாக வந்து என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களிடம் இதுபோன்ற வசூல் காரியங்களிலே ஈடுபடக்கூடாது என்றும், எனவே இதுவரையில் வசூலித்த தொகையை உடனடியாக

அவரவர்களிடம் திரும்பத் தந்துவிட வேண்டும் என்றும், அது இயலாத காரியம் என்றால் அந்தத் தொகையை முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் அரசுக்கே சேர்த்துவிட வேண்டும் என்றும் தெரிவித்தேன். அவர்களிடத்திலே இருந்து இன்னும் பதில் வரவில்லை. வரி பற்றிய கோரிக்கையைப் பொறுத்தவரையில் பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக அனைத்துப் பொருட்களையும் கொண்டு வரும் கட்டத்தில், ஹோட்டல் மற்றும் உணவு விடுதிகளில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீது விற்கப்படும் 5 சதவீத பலமுனை வரி தற்போது இந்த மதிப்பீட்டால் 8 சதவீத ஒருமுனை வரியாக மாறி இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையிலே பலமுனை வரியிலே இருந்த அனைத்துப் பொருட்களையும் ஒட்டுமொத்தமாக ஒருமுனை வரியாக கொண்டுவரும்போது ஒருசில பொருட்களுக்கு 8 சதவீதத்திற்கும் குறைந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக அலுமினியப் பாத்திரத்திற்கு 4 சதவீதம்: பித்தளை, செம்பு பாத்திரத்திற்கு 5 சதவீதம்; தங்கம், வெள்ளி ஆகியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களுக்கு 4 சதவீதம், காலணி மற்றும் டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதவற்றிற்கு 5 சதவீதம்: ஏலக்காய்க்கு 3 சதவீதம்; ரொட்டி, பிஸ்கட் போன்ற டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாத பொருட்களுக்கு 5 சதவீதம். இன்றைக்கு இதே அடிப்படையில் உணவுப் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீதான விலையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 8 சதவீத ஒருமுனை வரியை 5 சதவீதமாகக் குறைக்க இந்த அரசு தீர்மானித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1.4.1990 முதல் இது நடைமுறைக்கு வரும்.

அடுத்து பழைய பாக்கி பற்றி திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொண்டு 1989-90ஆம் ஆண்டுப் பாக்கியை 1990–91ல், மாதத் தவணையில் அவர்கள் கட்டலாம் என்கிற சலுகையை அவர்களுக்கு நான் வழங்குகிறேன்.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே

சொன்னபோது வைரத் தொழிற்சாலையிலே அவர்கள் சொன்ன அறிவிப்புக்குப் பின்னாலே கூட இவர்கள் பல்வேறு முயற்சிகளிலே ஈடுபட்டார்கள் என்பதாலும், அவர்கள் அதைக் கொண்டு வந்து கட்டிவிட வேண்டுமென்று சொன்னதையும் நான் மிகுந்த அளவில் வரவேற்கிறேன். ஏனென்றால் நியாயத்தின் அடிப்படையிலே காரியங்கள் செய்யப்பட வேண்டுமே தவிர வேறு வகையிலே செய்வதை யாரும் ஒத்துக் கொள்ளமுடியாது என்பதைப் பொறுத்தவரையில் முதல்வர் அவர்களோடு என்னுடைய உணர்வையும் நான் பொருத்திக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் – மன்னிக்க வேண்டும் என்னுடைய சகோதரர்கள் – நான் ஒரு தனி அமைப்பு வைத்திருந்த நேரத்திலே உண்பகத்தினுடைய வரியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினோம். அந்த வகையிலே பார்க்கிற போதுதான் இது என்னுடைய மனதை மிகவும் தொட்டது. உண்பகத்திற்கு வரி கூடாது. உண்பக உணவுக்கு வரி கூடாது என்று போராட்டமே நடத்திய காரணத்தால் அதில் ஆழ்ந்து நின்று கொண்டிருக்கிறோம்.

இன்னும் ஒரு வேண்டுகோளை நான் சொல்கிறேன். அவர்களுடைய பரிசீலனைக்காக. இப்போது நீங்கள் வரி வசூலிப்பதாக இருந்தால் உண்ணுகிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல், அதனை விநியோகம் செய்கிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல், இந்த வருமானத்தை நீங்கள் பெற வேண்டும் என்று சொன்னால் மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது ஒரு கருத்தினை வைத்திருந்தார், அதாவது ஏ.பி.சி.டி. என்று நான்கு வகையாகப் பிரித்துக்கொண்டு வருடத்திற்கு ஒரு தடவை உரிமம் பெறுகிற நேரத்தில் 25,000 ரூபாய் 30,000 ரூபாய், என்று அவர்களிடம் இருந்து வசூலித்துக் கொண்டால் அதிகாரிகளின் தொல்லையும் இராது; சாப்பிடுகிறவர்களுக்கும் இடர்ப்பாடு ஏற்படாது. நீங்கள் பண்டங்களின் விலையைக் கூட்டக் கூடாது என்று கூடச் சொல்லுங்கள். மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் சொல்வதற்குக் காரணம் அன்றைக்கு

இருந்தே இந்த உணவுப் பண்டங்கள் பற்றிய ஒரு எண்ணத்தோடு இருக்கிறேன் என்பதற்காகத்தான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் அன்றைக்கும் உங்களைப் போல் ஹோட்டல் அதிபர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறுவது போல் மொத்தமாக 25,000 ரூபாய், 30,000 ரூபாய் கொடுத்து விட்டால் ஹோட்டல் வியாபாரிகளுக்கு என்ன ஆதாயம் அதிலே என்றால் – இன்கம் டாக்ஸ்காரர்களை – அவர்கள் இந்த விற்பனை வரியைச் செலுத்துவதன் மூலமாக எவ்வளவு இவர்களுடைய (turnover) என்பது வருமான வரித் துறையிலே இருப்பவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. அதாவது இந்த வரிவிதிப்பு இருந்தால், தாங்கள் சொல்வது போல், 25,000, 30,000 ரூபாய் என்று ஏ.பி.சி.டி. என்ற அடிப்படையிலே ஹோட்டல்காரர்களைப் பிரித்துக் கொண்டு கொடுத்து விட்டால் வருமான வரிக்குக் கணக்குப் போய்ச் சேராது. வருமான வரிக் கணக்கு மத்தியத்திற்குச் சென்றால்தான் அதிலேயிருந்து வருகிற வருமானப் பங்கு நமக்குக் கிடைக்கும். அதை நாம் இழந்து விடக் கூடாது. எனவே இதைத் தீர யோசிப்போம் பிறகு.

அடுத்து 'ரெடிமேட் கார்மெண்ட்ஸ்' நீங்கலாக அதாவது தைக்கப்பட்ட துணிகள் நீங்கலாக அதாவது 'ஸ்ட்டிச்ட் ஐட்டம்ஸ்' நீங்கலாக மற்றவற்றைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 4 சதவீதம் பலமுனை வரி விதிக்கப்பட்டிருந்தது. ஒருமுனை வரியாக மாற்றும்போது அது 8 சதவீதமாக அதிகரித்து விட்டது. தற்போது 5 சதவீதம் என்று ஒருமுனை வரியாக அது குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படக் கூடிய பாலித்தீன் சாக்குகளுக்கு 2 சதவீத பலமுனை வரி விதிக்கப்பட்டிருந்தது. ஒருமுனை வரியாக மாற்றும்போது 8 சதவீதம் என்று விதிக்கப்பட்டதை தற்போது மீண்டும் அது

2 சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டு ஒருமுனை வரி விதிக்கப்படும்.

தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டத்தில் இயங்கும் ஐவ்வரிசி கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு வரிச் சலுகை ஏற்கெனவே 5 சதவிகிதம் பலமுனை வரிக்குப் பதிலாக 4 பர்சென்ட் பலமுனை வரிச் சலுகையாக வழங்கப்பட்டிருந்தது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட ஒருமுனை வரி முறைப்படி 8 சதவிகிதத்திற்குப் பதிலாக இனி 4 சதவிகிதம் ஒருமுனை வரி விதிக்கப்படும். இதில் கூட்டுறவுச் சங்கம் சாராத இதர வணிகர்களுக்கு 5 பர்சென்ட் ஒருமுனை வரி விதிப்பாக மாற்றியமைக்கப்படும்.

எலெக்ட்ரானிக்ஸ் இதிலே கூட சில குறைபாடுகள் எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. கர்நாடகத்திலே டி.வி.க்கு 3 பர்சென்ட். மற்ற எலக்ட்ரானிக் பொருட்களுக்கு 6 பர்சென்ட். ஆந்திராவிலே 2 பர்சென்ட். கேரளாவிலே 4 பர்சென்ட். குஜராத்திலே 8 பர்சென்ட். இப்போது நாம் 4 பர்சென்ட் என்று ஆக்கினோம். அதையும் குறைக்க வேண்டும் என்று அவர்கள் இன்றைக்கு வாதிடுகிறார்கள். எனவே ஒரு சமரசமாக இனிமேல் அது 3 பர்சென்ட் என்கின்ற அளவுக்குக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈட்டுறுதித் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். இரண்டு மூன்று முறை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் இந்த மாமன்றத்திலே அதைப் பற்றி கருத்து கூறியிருக்கிறார் 10 ரூபாய் விவசாயத் தொழிலாளர் களிடத்திலே பெற்று அந்தப் பணம் திருப்பிச் செலுத்தப்பட வில்லை என்று சொன்னார். இதைப் பற்றி கொஞ்சம் விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் குறு விவசாயிகளுக்கென ஒரு ஈட்டுறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டம் 1984ல் ஏற்படுத்தப் பட்டது. அரசு ஆணை எண் 1503, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, தேதி 5.8.1989ல் இது நிறுத்தப்பட்டது. ஆனால் இத்திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்பே, அதாவது அரசாணை எண் 1255, தொழிலாளர்

மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தேதி 27.6.1989ல் நிறுத்தப்பட்ட கணக்குகள் எப்படி முடிவுபடுத்துவது என்று தெளிவான விவரங்கள் உள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் இத்திட்டத்தில் அதிக நபர்களைச் சேர்க்க வேண்டுமென்று முயற்சிகள் எடுக்கப்பட்டது முன்பிருந்த ஆட்சியில். ஒரு குறியீட்டின் அடிப்படையில் பல கணக்குகள் ஏற்படுத்தப்பட்டன. இப்படிச் செய்ததில் மொத்தம் 16.6 இலட்சம் நபர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் 31.12.1988ல், உள்ள கணக்குப்படி அந்த 16.6 இலட்சம் என்பது வெறும் 4.5 இலட்சம் நபர்கள் மாத்திரம் என்ற அளவுக்குக் குறுகிவிட்டது. எனவேதான் 16.6 இலட்சம் என்ற எண்ணை விட மிகக் குறைவான நபர்கள் இத்திட்டத்தில் தொடர்ந்து பங்கேற்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்தோம்.

10 ரூபாய் கட்டினால் அவர் இறந்து போனால், 5 ஆயிரம் ரூபாய் தரப்படும் என்பதற்குப் பதிலாக, இந்த 10 ரூபாய் கூட கட்டாமல், இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்து சகல விதமான தொழிலாளர்களுக்கும் என்ற அளவில், அன்றைக்குக் கூட நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு சில தொழிலாளர்களைப் பற்றிகூட அன்றைக்கு இணைத்துச் சொல்லியிருக்கிறார். அப்படி எல்லா தொழிலாளர்களுக்கும், இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதம் அவர்கள் 10 ரூபாய் தரவேண்டும். அதை ஈட்டுறுதியாக அவர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் என்று வழங்கப்படும் என்ற நிலையை மாற்றி, விபத்திலே அவர்கள் மாண்டு விடுவார்களேயானால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும், குடும்பத் தலைவரை இழந்து வாடும் வறிய குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாயும் தரப்படும் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது. பழைய பாக்கித் தொகை 11 கோடி ரூபாய் அளவுக்குத் திருப்பித் தரப்பட வேண்டியிருக்கிறது. அதற்கான ஆணை பிறப்பிக்கப்படவிருக்கிறது என்பதையும் வெகு விரைவிலே அந்த 11 கோடி ரூபாய் அந்தப் பணம் கொடுத்தவர்களுக் கெல்லாம் திருப்பித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பத் தலைவர் இறந்தால் 2,000 ரூபாய் நிதி வழங்குகின்ற புதிய

திட்டத்தின்படி, நடப்பாண்டில் 10,517 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. எனவே இந்தத் திட்டத்தில் 2,000 ரூபாய் என்ற நிதி இந்த ஆண்டிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதையும், இதற்குக் கூடுதல் செலவு 1½ கோடி ரூபாய் ஆகும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய ஆட்டோ பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே அதைப் பற்றிக் கலந்தாலோசித்து ஒரு அறிக்கையை இங்கே தர விரும்புகிறேன். 30.6.1989 வரை சென்னையில் 5,846 ஆட்டோ பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. கோவையில் 4,304 ஆட்டோ பெர்மிட்டுகளும், செங்கை–அண்ணா மாவட்டத்தில் 31.12.1989 வரை, 3,560 ஆட்டோ பெர்மிட்டுகளும் கொடுக்கப் பட்டுள்ளன. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் ஆட்டோ பெர்மிட்டுகள் கொடுப்பதற்குத் தடைகள் இப்போது எதுவும் இல்லை.

சென்னையிலே புதிய ஆட்டோ பெர்மிட் வழங்கப் படாத காரணத்தால், செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, திருவள்ளூர் போன்ற புறநகர்ப் பகுதிகளில், ஆட்டோ பெர்மிட் பெற்றவர்கள் அந்த ஆட்டோக்களை சென்னைக்கு ஓட்டி வருகிறார்கள். மேலும் சென்னை நகரத்தில் பெர்மிட் இல்லாத ஆட்டோக்கள் புழக்கத்தில் இருப்பதாகவும், ஒரே பெர்மிட்டில் இரண்டு, மூன்று ஆட்டோக்கள் ஓடிக் கொண்டிருப்பதாகவும், அதற்கு ஒரு சில அரசு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் உடந்தையாக இருப்பதாகவும், இவர்களுக்குக் கடன் கொடுப்பவர்களுக்குச் சாதகமாக பெர்மிட் முறை அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் ஓட்டுபவர்களை விட இந்த ஆட்டோ பெர்மிட்டுகளை முடக்கி வைத்திருப்பவர்கள் அதிக லாபம் அடைகிறார்கள் என்றும், அந்த பெர்மிட்டுகளுக்குத் தடை இருந்த போதிலும் 1986 அக்டோபர் வரை அவ்வப்போது தடைகளைத் தளர்த்தி புதிய பெர்மிட்களை அரசு கொடுத்து வந்தது என்றும், இதனால், முறைப்படி ஒரு கொள்கையை அரசு கடைப்பிடிக்காத காரணத்தால், ஆட்டோக்களை போக்குவரத்திற்கு உபயோகப்படுத்துகின்ற பொதுமக்கள்

பல்வேறு இடையூறு களுக்கு ஆளாகிறார்கள் என்றும், மீட்டர்களைப் போடாமல் ஓட்டுபவர்கள் பணம் அதிகமாகக் கேட்கிறார்கள் என்றும் இதனால் சச்சரவுகள் ஏற்பட்டு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும் பல்வேறு புகார்கள் கூறப்படுகின்றன.

நாங்கள் இந்தப் புகார்களை ஆராய்ந்து வருகிறோம். மலிவான ஒரு போக்குவரத்து ஆட்டோ என்பதை மனதில் கொண்டு இதை ஒரு கருவியாக்கி சிலர் லேவாதேவி நடத்துவதற்கு இந்த அரசு எந்தக் காலக் கட்டத்திலும் உடன்படாது. இது இந்த அரசின் நிலையான கருத்து. இந்தக் கருத்தின் அடிப்படையில் இப்போது இருக்கிற முறைகளை மாற்றி சில திருத்தங்களைச் செய்ய அரசு முன் வந்துள்ளது.

(1) 1.10.1986 முதல் 31.12.1989 வரை தற்போதுள்ள திட்டப்படி வழங்கப்பட வேண்டிய பெர்மிட்கள் 1,732. அதற்காக விண்ணப்பித்து இருப்போர் 3,850 பேர். அவர்களில் 1,319 பேர்களை போக்குவரத்து ஆணையர், மத்திய அரசும் மாநில அரசும் அறிவித்த விதிமுறைகளின்படி ஏற்னெவே பல்வேறு கட்டங்களில் தகுதிகயின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து சிபாரிசு செய்துள்ளார்கள். அவர்களுக்கு எல்லாம் உடனடியாக பெர்மிட்கள் வழங்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) 1.4.1990 முதல் சென்னை நகரில் ஆட்டோ பெர்மிட் வழங்குவதற்கு இருந்த தடை நீக்கப்படுகிறது. தகுதியுள்ள அனைவரும் இந்த பெர்மிட்டைப் பெற விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம். இப்போதுள்ள சிறப்புத் திட்டமும் தொடர்ந்து அமுல்படுத்தப்படும்.

(3) பெர்மிட் பெற்று, ஆட்டோ வாங்க பண உதவி பெற விரும்புவோர் இந்த அரசு சென்ற ஆண்டு அறிவித்த கடன் மற்றும் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(4) பெர்மிட் முறைக்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளதால் ஏற்கெனவே பெர்மிட்களை வைத்து சட்டத்திற்குப் புறம்பாக

உபயோகப்படுத்துவோர் மீதும், பொதுமக்களுடைய நலன்களுக்கு ஊறு விளைவிப்போர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். சமூகத்தின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கும் முறையில் இந்த பெர்மிட்டை வைத்திருப்பவர்கள் மீதும் அரசு இனி கடும் நடவடிக்கை எடுக்கும்.

அடுத்து, அகவிலைப்படி பற்றிய அறிவிப்பு. அரசு அலுவலர் அகவிலைப்படி உயர்வு. மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் மற்றும் அகவிலைப்படி வழங்கும் முறையினை முழுமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு கடந்த ஆண்டு ஜூன் திங்களில் அதற்கான ஆணையினைப் பிறப்பித்தது. மத்திய அரசு அலுவலர் களுக்கான அகவிலைப்படி ஆணைகள் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் தரப்பட்ட உடன் இந்த அரசு ஆணை எண். 1069, நாள் 27.9.1989ல் மத்திய அரசு அளித்த அகவிலைப்படி விகிதத்திலே மாநில அரசின் அனைத்து அலுவலர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியது. இந்த ஆண்டு மீண்டும் மத்திய அரசு 20.3.1990 அன்று அகவிலைப்படி விகிதத்திலே சில மாற்றங்களைச் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி 1.1.1990 ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு புதிய அகவிலைப்படி விகிதங்களை மாற்றியமைத்துள்ளது. இதை அப்படியே பின்பற்றி மாநில அரசின் அனைத்து அலுவலர், ஆசிரியர் மற்றும் பல்கலைக் கழக மானியம் பெற்று வருகின்ற கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் போன்ற அனைவருக்கும் அகவிலைப்படி 1.1.1990ல் இருந்து உயர்த்தி வழங்கப்படும். இந்த புதிய அகவிலைப்படி விகிதத்தால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் 60 கோடியாகும்.

அரசு அலுவலர்க்குத் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பற்றி ஒரு விளக்கம். நிதிநிலை அறிக்கையில் அரசு அலுவலர்களுக்கு, குறிப்பாக முதுநிலையிலே உள்ளவர் களுக்கு நலம் அளிக்கும் வகையில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பதவித் தகுதி ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு ஆண்டொன்றுக்கு கூடுதல் செலவு ரூ. 10 கோடி ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது. ரூபாய்

2,500ஐ விடக் குறைவான தொடக்கச் சம்பளம் பெறும் சம்பள விகிதங்களிலுள்ள அனைத்து வகை அலுவலர்களுக்கும் இது பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை என்ற முறை முன்பு, அதாவது 1970ல் இந்த அரசால் கொண்டு வரப்பட்டது.

அப்போதிருந்த சூழ்நிலை, மாநில அரசின் ஊதிய விகிதங்களுக்கும், மத்திய அரசின் ஊதிய விகிதங்களுக்கும் பெரும் வித்தியாசம் இருந்தது. எனவே, மாநில அரசு அலுவலர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தேர்வுநிலை முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு படிப்படியாகத் தேர்வு நிலை பல பதவிகளுக்கு உருவாக்கப்பட்டது. சிறப்பு நிலை என்பது ஒரு சில பதவிகளுக்கு மாத்திரம் பிறகு ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். தேர்வு நிலை ஏற்படுத்தியதன் அடிப்படை நோக்கம் மத்திய மாநில அரசுகளின் விகிதங்களில் உள்ள வேறுபாடுகளை ஈடுகட்டும் ஓர் இடைக்கால முயற்சி என்பதை இங்கே புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்களை இந்த அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்களை ஏற்படுத்திய பிறகு, மத்திய அரசு பின்பற்றக்கூடிய முறைகளைத்தான் மாநில அரசும் பின்பற்ற இயலும். மத்திய அரசு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைகளை உருவாக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையை அனுதாபத்தோடு பரிசீலித்து தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஏற்படுத்தப்படுமென்று இந்த அரசு அறிவித்துள்ளது. எனினும் தேர்வு நிலை பதவி உயர்வு அளவுக்கு இருக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசு அலுவலர்களுடைய அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டது. அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகியவற்றின் நிலையைக் கவனித்தால், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் தேர்வு நிலை மாத்திரம்தான் இருக்கிறது. இந்தத் தேர்வு நிலை சாதாரண நிலையைவிட ஒரு அடுக்கு அதிகமாக one scale above இருக்கிறது. ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் சிறப்பு நிலை ஏற்படவில்லை. கேரள

மாநிலத்தில் தேர்வு நிலை, மற்றும் சிறப்பு நிலை இருக்கிறது. கேரள மாநிலத்திலேயும் தேர்வு நிலை, ஒரு அடுக்கு அதிகம். சிறப்பு நிலை அதற்குமேல் ஒரு அடுக்கு நிலை. இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தேர்வு நிலை, பதவி உயர்வு அளவுக்கு இருக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இல்லை. பதவி உயர்வு அளவுக்குச் செல்ல வேண்டுமென்றால் 3 அடுக்குக்கு மேல் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனினும், முன்பு இருந்த நிலையைக் கருதி, தற்போதுள்ள புதிய சூழ்நிலையில், தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைத்திட்டத்தை எவ்வாறு செயற்படுத்துவது என்று அரசு ஊழியர்களின் அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில் பெரும்பாலான பதவிகளுக்குத் தேர்வு நிலை இரண்டு அடுக்குகளுக்குக் குறையாமலும், சிறப்பு நிலை அதை விட ஒரு அடுக்கு மேல் என்ற புதிய திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் இன்று பிறப்பிக்கப் படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புதிய முறையில் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையானது தொடக்க ஊதியம் ரூபாய் 2,500ம் அதற்குக் கீழே உள்ள ஊதிய விகிதங்களில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பொருந்தும். இதிலே குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முன்பு இருந்த முறையில் சில பதவிகளுக்கு மட்டுமே சிறப்பு நிலை இருந்தது. இந்த நிலையை மாற்றி தொடக்க ஊதிய விகிதம் ரூபாய் 2,500ம், மற்றும் அதற்குக் கீழே உள்ள ஊதிய விகிதங்களைப் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் தற்போது சிறப்பு நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையினால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 15 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் தொகை நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட 10 கோடி ரூபாயை விட 5 கோடி அதிகமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி மன்றங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள், தமிழ்நாட்டிலே உள்ள ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் நிதி நெருக்கடியால் இடையில் நிறுத்தப்பட்டது. ஊராட்சிகள் தங்கள் நிதி வசதிகளுக்குகேற்ப தொலைக்காட்சிப்

பெட்டிகளை வைத்துக் கொள்ளலாமென்ற ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 12,616 ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றில் 9,612 ஊராட்சிப் பகுதிகளில் தொலைக்காட்சி ஒளிபரப்பைக்காண இயலும் என்பது தற்போதைய நிலை. இதில், 4,417 ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5,195 ஊராட்சிகளில் சுமார் 2,000 ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி இல்லாததால். அரசாங்கமே அவற்றிற்கு மானிய அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இந்த அரசின் முன் வைக்கப் பட்டுள்ளது. முதற் கட்டமாக வரும் ஆண்டில், 1990–91ஆம் ஆண்டில், ஆயிரம் ஊராட்சிகளுக்கு முழு மானிய அடிப்படையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 1¼ கோடி ரூபாய் செலவாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தியாகிகளுடைய, மொழிக் காவலர்களுடைய பேருந்து பாஸ், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிக் காவலர்கள் ஆகியோர் ஆண்டு ஒன்றுக்கு 5,000 கிலோமீட்டர் தமிழகத்திற்குள், தமிழக போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணம் இல்லாமல் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட் டிருந்தது. இவர்கள் பேருந்துகளில் பயணம் செய்ய டோக்கன்கள் அல்லது பயணச் சீட்டுகள் பெற்று அதனைப் பாதுகாப்பாக வைத்திருந்து பயன்படுத்துவதிலே சிரமங்கள் ஏற்படுவதைப் தவிர்க்கவும், ஒவ்வொரு முறையும், போக்குவரத்துக் கழகங்களுக்குச் சென்று பயணச்சீட்டு பெறுவதற்கு அலைவதை தவிர்க்கவும், நடைமுறைச் சிக்கல் எதுவும் இன்றி வசதியாக இவர்கள் விரும்பும்போது போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் – திருவள்ளுவர் பேருந்து உட்பட, எல்லாப் பேருந்துகளிலும் பயணம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டு, 5 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் வரை பயணம் செய்யலாம் என்ற வரையறையை நீக்கி விருப்பப்படி தமிழகத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர்கள். மொழிக் காவலர்கள் ஆகியோருக்குச் சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக

நிர்வாக இயக்குநரால் நிழற்படம் ஒட்டப்பட்ட அடையாள அட்டை, (Identity Card) வழங்கப்படும். அந்த அடையாள அட்டை அடிப்படையில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

மாணவர்களுக்குப் பஸ் பாஸ். தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்கள் தமிழக அரசின் போக்குவரத்துப் பேருந்துகளில் பள்ளி சென்றுவர சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இந்தச் சலுகைக் கட்டணம் சென்னை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 50 சதவீதமாகவும், இதரப் பகுதியில் 33.3 சதவீதமாகவும் இருக்கின்றது. இந்தச் சலுகையினால் போக்குவரத்துத்துக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இழப்பு 6 கோடி. இதிலே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுகட்டும் பொறுப்பை அரசு மேற்கொண்டுள்ளது. துவக்கக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கின்றது. அனைத்து மாணவ, மாணவியர்களும் குறைந்தபட்சம் 8ஆவது வகுப்பு வரை கண்டிப்பாகப் பயில வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல்படுத்த இந்த அரசு பல முயற்சிகள் எடுத்து வருகின்றது; மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகம், சீருடை, காலணி மற்றும் சத்துணவு ஆகியவை வழங்குகிறது. அத்துடன் அவர்கள் பள்ளிக்குத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழகம் எங்கும் 8ஆவது வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் தமிழக அரசின் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாக வீட்டிலிருந்து பள்ளி சென்றுவர வசதிகள் செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால், ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ஏறத்தாழ 11 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொகையினை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கும். மேலும், தற்போது சென்னையிலும், கன்னியாகுமரியிலும் 50 சதவீதச் சலுகைக் கட்டணம் உள்ளது தமிழகம் எங்கும் விரிவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியிலே பயிலும்

மாணவ, மாணவியருக்குக் கூடுதல் சலுகைக் கிடைக்கும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 1.5 கோடியாக அமையும்.

மாணவர்களுக்கு மருத்துவ வசதி. தமிழ்நாட்டில் பள்ளி மாணவ, மாணவியர் மருத்துவ வசதித் திட்டம் 'ஸ்கூல் ஹெல்த் புரோகிராம் 153 தொடக்க சுகாதார நிலையங் களிலும், 40 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. ஒரு தொடக்க சுகாதார நிலையத்தில் 2 ஆயிரம் மாணவ, மாணவியர், ஒரு நகராட்சியில் 10 ஆயிரம் மாணவ, மாணவியர், என்ற அடிப்படையில் 7.6 இலட்சம் மாணவ, மாணிவியர்களுக்கு மருத்துவ ஆய்வு நடத்தப்படுகிறது. தற்போது தொடக்க சுகாதார நிலையம் 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒன்று என்று ஏற்படுத்தப்பட்டு உள்ளதால் மாநிலம் முழுவதும் புதிய சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் பள்ளிக்கூடங் களில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் களுக்கும் ஆண்டு மருத்துவ ஆய்வு மற்றும் சிகிச்சை செய்வதற்காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தால், 1.2 கோடிக்கு மேற்பட்டமாணவ மாணவியர் பயன் பெறுவார்கள். இதற்கு முதல் கட்டமாக 1 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படும்.

இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தி. இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் படம். இந்தப் படத்தை வரைந்த வேணுகோபால் சர்மா அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையிலும், நான் சார்ந்துள்ள கழகத்தின் சார்பிலும், இந்த அரசின் சார்பிலும் அவர் மறைவதற்கு முன்பும், மறைந்த பிறகும் கூட பல உதவிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவர் வரைந்த அந்தப் படத்தை அரசே எடுத்து, உரிமை வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவருடைய பிள்ளைகள் அவர் மறைந்த பிறகு எங்களுக்கு எழுதினார்கள். அது குறித்து அவர்களோடு அதிகாரிகளை விட்டுப் பேசச் சொன்னேன். அவர்கள் தந்துள்ள கடிதத்தை இங்கே படிக்க விரும்புகிறேன். ''ஐயா, ஓவியர் அமரர் வேணுகோபால் சர்மா அவர்களின் குடும்பத்தாராகிய எங்கள்

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எங்கள் தந்தையார் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப்படத்தின் உரிமையைத் தமிழ்நாடு அரசு பெற்றுக்கொண்டு எங்களுக்கு உதவும்படி எங்கள் தந்தையின் செயற்கரிய செயலைக் கண்டு உளம்மகிழ்ந்து தங்களின் மேலான முடிவுக்குப் பெரு மகிழ்வும் திருப்தியும் அடைகிறோம்.'' எனக் குறிப்பிட்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து இருந்தோம். எங்களின் நிலையைக் கருத்தில் கொண்டு கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 3 இலட்சம் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாகச் செய்தித் துறை இயக்குநரால் இன்று (26.3.1990) சொல்லப்பட்டது. இந்த 3 இலட்ச ரூபாய்க்கு எங்கள் தந்தையார் வரைந்த திருவள்ளுவர் திரு உருவப் படத்தின் உரிமையை தமிழ்நாடு அரசுக்கு வழங்குவதில் எங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் முழுமையான சம்மதம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். இது தொடர்பாகச் சட்டப்பூர்வமாக எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தருவோம்.'' என்று குடும்பத்தார் கையெழுத் திட்டுள்ள கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

இதுவன்னியில் பாரதிதாசனுடைய நூல்களை அரசுடைமையாக ஆக்க வேண்டும் இந்த நூற்றாண்டு விழாக் காலத்திலே என்ற முயற்சியைப்பற்றி நானும் கல்வியமைச்சர் அவர்களும் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அந்தக் குடும்பத்தாரோடு அதைப்பற்றித் தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவில் அதிலும் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மே தினத்தையொட்டி சென்னை மாநகரத்தில்– தமிழகத்தின் தலைநகரத்தில் மே தினச் சின்னம் ஒன்று அமைக்க வேண்டுமென்று நம்முடைய நண்பர் வரதராஜன் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கான அடிக்கல் நாட்டு விழா இந்த மே தினத்திலே நிச்சயமாக நடைபெறும் என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரும் மற்றும் கட்சிகளுடைய தலைவர்களும் எனக்கு ஆக்கபூர்வமாகவும், ஆதரித்தும் எதிர்த்தும் தந்துள்ள

கருத்துக்களையும், தோழமைக் கட்சிகளின் சார்பாக ஆதரித்துத் தந்த கருத்துக்களையும் நம்முடைய ரமணி அவர்கள், நம்முடைய பாண்டியன் அவர்கள், நம்முடைய தீட்சிதர் அவர்கள், லத்தீப் அவர்கள், அழகர்சாமி அவர்கள், வல்லரசு அவர்கள் ஆகிய அத்தனை கட்சிக்காரர்களும் தந்துள்ள ஆதரவுகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நீண்ட நேரம் நான் தந்துள்ள கருத்துக்களில் உங்களுக்கு ஒப்புதல் இருந்தாலும் ஒப்புதல் இல்லாவிட்டாலும் கூட இந்த அரசினுடைய முயற்சிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடைபெறும் என்கின்ற அந்த நம்பிக்கையோடு இந்தப் பணிகளுக்கு ஆதரவு அளிக்க அந்த நம்பிக்கையோடு இந்தப் பணிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

திரு.உ.ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தினுடைய மணிவிழா ஆண்டு என்று குறிப்பிட்டு, அந்தத் கவிஞனுக்குப் பட்டுக்கோட்டையிலே ஒரு கலையரங்கம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் எழுப்பியிருந்தேன். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு நல்லதொரு முடிவை இங்கே அறிவிப்பார்கள் என்று வேண்டி அமைகின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மணிவிழா என்று சொன்னார்கள். பொதுவாக, மறைந்துவிட்டவர்களுக்கு அதற்குப்பிறகு நூற்றாண்டு விழா தான் கொண்டாடுவது வழக்கம். அவர்கள் உயிரோடு இருக்கும்பொழுதுதான் மணிவிழா, வைரவிழா இதெல்லாம் எடுப்பது வழக்கம். மறைந்து விட்டவர்களுக்கு வேண்டுமானால், 60ஆவது ஆண்டு நினைவு நாள் என்று கொண்டாடலாம். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் மீது வரதராசன் அவர்களுக்குள்ள அதே அன்பு எனக்கும் உண்டு.

இன்னும் சொல்லப் போனால், இளம் வயதில், என்னுடைய கூட்டங்களில் மேடைகளிலேயிருந்து பாடிய இளைஞன் அந்தப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். எப்படி நினைவுச் சின்னம் அமைக்கலாம் என்பது பற்றி கலந்து பேசி முடிவெடுக்கலாம்.

இந்த ஆண்டு, அது மாத்திரமல்ல, டாக்டர் தருமாம்பாள் அம்மையாருடைய நூற்றாண்டு விழா, சுவாமி சகஜானந்தா அவர்களுடைய நூற்றாண்டு விழா, இவைகளெல்லாம் வருகின்றன. அவைகளையெல்லாம் நடத்தவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ்.ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு மூன்று பிரச்சனைகள் என்ற அளவிற்கு நான் எழுப்ப வேண்டுமென்று நினைத்தேன். நேரத்தைக் கருதி, முன்னாலே எழுப்பிய பிரச்சனைகளுக்கு முதல்வரவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அளவிற்கு ஒரு பதிலைச் சொல்லிவிட்டார்கள்.

அதிலே ஒன்று, அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதற்கு அவர்கள் கணக்கைக் காட்டி, ஏறிய அரிசி விலை ஏறியதுதான் என்று சொல்லிவிட்டார்கள்.

அதேபோல, மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்திச் சொன்னதற்கும் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அந்த பதிலில் எங்களுக்கு மன நிறைவு இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

அதேபோல், எங்களுடைய பொதுச் செயலாளர் தாக்கப்பட்டது இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்று பல முறை கேட்டிருக்கிறோம். அதற்கும் முதல்வரவர்கள் தன்னுடைய பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்று உங்களுடைய பொதுச் செயலாளர் அரசுக்குக் கடிதம் எழுதுவாரேயானால் அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

உரை : 25 **நாள் : 25.7.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்த அவையில் நடைபெற்றுள்ள விவாதத்தில் கலந்துகொண்டு, நல்ல அறிவுரைகளையும், ஆக்கபூர்வமான கருத்துக்களையும் கூறியுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் இன்றும் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கின்றார்கள். இந்த அறிக்கையைத் தயாரித்து அவைமுன் வைத்துள்ள நான் மனம் புண்படும்படியாகவோ, அல்லது வருந்தி வேதனைப்படும் நிலையிலோ யாரும் எந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தாமல் ஆக்கப்பூர்வமான யோசனைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. வேலாயுதன் அவர்களானாலும், தேவேந்திரகுல வேளாளர் சார்பில் உரையாற்றிய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களானாலும், ஜனதா தளத்தின் சார்பில் உரையாற்றிய திரு. வெங்கடசாமி அவர்களானாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. மணி அவர்களானாலும், பார்வேடு பிளாக் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. சந்தானம் அவர்களானாலும், சுயேச்சை என்ற நிலையிலே உரையாற்றிய திரு. வெங்கடாச்சலம் அவர்களானாலும், அ.இ.அ.தி.மு.க சட்டமன்றக் கட்சித் தலைவர் என்ற முறையிலே உரையாற்றிய திரு. திருநாவுக்கரசு அவர்களானாலும், இந்திய தேசிய லீக் சார்பில் உரையாற்றிய திரு. அப்துல் லத்தீப் அவர்களானாலும்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. பழனிசாமி அவர்களானாலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் உரையாற்றிய பேராசிரியர் தீரன் அவர்களானாலும், எனக்கு முன் உரையாற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களானாலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள பாராட்டக்கூடிய அம்சங்களை யெல்லாம் பாராட்டிவிட்டு, குறைகளைச் சுட்டிக்காட்டியிருப்பது, நான் நிதிநிலை அறிக்கையிலே கேட்டுக்கொண்டவாறு, அவர்களெல்லாம் இங்கு அரசுக்கு ஆசானாக இருந்து, கனிவு காட்டுகின்ற தாயாக இருந்து, கண்டிப்பு காட்டுகின்ற தந்தையாக விளங்கி, இந்த அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர முன் வந்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகின்றது.

நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 5, 6 ஆண்டு காலத்தில் நீண்ட நேரம் தொடர்ந்து பேசி உட்கார்ந்து இருப்பது இன்றைக்குத்தான் என்று நான் கருதுகிறேன். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமாகப் பாராட்ட பயமாக இருக்கிறது. அவரும் அதை விரும்பமாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மனத்திற்குள்ளே விரும்பினாலும் வெளிப்படையாக விரும்ப மாட்டார்.

உறுப்பினர் வேலாயுதன் அவர்கள், அவர்களுடைய கட்சியினுடைய கண்ணோட்டத்தில் சில கருத்துக்களைச் சொன்னாலும்கூட பொதுவாக இந்த அறிக்கையை வரவேற் றிருக்கிறார்கள். அதைப்போல, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், இந்த நாட்டிலே எல்லோரும் தமிழர்கள் என்ற குறிக்கோளை நோக்கிச் செல்கிறோம் என்பதை மறந்துவிடாமல், இடையில் தன்னுடைய சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு வட்டமிட்டு, அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்ய வேண்டும், உரிமைகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். வெங்கடசாமி அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பதை இங்கே விவரித்திருக்கிறார்கள்.

தமிழ் மணம் கமழக் கமழ பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் தீரன் அவர்கள் இந்த நிதிநிலை

அறிக்கையைப் பாராட்டி மகிழ்ந்து இருக்கிறார்கள். ஆழ்ந்த அனுபவம் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அன்பிற்குரிய மணி, அழுத்தந்திருத்தமாக பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார். இந்த அரசு எப்படியெல்லாம் இன்னும் வேகமாக, திட்டவட்டமாகச் செயல்படவேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்கிறார். திரு. சந்தானம், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் நிறைந்த வாழ்த்துக்களைத் தந்து, நேதாஜி அவர்களுக்கு ஒரு சிலை சென்னையிலே அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதை என்னுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பதிலுரையின் தொடக்கத்திலேயே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நண்பர், சுயேச்சை உறுப்பினர் திரு. வெங்கடாசலம், எடுத்துள்ள நடவடிக்கைகள் போதாது, மேலும் எடுக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் எதிர்காலத் தமிழகம் நல்ல முறையில் இருந்திட இயலும் என்ற எச்சரிக்கையை தன்னுடைய பேச்சாக நேற்று ஆற்றிக் கொண்டிருந்தார்.

திருநாவுக்கரசு அவர்கள், உண்மையிலேயே மிக ஆக்கப்பூர்வமான கருத்துக்களை, வரவுசெலவுத் திட்டத்திலே புள்ளி விவரங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை, இவற்றை யெல்லாம் எடுத்துக்காட்டி, அதிலே எனக்கு வித்தியாசமான கருத்துக்கள் இருந்தாலும்கூட நாட்டுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு மேலும் அதிகமாக நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று அவர் பேசியதன் நோக்கம் பாராட்டுக் குரியதாக இருந்தது என்பதை நான் மறக்கவில்லை.

இந்திய தேசீய லீக் கட்சியினுடைய தலைவர் லத்தீப் அவர்கள் 'சென்னை' என்ற ஒரு பெயரிலே மாத்திரம் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள மறுத்தாலும், எதிர்க்கவில்லை என்று இறுதியாக விளக்கி, இந்த அவையிலே தன்னுடைய ஆதரவை, மதராஸ் என்ற சொல் தமிழாக இல்லாவிட்டாலும், பிறமொழிச் சொல்லாக இல்லாத காரணத்தால், அந்நிலைக்கு

மாறி வழங்கியிருக்கிறார்கள். வேறு சில கருத்துக்களையும் எடுத்துக்கூறி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பழனிசாமி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பல கொள்கை விளக்கங்களைத் தந்து இறுதியாக என்னை தஞ்சைத் தரணியுடைய அமைச்சர் என்ற முறையிலே, ஒரு வட்டத்திற்குள்ளே சுருக்கி, 'கொஞ்சம் சுயநலவாதியாகச் செயல்படு' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லிச் செய்யக்கூடாது என்பதை நண்பர் பழனிசாமி அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பேச்சையே, களைகட்டுகின்ற அளவிலே, ஒரு கதையைச் சொல்லித் தொடங்கினார். அந்தக் கதையிலே ஒரு மாற்றம் இருக்கிறது. என்னுடைய ஆருயிர் நண்பர், மறைந்துவிட்ட அன்பில் தர்மலிங்கம் அடிக்கடி இந்தப் பழமொழியைச் சொல்வார். 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று. 'என்னய்யா அடிக்கடி இதைச் சொல்கிறாய், என்ன விஷயம்' என்று கேட்டபோது கதையைச் சொன்னார். அது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருடைய கதைக்குச் சற்று மாறான கதை. ஒருவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது இந்தக் கதையைச் சொல்லி நீண்டகாலத் தொய்விற்குப் பிறகு கதையை மறந்து விட்டார் போலும். கதை என்னவென்றால், அரசியலுக்குப் பொருத்தமாக உள்ளது என்பதால் சொல்கிறேன். கதை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இன்றுள்ள அரசியலுக்குப் பொருத்தமாக இருப்பதால் சொல்கிறேன்.

இருங்கலூரில் ஒரு கணக்கன் இருந்தான். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல, கொடுமைக்காரன், கொள்ளைக் காரன், மக்களைப் படாதபாடுபடுத்தி வந்தான். அவனுக்குச் சாகும் காலம் வந்தது. வயது ஏறி, இறந்துவிடுவோம் என்ற நிலை ஏற்பட்டபொழுது, அப்போதும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது தீமை செய்துவிட்டுப் போகவேண்டும். செத்த பிறகும் என்ற எண்ணத்தோடு, அந்த

ஊர் மக்களையெல்லாம் கூட்டி - கலெக்டருக்கு ஒன்றும் அவன் தந்தி கொடுக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல ஊர் மக்களையெல்லாம் கூட்டி - வைத்து, 'ஊர் ஜனங்களே, நான் உங்களையெல்லாம் படாதபாடு படுத்திவிட்டேன், எத்தனையோ தவறுகள் செய்துவிட்டேன், உங்கள் குடும்பங்களையெல்லாம் கெடுத்துவிட்டேன், உங்கள் சொத்துக்களையெல்லாம் அபகரித்துவிட்டேன், உங்களை யெல்லாம் சுரண்டி கொழுத்து விட்டேன். ஆனாலும், எனக்கு நீங்கள் மன்னிப்பு வழங்க வேண்டும். அந்த மன்னிப்பு என்னவென்றால், நான் இறந்த பிறகு இந்தப் பாவியினுடைய உடலை இந்த ஊர் மயானத்திலே புதைக்காமல், அடுத்த ஊர் மயானத்திலே கொண்டுபோய் புதையுங்கள்' என்று பக்கத்து ஊரில் புதைக்கச் சொன்னான். அவர்களும் பரிதாபப்பட்டு, போய்த் தொலைகிறான், செத்துத்தானே போகிறான், செய்யலாமே என்று உறுதி கொடுத்தார்கள். சொன்னபடி இரண்டு நாளிலே அவன் இறந்துவிட்டான். உடனே, அந்த ஊராரெல்லாம் கூடி, அவனைத் தூக்கி அடுத்த ஊர் மயானத்திலே கொண்டுபோய் புதைத்தார்கள். உடனே, அடுத்த ஊர்க்காரர்கள் சண்டைக்கு வந்துவிட்டார்கள். எங்கள் ஊருக்கு எப்படியடா கொண்டு வரலாம், உங்கள் ஊரிலே மயானம் இருக்கின்றபோது இங்கே எப்படிக் கொண்டு வரலாம் என்று சண்டை முற்றி, இங்கே பத்துப் பேர் செத்தார்கள், அங்கே பத்துப் பேர் செத்தார்கள். இதைத்தான் அன்பில் தர்மலிங்கம் சொல்வார், 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான். செத்தும் கெடுத்தான்' என்று அப்படி இங்கே பத்துப்பேர், அங்கே பத்துப் பேர் சாகாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை வேண்டும் என்பதற்காகத்தான், தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சில நண்பர்களுக்காக, அவர்கள் இங்கே இந்தக் கதையைத் தொட்டுக் காட்டிய காரணத்தால் நான் சுட்டிச் சொல்ல விரும்புகிறேன். இது யாருக்காகச் சொல்லப்பட்ட கதை என்பது இங்கே இருக்கின்ற சில பேர்களுக்குத் தெரியும். எனவே, 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்ற நிலையில், இன்றைக்கு நாடு இருக்கிறது. அதைத்தான் நம்முடைய பழனிசாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

இன்றைக்குக்கூட ஒரு அறிக்கை வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூலி ஆட்களைப் பிடித்து கோட்டை வாசலில் வந்து சத்தம் போடச் செய்தார்கள் என்று, கோட்டை வாசலிலே வந்து முழக்கம் இட்டவர்கள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசுகள் என்று சொல்லத்தக்க ஆர்.எம். வீரப்பன் அவர்களும் மற்றவர்களும் தான். கோட்டை வாசல் வரையிலே ஊர்வலமாக வந்து என்னிடம் மனுக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் யாரும் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசு என்று சொல்லிக் கொள்கிறவர்கள். எப்படி, தம்பி திருநாவுக்கரசு தன்னை எம்.ஜி.ஆர். உடைய வாரிசு என்று சொல்வது உண்மையோ அதைப்போல ஆர்.எம். வீரப்பன் தன்னை எம்.ஜி.ஆர் உடைய வாரிசு என்று சொல்லிக்கொள்வது உண்மைதான். அவர்களெல்லாம் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. என்ன செய்வது? 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுக்கிறான், செத்தும் கெடுக்கிறான்' என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பலரும் பாராட்டியிருக் கிறார்கள். அந்தப் பாராட்டுக்களையெல்லாம் தொகுத்துச் சொன்னால், ஏதோ என்னை நானே புகழ்ந்து கொள்வது போலாகும் என்ற நிலை ஏற்படும் என்றாலும்கூட, இந்த வரவு-செலவுத் திட்டம் எந்த நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது என்பதைப் பல முனைகளிலே உள்ளவர்கள் எப்படிப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, அவற்றில் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'டைம்ஸ் ஆஃப் இந்தியா', நியூடெல்லியி லிருந்து வெளிவந்த பத்திரிகையில் 18.7.1996இல் குறிப்பிடப் பட்டுள்ள வாசகம் :

"Chief Minister M. Karunanidhi on Wednesday presented a business and industry-friendly Budget for 1996-97 and announced a long-term taxation policy."

அதே 'டைம்ஸ் ஆஃப் இந்தியா', மும்பை. பழைய பம்பாய் எடிஷன், 18th July 1996- "...Karunanidhi pleases every-one with his Budget. Chief Minister Karunanidhi on Wednesday

presented a populist, business and industry-friendly Budget for 1996-97 and announced a long-term taxation policy. The State Government staff have been given various concessions and retirement benefits. There are schemes for the Adi-Dravidas, Backward classes and for generating rural employment. In fact, there appears to be something for everyone in the Budget."

'ஹிந்து' பத்திரிகை, ஜூலை 18இல் எழுதிய தலையங்கத்தில் ...The tax reforms proposed by Karunanidhi have some welcome features, though they may entail a revenue loss of Rs. 307 crores. Apart from rationalisation of salestax, the proposal to introduce Value Added Tax (VAT) in the State is a bold decision indeed, as it may give a boost to the manufacturers in the State. Tamil Nadu will be one of the first among the southern States to emulate Maharashtra's example as introduction of VAT is expected to have a healthy impact on prices of manufactured goods and strengthen the competitive position of the industrial units in the State. Similarly, exemption of sales-tax on raw materials bought by the export-oriented units and units located in the Madras Export Processing Zone will go a long way in promoting export activity in the State. The reduction of tax on capital goos for power generation bought in the State for Government approved power generation projects from 12 percent to 3 per cent is seen as an incetive for the industry." என எழுதியுள்ளது.

"Business Line" - 18th July Editorial-" ..The D.M.K. Government's Budget within two months of assuming power in Tamil Nadu looks commendable as it has lifted the Budget exercise from the vacuity of cheap populism. It has invested it with some seriousness of purpose especially in industrial development. The Budget comes across as a bold document significant especially for the sweep of reforms in sales-tax it has sought to attempt." எனக் குறிப்பிட்டுள்ளது.

'தினமணி' தனது தலையங்கத்தில், 'ஏழையெளிய மக்களுக்கும், மத்திய தர வர்க்கத்தினருக்கும் நன்மை பயக்கும் நோக்கத்தோடு பல்வேறு வகையான உணவுப் பொருள்களுக்கு

முழு அளவில் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கும் பட்ஜெட்டை, முதலமைச்சர் கருணாநிதி சட்டப்பேரவையில் அளித்துள்ளார். தமிழகத்தின் தொழில், வணிகம் தழைப் பதற்கும் பல்வேறு சலுகைகள் இந்த பட்ஜெட்டில் வழங்கப் பட்டுள்ளன. இதன்படி, தொழில்களில் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் மீதான வரிகள் யாவும் 3 சதவிகித அளவு குறைய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதையொட்டி, பொருள்களின் தயாரிப்பாளர்கள் ரூபாய் இருநூறு கோடி அளவிற்கு வரி செலுத்துவது தவிர்க்கப்படும். இதன் விளைவாக தயாரிப்புப் பொருள்களின் விலைகள் குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்கள் ஆக்கபூர்வமாகப் போட்டியிடக்கூடிய நிலை உருவாகும்' என்று எழுதியுள்ளது.

'தினகரன்' தனது தலையங்கத்தில், 'சலுகைகள், அடுக்கடுக்கான சலுகைகள், அலை அலையாகச் சலுகைகள், சலுகை மழை, சலுகை வெள்ளம், சலுகைக் கடல், சலுகை மலை இப்படியாக முதலமைச்சரின் 1996-97ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்கு பாமாலையும், பூமாலையும் சூட்டலாம்; தேர்தல் நடப்பதற்கு முந்தைய ஆண்டில், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் நிதியமைச்சர்தான் சலுகைத் தோரணம் கட்டி, தம் வரவு-செலவுத் திட்டத்தைப் புனைந்து காட்டுவது வாடிக்கை. ஆனால், முதல்வரோ, தேர்தல் நடந்து முடிந்த பிறகும்கூட, இப்படிச் சலுகை விவரம் அனைத்தும் காட்டி யிருக்கிறார். தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் மறந்துவிடாமல் தொட்டுச் சென்றிருக்கிறார். இதுதான் 'சேமநல அரசின் சரியான இலக்கணம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ரிசர்வ் வங்கியினுடைய கவர்னராக இருந்தவரும், மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலாளராக விளங்கியவரும், ஆரம்ப கலத்தில் தமிழக அரசில் என்னுடைய நிதித்துறை செயலாளராக இருந்தவருமான திரு. எஸ். வெங்கட ரமணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆங்கிலப் பத்திரிக்கையில் எழுதியுள்ள கட்டுரையில்,

"The latest Budget represents this Government's initial forays into the task of speeding up the growth of Tamil Nadu. Its emphasis on social development, encouragement of industrial investment and

infrastructure and agriculture is fully in keeping with the Chief Minister's vision. The simplification of sales tax collection procedures is a token of the Chief Minister's refreshing attitude which governs an impatience with the proliferation of forms and certificates.

The marked orientation of the Budget in favour of industrial growth and expansion is clear by the many concessions that it offers. No Budget of Tamil Nadu, especially those of Dr. Karunanidhi, has been complete without concessions to Government servants. Most of them are long overdue and legitimate. Particularly, the Chief Minister has done well to simplify the Pension Rules. The Budget has taken important initiatives to renovate Tamil Nadu's irrigation systems and for better exploitation of water resources.

To conclude, it was, for me, almost a sentimental journey to go through it, another Budget deftly drafted by the Kalaignar, a Budget of promise and hope for the State. I hope this promise and vision will be translated into reality in a succession of Budgets from the same able hands" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அறிக்கையைப் பற்றி Madras Chamber of Commerce, Confederation of Indian industries, Southern India Chamber of Commerce, Guindy Industrial Estate Manufacturers Association, Indian Chamber of Commerce and Industries, Coimbatore, Coimbatore Stock Exchange போன்ற சேம்பர்கள், வணிக நிறுவனங்கள், வியாபாரிகளுடைய சங்கங்கள், ஏழை, எளிய மக்களின் சார்பாக வழங்கப்பட்ட பாராட்டுக் குரல்கள், அரசு ஊழியர்கள் சார்பாக தெரிவிக்கப்பட்ட நன்றியுணர்வுச் செய்திகள் இத்தனையையும் ஏடுகளிலே நீங்களும் கண்டிருக்கிறீர்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நம்முடைய மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் சில புள்ளிவிவரங்களை நேற்றையதினம் எடுத்துக்காட்டி - நான் இடைமறித்து சிலவற்றைச் சொன்னாலும்கூட, முழுமையாகச் சொல்ல இயலவில்லை - இவை எல்லாம் குறைந்திருக்கிறது, பொதுவான பணிகள், சமூகப் பணி, பொருளாதாரப் பணி இதில் ஏன் இந்த வித்தியாசம் என்றெல்லாம் எடுத்துக் காட்டினார். Economic Service அதாவது பொருளாதாரப் பணி

என்பது - மண் வளப் பாதுகாப்பு, பால்பண்ணை, காடு வளர்ப்பு, கூட்டுறவு, பாசனம், தொழில்கள், சாலைகள், பாலங்கள், நுகர்பொருள் வழங்கல், வேளாண்மை ஊரக வளர்ச்சி இத்தனையும் அடங்கியது பொருளாதாரப் பணியிலே வருகிறது. சமூகப் பணி என்பது, குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, கல்வி, மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி, ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சமூக நலன், சத்துணவு, தொழிலாளர் நலன் இத்தனையும் சமூகப் பணியிலே வருகிறது. பொதுவான பணிகள் என்ற தலைப்பில் அரசு ஊழியர்கள், நீதித்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட நிர்வாகம், ஓய்வூதியம் பெறுவோர் இத்தனையும் வருகிறது. அதிலேதான் அவர் குறை கண்டு சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால் உண்மை என்னவென்றால் இந்தப் பொருளாதாரப் பணியில் 1995-96 ஆம் ஆண்டில் 2835 கோடி ரூபாய், அது அதற்கு முதலாண்டான 1994-95லிருந்த ரூபாய் 2788 கோடியோடு ஒப்பிடும்போது 1.67 சதவிகிதம்தான் அதிகம். இப்போது 1996-97இல் அது 3158 கோடியாக மாறியிருக்கிறது என்றால் 11.40 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, Social Service சமூகப் பணியில் 1995-96இல் 14.17 சதவிகிதம் என்று இருக்கும்போது 1996-97இல் 9.05 சதவிகிதம் என்று குறைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். நான் அவருக்குத் தர விரும்புகின்ற விளக்கம் 4392 கோடியிலிருந்து இந்த ஆண்டு, நடப்பாண்டில் 4790 கோடி என்று உயர்ந்திருந்தாலும்கூட, வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது என்பதை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் ஏன் அந்த வேறுபாடு ஏற்பட்டது என்றால் 'National Social Assistance Scheme' அதாவது தேசிய சமூக நல உதவித் திட்டம். இதில் அவர் குறிப்பிடுகிற அந்தத் தொகை 1995-96இல் நேரடியாகச் செல்லாமல் மாநிலம் வழியாகச் சென்றபோது, 4392 கோடியாக இருந்தது. இப்போது

மாவட்டங்களுக்கு அந்தத் திட்டத்தினுடைய தொகை நேரடியாகப் போய்விடுகிறது. எனவேதான் இந்த வித்தியாசம் ஏற்பட்டது என்பதை அவர்களுக்கு விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே பொதுவான பணிகளில் ரூ. 3418 கோடி ரூபாய் என்பது ரூ. 3,821 கோடி ரூபாயாக இப்போது மாறியிருக்கிறது. பொதுவான பணிகளுக்கு அதிகம் செலவழிக்கக்கூடாது என்பது அவருடைய வாதம். அந்த வாதப்படி பார்த்தால் 19.31 சதவீதம் இப்போது 11.78 சதவீதமாகத்தான் மாறி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று பரவலாக விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இந்த பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக்கொண்டு முதலமைச்சர் கருணாநிதி என்ன செய்யப் போகிறார் என்று - நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் பல பேருடைய அறிக்கைகள், இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டவுடன், கருத்துக்கள் கேட்டபோதும், அதற்கு உடனடியாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, பெரும் பற்றாக்குறை இருக்கிறது. எப்படி சமாளிக்கப் போகிறார் என்று வருத்தத்தை அல்லது வியப்பைத்தான் அனைவரும் தெரிவித்தார்கள். இவர்கள் தெரிவித்து எப்படியாவது சமாளித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு. ஆனால் முன்னாள் முதலமைச்சர், செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் தெரிவித்த கருத்தில் ரூ. 12,107 கோடி செலவுக்கான பட்ஜெட்டை கருணாநிதி சமர்ப்பித்துள்ளார் - அவர் கருணாநிதி என்றுதான் சொல்லுவார் - ரூ. 1038 கோடி பற்றாக்குறையைச் சரிக்கட்ட என்ன வழியைக் கையாளப் போகிறார் என்று தெரியவில்லை என்று கூறியிருக்கிறார். வருவாய்க் கணக்கில் இந்த ஆண்டு 1038 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது உண்மைதான். ஆனால் கடந்த ஆண்டுகளின் நிலைமைகளை அம்மையார் அவர்கள் மறந்துவிடக்கூடாது. 1988-89 ஆம் ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை 217.56 கோடி ரூபாய். ஒட்டுமொத்த பற்றாக்குறை 325.07 கோடி ரூபாய். 1989-90இல் வருவாய்ப்

பற்றாக்குறை, கழக ஆட்சியின்போது 288.49 கோடி ரூபாய் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை, 64.77 கோடி ரூபாய். அப்போதுதான் ஆட்சி கலைக்கப்பட்டவுடன் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். கருணாநிதி 1312 கோடி ரூபாய் பற்றாக்குறையாக வைத்துவிட்டு போய்விட்டார். நான் என்ன செய்வது என்று பத்திரிக்கைகளுக்குச் செய்தி கொடுத்தார்கள். கூட்டங்களிலே பேசினார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் 1990-91லே வருவாய்ப் பற்றாக்குறை 416 கோடி ரூபாய்தான். ஒட்டுமொத்தப் பற்றாக்குறை 268.10 கோடி ரூபாய்தான். அதற்குப் பிறகு வரிசையாகப் பார்த்தால் 1993-94இல் வருவாய்ப் பற்றாக்குறை 1310 கோடி ரூபாய். 1038 கோடி ரூபாய் இப்போது பற்றாக்குறை. அதிசயப்படுகிறார் அம்மையார் அவர்கள். எப்படி சமாளிக்கப்போகிறார், என்ன செய்யப்போகிறார், என்ன திட்டங்களைத் தீட்டப்போகிறார் என்று கேட்கின்ற அம்மையாரைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். 1993-94 இல் வருவாய்ப் பற்றாக்குறை இன்றைக்கு 1038 கோடி - அன்றைக்கு 1310 கோடி அதை எப்படி நீங்கள் சமாளித்தீர்களோ அதைவிடத் திறமையாக, ஒழுங்காக, செம்மையாக, கூடுமானவரையில் இந்த அரசு சமாளிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குப் பிறகு தொடர்ந்து 1995-96லே கூட பற்றாக்குறை திருத்த மதிப்பீட்டில் 1168 கோடி ரூபாய் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, இதே ஆண்டில் தேர்தலுக்கு முன்பு, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாருடைய அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை - இப்போது நம் கையில் இருப்பதற்கு முன்புள்ள இடைக்கால நிதிநிலை - நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அந்த அறிக்கையில் வருவாய்ப் பற்றாக்குறை 962.09 கோடி ரூபாய். வருவாய்ப் பற்றாக்குறையிலிருந்து 1038 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய உயர்வு அல்ல என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்தப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியது எனக்கு

கவனத்திற்கு வருகிறது. மாநிலத்தினுடைய பற்றாக்குறையை, மைய அரசின் பற்றாக்குறையோடு ஒப்பிடக்கூடாது. மாநில அரசின் பற்றாக்குறை ஒரு ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டிற்கு தொடர்ந்து கூடிக்கொண்டே இருக்கக்கூடியது. அந்தப் பற்றாக்குறையை வேறு வழியில் சமாளித்தாலன்னியில் அது பெருகிக் கொண்டிருப்பதை குறைக்க முடியாது. தடுக்க முடியாது, மைய அரசு ஒரு ஆண்டினுடைய பற்றாக்குறையை ஈடுகட்ட, அதே ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கியில் கூடுதல் கரன்சி நோட்டுக்களை அச்சடிப்பதன் மூலம்கூட சரிக்கட்டிவிடும். நாம் கரன்சி நோட்டுக்களை அச்சடிக்கின்ற அதிகாரங்களைப் பெற்றவர்கள் அல்ல. அந்த அதிகாரத்தைக் கேட்பவர்களும் அல்ல. அது தவிர வேறு அதிகாரங்களைத்தான், மாநில சுயாட்சி என்ற பெயரால் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மாநில அரசு பற்றாக்குறையைச் சரிக்கட்ட இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து 'வழிவகை முன்பணம்' (Ways and Means Advance) அல்லது 'மிகைப்பற்று' (Overdraft) ஆகியவற்றைக் கடனாகப் பெற்று, அதை ஆண்டிலேயே திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, மாநில அரசினுடைய பற்றாக்குறை தொடர்ந்து கூடிக்கொண்டு போகிறது. அதைச் சமாளிக்கின்ற பொறுப்பை திறமையோடு நடத்துகின்ற அரசால்தான் நிர்வகிக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி நிலையிலே ஒட்டுமொத்தப் பற்றாக் குறை ரூ. 851 கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதே, இதற்கு புதிய வரிச் சலுகைகளை வழங்கியிருக்காவிட்டால் இந்தப் பற்றாக்குறை இன்னமும் கூடக் குறைந்திருக்கக்கூடும். இந்த அளவிற்கு உயர்ந்திருப்பதற்குக் காரணமே உணவு மானியத்திற்கான தொகை ஏற்கெனவே ரூ. 850 கோடி என்பதிலேயிருந்து ரூ. 1,000 கோடியாக இந்த நடப்பாண்டிலே உயர்கிறது. ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 3,550 கோடியிலிருந்து ரூ. 3,700 கோடியாக உயர்கிறது.

Part II Schemes புதிய பகுதி-2 திட்டங்கள் 69.40 கோடி ரூபாய்க்கு இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது. அரசு அலுவலாளர்களுக்கு அகவிலைப்படி வழங்க கூடுதலாக 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மொத்த

வருவாய்ச் செலவில், வருவாய் பற்றாக்குறையின் சதவிகித அளவைக் கணக்கெடுத்துக்கொண்டால் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன அந்தக் கணக்கு சரியல்ல என்பதை அவரே உணரக்கூடும். நடப்பாண்டில், இந்தப் பற்றாக்குறை மொத்த வருவாய் செலவில் 8.58 விழுக்காடுதான். ஆனால், 1991-92இல் இந்தப் பற்றாக்குறையின் அளவு 21.94 சதவிகிதமாக இருந்தது. 1992-93இல் 17.87 சதவிகிதமாக இந்தப் பற்றாக்குறை அளவு இருந்தது. அதற்கு மாறாக இப்போது 8.58 சதவிகிதமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். நான் சரியாகத்தான் சொன்னேன். 8.5 சதவீதம் சொச்சம் என்கிறதாலே சுமார் 9 சதவீதம் என்று சொன்னேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் குறிப்பிட்டது பற்றாக்குறை இதைவிட அதிகமாக சதவிகிதம் முன்பு இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான். இந்த அவையிலே, நிதிநிலை அறிக்கையில் உள்ள ஆழமான பல கருத்துக்களை எடுத்துச்சொல்லி அல்லது வரி விகிதங்களைப் பற்றியோ அல்லது கொள்கை விளக்கங்களைப் பற்றியோ பல உறுப்பினர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்பட பல உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல், ஊழலற்ற ஒரு ஆட்சி நடைபெற வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தன்னுடைய உரையிலே அதைச் சுட்டிக்காட்டினார்கள். மற்ற கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள். எல்லா உறுப்பினர்களுடைய பெயரையும் சொல்லி, அவர்களுடைய கருத்துக்களையெல்லாம் சொல்லவில்லை யென்று யாரும் வருத்தப்படக்கூடாது. ஏனென்றால் பலரும் அவர்களது தொகுதிகளைப் பற்றிச் சொன்ன அந்தக் குறைபாடுகள், கோரிக்கைகள் அனைத்தையும் நான் இந்த நோட்டுப் புத்தகத்திலே குறித்து வைத்திருக்கிறேன். திருக்குறள் வடிவிலே உள்ள நோட்டுப் புத்தகம். திருக்குறளை எப்படி மறக்கமாட்டேனோ, அதேபோல இந்த நோட்டுப் புத்தகத்திலே குறித்து வைத்திருக்கின்ற உங்களுடைய

பிரச்சினைகளையும், நண்பர் திரு. சுதர்சனம் உட்பட இங்கே ஆரம்பித்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முடித்தவரையிலே உள்ள அத்தனை தொகுதி கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நிச்சயமாக நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையை இங்கே எடுத்துக்காட்டிப் பேசிய திருநாவுக்கரசு அவர்கள், 'அதையெல்லாம் எப்போது செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். தேர்தல் அறிக்கை இந்த நடப்பு ஆண்டு காலத்திற்கு மாத்திரம் வெளியிடப்பட்டது அல்ல. எங்களுடைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சிக்கால வெளியிடப்பட்டது தேர்தல் அறிக்கை. எனவே, அவற்றையெல்லாம் ஐந்து ஆண்டு காலத்தில் நிறைவேற்றுவோம். திருநாவுக்கரசு அவர்கள் எங்களோடு இருந்து, அதனை நிறைவேற்றுவதற்காக இப்படி ஆக்கப்பூர்வமான யோசனைகளையெல்லாம் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊழலை ஒழிக்க, நிர்வாகச் சீர்திருத்தம் பெற, ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன். அந்த வாசகம், 'தமிழ்நாட்டில் அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் ஊழல்களும், முறைகேடுகளும் நடைபெறாமல் தூய்மையான, சிறந்த நிர்வாகத்தை அமல்படுத்துவதற்கும், தற்போதுள்ள நிர்வாக அமைப்பில் சில மாற்றங்களைச் செய்வதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்து, அரசுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கு ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும்' என்று தெரிவித்திருந்தேன். அந்தக் குழுவை உங்கள் முன்னால் இப்போது அறிவிக்க விரும்புகிறேன். அதற்கேற்ப, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. இராமானுஜம் அவர்களைத் தலைவராகவும், செல்வி எம்.எஸ். ரமேஷ், ஐ.ஏ.எஸ். அவர்கள், ஓய்வு பெற்றவர், ஓய்வு பெற்ற திரு. சி. தங்கராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள், ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். திரு. சி.வி. நரசிம்மன் அவர்கள், முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள், முன்னாள் மேலவை உறுப்பினரும், ஆற்காடு குடும்பத்தைச் சேர்ந்தவருமான - இந்த ஆற்காடு அல்ல, அந்த ஆற்காடு

திரு. ஏ.ஆர். தாமோதரன் அவர்கள், திரு. லட்சுமிகாந்தன் பாரதி - பாரதி குடும்பத்தைச் சேர்ந்தவர், தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் - திரு. லட்சுமிகாந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ்., ஓய்வு பெற்றவர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நியாய விலைக் கடைகளைப் பற்றியும், பொது விநியோகத்திலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியும், எதிர்க்கட்சித் தலைவர் மிக விரிவாக இங்கே பேசி யிருக்கிறார்கள். மற்ற தலைவர்களும், மற்ற உறுப்பினர்களும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிக்கு சற்றும் சளைக்காமல் ஆளுங்கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையிலேகூட சரமாரியான கேள்விகளை தம்பி டி. இராஜேந்தர் உணவு அமைச்சரிடத்திலே கேட்டதை யெல்லாம் நீங்கள் அறிவீர்கள். எனவே, எல்லோரும் சேர்ந்து இந்த பொது விநியோக முறையில் ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருந்தேன், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, நம்முடைய மாநிலத்திலே நடைபெறுவதை விட மிகச் சிறந்ததாக இந்தப் பொதுவிநியோகமுறை நடப்பதாகச் சொல்லப்படுகின்ற மாநிலங்களுக்குச் சென்று ஆய்வு செய்து, ஓரிரு மாதங்களுக்குள்ளாக அந்த நடைமுறைகளையெல்லாம் பரிந்துரை செய்யக்கூடிய அந்தப் பணியினை ஆற்றிட வேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று நான் குறிப்பிட்டேன். கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து கொண்டு அந்த அந்தக் கட்சியின் சார்பாக யாரை உறுப்பினராக அந்தக் குழுவிலே அமைக்கலாம் என்ற கருத்தைக் கேட்டு, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக அந்தக் குழு விரைவிலே அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாவட்டங்களைப் பிரித்து, நிர்வாகத்தை விரைவுபடுத்த, செம்மைப் படுத்த, ஒரு கருத்து இந்த அரசுக்கு இருப்பதை

நான் ஏற்கெனவே வெளியிட்டு, அதன்படி, மாவட்டங்களைப் பிரிப்பதற்காக அந்த அந்தப் பகுதிகளிலே உள்ள பொதுமக்களின், அவர்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து, அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்காக ஒரு குழு பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது. அந்தக் குழுவின் தலைவர் - வருவாய்த் துறை தலைமை ஆணையர், குழுவின் உறுப்பினர்கள் - நில நிர்வாகத்துறை ஆணையர், இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்), இயக்குநர் (நகராட்சி நிர்வாகத்துறை), இயக்குநர் (ஊரக வளர்ச்சித்துறை). இந்தக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இன்று காலையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, உருவாகின்ற புதிய மாவட்டங்கள் பற்றிய விவரங்களை இங்கே நான் கூற விரும்புகிறேன். அது பற்றிய விவரம் வருமாறு:-

மதுரை மாவட்டம். ஒன்றியத் தேர்தல் எல்லாம் வருகின்ற காரணத்தினால், ஒன்றிய அளவிலே எந்த எந்த மாவட்டங்களிலே எந்த எந்த ஒன்றியங்கள் இருக்கு மென்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டுகின்றேன். திருப்பரங்குன்றம் ஒன்றியம், மதுரை கிழக்கு ஒன்றியம், மதுரை மேற்கு ஒன்றியம், மேலூர் ஒன்றியம், கொட்டாம்பட்டி ஒன்றியம், வாடிப்பட்டி ஒன்றியம், அலங்காநல்லூர் ஒன்றியம், உசிலம்பட்டி ஒன்றியம், செல்லம்பட்டி ஒன்றியம், திருமங்கலம் ஒன்றியம், கள்ளிக்குடி ஒன்றியம், டி.கல்லுப்பட்டி ஒன்றியம், சேடப்பட்டி ஒன்றியம் ஆகியவை மதுரை மாவட்டத்தில் அடங்கும்.

வைகை மாவட்டம் என்ற பெயர் வேண்டுமென்று சிலர் விரும்பினார்கள். வீரன் அழகுமுத்து மாவட்டம் என்ற பெயர் வேண்டுமென்று சிலர் விரும்பினார்கள். என் விருப்பமும் அதுவே, எனவே, இருவரையும் திருப்திப்படுத்துகின்ற வகையில் 'வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்' என்று பெயர் வைத்து. அதில் பெரியகுளம் ஒன்றியம், தேனி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியம், உத்தமபாளையம் ஒன்றியம், கம்பம் ஒன்றியம், சின்னமனூர் ஒன்றியம், போடிநாயக்கனூர்

ஒன்றியம் ஆகியவை அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா மாவட்டம், அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மாவட்டம் அமைய வேண்டுமென்ற எங்களுடைய கருத்தை நிறைவு செய்து கொள்வதற்கும், அண்ணா மாவட்டம் என்று பெயரிட்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் நிலைக்க வேண்டு மென்பதற்காகவும், செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்றும், ஒரு பகுதிக்கு எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும் பெயர் சூட்டப்படுகிறது. செங்கை அண்ணா, செங்கை எம்.ஜி.ஆர். என்றெல்லாம் பெயர் இல்லை என்ற நினைப்பில் சில பேர் பெயரை விட்டுவிட்டு செங்கையை மாத்திரம் சொல்வார்கள்.

அண்ணா மாவட்டத்தில், காஞ்சிபுரம் ஒன்றியம் வாலாசாபாத் ஒன்றியம், உத்திரமேரூர் ஒன்றியம், திரும்பெரும்புதூர் ஒன்றியம், குன்றத்தூர் ஒன்றியம், திருப்போரூர் ஒன்றியம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், செயின்ட் தாமஸ் மவுண்ட் ஒன்றியம், அச்சரப்பாக்கம் ஒன்றியம், மதுராந்தகம் ஒன்றியம், லத்தூர் ஒன்றியம், சித்தாமூர் ஒன்றியம் ஆகிய 13 ஒன்றியங்கள் அடங்கும்.

எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், வில்லிவாக்கம் ஒன்றியம், புழல் ஒன்றியம், மீஞ்சூர் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி ஒன்றியம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், பள்ளிப்பட்டு ஒன்றியம், திருவள்ளூர் ஒன்றியம், பூண்டி ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம், எல்லாபுரம் ஒன்றியம், பூவிருந்தவல்லி ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

சேலம் மாவட்டத்தில், சேலம் ஒன்றியம், வீரபாண்டி ஒன்றியம், பனைமரத்துப்பட்டி ஒன்றியம், அயோத்தியாப் பட்டணம் ஒன்றியம், வாழப்பாடி ஒன்றியம், மேச்சேரி ஒன்றியம், நங்கவல்லி ஒன்றியம், கொளத்தூர் ஒன்றியம், ஓமலூர் ஒன்றியம், காடையாம்பட்டி ஒன்றியம், தாரமங்கலம் ஒன்றியம், சங்ககிரி ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம்,

எடப்பாடி ஒன்றியம், கெங்கனாபுரம் ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம், பெத்த நாய்க்கன் பாளையம் ஒன்றியம், தலைவாசல் ஒன்றியம், கெங்கவல்லி ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

இராஜாஜி மாவட்டத்தில், நாமக்கல் ஒன்றியம், எருமைப்பட்டி ஒன்றியம், மோகனூர் ஒன்றியம், சேந்தமங்கலம் ஒன்றியம், புதுச்சத்திரம் ஒன்றியம், கொல்லிமலை ஒன்றியம், ராசிபுரம் ஒன்றியம், வெண்ணந்தூர் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், திருச்செங்கோடு ஒன்றியம், பள்ளிப்பாளையம் ஒன்றியம், மல்லசமுத்திரம் ஒன்றியம், எலச்சிப்பாளையம் ஒன்றியம், பரமத்தி ஒன்றியம், கபிலர்மலை ஒன்றியம் ஆகியவை அடங்கும். இது நாமக்கல்லைத் தலைநகராகக் கொண்டு விளங்குகின்ற மாவட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவையாறு ஒன்றியம், பூதலூர் ஒன்றியம், தஞ்சாவூர் ஒன்றியம், திருவோணம் ஒன்றியம், ஒரத்தநாடு ஒன்றியம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பேராவூரணி ஒன்றியம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மதுக்கூர் ஒன்றியம், அம்மாப்பேட்டை ஒன்றியம், கும்பகோணம் ஒன்றியம், பாபநாசம் ஒன்றியம், திருப்பனந்தாள் ஒன்றியம், திருவிடைமருதூர் ஒன்றியம் ஆகிய 14 ஒன்றியங்கள் அடங்கும்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், நாகை ஒன்றியம், திருமருகல் ஒன்றியம், கீழ்வேளூர் ஒன்றியம், கீழையூர் ஒன்றியம், வேதாரண்யம் ஒன்றியம், தலைஞாயிறு ஒன்றியம், மயிலாடுதுறை ஒன்றியம், குத்தாலம் ஒன்றியம், செம்பனார்கோயில் ஒன்றியம், சீர்காழி ஒன்றியம், கொள்ளிடம் ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருவாரூரைத் தலை நகராகக் கொண்ட மாவட்டம். இதில் திருவாரூர் ஒன்றியம், நன்னிலம் ஒன்றியம், குடவாசல் ஒன்றியம், கொறடாச்சேரி ஒன்றியம், வலங்கைமான் ஒன்றியம், மன்னார்குடி ஒன்றியம், கோட்டூர் ஒன்றியம், நீடாமங்கலம் ஒன்றியம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், முத்துப்பேட்டை ஒன்றியம் ஆகிய பத்து ஒன்றியங்கள் அடங்கும்.

திருச்சிராப்பள்ளி - பெரும்பிடுகு முத்துரையர் மாவட்டத்தில், திருவெறும்பூர் ஒன்றியம், அந்தநல்லூர் ஒன்றியம், மணிகண்டம் ஒன்றியம், மணப்பாறை ஒன்றியம், மருங்காபுரி ஒன்றியம், வையம்பட்டி ஒன்றியம், புள்ளம்பாடி ஒன்றியம், இலால்குடி ஒன்றியம், மணச்சநல்லூர் ஒன்றியம், முசிறி ஒன்றியம், தொட்டியம் ஒன்றியம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம், துறையூர் ஒன்றியம், உப்பிலியாபுரம் ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டத்தில், பெரம்பலூர் ஒன்றியம், வேப்பந்தட்டை ஒன்றியம், அரியலூர் ஒன்றியம், திருமானூர் ஒன்றியம், வேப்பூர் ஒன்றியம், ஆலத்தூர் ஒன்றியம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், டிபழூர் ஒன்றியம், ஆண்டிமடம் ஒன்றியம், செந்துறை ஒன்றியம் ஆகிய பத்து ஒன்றியங்கள் அடங்கும்.

கரூர் - தீரன் சின்னமலை மாவட்டம் 'கவுண்டர்' என்பதை மாற்றிவிடுகிறோம். எல்லோருடைய விருப்பத்திற்கிணங்க. அந்த கரூர் தீரன் சின்னமலை மாவட்டத்தில், கரூர் ஒன்றியம், தாந்தோணி ஒன்றியம், அரவக்குறிச்சி ஒன்றியம், கே.பரமத்தி ஒன்றியம், குளித்தலை ஒன்றியம், தோகைமலை ஒன்றியம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கடவூர் ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

இந்த மாவட்டங்களன்னியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டமாக இருந்தது, இனிமேல் திண்டுக்கல் - மன்னர் திருமலை மாவட்டம் என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாவட்டங் களுக்குரிய கோட்டங்கள் குறித்தும், வட்டங்கள் குறித்தும் அரசின் அறிவிக்கை நாளைக்கு வெளிவரும் என்பதையும் கூறிக்கொள்கிறேன். இந்த மாவட்டங்களுடைய அதிகாரிகளாக யார், யார் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்களும் அரசின் சார்பில் நாளை வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதிநிலை அறிக்கையில் மகளிர் மேம்பாடு, வேலை வாய்ப்பு, மகளிர் மது விலக்குப் பிரச்சாரம் என்ற ஒரு தலைப்பில் சில கருத்துகளைக் கூறி இருந்தேன். மகளிருக்கு

நீண்டகால அடிப்படையிலே வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறியதற்கிணங்க இத்திட்டத்தில், சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்தி மகளிருக்கு சமூக மேம்பாட்டினையும் அளிக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறங்களில் வாழும் மகளிர் சிறார்க்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், பிரதம அமைச்சரின் வேலை வாய்ப்புத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்பன உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டங்கள் எல்லாவற்றிலுமே மகளிருக்கும், மகளிர் குழுக்களுக்கும் வருவாய் பெருகத்தக்க வகையில் உதவி அளிக்கும் அம்சங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. இத்திட்டங்கள் பல்வேறு துறைகளினால் செயல்படுத்தப்படுவதால் கிராமப்புறப் பெண்களின் பிரச்சினைகளுக்கு முழுவதுமாகத் தீர்வு காண முடியவில்லை. உதாரணத்திற்கு இத்திட்டங்களால் பெண்களைப் பயனாளியாக்கப் பார்க்கிறோமே தவிர, சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கோ, அவர்களுடைய திறனை அதிகப்படுத்துவதற்கோ திட்டங்களில் வழியில்லை. இத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் மகளிர்க்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு உள்ளதா, அவர்களுடைய வருவாய் உயர்ந்துள்ளதா என்பதும் இத்திட்டங்களின் மூலம் தொடர்ந்து கவனிக்கப் படவில்லை. பெரும்பான்மையான திட்டங்கள், எண்ணிக்கை அளவை அடைவதிலேயே குறியாக இருக்கின்றனவே தவிர, சத்துணவு, குடும்ப நலன், சுகாதாரம் போன்ற பொதுப் பிரச்சினைகளைத் தொடுவதே இல்லை. மிகவும் முக்கியமாக, 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையான பயனாளிகளினுடைய பங்கேற்பு பெரும்பான்மையான திட்டங்களில் இப்பொழுது இல்லை.

நாங்கள் அறிவித்துள்ள புதுத் திட்டம், ஏற்கெனவே செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நன்மைகளைத் தொகுத்து பெண்களின் நலனுக்காக சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கையை ஒருங்கிணைக்கும் ஒரு திட்டமாக அமையும். அதன்படி கிராமப்புற ஏழை மகளிர்

20 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். 1996-97இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 10 மாவட்டங்களில் இது போன்ற 15 ஆயிரம் குழுக்கள் அமைக்கப்படும். அக்குழுக்களிலிருந்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஊக்குவிப்போராக 15 ஆயிரம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுக்கு குழுக்கள் அமைப்பதிலும், குழுக்களைச் செயல்படுத்துவதிலும் பயிற்சி அளிக்கப்படும். இவர்கள் குழு அங்கத்தினர்களோடு சேர்ந்து செயல்பட்டு ஒருங்கிணைந்த விழிப்புணர்வுமிக்க, முழுமை யாகத் திறன் படைத்த குழுக்களாக அந்தக் குழுக்களை மாற்றுவார்கள். இக்குழு உறுப்பினர்களுக்கு நிதி நிர்வாகம், வங்கியிலிருந்து கடன் பெறுதல், நிறைவேற்றப்படும் அரசு திட்டங்கள், சத்துணவு, சுகாதாரம், குடும்பநலன் போன்ற பல்வேறு துறைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் தர்மபுரி, சேலம், தென் ஆற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், மதுரை, இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறத்திலே வாழும் மகளிர் சிறாருக்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம் ஆகிய திட்டங்களின் பயன்கள் இந்த மகளிர் குழுக்களின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழைப் பெண்களைச் சென்றடைய இந்தத் திட்டம் உதவும். மற்றும் அண்ணா, எம்.ஜி.ஆர். மாவட்டங்கள், கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களில் நடப்பாண்டில் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு தேவையான பயிற்சி அளிக்கப்படும். மொத்தம் மேற்கண்ட 10 மாவட்டங்களில் மகளிரின் திறன் என்ன, எந்த பொருள்கள் விற்பனையாகும். அவற்றின் தேவை என்ன என்பன போன்ற தொழில் மற்றும் விற்பனை சம்பந்தமான ஆய்வை ஒரு வியாபார அறிவுரை நிறுவனம் மேற்கொள்ளும். இந்த ஆய்வின் அடிப்படையில் இக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி உதவி, கடன் மற்றும் விற்பனை குறித்த உதவி வழங்கப்படும். நடப்பாண்டில் இந்தத் திட்டம் 10 மாவட்டங்களில் 3 இலட்சம் பெண்களுக்கு பயன் அளிக்கும்

வகையிலே செயற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெரும்பாலான உறுப்பினர்கள் வீராணம் திட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். கடந்த கூட்டத் தொடரிலேயே நம்முடைய மாண்புமிகு அழகிரி அவர்கள் இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து விவசாயிகளினுடைய பிரச்சினையைக் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே தொடங்கப்பட்ட திட்டம். அப்போது அதனுடைய மொத்த மதிப்பீடு 20 கோடி ரூபாய்தான். அந்தத் திட்டம் இப்போது 1,638 கோடி ரூபாய் அளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அண்ணா காலத்திலே 20 கோடி ரூபாய் என்ற அளவிலே ஆரம்பிக்கப்பட்ட வீராணம் திட்டம், இன்றைக்கு காவிரி, பிரச்சினையாக இருக்கின்ற சூழ்நிலையில் 1,638 கோடி ரூபாய்க்கு நிறைவேற்றப்பட வேண்டுமா என்பது ஒரு கேள்வி. அது மட்டுமல்ல, அங்கே உள்ள விவசாயிகளுக் கெல்லாம் அதனால் எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பது மற்றொரு பிரச்சினை. வீராணம் திட்டத்தை அண்ணா அவர்கள் அறிவித்துத் தொடங்கி வைத்தபோது, கிருஷ்ணா நதித் திட்டம் இல்லை. அதைப்பற்றிப் பேச்சு இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, பிறகு கழக ஆட்சிக் காலத்திலும் சரி, ஆந்திர அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால் கிருஷ்ணா திட்டம் என்று உருவாக்கப்படவில்லை. பிறகு எம்.ஜி.ஆருடைய காலத்தில், கிருஷ்ணா திட்டம் என்று அறிவித்து, இடையில் பல ஆண்டுக்காலம் தொய்வு ஏற்பட்டு, இப்போது கிருஷ்ணா திட்டம் மூலமாக முதல் கட்டமாக விரைவில் 3 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஒன்றை நீங்கள் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். இந்த மூன்று டி.எம்.சி. தண்ணீர் இப்போது, பிறகு மீண்டும் ஒரு 4 டி.எம்.சி. இறுதியாக 5 டி.எம்.சி. ஆக இந்த 12 டி.எம்.சி. கிருஷ்ணா நீரைப் பெற நாம் செலவழிக்கின்ற தொகை 700 அல்லது 800 கோடி ரூபாய்தான். ஞாபகத்தில்

வைக்கவேண்டும். ஆனால் 'வீராணம் தண்ணீர் நமக்குக் கிடைப்பது 2.7 டி.எம்.சி. தான். அதற்கு 1,638 கோடி ரூபாய். 700 கோடி ரூபாய்க்கு 12 டி.எம்.சி. தண்ணீரைப் பெறமுடியும் சென்னைக்கு. ஆனால் 1,638 கோடி ரூபாய்க்கு 2.7 டி.எம்.சி. தண்ணீரைத்தான் பெறமுடியும். எனவேதான் நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டத்தை அறவே கைவிட்டுவிடாமல், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்றால், விவசாயிகளுக்குப் பிரச்சினை ஏற்படாத அளவுக்கு, தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு மாத்திரம் தண்ணீரை வழங்க, வீராணம் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்றும், கிருஷ்ணா நதி தண்ணீரை சென்னைக்குப் பயன்படுத்திக் கொள்வது என்றும், அதுவே நலமாக இருக்கும் என்றும் ஒரு கருத்து இருக்கிறது. அதை இந்த அவையிலே வைப்பது என்னுடைய கடமை என்பதாலும், அந்தக் கருத்தைக் கேட்க உங்களுக்கு உரிமை உள்ளது என்பதாலும், இங்கே அதை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய லத்தீப் அவர்களும் பழனிசாமி அவர்களும் பேசியதாகக் கருதுகிறேன். இனக்கலவரங்களில் இறப்பவர் களுக்கும், காயம் அடைபவர்களுக்கும், காவல் துறையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம்பட்டு உயிர் இழப்பவர் களுக்கும், பகுதிக்குப் பகுதி நிதி உதவி அளிப்பதில் வித்தியாசம் இருக்கிறது என்று பேசப்பட்டது. தாமரைக்கனி கூட, வத்திராயிருப்புக்கும் இராஜபாளையத்துக்கும் ஏற்பட்ட வித்தியாசத்தை அன்றைக்குச் சுட்டிக்காட்டினார். இவைகளை யெல்லாம் கேட்ட பிறகு, இதில் ஒரு நிலையான கொள்கையை அரசு வகுக்க வேண்டுமென்றும், ஆங்காங்கு நடைபெறுகின்ற இனக் கலவரங்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள், காவல் நிலையத்திலே ஏற்படுகின்ற கொலைகள் அல்லது கற்பழிப்புகள் இவை போன்ற நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது என்றாலும் கூட, நடந்தால், அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் எப்படி நிதியுதவி வழங்கவேண்டும் என்பதற்கான ஒருமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள சூழ்நிலையில், குடும்பத்திலே இருந்து, கொலை செய்யப்பட்டு இறந்த நபர்களுக்கு ரூ. 10,000; நிரந்தரமாகச் செயல்பட முடியாமல்

போகிறவருக்கு ரூ.10,000; கற்பழிப்புக்கு ஆளான பெண்ணுக்கு ரூ. 5,000; தற்காலிகமாகச் செயல்பட முடியாமல் போனவருக்கு ரூ. 2,000; ஊனமடைந்தவர்களுக்கு ரூ. 1,000; என்றும், கான்கிரீட் வீடுகள் சேதமடைந்தால் 2,500 ரூபாயும், குடிசை வீடு சேதமடைந்தால் 1,500 ரூபாயும் என்று இப்படி ஒரு 'முறை' மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருக்கின்றது. எனவே அதை மாற்றி, ஒரு பொதுவான ஏற்பாட்டை இந்த நிதிநிலை அறிக்கையின் தொடர்பாக வெளியிட விரும்புகிறேன். இனக்கலவரங்களில் இறந்தவர்கள், காவல்துறையின் துன்புறுத்தலால் இறந்தவர்கள், காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்கள் ஆகியோர் குடும்பத்திற்கும், காவல் துறையினரால் கற்பழிக்கப் பட்டோருக்கும், நிரந்தரமாகச் செயல்பட முடியாமல் போனவர்களுக்கும் நிவாரணத் தொகை 50 ஆயிரம் ரூபாய் வழங்கப் படும். இதை அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளே உடனடியாக வழங்கலாம் என்பதற்காக இந்தப் பொது ஆணை. அதிகமாகக் காயம் அடைந்தவர்களுக்கும், ஓரளவு செயல்பட முடியாதவர்களுக்கும் நிவாரணத் தொகை ரூ. 10,000. சிறிது காயமுற்றோருக்கு ரூபாய் 5,000 அளவிலும், ஏனைய வீடுகள் மற்றும் சொத்துகள் சேதம் அடைந்தவர்களுக்கு வேறு எந்த விதமான மாற்றமும் இல்லை என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாற்றங்கள் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலேயே அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. வெள்ளத்தால் அல்லது தீயால் பாதிக்கப்படுகின்ற வீடுகளுக்கு கால்நடைகளுக்கு எல்லாம் என்ன உதவி என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மிக முக்கியமான வரிக் கொள்கை மாற்றம், அதிலே பல கோரிக்கைகள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் இந்த 5, 6 நாட்கள் இந்த அவையிலே உட்கார்ந்து இருக்கிற நேரம்தான் அமைதியான நேரம். இங்கேயிருந்து வெளியே சென்று அந்த மண்டபத்திற்குள்ளே உட்கார்ந்தாலும், என்னுடைய அறைக்குச்

சென்றாலும், இந்த வரி பற்றிய கோரிக்கைகளோடு, சட்டமன்ற உறுப்பினர்கள், வணிகர்கள், அத்தனைபேரும் வருகிறார்கள். ரொம்பப் பாதுகாப்பான இடம் என்று பேரவைத் தலைவர் அறைக்குப் போனால், அங்கே பேரவைத் தலைவர் மூலமாகவும் வருகிறது. (சிரிப்பு). அப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் எதையும் புறக்கணிக்கக்கூடாது, அலட்சியப்படுத்தக் கூடாது என்று மீண்டும், இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு நிதித் துறைச் செயலாளரோடும் மற்றுமுள்ள அதிகாரிகளோடும், இங்கே நம்முடைய லத்தீப் அவர்கள் பாராட்டினார்களே, அதிகாரிகள் எல்லாம் முதலமைச்சரைப் பாராட்டினார்கள் என்று, அதைப்போல முதலமைச்சரும் அந்த அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார் என்ற அளவில், அறிக்கை தயாரிக்க ஒரு 15 நாட்கள் கண்விழித்ததைப் போல, வரிக் கொள்கையில் ஏற்பட்ட சில சிக்கல்களைத் தீர்க்க 3, 4 நாட்கள் தொடர்ந்து கண் விழித்து, இரவு கூட 2.00 மணிக்குத்தான் தூங்கத் தொடங்கி, காலையில் இந்த வரி நிவாரணங்களோடு உங்கள் முன்னாலே வந்து நின்று கொண்டிருக்கிறேன்.

வரிக் கொள்கையில் மாற்றம் செய்திருப்பதாலும், வணிகர்களுக்கும், பொதுமக்களுக்கும், தொழில் நிறுவனங் களுக்கும் பயன் விளைவிக்கும் நோக்கத்துடன் மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளை நீக்குகிற வகையிலும், விற்பனை வரி விதிப்பதற்கான குறைந்தபட்ச வரம்பினை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 3 லட்சமாக உயர்த்தியதனாலும் ஆண்டு ஒன்றுக்கு வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ரூபாய் 100 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி அறவே நீக்கப்பட்டதாலும், கரும்பு மீது அடிப்படை கொள்முதல் வரி 14.7 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக குறைத்ததாலும் மொத்தத்தில் ஏற்கனவே 306 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருந்தேன். அந்த அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்ற நிலையிலும், அதைப் பொருட்படுத்தாமல் வணிகர்களுடைய வேண்டுகோளை ஏற்றம், பொதுமக்களுடைய சிரமத்தைக் குறைக்க வேண்டு

மென்பதற்காகவும், பின்வரும் சில சலுகைகளை இப்போது அறிவிக்கிறேன்:-

நடைமுறையில் அடிப்படை வரி 8 சதவீதமாக இருந்த பொருள்களுக்கு மேல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் கூடுதல் மேல் வரி உள்ளிட்ட வரிகள் எல்லாம் சேர்ந்து 11.6 சதவீதம் என்று இருந்ததை 12 சதவீதம் என்று உயர்த்தி நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன். நாகை சட்டமன்ற உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள்தான் அதை அன்றைக்குச் சுட்டிக்காட்டினார். 11.6 என்பது 12 ஆக உயர்ந்து இருக்கிறது. இது சரியா என்று கேட்டார். நம்முடைய சொக்கர் அவர்கள் அதற்கு மறுப்புச் சொல்ல எழுந்து, மறுப்பு சொல்லும்போதே படித்துப் பார்த்துவிட்டார். அவர் சொன்னது தான் சரி என்பதை உணர்ந்து மௌனமாக உட்கார்ந்து விட்டார். அதையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். இப்போது அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதைப்போல பலருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இந்த சிறு உயர்வினால் ஏற்படும் சிரமம் குறித்து எடுத்துக் காட்டிய காரணத்தால் 12 சதவீதம் என்பதை 11.6 என்று மாற்றியதை 11 சதவீதமாகக் குறைப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறு ஒரு சதவீதம் குறைப்பதன் மூலமாக மட்டும் 108 கோடி ரூபாய் வருமானம் நாம் எதிர்பார்க்கிற வருமானத்தில் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் - எதிர்பார்ப்பில்தான் - இவ்வாறு 12 சதவீதம் என்பதை 11 சதவீதமாக குறைப்பதைத் தவிர, பின்வரும் பொருட்களான கேஷ் ரெஜிஸ்டர், எலக்ட்ரானிக் கருவிகள், எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருவிகள், சாமான்கள் - கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், டி.வி. ஆண்டனாக்கள் - இவைகளுக்கு எல்லாம் மற்றும் மரம், எலக்ட்ரிக் பம்ப், காலணிகள் செருப்புகள், பாக்கு சீவல், பிரஷர் குக்கர், பாட்டரி, இங்க், மின் விசிறி, மின்சார பல்புகள், ட்யூப் லைட்டுகள், குடிநீர் வழங்குவதற்கு பயன்படும் டேப் போன்ற சாதனங்கள், புகைப்படக் கருவிகள், பித்தளை, செம்பு பாத்திரங்கள், ஆடியோ - வீடியோ கேசட்டுகள், அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு எல்லாம் 11 சதவீதம் என்பதை அதாவது அந்த 11 சதவீதமும் 8 சதவீதமாகக் குறைக்கப்

படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு, கம்ப்யூட்டர்கள், மாணவர்கள் தற்போது கம்யூட்டர் கல்வி கற்பதிலே மிகுந்த ஆர்வம் காட்டுவதை நாம் அனைவரும் அறிவோம். குறிப்பாக, தமிழகத்தில் கம்ப்யூட்டர் சாதனம் மிகவும் ஆர்வமாக வளர்ந்து வருகிறது. கம்ப்யூட்டர் தொழிலில் ஈடுபட்டவர்கள் எல்லாம் கம்ப்யூட்டர் கருவிகளுக்கு 3 சதவீதமாக இருந்த வரி இன்றைக்கு 12 சதவீதமாக உயர்த்தப் பட்டுவிட்டது என்று தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டார்கள்.

முக்கியமாக கம்ப்யூட்டர் வளர்ச்சி தடைப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு இந்த அரசு 12 சதவீதமாக விதிக்கப் பட்டு இருந்த வரியை 4 சதவீதமாகக் குறைப்பது என்று முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி கம்ப்யூட்டர்களுக்கும், அதன் உதிரி பாகங்களுக்கும் 4 சதவீதம் மட்டுமே வரி வசூலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போலவே ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் தற்போது நல்ல பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கிவரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கும், அதன் உதிரி பாகங்களுக்கும் 12 சதவீதமாக விதிக்கப்பட்டிருந்த வரி 4 சதவீதமாக குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எழுதுகிற பேப்பர், அச்சடிக்கின்ற பேப்பர், கம்யூட்டருக்கு உபயோகிக்கப்படும் பேப்பர் Printing and Writing Papers ஆகியவைகளுக்கு தற்போது 8 சதவீதம் என்று இருக்கும் வரியை 4 சதவீதமாகக் குறைப்பது என்றும் முடிவு எடுக்கப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிளாஸ்டிக், பிளாஸ்டிக் பையைப் பற்றி, ரங்கநாதன் அவர்கள் ஒரு பெரிய படையை அழைத்துக்கொண்டு வந்தார்கள். இருந்தாலும், தமிழ்நாடு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கையை ஏற்று, பால் கொண்டு செல்ல பயன்படுத்தப்

படும் பிளாஸ்டிக்குகளுக்கு 8 சதவீத வரி என்று இருப்பதை 4 சதவீதமாகக் குறைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பொரி கடலைக்கு தற்போது செய்துள்ள வரிச் சீர்திருத்தத்திற்குப் பிறகு, 12 சதவீதம் வரி என்ற அளவிலே இருப்பதாக ஒரு முறையீடு கூறப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, இனி பொரி கடலைக்கு 12 சதவீதம் வரி என்பதிலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிவு செய்யப்படாத பெயருடன் கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு வரியை உயர்த்திவிட்டதாக அவர்களிடம் ஒரு சந்தேகம் உள்ளது. அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. பதிவு செய்யப்படாத பெயரோடு கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு 4 சதவீதம் வரிதான் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு.சொக்கர் சொன்ன ஒன்று. பருப்பு, மிளகாய் மற்றும் மஞ்சள் ஆகிய பொருட்களுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதனைத் தொடர்ந்து இந்தப் பொருட்களிலேயிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும் வரியைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்று - அடுத்த பட்ஜெட்டுக்கு ஏதாவது வேண்டுமல்லவா? அதனாலே இந்தக் கோரிக்கையை ஏற்று - தற்போது 4 சதவீதம் என்று மாவுக்கு இருக்கும் வரி இனி 2 சதவீதம் என்ற அளவுக்குக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆயத்த ஆடைகள். Ready-made garments - இதுதான் சபநாயகர் மூலமாக வந்த கோரிக்கை.

Ready-made garmentsகளுக்கு புதிய வரி விதிப்பு முறையிலே உள்ள பிரச்சினைகளை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, முடிந்த வரையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. அந்த வகையிலே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் ரெடிமேட்

துணிகளுக்கு 'சி பார்ம்' கிடைக்காத பட்சத்தில், 10 சதவீத வரி கட்ட வேண்டியிருக்கிறது என்ற அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல், தமிழகத்திலே விற்கப்படும் துணிகளுக்கு 8 சதவீதமாக வரி இருக்கிறது. இனிமேல் ரெடிமேட் ஆடைகளை நம் மாநிலத்தில் விற்றாலும் சரி, 'சி பார்ம்' பெற்றோ, பெறாமலோ வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விற்றாலும் சரி, அவர்கள் 4 சதவீத வரி மட்டுமே செலுத்தினால் போதும் என்று முடிவு எடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மண்ணெண்ணெய் பெட்ரோலியப் பொருட்கள் சங்கத்தின் தலைவரும், முன்னாள் மேலவை உறுப்பினருமான ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இப்போது மண்ணெண்ணெய்க்கு லிட்டர் ஒன்றுக்கு 0.9 பைசா - 0.9 பைசா - அதாவது அது ஒரு பைசாவிற்கும் குறைவாக விலை உயர்த்தப்பட்டிருப்பதாக எழுதி இருந்தார்கள். இந்த வரி மாற்றத்தில் மண்ணெண்ணெய்க்கு ஒரு பைசாவுக்கும், குறைவாக விலை உயர்ந்துவிட்டது என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே, இந்த ஒரு பைசா விலை உயர்வினால், ஏழை எளிய மக்களை பாதித்துவிடக்கூடாது என்பதற்காக, அந்த விலை உயர்வை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, பொதுவினியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் வழங்கும்போது, விலையை உயர்த்தாமல், தற்போதுள்ள விலைக்குத் தரப்படுவதற்கு வழிவகை செய்வதோடு, இவ்வாறு விலைக்குறைப்பு தருவதால், நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கமே மானியமாகத் தருவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

உணவுப் பொருட்களான பருப்பு, மிளகாய், புளி போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு அளித்ததைத் தொடர்ந்து, திரு. சொக்கரின் பரிந்துரையைத் தொடர்ந்து பனங்கற்கண்டிற்கும் முழுவரி விலக்கு அளிக்கப்படும்.

வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடிக்கு குறைவாக உள்ள நிறுவனங்களுக்கு கூடுதல் வரி முற்றிலும் நீக்கப்படுகிறது

என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன். இதனால் வணிகர்களுக்கு உள்ள பணிப் பளு மற்றும் வரி விதிப்புப் படிவங்கள் குறைந்து, 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் அடைவார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கின்றேன். எனவே, 100 கோடிக்கு மேலே ஆண்டு ஒன்றுக்கு மொத்த வியாபாரம் நடத்தும் நிறுவனங்களுக்கு கூடுதல் விற்பனை வரி உண்டு. அஃதன்னியில் ஒரு நிறுவனத்தின் சார்பில் பல ஏஜெண்டுகளைக் கொண்டு நடத்தும் வியாபாரத்தில் 100 கோடிக்கு மேலே மொத்த விற்பனைக் கணக்கு வருமேயானால், அவர்களுக்கு கூடுதல் விற்பனை வரி விதிக்க அரசு பரசீலித்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர், சுப்பராயன் அவர்கள், திருப்பூர் பனியனுக்கு உள்ள பிரச்சினையைப் பற்றி வேண்டுகோள் வைத்தார்கள். இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பரிசீலித்தது. அதற்குள் வருத்தப்பட வேண்டாம். பரிசீலித்தது. ஒரு நிபந்தனையோடு ஒரு சலுகை. தமிழ்நாட்டிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகக்கூடிய பனியன்கள் மற்றும் பின்னலாடைகள் முழுவதும் தற்போது 4 சதவீதம் மைய விற்பனை வரிக்கு உட்பட்டதாகும். 'சென்டரல் சேல்ஸ் டாக்சிற்கு' உட்பட்டதாகும். இதனை ஒரு சதவீதமாகக் குறைக்க அரசாங்கம் முன் வருவதற்கு சில நிபந்தனைகளை விதிக்கின்றது. இதற்கு சுப்பராயன் மகிழ்வார் என்று கருதுகிறேன். மகிழவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குப் பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. அதாவது, ஏற்றுமதியாகும் மொத்த பொருள்களும் 'பிரான்ஞ்ச் டிரான்ஸ்ஃபர்' அல்லது 'கன்சைன்மென்ட்' விற்பனையில் அனுப்பப்படாமல் முழுவதும் மைய விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டதாக அனுப்பப்பட வேண்டும்; சுப்பராயன் அவர்கள் முழுமையாக கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார். முழுமையாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒரு சதவீத அளவிற்கு - வரி விதிக்கப்படலாம் என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

மற்றொரு வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் வைக்கப்பட்டு, பேராசிரியர் தீரன் அவர்களால் வழிமொழியப்பட்டு, பழனிசாமி அவர்களாலும் இறுதியாக திருநாவுக்கரசு அவர்களாலும் - அவர் சண்டை மூட்டிவிடச் சொன்னார். (சிரிப்பு). இருந்தாலும் அவர்களாலும் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் வழிமொழியப்பட்ட ஒன்று. ஆனால் ரூ. 10 கோடி அதிகச் செலவாகும். 10வது வரையிலும் படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று இருந்தது. அதை ப்ளஸ் 2 வரையிலும் ஆக்கவேண்டுமென்று (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் வரையிலும் வழிமொழிந்திருக்கிற காரணத்தால் - மகனுக்காக அல்ல, மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்காகவும், மாணவர்களுக் காகவும் உறுப்பினர்கள் அத்தனை பேருடைய வேண்டுகோளை ஏற்று பிளஸ் 2 வரையிலும் இலவச பஸ் பாஸ் (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த நிதிநிலை அறிக்கை குறித்து நல்ல கருத்துக்களைக் கூறிய அனைவருக்கும் நல்ல ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொன்ன உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இந்த அளவிலே அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு சலுகைகளுக்கு அப்புறம் இன்னும் ஒரு நிமிஷமா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு வரிச் சலுகைகளை அறிவித்தார்கள். அதில் பேபி மில்க் புட், குழந்தைகள் சாப்பிடுகிற உணவு, அது ஒன்று. ஏழைகள் பயன்படுத்துகின்ற சைக்கிள் - தோழமைக் கட்சியினுடைய சின்னம் வேறு - அந்த சைக்கிளுக்கும், குழந்தைகள் பயன்படுத்துகின்ற உணவிற்கும், 3.6 லிருந்து 4% ஆக ஆகி இருக்கிறது. ஆகவே குழந்தைகள் பயன்படுத்துகிற உணவு, சைக்கிள், ஏழைகள் பயன் படுத்துகிற வாகனம், இந்த இரண்டிற்கும் முதலமைச்சர் அவர்கள் குறைத்து அறிவிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அடுத்த நிதி நிலை அறிக்கைக்கும் சில விஷயங்கள் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு மாவட்டப் பிரிவினைகளை இங்கே அறிவித்தார்கள். அறிவிக்கப்படுகின்றபோது செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், அண்ணா மாவட்டம் இரண்டிலுமே குறிப்பாக சைதாப்பேட்டை வட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் இந்த இரண்டு வட்டங்கள் இரண்டு மாவட்டங்களிலுமே வருகின்றன. தனித் தனி வட்டங்களாகப் பிரிக்கப்படுமா? அல்லது முன்பு இருந்ததைப் போல ஒரே வட்டமாக அது இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தனித்தனி வட்டங்களாக அது பிரிக்கப்படும். அது பற்றிய சந்தேகம் தேவையில்லை. நான் முதலிலே சொல்லி இருக்கிறேன். அந்த வட்டங்கள், கோட்டங்களைப் பற்றிய விவரமான அறிக்கை ஒன்று அரசின் சார்பாக நாளைக்கு வெளியிடப்படும்.



உரை : 26 நாள் : 14.03.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997–98ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டு, 52 உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் உட்பட உரையாற்றியிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 20 பேர் 4 மணி நேரம் 41 நிமிடங்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் 13 பேர் 4 மணி நேரம் 57 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் 5 பேர் ஒரு மணி நேரம் 27 நிமிடங்களும், இந்திய தேசீய லீக் சார்பில் 3 பேர் 50 நிமிடங்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பில் 2 பேர் 44 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் 2 பேர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்னிக்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1 மணி நேரம், 44 நிமிடங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 2 பேர் ஒரு மணி நேரம் 44 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் 2 பேர் 48 நிமிடங்களும், பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் ஒருவர், 14 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு) சார்பில் ஒருவர் 6 நிமிடங்களும், ஜனதா தளம் சார்பில் ஒருவர் 17 நிமிடங்களும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் ஒருவர் 10 நிமிடங்களும், தேவேந்திர சங்கத்தின் சார்பில் ஒருவர் 16 நிமிடங்களும், சுயேச்சை ஒருவர் 20 நிமிடங்களும், நியமன உறுப்பினர் ஒருவர் 13 நிமிடங்களும், மொத்தம் 16 மணி நேரம், 12 நிமிடங்கள் இந்த விவாதத்திலே

கலந்து கொண்டு அரிய கருத்துக்களை, நாங்கள் அறிய வேண்டிய கருத்துக்களைச் சீராக, செம்மையாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் கட்சிகளின் தலைவர்களும் இங்கே ஆற்றிய உரைகள், இந்த அரசு மேலும் தெம்புடன், திடமுடன், தெளிவுடன் நடைபோடுவதற்குத் துணை நிற்கின்றன என்பதை நன்றிப்பெருக்கோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு எதிர்க்கட்சியினுடைய இலக்கணம் எவ்வாறு இருக்கவேண்டு மென்பதைப் பற்றி நேற்றையதினம் திரு. திருநாவுக்கரசு நான் முன்பொருமுறை சொன்னதை எடுத்துச் சொன்னார். காரணம், அவர்களுடைய தலைவருடைய வாசகத்தை எடுத்துச் சொல்ல அவருக்கு இயலவில்லை. காரணம், கிடைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எனவேதான் எதிர்க்கட்சியினுடைய இலக்கியம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நான் சொன்னதை அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். நான் இங்கே அவர் சொன்னதை நினைவுபடுத்த வேண்டுமே யானால், எதிர்க்கட்சி, ஆளும் கட்சிக்கு, தார்க்குச்சியாக இருக்க வேண்டும். மூக்கணாங் கயிறாக இருக்கவேண்டும் என்றெல்லாம் நான் ஏற்கெனவே சொன்னதை நினைவுபடுத்தினார். நானும் அதை ஏற்றுக்கொண்டு இப்போதும், அதுதான் என் நிலை என்று சொன்னேன்.

அதுமாத்திரமல்ல. இந்த நிதிநிலை அறிக்கையினுடைய தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

‘மடுத்தவா யெல்லாம் பகடன்னானன்உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து’

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த, கரடு முரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவது போல, விடாமுயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றி கிட்டும் என்ற திடசித்தத்தோடு இந்த அரசு செயல்படுகிறது என்று குறிப்பிட்டு இருந்தேன். அதிலேயே, அப்படி இழுத்துச் செல்கின்ற எருதுகளுக்கு, தார்க்குச்சி தேவை, மூக்கணாங்கயிறு தேவை என்பதை, நான் சூசகமாக வலியுறுத்தத்தான்

திருக்குறளில் எத்தனையோ குறள் இருக்க, இந்தக் குறளைக் கையாண்டு இந்த எருதை சரியான பாதையில் நடத்திச் செல்ல நீங்கள் எல்லாம் உங்களுடைய கருத்துக்கள் எல்லாம் தார்க்குச்சிகளாகப் பயன்படவேண்டும். மூக்கணாங் கயிறாக இருக்கவேண்டும் என்ற அளவிலேதான் இந்தக் குறளை நான் கடந்த நிதிநிலை அறிக்கையிலே இறுதிப் பகுதியிலேயும், இந்த நிதிநிலை அறிக்கையிலே முதல் பகுதியிலேயும் இணைத்திருக்கிறேன் என்பதை மெத்தப் பணிவன்போடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு முன்பு இங்கே உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. பழனிச்சாமி அவர்கள், கொள்கைக் குறிப்பு ஏடாக முதலிலே பல பக்கங்கள் இதிலே புரளுகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு, பாராட்டி வரவேற்றுப் பேசி இருக்கிறார்கள். அவர் எதைக் குறிப்பிட்டார் என்பதை அவரே விளக்கியிருக்கிறார். மத்திய, மாநில அதிகாரங்கள் என்ற தலைப்பில், மத்தியிலே குவிந்து கிடக்கின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை, இன்று நேற்றல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலிருந்து, திராவிட முன்னேற்னற்றக் கழகம், எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியில் இருந்தாலும் சரி, வலியுறுத்தி வருகிறது என்பதை அவை உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதற்கேற்பத்தான், இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தப் பகுதிகள் இணைக்கப்பட்டு இருக்கின்றன. முன்பு இருந்த மத்திய அரசு கேளாக் காதாக இந்தப் பிரச்சினையிலே இருந்தாலும் கூட, இன்றுள்ள மத்திய அரசு ஓரளவு கையை செவியிலே வைத்து கொண்டாவது என்ன சொல்கின்றீர்கள் என்று கேட்கின்ற அரசாகவாவது இருக்கின்றது என்ற ஆறுதலை நாம் பெற முடிகிறது. அதற்கேற்ப சில உதாரணங்களைக் கூட இந்த அறிக்கையின் முகப்பிலே நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், இந்த அரசின் நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள திட்டங்களையெல்லாம் வெகுவாகப் பாராட்டி இருக்கின்றார்கள். அவர்களுடைய பாராட்டினைப் போலவே அவர்களுடைய

கட்சித் தலைவர் அன்பிற்குரிய நண்பர் மூப்பனார் அவர்களும், மத்தியிலே நிதி அமைச்சராக இருக்கின்ற அன்பிற்கினிய நண்பர் சிதம்பரம் அவர்களும், பாராட்டி, வெளிப்படையாக அறிக்கைகளை வெளியிட்டு இருக்கின்றார்கள். பல கட்சித் தலைவர்களும் தங்களுடைய நற்கருத்துக்களை இந்த அறிக்கைக்கு சார்பாக வெளியிட்டு இருக்கின்றார்கள். ஏடுகள் பல ஆங்கில ஏடுகள், தமிழ் ஏடுகள், தலையங்கங்களின் மூலமாக தங்களுடைய ஆதரவைக் காட்டியிருக்கின்றார்கள். வணிகப் பெருங்குடிமக்கள், தொழிலாளத் தோழர்கள். பல்வேறு நிறுவனங்கள், சங்கங்கள், சாதாரண சாமானிய மக்கள் அனைவரும் இந்த நிதிநிலை அறிக்கை தங்களுக்கு மிகமிகப் பிடித்தமான ஒரு அறிக்கை என்பதை பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார்கள். நான் இந்த அறிக்கையிலே மிக முக்கியமாக குறிப்பிட்டு காட்டியிருக்கின்ற சில திட்டங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்து காட்டியதற்கு ஒப்ப, இங்கே மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தி, அவை பற்றிய விளக்கங்களை சற்று விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற தலைப்பிலே தொகுதிக்கு ஒரு கிராமத்தை, முதற்கட்டமாக இந்த ஆண்டு தத்து எடுத்துக்கொண்டு, அந்தக் கிராமத்திலே, கிராமப்புற மக்களுடைய கல்வி, அவர்கள் பொருளாதார நிலையிலே மேம்பட்டு திகழவேண்டும் என்கின்ற அந்த ஆர்வம், இவைகளை எல்லாம் நெஞ்சில் தேக்கி, குறிப்பாக, தவத்திரு குன்றக்குடி அடிகளார் எப்படி குன்றக்குடி கிராம மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கி பலரும் போற்றுகின்ற வண்ணம் அதைச் செய்தாரோ அதைப்போல அதனினும் மேம்பாடான வகையில் தத்து எடுக்கப்படுகின்ற கிராமங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வளரவேண்டும். வளர்க்கப்படவேண்டும். வலுவாக்கப்படவேண்டும், நிரந்தர மாக வளம்பெற்று இருக்க வேண்டும் என்ற அந்த நிலையை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது.

கிராமப்புற பாசன திட்டங்களைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு காலத்திலே

கேட்டு, இன்றைக்கு மறந்துவிட்ட ஒரு பெயர் குடிமராமத்து என்பது. விவசாயிகளே பாசன வசதிகளை எல்லாம் கவனிப்பது என்பது தான் குடிமராமத்து ஆகும். அவர்களே தன்னார்வத்தோடு அந்தப் பணியிலே ஈடுபடுகின்ற திட்டம் குடிமராமத்து திட்டம். அந்தத் திட்டத்தை விவசாயிகளுக்கு அளித்து பாசன திட்ட விவசாயிகளுடைய அமைப்புகளை யெல்லாம் நிறுவிட வேண்டும். நண்பர் பழனிசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல விவசாயிகளுடைய அமைப்புகள் ஆங்காங்கு உருவாகி அவர்களுடைய கோரிக்கைகளை ஆராயவும், உரிமைகளைப் பற்றி ஆய்வு செய்யவும் ஏற்றவகையிலே அந்தப் பணிகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் உள்ள தொழில் வகைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப சிறுதொழில் முனைவதற்கு கூட்டுறவு முயற்சிகளை மேற்கொள்வது, மக்களோடு இணைந்த எழுத்தறிவு இயக்கத்தைச் செயல்படுத்துவது, அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற விழிப்புணர்வு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை வளர்த்தல் போன்றவற்றை அடித்தளமாகக் கொண்டு இத்திட்டம் அமையும், செயல்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நல்ல யோசனைகள் இருந்தால் தொடர்ந்து நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தொடரில் தொடர்புடைய மானியங்களின்மீது பேசும்போதும், உறுப்பினர்கள் தெரிவிக்கலாம். அல்லாமல், தனியாக தாள்களிலே எழுதி என்னிடத்திலே அவைகளைத் தந்தாலும் அவைகளையும் இணைத்து இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நல்ல முறையிலே அனைவரும் சேர்ந்து பயன்படுத்திக்கொள்வோம் என்று நான் உங்களை எல்லாம் அழைக்கின்றேன்.

மற்றொரு மிக முக்கியமான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். அதைத்தான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் பலரும்கூட இங்கே பேசுகின்ற நேரத்திலே பெரிதும் பாராட்டியிருக் கின்றார்கள். அதுதான் Information Technology Institute of Tamil Nadu.. தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப நிறுவனம். அதிவிரைவில் வளர்ச்சி அடைந்து வருகின்ற, வேகமாக

மாறுதல் அடைந்து வருகின்ற தகவல் தொழில் நுட்பத் துறையில் நாம் பின்தங்கிவிடாமல் இருப்பதற்கும் இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு ஏற்ற தகவல் தொழில் நுட்பத் துறையிலே உலகத்தில் முன்னோடியாக விளங்குவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத்தான் இந்தத் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப நிறுவனம், 10 கோடி ரூபாய் இந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டு தொடங்கப்பட இருக்கிறது. இதிலே அரசும், இந்தியாவிலே உள்ள தனியார் தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து உலகளவில் இந்தத் துறையிலே சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களின் உதவியோடு தொழில் நுட்பத்திலே வணிகம் பற்றிய செயல்பாடு, நாளும் மாறிக்கொண்டு வரும் தகவல் தொழில் நுட்பத்தில் புதிய முறைகள், புதுமையானதும், காலத்தின் மாற்றத்திற்கு ஒட்டிப்போகும் பாடமுறைகளைக் கொண்ட பட்டப்படிப்பினையும் உருவாக்கும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கேற்ப நேற்று இருந்த விஞ்ஞானப் புதுமை இன்றைக்கு மாற்றப்பெற்று விடுகின்றது. அவ்வளவு வேகமாக, ஆனால் நல்ல வழியிலே விஞ்ஞான வழியிலே பயணம் நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்தினுடைய தொலைவேகூட நான் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல மிக வேகமாகச் சுருங்கிக் கொண்டிருக்கிறது. குளோபல் வில்லேஜ் என்கின்ற அளவிற்கு நம்முடைய கிராமப் பகுதிகள் எதிர்காலத்திலே வரவிருக்கின்றன. உலகத்திலேயே தகவல் துறை தொழில் நுட்பத்தின் மூலம் அன்றாடம் புதுமைகளைத் தோற்றுவித்த நாள் ஒன்றுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் திறமை படைத்த 'பில்கேட்ஸ்' என்பவர் அண்மையிலே இந்தியாவிற்கு வந்திருந்தார். உங்களுக்கெல்லாம் தெரியும். அவருக்கு இந்தியாவிலே எத்தகைய வரவேற்பு அளிக்கப்பட்டது என்பதும் நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்றாகும் அது அவருக்காகத் தரப்பட்ட வரவேற்பு என்று சொல்லமாட்டேன். தகவல் துறை தொழில் நுட்பத்திற்காகத் தரப்பட்ட வரவேற்பு என்று நான் சொன்னால்தான் அது பொருத்தமாக இருக்கும். தகவல் தொழில் நுட்பத்தில் நமது தமிழகமும் முன்னேறத் தவறிவிடக்கூடாது. வேகமாக இந்தியாவிலே உள்ள பல பகுதிகள் முன்னேறத் தொடங்குகிற நேரத்தில் நாமும்

ஆயத்தமாக இருக்கவேண்டும். அவர்கள் எல்லாம் ஓடிய பிறகு நாம் ஓட ஆரம்பிக்கக் கூடாது. முதலிலேயே இந்த ஓட்டத்திற்குத் தயாராக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் வருங்காலத்தில் இந்தியாவும் இந்தத் துறையிலே ஒரு வல்லரசு நாடாகத் திகழ வாய்ப்புகள் உருவாகும்போது தமிழகம் அதிலே பின்தங்காமல் இருக்க நாம் இந்த நிறுவனத்தைத் தொடங்குகிறோம்.

அப்படிப்பட்ட தகவல் துறை வல்லரசாக இந்தியா திகழ்கிற நேரத்தில் தமிழகத்தின் பாடி வீட்டிலிருந்து புறப்படு கின்ற சிப்பாய்களாக இளைஞர்கள் உலகம் எங்கும் சென்று புகழ் சேர்க்க வேண்டும் என்ற என்னுடைய தணியாத ஆசையைத் தான் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதன் மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்தியாவுக்கு வருகை தந்த, நான் முதலில் குறிப்பிட்ட பில்கேட்ஸ் சொன்னார்' குழந்தைகள் டி.வி.யின் முன்னால் நேரத்தைச் செலவிடுவதைவிட கம்ப்யூட்டர் முன்னால் செலவிட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல, எதிர் காலத்தில் கணிப்பொறியை நாம் பேச வைக்கவும், சிந்திக்க வைக்கவும், பார்க்க வைக்கவும் வேண்டும். சாதாரண பாமர மனிதனோடு அது உரையாடவும் வேண்டும். கணிப்பொறி உரையாடவும் வேண்டும். எங்கள் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் கனவு அதுதான் என்று அவர் குறிப்பிட்டிருக் கிறார். அவரது கனவைப் படிக்கும்போது தமிழ்நாட்டு இளைஞர்கள் அந்தத் துறையிலே நுழைந்து முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆர்வத்தோடுதான் இந்த அமைப்பு தொடங்கப்படுகிறது என்பதை மீண்டும் ஒரு முறை அவைக்கு நினைவுபடுத்துகிறேன்.

மற்றும் ஒரு திட்டம், மத்திய அரசின் சார்பாக, மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படுகின்ற திட்டம் வாணிபம் சார்ந்த பெண்தொழில் முனைவோர் உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டம் Trade Related Entrepreneurship Assistance and Development for Women என்ற திட்டம். இதை TREAD என்று சுருக்கமான பெயரில் அழைக்கிறார்கள். மத்திய அரசின் உதவியோடு பெண் தொழில் முனைவோர் உதவித்

திட்டம் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இங்கே தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறேன். பெண்களுக்கு தொழில் முனையும் திறன் அளித்தல், அவர்களுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சிகளை அளித்தல், அவர்கள் தொழில் தொடங்கவும், உற்பத்தி செய்த பொருட்களை வாணிபம் செய்யவும் தேவையான உதவிகளை அளித்தல் போன்ற கூறுகளை அடிப்படையாகக் கொண்ட இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். இந்த ஆண்டு இந்தியாவிலே 9 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 5 ஆயிரம் பெண்கள் பயன்பெறும் வகையில் 3 ஆண்டுகளில் செயற்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்து இருக்கிறது.

சென்னையில் முதல் கட்டமாக உணவு பதப்படுத்தல், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள் தயாரித்தல் போன்ற தொழில்களைத் தொடங்கும் வகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இந்தத் திட்டம் செயற் படுத்தப்பட இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டியதுபோல இது மட்டும் அல்லாமல் மகளிருக்கு என்று– 5 ஆண்டுகளில் 10 லட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்க இந்த ஆண்டு முதல்கட்டமாக 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது 1 லட்சம் பெண்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்ற தலைப்பில் வேலை வாய்ப்புக்கு 1997–98ஆம் ஆண்டில் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், சுய வேலைவாய்ப்பு, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி பற்றிய பயிற்சிகள் தர 50 சத்துணவுக் கூடங்களில் முதல் கட்டமாக மகளிர் நல மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

250 பேர் – குடும்பத்திலே முதல் தலைமுறையாக பெண்கள் தொழில் தொடங்க வேண்டும் என்று எண்ணி தொழில் முனைவோர்களாக வர விரும்பினால் 50 ஆயிரம் ரூபாய் வரம்புக்குள் 10 சதவீதம் அரசு மானியமாக வழங்கத்

தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மகளிருக்கு மேலும் பணிகள் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற முறையிலே, உரிமைகளை அளிக்கவேண்டும் என்ற முறையிலே காவல் துறையிலே சரி பாதி ஆண்கள், சரி பாதி பெண்கள் என்ற நிலையை உருவாக்க முதல் கட்டமாக இந்த ஆண்டு பெண் காவலர்கள் 5 ஆயிரம் பேர் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்தில்கூட 17,500 மகளிர் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

மற்றும் ஒன்று, நமக்கு நாமே என்ற ஒரு திட்டம் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மனு நீதித் திட்டத்தை நீங்கள் அறிவீர்கள். அதை மேலும் மேம்படுத்தி மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்க்கும் நிலைக்கு வழிகோலும் வகையில் நமக்கு நாமே என்ற திட்டத்தைக் கொண்டு வருவது பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். தற்போது நடைமுறையிலே உள்ள மனுநீதித் திட்டத்தில், அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு அறிந்து, அவற்றின்மீது விசாரணை செய்து, உடனுக்குடன் முடிவெடுத்து அறிவித்து செயல்படுத்தப்படுகிறது. அதிலே உள்ள குறைபாடுகளைக்கூட உறுப்பினர்கள் தெரிவித்திருகிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. அந்தக் குறைகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதற்கும் மேலே ஒரு படி சென்று அந்தக் கிராமத்திலே ஒருங்கிணைந்த மனித ஆற்றலை உருவாக்கி அரசின் உதவிக் கரத்தைக் கொண்டு அந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில், நமக்கு நாமே என்ற திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல; நம்முடைய பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே கிராமச் சபைகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. நாம் இங்கே யூனியனைப் பற்றிப் பேசுகிறோம்; மாவட்ட ஊராட்சி மன்றத்தைப் பற்றி பேசுகிறோம்;

பேரூராட்சியைப் பற்றிப் பேசுகிறோம். மாநகராட்சி, நகராட்சியைப் பற்றியெல்லாம் பேசுகிறோம். இந்த ஊர்ச் சபையைப் பற்றிப் பேசவில்லை. இந்த ஊர்ச் சபைதான் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

ஊர்ச் சபை என்றால், ஊராட்சி மன்றத்திலே வாக்களித்தார்களே, அந்த வாக்காளர்கள் அத்தனைபேரும் கூடி ஆண்டில் ஒவ்வொரு வாரமும் என்று இல்லாவிட்டாலும், முடியாவிட்டாலும்கூட, 2 மாதத்திற்கு ஒரு முறை, 3 மாதத்திற்கு ஒரு முறை அந்த ஊர்ச் சபை கூட்டப்பட்டு, வாக்காளர் களுடைய சபை கூட்டப்பட்டு, அந்த ஊரினுடைய தேவைகள் எல்லாம் அவர்கள் மூலமாக உணரப்பட்டு, எந்தெந்த அரசுத் திட்டங்களை அந்தத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்தலாம், எதை உள்ளூர் மக்களின் தன்னார்வத் தொண்டோடு அரசு உதவியோடு நிறைவேற்றலாம் என்பவைகளையெல்லாம் வரையறுப்பதற்காக இந்த நமக்கு நாமே திட்டம் பயன்படும் என்று நான் கருதுகின்றேன்.

தற்போதுகூட தன்னார்வலர், மாணவர்கள் மற்றும் தொண்டுள்ளம் படைத்தோர் ஒன்று சேர்ந்து ஆங்காங்கே மரம் நடுதல், துப்புரவுப் பணி செய்தல், பள்ளி, சத்துணவு மையம், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றை வெள்ளையடித்தல் போன்ற பயனுள்ள பணிகளை எல்லா இடங்களிலும் செய்யாவிட்டாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்து வருகின்றார்கள்.

இந்தப் பணி சிறப்பாக நடைபெறுவதற்காக ஒரு திட்டமே வகுக்கப்பட்டு ஆந்திராவிலும், கேரளாவிலும் நடைமுறையிலே இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதைப்பற்றி நான் ஆந்திர முதலமைச்சரிடத்திலே தொடர்பு கொண்டு அந்தக் குறிப்புக்களையெல்லாம் பெற்றிருக்கிறேன். இந்த நடை முறையிலே உள்ள ஆந்திரா, கேரளா திட்டங்களை நமது அதிகாரிகளை அங்கேயே அனுப்பி, நடைமுறைகளைக் கண்டறிந்து ஆய்வு செய்து அவற்றின் சிறப்பான அம்சங்களை இந்த நமக்கு நாமே திட்டத்திலே சேர்க்க நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். இது நான் அறிவித்த நிதிநிலை அறிக்கை அல்ல; நீங்கள்

எல்லோரும் சேர்ந்து அறிவித்த நிதி நிலை அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி). திருநாவுக்கரசு, நான்தான் முதலிலே சொன்னேன் என்று கூடச் சொன்னார். அவருக்கு முன்பு சில உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அவர்கள் எல்லாம் உறுப்பினர்கள்; அவர் தலைவர். ஒரு கட்சிக்கு, இங்கே. எனவே அதை நான் எடுத்துக் கொள்கின்றேன்.

இது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்திய அரசின் சார்பாகத் தரப்படுகின்ற அந்த உரிமையைப் போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தரப்படவேண்டும் என்ற – கோரிக்கை என்று சொல்ல மாட்டேன் – உரிமை முழக்கம் இங்கே வைக்கப்பட்டு, அந்த முழக்கத்தை முடக்கிவிடாமல் இந்த ஆண்டிற்கு எப்படியாவது அறிவித்து விடுவோம் என்ற அளவில் – அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் கேட்டார் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ, நிச்சயமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த 25 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் நடைபெறுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் நடைமுறைகள் மத்திய அரசின், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நடைமுறைகளை ஒட்டியே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மத்திய அரசுத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களை உங்கள் முன்னால் நான் படித்துக் காட்டவும் விரும்புகின்றேன். மத்திய அரசுத் திட்டம், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – முக்கிய அம்சங்கள்.

1. நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர்களுடைய தொகுதியில் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளைத் தேர்வு செய்து அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பரிந்துரைக்க உரிமை உண்டு.

2. நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம், தான் தேர்வுசெய்த பணிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுப்பார். மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப்

பின்பற்றியும், மாநில அரசால் வரையறுக்கப்படக்கூடிய நடைமுறைகளைப் பின்பற்றியும் அப்பணிகளை நிறைவேற்றி வைப்பார். நகரப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பொறுத்தவரையில் நாடாளுமன்ற உறுப்பினர் விருப்பப்படி மாநகராட்சிகள், நகராட்சிகள் முதலியவற்றின் ஆணையாளர்கள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரில் ஏதேனும் ஒரு அலுவலர் அல்லது அமைப்பின் மூலம் இப்பணிகள் நிறைவேற்றப்படலாம்.

பணிகளைச் செயல்படுத்தும் முகவர் அமைப்புகள், ஏஜென்சீஸ், அரசாகவோ அல்லது ஊராட்சி நிறுவனங்களாகவோ அல்லது இப்பணிகளை மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் செய்து முடிப்பார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த அரசுசாரா தன்னார்வத் தொண்டு நிறுவனமாகவோ இருக்கலாம். நாடாளுமன்ற உறுப்பினரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பணி எந்த ஏஜென்சி மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளக்கூடிய பணிகள் என்னென்ன, மேற்கொள்ளப்பட முடியாத பணிகள் என்னென்ன என்பதையும் மத்திய அரசு வரையறுத்திருக்கிறது. இதிலே மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த எம்.பி. திட்டத்திலேயே நிறைய புகார் வந்தது. இதிலே உங்களுக்கு எவ்வளவு, எனக்கு எவ்வளவு என்றெல்லாம் பேரம் பேசினார்கள் என்று சொன்னார். அதற்கு இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் தனிப்பட்டவரிடத்திலே பணத்தைக் கொடுப்பதாக இல்லை. ஒரு அமைப்பிலே கொடுத்துவிட்டு, இவர்கள் யோசனைகளைச் சொல்லி, அவர்கள் மூலமாக அந்தப் பணத்தை ஒதுக்குகிறார்கள் என்றுதான் இருக்கிறது. ஒரு வேளை இந்த அமைப்பே தவறு செய்தால் அதை நாம் என்ன செய்ய முடியும்? இருந்தாலும்கூட, நல்லவைகளைத்தான் நாம் சிந்திக்க வேண்டும். நல்லவைகள் நடைபெறுவதற்கு நாம் நம்முடைய செயல்பாடுகளை முடுக்கிவிட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் பணிகளை மத்திய அரசு கோடிட்டுக் காட்டியிருக்கிறது, பட்டியலிட்டிருக்கிறது. பள்ளிகள், மாணவர்கள் இல்லங்கள்,

நூலகக் கட்டிடங்கள், அரசு அல்லது ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கல்வி நிறுவனங்களின் ஏனைய கட்டிடங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான இத்தகைய கட்டிடங்களைக் கட்டுதல்.

இரண்டு. கிராமங்கள், நகரங்கள் அல்லது மாநகரங்களில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு குழாய்க் கிணறுகள், நீர்த்தொட்டிகள் அமைத்தல் அல்லது இந்த வகையில் உதவக்கூடிய ஏனைய பணிகளை நிறைவேற்றுதல்.

மூன்று. கிராமங்களிலும், நகரங்களிலும், மாநகரங்களிலும் பகுதி சாலைகள், அணுகு சாலைகள், இணைப்புச் சாலைகள் உட்பட்ட சாலைகள் அமைத்தல். சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளூர் பகுதிக்கு மிக அவசியமானதென்று ஒப்புக்கொண்டு தேர்ந்தெடுக்கின்ற ஒரு சில கச்சா சாலைகளையும் அமைக்கலாம்.

மேலே குறிப்பிட்டவகைச் சாலைகள், சிறு பாலங்கள், பாலங்கள் கட்டுதல், திறந்த கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைத்தல், முதியோர் அல்லது ஊனமுற்றோர்க்காக பொதுவான புகலிடம் கட்டுதல், ஊராட்சி மன்றங்களுக்காவும், அங்கீகரிக்கப்பட்ட மாவட்ட அல்லது மாநில விளையாட்டுச் சங்கங்களுக்காகவும் கலை, விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காகவும் அல்லது மருத்துவமனைக்காகவும், கட்டிடங்கள் கட்டுதல், உடற்பயிற்சிக் கூடத்திலோ, விளையாட்டு சங்கங்களின் உடற்பயிற்சி கல்வி நிறுவனங்களிலோ பலநோக்கு உடற்பயிற்சி வசதி செய்து கொடுத்தாலும் அனுமதிக்கலாம். இப்படி அனுமதிக்கக்கூடியவைகளெல்லாம் ஒரு 23, 24 ஐட்டங்கள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளை நான் படிக்க விரும்பவில்லை. ஏனென்றால், அதை நீங்கள் எம்.பி.யிடத்திலே பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பிறகு சர்க்குலர்கூட அனுப்பப்படும்.

எடுத்துக்கொள்ள இயலாத திட்டங்கள் என்று ஒரு இணைப்பு, ஒரு பட்டியல் இருக்கிறது. அதிலே மத்திய, மாநில

அரசுகள், துறைகள், அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் தொடர்பான அலுவலகக் கட்டிடங்கள், குடியிருப்புக் கட்டிடம் ஏனைய கட்டிடம் இவைகளை எடுத்துக்கொள்ள முடியாது. வணிக நிறுவனங்கள், பொறுப்புக் கழகங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்பான பணிகள் இவைகளை எடுத்துக்கொள்ள முடியாது. நிலையான சொத்துக்களைப் புதுப்பித்தல், நிலை உயர்த்தலுக்கான சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் ஆகியவை நீங்கலாக வேறு எந்த ஒரு பழுதுபார்ப்புக்கும், பராமரிப்புப் பணிகளை எடுத்துக்கொள்ள முடியாது. மானியங்கள், கடன்கள், இவைகளில் தலையிட முடியாது. நினைவுச் சின்னங்கள் அல்லது நினைவுக் கட்டிடங்கள் இவைகளையும் எடுத்துக்கொள்ள முடியாது. யாதொரு இருப்பு அல்லது பட்டியல் பொருள்களை வாங்குதல் இவைகளையும் செய்ய இயலாது. நிலங்களை கையகப்படுத்துதல் அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்புகளை வழங்குதல் இவைகளையும் எடுத்துக்கொள்ள முடியாது. ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களின் பகுதியாக இருக்கக்கூடியவை நீங்கலாக தனி நபர் பயனுக்கான சொத்துக்கள் இவைகளையும் எடுத்துக்கொள்ள முடியாது.

சமய வழிபாட்டுக்கான இடம் இவைகளை கண்டிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், மத வழிபாட்டுக்கான இடங்களை அவரவர்கள் அவர்கள் இஷ்டத்திற்குச் செய்துவிடக் கூடாது என்பதற்காக அதையும் எடுத்துக்கொள்ள முடியாத அந்தப் பட்டியலிலே இணைத்திருக்கிறார்கள். இவைக ளெல்லாம் ஏற்கெனவே நாடாளுமன்றத் தொகுதி திட்டமாக அறிவிக்கப்பட்டு அதைக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே பார்த்து வருகிறோம். இப்போதுதான் நாம் பரீட்சார்த்தமாக நம்முடைய திட்டத்தைத் தொடங்குகிறோம். விரைவிலே தொடங்குகிற திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அதிலே இருக்கின்ற குறைபாடுகளை தேவைப்படுகின்ற நேரத்திலே எடுத்துச் சொல்லி அவற்றையும் நீக்கிக்கொண்டு, இந்த முதற்கட்டப் பணிகளை நாம் தொடங்குவோம் என்று என்னையும் சேர்த்து உங்களை அழைக்கின்றேன். ஏனென்றால் நானும் ஒரு சட்டமன்ற

உறுப்பினர்தான், எனக்கும் ஒரு தொகுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.வி. வாங்கிக் கொடுக்கலாமா என்று நான் ஒரு சந்தேகத்தைக் கேட்கிறேன். ஏனென்றால், ஏராளமான கிராமங்களிலே – பழைய அரசாங்கம் சில டி.வி.க்கள் வாங்கிக் கொடுத்து – பல கிராமங்களுக்கு டி.வி.க்கள் இல்லாமல், அது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தில் டி.வி. வாங்கிக் கொடுக்கலாமா என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பட்டியலையே சுற்றறிக்கையாக எல்லா உறுப்பினர்களுக்கும் தந்துவிடுகிறேன். அதிலே டி.வி. இருக்கிறதா, இல்லையா என்பதையும் பார்த்துக் கொள்ளலாம். ஏனென்றால் நான் பட்டியலிட்டதிலே 10, 15 ஐட்டங்கள் விட்டுப் போயிருக்கின்றன. டி.வி. வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் நல்ல முறையிலே வாங்கிக் கொடுக்க வேண்டும். அவ்வளவுதான். (சிரிப்பு)

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரியைப் பகிர்ந்து அளிப்பது பற்றி இங்கே திரு. பழனிசாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும் மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பல உறுப்பினர்களும் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். துணைத்தலைவர் அவர்களும் இன்றையதினம் பேசும்போது சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். நமது மாநிலத்திலே, மாநில மொத்த வரி வருவாயில் குறிப்பிட்ட சதவீதத்தை உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்துகொடுக்க மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, கேளிக்கை வரி நீங்கலாக மொத்த வரி வருவாயிலும் 8 சதவீதத்தை உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுவது என்று அரசு முடிவு செய்து, அதன்படி வருவாய்க் கணக்கிலே 1997-98ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றக்கூடிய மொத்தத் தொகை ரூ. 1174

கோடியாக உயரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கடந்த ஆண்டு 1996 – 97ல் ரூ. 646 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக ரூ. 1174 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்த 8 சதவீதம் போதாது என்ற கருத்து சொல்லப்பட்டிருக் கின்றது. கேரளத்தில், கர்நாடகத்தில், மேற்கு வங்காளத்தில், எல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. நான் அதை அப்பட்டமாக மறுக்க விரும்பவில்லை. ஆய்வு செய்யவே விரும்புகின்றேன். ஆனால், அவர்கள் சதவீதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த உள்ளாட்சி மன்றங்களுக்குத் தருகின்ற functions – பொறுப்புகள் – என்னென்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தப் பொறுப்புக்களை மாநில அரசே இன்றைக்கு எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட சில பொறுப்புகளை மாத்திரம்தான் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்திருக்கிற காரணத்தால், இந்த 8 சதவீதம் போதுமானதாக இருக்கலாம் என்றுதான் ஒதுக்கியிருக்கின்றோம். உள்ளாட்சி மன்றங்களுக்கு மகப்பேறு மையங்கள், மருந்தகங்கள், பாசனம், குடும்ப நலம் முதலியவை குறித்து அளிக்கப்படும் குறிப்பிட்ட பணிக்கான மானியங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 73, 74ஆம் திருத்தங்களின்கீழ் செயல்பட பகிர்வு முறை குறித்து முடிவு எடுக்கும் வரையில் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. எனவேதான், நாம் நிதி ஒதுக்குகிற நேரத்திலே, எத்தனை சதவீதம் என்று ஒதுக்குகிற நேரத்தில், இந்தப் பணிகளையெல்லாம் நாமே செய்து வருகின்ற காரணத்தால், அவர்களுக்கு இந்தப் பணிகள் இல்லாத காரணத்தால் இது போதும் என்று நாம் கருதுகின்றோம். தெரு விளக்கு, குடிநீர் வழங்கல் போன்றவைகளுக்கான மூலதன மானியங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இத்துடன், பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்ட நிதிகளும் – Decentralised District Plan allocation – உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசினால் அளிக்கப்படுகின்றன. கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில், அவர்கள் நிதிக் குழுவின் பரிந்துரைகள் மீதான இறுதி முடிவு, முறையே 1997ஆம் ஆண்டு மார்ச் 14, 17 ஆகிய நாட்களில் அவர்கள் அளிக்கவிருக்கின்ற நிதிநிலை

அறிக்கையில் அறிவிக்கப்படும் என்று தகவல் கிடைத்துள்ளது. அந்த மாநிலங்களோடு தொடர்பு கொண்டு பேசிய நேரத்தில் இந்த மாதம் 14, 17, ஆம் நாட்களில் அந்த மாநிலங்களிலே வைக்கப்படவிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலேதான் இந்த விவரங்கள் எல்லாம் கிடைக்கும் என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். கர்நாடக மாநிலத்திலே சில கூறுகள் நீங்கலாக விரிவான கோட்பாட்டின் அடிப்படையில் மாநில வருவாயில் 36 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கக் கருதியுள்ளது என்று தெரிய வருகிறது. இது பற்றிய விவரங்கள் மார்ச் 17 ஆம் தேதிக்குப் பிறகுதான் கிடைக்கும். மேற்கு வங்க மாநிலத்தில் அவர்கள் மொத்த வரி வருவாயில் 16 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றது. நம் நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் மேற்கு வங்காளத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களிடம் அதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 73, 74 விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பான்மையான இனங்கள் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 52 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகின்றன. எனவே, அவர்களுக்கு அதிகமாக விழுக்காடு ஒதுக்கியிருப்பது இயல்பேயாகும்.

இந்த மாநிலங்களின் வருவாயைப் பகிர்ந்தளிப்பது குறித்து, முழுமையான விவரங்களை நமது மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த விவரங்கள் இல்லாத நிலையில், மாநிலத்திலிருந்து வேறு சில மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றனவா, அல்லது அவை நிறைவேற்றப் பட்டு விட்டனவா என்பது பற்றியும், அவை பகிர்ந்தளிக்கப் படும் நிதியோடு சேர்க்கப்பட்டு விட்டனவா என்பது பற்றியும் தெரியவில்லை. இந்த மூன்று மாநிலங்களின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்ததன் அடிப்படையில், முடிவை எடுப்பதற்கு முன்னர், கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களின் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, இது குறித்து விரிவான பகுப்பாய்வு செய்யப்படும் என்ற உறுதியை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது பயன்படுத்தப்படும் கோட்பாடுகளின் படி, உள்ளாட்சி மன்றங்களுக்கான விதிகளை மாற்றுவதற்கு நமது மாநிலத்திலே எடுக்கப்பட்ட முடிவு 1997–98ஆம் ஆண்டுக்கு மாத்திரம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவு 1997–98க்கு மாத்திரம்தான். அடுத்து வரும் ஆண்டுகளில், பிற மாநிலங்களிலிருந்து கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் இந்த முறை ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மற்ற மாநிலங்களிலெல்லாம் உள்ளாட்சி மன்றங்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. பல காலமாகத் தொடர்ந்து இருக்கின்றன. இங்கு 10, 15 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று இப்போதுதான் உள்ளாட்சி மன்றங்கள் இயங்கத் தொடங்கியிருக்கின்றன. எனவே, இது ஆரம்பக் கட்டத்திலே இருப்பதால் நம்மால் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை. என்னென்ன பொறுப்புக்களை அதிகமாக அவர்களுக்கு அளிக்கலாம் என்ற தீர்மானத்திற்கும் வர இயலவில்லை. எனவே, ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் சிந்தித்து ஆராய்ந்து உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதி ஆதாரம், பொறுப்புக்கள் இவைகளைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது ஒரு பிரச்சினை பற்றி இங்கு குறிப்பிட்டார்கள். ''மாவட்ட வளர்ச்சிகள் குறித்துப் பரிசீலிக்க மாவட்ட திட்டக் குழு கட்டாயம் உருவாக்கப்படவேண்டும்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான விவரத்தைத் தர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 241 ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட திட்டக் குழு அமைக்க வகை செய்கிறது. மேலும், இக்குழு மாவட்டத்திலே உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுமைக்கும் ஒரு வரைவுத் திட்டம் தயாரிக்கவும் வகை செய்கிறது. இக்குழு தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து உள்ளாட்சி மன்றங்களின் ஆண்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து

உருவாக்கப்பட்ட திட்டங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதி விவரங்களையும், உருவாக்கக் கருதப்படும் பொருட்களுக்குத் தேவையான நிதி விவரங்களையும் மாநில அரசுக்குக் கண்டறிந்து சொல்லும். பல்வேறு துறைத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரித்து அளிக்கும். மேலும் திட்டங்களின் செயல்பாட்டையும் இக்குழு ஆய்வு செய்யும். மாவட்டத் திட்டக் குழுவை உருவாக்குவது பற்றி அரசு கவனத்தோடு ஆய்வு செய்து வருகிறது. இது பற்றிய அறிவிப்பு இந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்பதை சுப்பராயன் அவர்களுடைய பிரச்சினைக்குப் பதிலாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, முக்கியமாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் பாராட்டிப் பேசிய ஒன்று, 'தகவல் பெறும் உரிமைச் சட்டம்,' பலரும் அதைப்பற்றிப் பாராட்டியிருக்கிறீர்கள். 'Right to Information Act' என்ற தலைப்பிலே நாம் நிறைவேற்ற இருக்கிற சட்டம். இது விரைவில் சட்ட வடிவம் பெறும் என்று குறிப்பிட்டு இருக்கிறேன். இந்தியப் பத்திரிகைகளுடைய குழு 'Press Council of India' நமக்கு அனுப்பியுள்ள மாதிரிச் சட்டமுன்வடிவை தயாரிக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசு நிர்வாகத்திலே பொதுமக்களுடைய நிலையை ஒப்பிட்டுச் செயல்படுத்தும் திட்டங்கள், பணிகள், தனி மனிதருடைய உரிமைகள் போன்றவை தொடர்பான தகவல்களைப் பெறும் உரிமையை ஒவ்வொரு குடிமகனுக்கும் அளிக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது. குறிப்பாக, பொதுமக்கள் அன்றாட வாழ்க்கை தொடர்பான நியாய விலைக் கடை, பல்வேறு சான்றிதழ்கள் பெறுதல், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், அமைப்புகள், உள்ளாட்சிமன்ற அமைப்புக்கள் செயல்படுத்தும் திட்டங்கள், பணிகள் போன்றவை பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வழி செய்யப்படும். ஒவ்வொரு திட்டமும் ஒரு பகுதியில் நிறைவேற்றப்படும்போது, அதை நிறைவேற்றும் ஒப்பந்தக்காரர் பெயர், திட்டத்திற்கு ஒதுக்கீடு

செய்யப்படும் தொகை, எவ்வளவு காலத்தில் அது முடிக்கப்பட வேண்டும் என்பன போன்ற விவரங்களைப் பொதுமக்கள் இதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். தகவல்களை அளிக்க மறுப்போருக்கும், தவறான தகவல்களை அளிப்போருக்கும் அவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை அளிக்கவும் உரிய அதிகாரம் இந்தச் சட்டத்திலே வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே ஊழலின் ஊற்றுக் கண்களை அடைப்பதற்கு இச்சட்டம் உதவும் என்பதை நான் பெருமையோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச் சட்டம். கடந்த ஆட்சியில் ஒப்பந்தப் புள்ளி செயல்பாட்டில் நிகழ்ந்த பல்வேறு ஒழுங்கீனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நான் விவரங்களுக்கு உள்ளே நுழைய விரும்பவில்லை. எல்லோருக்கும் தெரியும் என்ற காரணத்தால். ஒப்பந்தப் புள்ளிகளுக்குத் தேவையான விளம்பரங்கள் அப்போது அளிக்கப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் குறிப்பிட்ட சிலருக்கே அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் கொடுக்காத ஒரு நிலை இருந்தது. ஒப்பந்தப் புள்ளிகளைப் பரிசீலித்து ஆணைகள் பிறப்பிப்பதில் நேர்மையின்மை மற்றும் மூடுமந்திரம் இருந்ததோடு வெளிப்படையின்மை இல்லை. இவையே ஒழுங்கீனங்களுக்கு முக்கிய காரணங்களாகும். அந்த ஒழுங்கீனங்களை நிரந்தரமாகக் களைவதற்கும், நியாயமாக மற்றும் வெளிப்படையாக ஒப்பந்தப்புள்ளி முறை செயல் படுத்தும் பொருட்டும் ஒரு சட்டத்தினை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்டம் இயற்றப்பட்டால் வருங்காலத்தில் ஒப்பந்தப்புள்ளி முறையின் அடிப்படை அம்சங்களை சட்டப்பேரவை அனுமதியில்லாமல் மாற்ற இயலாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இச்சட்ட முன்வடிவின் முக்கிய அம்சங்கள் எவையெவை என்பதைச் சொல்கிறேன். இன்னும் என்னென்ன அம்சங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பதை நான் சொன்ன பிறகு உறுப்பினர்கள் எங்களுக்குத் தகவலாகத் தர வேண்டும். யோசனையாகத் தர வேண்டுமென்பதையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இச்சட்டம் அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் மற்றும் பொருள்களை வாங்குவதற்கும் பொருந்தும் சட்டம்.

2. குறிப்பிட்ட மதிப்பிற்கு அதிகமான திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தும் (Open Tender) செய்தித்தாள்களில் கட்டாயமாக விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

3. மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை (Tender Bulletin) வெளியிடப்பட வேண்டும். இந்த அறிக்கையில் தகவல்கள் வெளியிடப்படுவது கட்டாயமாக்கப் படும். செய்தித்தாள்களிலோ அல்லது ஒப்பந்தப் புள்ளி அறிவிக்கையிலோ தகவல்களை வெளியிடாத ஒப்பந்தப்புள்ளி அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளிமீது பிறப்பித்த இறுதி ஆணைகள் குறித்த விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையிலேயே அறிவிக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விநியோகம் பரவலாக்கப் படும்.

இச்சட்டம் அரசுத் துறைகள், அரசுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சட்டப்படி அமைந்த வாரியங்கள், கழகங்கள், (Statutory Boards) போன்ற அமைப்புகளுக்கும் பொருந்தும். ஏற்கெனவே இருந்த சிங்கிள் டெண்டர் முறையினால் எவ்வளவு ஊழல்கள் பெருகியிருக்கின்றன என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

அதைப்போலவே கனிமத் துறையில் விதி 39 என்ற ஒரு பிரிவைச் சேர்த்ததன் காரணமாக, அவர்கள் விருப்பத்திற்கேற்ப யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற நிலை இருந்தது. அதன் காரணமாக எத்தனை கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே, இந்தச் சட்டம் எல்லா வகையிலும் வரவேற்கத்தக்கது; நீங்கள் தருகின்ற யோசனைகளையும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்படுகின்ற சட்டம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவு–செலவுத் திட்டத்தைப் பற்றி திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். 1996 – 97 இலே திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கிலே வரவு 11,068 கோடி ரூபாய் என்றும் வருவாய்க் கணக்கிலே செலவு 12,106 கோடி ரூபாய் என்றும் 1038 கோடி ரூபாய் பற்றாக்குறை என்றும் இருந்து, திருத்த மதிப்பீட்டில் வரவு 11,760 கோடியாக, 700 கோடி ரூபாய் உயர்ந்தபோதிலும், பற்றாக்குறை 1,286 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். அதிலே உள்ள 4 வரிகளிலே 3 வரிகளை மாத்திரம் அவர் பார்த்திருக்கிறார். 4 வது வரியிலே திருத்த மதிப்பீட்டில் வரவு 11,760 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கும்போது, செலவுக் கணக்கிலே, அதே வரியில் 13,047 கோடி ரூபாய் என்று இது உயர்ந்த காரணத்தால்தான் பற்றாக்குறை உயர்ந்திருக்கிறது என்பதை அவர்களுக்கு விளக்கமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ரூ. 11,068 கோடிக்கு நேராக ரூ. 11,760 கோடி;

ரூ. 12,106 கோடிக்கு நேராக ரூ. 13,047 கோடி என்று இருப்பதை அவர் பார்க்காமல் விட்டுவிட்ட காரணத்தால் அல்லது சொன்னவர்கள் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்ட காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த...

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே படித்துவிட்டு வருவதுதான், யாரும் சொல்லிக் கொடுத்து வந்து பேசுவது இல்லை. 6 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன்.. விடிய விடிய படித்துவிட்டு வந்துதான் பேசுகிறேன். எதனால் அந்த டிபரன்ஸ் 700 கோடி ரூபாய் அளவுக்கு வந்தது? வருவாய் இவ்வளவு, செலவு இவ்வளவு, வருவாயைக் காட்டிலும் செலவு கூடியிருக்கிறது. இவை இரண்டையும் சொல்லித்தான் நான் சொல்ல வேண்டும். ஆனால் நான் அதைக் குறிப்பிடவில்லை. அவ்வளவுதான்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: அதைக் குறிப்பிட்டிருந்தால் இந்தக் குழப்பம் வராது என்பதற்காகத்தான் சொன்னேன். நானும் விடிய, விடிய படித்துவிட்டுத்தான் வருகிறேன். நானும் அதிகாரிகள் சொல்வதைக் கேட்டுத்தான் சில சமயங்களில் பேச வேண்டியதாக இருக்கிறது. அது

மாதிரிதான் திருநாவுக்கரசும். எனக்கு இப்போது இருக்கிற அதிகாரிகள், அவருக்கு பழைய அதிகாரிகள் சொல்லி யிருப்பார்கள். அவ்வளவுதான். (சிரிப்பு).

இந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில் பற்றாக்குறை ரூ. 1736 கோடி என்பதைக் குறிப்பிட்டு, இது வரலாறு காணாத பற்றாக்குறை என்று நண்பர் திருநாவுக்கரசு இங்கே சொன்னார்கள். கடந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை ரூ. 1038 கோடி என்றாலும், பொதுக் கடன், நிகரம், மூலதனக் கணக்கு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டபோது இறுதிப் பற்றாக்குறை ரூ. 334.89 கோடிதான். அதுவும் திருத்த மதிப்பீட்டில் ரூ. 156 கோடியாகக் குறைந்தது என்பதை மறந்து விடக்கூடாது. அதைப் போலவே, இந்த ஆண்டிலும் நிதிநிலை அறிக்கையில் மொத்தக் கணக்கைப் பார்த்தால் இறுதிப் பற்றாக்குறை ரூ. 498.38 கோடிதான். இதிலும் வரி வருவாய் ரூ. 170 கோடி. எப்படியென்றால் ரூ. 210 கோடி விதித்திருக்கின்ற வரியினால் வரும். நாம் விலக்கு அளித்திருக்கின்ற வரி, குறைந்திருக்கின்ற வரி ஆகியவற்றால் ரூ. 40 கோடி குறையும். எனவே, ரூ. 210–40= ரூ. 170 கோடி.ரூ. 498 கோடியில் இந்த ரூ. 170 கோடியைக் கழித்தால் இறுதியான பற்றாக்குறை ரூ. 328 கோடிதான். எனவே, ரூ. 1736 கோடி என்பது ஆரம்பத்தில் சொல்லப்பட்ட பற்றாக்குறை. இறுதிப் பற்றாக்குறை ரூ. 328 கோடிதான் இருக்கும். இதை வரலாறு காணாத பற்றாக்குறை என்று திருநாவுக்கரசு சொன்னார். அவரும் வரலாறு படித்தவர், நானும் வரலாறு படித்தவன். நான் ஒரு வரலாற்றைச் சொல்கிறேன்.

1989 – 90 இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பற்றாக்குறை ரூ. 479 கோடி. 1990–91இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பற்றாக்குறை ரூ. 553 கோடி. இன்றைக்குப் பற்றாக்குறை – வரலாறு காணாத பற்றாக்குறை ரூ. 1736 கோடி என்றாரே, ஆனால் அவருடைய தலைவி, செல்வி ஜெயலலிதா ஆட்சியில், 1991–92இல் பற்றாக்குறை ரூ. 1903 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

இது வரலாறு காணாத பட்ஜெட் இல்லையா? எது வரலாறு காணாதது? (மேசையைத் தட்டும் ஒலி) பழைய பட்ஜெட்டையெல்லாம் பார்க்க மாட்டோம் என்ற எண்ணமா?

(சிரிப்பு) எனினும், இந்த ஆண்டு, அதாவது , 1996–97இல் பற்றாக்குறை இந்த அளவிற்கு ரூ. 1736 கோடி என்ற அளவிற்கு அதிகமானதற்கான காரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்தியத் திருநாட்டிலே நிலவுகின்ற பொதுவான பொருளாதார நிலைமை இதற்கு ஒரு காரணம். அதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. அடுத்தது, நிதிநிலை அறிக்கையிலே கணிசமான வரிச் சலுகை அளித்தோம். அதுவும் ஒன்று. இதன் காரணமாக வரி வருவாய் வளர்ச்சி. 1996–97இலே குறைந்த பற்றாக்குறை சற்று அதிகம் ஆனது. நடப்பு நிதியாண்டில், 1996–97இல் வெள்ள நிவாரணம். அரசு அலுவலர்களுக்கு அளித்த இடைக்கால நிவாரணம் ஆகியவற்றிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்த காரணத்தால் வருவாய்ச் செலவு அதிகரித்தது. வருவாய்க் கணக்கிலே ஏற்பட்ட பற்றாக்குறை ஏற்றத்தைப் பொதுக் கணக்கிலும், மூலதனக் கணக்கிலும் ஏற்பட்ட உபரி சரி செய்துள்ளது. அதனால், 1996–97ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் பற்றாக்குறை ரூ. 334 கோடியிலிருந்து, ரூ. 156 கோடியாகக் குறைந்தது. 1997–98ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1736 கோடி ஆனதற்கான காரணத்தையும் சொல்கிறேன். சம்பளக் குழுவின் பரிந்துரைகளுக்காக ரூ. 500 கோடி. வந்தால் தருவதற்காக ரூ. 500 கோடி ஒதுக்கியிருக்கிறோம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் நிதி வழங்க, கூடுதலாக ரூ. 525 கோடி ஒதுக்கியிருக்கிறோம். ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் ஓய்வூதியம் வழங்க ஒதுக்கீடு ரூ. 490 கோடி. இதனால்தான், இந்தப் பற்றாக்குறை ரூ. 1736 கோடியாகத் தோன்றி நம்மால், நம்முடைய செயலால், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல ரூ. 328 கோடி அளவிற்குக் குறைக்கப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருநாவுக்கரசு அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். பொருளாதாரப் பணிகளுக்காக 1996–97ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் ரூ. 3158 கோடியாக இருந்த ஒதுக்கீடு 1997–98ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கான மதிப்பீட்டில் ரூ. 3118 கோடி அளவிற்குக் குறைந்துள்ளது என்றார்கள். அவர்கள் நன்றாகவே படித்துத்தான்

சொல்லியிருக்கிறார்கள். சிரமப்பட்டு, பட்ஜெட்டிற்கான பொது விவாதத்திலே பேசுவதற்கு எவையெவற்றையெல்லாம் படிக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் அக்கறையோடு படித்த காரணத்திற்காக நான் பெரிதும் பாராட்டுகிறேன். அதனால்தானோ என்னவோ, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, இவர் இங்கல்லவா இருக்க வேண்டும் என்ற ஆசையைத் தெரிவித்திருக்கிறார் என்று நான் கருதுகின்றேன்.

பொருளாதாரப் பணிகளுக்காக 1996–97 ஆம் ஆண்டுக் கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 3158 கோடியாக இருந்த ஒதுக்கீடு 1997–98ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 3118 கோடி அளவிற்கு ஏன் குறைந்தது என்று கேட்டார்கள். அதற்கான காரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அடுத்த ஆண்டுக்கு அளிக்கப்பட வேண்டிய வட்டி, மானியமாக ரூ. 58 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. செய்யாததற்குக் காரணம், தமிழ்நாடு மின்சார வாரியம், மாநில அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள கடன் முழுவதையும், பங்கு மூலதனமாக மாற்ற இருப்பதால், அந்த வட்டித் தொகையை இதிலே சேர்க்கவில்லை. மற்றொன்று: இலவச வேட்டி, சேலை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு 65 கோடி ரூபாய். இது, கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்' என்ற தலைப்பிலேயிருந்து, 'சமூகப் பாதுகாப்பும் நலனும்' என்ற தலைப்பிற்கு, மாநிலக் கணக்காயர் – ஏ.ஜி. மாற்றச் சொல்லி அளித்த ஆலோசனையின்படி, இப்போது அது சமூகநலப் பணிக்கு மாற்றப்பட்டுவிட்டது. பொருளாதாரப் பணியிலே இருந்து, இலவச வேட்டி சேலை வழங்குகிற அந்தப் பணி, சமூகநலப் பணிக்கு மாற்றப்பட்டுவிட்ட காரணத்தால், இலவச வேட்டி சேலைக்காக 65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட தொகை அந்தத் தலைப்புக்குப் போய்விட்டதால், இதிலே குறைந்து விட்டதேயல்லாமல், உண்மையிலேயே இக்குறைவு இல்லை என்பதையும் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகப் பணிகளுக்காக, 1996–97 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில், ரூ. 5,240 கோடியாக இருந்த ஒதுக்கீடு,

1997–98இல், ரூ. 5,317 கோடியாகத்தான் உயர்ந்துள்ளது; கொஞ்சம்தான் உயர்ந்துள்ளது என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார். அதற்கும் நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். 1996 – 97 திருத்திய மதிப்பீட்டில், அதிக தொகையாகக் காணப்படுவதற்குக் காரணம், வெள்ள நிவாரணத் தொகை ரூ. 195 கோடியைச் சேர்த்த காரணத்தால், ரூ. 5,240 கோடியாக இருந்தது. அந்த 5,240 கோடி ரூபாயில், 195 கோடி ரூபாய் வெள்ள நிவாரண நிதிக்காக நாம் அளித்ததைக் கழித்து விட்டால், ரூ. 5,045 கோடியாகத்தான் இருக்கும். அதோடு இந்த 5,317 கோடியை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், 272 கோடி ரூபாய் சமூகப் பணிகளுக்காக அதிகம் ஒதுக்கியிருக்கிறோம் என்ற உண்மை புரியும். இவையெல்லாம் எடுத்துச் சொல்லப்படாத காரணத்தால், திருநாவுக்கரசு அவர்களுக்குச் சந்தேகம் என்ற காரணத்தால், அந்தச் சந்தேகத்தை இந்த விளக்கம் மூலமாக நான் போக்கி இருப்பதாக நம்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசிய நண்பர் குமாரதாஸ் அவர்கள்– வரவில்லை என்று கருதுகிறேன்; பொது விவாதத்திலே பேசிவிட்டு, என்ன பதில் அளிக்கிறோம் என்பதைக் கேட்கின்ற ஆர்வம், இனிமேலாவது குமாரதாஸ் அவர்களுக்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவருக்கும் இதனை விண்ணப்பம் செய்து கொள்கிறேன்; அவர்கள் பேசும்போது, முக்கியமான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். சிந்திக்க வேண்டிய, சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய, அது எப்படி என்பதை அறிய வேண்டிய, ஆராய வேண்டிய கருத்தை, குமாரதாஸ் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். காமராஜர் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட, எல்லாத் துறைகளிலும் குறைந்த சதவிகிதம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தமிழக அரசு நிதிநிலை அறிக்கையின் வரலாற்றைப் பார்த்தால்,

1938 – 39இல் வருவாய், 16.14 கோடி ரூபாய்;

1952 – 53இல் வருவாய், 58.42 கோடி ரூபாய்;

1965 – 66இல் வருவாய், 172.80 கோடி ரூபாய்;

1975 – 76இல் வருவாய், 563.56 கோடி ரூபாய்;

1980 – 81இல் வருவாய், 1,279.96 கோடி ரூபாய்;

1989 – 90இல் வருவாய், 4,281.57 கோடி ரூபாய்;

1997 – 98இல் வருவாய், 12,641.05 கோடி ரூபாய்.

எங்கேயிருந்து எங்கே வந்திருக்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1938–39இல் 16 கோடி ரூபாயிலிருந்து, இன்றைக்கு 12,641 கோடி ரூபாய் பட்ஜெட் என்கிற அளவுக்கு வரவு வளர்ந்திருக்கிறது. ஆனால், அந்தக் காலத்தைவிட, இந்தக் காலத்திலே ஏன் விகிதாச்சாரம் குறைந்தது என்ற ஒரு நல்ல கேள்வியை அவர்கள் கேட்டார்கள். ''மாநில சட்டமன்றங்கள்'' என்ற தலைப்பில், இந்த ஆண்டு, இப்போது 6.75 கோடி ரூபாய்க்கு ஒரு மானியம் குறிப்பிடப் பட்டுள்ளது; படித்தால் தெரியும். ஆனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்து நிதிநிலை அறிக்கையில், இந்தத் தலைப்பில், ஒரு மானியமே கிடையாது. 'பொது நிர்வாகம்' என்ற தலைப்பிலே தான், அப்போது மாநிலச் சட்டமன்றங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. அந்த ஒரு தலைப்பிலே இருந்தது. தற்போது, 'மாநிலச் சட்டமன்றம், ஆளுநர், தேர்தல்கள்' என்ற 3 மானியங்களுக்கான தனித் தனி ஒதுக்கீடாக செய்யப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. அதனால், தலைப்பை மாத்திரம் எடுத்துக் கொண்டு, அப்போதுள்ள விழுக்காட்டோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாக இருக்க முடியாது. அதுமாத்திரமல்ல: 1957-58ஆம் ஆண்டில் வருவாய் மானியக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 34. 1966-67ஆம் ஆண்டில் அது 37ஆகவும், 1996-97இல் 51 ஆகவும் உயர்ந்துள்ளது. 1997-98ஆம் ஆண்டில், அந்த மானியக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 52ஆக உயர்ந்துள்ளது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. அதைத்தான் அன்றைக்கு நான் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கான விவரங்களை இப்போது சொல்கிறேன்.

1957–58ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் முன்னேற்றத் திற்கு ஒரே ஒரு மானியக் கோரிக்கை மாத்திரம் இருந்தது. 'ஹரிஜன் வெல்ஃபேர்'லேதான் அமைச்சர் இருப்பார். அந்த இலாகாவிலேதான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இருக்கும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எல்லோரும் அதிலே

தான் இருந்தார்கள். அந்த ஒரு அமைச்சர்தான் அவைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டிருப்பார். பிற்படுத்தப்பட்டோர், அதைப்போல அரிசன நலன் இவைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார். இரண்டுமே சரியாக நடைபெறமுடியாத ஒரு சூழ்நிலை. அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் இவர்கள் சரியாகச் செய்யவில்லை என்ற குறையையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதனால் நான் அண்ணா அவர்களுக்குப் பிறகு, பொறுப்புக்கு வந்தவுடன், அந்தத் துறையைப் பிரித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று ஒரு துறையைப் புதிதாக உருவாக்கி அதற்கு ஒரு தனி அமைச்சரை நியமித்து, அந்தத் துறை பிரிக்கப்பட்ட காரணத்தால், அன்றைக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு 1 இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய்தான் நிதியொதுக்கீடு. ஆனால் இன்றைக்கு 34 கோடி ரூபாய், 54 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது என்றால் அன்றைக்குச் செய்த அந்தக் காரியம்தான். அந்த மகத்தான காரியம்தான் இன்றைக்கு இந்த மாபெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

1996–97, 1997–98ஆம் ஆண்டுகளில் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் நலனுக்கு ஒரு மானியக் கோரிக்கையும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கு தனி மானியக் கோரிக்கையும் உள்ளது. அதைப் போன்று சமூக நலத் துறைக்கு 1957 – 58ஆம் ஆண்டுகளில் தனி மானியக் கோரிக்கை ஏதுமில்லை. Community Development என்ற பெயரில் ஒரே ஒரு மானியக் கோரிக்கை மாத்திரம்தான் இருந்தது. ஆனால் தற்போது ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், தொழிற்சாலை உள்ளிட்ட தொழிலாளர் நலன், சமூக நலன், வீட்டு வசதி, நகர்ப் பகுதி வளர்ச்சி, நுகர்பொருள் வழங்கல் போன்ற துறைகளுக்குத் தனித் தனியாக மானியக் கோரிக்கை கள் வந்துவிட்டன. இவைகளையும் மறந்துவிடக் கூடாது. இதைப்போன்றே தொழில் துறைக்கு 1957-58, 1966-67ஆம் ஆண்டுகளில் ஒரே ஒரு எண் 20 மானியக் கோரிக்கைதான் இருந்தது. ஆனால் தற்போது அது தொழில் துறை, கதர் கிராமத் தொழில், ஊரகத் தொழில் போன்றவற்றிற்கு

தனித் தனி மானியக் கோரிக்கைகள் என்ற அளவுக்கு வளர்ந்துவிட்டது. முன்னர் இல்லாத சில மானியக் கோரிக்கைகள் வருமாறு. பால் வழங்கும் திட்டங்கள், கைத்தறி, துணித் தொழில் சுற்றுலா, சுற்றுச்சூழல், தமிழ் வளர்ச்சி பண்பாடு, செய்தி–திரைப்படத் தொழில் நுட்பம் மற்றும் இயற்கைச் சீற்றம் குறித்த துயர் தணிப்பு என்று அரசு பல புதிய துறைகளிலே பல திட்டங்களையும். புதிய திட்டங்களையும், மேற்கொள்வதை இவை அனைத்தும் காட்டுகின்றன. எனவே சதவீத அடிப்படையில் அரசு பல துறைகளில் செலவினத்தைப் பரவலாக ஆக்கியுள்ளதால் திரு. குமாரதாஸ் அவர்கள் அது குறைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினாரே அல்லாமல் வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் கட்டணத்தைப் பற்றியும், அதன் உயர்வைப் பற்றியும் நண்பர் திரு. ரங்கநாதன் அவர்களும் மற்றும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திரு. பழனிசாமி அவர்களும், மற்ற நண்பர்களும் திரு. திருநாவுக்கரசு அவர்களும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மின் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் வகையிலே ஏற்படுகிற கூடுதல் செலவை ஈடுகட்டிட மின் கட்டண விகிதங்களை ஒவ்வொரு ஆண்டும் திருத்தி அமைக்க வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது இது சரிதான். உண்மைதான் என்றும் புலப்படும். மின் கட்டண விகிதங்கள் 1.2.1992ல் 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகவும், 1-3-1993ல் எச்.டி.-க்கு 18 சதவிகிதமும். எல்.டி.க்கு 13 சதவிகிதமும், 1.3.1994ல் எச்.டி.க்கு 22 சதவிகிதமும், எல்.டி.க்கு 17 சதவிகிதமும் 1.2.1995ல் எச்.டி.க்கு 15 சதவிகிதமும், எல்.டி.க்கு 15 சதவிகிதமும் உயர்த்தி அமலுக்கு வந்துள்ளன.

1996 – 97ல் தேர்தல் வந்த காரணத்தால் தேர்தலுக்கு முன்பு மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பதை அவர்களும் ஒப்புக்கொள்ள வேண்டும். நாமும் ஒப்புக் கொண்டாக வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 15.2.1997 முதல் அமலுக்கு வந்த மின் கட்டண விகிதங்கள்

மொத்தத்தில் 16 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1996 – 97 ஆம் ஆண்டுக்கான மின் துறையின் வரவு–செலவு மதிப்பீட்டுத் தொகையில் சுமார் 1,000 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ளது. இந்தத் துண்டு 1.2.1995 முதற்கொண்டு முக்கியமாக கீழே குறிப்பிட்டுள்ளவாறு சில வகைச் செலவினங்களில் ஏற்பட்டுள்ள அதிகச் செலவு காரணமாக ஏற்பட்டுள்ளது. தேசிய அளவில் தேசிய அனல்மின்சாரக் கழகம் மற்றும் நெய்வேலி, கல்பாக்கம், சென்னை அனல் மின்சக்தி நிலையம் ஆகியவற்றில் மின்சாரக் கொள்முதல் விலையை மத்திய அரசு ஒரு யூனிட்டுக்கு 90 பைசாவிலிருந்து 105 பைசாவாக உயர்த்தியுள்ளது. நெய்வேலி மற்றும் ராமகுண்டம் போன்ற இடங்களிலிருந்து மத்திய அரசு நிறுவனம் மூலம் மின்சாரம் வாங்கும் வகையில் 1.2.1995 அன்றிருந்த 823 கோடி ரூபாய் தற்போது 871 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிலக்கரி நிறுவனத்திடமிருந்து வாங்கும் நிலக்கரியின் விலை ஏற்றத்தின் காரணமாக 1.2.1995 அன்று 1350 கோடி ரூபாய் என்று இருந்தது தற்போது 2073 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மின்சார அலுவலர்களின் ஊதியம் 1.2.1995ல் 535 கோடி ரூபாயாக இருந்தது தற்போது 769 கோடியாக உயர்ந்துள்ளது. கடன் பெற்ற வகையில் ஏற்பட்ட வட்டி செலவினங்கள் 1.2.1995ல் 340 கோடி ரூபாய் என்பது தற்போது 492 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது திருத்தி அமைக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின் காரணமாக 600 கோடி ரூபாய் மாத்திரமே ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும். இதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டால், ஆந்திராவில் 50 யூனிட் முதல் 100 யூனிட் வரை 120 காசு, அதாவது 1 ரூபாய் 20 காசு, கர்நாடகாவில் 130 காசு, கேரளாவில் 90 காசு, மராட்டியத்தில் 105 காசு, குஜராத்தில் 98 காசு, மேற்கு வங்கத்தில் 86 காசு, பரிதாபத்திற்குரிய தமிழ்நாட்டில் 75 காசு. இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆந்திராவில் 120 காசு, கர்நாடகாவில் 130 காசு, கேரளாவில் 90 காசு, மராட்டியத்தில் 105 காசு, குஜராத்தில் 98 காசு, மேற்கு வங்கத்தில் 86 காசு, தமிழ்நாட்டில் 75 காசு.

அதைப்போல 150லிருந்து 200 யூனிட் வரை என்று பார்த்தால் ஆந்திராவில் 165 காசு, கர்நாடகாவில் 130 காசு, கேரளாவில் 150 காசு, மராட்டியத்தில் 220 காசு, குஜராத்தில் 137 காசு, மேற்கு வங்கத்தில் 154 காசு, தமிழ்நாட்டில் 120 காசு. இப்படித்தான் மின் கட்டண உயர்வு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளை வாட்டி வதைக்கின்ற அளவுக்கு மின் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள் என்று திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியில் – அவர்களுடைய ஆட்சியில் என்றால் கோபித்துக் கொள்ளக்கூடாது – அவர் அப்போது ஆட்சியில் இல்லை என்றாலும்கூட, இப்போது அவர்களுடைய ஆட்சி என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அவர்களுடைய ஆட்சியில் மின்கட்டண உயர்வு வீட்டு உபயோகத்திற்கு மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 25 யூனிட் வரை – 50 யூனிட் வரைகூட அல்ல – 25 யூனிட் வரை 1.3.1994 முதல் 55 பைசாவிலிருந்து 65 பைசாவாக உயர்த்தப்பட்டது 25 யூனிட்டுக்கே. பிறகு 1.3.1994ல் 25 யூனிட் முதல் 50 யூனிட் வரை 65 பைசா என்று இருந்தது 75 பைசாவாக உயர்த்தப்பட்டது. பிறகு 51 யூனிட் முதல் 100 யூனிட் வரை 90 பைசா என்று இருந்தது 100 பைசாவாக உயர்த்தப்பட்டது. 101 முதல் 300 யூனிட் வரை, 1.3.1993 முதல் 90 பைசா என்பதை ஒரு ரூபாய் 10 காசு என்றும், 1.3.1994 முதல் ஒரு ரூபாய் 30 காசு என்றும் 1.2.1995 முதல் ஒரு ரூபாய் 50 காசு என்றும் அதை உயர்த்தினார்கள். அப்படி உயர்த்தப்பட்டதுதான். இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறதே அல்லாமல், வேறு அல்ல. ஏற்கெனவே இந்தக் கட்டங்களில் எல்லாம் கடந்த ஆட்சியிலே, செல்வி ஜெயலலிதா ஆட்சியிலே இவை எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

300 யூனிட்டுக்கு மேல் 1.3.1993 முதல் 1.40 என்பதை 1.65 என்றும், 1.3.1994 முதல் 1.65 என்பதை 1.90 என்றும், 1.2.1995 முதல் 1.90 என்பதை 2.20 என்றும் அவர்கள் உயர்த்தினார்கள். அதை இப்போது நாம் 2.50 என்று உயர்த்தி இருக்கிறோம். உயர்த்திக் கொண்டே போனார்கள், பல படிகளைப் போட்டார்கள். மேலும் ஒரு படியை நாம் போட்டிருக்கிறோம்.

அவ்வளவு தானே தவிர நாங்கள்தான் உயர்த்தினோம் என்ற குற்றச்சாட்டை எங்கள்மீது கூறக்கூடாது.

சட்டமன்றக் கூட்டம் அறிவித்தபிறகு, மின் கட்டண உயர்வை அறிவிக்கலாமா என்று திருநாவுக்கரசு அவர்கள் இங்கேயும் கேட்டார். வெளியிலேயும் கேட்டார். நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே கேட்கவில்லை. வெளியிலே கேட்டார். நான் பத்திரிகையில் பார்த்தேன். 'பட்ஜெட் நடக்கும்போது, அதை அறிவித்த நேரத்திலே அவ்வாறு தெரிவிக்கலாமா' என்று கேட்டார். நேற்று மின்சாரத்துறை அமைச்சர் அதற்கு ஒரு வரியிலே மின்சாரத் துறை பட்ஜெட் வேறு, அரசாங்க பட்ஜெட் வேறு என்று குறிப்பிட்டார். இருந்தாலும் கூட நானும் சொல்ல விரும்புகிறேன். 1992ம் ஆண்டு மின் கட்டணம் 24.1.1992ஆம் தேதியிட்ட அறிவிக்கை மூலம் உயர்த்தப்பட்டது. அந்த ஆண்டு கவர்னர் உரை 29.1.1992 – மின் கட்டணம் உயர்த்தப்பட்டது 24.1.1992, அதாவது 5 நாட்களுக்கு முன்பாக.

அது மாத்திரமல்ல. 1993ஆம் ஆண்டில் ஆளுநர் உரையின் தொடக்கம் 4.2.1993. நிதிநிலை அறிக்கை தாக்கல் 12.3.1993. இந்த நான்கிற்கும், பன்னிரெண்டிற்குமிடையிலே, 26.2.1993 அன்று அறிக்கை மூலம் மின்கட்டணம் 1993ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டிருக்கிறது. நான் தவறு என்று சொல்லவில்லை. இது தவறல்ல என்பதற்காக இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அறிவிப்பாக இருந்தாலும் சரி, கட்டண உயர்வாக இருந்தாலும் சரி, முதலமைச்சர்கள்தான் மாறியிருக்கிறீர்கள். நான் மாறவில்லை. இதே இடத்தில் உட்கார்ந்து அப்போது அதையும் கண்டித்திருக்கிறேன். இப்போது இதையும் கண்டித்திருக்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் மாறியிருக்கிறீர்களே தவிர, அதையும் கண்டித் திருக்கிறேன், இதையும் கண்டித்திருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: எல்லாம் மாறலாம். நான் எதிலேயும் மாற மாட்டேன். நான் எப்போதும் ஒரே நிலையிலேதான் இருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதுவேண்டுமானாலும் வரலாம், புயல் வரலாம், சூறாவளி வரலாம், கொந்தளிப்பு வரலாம். பூகம்பமே வரலாம். நான் மாறவே மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை அவைக்குச் சொல்லிக்கொள்கிறேன். மின்சாரம் தொடர்புடையதாக. இன்னும் நிறைய கம்பங்கள் நடப்பட வேண்டும். விளக்குகள் கிராமங்களுக்கு வேண்டுமென்றெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் இதைப் பற்றி நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளையும், மற்றவர்களையும் வைத்துப் பேசி, ஒரு நல்ல செய்தியைத் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மாநிலத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் புதிதாக 76,000 கம்பங்கள் நட்டு, புதிய மின் விளக்குகள் பொருத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் இந்த அவைக்கு புதிய கம்பங்கள் நட்டு 76,000 மின் விளக்குகள் பொருத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைக் கேட்டுவிட்டு அதற்கு பிறகு மேசையைத் தட்டலாமா என்பதை முடிவு செய்ய விரும்பு கின்றேன். ஏனென்றால், இப்போதும் நீங்கள் மின்வாரியத்திட மிருந்து வழங்குகின்றீர்கள். ஆனால் ஒரு விளக்கு நகராட்சிப் பகுதிக்கு வேண்டுமென்றால் 3,000 ரூபாயோ, 4,000 ரூபாயோ டெபாசிட் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது கூடுதல் பளு. இந்தப் பளுவை உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுமத்தாமல் நீங்கள் 76,000 மின்கம்பங்கள் அமைத்துத்தருவீர்கள் என்று சொன்னால் கண்டிப்பாக இரு கையையும் வைத்து ஓங்கித் தட்டுவேன் மேசையை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு உதவுகிறார்கள் என்று கூட சொல்லலாம். ஆனால் இது கூட்டு மந்திரி சபை. முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்குகிறோம். நாம் அத்தனைபேரும்

ஒன்றுபட்டு பணியாற்றுகிறோம். அந்த வகையில் எடுத்து, கணக்குப் பார்த்தால் அதிகாரிகள் ரூ. 5,200க்குக் கீழே இந்தப் பணியை எங்களால் செய்ய முடியாது என்று, அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதற்குப் பின்னால் என்னால், இந்தச் சுமையைத் தாங்க முடியாது என்று எடுத்துக் கூறிய பிறகு ரூ. 3,640 என்ற முடிவு எடுத்து, அதற்கு மேல் ஆகும் நிலை ஏற்பட்டால் இரு துறையினரும் முதலமைச்சர் அவர்களைக் கலந்து, இதை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது முடிவு செய்யப்படும் என்றுதான் இதை ஏற்படுத்தினோம். இது ஒரு அதிகமான கட்டணம் என்று சொல்ல இயலாது.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, புதிய கம்பங்கள் நடவேண்டியிருந்தாலும் நீங்கள் அந்தப் பணத்தை வசூலிப்பது கூட தவறில்லை. பொருளாதார நெருக்கடியை நானும் உணர்ந்தவன்தான். ஆனால், ஏற்கெனவே இருக்கக்கூடிய கம்பங்களில் ஒரு விளக்கு வேண்டுமானாலும் அதிகமான கட்டணத்தை செலுத்தச் சொல்கிறார்கள். அதற்கு விளக்கம் அளித்தால் நல்லது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நேற்று விவாதிக்கப்பட்டது. அப்படி விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மின் வாரியத்துறை அதிகாரிகளும் கம்பங்கள் இருந்து, சோக்கும் இருந்தால், விளக்கிற்கு மட்டும்தான் பணம் வசூலிக்க வேண்டுமே தவிர கம்பத்திற்குப் பணம் வசூல் பண்ணக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது.
(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச வாய்ப்பு இல்லை என்றால், உடனே எழுந்திருப்பதா? இன்னும்

முதலமைச்சர் பதிலே சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் ஒவ்வொருவரும் எழுந்திருந்தால் எப்படி? நேரம் இருக்கிறதா? (குறுக்கீடு) அதற்காக எழுந்திருக்கலாமா, டாக்டர் செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே சில உள்ளாட்சி மன்றங்கள் அவர்களுக்கான மின் கட்டணத்தைக் கட்டுவதற்குக் கூட நிதி ஆதாரம் இல்லாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்னொரு கம்பம் அமைப்பதற்கு 3,640 ரூபாயை, நிதி ஆதாரத்தை அவர்கள் தேட வேண்டுமென்று சொன்னால், கிராமப்புறங்களில் புதியதாக மின் கம்பங்கள் அமைக்க முடியாத ஒரு சூழ்நிலை வந்துவிடும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் செல்லக்குமார் அவர்களுடைய இந்தக் கருத்து அனுதாபத்தோடு ஆய்வு செய்யப்படும். உறுதி அளிக்க முடியாது. (சிரிப்பு)

நண்பர் ரங்கநாதன் அவர்கள் ஆரோமேடிக் தொழிற் சாலை என்னவாயிற்று என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். அதற்கு நீண்ட பதில் இருக்கிறது என்றாலும்கூட, தொழில்கள் பற்றிய மானியத்தில் விரிவாகப் பேசலாம் என்று இருக்கிறேன். ஏனென்றால், இப்பொழுதே நேரம் அதிகமாகி விட்டது. அது ஒரு வழக்கிலே இருப்பது அவருக்கும் தெரியும். அதற்கு நீதிபதியினுடைய தீர்ப்பு விரைவிலே வரும். நீதிமன்றத்தினுடைய முடிவான ஆணை விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஏனைய விவரங்களைப் பிறகு வாய்ப்பு ஏற்படும் போது, தொழில்கள் மானியத்திலே பேசும்போது சொல்கிறேன்.

திரு. அழகிரி அவர்கள் இஸ்ரேல் வேளாண் தொழில் நுட்பங்களைத் தமிழ்நாட்டில் பயன்படுத்தப் போவதாகச் சொன்னீர்களே, என்ன செய்தீர்கள் என்று கேட்டார். அழகிரி, அழகிரியைப் போலவே பேசினார். நான் பட்டுக்கோட்டை அழகிரியைக் குறிப்பிடுகிறேன் (சிரிப்பு). 1996–97 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இஸ்ரேல் நாட்டிலே

குறைந்த மழை அளவைக்கொண்டு நவீன தொழில்நுட்பங்கள் மூலம் நிறைந்த அளவு வேளாண் உற்பத்திக்குப் பயன் படுத்துவதைத் தமிழ்நாட்டிலே பின்பற்றத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்திருந்தேன். என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி வேளாண்மைத் துறை அமைச்சரோடும் கலந்து பேசியிருக்கிறேன். அவரும், அதிகாரிகளோடு கலந்துபேசி, அந்த முயற்சிகளை மேற் கொண்டு இருக்கிறார். அவற்றையெல்லாம் வேளாண்மைத் துறை மானியத்திலே அவர்கள் விரிவாக விளக்குவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

குறிப்பாக இஸ்ரேலியத் தொழில் நுட்பங்களை நிலக்கடலை, பருத்தி, தக்காளி, கொய்யா போன்றவற்றில் உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்தவும், தமிழ்நாட்டிலே இருந்து விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை வேளாண்மை மற்றும் அதன் சார்புடைய பயிற்சிகளுக்கு இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பவும். இஸ்ரேல் நாட்டு வல்லுநர்களை நம் நாட்டு விஞ்ஞானிகளுக்கும், தொழில் நுட்ப அலுவலர் களுக்கும் பயிற்சியளிக்க வரவழைக்கவும், நீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நுண் பாசனத்திட்டம் ஆகியவற்றில் இஸ்ரேல் நாட்டில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை நமது மாநிலத்தில் பயன்படுத்தவும், கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் இயற்கைச் சூழலை ஏற்படுத்தவும் நாம் அவர் களோடு பேசிக்கொண்டிருக் கின்றோம். இஸ்ரேல் நாட்டினுடைய தூதுவர் இங்கே வந்து நம்முடைய தலைமைச் செயலாளரோடு 3.10.1996 அன்று ஆலோசனை நடத்தியிருக்கிறார். இஸ்ரேல் தூதுவர் அவர்கள், அவர்கள் நாட்டின் தொழில்நுட்பங்களை நமது மாநிலத்தோடு பரிமாற்றம் செய்து கொள்ள உறுதி அளித்திருக்கின்றார். அந்த விஞ்ஞானிகளை நம்முடைய நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அவர்கள் இங்கு வந்துபோன பிறகு, நம்முடைய அதிகாரிகளும், வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர்களும் இஸ்ரேல் நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட இருக்கிறார்கள். 1997 – 98 ஆம் ஆண்டிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு 11.2.1997 அன்று ஆய்வுக்கான ஒரு ஒப்பந்தம் கையெழுத்

திடப்பட்டுள்ளது என்பதையும் திரு. அழகிரி அவர்களுக்கு நான் விளக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இஸ்ரேல் நாட்டுக்கு எங்களையும் அனுப்பி வைக்க வேண்டும். அதிகாரிகளை அனுப்புவதைவிட சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை அனுப்பி வைத்தால் நல்லது. ஏனென்றால், நாங்கள் எல்லாம் விவசாயிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றம் நடக்கும்போது, திரு. ஞானசேகரனை அனுப்பி வைத்தால் எங்களுக்கு எல்லாம் உதவியாக இருக்கும். (சிரிப்பு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அவைத் தலைவருடைய கவலை ஆழ்ந்து பரிசீலிக்கப்படும். (சிரிப்பு)

அடுத்து, மினி பஸ்கள், வேன்கள் பற்றி இங்கே எல்லோருமே பேசியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், எல்லோருமே பேசியிருக்கிறார்கள்.

திரு. ஆருண் அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும், அவர்களோடு திரு. திருநாவுக்கரசு அவர்களும், இந்த வேன்கள் பற்றிய கருத்துக்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தேசியமயம் என்பதிலே மிகுந்த அக்கறை உள்ளவர்களாக இருப்பீர்களே என்று திருநாவுக்கரசு அவர்களும், கேட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்களும் கேட்டார்கள். இப்போது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். நான் முதலமைச்சராக பொறுப்பிலே இருந்தபோது, தேசியமயக் கொள்கையிலே இருந்த நாட்டத்தின் காரணமாக, அக்கறையின் காரணமாகப் பேருந்துகளை எல்லாம் தேசிய உடைமையாக ஆக்க வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டு, அது உயர்நீதிமன்றத்திலே வழக்குக்கு ஆளாகி, உச்சநீதிமன்றத்திற்குச் சென்றது.

உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு நடைபெற்றபோது, இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து வந்தது. நண்பர்

எம்.ஜி.ஆர். அவர்கள் அப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள். என்ன தீர்ப்பு வந்தது என்றால், புரட்சிகரமான சட்டம்; இந்தச் சட்டத்தை மறுப்பது சரியல்ல; அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று. பேருந்துகளை தேசியமய மாக்குகின்ற சட்டத்தை வரவேற்று பாராட்டி உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று கருதியிருந்தபோது, அதற்கு மாறாக தனியார் களுக்கு பேருந்துகளை ஒதுக்குவது என்ற நிலை தமிழகத்திலே அப்போது ஏற்பட்டது. அதை மறுத்தும், எதிர்த்தும் பல குரல்கள் தமிழ்நாட்டில் கிளம்பின. அந்தக் குரல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சொந்தமான கருத்து உண்டு என்பதை இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும்.

அதற்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு குழப்பங்கள், அலங்கோலங்கள், எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகு உருவான ஆட்சியிலே ஏற்பட்ட பல அலங்கோலங்கள், ஊழல்கள் இவைகளின் காரணமாக இன்றைக்குத் தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 15,737 இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் பேருந்துகள் – சரியாகச் சொன்னால் – 5,736 தனியார் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தனியார் பேருந்து கடந்த காலத்தில், நாம் ஆட்சிக்கு வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், உங்களுக்கெல்லாம் தெரியும். எல்லா உறுப்பினர்களும் கவலையோடு என்னிடத்திலே தெரிவித்து இருக்கின்றீர்கள். கிராமங்களுக்கு இந்தப் பேருந்துகள் போகாமல் இருப்பதற்கு பேருந்து முதலாளிகள் எல்லாம் சேர்ந்து கட்ட வேண்டிய கப்பத்தைக் கட்டிவிட்டு, அவர்கள் நாங்கள் இஷ்டப்படி எங்கு செல்வோமோ அங்குதான் செல்வோம்; கிராமங்களுக்குச் செல்ல மாட்டோம் என்று curtailment என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதற்குப் பல கோடி ரூபாய் அவர்கள் செலவழித்தார்கள். நாட்டுக்குத் தெரியும். உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆட்சிக்கு நாம் வந்தவுடன், அந்தச் சுமை நம் தலையில்தான் விழுந்தது. மக்களுடைய வசைகள், ஏச்சு, பேச்சு எல்லாம் நம் தலையில் தான் விழுந்தது. இந்த ஆட்சி வந்தது. கிராமங்களுக்குப்

பேருந்து இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் இந்த அவையிலே சட்டத்தை இயற்றி கிராமங்களுக்கும் பேருந்துகள் செல்லக்கூடிய நிலையை உருவாக்கினோம். அடைக்கப்பட்ட வழியைத் திறந்துவிட்டோம்.

இன்னும்கூட கிராமங்களில், அதிலும் குறிப்பாக குக்கிராமம், பட்டிதொட்டி இவைகளில் வேன்கள் போகின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல, மணி அவர்கள் தெரிவித்ததைப்போல, கன்னியாகுமரியில் அப்படி வேன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எனக்கு இந்த நினைவு எப்படி வந்தது என்றால், 1957ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் நான் போட்டியிட்டபோது, அது மூன்று பிர்க்காக்களைக் கொண்டது. குளித்தலை, அதைப்போல பக்கத்திலே உள்ள மாயனூர், அதைப் போல கரூர் பக்கத்திலே உள்ள வெள்ளியணை – இந்த மூன்று பிர்க்காக்களைக் கொண்டது குளித்தலைத் தொகுதி. அப்போது, 50 மைல்கள் நீளம்; திருச்சியிலேயிருந்து 10வது மைல் தொடங்கி கரூரிலே 1வது, 2வது வார்டுகூட குளித்தலை தொகுதி. அந்த வெள்ளியணைப் பகுதியில் நான் வாக்கு கேட்கச் சென்றபோது, குக்கிராமம், பட்டிதொட்டி – அங்கே சில பேர் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். மகாத்மா காந்தி உயிரோடு இருக்கிறாரா என்று. எப்போது? 1957ஆம் ஆண்டு. எப்படி இருக்கிறார்; இப்போது வந்து போவாரா என்று கூடக் கேட்டார்கள். அவ்வளவு மோசமான நிலைமைக்கு, அறிவு கொடுக்கப்படாத கிராமங்கள் அந்தப் பகுதியில் இருந்தன. அங்கே எல்லாம் காலை உணவு கிடையாது. வாத்து முட்டைதான். வாத்து முட்டையைத்தான் கடைகளிலே அடுக்கி வைத்திருப்பார்கள். பெரிது பெரிதாக இட்டிலி போல இருக்கும். அதை வாங்கித்தான் காலை உணவாகச் சாப்பிடுவார்கள். அப்படிப்பட்ட குக்கிராமங்களிலே கூட வேன்களில் 10 பேர் தாராளமாக அமரக்கூடிய வேன்களில் – 50 பேர் 60 பேர், இருக்கைகளிலும் இருப்பார்கள்; ஓரத்திலும் தொத்திக் கொண்டும் இருப்பார்கள். அதனுடைய கூரையிலும் உட்கார்ந்து கொண்டு இருப்பார்கள். மண்ணை வாரித் தூற்றிக் கொண்டு மிகக் குறுகலான ஆற்று

ஓரப் பாதைகளில் அந்த வேன்கள் செல்கின்ற கோரக்காட்சியை நான் பார்த்திருக்கிறேன். கவிழ்ந்தால் 50 பேர் சாவார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலேதான் அங்கே போக்குவரத்து இருந்தது. இன்னும் அது சீரடைந்து விட்டதா என்றால், இன்னும் உண்மையாகச் சீரடையவில்லை. இன்னும் அந்த கிராமங்கள் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. அதிலும் குறிப்பாக வளர்ந்த மாநிலம் என்று சொல்லப்படுகிற தமிழகத்திலே அத்தகைய கிராமங்கள் இன்னும் இருக்கின்றன. அத்தகைய குக்கிராமங்களில், பட்டிதொட்டிகளில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பேருந்துகளிலே செல்லக்கூடிய வசதியைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வேன் மினி பேருந்து திட்டமே தவிர வேறல்ல.

அந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாகச் செய்து பார்ப்போம். அதை தேசியமயமாக்க சர்க்கார்தான் செய்ய வேண்டும் என்று சொன்னால், எவ்வளவு செலவாகும் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பேருந்து போகிற தடங்களில் இந்த வேன்களை அனுமதிக்கமாட்டோம். பேருந்து போக முடியாத கிராமங்களுக்குத் தான் இந்த வேன்கள் செல்ல முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதனால் பெரிய தொல்லை ஒன்றும் வந்துவிடாது; ஊழல் ஒன்றும் நடைபெற்றுவிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்றால் பிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் நான் குறிப்பிடு கின்றேன்.

தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சிப் பணி குறித்து திரு. குமாரதாஸ் அவர்களும் மற்றும் பல தென் மாவட்டங்களைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இங்கே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இந்த வறட்சி நிலையைக் கேள்விப் பட்டவுடன் தென் மாவட்டங்களுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் இருவரும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆங்காங்குள்ள அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் எல்லாம்கூட வந்து கலந்து கொண்டார்கள்; சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்; ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், உள்ளாட்சித்

தலைவர்கள் எல்லாம் வந்து கலந்து கொண்டார்கள். ஆங்காங்கு கருத்தரங்குகள் நடைபெற்று, கடைசியாக தந்துள்ள அறிக்கையின்படி. ஆழ் கிணறுகளுக்காக 13 கோடியே 56 இலட்சமும், வளைவு கிணறுகளுக்காக 11 இலட்சமும், திறந்த கிணறுகளுக்காக 4 கோடி 35 லட்சமும், திறந்த கிணறுகளை ஆழப்படுத்த 1 கோடி 66 இலட்சமும், பைப் லைன் விரிவாக்கத்திற்காக 5 கோடியே 40 லட்சமும், கை பம்புகள், உதிரிகள் வாங்க 3 கோடியே 66 இலட்சமும், பம்ப் செட் மோட்டார் மாற்ற 56 இலட்சமும், நீர்த்தேக்கத் தொட்டிகட்ட– கட்டுமானத்திற்கும் பழுது பார்த்தலுக்கும் 2 கோடியே 53 லட்சமும், புதிய மோட்டார் வாங்க மோட்டார் என்றால், பைப்புகளுக்கு – 1 கோடி 13 இலட்சமும், லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க 2 கோடி 70 இலட்சமும் அன்றைக்கு ராதாபுரம் சட்ட மன்ற உறுப்பினர் அப்பாவு, லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க வேண்டும் என்று சொன்னார். அதற்காக 2 கோடியே 70 இலட்சமும், நடைபாதை கட்டுதல் பழுதுபார்த்தலுக்காக 22 இலட்சமும், ஆழ்கிணறு சுத்தப்படுத்த 59 இலட்சமும், சமுதாயக் கிணறு ஆழப்படுத்த 23 லட்சமும், திறந்தவெளிக் கிணறு ஆழப்படுத்த 13 இலட்சமும், தலையாய பணிகள் விரிவாக்கத்திற்கு 97 இலட்சமும், பழுதுபட்ட பைப் லைன் மாற்ற 1 கோடி 11 இலட்சமும், அணைக்கட்டுக்கு அருகில் புதிய நீர் நிலைகள் உருவாக்க 2 கோடியே 15 இலட்சமும், இதர ஆழ்கிணறுகள் கை பம்புகளுக்காக 46 இலட்சமும், மொத்தம் 41 கோடியே 83 லட்சம் ரூபாய் இதற்காக அவர்கள் கேட்டு, அது ஒதுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கு முதல் கட்டமாக நேற்றைக்கு நான் கையெழுத் திட்டதையும் சொல்ல வேண்டும். குடிநீர் வசதி செய்வதற்காக 7.5 கோடி ரூபாயும், வேலை வாய்ப்புகளை உருவாக்க 7.5 கோடி ரூபாயும் செலவழிக்க ஆணை பிறப்பித்து இருக்கிறேன் என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சத்துணவு ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றியும், காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றியும் நண்பர் ஆரூண் அவர்கள் இங்கே பேசினார்கள்; மற்றவர்களும்,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சத்துணவு ஊழியர்களைப் பற்றியும் திட்டத்தைப் பற்றியும் இங்கே பேசி இருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தக் காப்பீட்டுத் திட்டம் எப்படி வந்தது என்றால். அன்றைக்குப் பேசும்போது நம்முடைய செல்லக் குமாரும் அதைப் பற்றிக் குறிப்பிட்டார் என்று எனக்கு நினைவு. சத்துணவுத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் நிரந்தர, பகுதிநேர பணியாளர்களுக்கும். உள்ளாட்சி அமைப்பில் பணியாற்றும் இதர பகுதிநேர பணியாளர்களுக்கு அளிப்பதைப் போன்று. குழு இன்ஷூரன்ஸ், அதாவது குரூப் இன்ஷூரன்ஸ் திட்டம் 1.11.1990ல் அறிவிக்கப்பட்டது. கழக ஆட்சி இருந்தபோது குரூப் இன்ஷூரன்ஸ் திட்டம் அறிவிக்கப்பட்டது. யாருக்கு? நிரந்தர, பகுதிநேரப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி அமைப்பில் பணியாற்றும் இதர பகுதிநேரப் பணியாளர்களுக்கும் அளிப்பதுபோல என்று 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி 10 ரூபாய் சம்பளத்திலே பிடித்தம் செய்து, இறந்த சத்துணவுப் பணியாளர்களின் குடும்பத்திற்கு 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த கால அரசு 1994 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பித்து, வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பகுதிநேரப் பணியாளர்கள் மாத்திரம்தான் இந்தத் திட்டத்திலே அனுமதிக்கப்படுவார்கள் என்று ஒரு நிபந்தனை போட்டு விட்டது. ஆசிரியர் பணிக்கு வேலை வாய்ப்பகம் – எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ் எல்லாம் இல்லை. ஆனால், சத்துணவுப் பணியாளர்களுக்கு மாத்திரம், அவர்கள் வேலை வாய்ப்பு நிலையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி குழு காப்பீட்டு திட்டத்திலே அனுமதிக்கப்படுவார்கள்; பகுதி நேரப் பணியாளர்களாக இருந்தாலும், அவர்கள் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்தவராக இருக்க வேண்டும் என்று போட்டு ஒரு தடை ஏற்பட்டுவிட்டது. அதனால் கடந்த காலத்தில் இந்தப் பயன் கிட்டாமல் சத்துணவுப் பணியாளர்கள் மிகுந்த வேதனைக்கு ஆளானார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இறந்த சத்துணவுப் பணியாளர்கள் குடும்பத்திற்கு குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த தொகையை ரூ. 60 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டது மாத்திரமல்லாமல். 1991 ஆம் ஆண்டு

போடப்பட்ட நிபந்தனையையும் தளர்த்தி, பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறது. இந்த ஆணை விரைவிலே பிறப்பிக்கப்படும் என்று இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் என்னிடத்திலே பேசும்போது நான் அவரிடத்திலே ஒன்றைக் கேட்டேன். அதற்கு அவர்கள், ஆமாம் உண்மைதான் என்றும், இது உங்களுக்குத் தெரியாதா என்று கூடக் கேட்டார்கள். என்னவென்றால் ஆர்.ஐ.டி.எப். என்ற நிதி Rural Infrastructure Development Fund (R.I.D.F.)... என்ற ஒன்று இருக்கிறது மத்தியிலே, அது 200 கோடி, 250 கோடி ரூபாய் என்று மாநிலத்திற்கு. அடிப்படை வசதிகளுக்காக அல்லது அது தொடர்பான வசதிகளுக்காக வழங்குவது வழக்கம். ஆனால் வேடிக்கை, இதை முன்பிருந்த அரசு கேட்டுப் பெறவேயில்லை. ஆண்டொன்றுக்கு 270 கோடி ரூபாய் சாதாரணமா? அவர்கள் கேட்டுப் பெறவேயில்லை. 1995–96 ஆம் ஆண்டில் பெறவில்லை. மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு.சிதம்பரம் அவர்கள், நான் கேட்டதற்கிணங்க 271 கோடி ரூபாயை, மாநில அரசுக்கு மத்திய அரசின் சார்பாக அளித்திருக்கின்றார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியை மத்திய அரசுக்கு இந்த அவையின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே சாலை மேம்பாடு போன்ற பணிகளுக்காக மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீட்டைச் சொல்கிறேன். சில மாவட்டங்களுக்குக் குறைந்திருந்தால் கோபித்துக்கொள்ளாதீர்கள். அடுத்த ஆண்டு சரியாகச் செய்துவிடலாம்.

மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு சாலை மேம்பாடு மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட விவரம் – செங்கை–அண்ணா மாவட்டத்தில் 65 திட்டங்களுக்கு நபார்டு அளித்தது 11 கோடி ரூபாய். அதில் மாநிலத்தின் பங்கு 1 கோடியே 12 இலட்சம் ரூபாய். (குறுக்கீடு) மாநிலமும் பங்கு செலுத்துகிறது.

சிதம்பரனார் மாவட்டம் – 65 திட்டங்கள். 7 கோடியே 58லட்சம் ரூபாய் நபார்டு வங்கி கடன் கொடுக்கிறது. மத்திய

அரசு நேரடியாகக் கொடுப்பதில்லை. இதில் மாநிலத்தின் பங்கு 81 லட்சம் ரூபாய்.

கோயம்புத்தூர் மாவட்டம் – 53 திட்டங்கள். இதில் நபார்டின் பங்கு 6 கோடியே 500 இலட்சம் ரூபாய். மாநிலத்தின் பங்கு 67 இலட்சம் ரூபாய்.

தர்மபுரி மாவட்டத்தில் 62 திட்டங்கள். 7 கோடியே 85 இலட்சம் ரூபாய் நபார்டு வழங்குகிறது. நமது மாநிலம் 87 லட்சத்தை வழங்குகிறது.

திண்டுக்கல் – மன்னர் திருமலை மாவட்டத்திற்கு 55 திட்டங்கள். 11 கோடியே 51 இலட்சம் ரூபாய் நபார்டு பங்கு அளிக்கிறது. மாநிலப் பங்கு 1 கோடியே 69 இலட்சம் ரூபாய்.

காமராஜர் மாவட்டத்தில் 43 திட்டங்கள். அதற்கு 8 கோடியே 57 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. மாநிலத்தின் பங்கு 95 இலட்சம் ரூபாய்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 82 திட்டங்கள். நபார்டு 6 கோடியே 34 இலட்சம். மாநிலத்தின் பங்கு 62 இலட்சம் ரூபாய்.

மதுரை மாவட்டம் – 73 திட்டங்கள். அதற்கு 7 கோடியே 20 லட்சம். அதில் மாநிலத்தின் பங்கு 76 இலட்சம் ரூபாய்.

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம் – 40 திட்டங்கள். நபார்டு வங்கியின் பங்கு ஏழே முக்கால் கோடி ரூபாய். மாநிலப் பங்கு 83 இலட்சம் ரூபாய்.

நீலகிரி மாவட்டம் – 28 திட்டங்கள். நபார்டு கடன் 3 கோடியே 32 இலட்சம் ரூபாய். மாநிலப் பங்கு 36 இலட்சம் ரூபாய்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் – 48 திட்டங்கள். 14 கோடியே 68 இலட்சம் ரூபாய், அதில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் நம்முடைய பங்கு.

பெரியார் மாவட்டம் – 84 திட்டங்கள். நபார்டு கடன் 9 கோடியே 19 இலட்சம் ரூபாய். மாநிலத்தின் பங்கு 90 இலட்சம் ரூபாய்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 68 திட்டங்கள். நபார்டு கடன் 9 கோடியே 45 இலட்சம் ரூபாய். மாநிலத்தின் பங்கு ரூபாய் 76 இலட்சம்.

இராமநாதபுரம் மாவட்டம் – 45 திட்டங்கள். 8 கோடியே 62 இலட்சம் ரூபாய் நபார்டு கடன். 91 இலட்சம் ரூபாய் மாநிலத்தின் பங்கு.

சேலம் மாவட்டம் – 72 திட்டங்கள். நபார்டு கடன் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய். மாநிலத்தின் பங்கு 57 இலட்சம் ரூபாய்.

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் – 49 திட்டங்கள். நபார்டு கடன் 13 கோடியே 45 இலட்சம் ரூபாய். மாநிலத்தின் பங்கு 1 கோடியே 42 இலட்சம் ரூபாய்.

நெல்லை மாவட்டம் – 98 திட்டங்கள். 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் நபார்டு கடன் கொடுக்கிறது. அதிலே மாநிலத்தின் பங்கு ரூ.1 கோடியே 6 இலட்சம்.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் 69 திட்டங்கள். 9 கோடியே 11 இலட்சம் ரூபாய் நபார்டு கடன். மாநிலத்தின் பங்கு 88 இலட்சம் ரூபாய்.

தஞ்சாவூர் மாவட்டம் – 72 திட்டங்கள். 10 கோடியே 31 இலட்சம் ரூபாய் நபார்டு கடன். மாநிலப் பங்கு 94 இலட்சம் ரூபாய்.

திருச்சி மாவட்டம் – 58 திட்டங்கள். 6 கோடியே 77 இலட்சம் ரூபாய் நபார்டு, மாநிலம் 70 இலட்சம் ரூபாய்.

வடாற்காடு மாவட்டம் – 86 திட்டங்கள். 17 கோடியே 31 இலட்சம் ரூபாய் நபார்டு, 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் மாநிலம்.

எம்.ஜி.ஆர் மாவட்டம் – 48 திட்டங்கள். 28 கோடியே 87 இலட்சம் ரூபாய் நபார்டு, 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் மாநிலம்.

விழுப்புரம் மாவட்டம் - 80 திட்டங்கள். 26 கோடியே 36 இலட்சம் ரூபாய் நபார்டு. 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் மாநிலம்.

பெரம்பலூர் மாவட்டம் - 48 திட்டங்கள். 7 கோடியே 77 லட்சம் ரூபாய் நபார்டு, 78 லட்சம் ரூபாய் மாநிலம்.

கரூர் மாவட்டம் - 31 திட்டங்கள். 3 கோடியே 73 இலட்சம் ரூபாய் நபார்டு, 38 இலட்சம் ரூபாய் மாநிலம்.

வீரன் அழகுமுத்து மாவட்டம் - 32 திட்டங்கள். 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் நபார்டு, 43 இலட்சம் ரூபாய் மாநிலம்.

இராஜாஜி மாவட்டம் - 33 திட்டங்கள். 2 கோடியே 96 இலட்சம் ரூபாய் நபார்டு, 31 இலட்சம் ரூபாய் மாநிலம்.

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் படிக்கத் தேவை யில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் நம்முடைய மாவட்டம் அது. (சிரிப்பு) ஐந்தே ஐந்து திட்டம்தான். 83 இலட்சம் ரூபாய் நபார்டு, 9 இலட்சம் ரூபாய் மாநிலம். (குறுக்கீடு) அடுத்த ஆண்டு கவனிப்போம். நாம் இரண்டு பேரும் சேர்ந்தே கவனித்துக் கொள்வோம். (சிரிப்பு)

அடுத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேதனையோடு நேற்று பேசினார்கள். நான் பட்ஜெட்டைப் படிக்கும்போதே முகம் சுண்டிவிட்டது அவருக்கு. அதைச் சொல்லும்போது, அவரைத்தான் பார்த்தேன் நான். ஆனால் அதிலே இருக்கிற நிலைமையை நாம் யோசிக்க வேண்டும். மாநில விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 1,500 ரூபாய் தமிழ் நாட்டிலே கொடுக்கிறோம். கேரளாவிலே 1,000 ரூபாய் கொடுக்கிறார்கள். கர்நாடகாவிலே 500 ரூபாய், ஆந்திராவிலே 500 ரூபாய் கொடுக்கிறார்கள். மாநில விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறும் தியாகிகள் இறந்தால் அவருடைய வாரிசுக்கு நாம் 750 ரூபாய் கொடுக்கிறோம். கேரளாவில் 1000 ரூபாய் கொடுக்கிறார்கள். கர்நாடகாவில் 500 ரூபாய். ஆந்திராவில் 250 ரூபாய். மத்திய ஓய்வூதியம் 1,500 ரூபாய் வாங்குகிறார்கள். அவர்களுக்கு நாம் 250 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஏனென்றால் மாநில விடுதலை வீரர்கள் 1500 ரூபாய் வாங்கும்போது அவர்கள்தான் 1500 ரூபாய் வாங்குகிறார்களே என்று ஒரு போனஸ் மாதிரி 250 ரூபாய் கொடுத்தோம். அதை உயர்த்த

வேண்டுமென்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பலமுறை வாதாடி, பத்திரிகையிலே அறிக்கை எல்லாம் விட்டு, எதிர்பார்ப்பதாக எல்லாம் சொல்லி, இங்கேயும் வந்து அது இருக்கிறதா என்று என்னைக் கேட்டு, 250 ரூபாய் கூடக் கொடுத்து, மொத்தம் 500 ரூபாய் ஆக்கி இருக்கிறோம். ஆகவே, 1,500ம் 500ம் சேர்ந்தால் 2,000 ரூபாய் ஆகிறது. இப்போதே ஏற்றத்தாழ்வு இருக்கிறது. இது 2,000 அதையும் 2,000 ஆக்குங்கள் என்று அவர்கள் கேட்டால், அப்பம் பங்கு பிரித்த கதையாகிவிடக்கூடும் என்பதற்காகத்தான் இதோடு நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வசதிப்பட்டால் மாநிலத் தியாகிகளுக்கும், அதைப்போல மத்தியத் தியாகிகளுக்கும், அதைப்போல மொழிப் போர் வீரர்களுக்கும் இன்னும் எவ்வளவு அதிகமாக உயர்த்த முடியுமோ அவ்வளவு உயர்த்தலாம் என்பதை இப்போதே தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஏற்கெனவே என்மீது ஒரு குற்றச்சாட்டு – தவறான குற்றச்சாட்டு. விலைவாசி உயரவில்லை என்று முதலமைச்சர் சொன்னார் என்று. நான் விலைவாசி உயரவில்லை என்று என்றைக்கும் சொல்லவில்லை. எப்படி உயர்ந்தது. எந்த அளவுக்கு உயர்ந்தது ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. இன்னும் அது குறைய வேண்டுமென்ற கருத்தைத்தான் நான் இந்த அவையிலே சொல்லி இருக்கிறேன். சில பொருள் களுடைய விலைகள் குறைந்திருப்பதை சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. அந்த வகையில் விலைவாசியைப் பற்றி நம்முடைய பழனிசாமி அவர்கள். குறிப்பாக. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு, தாய் உள்ளத்தோடு இதிலே நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். திருநாவுக்கரசு அவர்கள் போராட்ட உணர்வோடு இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது சில உண்மைகள் புலப்படும் என்று கருதுகிறேன். பொன்னி புழுங்கல் அரிசி 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ரூ. 6.01 ஆக இருந்தது. ஏப்ரல் 96ல், செல்வி ஜெயலலிதாவினுடைய ஆட்சியில் 91ல் ரூ.6.01 ஆக இருந்த

பொன்னி அரிசி 1996ல் 12.95 ஆக உயர்ந்தது. அவர்கள் ஆட்சியில் 6 ரூபாய் அரிசி இரண்டு மடங்கு 12 ரூபாயாக உயர்ந்தது. அதுதான் இன்றைக்கு சில இடங்களில் 14 ரூபாய், 13 ரூபாயாக இருக்கிறது.

நேற்றைக்குக்கூட நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை சென்றிருந்தார். அங்கேயிருந்து வெவ்வேறு வகை அரிசி சில பொட்டலங்களை வாங்கிக் கொண்டு வந்தார். அதில் இந்த அரிசியினுடைய விலையே கிலோ 8 ரூபாய், இன்னொன்று 7½ ரூபாய். இது இரண்டும் வெளி மார்க்கெட்டிலே கிடைக்கிற அரிசிகள்தான்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு அரிசிப் பொட்டலங்களை அவைக்குக் காட்டினார்.)

இந்த அரிசி நல்ல அரிசி. 7½ ரூபாய்க்கும் 8 ரூபாய்க்கும் அங்கே கிடைக்கிறது. வெளி மார்க்கெட்டிலே. நம்முடைய ரேஷன் கடைகளிலே அல்ல. திருவண்ணா மலையிலே கிடைக்கிறது. வேண்டும் என்றால், திருவண்ணாமலை உற்சவத்திற்குப் போய்விட்டு அரிசி வாங்கிக் கொண்டு வரலாம். (சிரிப்பு). ஆனால், திருவண்ணாமலை விலையே எல்லா இடத்திலேயும் விற்கிறதா என்றால் இல்லை. நான் அதை ஒத்துக்கொள்கிறேன். மாநில அளவிலே ஒரு சராசரி கணக்கைப் பார்க்கும்போது, மாநில அளவுக் கணக்கில் வெளி மார்க்கெட்டிலே 14 ரூபாய் என்றும், சன்னம் 9 ரூபாய் 49 காசு, சாதாரணம் 8 ரூபாய் 78 காசு என்ற அளவிற்கு வெளி மார்க்கெட்டிலே விற்றுக் கொண்டிருக்கிறது.

பச்சரிசியும் அப்படித்தான். பொன்னி வந்து, செல்வி ஜெயலலிதா ஆட்சியிலே ஜூன் மாதம் 1991 ஆம் ஆண்டு ரூ.7.23. 1996லே ஏப்ரல் மாதம், அவர்கள் ஆட்சியிலே இருக்கும்போதே 12 ரூபாய் 20 காசு. அது 14 ரூபாய்க்கு உயர்ந்தது. இப்போது குறைய ஆரம்பித்திருக்கிறது.

நேற்றைக்கு கோயம்பேடு மார்க்கெட்டிலேகூட காய்கறி விலை மளமளவென்று இறங்கிவிட்டது என்று சொல்கிறார்கள். இறங்குவதும் ஏறுவதும், இன்னும் ஒருமாதம் கழித்து. கோடைக்காலம் வந்தது என்றால் அது ஏறலாம். அது வேறு

விவகாரம். ஆனால் பருப்பு வகைகளுக்கு நாம் வரி விதிப்பில் சில அக்கறை காட்டி, ரத்து செய்தோம், குறைத்தோம். அதன் காரணமாக முழுமையான வெற்றி கிடைக்காவிட்டாலும், துவரம் பருப்பைப் பொறுத்தவரையில். 1991 ஜூன் மாதம் ஜெயலலிதா ஆட்சியில் 17 ரூபாய் 47 காசாக இருந்தது. அந்த ஆட்சி முடியும் தருவாயில் 31 ரூபாயாக இருந்தது. இப்போது 25 ரூபாய் 19 காசு, உளுத்தம் பருப்பு ஜூன் 1991லே 13 ரூபாய் 18 காசு இருந்தது. அது ஏப்ரல் 1996லே 28.18 ரூபாய் ஆக உயர்ந்தது. இப்போது ரூபாய் 23.90 என்ற அளவிற்கு இறங்கியிருக்கிறது. கடலைப் பருப்பு ஜூன் 1991லே ரூ.10.61 ஆக இருந்தது. ஏப்ரல் 1996லே ரூபாய் 15.14 ஆக உயர்ந்து இப்போது கடலைப் பருப்பு 17 ரூபாயாக ஆகியிருக்கிறது. நான் ஒத்துக் கொள்கிறேன். மறுக்கவில்லை, உயர்ந்தது. ரூ.10, 15 அகியது. ரூ.5 அதிகம் ஆச்சு, இப்போது ரூ.2 அதிகம் ஆகியிருக்கிறது. பாசிப்பருப்பு ரூ. 11.76 ஆக இருந்து, ரூ.21.35 ஆக உயர்ந்தது. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், 1991லேயிருந்து 1996 வரை.

எண்ணெய் வகையிலே, கடலை எண்ணெய் ரூ.37.15 ஆக ஜூன் 1991லே இருந்து, ரூ. 39.73 ஆக 1996–லே உயர்ந்து, இப்போது ரூ.36.78 ஆகக் குறைந்திருக்கிறது. இது சில இடங்களிலே வித்தியாசப்படலாம். நல்லெண்ணெய் ரூ.33.93 என்று ஜூன் 1991லே இருந்து. ஏப்ரல் 1996லே ரூ.43.40 என்று ஆகி, இப்போது ரூ.38.95 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது.

அதைப்போலவே மிளகாய் வற்றல் ரூ. 29 ஆக இருந்து, ரூ. 41 ஆக உயர்ந்து, இப்போது ரூ. 35 ஆகக் குறைந்திருக்கிறது. புளி ரூ. 9.93 ஆக 1991லே இருந்து, 1996 லே ரூ. 19.83 ஆக ஆகி இப்போது, ரூ. 20, 21, 22 என்ற அளவிற்கு வந்திருக்கிறது. எனவே, இந்த விலைவாசி உயர்விலே மாநில சர்க்காருக்கு மாத்திரம்தான் பொறுப்பு என்று யாரும் இங்கே பேசியவர்கள், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அல்லது திருநாவுக்கரசு போன்றவர்கள் யாருமே சொல்லவில்லை. மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. மத்திய அரசுக்குத்தான் முழுப் பொறுப்பு, பெரும்பங்கு

இருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. இருந்தாலும் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். வணிகர்களை எல்லாம் கூட்டி வைத்து ஒரு மாநாடு நடத்தி, அவர்கள் மூலமாக இந்த விலைவாசியைக் குறைப்பதற்கு வழிவகை செய்யலாம் என்று. அது புறக்கணிக்கப்படக்கூடிய யோசனை அல்ல; தள்ளக்கூடிய யோசனை அல்ல. அதையும் கவனிப்போம் என்று சொல்ல நான் விரும்புகிறேன்.

இறுதியாக முடிப்பதற்கு முன்பு, இன்னொன்று, நம்முடைய தீரன். பா.ம.க. சார்பிலே பேசும்போது, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டு முறை முடியும் தருவாயில் உள்ள நிலையில். மீண்டும் அந்த இட ஒதுக்கீடு தொடருவதற்கான நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டும் என்ற மெத்த உருக்கத்தோடு இங்கே தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். மண்டல் குழு பரிந்துரைகளை மைய அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே ஒருமனதாக நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். அது இன்றைக்கு ஓரளவிற்கு வெற்றிகரமாக நிறைவேறி இருக்கின்றது. ஆனால், நம்முடைய 69 சதவீதத்திற்கு இன்றைக்கு வந்துள்ள ஆபத்திற்கு என்னென்ன காரணம் என்பதை எல்லாம் விளக்கத் தேவையில்லை. இந்தச் சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியும்கூட. அதை நீதிமன்றத்திலே எடுத்துரைக்காத காரணத்தால் ஏற்பட்ட விபத்தின் விளைவை, இன்றைக்கும் நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். இருந்தாலும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி தப்பித்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மொத்தமாக தமிழ்ச் சமுதாயத்திலேயுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமூக நீதிக்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து போராடுவோம். உச்ச

நீதிமன்றத்தின் முன்பாக தமிழ்நாடு அரசினுடைய நிலையைப் பாதுகாக்கும் வகையில் இப்போது நடைபெறுகின்ற வழக்கில் 7.8.1996ல் இந்திய பிரதமருக்கு நான் நேர்முகக் கடிதம் ஒன்று எழுதினேன். அதற்குப் பதில் வராத காரணத்தால் 7.3.1997லே மீண்டும் ஒரு கடிதம் பிரதமருக்கு எழுதியிருக்கின்றேன். சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினையை அணுகுவோம் என்ற அந்த முதல் கட்ட யோசனையை மாத்திரம் இப்போது நான் தீரன் அவர்களுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக சில அறிவிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். திரு. சுப்பராயன் அவர்களுக்கான அறிவிப்பு. அன்று அவர் மிகுந்த வேகமாக என்னவாயிற்று நிலம் என்று கேட்டார்கள். அது பற்றிய அறிவிப்பைத் தர விரும்புகின்றேன். அரசாணை எண் 4(டி) 11, நாள் 20.11. 1996ல் திருப்பூர் நகராட்சிக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை துணை மின் நிலையம் அமைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த விலையில் வழங்கலாம் என்ற ஆணையை நானும் வருவாய்த் துறை அமைச்சரும் பிறப்பித்தோம். 13.3.1997 அன்று அது என்னவாயிற்று. ஏன் இன்னும் கிடைக்கவில்லை? முதலமைச்சர் நல்லவர், அதிகாரிகள் எல்லாம் மோசமானவர்கள் என்று சொல்லி, கடும் தாக்குதலில் அன்றைக்கு சுப்பராயன் அவர்கள் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேற்படி நிலத்தை 11.3.1997 அன்று திருப்பூரிலே உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்பொறியாளரிடம் திருப்பூர் நகராட்சி ஒப்படைத்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாட்டாளி மக்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய வரிகளை எல்லாம் போட்டுவிட்டீர்கள் என்று திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார். அந்த வரி விகிதப் பட்டியலை எல்லோரும் படித்துக் காட்டினீர்கள். நானும் படித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. எந்த ஒரு வரியும் பாட்டாளி மக்களை வாட்டி வதைக்கக்கூடிய வரிகள் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

150க்கு மேற்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரிச் சலுகையும், 30க்கு மேற்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரி ரத்தும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ரூ.440 கோடிக்கு வரி போடப்பட்டதாக திருநாவுக்கரசு சொன்னார்கள். இல்லை ரூ. 440 கோடிக்கு வரி போடவில்லை. ரூ.210 கோடிக்குத்தான் – அதுவும் மதுபானங்கள் மூலமாகவும், பான் மசாலா, பரிசுச் சீட்டு போன்ற பொதுமக்களைப் பாதிக்காத அளவில்தான் இந்த வரி போடப்பட்டிருக்கிறது. சில போக்குவரத்து வாகனங்கள், இரு சக்கர வண்டிகள் மீது வரி போடப்பட்டிருக் கிறது.

சைக்கிள் வரியைப் பற்றி ஆரூண் இங்கே பேசினார்கள். எல்லாப் பத்திரிகைகளிலும் கட்டம் கட்டி இந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது. எனக்கும் அவருக்கும் நடந்த வாக்குவாதம் வெளிவந்திருக்கிறது. அவருடைய வாதமே, திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன வாதமும் அதுதான் – வெளி மாநில அட்லஸ் போன்ற சைக்கிள் விலை குறைவாக இருக்கிறது; நம்முடைய மாநிலத்திலே டி.ஐ. சைக்கிளுடைய விலை அதிகமாக இருப்பதால் 4 சதவீத சைக்கிள் வரி குறைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதை எடுத்துப் பார்த்தேன். டி.ஐ. சைக்கிள் ரூ. 1383க்கு விற்கிறார்கள். ஹீரோ சைக்கிள் ரூ. 1228க்கு விற்கப்படுகிறது. 'ஃபிரைட் காஸ்ட்' இவர்களுக்கு ரூ. 31 ஆகிறது. ஹீரோவிற்கு ரூ. 6 ஆகிறது. 'மேன்பவர் காஸ்ட்' டி.ஐ. சைக்கிளுக்கு ரூ. 95 ஆகிறது. ஹீரோவிற்கு ரூ. 44 ஆகிறது. அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் டி.ஐ. சைக்கிளுக்கு ரூ. 40 ஹீரோ சைக்கிளுக்குக் கிடையாது.

Manufacturing fixed expenses and variable overheads டி.ஐ. சைக்கிளுக்கு 127 ரூபாய். ரூ. 88 ஹீரோவிற்கு. ஆகவே மொத்தம் டி.ஐ. சைக்கிளுக்கு ரூ. 293. ரூ.138தான் ஹீரோ சைக்கிளுக்கு. எனவேதான் இந்த வரியைக் குறைக்க வேண்டு மென்று கேட்கிறார்கள். அதிலே இங்கே ஒரு நிபந்தனையோடு நான் குறைக்க விரும்புகிறேன். என்ன நிபந்தனை என்றால், ரூ.1383 விலையுள்ள சைக்கிளுக்கு ரூ. 40 வரி கட்டுகிறார்கள். அந்த வரியைக் குறைத்து, அதை வாங்குகிறவர்களுக்குக்

குறைத்துக் கொடுப்பார்களேயானால், அந்த ரூ. 40 குறைக்கப் படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். முடியாது என்றால் முடியாது. ஏனென்றால் ஒரு வரியைக் குறைத்தால், அந்த வரியின் அளவிற்கு விலையைக் குறைக்க வேண்டும். ஏனென்றால் இப்போதும் அவர்களுக்கு லாபம் இருக்கிறது.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்வி முழுக்க, முழுக்க நியாயமானது. அவர்களுக்கு 40 ரூபாய்க்கு வரிச் சலுகை கொடுத்தால், அவர்கள் 40 ரூபாய் சைக்கிள் விலையைக் குறைக்க வேண்டும். குறைத்தால் மட்டும் சலுகை கொடுங்கள், இல்லையென்றால் கொடுக்க வேண்டாம். எழுத்துப்பூர்வமாக அவர்கள் எழுதிக் கொடுக்கட்டும். அவர்கள் குறைக்கின்றார்கள் என்று சொன்னால், அந்தச் சலுகையைக் கொடுங்கள், இல்லையென்றால் வேண்டாம்.

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழைகளின் வாகனமான சைக்கிளுக்கு வரியைக் குறைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். பாட்டாளி மக்களின் சார்பிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) ஏழைகளின் சார்பிலே, தமிழ் மாநிலக் காங்கிரசின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு, அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் குறைப்பதன் மூலமாக, நிச்சயமாக தமிழ் மாநிலத்தில் உற்பத்தியாகின்ற சைக்கிள்களுக்கு அகில இந்திய அளவில் நல்ல மார்க்கெட் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. நம்முடைய தமிழ்நாட்டிலே தொழில்கள் வளர இரு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, 40 ரூபாய் குறைப்பதற்கு நன்றி கூறி அமர்கின்றேன், நன்றி வணக்கம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளுக்கு எது எதற்கெல்லாம் வரியைக் குறைத்து இருக்கிறீர்களோ, அவர்களும் அதுமாதிரி விலையைக் குறைத்து விற்கிற மாதிரி ஏற்பாடு பண்ணுவீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் வரி குறைக்கப் படுகிறது.

கேபிள் டி.வி. பற்றி எல்லோரும் பேசினார்கள். குறிப்பாக திரு. திருநாவுக்கரசு அவர்கள், இறுதியாகப் பேசிய கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். ஆளுங் கட்சியின் சார்பிலும் பேசியிருக்கிறார்கள். 20 சதவீதம் என்பதை 20 ரூபாய் என்று மாற்றினோம். அது அதிகம், கிராமப் பகுதிக்கு அதைக் குறைக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்துக்களை ஏற்று, மாநகராட்சிப் பகுதிக்கு 20 ரூபாய் என்றும், நகராட்சிகளில் 15 ரூபாய் என்றும், மாநகராட்சி, நகராட்சி தவிர மற்ற இடங்களுக்கு 10 ரூபாய் என்றும் விதிக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மின்னணுப் பொருட்களைப் பற்றிப் பேசப்பட்டது. இதைப் பற்றி நம்முடைய வரி சீர்திருத்தக் குழுவிலே உறுப்பினராக இருந்த திரு. சொக்கர் அவர்களும்கூட கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மின்னணுப் பொருள்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்களுக்கு நிதிநிலை அறிக்கையில் 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த 4 சதவிகிதத்தையும் குறைக்க வேண்டுமென்று அரசுக்கு வந்த வேண்டுகோளை ஏற்று மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்களுக்கு Electronic Parts and accessories – 2 சதவீதமாக வரி குறைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக நேற்று நம்முடைய நண்பர் திரு. தா. கிருஷ்ணன் பேசும்போது, இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் கடைசியாகக் கோடிட்டுக் காட்டிய வாசகங்களைப் பற்றி என்னுடைய அருமை நண்பரும், முன்னாள் நிதியதியமைச்சருமான டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டார்கள். நாவலர் பேசிய இடம் வல்லம். வல்லத்திற்காகப் பேசினார். பிரச்சினை என்னவென்றால் – நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே நினைக்கின்றேன். அதனுடைய நியாயத்தை அவர் உணருவார் என்று நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். வல்லத்தில் பெரியார் மணியம்மை கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரியில் ஏற்கெனவே திருமதி ஜானகி அம்மையார்

அவர்கள் கொஞ்ச நாள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, ஓரளவு நிலம் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அதிலே சில சலுகைகள் செல்வி ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. திடீரென்று நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது ஒரு செய்தி, சென்னையிலே வந்ததாக தெரிவிக்கப்பட்டது. திரு. வீரமணி அவர்கள் ஒரு அறிக்கை மூலமாக பெரியார் மணியம்மை கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தையெல்லாம் அரசு எடுத்துக் கொள்ளப் பார்க்கிறது, முதலமைச்சருக்குத் தெரியுமா? இது அதிகாரிகள் வேலையா அல்லது அந்தப் பக்கத்திலேயுள்ள எம்.பி.க்கள் வேலையா என்று கேட்டு ஒரு அறிக்கை வந்திருப்பதாகச் சொன்னார்கள். நான் சென்னை வந்தவுடன் முதல் காரியமாக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு டெலிபோன் செய்து என்ன என்று கேட்டேன். அவர் சொன்னார், நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் அவர்கள் செய்யவேண்டிய பணிகளில் ஒரு கல்லூரியோ அல்லது பள்ளிக்கூடமோ கட்டுவதற்காக அந்த இடத்தைப் போய் பார்த்தார்கள்.

அதைப்பற்றித்தான் அறிக்கை என்று சொன்னார். நான் உடனே ஏற்கெனவே கொடுக்கப்பட்ட இடத்தையா என்று கேட்டேன். அதற்கு அவர், இல்லை, இல்லை, ஏற்கெனவே கொடுக்கப்படாத புறம்போக்கு இடம். ஏற்கெனவே கொடுக்கப்பட்டதும் புறம்போக்கு இடம்தான். அது வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது வேறு வகையிலே கொடுக்கப்பட்டிருக்கலாம். அஃதன்னியில் 80 ஏக்கரா நிலம் தனியாக இருக்கிறது. அதைப் பயன்படுத்த முடியுமா என்று பார்த்தார்கள் என்று சொன்னார். அதற்கு நான், சரி, தவறான பிரச்சாரம் வேண்டாம், ஏதோ பெரியார் மணியம்மை கல்லூரியை நாம் அபகரிக்கிறோம் என்ற தவறான பிரச்சாரம் வேண்டாம், பத்திரிகையாளர்கள் கேட்டால் உண்மையைச் சொல்லிவிடுங்கள், என்று சொன்னேன். ஏற்கெனவே ஜானகி அம்மையாரோ அல்லது செல்வி ஜெயலலிதாவோ ஒதுக்கிய அந்த இடத்தில் நாங்கள் யாரும் கை வைக்கவில்லை, மீதம் உள்ள புறம்போக்கு நிலம் இடம் 80 ஏக்காவை, பற்றித்தான் பிரச்சினை என்று

சொல்லிவிடுங்கள் என்று சொன்னேன். அவரும் சொல்லிவிட்டார். இதைப்பற்றி என்னிடத்திலே யாரும் சொல்லவும் இல்லை; தொலைபேசியிலே கூட யாரும் கேட்கவும் இல்லை. திடீரென்று பத்திரிகையிலே பார்த்தால் ஒரு இடைக்காலத் தடையாணை வாங்கினார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் சொன்ன செய்தியை வைத்துக்கொண்டு, ஒரு இடைக்காலத் தடையாணை வாங்கினார்கள் என்றும் செய்தி வந்தது. அதற்குப் பிறகு உள்ள விஷயங்களைப் பற்றி நான் இங்கே பேச விரும்பவில்லை.

இன்றுகூட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு. இந்த வழக்கு அல்ல. 1988 ஆம் ஆண்டிலேயே வீரமணி அவர்கள் அந்த இடம் முழுமையும் தனக்கே தரவேண்டும் என்று நீதின்றத்திற்குப் போய் ஜானகி அம்மையார் காலமோ, இடைக்காலமோ எனக்குத் தெரியாது. அப்போதே நீதிமன்றத்திற்குப் போய் இன்றைக்கு அந்த வழக்கு வந்து அந்த இடத்தில் நாங்கள்தான் இருக்க வேண்டும், கட்டிடம் எல்லாம் கட்டிவிட்டோம், அது புறம்போக்காக இருந்தாலும்கூட எங்களுக்குத்தான் சொந்தம் என்ற ஒரு வழக்கைத் தொடர்ந்து, அந்த வழக்கிலே, வழக்கு தொடுத்தவர்கள் யாரும் ஆஜர் ஆகாத காரணத்தால் இன்றைக்குக் காலையிலே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அது பழைய வழக்கு.

இதற்கிடையிலே, ஏதோ பெரியார் மணியம்மை கல்லூரியை நான் எடுத்துக்கொள்ள அல்லது கெடுத்துவிட முயல்வதாகக் கருதிக்கொண்டு ஒரு போராட்டத்தை அறிவித்து நாவலர் அவர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தியிருக் கிறார்கள். அதிலே அ.தி.மு.க. சார்பிலும் வேறு கட்சிக்காரர் களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே தன்னாட்சிப் பல்கலைக்கழகம் – Deemed University – வைக்கப் போகிறோம், அதைக் கருணாநிதி கெடுக்கப் பார்க்கிறார் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைப்பற்றி என்னிடம் எதுவுமே பேசவே யில்லை. ஆனால் அந்த தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தைப் பற்றி 1996 ஜூலை 12ந் தேதியே டெல்லியிலிருந்து அமைச்சர் பொம்மை அவர்கள் இந்த அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அப்போதுதான் இந்தத் தன்னாட்சிப்

பல்கலைக்கழகத்திற்காக இதைக் கேட்டிருக்கிறார்கள், அப்போதிருந்த முதலமைச்சர் மூலமாகக் கேட்டிருக்கிறார்கள் என்ற செய்தியே எனக்குத் தெரியும். அந்தக் கோரிக்கைக்கு மத்திய அமைச்சர் பொம்மை கொடுக்க முடியாது என்று மறுத்து, ஐலை மாதத்திலேயே கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால் தன்னாட்சிப் பல்கலைக்கழகம் அமைக்கப் போகிறோம். அதைக் கெடுப்பதற்காக இதெல்லாம் பண்ணுகிறார் என்ற ஒரு செய்தியைப் பரப்பிவிட்டு, அந்தக் கூட்டத்திலே நாவலர் பேசியிருக்கிறார். 'மக்கள் கொதித்து எழுவார்கள், நாடெங்கும் போராட்டம் நடைபெறும், வெற்றிபெறும் வரை ஓயாது, அ.தி.மு.க. துணை நிற்கும்' இது பத்திரிகையிலே தலைப்பு. அதிலே பேசும்போது நாவலர் 'பட்ஜெட்டிலே வாழ்க்கை வரலாறா' என்று கேட்டிருக்கிறார். தமிழனுடைய வாழ்க்கை உயர்வதற்காகத்தான் பட்ஜெட்டே போடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் 'பட்ஜெட்டிலே வாழ்க்கை வரலாறா' என்று அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். கேட்டுவிட்டு அதிலேதான் திரு. தா. கிருஷ்ணன் படித்துக் காட்டிய அந்த இடம் வருகிறது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று நான் எழுதியதைப் படித்துவிட்டு அவருக்கே உரிய எள்ளல் துள்ளலுடன் 'ஏன் வேறு எங்கேயும் காணக் கூடாதா? இறைவனைக் கண்டவன் எல்லாம் என்ன ஆனான்? அவ்வளவு பெரிய கோயிலை கட்டிய ராஜ ராஜ சோழன் என்ன ஆனான்? வெளியில்தானே நிற்கிறான். பட்ஜெட் நேரத்திலே இறைவனைக் கண்டால் என்ன, காணாவிட்டால் என்ன' என்று. (சிரிப்பு) அவருக்கே உரிய நகைச்சுவை ததும்ப ஏற்றி, இறக்கி, இழுத்து, நீட்டி (சிரிப்பு) பேசியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல. ஒன்று கூடக் கேட்டிருக்கிறார். அதுதான் எனக்குப் புரியவில்லை. என்னைவிட அதிகம் படித்தவர். நம்முடைய பேராசிரியருக்கு அந்தக் காலத்திலே பெரிய நண்பர். இரண்டு பேரும் ஒன்றாக அந்தக் காலத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே படித்து, அங்கேயிருந்து இரண்டு சிங்கங்கள் அண்ணா தலைமையிலே வருகின்றன என்று சொல்லப்பட்ட இரண்டு சிங்கங்களிலே ஒன்று * பங்கமாக ஆகிவிட்டது என்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. 'நிதிநிலை அறிக்கை என்றால் என்ன' என்று

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அவர் கேட்டுவிட்டு, 'வரவு செலவுக் கணக்கைத்தான் சொல்ல வேண்டுமே ஒழிய வாழ்க்கை வரலாற்றைச் சொல்லலாமா' என்று கேட்டிருக்கிறார். வரவு செலவுக் கணக்கை மாத்திரம்தான் சொல்ல வேண்டுமாம். கவர்னர் உரையிலே கொள்கை என்ன என்று கேட்கிறவர்கள் சட்டமன்றத்திலே இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலே கொள்கை என்ன என்று கேட்கிறவர்கள் சட்டமன்றத்திலே ஏராளமாக இருக்கலாம். இதிலெல்லாம்கூட நான் புண்படவில்லை. ஆனால் அவர் பேசுகிறார்.

'கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்'

என்ற வள்ளுவருடைய குறளை மேற்கோள் காட்டி அவர் சொல்கிறார். அதாவது ஜெயலலிதா கொடுத்ததை நான் கெடுக்கிறேனாம். 'இந்த மாதிரி பொறாமைப்படுகிறவன் சாப்பிட முடியாமல், வேட்டி கட்டமுடியாமல் செத்துப் போய்விடுவான் என்று நான் சொல்லவில்லை. வள்ளுவர் சொல்லியிருக்கிறார்' என்று சொல்கிறார்.

பிறந்தவர்கள் எல்லோரும் சாகத்தான் போகிறார்கள். நானும் சாகத்தான் போகிறேன், அவருக்கும், எல்லோருக்கும் அந்த முடிவு உண்டு. அவர் எனக்கு முதலிலே மலர் வளையம் வைக்கப் போகிறாரோ, அல்லது நான் அவருக்கு முதலிலே மலர் வளையம் வைக்கப் போகிறேனோ; அவர் ஆசை நிறைவேறி, நான் முதலில் போய்விட்டால், நான் அவருக்கு மலர் வளையம் வைக்கப் போவதில்லை – அது வேறு விஷயம். ஆனால் அந்த அளவுக்கு ஒரு நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசுகிற நேரத்தில் ஒரு நிலத்தகராறிலே புகுந்து கொண்டு ''புறம்போக்கு நிலத்தை தாங்கள் எடுத்துக் கொள்ளத்தான்வேண்டும். அதற்காக ஒரு போராட்டம்'' என்று கூறி இப்படிப் பேசியிருக்கிறார். நான் பெரியாரிடத்திலே எவ்வளவு பாசம், அன்பு கொண்டவன் என்பதை வெறும் உச்சரிப்புகளால் அல்ல, வார்த்தைகளால் அல்ல, செயலால் காட்டிக்கொண்டு இருப்பவன் என்பதை நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள். பெரியாரை, அண்ணாவை, பெருந்தலைவர் காமராஜரை, காயிதே மில்லத்தை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை, டாக்டர் அம்பேத்கரை –

இப்படிப்பட்டவர்களை எல்லாம் நான் எப்படி நேசிப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தக் கழகத்திலே இல்லாதவர்களாக இருந்தாலும் கூட – எனக்குக் கூட ஒரு வருத்தம் உண்டு. நாம் காமராஜரைப் பாராட்டுகிறோம், அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கிறோம். ஆனால் அண்ணாவைப் பாராட்டி அண்ணாவின் பிறந்த நாளில் காங்கிரஸ்காரர்கள் யாராவது அண்ணாவுக்கு ஒரு மாலை அணிவிப்பது இல்லையே என்ற ஆதங்கம் எல்லாம்கூட எனக்கு உண்டு. ஆனால் அதை எல்லாம் நான் மறந்துவிட்டு ஒதுக்கி வைத்து விட்டு யார் இந்த நாட்டின் தலைவர்களோ, யார் வழிகாட்டிகளாக இருந்தார்களோ, யார் நமக்கு எல்லாம் ஊக்க உணர்வுகளுக்குத் தூண்டுதலாக இருந்தார்களோ அவர்களை எல்லாம் நாம் பாராட்டினால், அவர்களை எல்லாம் வாழ்த்தினால், அவர்கள் வழியில் எதிர்கால வழித் தோன்றல்கள் நடப்பார்கள் என்ற எண்ணத்தோடுதான் நான் அவர்களை எல்லாம் பாராட்டுகிறேன், போற்றுகிறேன்.

உங்களுக்குத் தெரியும், ருக்மணி லட்சுமிபதி, டாக்டர் ராமமூர்த்தி அவர்களுடைய மாமியார். முதன் முதலாக சட்டப்பேரவைக்கு தமிழ்நாட்டிலே வந்த பெண்மணி. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர். அவர்கள் திராவிட இயக்கத்தினுடைய கொள்கைக்கு மாறுபட்ட – அந்தக் காலத்து திராவிட கழகத்துக் கொள்கைகள், இப்போது அல்ல – மாறுபட்ட, ஒரு பெண்மணி அதுவும் உங்களுக்குத் தெரியும். உப்பு சத்தியாகிரகத்திலே சர்தார் வேதரத்தினம் பிள்ளையோடு சென்று கலந்து கொண்டவர்கள். ராஜாஜியினுடைய அணியிலே சென்றவர்கள். அவர்கள் மறைந்து பல நாட்கள் ஆகின்றது. அவருக்கு ஒரு சிலை வைக்கவேண்டும் என்று பெரும்பாடு பட்டு மார்ஷல் ரோடுக்கு அந்த அம்மையாருடைய பெயர் வைக்கவேண்டுமென்று என்னைக் கேட்டபோது ஒரு விழாவிலே அறிவித்து அந்த அம்மையாருடைய பெயர் அந்தச் சாலைக்கு வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு சிலை வைக்க பீடம் எல்லாம் தயார் ஆயிற்று. அதற்குள் ஆட்சி போய்விட்டது. பின்னர் வந்த அந்த ஆட்சியில் 5 ஆண்டுக் காலம் டாக்டர் ராமமூர்த்தி நடையாய் நடந்து பார்த்தார். புத்தகம் கூட எழுதிப் பார்த்தார். என்னை

மறந்துவிட்டு அவர்களைப் பாராட்டிக்கூட புத்தகம் எழுதிப் பார்த்தார். அப்படியும் சிலை வைக்கவில்லை. நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அந்தச் சிலையை நான் திறந்து வைத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்த அம்மையாருக்கு ஒரு ஸ்டாம்பு வெளியிட வேண்டும் என்று நான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி நேற்று முன்தினம் பதில் வந்திருக்கிறது. நிச்சயமாக இந்த ஆண்டு ருக்மணி லட்சுமிபதியின் ஸ்டாம்பு வெளியிடுவோம் என்று பதில் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கும் ஸ்டாம்பு வெளியிட வேண்டும் என்று நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் எவ்வளவோ தகராறுகள் உண்டு, இந்தச் சட்டமன்றத்திலேயே உண்டு. இருந்தாலும்கூட என்பால் தனிப்பட்ட முறையிலே அன்பு காட்டக்கூடியவர். திருக்குவளையிலே நான் திறந்து வைக்கவேண்டுமென்று – ஒரு தாய் சேய் நல விடுதிக்கு வரவேண்டுமென்று நான் – கேட்டபோது காங்கிரஸ்காரர்கள் பலபேர் எதிர்த்தும்கூட, அதையெல்லாம் கேட்காமல் என்ன இருந்தாலும் எதிர்க் கட்சியிலே துணைத் தலைவராக இருக்கிற அவர், அவர் பிறந்த ஊருக்கு அழைக்கிறார், சென்றுதான் தீருவேன் என்று கருப்புக் கொடி காட்டியதை எல்லாம் புறக்கணித்துவிட்டு வந்து அந்த விழாவிலே கலந்து கொண்டவர் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள். அவர்கள் மறைந்து இவ்வளவு நாள் ஆகியும் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதாகச் சொன்னார்கள், இன்னும் எழுப்பப்படவில்லை. இந்த ஆண்டு அவருடைய விழாவிலே அவருக்காக நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்படும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வாழ்ந்த அந்த வாரன் ரோடு பக்தவத்சலம் சாலை என்று அழைக்கப்படும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோரையும் பார்க்கிறேன். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் மட்டும் வருத்தமாக உட்கார்ந்து கொண்டு

இருக்கிறார். அவர் நேற்று தன்னுடைய தொகுதிக்காக நீண்ட நேரம் போராடினார். பல நாள் கேட்டிருக்கிறார். திரு. லத்தீப் அவர்களே, வருத்தப்படாதீர்கள். நீங்கள் வைத்த கோரிக்கைகளிலே சந்தனத் தொழிற்சாலை ஒன்றைத் தவிர மற்ற 3 கோரிக்கைகளுக்கும் இப்போதே ஒப்புதல் அளித்துவிட்டேன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக் கூறி இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.



உரை 27 **நாள் : 06.04.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து அரிய உரைகளை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அவர்கள் பாராட்டிய அந்த உரைகளை மேலும் ஊக்கத்தோடு பணியாற்றுவதற்குத் தரப்பட்ட வலுவேற்றக்கூடிய மாத்திரைகள் என்று எண்ணிக்கொண்டும், கேலியோ அல்லது கிண்டலோ செய்து எதிர்த்து ஆற்றிய உரைகளைத் திருத்திக்கொள்வதற்கு தரப்பட்ட வாய்ப்பு என்றும் எடுத்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய இரண்டு ஐயப்பாடுகளுக்கு நான் விடையளிக்க விரும்புகிறேன். வெளிநாட்டுக் கடன்களை அரசு பெறுவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டு கடன்களைப் பொறுத்த வரையில் அதை மத்திய அரசு பெற்று மாநில அரசுகளுக்குக் கூடுதல் மத்திய திட்ட உதவியாக 70 சதவிகிதம் கடன், 30 சதவிகிதம் மானியம் என்ற விகிதத்திலே அளிக்கின்றது. இந்தக் கடன்களின் மீதான 'Commitment charges' இவைகளை மத்திய அரசுதான் செலுத்தி வருகிறது என்ற விளக்கத்தை நான் அவருக்கு அளிக்க விரும்புகிறேன். இன்னொன்றும், கூறினார்கள். வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க குழு போடுவதாக சென்ற நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டீர்கள். அந்தக் குழு என்னவாயிற்று? ஏன் இன்னும்

நியமிக்கவில்லை என்று கேட்டார்கள். கடந்த ஆண்டிலே நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்தது. வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க குழு அமைக்கப்படும் என்று அல்ல, ஒரு 'செல்' 'Cell' அமைக்கப்படும் என்றுதான் கூறி இருந்தேன், ஒரு பிரிவு அமைக்கப்படும் என்றுதான் கூறியிருந்தேன். அது அமைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சருடைய அலுவலகத்திலேயே மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஓய்வு பெற்ற அதிகாரி, Officer on Special Duty என்ற அந்தப் பொறுப்பில் திரு.வெங்கடசுப்ரமணியம், ரிடையர்டு ஐ.ஏ.எஸ். அவர்கள் அந்தப் பணியை இப்போது ஆற்றி வருகின்றார் என்ற விளக்கத்தை அவருக்குத்தர விரும்புகிறேன். இன்னொன்று, கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட "Right to Information Act" தகவல் தெரிந்துகொள்கின்ற அந்தச் சட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். சட்ட அமைச்சர் அதற்கான பதிலைச் சொன்னார்கள். விதிமுறைகளை உருவாக்குவதற்கு ஏன் இவ்வளவு தாமதம் என்று அடுத்த வினா எழுப்பினார்கள். இந்த "Right to Information Act'' என்ற தகவல் பெறுகின்ற இந்தச் சட்டம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாக இயற்றப்பட்டிருக்கிறது. அதனால், இந்தச் சட்டத்திற்கான விதிமுறைகளை உருவாக்குவதற்கு எந்த முன்மாதிரிகளும் நமக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. எனவேதான், அந்த விதிமுறைகளை உருவாக்குவதற்கு காலதாமதம் ஆயிற்று. இப்போது அந்த விதிமுறைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, இறுதி வடிவம் பெறுகின்ற சூழ்நிலை அமைந்துவிட்டது. எனவே, அந்த விதிமுறைகள் விரைவிலே வெளியிடப்படும் என்பதையும் நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள சிறப்பு அம்சங்களை இங்கே உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி, தோழமைக் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். அவற்றை ஒருமுறை நானும் தொகுத்து வழங்கினால் நினைவிலே பதிவதற்கு ஏற்றதாக அமையும் என்பதற்காக அதனை உங்கள் முன்னிலையிலே வைக்க விரும்புகிறேன்.

அரசு அலுவலகங்களிலே பொதுமக்களுக்கு உதவி செய்யும் தகவல் வழங்குகின்ற மையங்கள்; 10 புதிய வட்டங்கள் இந்த ஆண்டில் ஏற்படுத்தப்படும் என்ற செய்தி; இது மேலும் பல கோரிக்கைகள் அடங்கிய செய்தியாக அமைந்திருக்கிறது. அவைகளும் உரிய நேரத்திலே, உரிய முறையிலே கவனிக்கப்படும் என்ற அறிவிப்போடு இதைத் தெரிவிக்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு இந்த ஆண்டு 75 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு; நமக்கு நாமே திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் என்பது ரூபாய் 30 இலட்சமாக உயர்வு; அதிகம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பேசப் பேசத்தான், முடியுமா முடியாதா என்பதைச் சிந்தித்துச் சொல்ல இயலும்.

வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் 385 வளர்ச்சி வட்டாரங்களுக்கு விரிவாக்கம்; குடிநீர்த் திட்டங்கள் பல கோடி ரூபாய்ச் செலவிலே, பல இடங்களிலே நிறைவேற்றப் படுகின்ற நிலையையொட்டி, குறிப்பாக, சிறப்பாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து கடையநல்லூர் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; அவிநாசி, அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்; நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை இந்த ஆண்டு உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற செய்தி;

கோவை, மதுரை, திருநெல்வேலி, மாநகராட்சிகளிலும், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர், ஈரோடு, கரூர் நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை வசதிகளை அளிக்கும் திட்டம் 269 கோடி ரூபாய்ச் செலவிலே வரும் ஆண்டிலே தொடங்கப்படும் என்ற செய்தி;

பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி, அடையாறு ஆகிய நீர் வழிகளை மேம்படுத்தும் திட்டம்; 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் பணிகள்;

20 கோடி ரூபாய்ச் செலவில் காவிரிப் பாசன வாய்க் கால்கள் தூர் வாரும் திட்டம்;

100 மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கண்ணாடி இழை கட்டுமரங்கள் மானிய விலையிலே வழங்கப்படும் திட்டம்;

538 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும் என்ற அறிவிப்பு;

சென்னையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக மற்றும் நிதி மையம்;

அக்டோபரில் தொடங்கும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் கார்கள் தயாரித்து வழங்கும் ஹூண்டாய், தொழிற்சாலையினுடைய பணியின் முன்னேற்றம்;

தமிழ்நாட்டில் கணினி மென்பொருட்கள், கணினி இயந்திரங்கள் தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கும் திட்டங்கள். மேலும் கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள்;

அடுத்த ஆண்டுக்குள் தொடக்கப் பள்ளிகளே இல்லாத கிராமங்களே தமிழ்நாட்டிலே இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்;

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப் புத்தகம்;

வரும் ஆண்டிலேயிருந்து தொழில்நுட்பப் பயிலகங் களிலும் 'ஒற்றைச் சாளர முறை';

திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்கள் அரசுடைமை, வசனகர்த்தா இளங்கோவன் குடும்ப நல நிதி 2 இலட்சம் ரூபாய்; தியாகச் செம்மல் ஜமதக்னி நூலுக்கு – பொதுவுடைமை நூலுக்கு – 5 இலட்சம் ரூபாய் நிதி;

வரும் ஆண்டுக்குள் 1408 ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கு நிரந்தரக் கட்டடம்;

சத்துணவுச் சிறார்களுக்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்குகின்ற திட்டம்;

மூவலூர் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு;

கேளம்பாக்கம் அருகில் பெண் தொழில் முனைவோர் களுக்கு உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா; ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் 200 ரூபாயிலிருந்து, 4, 5 மாதங்களுக்கு முன்புதான் 300 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இப்போது 400 ரூபாயாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ள செய்தி; ஆதி திராவிடர்களுக்கு தொழில் நடத்த கடன் வழங்க தாட்கோ மூலம் வங்கிக்கு நிகராக ஓர் ஏற்பாடு;

நெசவாளர் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து நல்ல முடிவுகாண ஒரு குழு அமைப்பு;

அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு நல வாரியம்;

நெசவாளர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற நலிந்த பிரிவினருக்கான ஓய்வூதியம் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்வு;

ஆஸ்பெஸ்டாஸ் தகடு, முதல்கட்டமாக சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி மற்றும் நெல்லையில் ஓலைக் குடிசைகளுக்கு மாற்றாக ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த வீடுகள்;

சமத்துவபுரத்திற்கு 17.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சுதந்திரப் பொன்விழாவையொட்டி, 20 சதவிகித இட ஒதுக்கீடு போராட்டத்திலே உயிர்நீத்த சமூக நீதிக் காவலர்களுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகை: எவ்வளவு என்பதை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். இன்னும் அதிகம் சேர்த்து இறுதியிலே அறிவிக்க இருக்கின்றேன். 30 இலட்ச ரூபாய்ச் செலவிலே தியாகிகள் மணிமண்டபம்; 50 இலட்ச ரூபாய்ச் செலவிலே தியாகி விஸ்வநாத தாஸ் இல்லம்; 50 இலட்ச ரூபாய்ச் செலவிலே பூலித்தேவன் நினைவுச்

சின்னம்; 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம்; 15.50 இலட்ச ரூபாய்ச் செலவில் ஜீவா நினைவிடம்; 7.40 இலட்ச ரூபாய்ச் செலவில் நேதாஜிக்கு சிலை; அம்பேத்கர் மணிமண்டபம் தொடக்கம்; 84.94 இலட்ச ரூபாய் செலவில் 5 ஆண்டுகளாகப் பாழடைந்து கிடந்த வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு;

அரசு அலுவலர்களுக்கு 1.1.1996லிருந்து மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதம். நகர ஈட்டுப்படி, இரட்டிப்பு வீட்டு வாடகைப்படி, மாநில அரசு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 40 விழுக்காடு ஊதிய உயர்வு; அலுவலர்–ஆசிரியர் ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகள் இருப்பின் அதைத் தீர்க்க ஒரு நபர் குழு. சென்னை மாநகரத்தை ஏ1 நகரமாக மாற்ற மத்திய அரசுக்குக் கோரிக்கை; உயிருக்குத் துணிந்து பணியாற்றும் காவலர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு விருது, பதவி உயர்வு, பொற்கிழி;

தேங்காய், கொப்பரை, பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப்பொருள்கள், மசாலாப் பொடி, ஐஸ்கிரீம், பட்டாணி மாவு போன்றவைகளுக்கு வரிக் குறைப்பு; சமையலுக்குப் பயன்படும் எண்ணெய்கள், காசினிக் கீரை, கணினி மென்பொருள், மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகம் போன்றவற்றிற்கு முழுக்க வரி விலக்கு; இன்னும் சிலவற்றைச் சேர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுக்கு எல்லாம், என்னுடைய பேச்சின் இறுதிப் பகுதியிலே அவற்றைப் பற்றி விளக்குவேன். இவற்றையும், இவற்றிற்கு மேலாக வேறுபல நல்வாழ்வுத் திட்டங்களையும், தொலைநோக்குத் திட்டங்களையும் உள்ளடக்கித்தான் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

நம்முடைய திரு.சுப்பராயன் அவர்கள் பேசும்போது பெண்ணுக்கு எல்லா அலங்காரமும் செய்து பொட்டு வைக்க மறந்துவிட்டார், விட்டுவிட்டார் முதல்வர் என்று சொன்னார்கள். ஒருவேளை அது முஸ்லீம் பெண்ணாக இருக்குமோ என்று திரு.அப்துல் லத்தீப் அவர்கள் எண்ணக்கூடும். பொட்டு எவ்வளவு வைக்கப்பட்டது. பொட்டு ஒரு சீராகத்தான்

வைக்கப்பட வேண்டும், நெற்றி முழுவதும் பொட்டு வைத்துவிட முடியாது. அப்படி வைத்தால் அது பொட்டாக இருக்காது, பொட்டு வைப்பதற்கும் துட்டு வேண்டியிருக்கிறது இப்போது இந்த அரசுக்கு என்பதை உணர வேண்டும். அதுபற்றியும் என் பேச்சின் இறுதியில் நான் கூற இருக்கின்றேன்.

நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை பற்றி ஆற்றிய உரை, அதிலே குறிப்பிட்ட சில செய்திகளைப் பற்றி விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். அவர்களும் கேட்டார்கள். இந்தப் பற்றாக்குறை பற்றி பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்கள்கூட ஐயப்பாடுகளை எழுப்பி இவைகளையெல்லாம் எப்படிச் சீர் செய்யப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அதிக அளவிற்குப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்றுகூட குறிப்பிட்டார்கள். நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 1989–90ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை மதிப்பீட்டுக் கணக்கில் 147.67 கோடி ரூபாயாக இருந்தது. பிறகு அது இறுதிக் கணக்கில், அந்த ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டுக் கணக்கில் பிளஸ் 9.39 கோடி ரூபாயாக ஆயிற்று. 1990–91 ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை மதிப்பீடு, நிகரப் பற்றாக்குறை 349.36 கோடியாக இருந்தது. பிறகு அது கணக்கில் ஒரு கோடி ரூபாய் பிளஸ் என்று ஆயிற்று. 1991 – 92ல் இந்த நிகரப் பற்றாக்குறையினுடைய மதிப்பீடு 577.41 கோடி ரூபாயாக இருந்தது. பிறகு கணக்கில் 577 கோடி அதிகமாகாமல் குறைந்து மைனஸ் 239.75 கோடி என்று ஆயிற்று. 1992–93ல் 217.62 கோடி என்ற நிகரப் பற்றாக் குறையாக மதிப்பீட்டிலே இருந்து பிறகு கணக்கிலே அது குறைந்து 34.23 கோடி என்று ஆயிற்று. 1993–94ல் மதிப்பீட்டில் நிகரப் பற்றாக்குறை 359.95 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில் மைனஸ்125.45 கோடி என்று ஆயிற்று. 1995–96ல் நிகரப் பற்றாக்குறை ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீட்டிலே இருந்து பிறகு கணக்கிலேகூட பிளஸ் 116.45 கோடி என்று ஆயிற்று. 1996–97ல் இந்த ஆட்சி பொறுப்பேற்ற காலகட்டத்தில் நிகரப் பற்றாக்குறை 334.89 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில்

பிளஸ் 15.91 கோடி என்று ஆயிற்று. 1997–98ல், கடந்த நிதிநிலை அறிக்கையில் நிகரப் பற்றாக்குறை 498.38 கோடி என்று இருந்து திருத்த மதிப்பீட்டில் அது மைனஸ் 3.31 கோடி என்ற அளவிற்குக் குறைந்தது. இப்பொழுது, 1998–99ல் நிகரப் பற்றாக்குறை 876.67 கோடி என்று இருக்கிறது. இந்த நிகரப் பற்றாக்குறை நாம் விதிக்க இருக்கின்ற வரிகளின் காரணமாக ஒரு 340 கோடி ரூபாய் குறைந்து, இறுதிப் பற்றாக்குறையாக 536 கோடி இருக்கும் என்று நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன் இந்த அறிக்கையில்.

இந்த அறிக்கை பற்றி நம்முடைய திரு.சொக்கர் அவர்கள் நிதிநிலை அறிக்கை எப்படி அமைய வேண்டும் என்ற அரிச்சுவடியிலே ஆரம்பித்து, நேரம் இல்லாத காரணத்தால் எண்ணெய் வரையிலே செல்லாமல், அவர்கள் தன்னுடைய ஓர் அரிய உரையை ஆற்றி இருக்கின்றார். அவர் உரையாற்றும் போது, நான் நினைத்துக் கொண்டேன். திரு. சுப்பராயன் சொன்னதைப்போல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் நிதிநிலை அறிக்கையைப்பற்றி – யாரும் தவறாகக் கருதிக்கொள்ளக்கூடாது – அவ்வளவு முழுமையாகத் தெரிவதற்கு நியாயமில்லை. ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே, அவர்களுடைய கவலை எல்லாம், ஊருக்குத் திரும்பியதும் தொகுதியைப் பற்றி பேசினாயா, பாலத்தைப் பற்றி பேசினாயா, வாய்க்காலைப் பற்றி பேசினாயா என்ற இந்தக் கேள்விகளுக்குத்தான் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக அதைப்பற்றிப் பேசுகிறார்கள். இருந்தாலும் பொதுவாகப் பேசுகின்ற ஒரு நிலை இல்லை.

நம்முடைய ஜனநாயகத்திலே ஏற்பட்டுள்ள கோளாறு என்னவென்றால், நாடாளுமன்றம் எதற்காக இருக்கிறது. சட்ட மன்றம் எதற்காக இருக்கிறது என்பதை, தேர்ந்தெடுக்கப்படுகிற நாமும் உணர்ந்துகொள்வது இல்லை, நம்மைத் தேர்ந்தெடுக் கின்ற மக்களும் உணர்ந்துகொள்வது இல்லை. சட்டமன்றம் என்பது மக்களுடைய நல்வாழ்வுக்காக, திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, பணத்தை ஒதுக்குவதற்கு அனுமதி கொடுக்கின்ற, அதற்கான சட்டங்களை இயற்றக்கூடிய மன்றம்தான் சட்டமன்றம். அதைப்போலவே, அகில இந்திய

அளவிலே, இதைப்போன்ற சட்டங்களை நிறைவேற்றவும், திட்டங்களை உருவாக்குவதற்கும் இருக்கின்ற மன்றம்தான் நாடாளுமன்றம். ஆங்காங்குள்ள மக்களுடைய குறைகளை அறியவும், அவைகளை நிறைவேற்றி வைக்கவும், திட்டங்களை நிறைவேற்றவும் பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்கள், மக்களுடைய பிரதிநிதிகளாகிய இவர்கள் பாடுபட வேண்டும். ஆனால், இப்பொழுது நிலைமை எப்படி ஆகியிருக்கிறது என்றால், உள்ளாட்சி மன்றத் தலைவர் செய்கிற தவறு எல்லாம் எம்.எல்.ஏ.–மீதுதான்; எம்.எல்.ஏ. செய்கிற தவறு எல்லாம் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்களே, அவர்கள் மீதுதான் என்கின்ற அளவிற்கு மக்கள் ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொரு செயலையும் தங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் எம்.பி.–ஆக இருந்தால் என்ன, எம்.எல்.ஏ.–ஆக இருந்தால் என்ன, பஞ்சாயத்துத் தலைவராக இருந்தால் என்ன, உறுப்பினராக இருந்தால் என்ன, ஒன்றியத் தலைவராக இருந்தால் என்ன என்ற பாகுபாடு செய்து பார்க்காமல், எல்லோரையும் சமமாகக் கருதி – அந்தப் பக்குவம் வந்து இருக்கிறது நம்முடைய மக்களுக்கு எல்லோரையும் சமமாகக் கருதுகின்ற பக்குவம் வந்து இருக்கின்ற காரணத்தால், இந்தக் கேள்விகளையே கேட்கிறார்கள். எனவே, அதிலேதான் நாம் அதிகக் கவனம் செலுத்தி, இந்த மன்றத்திலே பேசும் போதெல்லாம் எங்கள் ஊருக்கு ஒரு காவல் நிலையம் கொடுங்கள், எங்கள் ஊருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் கொடுங்கள், அந்த வட்டத்தை மட்டும் பிரித்தீர்களே, எங்கள் வட்டத்தைப் பிரித்துக்கொடுங்கள் என்பது போன்ற இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுகின்ற அளவுக்குத்தான் நிலைமை இந்த மன்றத்திலே இருக்கிறது.

நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்கின்றேன். நிதிநிலையைப் பற்றி, வேறு பல துறைகளைப் பற்றி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள், என்னையும் சேர்த்து, மாண்புமிகு அமைச்சர்களையும் சேர்த்து, நிறைய இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு

துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள், அதை உணர்ந்தவர்கள் அவ்வப்போது யார் யார் ஆர்வத்தோடு விரும்புகிறார்களோ அவர்களுக்கு அத்தகைய வகுப்புக்களை நடத்தலாம், நடத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி நடத்துகின்ற நேரத்திலே, அதற்கான ஆசிரியர்களாக முன் வரிசையிலேயே சிலபேர் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். நான் ஒருவரைச் சொல்லி, ஒருவரைச் சொல்லாவிட்டால், நம்மை ஆசிரியர் பதவிக்கு உயர்த்தமாட்டாரா என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. எனவே, அவர்களெல்லாம் அந்தப் பணியைச் செய்கின்ற வகையிலே நம்முடைய சொக்கர் அவர்கள் பேசிய நேரத்திலே, நான் அப்படித்தான் எண்ணிக் கொண்டேன். ஏற்கெனவே இந்தத் திட்டம் இருக்கிறது. இருந்தாலும், அதைச் செயல்படுத்துவதற்கான ஒரு ஊக்கத்தை அவர்களுடைய பேச்சு இன்றைக்கு ஏற்படுத்தியது என்று நான் கூற விரும்புகின்றேன்.

இந்தப் பற்றாக்குறையை எப்படியெல்லாம் நீங்கள் நிறைவு செய்வீர்கள் என்கின்ற ஆதங்கத்தோடு, ஒரு எதிர்ப்பு உணர்வோடு அல்ல, நம்முடைய தம்பி திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டார்கள். அவரேகூட இன்னின்ன வழிகளில் நீங்கள் நிறைவு செய்யலாம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். வரவேண்டிய பல நிலுவைகளையெல்லாம் நாம் வசூலிக்க வேண்டியதிருக்கிறது. விற்பனை வரியிலே மாத்திரம், தடையுத்தரவுக்கு உட்படாத, வசூலிக்கத்தக்க விற்பனை வரித் தொகை 331 கோடி ரூபாய் நிலுவையிலுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், ஐ.எம்.எஃப்.எல். இருக்கிறதே, இந்தியாவிலே தயாரிக்கின்ற வெளிநாட்டு மது, 1981 ஆம் ஆண்டிலேயிருந்து அந்த அதிபர்கள் 12.2.1989 முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய். ஐ.எம்.எஃப்.எல். அதிபர்கள் இருக்கிறார்களே. உற்பத்தி யாளர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1989லே ஆட்சியிலே

இருந்தபோது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் அந்த நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே, அவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து, உச்சநீதி மன்றத்திற்குச் சென்றார்கள். அங்கேயும், உச்சநீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றதே தவிர, அதற்கு இடைக்காலத் தடையாணை பெறப்படவில்லை. எல்லோருக்கும் தெரியும். இடைக்காலத் தடையாணை பெறப்படாவிட்டால் அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால், அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னருடைய ஆட்சி அமைந்த நேரத்தில் மாண்புமிகு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆளுநராக இருந்தார்கள். அவர்கள் அந்த வரியை வசூல் செய்வதைத் தள்ளிப் போட்டார்கள். அதற்கு அவர்கள் கோப்பிலே எழுதிய காரணம், 'உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகவே, இப்போது வசூலிக்க வேண்டாம் என்று திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் எழுதிவிட்டார்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அப்படி எழுதிவிட்டார்கள். எழுதிவிட்ட பிறகு, தடை கிடையாதே என்று எடுத்துச் சொல்லியும்கூட, அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல், எப்படியோ வழக்கு இருக்கிறது, வழக்கு முடியட்டும் என்று அவர்கள் எழுதிவிட்டார்கள்.

அதன் பிறகு, 1991ஆம் ஆண்டு புதிய ஆட்சி வந்தது. அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய தலைமையிலே புதிய ஆட்சி அமைந்தது. அப்படி அமைந்தபோது கவர்னர் அவர்களால் இதை வசூலிக்க வேண்டாம் என்று குறிப்பிடப் பட்ட அந்தக் கோப்பு, உடனடியாக முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நிதியமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 31.7.1991ல் கையெழுத்திட்டு அந்தக் கோப்பினை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தார்கள். முதலமைச்சர் அந்தக் கோப்பைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம், 4 மாதங்கள்

19 நாட்கள் கழித்து அதிலே கையெழுத்திட்டார்கள். 57 கோடி ரூபாய் வசூல் ஆகவேண்டிய ஒரு கோப்பில் நாவலர் நெடுஞ் செழியன், நிதியமைச்சர் அவர்கள் உடனடியாகக் கையெழுத்திட்டு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பியதற்குக் காரணம் கவர்னர் இப்படிச் சொல்லியிருக் கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று ஒரு Information அவருக்கு அனுப்புகிறார். ஆனால் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், ஒரு வருடம், 4 மாதம், 19 நாள் கழித்து, எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்காமல் அந்தக் கோப்பிலே கையெழுத்து போடுகிறார். ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால், அந்த விற்பனை வரி 57 கோடி ரூபாய் வசூல் ஆகாமலே இருந்துவிடுகிறது.

இப்போது மீண்டும் 1996 ல் நாம் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தக் கோப்பு எங்கெங்கோ சுற்றி, கடைசியாக வேறு வழியில்லாமல் என்னிடத்தில் வந்து சேர்ந்தது. நான் உடனடியாக அந்த நிலுவை வரியை வசூலிக்க வேண்டுமென்று ஆணையிட்டேன. ஏனென்றால், உச்சநீதிமன்றத்தினுடைய தடையில்லை; வசூலிப்பதற்குத் தடை இல்லாதபோது வசூலித்தால் என்ன என்று 57 கோடி ரூபாயை வசூலிக்க ஆணை பிறப்பித்தேன். ஆணை பிறப்பித்தபிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்துவிட்டது. அந்த வரியை வசூலிக்கலாம். உற்பத்தியாளர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்று வந்துவிட்டது. ஆனால், உற்பத்தியாளர்கள் தற்போது உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து City civil Court-ல் ஒரு தடையாணையைப் பெற்று இருக்கிறார்கள். அதை எதிர்த்து நாம் வழக்காடிக் கொண்டிருக்கிறோம். திருநாவுக்கரசு சொன்னதற்காக சொல்கிறேன்: எப்படி 57 கோடி ரூபாய் எவ்வளவு காலமாக வசூலிக்கப்படாமலேயே கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், இந்த அரசு அவைகளை எல்லாம் தள்ளிப் போடாமல், அந்த நிலுவைகளையெல்லாம் நிச்சயமாக வசூலித்து, இந்தப் பற்றாக்குறையை நிச்சயமாகச் சரிக்கட்டும் என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கின்றேன்.

இன்னொன்றை திருநாவுக்கரசு அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். 1995 – 96ல், 35 சதவிகிதமாக

இருந்த பொதுவான பணிகளின் செலவு இந்த 1998 – 99ல், 46 சதவிகிதமாக உயர்ந்து விட்டது என்று கூறினார். சொல்லும்போதே அவர்கள், 'செலவு' என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். ஆனால் அவர் இந்தச் சதவிகிதத்தை செலவினங் களிலே பார்க்கக் கூடாது. எப்போதும் வருவாய்க் கணக்கிலே மொத்த செலவினத்திலே இந்த சதவிகிதம் பார்க்க வேண்டும். ஆனால், அவர்கள் வருவாய்க் கணக்கிலே இந்த ரூபாய் 15 ஆயிரம் கோடியிலேயே பார்த்துவிட்டார்கள். செலவான ரூபாய் 18 ஆயிரம் கோடியிலேதான் சதவிகிதம், எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதுதான்; யார் யாருக்கு எவ்வளவு சதவிகிதம் செலவு செய்கிறோம் என்று பிரித்துப் பார்க்க முடியும். அப்படிப் பார்க்காமல் திருநாவுக்கரசு அவர்கள் வருவாய்க் கணக்கிலே மொத்த வருவாயிலிருந்து சதவிகிதக் கணக்கைப் பார்த்திருக்கிறார்கள். அதனால் இந்த அளவிற்கு அதிகமாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. உண்மையிலே பார்க்க வேண்டுமென்றால், 1995 – 96ல் பொதுவான பணிகளுக்கு ஒதுக்கீடு 31.24 சதவிகிதம், 1997 – 98ல் ஒதுக்கீடு 4686.64 கோடி ரூபாய், 31.46 சதவிகிதம். 1998 – 99ல் ஒதுக்கீடு 6937.9 கோடி ரூபாய். 38.44 சதவிகிதம். எனவே, பொதுவான பணிகளில் செலவினம் மொத்த வருவாய்ச் செலவில் 38.44 சதவிகிதம்தான். அவர் கூறியதுபோல், 46 சதவிகிதம் அல்ல. இருந்தாலும்கூட, அதிகரித்து இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன்; அதை மறுக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கான ஓய்வூதியத் தொகைக்கு மாத்திரம் 1.153 கோடி ரூபாய் ஒதுக்கியிருக் கிறோம். மத்திய அரசு, வங்கி இவைகளுக்கான கடன்களுக்கு வட்டி கொடுப்பதற்குத் தொகை 722 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மேலும், அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதத்தை 1.1.1996 என்று கணக்கிட்டு மாற்றி அமைப்பதால் ஏற்படும் நிலுவைத் தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கூடுதல் தொகையும் இந்தக் கணக்கின்கீழ் செலவு அதிகரிப்பதற்கான காரணம் ஆகும் என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். வெளியிலே அந்தக் குற்றச்சாட்டு ஏடுகளில் வந்திருக்கிறது. அதற்கு நான் பதில் சொல்லியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தவறான கருத்து, இந்த அரசைப் பற்றி வந்துவிடும். தவறான கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக, டாக்டர் கிருஷ்ணசாமி அதைச் சொல்லியிருக்கமாட்டார். ஒரு ஆர்வத்தின் காரணமாக, ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் செய்ய வேண்டும் என்ற உணர்வின் காரணமாக அவர் சொன்ன அந்தப் புள்ளிவிவரம். இந்த நிதிநிலை அறிக்கையில் 2.9 சதவிகிதம் மாத்திரமே ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. குறைந்தபட்சம் அவர்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு நான் அவருக்குத் தருகின்ற விளக்கம், ஆதிதிராவிட மக்களுக்கும் தருகின்ற விளக்கம் நம் வரவு–செலவுத் திட்டத்திலே, செலவினங்களில் அதிகமான செலவுகள் அரசு அலுவலர்கள், அவர்களுடைய சம்பளம் மற்றும் பணியாளர்கள் தொடர்பாக ஏற்படும் ஏனைய செலவுகள் என்பதை மறந்துவிடக்கூடாது. அரசு அலுவலர்கள் என்று கூறும்போது, அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அலுவலர்களும் அதிலே இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த வரவு–செலவுத் திட்டத்திலே அரசு அலுவலர் களுடைய ஊதியத்திற்கு ஒதுக்கீடு 10,300 கோடி ரூபாயாகும். மேலும், நிதிநிலை அறிக்கையிலே வட்டி, கடன் போன்ற செலவினங்களுக்காக சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. உணவு மானியம் மற்றும் ஏனைய மானியங் களுக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் படுகின்றது. இந்த மானியங்களால், ஆதி திராவிடர்களும் மற்றும் பழங்குடி மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும்தான் பயன் பெறுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, தனியாக 2.9 சதவிகிதம்தான், ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்று இல்லாமல், பொதுவாக ஒதுக்கப் படுகிற நிதி எல்லாம், செலவிடப்படுகிற நிதி எல்லாம் அவர்களுக்கும் சேர்த்துத்தான் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

இதைத்தவிர, மின்சாரம், நீர்ப்பாசனம், சாலைப் போக்குவரத்து போன்ற பல துறைகளில் செலவிடப்படும் செலவினங்களை ஆதிதிராவிடர்களுக்கு என்று பிரித்துக் காட்ட இயலாது. அதையும் சேர்த்துத்தான் செலவு செய்கின்றோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், நமக்கு நாமே திட்டமானாலும், சமத்துவபுரம் திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் போன்ற பல ஊரக வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள் போன்றவைகளில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களும் பயன் பெறுகிறார்கள். ஆதி திராவிடர்களுக்கு மாத்திரமே பயன் அளிக்கும் வகையில், செயல்படுத்துகிற திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாத்திரம்தான், நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. மொத்தத்திலே செலவழிக்கப் படுகிற தொகையில், ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கும், அவை நிச்சயமாகப் போய்ச் சேருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், கடந்த ஆளுநர் உரையில் பேசும்போது ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். இப்போது எனக்குள்ள ஒரு சிறிய சங்கடம் என்னவென்றால் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதான கட்சித் தலைவர்கள் எல்லாம் நான் பதில் உரையாற்றுகின்ற நாளிலேயே பேசுவதால், அதற்குரிய பதில்களை, விளக்கங்களை உடனடியாகப் பெற்று, அவையிலே அறிவிக்க முடியவில்லை. எனவே, அடுத்த தடவையாவது, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் போன்ற தலைவர்கள் எல்லாம் ஆற்றுகின்ற உரைகளை முதல் நாளே அமைத்து, நான் பதில் சொல்லுகின்ற நாள் என்று தனியாக விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், அவர்களுடைய கேள்விகளுக்கு, அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு, எடுத்துக்காட்டுகிற குறைகளுக்கு உடனடியாக அவையிலே விளக்கம் அளிக்க முடியாமல் போய்விடும் என்பதற்காகத் தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. அவர்கள் சொன்னார்கள். ஒரு காசோலையினுடைய பட்டியலை, ஒரு

தாளிலே ஒட்டப்பட்ட காசோலைகளை எல்லாம் எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். நானே அதைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தேன். மேல்மலையனூர் ஒன்றியம், வெள்ள நிவாரணம் வழங்கியதில், காசோலைகள் திருத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டு அது. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள பெருவளூர் கிராம விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்ட காசோலைகள், வங்கியிலே போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது என்றும், அதனால் விவசாயிகள் சிரமப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டார்கள். இதில் உண்மை என்னவென்றால், 1996லே ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணங்கள் வழங்க விழுப்புரம் மாவட்டத்திற்கு 8.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 8.49 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, மொத்தம் 1,86,136 விவசாயிகள் பயன் அடைந்து இருக்கிறார்கள். மேல்மலையனூர் ஒன்றிய வேளாண் வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். ராமச்சந்திரன், அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு மிகையாக, நிலம் இல்லாதவர்களுக்கும், தகுதியில்லாதவர் களுக்கும், பட்டாப் புத்தகத்தில் பெயர் இல்லாதவர்களுக்கும், காசோலைகளை வழங்கி, முறைகேடுகள் செய்துள்ளதாகப் புகார்கள் வந்ததைத் தொடர்ந்து, விசாரணை மேற்கொள்ளப் பட்டதில், 54,20,907 ரூபாய் மதிப்புள்ள 6,508 காசோலைகள் நிவாரணம் பெறுவதற்குத் தகுதியே இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த முறைகேடுகளுக்குக் காரணமான வேளாண்மை வளர்ச்சி அலுவலர் ராமச்சந்திரன், 31.3.1997 அன்றைக்கே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். சென்ற ஆண்டிலேயே அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். அதற்குப் பிறகு, இந்தக் குற்றச்சாட்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர்கள் அதை இங்கே வெளியிட்டதற்காக நன்றி. அதன் காரணமாக நடைபெற்ற ஒரு குற்றத்தை உணர்ந்து, அதற்கு எடுக்கப்பட்ட தண்டனையையும்

புரிந்துகொள்ள முடிந்தது. அங்கேயே பல பிரச்சினைகள், ரூ.3000 அங்கே வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் ஹைகோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். அந்த ஹைகோர்ட்டி னுடைய உத்தரவை அரசு செயல்படுத்துவதாகவும் வாக்குறுதி வழங்கியிருக்கிற விவரத்தை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக, இந்த மோசடி நிதி நிறுவனங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. பொதுமக்களால் வைப்பீடு – டெபாசிட் – செய்யப்படும் தொகைக்கு மிக அதிகமான அளவிலான வட்டி விகிதம் அளிப்பதாகவும், கவர்ச்சிகரமான பரிசுகளை அளிப்பதாகவும், விளம்பரம் செய்து, அதன்மூலம் பெரும் தொகையை வைப்பீடாகப் பெற்றுக்கொண்டு விளம்பரப்படுத்தியவாறு வைப்பீட்டாளர்களின் முதலீட்டையும், அதற்கான வட்டித் தொகையையும் அவர்களுக்கு திருப்பித் தராமல் நிதி நிறுவனங்களை மூடிவிட்டு அந்த அதிபர்கள் தலைமறைவாகி விட்டார்கள். இதையெல்லாம் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்தத் தகவல்களையெல்லாம் முற்றாக அறிந்து உடனடியாகச் செயல்படத் தொடங்கி அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டு, தனி நீதிபதிகளைக் கொண்டு தனி நீதிமன்றங்களைக் கொண்டு அவர்களையெல்லாம் விசாரித்து, உடனடியாக, இழந்தவர்களுக்கு அவர்கள் இழந்த சொத்துக்களைத் திருப்பித் தரவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு சிறப்பு நீதிமன்றம் 19.1.1998 முதல் செயல்படத் தொடங்கியிருக்கின்றது. மேற்சொன்ன சட்டம் தொடர்பான பிற மாவட்டங்களிலுள்ள எல்லா வழக்குகளையும் சென்னையிலே இயங்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய 14.2.1998 அன்று அனைத்து மாவட்ட நீதிபதிகளையும் உயர்நீதிமன்றம் கேட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, வழக்குகள் மாற்றப்பட்டு உடனடியாக சிறப்பு நீதிமன்றம் தன்னுடைய விசாரணையைத் தொடங்கும் என்றும். தவறு செய்தவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப் படுவார்கள் என்றும் இந்த மாமன்றத்திற்கு நான் உறுதி கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில குற்றச்சாட்டுகளை, போகிற போக்கில் – சில விஷயங்களை வேடிக்கையாகவும். அதேநேரத்தில் இப்படியும் இருக்குமா என்று வியப்படையக்கூடிய வகையிலே நம்முடைய தாமரைக்கனி அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்வது உண்டு. இந்த குண்டுவெடிப்பு சம்பந்தமாக. அன்றைக்கு விவாதம் வந்தபோது அவர்கள் சொன்னார்கள், ஆயிஷா என்ற அந்தப் பெண் ரூ.10 இலட்சத்தை அவருடைய தாயாரிடத்திலே கொடுத்து வங்கியிலே போட்டிருப்பதாகச் சொன்னார்கள். பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. நானும் உடனடியாக அதுபற்றி விசாரிக்கப்படும் என்று சொன்னேன். உடனடியாக காவல் துறைக்கு ஆணையிட்டு அதை விசாரிக்கச் சொன்னேன். அவர்கள் தந்துள்ள தகவலின்படி மம்சாபுரத்திலேயுள்ள யூ.கோ. வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை வங்கி ஆகியவற்றில் விசாரிக்கப்பட்டபோது, சங்கீதா பேரில் கணக்கு எதுவும் இல்லை என்றும், அவர்கள் பெற்றோர் பேரிலும் பணம் ஏதும் போடப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. மேலும், திருவில்லிபுத்தூரிலுள்ள 4 வங்கிகளிலும், சிவகாசிப் பகுதியிலே உள்ள 14 வங்கிகளிலும் இதுபற்றி விசாரணை நடத்தப்பட்ட போதிலும். இந்தத் தகவல் சரியானதல்ல என்று தெரிய வந்துள்ளது. சங்கீதாவினுடைய பாட்டனார், தந்தை, பெரியப்பா ஆகியோர் வங்கிகளில் பல்வேறு தேதிகளில் விவசாயத்திற்காகக் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்று மாத்திரம்தான் தெரிய வந்திருக்கின்றது. தாமரைக்கனி அவர்கள் (சிரிப்பு)– இதிலே சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. அவருக்குத் தெரியாமல் தகவல் வந்திருக்கலாம். தாமரைக்கனி இதற்கு மேலும் விவரம் தெரிவித்து, எந்த வங்கியிலே போட்டிருக் கிறார்கள் என்ற குறிப்பையும் சுட்டிக்காட்டுவாரேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்து அந்தத் தொகையும் மீட்கப்படும் என்ற விவரத்தை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் சொன்னார்கள். செண்பகத்தோப்பிலே கோவிந்தசாமி நாடாருக்குச் சொந்தமான ஒரு கிணற்றிலே வெடிபொருட்கள் போடப்பட்டுள்ளன என்ற ஒரு தகவல் இங்கே கூறப்பட்டது. அதையும் காவல்துறையை

விட்டு விசாரணை நடத்தச் சொன்னேன். அந்தக் கிணற்றில் வெடி பொருட்கள் எதுவும் இல்லை என்றும், அந்த கிணற்றின் சுற்றுப்புறங்கள் எல்லாம் சோதனை செய்யப்பட்டதில் வெடி பொருட்கள் எதுவும் இல்லை என்றும், கிணற்றின் சுற்றுச்சுவர் வலுவற்றதாக இருந்ததால் சுவர் இடிந்து கிணற்றுக்குள்ளே விழுந்ததாகத் தெரிவதாகவும் போலீசார் எனக்கு விவரம் கூறினார்கள். அதனாலே, கிணற்றுக்குள்ளே வெடிகுண்டு இல்லையென்று சொல்லமாட்டேன். எத்தனையோ கிணறுகளில் வெடிகுண்டு இருந்து கண்டுபிடிக்கப்படுகிறது. அவற்றை யெல்லாம் கண்டுபிடிப்பதற்காகத்தான் போலீசார் இன்றைக்கு அயராத முயற்சிகளிலே ஓய்வு இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். எனவே, வெடிகுண்டு கண்டுபிடிப்பதே இன்றைக்கு ஒரு பெரிய குற்றம் என்று அரசியல்வாதிகளால் நாட்டிலே பேசப்படுகிறது. வெடிகுண்டுகளைப் போலீசார் கணடுபிடித்தார்கள். கேரளா வரையிலும் சென்று அங்கே உள்ளவர்களையெல்லாம் கைது செய்தார்கள். இந்த வெடிகுண்டு தீவிரவாதத்திற்கு யார் யார் காரணமோ அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள் என்று பின்னப்படு கின்ற சதிவலையை நல்லமுறையிலே ஆராய்ந்து அறிவித்துக் கொண்டிருக்கிற போலீசாரைப் பாராட்டுவதற்குப் பதிலாக, அவர்கள்மீது குறை சொல்லப்படுகிறது. எங்கு பார்த்தாலும் குண்டுகளா என்று கேட்கிறார்கள். எடுக்காவிட்டாலும் குற்றம்; எடுத்தாலும் குற்றம் என்ற நிலையிலே இன்றைக்கு அரசியல் போய்க் கொண்டிருக்கிறது. நான் அதைப்பற்றி யெல்லாம் விரிவாகப் பேசவிரும்பவில்லை. இந்த அவையிலே அதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கின்றோம். ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் பேசினார்கள். அதேபோல, நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். அப்பாவி முஸ்லீம்கள் எல்லாம் இந்த விவகாரத்திலே கைது செய்யப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி வருகின்ற புகார்கள், குற்றச்சாட்டுகள், உடனடியாகக் கவனிக்கப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள்.

நம்முடைய நண்பர் அப்துல் சமது அவர்கள்கூட ஓர் உருக்கமான, கடிதத்தை எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அப்பாவிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற செய்தியை அதிலும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். வேறு சில இஸ்லாமியப் பெரியவர் களும் எனக்குத் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் இதைத் தெரிவித்திருக்கின்றார்கள். அன்று மிகுந்த உணர்ச்சி யோடு, உருக்கத்தோடு, லத்தீப் அவர்கள் இங்கே பேசினார்கள். அதே உணர்ச்சியும், உருக்கமும் எனக்கும் உண்டு என்பது அவர்களுக்கும் தெரியும், இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். இதுபோன்ற குற்றவாளிகளை, தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்காகக் காவல் துறையினர் ஈடுபடுகிற நேரத்தில் சிலநேரங்களில் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நல்லவர்கள் கூடச் சிக்கி விடுவது உண்டு. விவரம் தெரிவிக்கப்பட்டால், உண்மை உணர்ந்தால், அவர்கள் உடனடியாக விடுவிக்கப் படுவார்கள். திருச்சி சிறையிலேகூட, அறந்தாங்கி பகுதியைச் சேர்ந்த 5,6 இளைஞர்கள் அங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அன்று மாலையே உடனடியாக திருச்சி சிறைச் சாலைக்குத் தொடர்புகொண்டு, காவல் துறைக்குத் தொடர்பு கொண்டு, அவர்களை விடுவிக்கச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கின்றேன் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அப்பாவிகளைத் துன்புறுத்த வேண்டுமென்பதில்லை. எனக்கு அல்ல, திராவிட இயக்கத்திற்கு, இந்த இயக்கத்தை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கு, பெரியார் வழிவந்து இந்த இயக்கத்தை வழி நடத்திய தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, அவர் வழி நின்று இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டு இருக்கின்ற எங்களுக்கெல்லாம், சிறுபான்மை சமுதாயத்தின்மீது, இஸ்லாமியர் என்றாலும், கிறிஸ்துவர் என்றாலும், இத்தகைய சிறுபான்மை சமுதாயத்தினர் மீது உள்ள அக்கறையும், அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வமும் யாரும் உணராதவைகள் அல்ல. என்னைப் பொறுத்தவரையிலே, இளமைக் காலத்திலேயே திருவாரூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக்

மகாநாட்டிற்குத் தொண்டர் படைத் துணைத் தலைவனாக இருந்தவன் நான். தாருல் இஸ்லாம் பத்திரிகையை அன்றைக்குத் தவறாமல் வாங்கிப் படிக்கக் கூடியவன் நான். அறிஞர் அண்ணா அவர்களையும், நம்முடைய பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் நான் முதன்முதலாக திருவாரூர் விஜயபுரத்தில் நடைபெற்ற சிக்கந்தர் விழாவில்தான், ஒரு முஸ்லீம் பெருமகனாருடைய விழாவிலேதான் அவர்களைச் சந்தித்தேன். பேராசிரியரை அழைத்து வந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவனாக இருந்த பேராசிரியரை அண்ணா அவர்கள் அங்கே அறிமுகப்படுத்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயிருந்து ஒரு மாணவனை அழைத்து வந்திருக்கிறேன். எனக்கு முன்பு அவர் பேசுவார் என்று சொல்லி, அவரைப் பேசச் சொன்னார்கள். அந்த சிக்கந்தர் விழாவிலே தான் நான் அண்ணாவைச் சந்தித்தேன். பேராசிரியரைச் சந்தித்தேன். இப்படி இளமைக்காலம் தொட்டு இந்தத் திராவிட இயக்கத்திலே உள்ளவர்களுக்கு, இஸ்லாமிய சமுதாயமானாலும், கிறிஸ்துவ சமுதாயமானாலும், சிறுபான்மை சமுதாயத்தினிடத்திலே ஓர் அன்பு அனுதாபம், ஆதரவு மனப்பான்மை என்றைக்கும் உண்டு. அதற்காக, பெரும்பான்மை சமுதாயமாக இருக்கின்ற இந்து என்று சொல்லப்பட்டாலும், சைவர் என்று சொல்லப்பட்டாலும், வைணவர் என்று சொல்லப்பட்டாலும் முஸ்லீம் அல்லாத மக்களிடத்திலே எங்களுக்குப் பற்று இல்லாமல் போய்விட முடியுமா? முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எப்படி முஸ்லிம் அல்லாதவர்கள் மீது வெறுப்பு ஏற்பட முடியும்? சிலர்கூடக் கேட்டார்கள்; அங்கே போய் கஞ்சி குடிக்கிறாயே நாங்கள் கூப்பிட்டால், கணபதி விழாவிற்குக் கூப்பிட்டால் கொழுக்கட்டை சாப்பிட வருவாயா என்று கேட்டார்கள். கூப்பிட்டுப் பாருங்கள் வருகிறோமா இல்லையா என்று, நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல கொழுக்கட்டையாக இருந்தால் சாப்பிட ஏன் மறுக்கப் போகிறோம்? (மேசையைத் தட்டும் ஒலி). கூப்பிடுவதில்லை. கூப்பிட்டால் வருவாயோ, வரமாட்டாயோ என்று எங்களை ஒரு பக்கம் தள்ளி விடுகிறார்கள். திராவிட முன்னேற்றக்

கழகமானாலும். திராவிட இயக்கமானாலும், திராவிடர் கழகமானாலும், நாங்கள் சிறுபான்மைச் சமுதாயப் பிரச்சினைகளிலே இன்றைக்கு மதச்சார்பற்ற அரசு வேண்டும், மதச்சார்பற்ற கொள்கை வேண்டும் என்று சொல்கின்ற இங்கேயிருக்கின்ற யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும், என்ன சொல்கிறோம்? சிறுபான்மையினர், பெரும்பான்மை சமுதாயத்தை மதித்து நடக்க வேண்டும். அதேபோல், பெரும்பான்மை சமுதாயத்தினர், சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்து, ஆதரித்து, அனுதாபம் காட்டி நடக்க வேண்டும். இப்படி இருவருமே நடந்துகொண்டால் பிரச்சினையே கிடையாதே. எனவேதான், இந்தக் குண்டு வெடிப்புகள் ஏற்படுவதற்கான மூலக்காரணங்களையெல்லாம் இன்றைக்கு நான் ஆராய்ந்து கொண்டிருக்க விரும்பவில்லை. அதைப்பற்றி ஐ.ஜி. தலைமையில், ஒரு திறமையான ஐ.ஜி. தலைமையிலே வெகு தீவிரமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. பல குற்றவாளிகள் பிடிபட்டிருக்கின்றார்கள். நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதை ஏன் முதலிலேயே செய்யவில்லை என்று கேட்கின்றார்கள். எத்தனையோ காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதே இடத்திலேதான் அண்ணா அவர்கள் நின்றுகொண்டு சொன்னார்கள். சில காரியங்கள் மின்னல் வேகத்திலே நாட்டிலே நடைபெற்று விடுகின்றன. மின்னல் எப்போது தோன்றும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அப்படித் தோன்றிய நிகழ்ச்சிகளை அவை நடைபெற்ற பிறகு இனித்தோன்றாமல் இருப்பதற்காக நாங்கள் சென்று நடவடிக்கை எடுக்கிறோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். கோவையிலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்று இருந்ததால் இந்த அவையிலே விளக்கியிருக்கின்றேன். மத்தியப் புலன் ஆய்வுக் குழுவின் சார்பாக எங்களுக்குத் தகவல் வந்தது. அதற்கு முன்பே மாநிலப் புலன் ஆய்வுக் குழு இந்தத் தகவலை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. இப்படி வரிசையாக வந்த தகவல்களை எல்லாம் நாங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பியிருக்கின்றோம். கோவை மாவட்டத்திற்கும், கோவை

மாநகரத்திற்கும் அனுப்பியிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து, எல்லா மாவட்டங்களிலுமுள்ள போலீஸ் அதிகாரிகள் ஆங்காங்குள்ள குண்டுகளை எல்லாம் சோதித்து, சேகரித்து, அதனுடைய கணக்கு விவரங்களை எல்லாம் அனுப்பி, வைத்திருந்தவர்களை எல்லாம் கைது செய்து. அவர்கள் மீதெல்லாம் வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால், கோவைக்குப் பல கடிதங்கள் எழுதியும்கூட, பல தாக்கீதுகள் அனுப்பியும்கூட, தொலைபேசியிலே நானே நேரிலே பேசியும் கூட கோவையிலே உள்ள அதிகாரி தவறிப்போய் அப்படி குண்டு எதுவும் இல்லை என்கின்ற செய்தியை எழுத்துபூர்வமாகத் தருகிறார் என்றால், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா, வேண்டாமா? அங்கேயும் முதலமைச்சரே போய், ஏன் குண்டைத் தேடிப் பார்க்கவில்லை, முதலிலேயே உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது என்று கேட்டால். அது வேண்டும் என்றே அரசியல் நடத்துகின்ற பாங்கே தவிர வேறு அல்ல. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான், நம்முடைய நண்பர் தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்த ஆயிஷா பற்றிய தகவல், மேலும் விவரங்கள் இருந்தால் அவர் அதைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிட்டால், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், ஆயிஷாவை விரைவிலே பிடிப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளிலும் நம்முடைய காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றியது பற்றிய முடிவுகளை, ஒருசில விளக்கங்களை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தால், அளிக்க விரும்புகின்றேன். நான் அரசு அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள், அவர்களுடைய பிரதிநிதிகளை எல்லாம் தனித்தனியாகவும், ஒன்றாகவும் அழைத்து வைத்து, 2 நாள், கிட்டத்தட்ட 8 மணி நேரம் அவர் களோடு பேசி, அவர்கள் ஏற்றுக்கொண்ட வகையிலேதான் இந்த அவையில் நான் அந்த அறிவிப்பை நிதிநிலை அறிக்கையிலே செய்திருக்கிறேன். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கணேசன்

அவர்கள் இங்கே பேசும்போது, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுடைய வேதனைகளையும், இந்த நேரத்திலே இவர்களுக்கெல்லாம் இவ்வளவு ஊதிய உயர்வு தருகிறோமே என்கின்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்கள். வெளிப்படுத்திவிட்டு இன்னொன்றைச் சொன்னார்கள். இவ்வளவு ஊதியத்தைப் பெறுகின்ற அரசு அலுவலர்கள் ஒழுங்காகச் செம்மையாகப் பணியாற்ற வேண்டாமா, தவறு செய்கிறார்களே என்று கேட்டுவிட்டு மிக ஜாக்கிரதையாக 'நான் எல்லோரையும் சொல்லவில்லை' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அந்தக் கருத்தோடு ஒத்துப் போகிறேன். ஆனால் ஒன்று, திட்டங்களுக்குச் செலவு குறைவு. அரசு ஊழியர்களுக்கு ஊதியம் அதிகம் என்று யாரும் எண்ணிக் கொள்ளக்கூடாது. திட்டங்களும், அரசு ஊழியர்களும் சேர்ந்துதான் இருக்கிறார்கள்.

என்னுடைய வீட்டுக்கொல்லைப்புறத்திலே ஒரு கிணறு வெட்டுகிறேன் என்றால் அதற்காக நான் 10,000 ரூபாயைச் செலவழிக்கிறேன் என்றால், அந்த 10,000த்தைத் தூக்கிக் கொண்டு போய் கொல்லையிலே போட்டால் கிணறு வந்து விடாது. அந்தக் கிணறு தோண்டுவதற்கு ஆள், செங்கல்லை அடுக்குவதற்கு ஆள், அந்தச் செங்கல் அடுக்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு கிணற்றிலே சகடை போடுவதற்கு ஆள், கயிறு வாங்க ஆள், அதிலே குடத்தைத் தொங்கவிட்டு தண்ணீர் எடுக்க ஆள் என்று இத்தனை ஆட்கள் வேண்டும். அவ்வளவு பேர்களுக்கும் சம்பளம் கொடுத்தால்தான் கிணற்றுக்குள்ளே இருக்கிற தண்ணீர் வெளியே வரும். எனவே, இந்த அரசு ஊழியர்கள், அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் என்பது, ஒரு கிணறு தோண்டுவதற்கு நம்முடைய கொல்லையிலே நாம் முயற்சி எடுக்கும்போது, பணத்தைப் போட்டால் எப்படி கிணறு வந்துவிடாதோ, பணத்தை யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் கிணறு உருவாகுமோ, அதைப்போல அரசு ஊழியர்களுக்குத் தொகையைத் தருகிறோம். அதை, அவர்கள் சில நேரங்களிலே கொஞ்சம் அதிகமாகக் கேட்கிறார்கள். அது அவர்களுடைய உரிமை. மத்தியிலே உள்ள அரசு கொடுப்பதைப்போல எங்களுக்கும் கொடு, என்று ஒரு கோரிக்கையை வைத்து நீண்டநாள் போராடினார்கள்.

1989 ஆம் ஆண்டிலே இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, மத்திய அரசைப்போல மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்படத் தொடங்கியது. இந்த அரசு தான், தமிழகத்திலே முதன் முதலாக அந்தப் பணியைச் செய்தது என்பதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதற்குப் பிறகு இப்பொழுது இந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளைச் செயல்படுத்துவதிலும் மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றும் என்ற உறுதிமொழியை இந்த அவையிலே நான் அறிவித்திருந்தேன். அதற்கு ஏற்ப, மத்திய அரசின் ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கும்போது ஒருசில பிரிவுகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு தமிழகத்தில் தற்போது வழங்கப்படும் ஊதியம், மத்திய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைவிட அதிகம் என்பதை மறந்து விடக்கூடாது. அது அவர்களுக்கே தெரியும். சில ஊதியங்கள் மத்திய அரசு வழங்குகின்ற ஊதியத்தைவிட மாநில அரசு ஊழியர்களுக்கு அதிகமாக இருக்கிறது. எனவே, மத்திய அரசு அலுவலர் ஊதிய விகிதத்தை அப்படியே நாமும் கடைப்பிடித்தால், அவர்கள் தற்போது பெற்றுக் கொண்டிருக்கிற ஊதியத்தைவிடக் குறைவாகப் பெறக்கூடிய நிலைமை ஏற்படும். மத்திய அரசு ஊதியத்தையே தருகிறோம் என்று சொன்னால், இப்போது அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய ஊதியத்தைவிடக் குறைவாகத்தான் பெறுவார்கள்.

இன்னும் ஒன்று. மத்திய அரசு ஊதியங்களை மாற்றியமைக்கும் போது ஒருசில பதவிகளுக்கு உயர் அளவு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசில். அதை இங்கே பின்பற்றினால் இங்கே ஏற்கெனவே இருக்கின்ற சமன்பாடு குந்தகப்படும். அதற்கு ஒரு குறை ஏற்பட்டு விட்டதாக மற்ற அரசு அலுவலர்கள் போர்க்கொடி தூக்குவார்கள். எனவேதான் இவற்றை எல்லாம் குறித்து அலுவலர்களிடமும், ஆசிரியர்களிடமும் அந்தப் பிரதிநிதி களிடமும் விளக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டது. இதை யெல்லாம் கருத்தில் கொண்டுதான், ஊதிய விகிதங்களை மாற்றியமைக்கும் போது Scale to Scale, Pay Scale to Pay Scale

என்ற அந்த அடிப்படையில் இவை திருத்தியமைக்கப்பட்டன. ஒன்றை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இப்படி மத்திய அரசின் இந்த ஊதிய விகிதங்களை இந்தியாவிலேயே நிறைவேற்றி யுள்ள மாநிலங்கள் குஜராத், இராஜஸ்தான், யூ.பி. மூன்றும் தான். அடுத்து நம்முடைய மாநிலம். இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஊதிய விகிதங்கள், இப்போது மத்திய அரசைப் போல வழங்கப் படவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதுமாத்திரம் அல்ல, தமிழ்நாட்டில்தான் ஊதிய விகிதங்களில் கூட, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைத் திட்டமும் இங்கே தான் இருக்கிறது. அதுவும் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்ற உறுதியை நான் அந்தப் பிரதிநிதிகளிடம் வழங்கியிருக்கிறேன். எனவே, இதன் காரணமாக, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் இந்த ஊதிய உயர்வால் ஆண்டு ஒன்றுக்கு 1,250 கோடி ரூபாய் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. 1.6.1988 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் முன்பு வழங்கினோம்; அதைப்போல இப்போதும் 1998லிருந்து வழங்குகிறேன். என்று சொல்லிப் பார்த்தேன். 1988லிருந்து 1998, 10 ஆண்டுகள். இதையெல்லாம் சொல்லி, வாய் ஜாலம் பேசி ஏமாற்ற வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுடைய உறுதியான பிடிவாதத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய கோரிக்கை யின்படி 1.1.1996 முதல், தேதி நிர்ணயிக்கப்பட்டு அந்த ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே 'arrears' பழைய பாக்கி, அதனால் ஏற்படுகின்ற பாக்கித் தொகை, 1996 என்றால் இந்த 2 ஆண்டுகளில் ஏற்படுகின்ற பாக்கித் தொகை இருக்கிறதே, அது சுமார் 2400 கோடி ரூபாய் ஆகும். அதை உடனடியாக தரமுடியாது என்று அவர்களிடத்தில் நீண்டநேரம் பேசி அவர்களும் நிலைமையை உணர்ந்து பி.எஃப். வைப்பு நிதியில் 60 சதவீதம், 1440 கோடி ரூபாய் வைப்பு நிதியில் வைப்பது என்றும், 40 சதவீதம், 960 கோடி ரூபாய், அவர்களுக்குக் கொடுப்பது, அதைக் கூட 2 தவணைகளாக இந்த ஆண்டு 20 சதவீதம், 480 கோடி ரூபாய்,

அடுத்த ஆண்டு 20 சதவீதம், 480 கோடி ரூபாய், என்று கொடுப்பது; எவ்வளவு சாமர்த்தியமாக இந்த நிதிநிலையைக் கையாண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் சொன்னார்களே. இதுதான் சாமர்த்தியம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித்தான் செய்ய முடிந்தது. எப்படி அந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள் என்பதற்கான விளக்கத்தை ஒரு சில உதாரணங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அலுவலக உதவியாளர்கள், அவர்களுடைய அடிப் படை ஊதியம் இதுவரை ரூ.750 முதல் ரூ.945 என்ற அளவில் இருந்தது. இனிமேல் அந்த அடிப்படை ஊதியம் ரூ.2550 முதல் ரூ. 3200 என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. அதாவது, ஓர் அலுவலக உதவியாளர் இதுவரை துவக்கத்திலே 2550 ரூபாய் ஒட்டுமொத்தமாக, அகவிலைப்படியும் சேர்த்து ஒட்டுமொத்த ஊதியமாக வாங்கிக்கொண்டிருந்ததற்கு மாறாக, இனி 3222 ரூபாய் ஊதியமாக அதாவது 642 ரூபாய் அதிகமாக பெறலாம். ஆயிரம் என்று சொன்ன உடனே எல்லோரும் ஆஹா என்றார்கள். 642 ரூபாய் அதிகமாகப் பெறலாம். இதுவே அதிகத் தொகைதான். நம்மைப் பொறுத்தவரையில். அவர்களுக்குச் சிறிய தொகையாக இருக்கலாம். கொடுப்பவர்களுக்கு இது பெரிய தொகை. அந்த அலுவலக ஊழியரே உச்ச நிலையில் இதுவரையிலே 3160 ரூபாய் ஒட்டுமொத்தமாக ஊதியம் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 4021 ரூபாய். அதாவது. 861 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். ஃபர்ஸ்ட் கிரேடு கான்ஸ்டபிள் –முதல் நிலைக் காவலர்களுடைய அடிப்படை ஊதியம் இதுவரை இருந்தது, 950 இலேயிருந்து 1,500 வரையில். இவர்களுக்குத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம். அகவிலைப் படியெல்லாம் சேர்த்துத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இவர் களுக்குத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் 3050லிருந்து 4590.

முதல் நிலைக் காவலர் ஒருவர் ஆரம்ப நிலையில் இதுவரை அனைத்துப் படிகளையும் சேர்த்துப்பெற்று வந்த 3174 ரூபாய் என்பதற்கு மாறாக இனி 3852 ரூபாய் ஊதியமாக – அதாவது 678 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

முதல் நிலைக் காவலரே, உச்ச நிலையிலே இது வரையில் 4915 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 5712 ரூபாய், அதாவது 797 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

இளநிலை உதவியாளர், தட்டச்சர், தொலைபேசி இயக்குபவர், ஓட்டுநர், மகப்பேறு உதவியாளர் போன்றவர் களுக்கு இதுவரை இருந்துவந்த அடிப்படை ஊதியம் 975 லேயிருந்து 1660. இவர்களுடைய திருத்திய ஊதிய விகிதம் 3200 முதல் 4900 வரையில். இதுவரை இவர்கள் ஒட்டு மொத்தமாகப் பெற்று வந்தது 3245 ரூபாய். இனி அவர்கள் பெற இருப்பது 4021 ரூபாய். அதிகமாக 776 ரூபாய் பெறுவார்கள்.

தலைமைச் செயலக உதவியாளரின் அடிப்படை ஊதியம் இதுவரை 1100 முதல் 1660 வரை. தற்போது திருத்திய ஊதிய விகிதம் 3625 முதல் 4900. மொத்தமாக இவர்கள் இதுவரை பெற்று வந்த 3617 ரூபாய் என்பதற்குப் பதிலாக, இனி 4501 ரூபாய். அதாவது 884 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

உச்சகட்டம் என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் என்றால், அவர்கள், அதிக சர்வீஸ் – அதிக சர்வீஸ் எடுத்தவர்கள் உச்சகட்ட ஊதியம் பெறுவார்கள். அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டேன்.

அமைச்சுப் பணி உதவியாளர், இடைநிலை ஆசிரியர், வருவாய் ஆய்வாளர், உதவி வேளாண்மை அலுவலர், தலைமைக் காவலர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்து வந்த ஊதியம் 1200 முதல் 2040 வரை. திருத்தப்பட இருக்கும் ஊதிய விகிதம் 4000த்திலிருந்து 6000 வரை.

அதாவது, இவர்களெல்லாம் ஆரம்ப நிலையில் இதுவரையில் மொத்தமாக மாதம் ஒன்றுக்கு 3964 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 4985 ரூபாய் பெறுவார்கள். முன்பு பெற்றதைவிட 1021 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

இதே பதவியிலே இருப்பவர்களுக்கு உச்சகட்டத்தில் இதுவரை 6676 ரூபாய் பெற்றதற்கு மாறாக 7680 ரூபாய், அதாவது 1004 ரூபாய் மாதம் ஒன்றுக்கு அதிகமாகப் பெறுவார்கள்.

பட்டதாரி ஆசிரியர், ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர், தலைமைச் செயலக முதுநிலைத் தட்டச்சர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்து வந்த ஊதியம் விகிதம் 1400லேயிருந்து 2600. தற்போது திருத்தப்பட்ட ஊதிய விகிதம் 5000–த்திலிருந்து 7800. மொத்த ஊதியமாக இவர்கள் மாதம் ஒன்றுக்கு 4613 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக 6350 ரூபாய், அதாவது 1737 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

கிராம உதவியாளர்கள் போன்றவர்கள் ஊதியமும் குறைந்தபட்சம் 40 சதவீதம் ஊதிய உயர்வு என்றவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

உதாரணமாக, கிராம உதவியாளர்கள் ஊதிய விகிதம் தற்போது 600லேயிருந்து 750 என்பதிலேயிருந்து ரூபாய் 1800 முதல் 2240 என்று மாற்றியமைக்கப்படும். அதாவது, கிராம உதவியாளர்கள் மாநகரத்திலே பணிபுரிபவர்கள் கூடுதலாக மாதம் ரூபாய் 397–ம், கிராமத்திலே பணியாற்றுபவர்கள் கூடுதலாக மாதம் 252–ம் பெறுவார்கள்.

பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களான சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், தற்போது ரூபாய் 200 முதல் 400 என்ற ஊதிய விகிதத்தில் இருக்கின்றார்கள். இவர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதமாக ரூபாய் 600 முதல் 1100 வரை வழங்கப்படும்.

இதிலேயிருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் ஏதாவது இருக்குமேயானால், முரண்பாடுகள், குறைபாடுகள் இருக்குமேயானால், அதற்காக One Man Commission என்ற ஒன்று அமைக்கப்படுகிறது. அந்தக் கமிஷன் மூலமாகக் குறைபாடுகளைச் சொல்லி மேலும் திருத்தங்களைச் செய்து கொள்ளலாம் என்ற உறுதியையும் இந்த அவைக்கும். அரசு ஊழியர்களுக்கும் நான் வழங்குகின்றேன்.

சமூக நீதி, இந்த ஆண்டு சுதந்திரப் பொன் விழா ஆண்டு என்ற காரணத்தினாலும், மொழிக் காவலர்கள், தேசத் தியாகிகள் இவர்களையெல்லாம் கௌரவிப்பதற்காக அவர்களுக்கு ஓய்வூதியத் தொகையை 3 ஆயிரம் என்றும், அவர்களுடைய வாரிசுகளுக்கு 1500 என்றும் ஆக்கியுள்ளதை யொட்டி, சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கும், அவர்களுக்குரிய மரியாதையை. சமூக நீதி அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு தரும் என்பதற்கு அடையாளமாகத் தான் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன். 1987ஆம் ஆண்டு அவர்கள் இந்தப் போராட்டத்திலே அவர்களுடைய உயிரைத் தந்தார்கள். அதற்குப் பிறகு, அவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத காரணத்தினால். அந்தத் தொகை வரவேண்டும் என்பதற்காக வழக்குப் போட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே அறிவிக்கும்போது எனக்கே தகவல் தெரியாது அந்த வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம். இருந்தாலும், நான் அறிவித்த பிறகு, அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக ஆணை பிறப்பித்து அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, ஒரு கோப்பு வந்தது. அந்தக் கோப்பில் வழக்கு விவரங்கள் எல்லாம் இருந்தன. அவர்களுக்கு வழக்கு போட்டுத்தானா பணம் தரவேண்டும்; அந்த வழக்கை எதிர்த்து இன்னொரு வழக்காடுவதா என்றெல்லாம் கேட்டுவிட்டு. அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று இருப்பதை – இதுவரையிலே, எனக்குக் கிடைத்த பட்டியலில் 20 பேர்களுடைய பெயர்தான் வந்திருக்கிறது. மற்ற பெயர்களையெல்லாம் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏ.க்கள் ஒன்று, இரண்டு. இரண்டின் எம்.எல்.ஏக்களும் இதிலே ஒன்றாக இருந்து (சிரிப்பு) இரண்டும் ஒன்றாக இருந்து அந்தப் பெயர்களையெல்லாம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, மொழிக் காவலர், தேசத் தியாகிகள் என்ற பட்டியலில் இந்தச் சமூக நீதிக் காவலர்களும் சேர்க்கப்பட்டு அவர்களுடைய குடும்பத்திற்கு 3 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கின்றேன். அது மாத்திரமல்ல. இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்னுயிர் நீத்த

தியாகிகளின் வாரிசுகளுக்கு, சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப் போலவும், மொழிப் போர்த் தியாகிகளை போலவும், சமநிலையிலே கருதி குடும்ப ஓய்வூதியமாக மாதம் 1500 ரூபாய் வழங்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்ற உறுப்பினர்கள் குறை. (மேசையைத் தட்டும் ஒலி) 1997-98ஆம் ஆண்டில் முதன் முதலாக, தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி களுக்கு ரூபாய் 25 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்ட தொகை 58.75 கோடி ரூபாய் ஆகும். நிதிநிலை அறிக்கையின்போது இத் தொகையை பல உறுப்பினர் களுடைய வேண்டுகோளுக் கிணங்க 25 இலட்சம் ரூபாய், என்பதை தொகுதிக்கு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன். ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையிலே 536 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்குமென்று குறிப்பிட்டிருந்தேன். இவ்வளவு பற்றாக்குறையா, இவ்வளவு பற்றாக்குறையா என்று திருநாவுக்கரசிலிருந்து. சுப்பராயனிலிருந்து, பழனிச்சாமி யிலிருந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து எல்லோரும் இவ்வளவு பெரும் பற்றாக்குறையா என்று அவர்களுடைய கவலையைத் தெரிவித்தார்கள். ஆனால், உங்களுக்கு வேண்டுமென்கின்ற போது மாத்திரம் எல்லோரும் சேர்ந்து கைத்தட்டுகிறீர்கள். (சிரிப்பு) இதிலே சென்னைக்கு நான் 36 இலட்சம் கொடுக்கிறேன். நான் 36 கொடுத்தால் முதலமைச்சர் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று ஸ்டாலின் கேட்டார். (சிரிப்பு) ஏற்கெனவே, நாடாளுமன்றத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் தரப்படுகிறது. அஃதன்னியில் நாம் சட்டமன்றம் சார்பாகத் தருகிறோம். இதையெல்லாம் நீங்கள் கூட்டிப் பார்க்க வேண்டும். சென்னைக்கு இவ்வளவு கொடுப்பதால், சென்னைக்கே நாம் தொகையை ஒதுக்கலாமா வேண்டாமா என்கிற எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும்கூட அதை மன்னித்து (சிரிப்பு) வேறு வழியில்லாத காரணத்தால். நீங்களும் கேட்டுவிட்ட காரணத்தினால் 30 இலட்சம் ரூபாய் என்பதை 35 இலட்சம்

ரூபாயாக வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்). என் நிலைக்கு இறங்கி – கருணாநிதி நிலைக்கு இறங்கியல்ல, நிதிநிலைக்காக இறங்கி, இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வரிகளைக் குறைப்பது பற்றியும், வரிகள் விலக்கப் பட்டது பற்றியும் அனைவரும் பேசியிருக்கிறீர்கள். நம்முடைய சி.பி.எம். கட்சியினுடைய உறுப்பினர் திரு.மணி அவர்கள் அதைப் பெரிதும் பாராட்டிவிட்டு, ஏழை எளியவர்களுக்காகச் செய்யப்பட்ட நல்ல காரியங்களை யெல்லாம் பாராட்டிவிட்டு, ஆக்கப்பூர்வமான பல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அவர்களைப்போலவே இங்கே உரையாற்றிய அத்தனை பேரும் தங்களுடைய தொகுதியினுடைய குறையை, அக்கா போன்றவர்கள் எடுத்துக்காட்டினாலும்கூட, அதேநேரத்திலே அவ்வளவு பேரும் இன்னும் சில வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதிலேயும், குறிப்பாக நிதிநிலை அறிக்கையிலே செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைக்கும் Man made fibre and yarn-க்கு விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைக்கப்பட்டது என்றும், அது கடந்த ஆண்டு எதிர்பார்த்ததற்கு மாறாக, வரி வசூல் குறைந்துவிட்ட காரணத்தால் விற்பனை வரி மீண்டும் 8 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்தேன். அதை அறிவித்தவுடனே, நம்முடைய சொக்கர் அவர்கள் அவை முடிந்து செல்கிற நேரத்திலேயே, நீங்கள் சரியாகக் கணக்குப் பார்க்கவில்லை என்று தெரிகிறது, சரியாகப் பாருங்கள் என்று சொன்னார்கள். தொடர்ந்து திரு. சுதர்சனம், எம்.எல்.ஏ. அவர்கள் பேசும்போதும், திரு.ஜி.பழனிசாமி அவர்கள் பேசும்போதும், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஒரு கடிதம் மூலமாக இந்த விவரங்களைத் தெரிவித்துள்ள நிலையிலும், திரு. ஐ. கணேசன் அவர்கள் பேசிய நிலையிலும், மற்றவர்களும் பேசிய நிலையிலும், இதை ஆராய்ந்தபோது, இந்த விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

1997 – 98 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது இதில் முந்தைய ஆண்டைவிட 50 இலட்சம் ரூபாய் குறைவாக இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், மாநிலங்களுக்கிடையேயான விற்பனைத் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தப் பிரிவிலே, அதிகமாக வரி செலுத்தும் நிறுவனமாகிய South India Viscose 1997-98ஆம் ஆண்டில் பெரும் பகுதி உற்பத்தி மேற்கொள்ளாத காரணத்தால் விற்பனை வரியிலே முழு அளவை எய்தவில்லை என்று அறியப்படுகிறது. மேலும் இந்த ஆண்டு உற்பத்தி தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ள காரணத்தால் இந்தப் பிரிவில் கூடுதல் வரி வருவாய் கிடைக்க வாய்ப்புமுள்ளது. எனவே, முன்னர் இருந்த வரி வருவாய் நிலையை எட்ட இந்த ஆண்டு வாய்ப்பு இருப்பதால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு சதவீத வரியையே மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து அமல் செய்ய இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தேங்காய், கொப்பரை, இதிலே ஒரு குழப்பம். தேங்காய்க்கா, கொப்பரைக்கா? இரண்டுக்குமா? அல்லது கொப்பரைக்கு மாத்திரமா? என்று. ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் அச்சடித்துவிட்டார்கள். அதனாலே தேங்காய்க்கு இல்லையா என்று ஒரு சந்தேகம் வந்தது. எனவே தேங்காய்க்கும் உண்டு; கொப்பரைக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே தேங்காய் என்பதற்குப் பக்கத்திலே 'கமா' இல்லாததாலும், நான் சொன்னபடி ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் இருப்பதாலும் இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மட்டுமா, தேங்காய்க்கும் பொருந்துமா என்ற சந்தேகத்தைப் போக்கும் வகையில், இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மாத்திர மல்லாமல் தேங்காய்க்கும் உண்டு என்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன். மேலும், நிதிநிலை அறிக்கையில் நம் மாநிலத்திலே விற்பனை செய்யும் தேங்காய் மற்றும் கொப்பரைக்குத்தான் வணிக வரி 1 சதவீதமாகக் குறைக்கப் பட்டிருந்தது. நமது மாநிலத்திற்குள்ளே மாத்திரம். அதற்குத் தான் ஒரு சதவீதம் என்று குறைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து

தேங்காய் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய், கொப்பரை வரி விகிதமும் 2 லிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாநிலத்திற்குள்ளேயும் ஒரு பர்சன்ட்; வெளியிலே விற்றாலும் ஒரு பர்சன்ட். (மேசையைத் தட்டும் ஒலி).

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் இந்த எண்ணெயோடு பருத்தி எண்ணெயும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜி. சம்பத், நம்முடைய திரு. சொக்கர், திரு. ராஜ்குமார் மன்றாடியார் போன்றவர்கள் எல்லாம் இதை வலியுறுத்தி எனக்குக் கடிதங்கள்கூட கொடுத்திருக்கின்றார்கள். சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், இதோடு பாமாயிலையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது ஜி.ஓ.வில் விடுபட்டுப் போய்விட்டதாக எனக்குத் தகவல். பாமாயிலையும் சேர்த்துக்கொள்ளலாம். மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது என்று அறிவித்திருந்தேன். இந்த விரிவிலக்கானது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இதுவரை அளிக்கப்படாத சலுகையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நம்முடைய திரு.தாமரைக்கனி எல்லாம் எதிர்த்து பட்ஜெட் கண்டனக் கூட்டமெல்லாம் நடத்தப்போகிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லவேண்டுமேயானால், சமையல் எண்ணெய்க்கு கர்நாடகாவில் 5 சதவீதம் வரியும், கேரளத்திலும், ஆந்திராவிலும் 9 சதவீத வரியும் தற்போது வசூலிக்கப்படுகிறது. பருத்திக்கொட்டையிலிருந்து தயாரிக்கப் படும் எண்ணெய், அரிசித் தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆகியவற்றுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அந்த இரண்டு எண்ணெய்களுக்கும் முழு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதிநிலை அறிக்கையில் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி 16 சதவிகிதத்திலிருந்து

4 சதவிகிதமாகவும். முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 1991ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் வரி கட்டவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குப் பரிந்துரை செய்தவர்கள் திரு.சுதர்சனம், திரு.ஆர்.ஆர். சேகரன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. ஞானசேகரன், திரு. ராஜ்குமார் மன்றாடியார். திரு. ஈஸ்வரன் மற்றும் பேராசிரியர் தீரன். இவர்களெல்லாம் பரிந்துரை செய்து பேசியிருக்கிறார்கள். ஆனால் கடந்த 1997 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்திருக்கிற ஆணையில், முத்திரைச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 16% வரி செலுத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த 16% வரியைத்தான் நிதிநிலை அறிக்கையில் 11% என்று குறைத்து நான் அறிவித்திருந்தேன், என்றாலும் இந்த மசாலாப் பொடிகளுக்கு வரியைக் குறைக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும், அதன் உற்பத்தியாளர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று, வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 4% என்றும், வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு 2% என்றும் வரி குறைப்பு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

சலவைக்குப் பயன்படுத்தப்படும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும், வணிகச் சின்னம்கொண்ட பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும் ஒரே விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது குறித்து பேராசிரியர் தீரன், செங்கை சிவம் இந்த அவையிலே கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையை ஏற்று சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலம் உட்பட, சலவை வெளுப்பானுக்கு Hand made laundary Brightner–க்கு 16% லிருந்து 4% ஆக வரி குறைப்பு

செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போதுதான் பொட்டு விஷயம் வருகிறது. (சிரிப்பு) நிதிநிலை அறிக்கை வெளிவந்த பிறகு, பொதுவாக விமர்சித்த கட்சித் தலைவர்கள் சிலரும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகள் பிரச்சினை பற்றிச் சொல்லவே இல்லை என்று சொன்னார்கள். எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. இந்த 49 பக்க நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 25 பக்கமாவது விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஒரே ஒரு ஆட்சி, அதை அறிமுகப்படுத்திய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் சொல்லி விட்டு, அதையெல்லாம் செய்தவர், இதைச் செய்யவில்லையே என்று சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு விவசாயிகள் பற்றி ஒன்றுமே இல்லை, விவசாயிகளைக் கைவிட்டுவிட்டார் என்று எல்லோரும் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல் விலைக்கு மேல் வேறு எந்த மாநிலத்திலும் கொடுக்காத பணம் குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய். அதை போனஸாகக் கொடுக்கக்கூடாது. திரு. ஜகஜீவன்ராம் உணவு அமைச்சராக இருந்தபோது, நான் முதலமைச்சராக இருந்தபோது கேட்டேன், அதிக விலை கொடுக்க வேண்டுமென்று, கொடுப்பதற்கு இடமேயில்லை என்று கண்டிப்பாகச் சொன்னார். இல்லை. கட்டாயம் தமிழகத்திற்குக் கொடுத்தே தீரவேண்டுமென்று சொன்ன போது, அவர் வேறு வழி சொல்லிக் கொடுத்தார். அந்த வழிதான் 'நீ போனஸாகக் கொடுப்பதை, வண்டிச் சத்தம், வாடகை என்று சொல்லி, கொஞ்சம் அதிகத் தொகையை உயர்த்திக் கொடு, பிரச்சினை வராது' என்று சொன்னார். அப்பொழுது ஆரம்பித்ததுதான் இது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு

35 ரூபாய் செலவுத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் நலன் கருதி, நெல்லை கொள்முதல் செய்யும்போது, தரக்கட்டுப்பாடு, 15 ரூபாய் தரக்கட்டுப்பாட்டுக்காக இருந்ததை 5 ரூபாயாக குவிண்டால் ஒன்றுக்கு குறைக்கப்பட்டிருப்பதும் விவசாயிகளுக்காகத்தான்.

நெல்லை கொள்முதல் செய்யும்போது இதுவரை 18% ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. விவசாயிகளுடைய நெல். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 20% ஈரப்பதம் இருந்தாலும் கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் விவசாயி களுக்காகத்தான்.

விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்க 926 நேரடிக் கொள்முதல் விற்பனை நிலையங்களை இந்த ஆண்டு ஏற்படுத்தினோம். எந்த ஆண்டிலும் இவ்வளவு நிலையங்கள் கிடையாது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் 88 கோடி ரூபாயும். வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு 9.85 கோடியும், வரும் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

டிசம்பர் 1996–லே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொழுது, 10,05,166 விவசாயிகள் துயர் துடைக்கும் பொருட்டு, 47 கோடியே 98 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதும் விவசாயிகளுக்காகத்தான்.

நவம்பர் 1997–ல் ஏற்பட்ட வெள்ளச் சேதாரங்களுக்காக நிவாரண நிதியாக 58.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2½ லட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில் குறைந்தபட்ச விலையாக ஒரு டன் கரும்புக்கு ரூ.660 எனவும், இன்னும் சர்க்கரை ஆலைகளால்

வழங்கப்படும் ரக மானியம், வாகன வாடகை மானியம் ரூ. 35–ஐயும் கணக்கில் எடுத்துக்கொண்டால் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.695–ம் அதிகபட்சம் ரூ.880–ம், சராசரியாக ரூ.765–ம் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயி களுக்குத்தான். கரும்பு விவசாயிகளுக்கு ஆயிரம் என்று சொன்னீர்களே, ஆயிரம் என்று சொன்னீர்களே என்றால், 5 வருடம் முடியவில்லையே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று சொன்னோம். ஆயிரம் வேண்டுமென்றால் 5 வருடம் முடியட்டும், முடியவிடுங்கள். (சிரிப்பு).

காவிரி டெல்டா பகுதிகளில், குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாக உள்ள காட்டாமணக்குச் செடிகளை அகற்ற, 2,384 ஹெக்டேர் பரப்பில் களைக்கொல்லித் தெளித்து, காய்ந்த இலைகள் அகற்றி எரிக்கப்பட்டது. இதற்காக 102 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. நீண்டகாலம் கிடப்பிலே போடப்பட்டிருந்த காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.10 கோடிக்கு மேற்பட்ட செலவிலான பணிகள் நேர்த்தியாக நடைபெற்றன. வருமாண்டிலும் அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடுவதற்கு முன்னர், பணிகள் முடிக்கப்படவுள்ளன. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய 4 மண்டலங்களிலே உள்ள 200 ஏரிகளில் தூர்வார 19.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இதுவும் விவசாயிகளுக்குத்தான்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் 2 ஆண்டுகளாக வறண்டு கிடந்த 22,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெற 7½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இதுவும் விவசாயி களுக்குத்தான்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலியும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.100–லிருந்து ரூ.150–ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சரி, போதாது திரு. பழனிச்சாமிக்கு இன்னும் என்ன என்று கேட்பார். தெரியும். தெரிந்துதான் இவற்றைச் சொல்ல விரும்புகிறேன், இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையிலே.

கடந்த பருவகாலத்திலே பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திலே கொண்டு அதற்கு ஒரு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி முழுவதும் ரத்து செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இந்த ஆண்டு இழப்பு 43 கோடியே 33 இலட்ச ரூபாய். (குறுக்கீடுகள்) இல்லை, இது தமிழ்நாடு முழுவதற்கும். இதனால் இழப்பு 43 கோடியே 33 இலட்ச ரூபாய். சில பேர் ஏமாந்து போய் வரி செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் நிலைமை என்ன என்று அக்காள் திருமதி பொன்னம்மாள் கேட்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நில வரியைச் செலுத்தியவர்களுக்கு. அவர்கள் செலுத்திய தொகை பற்று வைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அவர்கள் செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இவற்றைத் தவிர கூட்டுறவு வங்கிக் கடன். எதிர்பார்க்க வேண்டாம். இயலாமையைச் சொல்லப் போகிறேன். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் பெற்ற கடன்கள் மீதான இந்த ஆண்டுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதை அரசும் பரிசீலித்தது. 1994–ஆம் ஆண்டு, கடந்த ஆட்சியிலே, மாநில அரசு 'நபார்டு' வங்கியோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இத்தகைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வழியே இல்லை. அப்படி 1994ல் ஒப்பந்தம் பண்ணியிருக்கிறார்கள் 'நபார்டு' வங்கியோடு. அப்படி 'நபார்டு' வங்கியினுடைய ஒப்பந்தத்தினை மீறி வட்டியை நாம்

தள்ளுபடி செய்தால் 'நபார்டு' வங்கி வருமாண்டுகளிலிருந்து எந்த நிதி உதவியும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்காது. அதுதான் ஒப்பந்தத்தின் ஷரத்து. நான் நேற்றைய முன்தினம், இங்கே முதலமைச்சர் அறையில் உட்கார்ந்து கொண்டு 'நபார்டு'க்கு பலமுறை போன் செய்தேன், அதிகாரிகள் மூலமாக. தலைமைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர், அமைச்சர்களெல்லாம் உட்கார்ந்து கொண்டு, நான், வேளாண்மைத் துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் இவ்வளவு பேர்களும் உட்கார்ந்து கொண்டு, இங்கேயிருந்து பலமுறை போன் செய்து அவர்களைத் தொடர்பு கொண்ட போது, அவர்கள் நிச்சயமாக முடியாது என்று மறுத்து விட்டார்கள். அதை மீறிச் செய்தால், வட்டியைத் தள்ளுபடி செய்தால், 'நபார்டு' வங்கி, வரும் ஆண்டுகளிலேயிருந்து எந்த நிதி உதவியையும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தராது, இது ஒப்பந்தத்தில் இருக்கிற ஷரத்து. 1994–ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம். இந்த ஆண்டு வட்டியை மாத்திரமாவது தள்ளுபடி செய்ய அனுமதிக்க வேண்டுமென்று வங்கியினுடைய தலைவரோடு, தமிழக அரசினுடைய மூத்த அதிகாரிகளைப் பேசச் சொன்னேன். எனினும், 'நபார்டு' வங்கியினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, வேறு வழியின்றி, தமிழக அரசின் சக்திக்கு ஏற்றவகையில், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றியமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நீண்டகாலக் கடன்களுக்கும் இதுபோன்ற கால நீட்டிப்பு வழங்கப்படும். இதனால், விவசாயிகள் அபராத வட்டியாக சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, அன்றைக்குப்பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து கரும்பை எடுக்காத காலகட்டத்தில், விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பை அரவை செய்வதற்கு, தங்களுக்கு

வழங்கப்பட்ட மின் இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூபாய் ஐந்தாயிரமும், ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஐந்து ரூபாயும் கரும்பு விவசாயிகளிடமிருந்து தற்போது வசூலிக்கப் படுவதாக, நம்முடைய கலசப்பாக்கம் உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் தெரிவித்தார்கள். இதே கோரிக்கை, மேலும் பல விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, இனி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ஐந்தாயிரம் ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாயாகக் குறைத்து, ஒரு யூனிட் மின்சாரத்திற்குத் தற்போது வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் என்பதை ஒரு ரூபாய், இருபத்து ஐந்து காசு என்று குறைத்து வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு) மாதவரம் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி நம்முடைய சுப்பராயன் அவர்கள் கேட்கிறார்கள். பிறகு, தொழிலாளர் மானியத்திலே பேசுவதற்கு பிரச்சினையே இல்லாமல் போய்விடும். எனவே, அப்போது இது பற்றி, தாங்கள் மகிழத்தக்க முடிவை அறிவிக்கின்றேன் என்று கூறி. இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெண்ணெய்க்கு வரியை நீக்க வேண்டுமென்று கேட்டோம். தயவுசெய்து அதையும் நீக்கிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாலகிருஷ்ணனுக்கும், வெண்ணெய்க்கும் நெருங்கிய தொடர்பு! (சிரிப்பு). அதைப் பற்றி பிறகு யோசிக்கலாம்.



உரை : 28 **நாள் :** 27.3.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வழங்கியபோது, அவையிலே இருந்து அதைப் படித்து உணர்ந்து மகிழ்ந்த என்னுடைய அருமைத் தம்பி திரு. ஆல்பன் அவர்கள் அந்த நிதிநிலை அறிக்கைக்கு நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் இல்லையே என்கின்ற ஆழ்ந்த வேதனையோடு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து, ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட, சரியாகச் சொல்ல வேண்டுமானால் 34 பேர், கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் 8 அல்லது 9 மணி நேரத்திற்கு மேலாக கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ அலைகள், புயல்கள், இவற்றிற்கு இடையிலேகூட 34 பேர் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே தங்களுடைய வாகான கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்புப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அறிக்கை குறித்து, உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும், பாராட்டியும், பாராட்டுக்களுக்கு இடையே குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அரிய கருத்துக்களை எடுத்துரைத்தும் கடமையினை ஆற்றியிருக்கிறார்கள். பல பாராட்டுக்களை இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, என்ன காரணத்தினாலோ 'இது கையாலாகாத சர்க்கார்; இது கையாலாகாதவர்கள் தயாரித்த பட்ஜெட்' என்பதைப் போன்ற ஒரு வார்த்தையைச்

சொன்னார்கள். சட்டசபையிலே கையால் ஆகின்ற காரியங்கள் எதுவும் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு, ஐந்து நாட்களாக நாம் இங்கே பலத்த விவாதத்திலே ஈடுபட்டிருக்கிறோம். இருந்தாலும்கூட slip of the tongue என்பார்களே அப்படியோ, அல்லது உள்ளபடியே எண்ணியோ அவர் அந்தக் கருத்தைச் சொல்லியிருப்பாரேயானால், உள்ளபடியே திறமையாக, மேலும் ஆற்றலாக இன்னும் அறிவுபூர்வமாகச் செயல்படுவதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை வரவேற்க நான் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இங்கே உரையாற்றுகிறார் என்றால், அவர் இங்கே கூறுகிற அறிவுரைகள், கருத்துக்கள் இவையெல்லாம் என்னுடைய அன்பிற்குரிய நண்பர் திரு. மூப்பனார் அவர்களுடைய கருத்துக்களாகவே நான் ஏற்றுக்கொண்டு, அவற்றை இங்கே நான் செயல்படுத்தி வருகின்றேன். ஆனால், இந்த வார்த்தை, திரு. மூப்பனாருடைய வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தை அல்ல என்பதையும் நான் மிக நன்றாகவும் தெளிவாகவும் அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த விவாதத்தில், பல கருத்துக்கள் என்னுடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே பேசும்போது முதல்வர் இந்த அவையிலே இல்லாவிட்டாலும் கூட, எங்களுடைய பேச்சுக்களையெல்லாம் படித்துப் பார்க்கத் தவறமாட்டார் என்று குறிப்பிட்டார். அது உண்மை. உடல்நலம் இல்லாமல் நான் படுக்கையிலே இருந்த நேரத்தில்கூட அந்தக் கருத்துக்களை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். நேற்றைய தினமும் எல்லோரும் பேசியதை தொகுப்பாக எடுத்து படித்துப் பார்த்து விட்டுதான் என்னுடைய பதிலுரையைத் தயாரித்திருக்கின்றேன்.

நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள்கூட, தெனாலிராமன் கதையைச் சொல்லி இது நான் சொல்கின்ற கதையல்ல, முதலமைச்சர் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இங்கே சொன்ன கதை என்று சொல்லி எனக்கு Royalty கொடுக்காமலேயே (சிரிப்பு) அந்தக் கதையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். என்ன

காரணமோ சுப்பராயன் அவர்கள் பேசும்போது அழுத்தம் திருத்தமான கருத்துக்கள் எடுத்து கூறக்கூடிய ஆற்றல் படைத்தவர். எதிர்ப்பான கருத்துக்களை அவர் சொன்னாலும் கூட அவற்றை நான் ஆழ்ந்து கவனிப்பது என்னுடைய வாடிக்கை. காரணம் அந்த அளவிற்கு சொல் வேகம், சொல்லில் அழுத்தம் - சொல்கின்ற வார்த்தையில் ஒரு கனம் இத்தனையும் வாய்ந்த பேச்சு நண்பர் சுப்பராயன் அவர்களுடைய பேச்சாகும். ஆனால், அன்றைக்கு நான் அந்தப் பேச்சைக் கேட்டபோது - எங்கிருந்து கேட்டாய் என்றெல்லாம் என்னைக் கேட்கக் கூடாது - நான் கேட்டபோது, அவருடைய பேச்சில் 'தொங்கு சதை', 'மூச்சுத் திணறல்', 'கவர்ச்சித் திட்டங்கள்' போன்ற அவரே பிறகு நினைத்துப் பார்த்தால் இப்படியா பேசிவிட்டோம் என்று எண்ணக்கூடிய சொற்றொடர்களையெல்லாம் பயன்படுத்தி யிருந்தார். தொடக்கத்திலேயே மூச்சுத் திணறலோடு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். உண்மைதான். என்னுடைய நிலையை அவர் உணர்ந்ததற்காக நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றும், இன்றும் பெரிதும் மதிக்கத்தக்க ஒரு தலைவர் கலைஞர் அவர்கள். நான் மூச்சுத் திணறல் என்று சொன்னதனுடைய பொருள் பட்ஜெட் தாக்கலில், நிதிப் பற்றாக்குறையால் பட்ஜெட் மூச்சுத் திணறுகிறது என்று குறிப்பிட்டேன். மிக எச்சரிக்கையோடுதான் அதைக் குறிப்பிட்டேன் என்பதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் அதை முழுமையாக சொல்லி முடிப்பதற்குள் சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் அளித்துவிட்டார். அந்த விளக்கத்தையும் இந்த உரையிலே, என்னுடைய உரையோடு சேர்த்துக் கொள்கின்றேன். மூச்சுத் திணறல் ஏற்படுவது சில நேரங்களில் தோழமைக் கட்சிகளாலும் ஏற்படுகிறது. எப்படியென்றால் ஒரு வரியைப் போடும்போது, அந்த வரி கூடாது என்று சொல்வதும் தோழமைக்கட்சிகள்தான். ஏன் வருவாயைப் பெருக்கி நல்ல திட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்று கேட்பதும் தோழமைக்கட்சிகள்தான்.

சென்னை மாநகரத்தை ஏன் அழகாக வைத்திருக்கக் கூடாது, சிங்காரச் சென்னை, சிங்காரச் சென்னை என்று மேயர் கூறிக் கொண்டேயிருக்கிறாரே, ஏனோ சிங்காரச் சென்னை இன்னும் உருவாகவில்லை என்று கேட்பதும் எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல, தோழமைக் கட்சிகளும்தான் கேட்கிறார்கள். ஆனால், அதற்காக, கூவத்தையோ அல்லது பக்கிங்ஹாம் கால்வாயையோ, ஓட்டேரி நல்லாவையோ அழகுபடுத்த வேண்டும். ஆழப்படுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டும், சென்னையை நாகரிகம் மிகுந்த நகரமாக மாத்திரமல்ல. சுகாதாரம் மிகுந்த நகரமாக, கொசுக்கடி போன்ற தொற்று நோயைப் பரப்பக்கூடிய கிருமிகள் உற்பத்தி ஆகாத இடமாக மாற்ற வேண்டும் என்று விரும்பி அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, அதற்காக இப்போது அங்கு இருக்கின்ற குடிசைகளையெல்லாம் அகற்றி, அவர்களுக்கு வேறு மாற்று இடம் தருகின்ற முயற்சியிலே மாநகராட்சி மன்றம் ஈடுபடுகிற நேரத்திலும் மாநகராட்சிக்குத் துணையாக மாநில அரசு இருக்கின்ற நேரத்திலும்கூட, ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அங்கு வாழுகின்ற குடிசைவாசிகளை அழைத்துக் கொண்டு ஒரு ஊர்வலம் விடுகிறார்கள் என்றால், நான் அங்கு இருக்கின்ற குடிசைவாசிகளுக்கு எதிரானவன் அல்ல. அவர்களுக்கு மாற்று இடம் தரவேண்டும், அவர்கள் நல்லமுறையிலே வாழவேண்டும் என்கின்ற எண்ணம் உடையவர்கள்தான் நாம். ஆனாலும் நாலாயிரம், ஐந்தாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு வருகின்ற காரணத்தினாலே அந்த அழகுபடுத்துகின்ற காரியத்தை அரசோ அல்லது மாநகராட்சி மன்றமோ செய்யலாமா, செய்ய வேண்டாமா என்கின்ற மூச்சுத் திணறலுக்கு ஆளாக நேரிடுகிறது. மத்திய சர்க்காரால் மாத்திரமல்ல, மூச்சுத் திணறல் தோழமைக் கட்சிகளாலும் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கவர்ச்சித் திட்டங்களைப் பற்றியெல்லாம் அவர் சொல்லும்போது தொங்கு சதை என்று குறிப்பிட்டார். அவருக்கே உரிய சில வார்த்தைகள் உண்டு. இந்த அவையிலே எனக்கோ அல்லது பேராசிரியருக்கோ, மற்றவர்களுக்கோகூட

தோன்றாத, உச்சரிக்காத அந்த வார்த்தைகளை தனக்கென்று, அவருக்கு மாத்திரமே Copy right என்கின்ற அளவிற்கு அந்த வார்த்தைகளை அவர் பயன்படுத்துவார். இதிலே ஒரு நியாயமான உண்மை என்னவென்றால், எனக்கோ அல்லது அவை முன்னவர் பேராசிரியருக்கோ, அவர் குறிப்பிடுவதைப் போல தொங்கு சதை எதுவும் கிடையாது. (சிரிப்பு). நாங்கள் ஏற்கெனவே இளைத்த உருவங்கள்.

இந்த அமைச்சரவையிலே உள்ள நாங்கள் தயாரித்த இந்த வரவு செலவுத் திட்டத்தில், கவர்ச்சித் திட்டங்கள் எல்லாம் தொங்கு சதை என்று அவர் குறிப்பிட்டது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொன்னார். யாரோ சத்துணவு பற்றி குறிப்பிட்டபோதும், வேறு சில ஏழைகளுக்கு உணவு வழங்குதல் போன்ற செய்திகளைச் சொன்ன போதும் திரு. சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். அது என்ன காலையிலே சாப்பிட்டு அல்லது மாலையிலே சாப்பிட்டு மறுநாள் காலையிலே வெளியே வருவதுதானே என்று குறிப்பிட்டார்கள். விஞ்ஞான ரீதியாக எல்லாம் தெரிந்த சுப்பராயன் அவர்களுக்கு மாலையிலே சாப்பிடுகின்ற உணவோ அல்லது எதுவோ, அது உடலிலே ஊறி இரத்தமாக மாறி உடலுக்கு வலு அளிக்கிறது என்பதுகூடத் தெரியாமலா இருக்கும். நிச்சயமாகத் தெரியும். தெரிந்தாலும்கூட அன்றைக்கு என்னவோ கோபம், வீட்டிலேயிருந்து வரும்போதே கோபத்தோடே வந்திருக்கிறார். (சிரிப்பு). மனைவி மீது இருக்கிற கோபத்தை மகன் மீது காட்டுவதைப்போல என்மீது அல்லது நான் தயாரித்திருக்கிற பட்ஜெட் மீது அதைக் காட்டியிருக்கிறார். மற்றபடி அவர் பேசிய பேச்சுக்களிலே மிக ஆழ்ந்த, பொருளாதார தத்துவங்கள், சமுதாய நலன்களுக்காக கூறப்பட வேண்டிய கருத்துக்கள் மிக, மிக இருந்தன என்பதை நான் படித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கின்றேன்.

இங்கே இன்றைக்கு வரவில்லை நம்முடைய நண்பர் உறுப்பினர் அழகிரி அவர்கள். அவரும் அவருடைய கட்சியினுடைய அதிகாரப்பூர்வமான பத்திரிகையிலே எழுதிய கட்டுரையையும் படித்துப் பார்த்தேன். அவர் இந்த நிதிநிலை

அறிக்கையைப்பற்றி குறிப்பிட்டுவிட்டு, கடைசியாக முடிக்கும் போது இந்த நிதிநிலை அறிக்கையிலே, இலக்கியவாதி கலைஞரைத்தான் காண முடிகிறது. நிதியமைச்சர் கலைஞரைக் காணமுடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். எனக்கு இது ஒரு மகிழ்ச்சி. இலக்கியவாதி கலைஞர் சாகிற வரையிலே வாழ்வார். நிதியமைச்சர் கலைஞர் அப்படி வாழ முடியாது. இடையிலே அந்தப் பதவி போய்விடும். இலக்கியவாதி என்பதுதான் கடைசி வரையிலே நிலைக்கும். எனவே, அவர் அப்படிக் குறிப்பிட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதான்.

நம்முடைய நண்பர் ஞானசேகரனோ அல்லது திருநாவுக்கரசு அவர்களோ, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரோ, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் பழனிசாமி அவர்களோ, அல்லது இந்திய தேசிய லீக்கின் தலைவர் அப்துல் லத்தீப் அவர்களோ, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பேசிய மணி அவர்களோ, நண்பர் சந்தானம் அவர்களோ, வெங்கடசாமி அவர்களோ, பேராசிரியர் தீரன் அவர்களோ, இத்தனை பேரும் கூறிய இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்து வைத்து, என்னுடைய உரையைத் தயாரித்திருக் கின்றேன். மற்றும் பல உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் சிந்தித்துப் பார்த்து, எண்ணிப் பார்த்து என்னுடைய உரை இங்கே வழங்கப்படுகிறது. அதற்கு முன்பு ஒன்றைச் சொல்ல வேண்டும். பேசியவர்கள் அனைவரும் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் உள்ளிட்ட அனைவரும் இது 12வது நிதிநிலை அறிக்கை என்பதைப் புகழ்ந்து பாராட்டிக் குறிப்பிட்டார்கள்.

1969ஆம் ஆண்டு என்னுடைய இனிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு என் தோள்களிலே சுமத்தப்பட்ட இந்த பெரும் பொறுப்பை நான் ஏற்று 12வது நிதிநிலை அறிக்கையை படிக்கின்ற வாய்ப்பை உங்கள் அனைவருடைய அன்பான வாழ்த்துக்களோடும், ஆதரவோடும் நான் பெற்றிருக்கின்றேன். 1969 முதல் இதுவரையில் இந்தப் பன்னிரண்டு அறிக்கைகளுக்கும்

இடையில் உள்ள காலத்தில் மாநிலத்திற்காக வளர்ச்சித் திட்டங்கள் அன்றாடத் தேவைகளுக்கான திட்டங்கள், நிர்வாகத்திற்கான திட்டங்கள் இவை போக குறிப்பிடத்தக்க திட்டங்கள் எவையெவை நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டியதவசியம் என்றே நான் கருதுகிறேன். எனவே, அதை நினைவுபடுத்தவும் விரும்புகிறேன். 1969க்கு முன்பு இலவசக் கல்வி S.S.L.C. வரையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் வழங்கப்பட்டது.

1969லேதான் அண்ணா அவர்களுக்குப் பிறகு நான் பொறுப்பேற்ற நேரத்தில் P.U.C. வரையிலே இலவசக் கல்வி என்ற நிலையை நீட்டிக்கச் செய்தேன். 1969லேதான் பிற்படுத்தப்பட்டோருக்கான நலன்களை மேலும் விரிவாக ஆராய்ந்திட சட்டநாதன் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அதனுடைய பரிந்துரைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1969ஆம் ஆண்டில் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறையும், ஆதிதிராவிடர் நலத் துறையும் ஒன்றாக இருந்தது தனித் தனியே பிரிக்கப்பட்டது. பிற்படுத்தப் பட்டோருக்காக பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சகம் ஒன்று உருவாக்கப்பட்டது. 1969லே R.A. கோபால்சாமி ஐயங்கார், I.C.S. அவர்களுடைய தலைமையில் Police Commission தமிழ்நாட்டிலே - இந்தியாவிலேயே இந்த மாநிலத்திலேதான் முதன் முதலாக போலீசாருடைய தேவைகளை உணர, பரிந்துரைக்க Police Commission அமைக்கப்பட்டது.

1967க்கு முன்பு 1933ஆம் ஆண்டு தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. மின்சாரம். 1933ஆம் ஆண்டிலிருந்து 1966 வரையில் 20,250 கிராமங்கள் மாத்திரம்தான் மின்விளக்கு வசதி பெற்ற கிராமங்களாக இருந்தன, இன்னும் சொல்லப் போனால் 33 ஆண்டுகள் வெள்ளைக்காரர்கள் ஆட்சியும் சேர்த்து, 1966ஆம் ஆண்டு வரையிலே 33 ஆண்டுகாலத்தில் சுமார் 20,000 கிராமங்கள்தான் மின்விளக்கு ஒளி பெற்ற கிராமங்களாக இருந்தன. அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர்களுடைய Colonyகள் - மொத்தம் சுமார் 20,000 என்றால் 2,000 Colony-களுக்குத்தான் விளக்கு ஒளி வழங்கப்பட்டிருந்தது.

மின்விளக்கு இல்லாத கிராமங்களே தமிழகத்திலே இருக்கக்கூடாது என்ற ஒரு நிலையை உருவாக்குவோம் என்று இந்த அவையிலேயே நான் அறிவித்து, சபதம் செய்து, அதன்படி மொத்தமுள்ள 58,000 பெரிய கிராமங்களிலே 400, 500 கிராமங்கள் தவிர, மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டது, 20,000 ஆதிதிராவிடர் colony-களில், 18,000 colony-களுக்கு மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டது. இது 1969இல்.

1970ஆம் ஆண்டு - அதுவரையிலே குடிசைகள் மேம்பாட்டு வாரியம் என்ற ஒன்று இருந்து. குடிசைப் பகுதிகளைச் சீராக, செம்மையாக, சுகாதார வசதிகளோடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்த அந்தத் திட்டத்தை அப்படியே மாற்றி குடிசைகளை அகற்றுகின்ற திட்டம் என்ற ஒன்று கொண்டு வந்து, குடிசைவாசிகளுக்கு மாடி வீடுகள் கட்டுகிற அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 1970ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1960ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின்படி 30 Standard ஏக்கர் உச்சவரம்புச் சட்டத்தின்படி ஒரு ஏக்கர் நிலம்கூட உபரி நிலமாக எடுத்து யாருக்கும் வழங்கப்படாத சூழ்நிலையை எண்ணிப் பார்த்து 1970ஆம் ஆண்டு 15.2.1970 இல் 15 ஏக்கர் நில உச்சவரம்புச் சட்டத்தை இங்கே நிறைவேற்றி, அந்தச் சட்டத்தின் காரணமாக 1,97,900ஏக்கர் நிலத்தை உபரி நிலமாக எடுத்த அரசு. திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி). இதில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். இதனால் பயனடைந்த உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர். இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர் பழங்குடி மக்கள் 204 பேர்.

1971ஆம் ஆண்டு நம்முடைய பழனிசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்களே, அதைப்போல குடியிருப்பு மனைச் சட்டம் என்ற ஒரு தீவிரமான சட்டத்தைக் கொண்டு வந்து, எங்கெங்கே விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக் கிறார்களோ, அந்த மனைகளை எல்லாம், அவற்றை விற்கக் கூட புதுப்பித்துக் கொள்ள. புதிய கட்டடம் கட்டிக்கொள்ள,

அவர்களுக்குக் குடியிருப்பு மனை அனுபோகதாரர்கள் சட்டம் கொண்டுவரப்பட்டு, மணலி கந்தசாமி போன்ற மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எல்லாம், பலபேருடைய ரத்தம் சிந்தியும் கிடைக்காத இந்தத் திட்டம், கருணாநிதி சிந்திய பேனாவினுடைய ஒரு துளி மையினால் கிடைத்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்று பாராட்டிப் பேசிய அந்தத் திட்டத்தால் மனை பெற்றவர்கள் 1,75,000 பேர். அவர்களிலே தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் பேர். பிற்படுத்தப்பட்டோர் 40 ஆயிரத்து 550 பேர். பிற வகுப்பினர் 32 ஆயிரத்து 123 பேர். இது 1971ஆம் ஆண்டு.

அதே 1971ஆம் ஆண்டுதான் தொழுநோய் இரவலர்கள் தெருவிலே திரிந்து அவர்களுக்கும் சங்கடம், மக்களுக்கும் சங்கடம் என்ற நிலையை மாற்றி அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டியது அரசின் கடமை என்ற திட்டத்தின்படி மறுவாழ்வு இல்லங்கள் 11 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு ஏறத்தாழ 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லங்களிலே வாழ்கின்றார்கள் என்றால், 1971ஆம் ஆண்டு இந்த அரசு கொண்டுவந்த திட்டம்.

அதே 1971இல், ஆதிதிராவிடர்களுடைய இட ஒதுக்கீடு (Reservation) 16 விழுக்காடு என்பதை 18 விழுக்காடு ஆக உயர்த்தி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 என்று இருந்ததை 31 விழுக்காடாகவும் உயர்த்தினோம்.

அதே 1971ஆம் ஆண்டு, பேருந்துகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

அடுத்த 1972ஆம் ஆண்டில்தான் தமிழகம் முழுவதும் கண்ணொளி வழங்குகின்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான ஏழை எளியமக்கள், கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்திலேயுள்ள ஏழைகள், பயன் பெற்றார்கள்.

அந்த 1972ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழகத்தில், அந்த 1972இல்தான் பல ஆண்டுகாலமாக இருந்த கோரிக்கை, அரசு அலுவலர்களுடைய கோரிக்கை ஒன்றை இந்த அரசு கவனித்து. இரகசியக் குறிப்பு முறை, ஒழிக்கப்பட்டு மீண்டும் 1976ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைமுறைக்கு வந்து, 1990ஆம் ஆண்டு மறுபடியும் அந்த இரகசியக் குறிப்பு முறையை இந்த அரசுதான் ஒழித்தது. முதலில் 1972ஆம் ஆண்டு இரகசியக் குறிப்பு முறை ஒழிக்கப்பட்டபோது, இராஜாஜி மண்டபத்திலே அரசு அலுவலர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் எந்த அளவிற்கு அதைப் பாராட்டிப் பேசினார் என்பதையெல்லாம் நான் இங்கே விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு பாராட்டினை அன்றைக்கு தந்தை பெரியார் அவர்கள் இந்த அரசுக்கு வழங்கினார்கள்.

1972இல் 1,500க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம், அதற்குப் பிறகு 1990இல் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம், வரும் ஆண்டிலிருந்து 500 முதல் ஆயிரம் பேர் வரை மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம்.

1973ஆம் ஆண்டு கைரிக்ஷாக்களை அகற்றி. கம்யூனிசம் தழைத்தோங்குகின்ற மாநிலங்களிலேகூட இன்னமும் நிறைவேற்றப்படாத திட்டத்தை, கைரிக்ஷாக்களை ஒழிக்கின்ற திட்டத்தை நிறைவேற்றி, மாற்றுத் திட்டமாக இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) அரசும் இந்த அரசுதான்.

அந்த ஆண்டிலேதான் பெண் காவலர்கள் நியமிக்கப் பட்டார்கள். முதன்முதலாக பெண் காவலர்படை தமிழகத்திலே நியமிக்கப்பட்டதும் 1973ஆம் ஆண்டிலேதான்.

1974ஆம் ஆண்டிலேதான் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப் படுகின்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு இலட்சம் வீடு கட்டப்படும் என்று கூறி 40,000 வீடுகள் கட்டப்பட்ட

நிலையிலே ஆட்சி கலைக்கப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1974ஆம் ஆண்டில்தான் கோயம்புத்தூரிலே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1974ஆம் ஆண்டிலேதான், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இந்த ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது.

1974ஆம் ஆண்டிலேதான் கலப்புத் திருமண தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம் வழங்க வேண்டுமென்ற, அண்ணாவினுடைய கருத்தை ஏற்று; அதைத் தொடர்ந்து நடத்தி 1989 ஆம் ஆண்டு. கலப்புத் திருமண தம்பதிகளுக்கு 5000 ரூபாய் நிதி வழங்குவது என்று அறிவித்து நடைமுறைப்படுத்தி 1996இல் அதை 10,000 ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்த்தி, 1997இல் அந்த கலப்புத் திருமணத்திலே இருவரில் ஒருவர், ஆணோ பெண்ணோ ஆதிதிராவிடர்கள் ஆக இருந்தால் அவருக்கு 20,000 ரூபாய் நிதி என்று அறிவித்திருப்பதும் இந்த அரசுதான்.

1974இல் அரசு ஊழியர் இறந்தால் 10,000 ரூபாய் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்பதை இந்தியாவிலேயே முதன் முதலாக அறிவித்தது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு. அந்தத் திட்டம் 1989இல் 40,000 ரூபாய் என்று ஆயிற்று.

1996இல் ஒரு லட்சம் ரூபாய் என்கிற அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி). தமிழகத்திலுள்ள கல்லூரி மாணவர்களுடைய எண்ணிக்கை பற்றி திரு. அழகிரி எழுதிய கட்டுரையைக் கூடப் படித்தேன். படிப்பிற்காக, கல்விக்காக என்ன செய்தார்கள்? காமராஜருக்குப் பிறகு என்று கேட்டுள்ளார். நான் காமராஜரைக் குறை கூற மாட்டேன். அவர் செய்து முடித்த காரியங்கள், அல்லது அவர் செய்யத் தொடங்கிய காரியங்களை நிறுத்தாமல் தொடருவதே நாங்கள் காமராஜருக்குச் செய்கின்ற மரியாதைதான். (மேசையைத் தட்டும் ஒலி).

1966 வரையில், நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரையில் தமிழகத்திலே கல்லூரி மாணவர்களுடைய

எண்ணிக்கை 94 ஆயிரம். நாங்கள் ஆட்சியை விட்டு, கலைக்கப்பட்டு இறங்கிய 1975ஆம் ஆண்டு அந்த 94 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் என்பது 2 இலட்சம் கல்லூரி மாணவர்கள் என்ற நிலையை உருவாக்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி).

1967 வரையிலே இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 92. 1975இல் இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 189.

பிறகு, அனாதைச் சிறுவர், மகளிர் மறுவாழ்வுத் திட்டம், ஆதரவற்ற மகளிர்க்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், கருணை இல்லங்கள் தொடங்கும் திட்டம், விதவை மறுமணத் திட்டம், இத்தனைத் திட்டங்களும் 1975இல்தான் தொடங்கப்பட்டன.

1975லேதான் மீனவ மக்களுக்கு சிங்காரவேலர் நினைவாக இலவச வீட்டுவசதித் திட்டம் தொடங்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் - 1929வது ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நம்முடைய அவைத் தலைவருடைய தந்தையார் P.T. ராஜன் அவர்களும், W.P. சவுந்தரபாண்டியனாரும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில் பெரியாரால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமான, பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் 1989ஆம் ஆண்டு இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டது.

பிறகு 1989ல் சபாநாயகம், I.A.S. தலைமையில் இரண்டாவது Police Commission அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1989லேதான் நலிந்த பிரிவினருக்கு இலவச வேட்டி சேலை வழங்குகின்ற திட்டத்தைத் தொடங்கினோம். அதிலே ஒரு ஊரிலே கொடுக்கப்படவில்லை என்பதைச் சொன்னார்கள். அதற்குக் காரணமும் சொன்னார்கள். நல்ல வேட்டி சேலையாக இருப்பதால் எல்லோரும் கேட்கிறார்கள்

என்பதையும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். 80 இலட்சம் பேருக்கு வேட்டியும், 70 இலட்சம் பேருக்குச் சேலையும் இப்போது தரப்படுகின்றது என்றால் அந்தத் திட்டத்தை 1989லே இந்த அரசு அறிவித்தது.

1989லே ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவாக மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம். ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்குள் இருந்தால் என்று தொடங்கி, 1997இல் 24 ஆயிரம் ரூபாய் என்று அந்த வருமான வரம்பை உயர்த்தி நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் இந்த அரசுதான்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியினுடைய நினைவாக மகப்பேறு நிதியுதவித் திட்டம் 1989ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டு, நிறைவேற்றிச் செயற்படுத்தியதும் இந்த அரசுதான்.

மகளிருக்காக அரும்பாடுப்பட்ட முவலூர் முதாட்டியார் நினைவாக திருமண உதவித் திட்டம் 1989லேதான் 5 ஆயிரம் ரூபாய் என்று தொடங்கி 1996ல் 10 ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு 128 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த மூன்று ஆண்டுகளிலே மாத்திரம் 1 இலட்சத்து 28 ஆயிரம் பெண்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டிலே அதற்காக 70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1989ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டம்.

1989லேதான் அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு என்று அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு எல்லாம் கட்சிப் பணியிலேயே ஒதுக்கீடு என்கிறார்கள். அன்றைக்கு அரசுப் பணியிலேயே 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

1989லேதான் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தொடங்கப்பட்டது. அதுவரையிலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று இருந்தது: தாழ்த்தப்பட்டோர் நலத்துறை

என்று இருந்தது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று தனியாக தொடங்கப்பட்டதும் 1989லேதான்.

அது மாத்திரமல்ல, அந்த 1989லேதான் அதற்காக இரத்தம் சிந்தி, குண்டடிப்பட்டு உயிரைத் தியாகம் செய்தவர் களுக்கு எல்லாம் மரியாதை காட்டுகின்ற வகையிலே சிறப்பு அளித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய எண்ணம் ஈடேறு கின்ற வகையில் தனி ஒதுக்கீடாக மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு 20 சதவீதம் என்று அறிவித்ததும் இந்த ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே 1989ஆம் ஆண்டுதான் வேலைவாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி, இடைநிலை ஆசிரியர் நியமனத்தில் - பதிவு முன்னுரிமை - வேலைவாய்ப்பு அலுவலகத்திலே எப்படிப் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த முன்னுரிமையின்படி வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

இங்கே சொன்னார்களே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், எது எதற்கு எவ்வளவு ரூபாய், எது எதற்கு எவ்வளவு ரூபாய் என்று. அவையெல்லாம் இந்த ஆசிரியர்களுடைய வேலைவாய்ப்பிலும் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான், இவர்கள் சொன்னது சரியோ இல்லையோ, நம்முடைய பேராசிரியர் பதில் அளித்திருக்கிறார். அவற்றை விசாரிக்கலாம். அடிமட்டம் வரையிலே எங்கே ஊழல் இருந்தாலும் அதைக் களைய வேண்டியது இந்த அரசினுடைய பொறுப்பு.

பெருந்தலைவர் காமராஜரே சொல்லியிருக்கிறார். ஊழல் ஊழல் என்கிறார்களே, என்ன ஊழல்? திருவள்ளுவர் காலத்திலேயிருந்து ஊழல் இருக்கிறது என்று காமராஜரே சொல்லியிருக்கிறார். புத்தகம் இருக்கிறது. அவர் பேசிய பேச்சு. திருவள்ளுவர் காலத்திலேயிருந்து இலஞ்சம், ஊழல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. என்ன செய்ய முடியும் என்று பெருந்தலைவர் காமராஜரே கூறியிருக்கிறார். எனவே, பெருந்தலைவர் காமராஜராலேயே அகற்ற முடியாத அந்த ஊழலையும், இலஞ்சத்தையும் நாம் மேல்மட்டம் வரையிலே வராமல் பாதுகாத்துக் கொள்ளலாமே தவிர, கீழ் மட்டத்திலே

நமக்குத் தெரியாமல் எங்கேயோ ஒரு மூலையில், ஒரு கோடியில் யாரோ ஒருவர், அவர்களாகத் தருகிற 5 ரூபாயோ, 10 ரூபாயோ வாங்குவதைத் தடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவ்வளவு நீளத்திற்கு இந்தக் கையால் ஆகாதவர்களுக்குக் கையும் கிடையாது. அதையெல்லாம் கண்டுபிடித்துத் தடுப்பதற்குக் கையும் கிடையாது.

1991 – 1996இல் 8,450 இடைநிலை ஆசிரியர்கள். இந்த 1991லேயிருந்து 5 வருஷம், இடைநிலை ஆசிரியர்கள் கடந்த கால ஆட்சியிலே 8,450 பேர்தான் நியமிக்கப் பட்டார்கள். அதில் எத்தனை கோடி ரூபாய் ஊழலாக, இலஞ்சமாகப் புரண்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக் கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால், 1996க்குப் பிறகு இந்த 3 ஆண்டுக் காலத்தில் வேலைவாய்ப்புப் பதிவக முன்னுரிமைப்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 5 ஆண்டுக் காலத்திலே கடந்த ஆட்சியிலே - ஜெயலலிதா ஆட்சியிலே - 8,450 பேர். இந்த 3 ஆண்டுக் காலத்திலே 31,108 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

1989இலே நெல்லையிலே மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்; சென்னையிலே தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்; சென்னையில் தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழகம்.

1989இல் 8ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை. அது இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டு 12ஆம் வகுப்பு வரை இலவசப் பேருந்து பயணச் சலுகை.

1989-90இல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி. 1989-90இல் மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி.

1990ஆம் ஆண்டில் மலைவாழ் மக்களுக்கு ஒரு விழுக்காடு. தனி ஒதுக்கீடு Reservationல், 19 விழுக்காடு ஆக அன்று இருந்ததை 18 விழுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு

என்று ஒதுக்கிவிட்டு ஒரு விழுக்காடு S.T. க்கு மலைவாழ் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலம் தமிழகம் (மேசையைத் தட்டும் ஒலி). இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு அளித்தது.

1990-91இல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வருவாய் வரம்புக்கு உட்பட்டு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி.

1996இல் உள்ளாட்சித் தேர்தல், பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு. 2 பெண் மேயர் உள்பட 44,143 பதவி களில் பெண்கள் உள்ளாட்சிகளிலே அமர்ந்திருக்கிறார்கள். 44 ஆயிரம் பேர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே அமர்ந்திருக்கின்றார்கள்.

1996-97க்குப் பின் மாநில, மாவட்ட அளவில் 10, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் என்ற திட்டம்.

1996இல் பட்டதாரி இல்லாக் குடும்ப மாணவர்களில் ஒவ்வொரு தொழில் கல்வியிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும். பட்டதாரியே இல்லாத குடும்பத்திலேயிருந்து, அது பிற்படுத்தப்பட்ட குடும்பமாக இருந்தாலும் சரி,பிராமணர்கள் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும் சரி, அங்கே பட்டதாரியே இல்லை என்றால் அங்கிருந்து வருகின்ற ஒரு மாணவனுக்கு அவன் எடுக்கின்ற மதிப்பெண்களைப் பொறுத்து 10 மாணவர்களை மதிப்பெண் அடிப்படையில் பொறுக்கியெடுத்து அவர் விரும்புகின்ற தொழிற்கல்வி எதுவானாலும், மருத்துவக் கல்வியானாலும், என்ஜினியரிங் கல்லூரியானாலும், வேளாண்மையானாலும், சட்டப் படிப்பானாலும் அதிலே அவர்கள் சேர்வதற்கான அந்த உரிமை மாத்திரம் அல்ல; அதற்கான கல்விச் செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற திட்டம் அந்தத் திட்டம்.

1996இல்தான் தமிழ் வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம்.

தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத் துறை புதிய அறிமுகம்.

1997இல் உயர்கல்வித் துறை புதிதாக அறிமுகம்.

1998இல் நெடுஞ்சாலைத் துறைக்கு அமைச்சகம்.

அதே 1998இல் தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம்.

1997இல் கிராமப்புற மாணவர்களுக்குத் தொழிற் கல்வியில் 15 விழுக்காடு இடஒதுக்கீடு. (மேசையைத் தட்டும் ஒலி). அதிலே நண்பர் மணி சொன்னதைப்போல, இருக்கின்ற குறைபாடுகளைக் களைவதற்காக சில முயற்சிகளை அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்றது.

1997இல் சேலத்திலே பெரியார் பல்கலைக்கழகம்.

சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்.

சென்னை மருத்துவக்கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப்பட்டது.

1997இல் 100 சமத்துவபுரங்கள் அமைக்க 35 கோடி ரூபாய் ஒதுக்கீடு. இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறக்கப் பட்டுள்ளன. வருகிற ஆண்டில் 17.5 கோடி ரூபாய் செலவில் மேலும் 50 சமத்துவபுரங்கள். பெரியார் நினைவு சமத்துவபுரங்களாக இவை எல்லாம் விளங்கும்.

1997 முதல் கடந்த இரண்டாண்டுகளில் தூர்வாரும் பணிகளுக்கு மாத்திரம் 58 கோடி ரூபாய், வெள்ளச் சேதங்களைத் தடுக்கவும், விவசாயிகள் பயனுறவுமான திட்டம், 1997இல் பராந்தகச் சோழன் காலத்திலே என்று சொன்னாரே நம்முடைய பரிதி இளம்வழுதி, அதைப்போல அந்தக் காலத்திலிருந்து தூர் வாரப்படாத இந்த ஆறுகள், வாய்க்கால்கள் எல்லாம் 58 கோடி ரூபாய்ச் செலவில் தூர் வாரப்பட்டன.

1997-98இல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். ஓர் உறுப்பினருக்கு ரூ. 25 இலட்சம். 1998-99இல் அது 35 இலட்சம். இந்த ஆண்டு 50 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி).

1997-98இல் நமக்கு நாமே திட்டம். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட இங்கே பாராட்டினாரே, அந்த நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் தனி ஒதுக்கீடு. 1998-99இல் 10 கோடி ரூபாய், வரும் ஆண்டிற்கும் 10 கோடி ரூபாய்.

1997-98இல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகம். அதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு 52 கோடி ரூபாய். 1998-99இல் 75 கோடி ரூபாய். வரும் ஆண்டிலும் 75 கோடி ரூபாய்.

1998ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம். 8.10.1998இல் தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு அமைப்பு. 1998ல் World Tel நிறுவன உதவியோடு தமிழகம் முழுவதும் 13,000 சமுதாய இணைய மையங்கள் Community Internet Centres அமைக்கும் திட்டம் - ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற நிலையில். (மேசையைத் தட்டும் ஒலி).

1998-99ல் Mini Bus திட்டம். அது நல்லமுறையில் செயல்படுகின்றது என்றாலும் நீதிமன்றத்தினுடைய இடைக் காலத் தீர்ப்பால் எல்லா இடங்களிலும் செயல்பட முடியாத சூழ்நிலை.

இந்த ஆண்டு 1999இல் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் சென்னையிலே தொடங்கப்பட்டு, ஆறு மாநகராட்சி மன்றங்களிலும் - சென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி, நெல்லை என்று எல்லா மாநகராட்சி மன்றங்களிலும் இது ஆரம்பிக்கப்பட்டது, கடந்த மாதம்தான் என்றாலும்கூட, இந்த ஒருவார காலத்தில், ஒரே நாளில், துறையினுடைய அமைச்சர் நேரு அவர்கள் நேரில் சென்றிருந்து இது ஆரம்பிக்கப்பட்டு, 6,000 மகளிர் இந்த சிறுவணிகக் கடன்

திட்டத்தால் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கடன் வாங்கும்போதே ஒரு ரூபாய் வட்டி - அவர்கள் வேறு யாரிடமாவது வாங்கினால் 10% அல்லது 15% வட்டி தர வேண்டும். வெறும் ஒரு ரூபாய் வட்டிக்கு. 100 ரூபாய் வாங்கினால் 99 ரூபாய் கொடுப்பார்கள். மறுநாள் 100 ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மறுபடியும் கடன் வாங்கலாம் என்கின்ற அளவுக்கு, அந்தக் கடனை வாங்கி, சிறுசிறு தொழிலை ஆரம்பிக்கலாம் என்கின்ற அளவுக்கு, ஒரு மகத்தான திட்டம். இவ்வளவும் 1969முதல் இன்று வரையில் - இந்த எளியோனால் (மேசையைத் தட்டும் ஒலி) - இந்த எளியோன் ஏற்றுக்கொண்ட பொறுப்பால் - தமிழகத்தில் வழக்கமான வளர்ச்சித் திட்டங்களன்னியில், புதியதாக சமுதாயத் திட்டங்களாக, பொருளாதார ஏற்றங்களுக்கான திட்டங்களாக அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை, இந்த 12ஆவது நிதிநிலை அறிக்கையைப் படித்து, அதற்கான விவாதத்திற்குப் பதிலைக் கூறுகின்ற நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களையும் நினைவுகூரவேண்டும். ஏனென்றால் கடந்த நான்கைந்து நாட்களில் நிதிநிலை அறிக்கை என்ற ஒன்று இங்கே வைக்கப்பட்டதே பல பேருக்கு மறந்து போய்விட்டது. நான்கூட எண்ணினேன். தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதி பெற்று, மீண்டும் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு மறுபடியும் உறுப்பினர்களைப் பேசச் சொல்லலாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் இவ்வளவு சங்கடங்களுக்கு இடையிலும்கூட தங்களுடைய கடமையை ஆற்றவேண்டும் என்று எண்ணிய கண்ணியம் மிகுந்த உறுப்பினர்கள் அந்தக் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் பேசிய பேச்சுக்களைப் படித்துப் பார்த்து நான் உணர்ந்துள்ள காரணத்தினால், இந்த அறிக்கையிலே என்னென்ன திட்டங்களைச் சொல்லியிருக்கிறோம் என்பதை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

எந்தத் திட்டங்களும் இல்லை என்று நம்முடைய நண்பர் உறுப்பினர் அழகிரி அவர்கள் ஒரு பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்.

450 கோடி ரூபாய் செலவில் 208 பாலங்கள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

20 கோடி ரூபாய் செலவில் காரனோடை பாலம்.

12 கோடி ரூபாய் செலவில் கரூர் பாலம்.

43 கோடி ரூபாய் செலவில் தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரையில் சென்னை புறவழிச் சாலை.

36 கோடி ரூபாய் செலவில் மதுரை புறவழிச் சாலை.

92 கோடி ரூபாய் செலவில் கோவை புறவழிச் சாலை.

212 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகரத்தில் ஆரச்சாலைகளை மேம்படுத்தும் பணி.

256 கோடி ரூபாய் செலவில் நபார்டு உதவியோடு ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்.

500 முதல் 1,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை. 1000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எஞ்சிய 301 கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை.

சாலைப் பராமரிப்புக்காக 270 கோடி ரூபாய்.

75,850 எக்டேர் பரப்பில் 96.73 கோடி ரூபாய் செலவில் காடு வளர்க்கும் பணி.

50 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணி.

மேலும் இந்த ஆண்டு,

219 கோடி ரூபாய் செலவில் பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்.

8.94 கோடி ரூபாய் செலவில் நிலையூர் கால்வாய்த் திட்டம்.

16.79 கோடி ரூபாய் செலவில் மிருகண்டா நதித் திட்டம்.

23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம்.

6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முக்கொம்பு பலப்படுத்தும் திட்டம்.

9.5 கோடி ரூபாய் செலவில் மாம்பழத்துறையார் திட்டம்.

26.52 கோடி ரூபாய் செலவில் 18ஆம் கால்வாய்த் திட்டம்.

14.8 கோடி ரூபாய் செலவில் மீனவர்களுக்கு நாலாயிரம் வீடுகள் கட்டும் திட்டம்.

10 ஆயிரம் எக்டேரில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கப் புதிய திட்டம்.

40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோட்டக் கலை உற்பத்திப் பொருட்களைச் சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள்.

சென்னையில், கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, தூர்வாரும் மிகப் பெரும் திட்டம்.

150 கோடி ரூபாய் செலவில் 10 நகராட்சிகளில் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டம்.

6,300 ஊரகக் குடியிருப்புகளுக்கு 450 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்யும் திட்டம்.

1,200 அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பயிற்றுவிக்கும் திட்டம்.

உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் Tamil Virtual University அமைக்கும் திட்டம்.

14 வயது வரை அனைத்து சிறார்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கும் திட்டம்.

வாழ்வொளித் திட்டம்.

ஒரு இலட்சம் பேருக்கு இலவச கண் உள் ஆடி (Intra ocular Lens) வழங்குகின்ற திட்டம்.

தமிழக வரலாற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சி அமைக்கும் திட்டம்.

52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம். டெல்லியிலே தீப்பிடித்து எரிந்த பிறகு, டெல்லியிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து, இந்தத் திட்டத்தைப்பற்றி, நம்முடைய அதிகாரிகளிடத்திலே பேசி, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற இடத்தையும் பார்வையிட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றால், இந்தத் திட்டத்தின் பெருமையை நீங்கள் அறிந்து கொள்ளலாம் (மேசையைத் தட்டும் ஒலி) 52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம்.

நெசவாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்வு.

தென்மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வரைய தனிக்குழு. இந்தத் திட்டத்தில் புதுக்கோட்டையைச் சேர்க்கவில்லை என்று திருநாவுக்கரசும், கன்னியாகுமரியைச் சேர்க்கவில்லை என்று திரு. மணி அவர்களும் சொன்னார்கள். இரண்டு மாவட்டங் களும் இதிலே சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னையை அடுத்த ஒத்தியம் - துரைப்பாக்கத்தில் 37.5 கோடி ரூபாய் செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உருவாக்கும் திட்டம்.

சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் 6 கோடி ரூபாய் செலவில் குடிசையிலே வாழும் 30,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம்.

வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் இவற்றை ஒரு சேர பள்ளியிலே வழங்க புதிய திட்டம்.

தொடக்கப்பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை இந்த ஆண்டு உருவாக்கும் திட்டம்.

மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளில் ஊக்குவிக்க புதிய சிறப்புத் திட்டம்.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று 50 லட்சம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட செயல். (மேசையைத் தட்டும் ஒலி) இவை எல்லாம் அடங்கியுள்ளதுதான். 'எதுவுமே இல்லை' இந்த நிதிநிலை அறிக்கையிலே என்று வர்ணிக்கப்பட்ட இந்த வரவுசெலவுத் திட்டத்திலே இருக்கின்றவை.

எடுத்த எடுப்பிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'உருப்படியாக ஒன்றும் கிடையாது' என்று அவர் சொன்னது பத்திரிகையிலே வந்தது; படித்துப் பார்த்தேன். அவர் என்னை விட மூத்தவர் அல்ல என்றாலும்கூட தோற்றத்திற்கு என்னை விட மூத்தவராகத்தான் தெரிவார். (சிரிப்பு). இந்த அவையிலே நல்ல அனுபவம் உள்ளவர். உருப்படியாக தெரியாவிட்டாலும் கூட, நாம் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் இதில் ஏதோ கட்சியோ, அணியோ சேர்ப்பதாக யாரும் கருதக்கூடாது. நம்முடைய ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்திக் கொள்ள மாற்றார் தயாராக இருக்கின்றார்கள். எனவே, ஒவ்வொரு சொல்லையும் நாம் அளந்து சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். சொல் ஒன்றுதான் கீழே உதிர்ந்தால் மறுபடியும் எடுத்து வாயிலே போட்டுக்கொள்ள முடியாது. பல் உதிர்ந்தால்கூட மாற்றுப் பல் வைத்துக் கொள்ளலாம். ஆனால் சொல் உதிர்ந்தால் அதற்காக

ஒரு மாற்றுச் சொல்லை வைத்துக்கொள்ள முடியாது. எனவே தோழமைக் கட்சிக் கூட்டணியிலே இருக்கின்ற எல்லோரும், எல்லா தொண்டர்களும், செயல் வீரர்களும், அவரவர்களும் மனம் சுணங்குகின்ற அளவிற்கான வார்த்தைகள் வெளிப்படாமல் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அப்படி வெளிப்பட்ட காரணத்தால் கடந்த காலத்திலே நாடாளுமன்றத் தேர்தலிலே நமக்கு ஏற்பட்ட அனுபவம், தொண்டர்களுடைய சோர்வினால் ஏற்பட்ட விளைவு என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அதனால்தான் இதைச் சொல்கிறேன் அல்லாமல் வேறல்ல.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி 'Business Standard' 10ஆம் தேதி எழுதும் போது, அந்தப் பத்திரிகையில் - ஒரு நாளேடு அதிலே குறிப்பிடுகிறது - மாநிலங்களின் திட்ட நிதி ஒதுக்கீடு அளவை அதிகரிப்பதற்கு, 'Pant gets tough on hike in State plan size' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் பின்வரும் கருத்தை 'Business Standard' அறிவிக்கிறது.

"Tamil Nadu has obtained a 17 percent increase in Plan size for 1999-2000 over 1998-99", அதாவது, தமிழ்நாடு 1998-99ஆம் ஆண்டைவிட 1999-2000 ஆண்டு திட்ட ஒதுக்கீட்டிற்கு 17 விழுக்காடு கூடுதலாகப் பெற்றுள்ளது.

"Yojana Bhavan sources said they were impressed by the fiscal management of the Tamil Nadu Government..."

நிதி ஆதாரங்களைக் கண்டறிந்து திட்டங்களைச் செல்வனே நிறைவேற்றுவதில் தமிழ்நாட்டின் திறமை பாராட்டத்தக்க முறையிலே உள்ளதாக (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக்குழு அலுவலகம் கருதுகிறது.

Yojana Bhavan என்றால் திட்டக்குழு அலுவலகம், அதற்கு இந்தியிலே உள்ள சொல் அது. இதை 'Business Standard' பத்திரிகை குறிப்பிடுகிறது.

'Business Line' பத்திரிகையில், ''40% of the Budgetary allocation in Tamil Nadu will go towards strengthening the economic infrastructure; 35% towards social sectors and the rest towards

agriculture and rural development. The State expects a 6% average in State Development product in 1997-98 and 1998-99".

தமிழ்நாட்டின் நிதி ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு பொருளாதாரக் கட்டமைப்பை பலப்படுத்தவும், 35 விழுக்காடு சமூக மேம்பாட்டுத் துறைகளுக்கும், எஞ்சியவை வேளாண்மை வளர்ச்சி, கிராம வளர்ச்சி ஆகிய துறைகளின் மேம்பாட்டிற் காகவும் செலவிடப்படுகிறது. 1997-98, 1998-99 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உற்பத்தி விகிதம் 6 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று 'Business Line' கூறியுள்ளது.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே விவாதத்தைத் தொடங்கி வைத்த என்னுடைய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, வறுமைக்கோட்டைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்களே, வறுமைக்கோட்டினுடைய அளவு குறைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்களே, எங்கே இந்த விவரம் உங்களுக்குக் கிடைத்தது என்றவொரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். தமிழகத்தில் 1996-97ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை தற்போதுதானே வெளிவந்திருக்கிறது. அப்படியிருக்க 1997-98ஆம் ஆண்டிற்கான வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்கள்தொகையின் விவரங்களை அரசு எவ்வாறு கண்டுபிடித்து வழங்கியுள்ளது என்று கேட்டார். நான் அவருக்குத் தருகின்ற விளக்கம் - அவர் பதிலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

Evaluation and Applied Research Department என்ற ஒரு துறை இருக்கிறது. அவருக்கும் தெரியும். அதாவது, மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை.

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து அது வெளியிடுகிறது. அண்மையில் 1996-97ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை அத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது. திரு. ஞானசேகரன் அவர்கள் கூறியதைப்போல. 1997-98ஆம் ஆண்டிற்கு மாநில பொருளாதாரத்தில் முக்கிய துறைகளின்

செயல்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வுப் பணிகளில் அந்தத் துறை இப்போது ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக வருவாய், விவசாயம், வேலை வாய்ப்பு, சமூக நலம் போன்ற துறைகளின் செயல்பாட்டினை ஆராய்ந்து அதற்கான வரைவு அறிக்கை (Draft Report) செய்யப்பட்டுவிட்டது.

Draft Report அந்த வரைவு அறிக்கையிலிருந்து எடுத்த விவரங்கள்தான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக் கிறது என்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துத் துறைகளுக்குமான வரைவு ஆய்வுகளையும் மே மாத இறுதிக்குள் முடித்து ஜூன், ஜூலையில் வெளியிட இத்துறை திட்டமிட்டிருக்கிறது.

சமூக நலம் தொடர்பான ஆய்வில் மத்திய திட்டக் குழுவின் ஆய்வு முறைப்படி தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் National Sample Survey Organisation 50வது சுற்றின் விவரங்களையும், மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, தனிநபர் வருமானம் போன்ற விவரங்களையும் கொண்டு தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மொத்த மக்கள் தொகையின் விழுக்காடு கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வோர் தொகை கிராமப் பகுதிகளில் 1993-94ல் 32.48 விழுக்காடாக இருந்து, 1997-98ல் 24.72 விழுக்காடாகவும், நகர்ப்பகுதிகளில் 39.77 விழுக்காடாக இருந்து 32.70 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் தொகை 1993-94 ஆம் ஆண்டில் 35.03 விழுக்காடாகவும் 1996-97 ஆம் ஆண்டில் 30.73 விழுக்காடாகவும் இருந்து 1997-98இல் 27.58 என்ற விழுக்காடாகக் குறைந்துள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு அன்றைக்கும் தெரிவித்தேன். இன்றைக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஞானசேகரன் அவர்கள் இன்னொன்றையும் கேட்டார். மூலதனக் கணக்கிலே திட்டச் செலவு குறைந்து விட்டதாக என்ற ஒரு பிரச்சினையை எழுப்பினார். 1998-99ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில்

ஒட்டுமொத்தப் பற்றாக்குறை குறைந்ததற்கு, மூலதனச் செலவுத் திட்டங்களில் செலவு குறைந்ததுதான் காரணம் என்ற ஒரு பிரச்சினையை அவர் எழுப்பினார். 1998-99ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் 876.67 கோடி ரூபாயிலிருந்து 1998-99ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 235.73 கோடியாக, அதாவது 640.94 கோடி ரூபாய் குறைந்து உள்ளது. உண்மை. இதில் மூலதனச் செலவில் ஏற்பட்டுள்ள குறைவு 404 கோடி ரூபாய். இதற்கான முக்கிய காரணங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அரசின் பங்குத் தொகையை கூடுதல் மானியமாக வருவாய்க் கணக்கில் மாற்றி அமைத்தால் மூலதனக் கணக்கில் 314 கோடி ரூபாய் குறைந்துள்ளது. இது தவிர, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவுள்ள சாலைத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் இதுவரை கிடைக்காததால், அந்தத் திட்டத்திற்காக 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட 70 கோடி ரூபாய் என்பது திருத்த மதிப்பீட்டில் 18 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.

கல்வி, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன். பிற்படுத்தப்பட்டோர் நலன். சமூகப் பாதுகாப்பு நலன் போன்ற மற்ற இனங்களில் மூலதனச் செலவிற்கு திருத்திய மதிப்பீட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை 23 கோடி ரூபாய் குறைந்துள்ளது. பொதுக் கணக்கிலே உபரி 359 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக ஒட்டுமொத்தப் பற்றாக்குறை திருத்திய மதிப்பீட்டில் 640.94 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என்பதை நான் விளக்கமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க.வினுடைய தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் திருத்த மதிப்பீட்டில் குறைவதற்கு என்ன காரணம், வரவுக் கணக்கில், என்ற ஒரு வினா எழுப்பினார். அவர் அதை ஒரு தாக்குதல் கணையாகத் தொடுக்காமல் ஒரு விளக்கம் பெறுவதற்காகக் கேட்டார். வருவாய் கணக்கில் 1998-99இல் திட்ட மதிப்பீடு 15.039

கோடி ரூபாய் என்று கடந்த ஆண்டு குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அது திருத்த மதிப்பீட்டில் 14,198 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது என்றும், அதற்கு முக்கிய காரணம், மத்திய வரிகளின் பங்கும் மாநிலத்தின் சொந்த வரி வருவாயும் 1998-99ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் குறைந்துவிட்டதே, என்ன காரணம் என்றும் அவர் கேட்டார். 1997-98ஆம் ஆண்டின் கணக்கின்படி மத்திய வரிகளின் பங்காக நமது மாநிலத்திற்கு ரூபாய் 2,728 கோடி ரூபாய் கிடைத்தது. 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய வரிகளின் பங்கு ரூ. 2,920 கோடியாக இருக்குமென்று கடந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில் நாம் குறிப்பிட்டிருந்தோம். நமது மாநிலத்தின் நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு, மத்திய அரசு நிதிநிலை அறிக்கை அளிப்பதற்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டதால், அந்தச் சமயத்தில் மத்திய அரசும், மத்திய திட்டக்குழுவும் தெரிவித்தபடி மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தன. ஆனால், மத்திய அரசு அதன் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது இன்னும் குறைத்து மாநில அரசின் பங்கு ரூபாய் 2,413 கோடியாகக் குறைத்து மதிப்பிட்டது. இவ்வாண்டு மத்திய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையின்படி நமது மாநிலத்திற்கு 1998-99இல் ரூ. 2,408 கோடி மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்காக மத்திய அரசு தெரிவித்திருந்தது. மத்திய அரசின் வரி வசூல் குறைவும், தாமாகவே முன் வந்து வருமானத்தைத் தெரிவிக்கும் திட்டத்திலும், VDIS மாநில அரசின் பங்கு முழுமையாக கடந்த ஆண்டிலேயே அளிக்கப்பட்டதே இக்குறைவுக்குக் காரணம். கடந்த ஆண்டிலே அளித்துவிட்டார்கள். அதனால், இந்த ஆண்டு அவர்கள் அளிக்கவில்லை. அது இந்தக் குறைவுக்கு ஒரு காரணம். மாநில சொந்த வரி வருவாய் 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10,024 கோடியாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டிலே 9,625 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கியமான காரணம், விற்பனை வரியின் குறைவான வசூலாகும். வரிச் சலுகைகள் வழங்கியவை, மாநிலத்தில் மோட்டார் வண்டிகள், ஜவுளி தொழில் ஆகிய தொழில்களில் நிலவும் மந்த நிலை ஆகியவற்றின் காரணமாக விற்பனை வரி,

நுழைவு வரி வசூல் குறைந்துள்ள காரணத்தால் திருத்திய மதிப்பீட்டில் குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டு நிலவரி தள்ளுபடி, கேளிக்கை வரி குறைப்பு ஆகியவற்றின் காரணமாக 1998-99ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் வரவுகள் குறைவாகவே இருக்குமெனக் கருதப்படுகிறது.

இன்னொன்றையும் கேட்டார்கள். செலவுக் கணக்கிலே குறைவு ஏன் என்று திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள். அதைப் பார்க்கும்போது, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை மத்திய அரசு நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் நடப்பு நிதியாண்டில் அவர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்கப்படவில்லை. தற்போது முடிவெடுக்கப்பட்டு, வரும் நிதியாண்டில்தான் அவர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்கப்படும். ஆகவே, அதற்கான செலவினத்தில் நடப்பு நிதியாண்டில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப் பட்டிருந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் அளித்த விளக்கத்தைப்போல, முந்தைய ஆண்டுகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கூடுதலாக வழங்கப்பட்ட உதவித் தொகையைச் சரிக்கட்டியதால், 1998-99ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் ரூ. 500 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசோடு இணைந்து செயல்படுத்தும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு மிகவும் குறைந்துள்ளது. இதனால், இத்திட்டங் களுக்கு தேவைப்படும் மாநில அரசின் பங்கும் குறைந்துள்ளது.

இந்த பட்ஜெட் விவகாரங்கள். இதிலே தொகையைப் பற்றிய கணக்குகள், புள்ளிவிவரங்கள், இவை பற்றி 5, 6 பேருக்குத்தான் இதிலே அதிக கவலை, அக்கறை அதைப் பற்றிய விவாதங்கள். இங்கேகூட நேற்றும் இன்றும் நானும் திரு. சொக்கர் அவர்களும் இந்த விஷயங்களை அடிக்கடி

பரிமாறிக் கொண்டிருக்கிறோம். நானும், நிதித் துறைச் செயலாளர் அவர்களிடத்திலே இதைப்பற்றி விளக்கம் கேட்கிறேன். அந்த விளக்கத்தை அவருக்குச் சொல்கிறேன், அதிலே அவர் ஆறுதல் அடைகிறார். ஒத்துக்கொள்கிறார். இதற்காகத்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த பட்ஜெட் என்றால் என்ன, திட்டம் என்றால் என்ன, டெல்லிக்குச் செல்கிறோம், 5 ஆயிரம் கோடிக்குத் திட்ட ஒதுக்கீட்டிற்கு டெல்லி தந்துவிட்டது என்றதும், உடனே ஆஹா 5 ஆயிரம் கோடி கையிலே நான் வாங்கி வந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு பாராட்டுகிறார்கள். அது அல்ல. 5 ஆயிரம் கோடி செலவு செய்து கொள்ள ஒப்புதல்தான், 5 ஆயிரம் கோடி தந்துவிடுவதில்லை. அதற்கு என்ன resource இருக்கிறது, என்ன அடிப்படையிருக்கிறது, அவர்களிடத்திலே நிதி ஆதாரம் இருக்கிறது என்பதைக் கேட்டு, அவர்கள் அதற்குமேல் ஒதுக்குகின்ற மானியங்கள், கடன் தொகை இவையெல்லாம் சேர்த்துத்தான் 5 ஆயிரம் கோடி. முழுமையாக 5 ஆயிரம் கோடி அல்ல அது. அதைப்போல பல நுணுக்கங்கள் பட்ஜெட் விவகாரத்திலே இருக்கிற காரணத்தால், சட்டமன்றத்திலே உள்ள, அக்கறை உள்ள உறுப்பினர்களுக்கு, பட்ஜெட்டை படித்துவிட்டுப் பேச வேண்டும், பட்ஜெட்டிலே இருக்கின்ற விவரங்களைப் புரிந்துகொண்டு பேச வேண்டும், நாமும் ஒரு காலத்திலே ஆட்சி பொறுப்புக்கு வரக்கூடும்.

அப்போது வருகிற நேரத்தில் அதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டும். எனவே, நாம் இப்போதே நம்மைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும் என்கின்ற அந்த அக்கறையோடு இருக்கின்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இதற்காக ஒரு பயிற்சி நடத்த வேண்டுமென்ற விருப்பத்தை நான் ஏற்கெனவே வெளியிட்டு இருக்கிறேன். அதை எப்பொழுது வைத்துக்கொள்ளலாம் என்று நண்பர் சொக்கரும் மற்றவர்களும் என்னிடத்திலே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நேற்றைய தினம்கூட நிதித்துறைச் செயலாளரிடத்திலே அது பற்றிப் பேசி இருக்கிறேன். யார் யாருக்கு விருப்பம் இருக்கிறதோ, அவர்களுடைய பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு எந்தத் தேதியிலே அந்த

நிகழ்வை வைத்துக் கொள்ளலாம் என்று விரும்பினால், அதன்படி நண்பர் சொக்கர் அவர்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு, அவரையே அந்தக் காரியத்திற்காக Convenor ஆக நியமிக்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர் அனுமதிப்பார் என்று கருதுகின்றேன்; (குறுக்கீடு) அனுமதி தருகின்றார். திரு. சொக்கரே Convenor - ஆக இருந்து அந்தக் கூட்டத்தைக் கூட்டி, யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்ற பட்டியலை நிதித் துறைச் செயலாளரிடம் தந்தால், ஒரு நாள் அதற்காக ஒதுக்கி இராஜாஜி மண்டபத்தில் அதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டி, யார் யாருக்கு பட்ஜெட்டிலே என்னென்ன சந்தேகங்கள் வருகிறதோ - Technical Points கணக்கு வழக்குகள், அதிலே யார் யாருக்கு என்ன சந்தேகங்கள் வருகிறதோ, அவற்றை எல்லாம் கேட்டு, அதற்கு நிதித் துறைச் செயலாளர் பதில் சொல்வார்.

நிதித் துறைச் செயலாளரைவிட இன்னும் விஷயம் தெரிந்த நம்முடைய அப்துல் லத்தீப் போன்றவர்களும் உங்களுக்கு விளக்கம் அளிப்பார்கள்; இப்படி அனைவரும் விளக்கம் அளிக்கின்ற வகையிலும், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் எப்போதுமே பட்ஜெட்டிலே பேசும்போது ஆழ்ந்த அனுபவத்தோடு பேசக்கூடியவர்; அவர்கள் எல்லாம் கலந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையிலும் இந்த ஆலோசனைக் கூட்டம், விவரம் அறிகின்ற கூட்டம், விளக்கம் தருகின்ற கூட்டம் நடைபெறும் ஒரு தேதியை நீங்களே நிர்ணயித்து, நிதித் துறைச் செயலாளர் அவர்களோடு கலந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு மெத்த மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அந்தப் பயிற்சி வகுப்பிலே நான் மாணவராகத்தான் இருக்க விரும்புகிறேன்; Convenor - ஆக இருக்க விரும்பவில்லை. ஆகவே, Convenor - ஆக நிதித்துறைச் செயலாளர் அவர்களே இருந்து, நான் மாணவனாக அங்கு பயிற்சி பெற நீங்கள் வாய்ப்புக் கொடுத்தால் போதுமானது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாணவர்கள் கழகங்களுக்கு அமைப்பாளர்கள் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

தலைவர் அவர்களே, அடுத்து, மானிய உதவிகள் - இதைத்தான் நம்முடைய சுப்பராயன் அவர்களுக்கு, சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, - சொக்கரே கூட ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்; படித்துப் பார்த்தேன். - மானிய உதவிகளை அளித்ததில் இந்த அரசு மிகவும் ஆடிப் போய் இருக்கிறது; என்ன திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று இந்த மானியங்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இந்த மானியங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதற்காகவே மத்தியிலே ஒரு சர்க்கார் இப்போது வந்திருக்கிறது. அதற்கு ஏதோ ஒரு வகையிலே உதவிகரமாக நீங்கள் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் நான் கேட்கிறேன், இந்த மானியத்திலே எதைக் குறைக்கலாம்? இதைத்தான் தொங்கு சதை என்றார் நம்முடைய சுப்பராயன் அவர்கள்; இந்தத் தொங்கு சதையிலே எந்தச் சதையை கழிக்கலாம் என்பதை நான் படித்துக் காட்டுகிறேன்; தயவு செய்து சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள் படித்து விடுகிறேன்.

பொது விநியோகத் திட்டத்திற்காக உதவித்தொகை நிதியொதுக்கம் ஆயிரம் கோடி ரூபாய்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டண இழப்பீட்டை ஓரளவு சரிக்கட்ட மானியம் 250 கோடி ரூபாய். இந்தன்னியில் மின் வாரியத்திற்கு 1900 கோடி ரூபாய் இலவச மின்சாரத்துக்காக ஆகிறது. அதிலே அரசு கொடுக்கின்ற மானியம் 250 கோடி ரூபாய்.

சத்துணவுக்கு ஏற்படுகின்ற செலவுக்கு, மாத்திரம் 532 கோடி ரூபாய்.

நிதி உதவி பெறும் அரசுசாரா தொடக்கப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு மானியம் 947 கோடி ரூபாய்.

அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் 192.15 கோடி ரூபாய்.

அரசு உதவி பெறும் தனியார் பல்தொழில் பயிற்சி பயிலகங்களுக்கு மானியம் 22.77 கோடி ரூபாய். மருந்துகளுக்காக ஒதுக்கீடு 115 கோடி ரூபாய்.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்.

கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி மானியம் 72 கோடி ரூபாய்.

மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண அனுமதி 80 கோடி ரூபாய்.

மாணவர்களுக்குச் சீருடைகள் 56 கோடி ரூபாய்.

மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் 25 கோடி ரூபாய்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்திற்கு 70 கோடி ரூபாய்.

முதியோர் உதவித் தொகை மற்றும் பிற ஓய்வூதியங்கள் 141 கோடி ரூபாய். இன்றைக்கு டில்லியிலே அறிவித்து இருக்கிறார்களே, முதியோர்களுக்கெல்லாம் 10 கிலோ அரிசி என்று; அதை ஏற்கெனவே தமிழ்நாட்டிலே நாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம்; அந்தத் திட்டத்திற்காக 141 கோடி ரூபாய்.

சிறார்களுக்கு, சத்துணவு சாப்பிடும் சிறார்களுக்கு, வாரம் ஒரு முட்டை வழங்குவதற்கு 35 கோடி ரூபாய்.

தொழில் மானியங்கள்	50.85 கோடி ரூபாய்
தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு இழப்பீட்டு மானியம் அவர்கள் அதிக விலை கொள்முதலுக்கு கொடுக்க வேண்டுமென்பதால், அந்தப் போராட்டத்தைத் தடுக்க இழப்பீட்டு மானியம் தந்தது	15.00 கோடி ரூபாய்

கதர் தள்ளுபடி மற்றும் தமிழ்நாடு
கதர் மற்றும் கைத்தொழில்
வாரியத்திற்கான மானியம். 17.75 கோடி ரூபாய்

வேளாண் மற்றும் கால்நடை
பல்கலைக்கழகங்களுக்கு
அளிக்கப்படும் மானியங்கள் 67.00 கோடி ரூபாய்

இலவச வீட்டுமனைக்கான ஒதுக்கீடு 36.68 கோடி ரூபாய்

படிப்புதவித் தொகை 85.14 கோடி ரூபாய்

எனவே, இந்த இனங்களுக்கான மொத்த ஒதுக்கீடு சுமார் 5,500 கோடி ரூபாய்.

இதிலே, எந்த இனத்தை மானியம் வழங்காமல் நடத்தலாம் என்பதைச் சொன்னால், அந்த தொங்கு சதையை உடனே வெட்டியெறிய நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு) சொல்லிவிட்டு நீங்கள் வெளியே போக முடியுமா என்பதை மாத்திரம் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

கிராம மக்களுக்கான திட்டங்கள் எதுவும் இல்லை என்று மெத்த வருத்தத்தோடு, ஆதங்கத்தோடு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிலவற்றைப் பாராட்டிவிட்டு, ஆனால் கிராம மக்களைத் தொடக்கூடிய எந்தத் திட்டமும் இல்லை; அவர்களை வாழ வைக்கக் கூடிய திட்டம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 65 விழுக்காடு ஊரகப் பகுதிகளில் வாழ்ந்து வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய நலனைக் கருதி அரசு பல்வேறு துறைகளின் வாயிலாகச் செயல்படுத்தும் திட்டங்களுக்காக 3,755 கோடி ரூபாயை வரும் ஆண்டில் செலவிடவிருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை, மீன்வளம், கால்நடை போன்ற துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்த 1,051 கோடி ரூபாயும், கைத்தறி மற்றும் துணி துறையின்கீழ் திட்டங்களைச் செயல்படுத்த 153 கோடி ரூபாயும், கதர் மற்றும் கிராமத் தொழில்களில் 21 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (EAS), ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JVVT), இந்திரா வீட்டு வசதித் திட்டம் (IAY) போன்ற மத்திய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கும், மாநில அரசு மாத்திரம் செயல்படுத்தும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கும் ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கும் நிதிப் பகிர்வு போன்றவற்றிற்கும் 1,538 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

கிராமப் பகுதிகள் பயன் அடையும் வகையில் பாசன வசதித் திட்டத்திற்காக வரும் ஆண்டு 335 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

இதேபோல் நபார்டு வங்கி நிதியுதவியோடு செயல் படுத்தப்படும், ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு இணையத்தின் மூலம் சாலைகளுக்காகவும், கிராமச் சாலைப் பணிகளுக்காகவும் வரும் ஆண்டில் 327 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் 450 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 6300 குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு வன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 200 கிராமங் களின் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் 97 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஆக மொத்தம் ரூ. 3,755 கோடியை பல்வேறு திட்டங்களுக்கும் வருமாண்டில் ஊரகப் பகுதி மக்களுக்காக இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதே அடிப்படையில் நகர்ப் பகுதிகளில் செயல் படுத்தும் திட்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், அரசு 1,286 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் வாயிலாக வரும் நிதியாண்டில் பல திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது.

மொத்தத்தில் இந்த வகையிலே அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான 5,041 கோடி ரூபாயில் 75 விழுக்காடு கிராமப் பகுதி மக்களின் நலனுக்காக செலவிடப் படவிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை தவிர, அரசு சமூக நலன், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், கல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலன், நுகர்பொருள் வழங்கல் போன்ற துறைகளில் செயல்படுத்தும் திட்டங்களின் பெரும்பாலான பலன்கள் ஊரகப் பகுதி மக்களுக்குத்தான் செல்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைக் குறித்து ஞானசேகரன் அவர்களும், சுப்பராயன் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி சில விவரங்களைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை (Evaluation and Applied Research Department) இயக்குநரின் ஆய்வின்படி கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சுமார் 11 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4.22 இலட்சம் வேலைவாய்ப்பு வேளாண்மைத் துறையிலும், 6.78 இலட்சம் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் சேவைத் துறைகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நம் நாட்டைச் சேர்ந்த மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை அதிக அளவில் பெறுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை

அரசு உருவாக்கி வருகிறது. அரசின் இந்த முயற்சிகளால் தொழில்களுக்கும் கட்டமைப்புப் பணிகளுக்கும் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 48,497 கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. இம்முதலீடுகளால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும். உதாரணமாக, மஹிந்தரா மோட்டார் வண்டிகள் துணை பாகங்கள் தொழிற்சாலை அமைப்பதால் 3,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், இவற்றைச் சார்ந்த தொழில்களில் 10,000 பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாகும். திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், அதைச் சார்ந்த தொழில்களில் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். 'World Tel' நிறுவனத்துடன் அமைக்கப்படவிருக்கும் இணைய மையங்களால் சுமார் 1.50 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் வேலைவாய்ப்பு உருவாகும்.

கடந்த 2 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் 4 இலட்சம் பேருக்கு ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை தவிர, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின்கீழ் 1,902 இலட்சம் மனித நாட்கள் (Man Days) வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, மகளிர் சிறு கடன் உதவி திட்டத்தின் மூலம் கார்ப்பரேஷன்களில் மாத்திரம் இதுவரை 6,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றார்கள். மேலும், எல்லா நகரங்களுக்கும், மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தும் போது இலட்சக்கணக்கான பெண்களுக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதிலே நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் கூறிய கருத்து, தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டே வருகிறார். பத்திரிகையிலும் அறிக்கை விடுகிறார். நேற்றைக்கும் இங்கே அழுத்தம்திருத்தமாகச் சொன்னார். 'இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம்' ஒன்றை அமைக்கவேண்டு மென்று கேட்டு, கடைசியாக குறைந்தபட்சம் அதற்காக ஒரு Committee-யாவது போடுங்களேன் என்று சொன்னார். Committee போடுவதும், பிரச்சினையின் தலையிலே ஒரு கல்லைப் போடுவதும் ஒன்றுதான் என்று பேராசிரியர் கல்கி ஒருமுறை சொன்னார். (சிரிப்பு) அதனால் அப்படிப்பட்ட Committee அல்ல, உள்ளபடியே அதை ஆராய்ந்து, நல்ல கருத்தைச் சொல்லி, அந்த இளைஞர் சுயவேலை வாய்ப்பு நிதி நிறுவனத்தை அமைப்பதற்கான ஒரு Committee-ஐ இந்த அரசு நிச்சயமாக அமைக்கும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மூடப்பட்ட தொழிற்சாலைகள்பற்றி இங்கே வேதனையோடு பேசப்பட்டது. நான் அவர்களுடைய கவலையோடு என்னுடைய கவலையையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனாலும், இதற்கான காரணங்கள் என்ன? அரசா, அல்லது தனியாரா? தொழிலாளர்களா? வேறு என்ன நிலை? என்பதைப் பற்றியெல்லாம் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பல நேரங்களிலே இங்கே விவரமாக கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். கடந்த 3 ஆண்டுகளில் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதனால் 23 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், அதே மூன்றாண்டுகளில் 5,743 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு 98,883 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதை நினைத்து அதை மறந்துவிட வேண்டு மென்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய கஷ்டத்தையும் போக்கவேண்டும். மேற்கு வங்கத்திலே மாதம் 500 ரூபாய், மூடப்பட்ட ஆலைகளிலுள்ள தொழிலாளர்களுக்குத் தரப்படுவதாக பேராசிரியர் தீரன் அவர்கள் நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி விசாரித்து, எப்படி அது வழங்கப்படுகிறது என்பதை நான் அறிந்துகொள்ள இருக்கின்றேன். சுப்பராயன் அவர்களும் அன்றைக்குக்

குறிப்பிட்டார்கள் என்று கருதுகின்றேன். மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு மாத்திரம் மேற்கு வங்கத்தை ஒப்பிட்டுக் காட்டுகின்றவர்கள், பேருந்துக் கட்டணத்திற்கு ஒப்பிட்டு காட்டக் கூடாதா? (சிரிப்பு) 25 காசு, 30 காசு வசூலிக்கிறார்கள் மற்ற மாநிலங்களில். இங்கே 18 காசு வசூலித்து, இன்னும் அதிகமாக பேருந்துகளை வாங்க முடியாத பிரச்சினைக்கு ஆட்பட்டிருக்கிறோம். இங்கே உட்கார்ந்திருக் கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், எங்களுக்கு இரண்டு பேருந்துகள் போதாது. இன்னும் ஒரு பேருந்து கொடுங்கள் என்று யாராவது கேட்டால் போதும், இந்தப் பக்கத்திலே உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் மேசை உடைகின்ற அளவுக்கு மேசையைத் தட்டுகின்றார்கள். (சிரிப்பு). ஆனால் ஒரு காசு, இரண்டு காசு பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இப்படியெல்லாம் பீடிகை போடுவதால் ஒருவேளை உயர்த்தப் போகிறோம் என்று யாரும் அச்சப்படத் தேவை யில்லை. நான் பேருந்து கட்டணத்தை உயர்த்துவதாகவும், இல்லை, தற்காலிகமாக, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

நாமும்கூட பண்டிகைக் காலங்களிலே இந்தத் தொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். பண உதவியும் செய்து வருகின்றோம். இருந்தாலும், மேற்கு வங்கத்திலே எந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன, தனியார் தொழிற்சாலையா, அரசுத் தொழிற்சாலையா என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப்பற்றி எல்லாம் அறிந்த பிறகு, அதைப்பற்றி கூறலாம் என்று இருக்கின்றேன்.

அரசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே, அரக்கோணம் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 1½ இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்று எல்லா தொழிலாளர்களுக்கும் தரப் பட்டு, அவர்கள் தாங்களாகவே பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டு, அந்த அரக்கோணம் தொழிற்சாலை இப்போது ஏலம் விடப்பட்டு அந்த நிலத்தை வேறு ஏதாவது தொழில் வளாகத்திற்குக் கொடுக்கலாம் என்கின்ற எண்ணத்தோடு ஏலம் விடுகின்ற நேரத்திலேகூட அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தொழிற்சங்கத் தலைவர் அதற்கும் தடை பெறுவதற்காக

நீதிமன்றம் சென்றிருக்கிறார். அதற்கும் இடைக்காலத் தடை கிடைத்திருக்கின்றது. எனவே, தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசு நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரப்பரைப்பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழில் நசிந்து போவதை நம்முடைய மணி அவர்களும் மோசஸ் அவர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள். மோசஸ் அவர்கள் எப்போதும் மென்மையாகப் பேசக் கூடியவர்கள். இன்றைக்கு வரவில்லையா? (குறுக்கீடு) பிரச்சினைகளை எழுப்புகின்றவர்கள் பதில் சொல்லும்போது வந்திருந்தால் அவர்களுக்கான விளக்கங்கள் கிடைக்கும்.இரப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலே நலிவடைகின்ற நிலையிலே இருப்பதை நம்முடைய மணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அரசு இரப்பர் கழகத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில், 2,199 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள். அதிலே பால் வெட்டும் தொழிலாளர்கள் 1,427 பேர், களப் பணியாளர்கள் 506 பேர், தொழில்கூடத் தொழிலாளர்கள் 128 பேர், மற்றவர்கள் 138 பேர். இவர்கள் தவிர அரசு இரப்பர் கழகத்திலே மொத்தம் 323 பணியாளர்கள் இருக்கிறார்கள்.

இரப்பர் விலை கடந்த இரண்டு ஆண்டுகளாக இறங்குமுகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு முக்கியமான காரணம், வெளிநாடுகளிலிருந்து இரப்பர் இங்கே ஏற்றுமதி செய்யப்படுவது ஒன்று. மேலும் பாலியூரித்தேன், ஒருமுறை உபயோகிக்கப்பட்ட டயர் ஆகியவற்றை இறக்குமதி செய்வதாலும், இயற்கையான இரப்பருடைய விலை குறைய நேரிடுகிறது. அரசு இரப்பர் கழகம் 1996-97இல் 2,591 டன் இரப்பரும், 1997-98இல் 2,692 டன் இரப்பரும், 1998-99ல் 2,978 டன் இரப்பரும் உற்பத்தி செய்திருக்கின்றது. குறைவான உற்பத்தியை ஒன்றும் செய்யவில்லை. மேலும், மேலும் அதிகமாகத்தான் உற்பத்தியைச் செய்திருக்கின்றது. உற்பத்தி அதிகரித்த போதிலும். 1996-97 ஆம் ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன் இரப்பர்

இங்கே இறக்குமதி செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் இரப்பர் விலை மிகவும் குறைந்துவிட்டது. நாம் அந்த இறக்குமதியை நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் காரணமாக இப்போது இரப்பர் இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கின்றது. என்றாலும்கூட, கேரள மாநிலத்தில் State Trading Corporation தன் கையிருப்பான 50 ஆயிரம் டன் இரப்பரை, சந்தையிலே மலிவாக விற்கத் தொடங்கிவிட்ட காரணத்தால், இறக்குமதியைத் தடை செய்தும்கூட இங்கே உள்ள இரப்பர் விலை அதிகரிக்கவில்லை என்ற செய்தியையும் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் தொழில் பூங்கா அமைக்க நான் முன் நின்று பணியாற்றுவேன் என்று இதே அவையிலே மணி அவர்களுக்கு உறுதியளித்திருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற் பூங்கா அமைக்க, தோவாளை வட்டம் சென்பகராமன்புதூரில் 200 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இரப்பர் தொழிற் பூங்காவிற்கான சாத்தியக் கூறு அறிக்கை கோட்டயத்திலே உள்ள மத்திய அரசு நிறுவனமான இரப்பர் கழகத்தால் தயார் செய்யப்பட்டு, அது வெகு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப் படவிருக்கும் இந்த இரப்பர் தொழிற் பூங்காவில் சுமார் 100 இரப்பர் தொழிற்சாலைகள் அமைய உள்ளன என்பதை நான் மணி அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். இது இரண்டு கட்டத்திலே நிறைவேற்றப்படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் தொழிற்பூங்கா விற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவே, ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இரப்பர் தொழிற் பூங்கா கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் அமைய உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கைத்தறியாளர்களுடைய நிலையைப் பற்றி இங்கே சொன்னார்கள். அதிலும், நம்முடைய ஞானசேகரன் அவர்கள், அரிச்சந்திரா மயான காண்டத்திலே சந்திரமதி புலம்புவதைப்

போல, 'கைத்தறியாளர்கள் கதறுகிறார்கள்; அவர்களெல்லாம் சோற்றுக்கு இல்லாமல் திண்டாடுகிறார்கள்; பிச்சை எடுக்கிறார்கள்' என்றெல்லாம் அவர் பேசியதைப் படித்துப் பார்த்ததைவிட நேரிலே அதைக் கேட்டதை, காதிலே கேட்டதை, உருக உருகப் பேசினார். அதைப்போலவே, பலரும் கைத்தறியாளர் களுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்பதைப் போன்ற கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்றார்கள்.

கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் காப்பீட்டுத் தொகையை இந்த அரசு ரூ. 15,000இல் இருந்து ரூ. 20,000 ஆக 1996-97ஆம் ஆண்டில் உயர்த்தியது. வயது உச்சவரம்பை 58 லிருந்து 60 ஆக உயர்த்தியது. நடப்பாண்டில் இந்தத் தொகை ரூ. 35,000 ஆக உயர்த்தப்பட்டது. மேலும், வரும் நிதியாண்டில், இந்தத் தொகை ரூ. 40,000 ஆக உயர்த்தப்படும் என நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது, கைத்தறியாளர்களுக்காக இதுதவிர, இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களில் 60 வயது வரை பணியாற்றி, ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கும் ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆட்சியில் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆண்டில் 100 நாட்களுக்கு மாத்திரமே 20 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல், ஆண்டில் கைத்தறிப் பொருட்களுக்கு ரூ. 41 கோடி மட்டும் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கைத்தறியாளர்களுக்கு 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதும் வழங்கி வருகிறது. மேலும், முந்தைய ஆண்டுகளில் வழங்கப்படாத ரிபேட்- தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையை ரூ. 43 கோடியாக வழங்கவும் இந்த அரசு அனுமதித்தது.

அகில இந்திய அளவில் துணிச் சந்தையிலே ஏற்பட்ட சுணக்கம் காரணமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் விற்பனை மந்தமானதைத் தொடர்ந்து 31-3-1998ஆம் தேதியில் சுமார் ரூ. 365 கோடி அளவிற்கு சரக்கு தேக்கம் ஏற்பட்டது. இதனையும் நெசவாளர்களின் இதரப் பிரச்சினைகளையும் அறிந்த அரசு, அலுவலர்கள் மற்றும் நெசவாளர் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக்குழுவை அமைத்தது. இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல்வேறு சிறப்புச் சலுகைகளை சட்டப்பேரவையில் நான் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது. இதன்படி, கைத்தறித் துணி வகைகளின் சரக்கு தேக்கத்தைத் தடுத்து, விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 31-03-1998ஆம் தேதியில் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு 01-05-1998 முதல் 31-10-1998 வரை 6 மாத காலத்திற்கு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால், மொத்தம் 202.17 கோடி ரூபாய் மதிப்பிற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எனினும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 31-10-1998 ஆம் தேதியில் லுங்கி ரகம் மாத்திரம் ரூ. 16.04 கோடி மதிப்பிற்கு, இருப்பாக இருந்தது. லுங்கித் துணித் தேக்கத்தைக் கருதி, லுங்கி ரகங்களுக்கு மட்டும் 31-3-1999 வரை 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியை நீடித்து வழங்க அரசு ஆணையிட்டது. இதன் மூலம் 28-02-1999 வரை ரூ. 9.34 கோடி அளவிற்கு லுங்கி விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை அரசு ஆண்டுதோறும் செயல்படுத்துகிறது. 1999 பொங்கல் பண்டிகைக்கு 77,10,000 சேலைகளும், 70,42,000 வேட்டிகளும் குறித்த காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இதன் வாயிலாக, 30,000 கைத்தறிகள் பயன்படுத்தப்பட்டு, ஒரு லட்சம் கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்றார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசு உற்பத்திக்குரிய பொருட்களை ஒதுக்கீடு செய்தல் சட்டம் (Reservation Articles for protection Act, 1985) செயல்படுத்தி, அமலாக்கப் பிரிவை ஏற்படுத்தி, சேலம், திருச்செங்கோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளினால் கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளார்களே தவிர, பசி பட்டினியால் யாரும் பதைக்கப் பதைக்க உயிர் விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய பழனிசாமி அவர்களும் சொன்னார்கள். மற்றவர்களும் இங்கே இதைப்பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே கல்வித் தகுதியை ஏன் எட்டாவது என்பதை பத்தாவது என்று மாற்றினீர்கள் என்று கேட்டார்கள். அதை 1989 ஆம் ஆண்டு அறிவித்தபோது 5,000 ரூபாய்தான். திருமண உதவியாக, நிதியாக அரசு வழங்கியது. அதற்குப் பிறகு நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் இதை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. இதிலே சான்றிதழ் வாங்குவது பெரும் சுமையாக இருக்கிறது. அதை வாங்கப் போகின்ற இடத்தில் - எதிர்க்கட்சித் தலைவரே இங்கே சொன்னார் - எது எதற்கு என்னென்ன ரேட் என்று, அப்படி சில ரேட்டுகளை அடிமட்டத்தில் இருக்கின்றவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், கொடுத்தால்தான் கிடைக்கும் என்கின்ற ஒரு சந்தேகத்தோடு கொடுத்து அந்தச் சான்றிதழ்களைப் பெற வேண்டிய அவல நிலை அந்தப் பெண்களுக்கு இருக்கிறது. அந்தப் பெண்களைப் பெற்றவர்களுக்கு இருக்கிறது. 10,000 ரூபாய் என்றால் ரூ. 2,000 ரூபாய் போனால் என்ன, 8,000 ரூபாயாவது கிடைக்கின்றதே என்கின்ற எண்ணத்தோடு 2,000 ரூபாய் தர வேண்டியிருக்கிறது. சில இடங்களில் பாதிக்குப் பாதிகூட அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இந்தச் செய்திகள்

வந்த வண்ணம் இருக்கின்றன. அதையும் கூறுபவர்கள் நீங்கள்தான். எம்.எல்.ஏ.க்கள்தான். அதைப்பற்றி கடிதங்கள் எழுதுகிறார்கள். இதைப் பற்றி பல இடங்களில் விசாரித்தபோது இதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளை எப்படி நீக்குவது என்று எண்ணிய நேரத்திலேதான், பத்தாவது வரையில் படித்து, தேர்வு கூடப் பெறவேண்டியதில்லை. அதிலே தேர்ச்சி பெறத் தேவையில்லை. பத்தாவது படித்து பரீட்சை எழுதி அதில் தேர்வாகாவிட்டாலும், பத்தாவது வரையிலே படித்ததற்கான Certificate தரப்படும். இயல்பாகவே அந்த Certificate-ஐ தானாகத் தரப்படும். அந்தCertificate-ஐ வைத்துக் கொண்டு அவர்களுக்கு இந்தத் தொகையை வழங்கலாம். இப்படி வழங்குகின்ற நேரத்திலே வேறு எந்த விதியையும் தளர்த்தவில்லை, எடுத்து விடவில்லை. எல்லா விதிகளும் இருக்கின்றன. வருமான வரம்பு. இந்த வருமானத்திற்குக்கீழே உள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படும்; அதிலே ஏழைப் பெண்கள் யாரும் விடுபட்டுப் போய்விட மாட்டார்கள். அதே 70 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அடுத்த ஆண்டு பாருங்கள், இந்த 70 கோடி ரூபாயிலே 70,000 பெண்கள் திருமண உதவி பெற்றிருக்கிறார்களா, இல்லையா என்பதை அடுத்த ஆண்டு பாருங்கள். அப்படிப் பெற்றிராவிட்டால் என்னைக் கேளுங்கள். 'எட்டாவது வரையிலே', என்று மாற்றிக் கொள்ளக்கூட நான் தயாராக இருக்கின்றேன். அந்த அளவிலே அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய பணம் 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் போல' என்று ஆகிவிடக்கூடாது, என்பதற்காகத்தான், நெல்லுக்கே போய்ச் சேர வேண்டுமென்பதற்காக 'பத்தாவது வரையிலே' என்று இந்தத் திட்டம் இப்போது வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தேசியத் தலைவர்கள், தேசத்தினுடைய விடுதலைக் காகப் பாடுபட்டவர்கள், மொழிக்காகப் பாடுபட்டவர்கள், பேரறிஞர்கள் இவர்களை எல்லாம் கௌரவிக்கின்ற அரசு இந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்

நன்றாக அறிவீர்கள். கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டினோம். மருதுபாண்டியருக்கு நினைவகம் அமைத்தோம். பூலித்தேவனுக்கு மாளிகை கட்டினோம். சுந்தரலிங்கம் நகர் உருவாக்கினோம். விசுவநாததாஸ் நினைவு இல்லம், சுபாஸ் சந்திரபோஸ் சிலை, தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம், பெரியார் நினைவு சமத்துவபுரம், காமராஜர் நினைவகம், காமராஜர் உள்நாட்டு விமான முனையம், இராஜாஜி நினைவகம், ஜீவானந்தம் நினைவகம், பக்தவத்சலம் நினைவகம், கக்கன் சிலை, தியாகிகள் மணிமண்டபம், சிப்பாய்க் கலகத்திற்கு நினைவுத்தூண். நாமக்கல் கவிஞர் மாளிகை, பொன்விழா நினைவுச் சின்னம். தியாகிகள் மணிமண்டப முகப்பில் சங்கரலிங்கம் மற்றும் பாஷ்யம் ஆகியோர் சிலைகள். அதை நீங்கள் யாரும் பாராட்டிக்கூடப் பேசவில்லையே. த.மா.கா.விலே பேசியவர்கள் யாரும் சங்கரலிங்கத்திற்கு சிலை. பாஷ்யத்திற்கு சிலை, இதை யாரும் பாராட்டிப் பேசாதது வருத்தத்திற்குரியது. இவ்வளவு சீக்கிரம் அவர்களை மறந்துவிடக் கூடாது.

கட்டபொம்மனுக்கு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒரு விழாவிலே கேட்டுக் கொண்டதற்கிணங்க, நினைவூட்டிய தற்கிணங்க, கயத்தாற்றிலேயே கட்டபொம்மனுக்கு புகழாஞ்சலி - இந்த ஆண்டு 200வது ஆண்டை நினைவுபடுத்துகின்ற வகையிலே புகழாஞ்சலி. அதைப்போல அதற்கு அடுத்த ஆண்டு மருதுபாண்டியருக்கு சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலே நினைவாஞ்சலி காமராஜருடைய மணிமண்டபம் என்ன ஆயிற்று என்று நம்முடைய அப்பாவு அவர்கள் கேட்டார்கள். நம்முடைய டாக்டர் இராமன் அவர்களும் கேட்டார்கள். 19-4-1998 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணிமண்டபத் திறப்பு விழாவிலே பேசும்போது கன்னியாகுமரி கடற்கரையிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்டப்படும் என்று அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பை யொட்டி, அதற்கான ஏற்பாடுகள் உடனடியாக எடுக்கப்பட்டன. எப்போதும் என்னுடைய அறிவிப்புகள் அறிவிப்புகளாக

நின்றுவிடுவதில்லை; உடனடியாக அமலுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி).

காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் - மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 27.09.1996ஆம் நாளிட்ட ஆணையின்படி, கடற்கரைப் பாதுகாப்பு விதிகளின்படி, கடற்கரையிலே இருந்து 500 மீட்டர் தொலைவுவரை கட்டடம் கட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாகும். எனவே, மத்திய அரசின் அனுமதி பெற தொடர்புடைய துறையிடமிருந்து விவரங்களைப் பெற்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறைக்கு 7-8-1998 அன்று அனுப்பப்பட்டது. சில விஷயங்களில் மத்திய அரசினுடைய அனுமதிப் பெற வேண்டியிருக்கும்.

நான் 1969இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, இந்தக் கோட்டை எப்படி இருந்தது என்று ஒருமுறை நீங்கள் மனக் கண்ணால் பார்த்துக் கொள்ளலாம். கோட்டை முழுவதும் கள்ளிக் காடு, பாம்பு, பல்லி என்கின்ற அளவுக்குப் பயங்கர மான காடு முளைத்திருந்தது. எதிரே இப்படி சோலைவனமாக இல்லை. அதிகாரிகளைக் கூப்பிட்டு, 'இதையெல்லாம் சரி செய்யுங்கள்; இந்த மரங்களை எல்லாம் வெட்டுங்கள்; புதர்களையெல்லாம் அழியுங்கள்' என்றேன். அதிகாரிகள் கை பிசைந்து நின்றார்கள். என்ன என்று கேட்டேன். இதெல்லாம் உங்கள் உத்தரவிலே இல்லை; மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டும். இராவணுவத்தைக் கேட்க வேண்டும் என்றார்கள். உடனே மத்திய சர்க்காருக்கு எழுதினேன். அப்போது, திரு. கிருஷ்ணா Minister of State for Defence ஆக இருந்தார். அவர் உடனடியாக எனக்குக் கடிதம் எழுதி, நான் வந்து நேரடியாகப் பார்த்துவிட்டு உத்தரவு போடுகிறேன் என்றார். அவர் வந்து பார்த்துவிட்டு போய், 3 மாதங்கள் கழித்து, இந்தப் புதர்களை எல்லாம் அழிக்கலாம் என்று அரசுக்கு உத்தரவு கொடுத்தார். மாநில சுயாட்சி கேட்பதற்கு, வந்த ஆத்திரத்திலே அது ஒரு காரணம். (சிரிப்பு). இருக்கிற புதர்களையும், கள்ளிக் காட்டையும் அழிப்பதற்கே மத்திய சர்க்காரிடத்திலே உத்தரவு கேட்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. வனத் துறைக்கு 7.8.1998 அன்று அனுப்பப்பட்டது. மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல்

மற்றும் வனத்துறை 7.10.1998 நாளிட்ட கடிதத்தின் மூலம் சில விவரங்களை நம்மிடமிருந்து கோரியது. அந்த விவரங்கள் அனைத்தும் பெறப்பட்டு. தமிழ்நாடு அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதலோடு 21-1-1999 அன்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறைக்கு அனுப்பப் பட்டுள்ளது. மீண்டும் நினைவூட்டுக் கடிதம் 22-2-1999 அன்றும் அனுப்பப்பட்டது. காமராஜர் மணிமண்டபம் கன்னியாகுமரி கடற்கரையில் அமைப்பது தொடர்பாக முழு விவரங்களும் பத்திரிகைகளுக்குச் செய்திக் குறிப்பாக 7-1-1999 அன்று, செய்தித் துறை அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு, 22-2-1999 அன்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையின் இணை இயக்குநரிடமிருந்து வந்துள்ள பதிலில், "The undersigned is directed to refer to the above and inform you that the construction of the proposed Memorial in CRZ I area is not permissible, as per the provisions of the CRZ Notification 1991 as amended from time to time. Therefore, we regret our inability to consider the proposal. You may identify a suitable site for the memorial in conformity with the provisions of the Notification". அதாவது அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்ட கடற்கரை 'ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி அறிவிக்கை 1991இல் உள்ள அம்சங்களின்படி, கடற்கரை ஒழுங்கு முறைப்படுத்தப் பட்ட பகுதி-1இல் கருதப்பட்டுள்ள நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, கருத்துருவைப் பரிசீலனை செய்வதற்கு இயலவில்லை என்பதற்கு வருந்துகிறோம். அறிவிக்கையில் சொல்லப்பட்டுள்ள அம்சங்களுக்கேற்ப நினைவகம் அமைக்கத்தக்க இடத்தை தாங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். இந்த இடம் முடியாது; நாகர்கோவிலிலே, கன்னியாகுமரியிலே வேறு எங்காவது இடம் பாருங்கள்; அந்த இடம் முடியாது.'' எந்த இடம் வேண்டுமென்று அங்குள்ள காங்கிரஸ் நண்பர்களும் மற்ற தோழர்களும் போராடி வருகின்றார்களோ, அந்த இடம் முடியாது என்று மத்திய அரசு இந்தக் கடிதம் மூலமாக அறிவித்தது இவ்வளவு நினைவூட்டுக் கடிதங்களுக்குப்

பிறகும். அது மாத்திரமல்ல; தில்லையாடி வள்ளியம்மைக்கு ஒரு தபால்தலை வெளியிட வேண்டுமென்று எழுதப்பட்ட கடிதத்திற்கு, 'அதுவும் முடியாது. மத்திய அரசின் அஞ்சல் துறை விதிமுறைகளில் பொருந்தி வரவில்லை என்று பதில் வந்துவிட்டது.' தில்லையாடி வள்ளியம்மாள் மத்திய அரசின் அஞ்சல் துறையினுடைய விதிமுறைகளிலே பொருந்தி வரவில்லையாம்! அதனால் இது முடியாது என்று எழுதி விட்டார்கள். பிறகு நான் 1-3-1999 அன்று பிரதமருக்கு, இந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டும் என்று மறுபடியும் கடிதம் எழுதி இருந்தேன். அது போலவே, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அஞ்சல்தலை வெளியிட வேண்டுமென்றும் எழுதியிருந்தேன். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் - தாடியில்லாத பெரியார் என்று அழைக்கப்பட்ட - அந்தக் காரணத்தினாலோ, என்னவோ அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. யார், யாருக்கோ அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது. நான் யாரையும் இதனால் தாழ்த்தியோ, இறக்கியோ பேச விரும்பவில்லை. எல்லோருக்கும் வெளியிடலாம். ஆனால், ஓமந்தூராருக்கு வெளியிட, காந்தியடிகளோடு தென்னாப்பிரிக்கப் போராட்டத்திலே இணைந்து பாடுபட்ட தில்லையாடி வள்ளியம்மைக்குத் தபால்தலை வெளியிட, பெருந்தலைவர் காமராஜருக்கு கடற்கரை ஓரத்திலே மணிமண்டபம் எழுப்ப மத்திய அரசிடமிருந்து வந்துள்ள பதில்களைத்தான் உங்கள் முன்னிலையிலே நான் வைத்திருக்கிறேன். எனவே இது இந்த அரசினுடைய குற்றம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் வளாகம்பற்றிப் பேசும்போது, நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் - அதை தொண்டமான் நினைவு மாளிகை என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது - குறைந்த விலைக்கு வாங்கிவிட்டோம் என்று சொன்னார்கள். அப்போது 35 இலட்சம், 40 இலட்சம் என்றால், இப்போதுள்ள பண மதிப்பீட்டிற்கு அது எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியும். அதனால் மதிப்பைக் குறைத்து வாங்கிவிடவில்லை. இருவருக்கும் திருப்தியாகத்தான் அது வழங்கப்பட்டது. இடையில் நம்முடைய அருமை நண்பர்

அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்னின்றுதான், அந்தக் குடும்பத்தாருடன் பேசி அரசுக்கு அந்த இடத்தை பெறுவதற்கான முயற்சிகளிலே அப்போது ஈடுபட்டார். அதற்குப் பிறகு, அங்கே இராஜகோபால் தொண்டமானுடைய பெயர் அந்த மாளிகைக்கு வைக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அந்தப் பெயர் வைக்கப் பட்டிருக்கிறது. அந்த மாளிகை முகப்பிலே அவருடைய சிலை வைக்கப்பட வேண்டுமென்று திருநாவுக்கரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, விரைவிலே சிலை வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மனிதக் கழிவுகளை அகற்றுகின்றவர்கள் பற்றி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. அதுபற்றிக் கூட இங்கே அன்பில் பொய்யாமொழி பேசும்போது, நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் குறுக்கிட்டு, ஏற்கெனவே உள்ள திட்டம்தான், அதற்கு என்ன நிதி ஒதுக்கியிருக்கிறார்களா என்றெல்லாம் கேட்டார்கள். ஒரு நல்ல திட்டத்தை வரவேற்கிற நேரத்திலே அதற்கு சிறு ஊனம் வருகின்ற அளவிற்குப் பேசுவது முறையாக இருக்க முடியாது. இருந்தாலும்கூட நான் சொல்ல விரும்பு கிறேன். ஏற்கெனவே இது மத்திய சர்க்கார் அறிவித்து, பல மாநில அரசுகளால் பின்பற்றப்படாமல், ஏற்றுக்கொள்ளப் படாமல் அப்படியே இருக்கின்ற திட்டம். நம்முடைய மாநிலம்தான் 1989இல், இந்த ஆட்சி இருந்தபோது இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று, அதற்கான Survey எல்லாம் செய்யத் தொடங்கியது. அதைப் பற்றிய விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க பின்வரும் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன; உள்ளாட்சி அமைப்புகளிலே பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சாலைகளைப் பெருக்குதல் போன்ற மாற்றுப் பணிகள் வழங்கப்படும். மாற்றுப் பணிகள் செய்ய விருப்பம் இல்லாதவர்களுக்கும் உள்ளாட்சி அமைப்பு களில் பணிபுரியாத பணியாளர்களுக்கும் THADCO நிறுவனம் சொந்தமாக வியாபாரம் அல்லது தொழில் செய்ய அவர்களுக்கு உதவிட முன்வரும். துப்புரவுப் பணியாளர்களுக்கோ அல்லது

அவர்களுடைய குடும்பத்தார்களுக்கோ, அவர்கள் விரும்பும் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்திற்கு ஓராண்டு வரை, மாதம் ஒன்றுக்கு ரூ. 350 உதவித் தொகையாகவும் அளிக்கப்படும். வியாபாரம் அல்லது சுயதொழில் தொடங்க 50,000 ரூபாய் வரை நிதியுதவி அளிக்கப்படும். இதில் மானியம் 50 விழுக்காடு, (அதிகபட்சம்) 10,000 ரூபாய், விளிம்புத் தொகை (Margin money), கடன் 15 விழுக்காடு, (இதற்கு வட்டி 4 விழுக்காடு), மீதி 35 விழுக்காடு வங்கிக் கடனாக வழங்கப்படும். 1989-90ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 35,561 துப்புரவுப் பணியாளர்கள் மனிதக் கழிவை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ஏற்கெனவே கொஞ்சம் கொஞ்சமாகப் பணியமர்த்தப்பட்ட 15,000, 16,000 போக மீதமுள்ள 18,000 அல்லது 20,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு THADCO நிறுவனத்தின் மூலம் உதவிட 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம், 1 கோடியே 7 இலட்சம் ரூபாயும் இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுவதன் மூலம் தமிழ்நாட்டில் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் கொடுமை ஒழிக்கப்படுகிறது என்ற நல்ல செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உணவு உற்பத்தி வளர்ச்சியைப் பற்றி கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. இதிலே மொத்த உற்பத்தி வளர்ச்சி 1997-98ஆம் ஆண்டின் அளவான 6.31 விழுக்காட்டோடு ஒப்பிடும்போது 1998-99ஆம் ஆண்டில் 6.78 விழுக்காட்டை எட்டும் நிலையிலே உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 98 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் மகிழ்ச்சியோடு குறிப்பிடப்பட்டிருந்தது. இது பற்றிப் பேசிய நம்முடைய சுப்பராயன் அவர்கள், இதை நான் பாராட்டுகிறேன், ஆனால் இந்த வளர்ச்சிக்கு, இந்த விளைவுக்கு 98 இலட்சம் டன் உங்களுக்குக் கிடைப்பதற்கு

உதவியாக இருந்தவர்களை யெல்லாம் மறந்துவிட்டீர்களே என்றார். அவர்கள் எல்லாம் இந்த பட்ஜெட்டிலே இடம் பெறவில்லையே என்ற மிகுந்த வேதனையோடு அவர் அன்றைக்கு பேசியிருக்கின்றார்.

நான் சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, விவசாயி களுக்காக கவலை தெரிவிப்பது இயல்பானது. அவர்களும் தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஆதாரமாக இருப்பவர்கள் தொழிலாளர்கள், பொதுவான பாட்டாளி மக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்கமாட்டேன். ஆனால், விவசாயிகள் நலனுக்காக எதுவுமே இல்லை என்று பழனிசாமி அவர்கள்கூடச் சொன்னார்கள். 'உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர், இந்தியாவிற்கே அரசியல் நடத்துகிற கலைஞர், ஏன்தான் அந்த விவசாயிகளை மறந்துவிட்டார்களோ தெரியவில்லையே' என்று சொன்னார். எங்கள் வீட்டிலே கேட்பார்கள், 'ஊர் எல்லாம் சுற்றுகிறீர்கள், வீட்டைக் கவனிப்பதில்லை' என்று. (சிரிப்பு). அது மாதிரி நம்முடைய பழனிசாமி 'உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர் விவசாயிகளை கவனிக்கவில்லையே' என்று சொன்னார். எப்படி அவர்களை கவனிக்கிறோம் என்பதைக் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், அதை விவசாயிகளிடத்திலேயும் சொல்ல வேண்டும். இப்போது, விவசாயிகளிடம்போய், கையிலே 100 ரூபாய் கொடுத்தால் தான் அவர்களைக் கவனிப்பதாக அர்த்தமா? அதை சுப்பராயன் விரும்புவாரா? அது தொங்கும் சதை ஆயிற்றே, ஒத்துக்கொள்வாரா? (சிரிப்பு).

அவர்களுக்கு அடிப்படையிலே பொருளாதார ரீதியாக வசதிகளைப் பெருக்குவதன் மூலம் அவர்களுக்கு உதவிட வேண்டும். இப்போது பாசன தண்ணீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்ய ஆற்றுப்படுகைகள், கால்வாய்கள், வடிகால்கள், மற்றும் குளங்கள் ஆகியவற்றை ரூ. 58 கோடி செலவில் தூர்வாருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதாரம் நிலைப்படுத்தும்

திட்டம் மொத்தம் 1,140 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் இதுவரை 344 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 174 பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. பாசனத்திற்காக கடந்த 3 ஆண்டுகளில் 174.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் நிதியாண்டிற்கு 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுடைய நலன்கருதி தரிசு நில மேம்பாட்டிற்கு, வரலாற்றில் இடம் பெறும் திட்டம் ஒன்று, வரும் நிதியாண்டிலேயே தொடங்கப்பட்டு 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டு ஆணையம் (Waste Land Development Authority) ஒன்றையும் அரசு அமைக்கும் என நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறேன்.

தோட்டக்கலை உற்பத்திப் பொருள்கள் உபரியாக இருக்கும் காலத்தில் உழவர்கள் அவற்றைச் சேமித்து வைத்து நியாயமான விலை பெற ஏதுவாக குளிர்பதன சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் 40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு உள்ளது. 1997-98ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உரத்திற்கான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. பருத்திக்கான கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மேலும் சொட்டு நீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு முழுவரி விலக்கு அளிக்கப்பட்டது.

1999 – 2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் விசை உழவுக் கருவிகள், இழுவைகள் மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது, இந்த ஆண்டிலே விவசாயிகளுக்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் அரசுக்கு 44 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது.

விவசாயிகளுக்கு அரசு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் 1996-97 ஆம் ஆண்டில் 6,678 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்பட்டு, அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1,321 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் 7,196 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்பட்டு 1,580 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு 7,586 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 58 காசு என்ற வீதத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1,945.19 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இவ்வாறு ஏற்பட்ட மொத்த இழப்பு 4,747 கோடி ரூபாய் என்பதை நான் ஞாபகப்படுத்துகின்றேன்.

தமிழ்நாட்டில் விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை நாட்டிலேயே மிகவும் குறைவானது ஆகும். இது 1962ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படவே இல்லை. பெரிய, நடுத்தர மற்றும் சிறுபாசனங்கள் மூலம் அரசுக்கு இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் மாத்திரமே வரவு கிடைக்கும். ஆனால், இந்தப் பாசனத் திட்டங்களைப் பராமரிக்கும் செலவு 37 கோடி ரூபாய். 37 கோடி ரூபாய் செலவழித்துவிட்டு, 10 கோடி ரூபாய்தான் வரியாகப் பெறுகிறோம். இந்த வகையிலும் விவசாயிகள்தான் பயன் அடைகின்றார்கள். இது தவிர, ஆண்டில் உணவு தானிய உற்பத்தி, தரிசு நில மேம்பாடு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 48 கோடி உதவித் தொகையாக வழங்கி, அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமங்களுக்கு இணைப்புச் சாலை, ஊரகக் குடிநீர்த் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்றவை எல்லாம் கிராமங்களிலே உள்ள விவசாயி களுடைய நலன் கருதி தீட்டப்படும் திட்டங்கள்தான். தமிழகத்திலே 1993லேயிருந்து 1995 வரை, 6.6 விழுக்காடாக உயர்ந்த விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி, 1996 லேயிருந்து 1998 வரை 26.8 விழுக்காடாக விவசாயிகளுடைய கூலி உயர்ந்துள்ளது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைப்புள்ளிக் குறியீடு (Price Index), அவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைப்புள்ளி

குறியீடுகளைவிட (Terms of Trade) 20 விழுக்காடு உயர்ந்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இந்த விவாதத்தில் அவையின் பல உறுப்பினர்கள் விவசாயி களுடைய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டு மென்று கூறியிருக் கிறார்கள். அவ்வாறு செய்வதற்கு நபார்டு வங்கி ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே அதற்குப் பதிலாகத் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆந்திராவிலே இருப்பதைப்போல செய்யக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவரும் கேட்டார். பழனிசாமி அவர்களும் கேட்டார்கள். மற்றவர்களும் கேட்டிருக்கின்றார்கள். இந்த மாநிலத்தில் தஞ்சையில் மாத்திரம் 60,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை கிடையாது என்றும், இந்தச் சலுகை மாநிலம் முழுமைக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையில் மாநிலம் முழுவதும் இயங்கிவரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 11,21,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாயம் மற்றும் விவசாய சார்புடைய குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களைப் பெற்றுள்ளார்கள். இவர்களில் நிலுவையிலே உள்ள கடன்கள் முழுவதையும் வட்டி மற்றும் அபராத வட்டியோடு நடப்பு கூட்டுறவு ஆண்டில் திருப்பிச் செலுத்துவோருக்கு திருப்பிச் செலுத்தவேண்டும். செலுத்திய பிறகு வேறு கேட்கக்கூடாது. அதையெல்லாம் adjust பண்ணிக்கொள்வோம், உங்களுக்குத் தெரியும், அங்கே போய் திருப்பிச் செலுத்துவோருக்கு அவர்களது நடப்புக் கடனில் 6.25 விழுக்காடு தொகையை, ஊக்கத்தொகையாக தமிழக அரசு வழங்கும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

உதாரணமாக, ரூ. 5,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ. 312.50 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ. 10,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ. 625 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ. 25,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு

ரூ. 1,562 ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்தக் கணக்கைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டில் ஏற்கெனவே செலுத்தியவர்களுக்கு இந்தத் தொகை ஈடுசெய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றோடு பல திட்டங்களை அறிவித்தேன். நேற்றைய தினம் பொதுப்பணித்துறை அமைச்சர் என்னிடத்திலே பேசிக்கொண்டிருந்தபோது ஒன்றைச் சொன்னார். இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ள தொகையில் 'டெண்டர்' விட்டதில் அதைவிடக் கொஞ்சம் குறைவான செலவுதான் தஞ்சை போன்ற இடங்களில், திருச்சி போன்ற இடங்களில் ஆகும் என்று தெரிகிறது. ரூ. 10, 12 கோடி மிச்சம் ஏற்படும் என்று தெரிகின்றது என்றார். அப்படியானால் வேறு மாவட்டங்களுக்கு அதைத் திருப்பு என்று பொதுப்பணித் துறை அமைச்சரிடம் திருப்புங்கள் – என்று சொன்னேன். அவையிலே சொல்லக்கூடாது திருப்பு என்று. அதன்படி கீழ்பவானி ஆற்றுப் பாசனப் பகுதியிலே உள்ள பாசனக் கால்வாய்கள் நீண்ட காலமாக தூர் வாரப்படாமலும், பழுதடைந்து கட்டுமானப் பகுதிகள் சீர் செய்யப்படாமலும் இருப்பதால் கடைமடைக்கும் மற்றும் அதன் பாசனப் பகுதிகளுக்கும் போதிய நீர் கிடைக்கவில்லை. இக்குறையைப் போக்க வேண்டுமென்று திருமதி. சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் நேற்றைய தினம் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். இந்த மிச்ச ரூபாயை என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்த போது அதற்கு ஒரு கிராக்கி வந்துவிட்டது. அதன்படி அந்தக் குறையைப் போக்க இந்த ஆண்டு முதல் தவணையாக ரூ. 10 கோடி அதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைப்போலவே நெல்லை, தூத்துக்குடி மாவட்டங் களில் பாசனத்திற்குப் பயன்படும் தாமிரபரணி, குமரி மாவட்டத்திலே பாயும் கோதையாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளிலே உள்ள கால்வாய்களை இந்த ஆண்டே சீர் செய்து தூர் வாரித்தரப்பட வேண்டுமென்று பொதுப்பணித்துறை அமைச்சருக்கு வேண்டுகோளாக விடுத்திருக்கிறேன். அவர் எழுதிக் கொடுக்கும்போது 'உத்தரவிட்டிருக்கிறேன்' என்று

எழுதிக் கொடுத்திருக்கிறார். பொதுப்பணித் துறை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். உலக வங்கி நிதியிலிருந்து இப்பணிக்குப் போதிய நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வரிகளைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மேலும் இந்த வரி மாற்றம் பற்றிய சில அறிவிப்புகளை இங்கே வழங்க நான் முன்வருகின்றேன்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் பகுதி 'டி' வரிசை எண் 67லிலே உள்ள, எந்த அட்டவணையிலும் இடம் பெறாத பிற பொருட்கள் அவற்றுக்கு ஈடான பொருட்கள் இடம் பெறும் பகுதிகள் சேர்க்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இதுபற்றி சிறு விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக, என்னென்ன இனங்களுக்கு 11 விழுக்காடு வரியிலேயிருந்து வரி விலக்கு. வரி குறைப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் உதாரணங்களோடு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பருத்தியினால் செய்யப்பட்ட கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், கரும்புச் சக்கை போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழுவிலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகர்பத்தி, வெப்ப அளவி, லேக்டோஸ் IP/BPஆக காலி Gas சிலிண்டர். அனைத்து வகை கம்பித் தடுப்புகள் (Grills) காகித நாப்கின்கள், சாவிக் கொத்துக்கள், போட்டோ ஆல்பங்கள், இரும்பு அல்லாத மற்றும் கலப்பு உலோகங்களின் கழிவுகள், கண்ணாடிப் புட்டிகளில், சாஷேய்களில், கேன்களில் அடைக்கப்பட்ட தண்ணீர், Distilled Water, செயற்கை எலும்புகள், எலும்பு சிமெண்டு, Abdominal Belt, Knee Cap போன்ற பொருள்களுக்கு விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பழுதடைந்த (Condemned) கோணிப் பைகள், அனைத்து வகை கொசு வலைகள், நாப்தலின் உருண்டைகள், சணலினால் செய்யப்பட்ட மேஜை விரிப்பு, மிதியடி, கைவினைப் பொருட்கள், உடற்பயிற்சிக்கான பொருள்கள் மற்றும் உபகரணங்கள், குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டுச்

சாதனங்கள், ஓட்ஸ், பாத்திரங்களை சுத்தப்படுத்தும் பொடிகள், வேர்க்கடலை, எள், பொரி, வறுகடலை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வறுகடலை, (குறுக்கீடு) நிறைய சாப்பிட்டிருக் கிறீர்களா? இப்போது முடியாது போல இருக்கிறதே? வேர்க்கடலை, எள், பொரி, வறுகடலை மற்றும் பட்டாணி, பருப்பு வகையினால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், வணிகச் சின்னமிடப்பட்ட சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் போன்ற காய்கறி வத்தல்கள், செம்மண், சிகப்பு சரளைக் கற்கள், ஆகிய பொருட்களுக்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

வணிகச் சின்னம் இல்லாத சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் போன்ற காய்கறி வத்தல்கள் ஆகியவற்றிற்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) .

அட்டவணைப்படுத்தும், கணக்கிடு இயந்திரங்களுக்கு (மின்னணு அல்லாதவை – பிரிவு ஜி, வரிசை எண் 18) விழுக்காடு வரியிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நடுத்தர அடர்த்தி இழை அட்டை, எம்.டி.எஃப் போர்டுக்கு வரி 16 விழுக்காட்டி லிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் மேற்கண்ட பொருட்கள் 16 விழுக்காட்டில் நீடிக்கும் வகையில் அட்டவணையில் குறிப்பாகச் சேர்க்கப் படுகிறது.


தமிழ் தினசரி நாட்காட்டிக்கு, வரி 8 விழுக்காட்டி லிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது ரத்னவேலுக்காக.

பழைய புட்டிகள் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை விலக்கி, அந்த புட்டிகளை வாங்கிப்

பயன்படுத்துவோருக்குக் கொள்முதல் வரியாக அது மாறி அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு (குறுக்கீடு) இப்போதிருக்கிற அதே விழுக்காடுதான். இந்த அளவோடு இந்த வரி மாற்றங்களை வெளியிடுவதோடு. . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் பேசி முடிக்கவே இல்லை. கொஞ்சம் இருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: வரிக்கு வரி இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் படித்து அருமையான உரைகளை, கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் (குறுக்கீடு) நன்றியினைத் தெரிவித்து, அண்ணா வாழ்க, என்று கூறி என் உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



உரை : 29 நாள் : 4.4.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்தில், விவாதங்களுக்குப் பதில் அளிக்கின்ற நாளான இன்று, என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்பு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாளையதினம், கேரள மாநிலம், திருவனந்தபுரம் சென்று அந்த மாநில முதலமைச்சர், அன்பிற்குரிய நண்பர் நாயனார் அவர்களைச் சந்தித்து, முல்லைப் பெரியாறு அணைக்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாழ்த்துத் தெரிவித்திருக் கின்றார். அதற்காக நான் நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வாழ்த்தைத் தொடர்ந்து அவர் பேசிய வார்த்தைகள் எல்லாம், கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்தைப் போலத்தான் எனக்குத் தெரிந்தது. ஏனென்றால், கிருஷ்ண பரமாத்மா பற்றி அவர்களுக்குத் தெரியும். (சிரிப்பு) கிருஷ்ண பரமாத்மா எப்படிப்பட்டவர் என்று எல்லோருக்கும் தெரியும். வாழ்த்துகின்ற மாதிரி இருக்கும். ஆனால் அதற்குள்ளே சாபம் அடங்கியிருக்கும். அதுதான் கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்து. நான் எப்பொழுதும் கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்தை நம்புகிறவன் அல்ல. இருந்தாலும் நம்புகிறேன். அவர்கள் 'நீ போ, உன்னை வாழ்த்துகிறேன்; ஆனால் நீ திரும்பி வரும்போது 152 அடிவரை நீரைச் சேமித்துவிட்டு வந்தால்தான் நான் ஒத்துக்கொள்வேன். இல்லாவிட்டால் தமிழ்நாட்டிற்கு அதைவிடத் துரோகம் கிடையாது என்று சொன்னார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் எப்போதும் அவசரப்பட்டு பேசுகின்றவர் அல்ல. இருந்தாலும் கொஞ்சம் யோசித்து அவர் பேசியிருக்கலாம். இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், 145 அடி கொடுக்கலாம் என்று மத்திய சர்க்காரே சொல்லி, அதனால் ஒன்றும் அந்த அணை கெட்டுப் போய்விடாது, அந்த அணை பலமாகத்தான் இருக்கிறது என்று சொல்லி, அந்த முடிவைக் கேரள அரசு ஏற்றுகொள்ளாத ஒரு சூழ்நிலை. அது நாயனாருடைய எண்ணம் என்றுகூட நான் சொல்லமாட்டேன். அங்குள்ள அரசியல் சூழ்நிலை. அண்டை மாநிலங்களோடு ஏற்படக்கூடிய உறவைக் கெடுப்பதே ஆங்காங்கு எழுகின்ற அரசியல் சூழ்நிலைகள்தான். அந்த வகையில் நாயனார் அவர்கள் எதையும் உடனடியாகச் சொல்ல இயலாத அளவுக்கு அரசியல் நெருக்கடி அவருக்கு அங்கே இருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

இதுபோன்ற நேரங்களில் உண்மை என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த முல்லைப் பெரியாறு அணை பலமாக இருக்க வேண்டுமேயானால், ஒரு Baby dam கட்ட வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது. ஆனால் அதுவும் தற்போது தடைப்பட்டிருக்கிறது. அதற்கும் சேர்த்துத்தான் இந்தப் பேச்சுவார்த்தை. baby dam கட்டினால்தான் 152 அடி தண்ணீரைத் தேக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது. 145 அடி வரை ஒத்துக்கொண்டு, baby dam கட்டிய பிறகு 152 அடி தண்ணீரைத் தேக்குவது என்கின்ற ஒரு சமரச நிலையும் அதிலே இருக்கின்றது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொத்தாம்பொதுவில், '152 அடி என்று வராவிட்டால் நீ துரோகி' என்று (குறுக்கீடு) அவருக்கு ஆசை இருந்தால் சொல்லட்டும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தயவுசெய்து முதலமைச்சர் அவர்களை, 'துரோகி' என்ற அந்த வார்த்தையை நான் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அப்படிச் சொல்லியிருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். நீங்கள் திரும்பும்போது 152 அடியோடு வர வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லையில்லை. துரோகம் செய்வதாகப் பொருள் என்று நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: அப்படிச் சொல்லியிருந்தால் மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உங்கள் விருப்பம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: 152 அடி என்பது எப்பொழுது சாத்தியப்படும் என்றால், Baby dam முடித்திருக்க வேண்டும். நாமும் நியாயத்தைப் பார்க்க வேண்டும். Baby dam கட்டாமல், 152 அடி என்று சொல்வது முறையல்ல. ஆனால் Baby dam கட்டுவதற்கு ஏற்கெனவே சாத்தியக்கூறுகள் எல்லாம் ஏற்பட்டு, அதைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். கட்டும்பொழுது கேரள அரசு அதைத் தடுத்துவிட்டது. அப்படித் தடுத்ததை நிறுத்திக்கொண்டு, கட்டுவதற்கான அனுமதியும் தந்து 145அடிக்கு அவர்கள் உடனடியாக ஒப்புதல் தருவார்களேயானால் அதைப் பற்றிப் பேசலாம். 152 அடி என்பதுதான் நம்முடைய குறிக்கோள். ஆனால் கிடைப்பதையும் விட்டுவிட வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. கே. சுப்பராயன்: Point of order. பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பேசியதை ஒட்டி பதில் அளிக்கிறார்கள். நான் ஒரு மிக முக்கியமான பிரச்சினையைத் தங்கள் மூலம் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், நாளை நடைபெற இருக்கின்ற பேச்சுவார்த்தையின் தன்மைக்கு உள்ளே நாம் போவது என்பது விவேகக் குறைவானதாக அமைந்து விடக்கூடும். பிரச்சினை முடிவுக்கு வருவதற்கு அதுவேகூட ஒரு எதிர்மறை அம்சமாகத் தோன்றிவிடக்கூடும் என்பதால், அருள்கூர்ந்து இந்த விவாதத்தை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போவதுதான் புத்திசாலித்தனம். புத்திசாலித்தனமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: சுப்பராயன் அவர்களுக்கு இந்தப் புத்திசாலித்தனம் முன்பே வந்திருக்க

வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டு இருக்கும் போது இந்தப் புத்திசாலித்தனம் சுப்பராயன் அவர்களுக்கு வந்து இருக்குமேயானால் நான் மகிழ்ந்து இருப்பேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இருந்தாலும் தாமதமாக வந்த புத்திசாலித்தனத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய வரவு–செலவுத் திட்ட அறிக்கை வெளிவந்தவுடனேயே இதைப் பற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைக்காரர்களிடத்தில்...

திரு. என்.ஆர். அழகராஜா: Point of clarification, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால் நிச்சயம் வெளியேற்றுவேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ''நிதிநிலை அறிக்கை, ஏற்கெனவே செயல்படுத்திக் கொண்டிருக்கிற எந்தப் பயனும் இல்லாத நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், உழவர் சந்தை, சமத்துவபுரம் ஆகிய திட்டங்களைப் பற்றித் தெரிவிப்பதாக இருக்கிறதே தவிர, புதிதாக எந்தத் திட்டமும் அறிவிக்கவில்லை. மொத்தத்தில் இந்த அறிக்கை மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கேற்ப ஒரு திட்டமும் இல்லாத, ஒப்பு சப்பு இல்லாத நிதிநிலை அறிக்கை'' என்று பேட்டி கொடுக்கிறபோது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எந்தப் பயனும் நமக்கு நாமே திட்டத்தால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால், உழவர் சந்தையால், சமத்துவபுரத்தால் இல்லை என்று கூறியிருப்பதுதான் எனக்கு வியப்பூட்டுகிற பகுதிகளாகும். சமத்துவபுரத்தால் எந்தப் பயனும் இல்லை என்று இப்போது சொல்வதும், இதே அவையிலே மாண்புமிகு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களால் புகழ்ந்து போற்றப்பட்ட, பேசப்பட்ட நமக்குநாமே திட்டத்தால் எந்தப் பயனும் இல்லை என்று சொல்வதும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எங்கள் ஊருக்கு இன்னும் விஸ்தரித்துக்

கொடுங்கள் என்று கேட்கிற அளவுக்கு நல்ல திட்டம் என்று தமிழ் மாநில காங்கிரஸ் நண்பர்களாலேயே பாராட்டப்பட்ட திட்டங்கள் எதிர்க்கட்சித் தலைவரால் எந்தப் பயனும் இல்லாத திட்டங்கள் என்று கூறப்பட்டிருப்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

நம்முடைய அருமை நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசும்போது, இதிலே எதுவுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். இதில் எதுவுமே இல்லை என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், தோழமைக் கட்சிகளாக இருந்து எதிர்க்கட்சியா அல்லது எதிரிக் கட்சியா என்ற இரு நிலைகளுக்கு இடையிலே உள்ளவர்கள் எல்லோருமே இதைப் பற்றி, ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். நானும் மீண்டும் ஒரு முறை – ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்கிறார்களே!' என்று மீண்டும் ஒரு முறை – நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.

50 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படவிருக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்திட தொலைநோக்குத் திட்டம்; 21ஆம் நூற்றாண்டிற்கு தமிழகத்தை அழைத்துச் செல்ல உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை – Biotechnology. Biotechnology என்பது சாதாரணமானதல்ல. இப்போது வளர்ந்து வருகிற விஞ்ஞானத்தில், குளோனிங் என்கிற முறை வந்திருக்கிறது. அதுவரையிலே வரக்கூடிய ஒரு technology-தான் Biotechnology. வரும் நிதியாண்டில் எஞ்சிய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு கலை மற்றும் தொழில் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சித் திட்டம்: தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோருக்குக் கடன் வழங்க ஊக்க மூலதன நிதி – Venture Capital Fund; கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை போன்ற நகரங்களில் செயற்கைக் கோள் தரை நிலையங்கள், Earth Stations வரும் ஆண்டில் அமைத்துத் தர முடிவு; அனைத்து வட்டாட்சி அலுவலகங்களும் முழுமையாகக் கணினிமயமாக ஆக்கப்படும்; அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் கணினி வசதி செய்யப்படும்; வரும் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும்; பழங்குடியினர் நலனைக் கவனிக்கத் தனியாக இயக்ககம் உருவாக்க முடிவு; இளைஞர்களுடைய விளையாட்டு

மேம்பாட்டுக்கென தனியாக ஒரு துறை அமைப்பு; ஆதரவற்ற முதியோர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 150 ரூபாய் என்பது 200 ரூபாயாக உயர்வு; அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகள் வீடு கட்டி அனுபவித்து வருபவர்களுக்கு அந்த இடத்தை உரிமையாக்கி வீட்டுமனை பட்டா வழங்குதல்: 6ஆம் வகுப்பிலே பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஏற்கெனவே இந்த அரசு வழங்குவது போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த 30 ஆயிரம் மாணவிகளுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் வழங்கும் திட்டம்.

அதேபோல 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 60 ஆயிரம் மாணவியருக்கு ஓராண்டுக்கு 500 ரூபாய் வீதம் ஊக்கத் தொகை: ஊனமுற்றோர்களுடைய வேலைவாய்ப்பை அதிகரித்திட 6 பயிற்சி மையங்கள் அமைத்து 300 பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக அளித்தல்; மேலும் 6 மையங்களில் ஆய்வுக்கூடப் பரிசோதனை, X-ray பரிசோதனை, E.C.G., E.E.G., இதர நவீனப் பரிசோதனைகளை மேற்கொள்ள 300 பேருக்குப் பயிற்சி; சமூக சீர்திருத்தத் துறை மூலமாக மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை மீட்க பிரச்சாரம் செய்திட முடிவு; 60 வயதிற்குள் இறக்க நேரிடும் நெசவாளர்கள் குடும்ப ஓய்வு நிதி 5 ஆயிரம் ரூபாயாக உயர்வு. 60 வயதைத் தாண்டிய நெசவாளர்கள் பயன்பெற மாத ஓய்வூதியத் தொகை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்வு; பத்திரிகையாளர்களுடைய ஓய்வூதியம் 1500 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்வு; பத்திரிகையாளர் பணிபுரியும்போது இறந்துவிட்டால் வழங்கப்படும் நிதி 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்வு; மாவட்டத் தலைமையிடங்களில் அரசு அலுவலர்களுக்கு 2144 வாடகைக் குடியிருப்புகள்; புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைமையிடங்களிலும், திருப்பூர் போன்ற நகரங்களிலும் புதிதாக சார்பு நகரங்கள் (Satellite Towns) உருவாக்க முடிவு; சத்துணவு பெறும் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்ட 18 பைசா என்பது இனி 23 பைசாவாக உயர்த்த

முடிவு; மகளிர் திட்டங்களை ஒருங்கிணைத்து 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம். உலகத் தரம் வாய்ந்த காஞ்சிபுரம் பட்டு, தஞ்சாவூர் தட்டு போன்ற பொருட்களுக்கு 'வணிகச் சின்னம்' அமைத்து, உலக அளவில் Market ஏற்படுத்தித்தர முடிவு; கைவினைப் பொருட்களுக்கு 'பூமாலை' என்னும் வணிகச் சின்னம் அமைத்து, அவற்றை விற்பதற்கு ஏதுவாக விற்பனை மையங்கள்; இந்த பூமாலையைத்தான் த.மா.கா. உறுப்பினர் இராமன் அவர்கள் பேசும்போது 'யார் காதில் பூமாலை சுற்றப் பார்க்கிறீர்கள்' என்று சொன்னார்கள். பூமாலை சுற்றுகிற அளவுக்கு இராமன் காது அவ்வளவு பெரிய காது அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

24.10.2001 அன்று மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200ஆவது ஆண்டை நினைவு கூர்ந்திட அரசு சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி; சாமி சிதம்பரனார், மயிலை சீனி வெங்கடசாமி, கவிஞர் முடியரசன் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, அவர்கள் குடும்பத்திற்குத் தலா 10 இலட்சம் காப்பு நிதி; திருச்சி தலைக் காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக அறிவிப்பு. மாநிலமெங்கும் இளைஞர்களை ஊக்குவிக்க விளையாட்டுப் பயிற்சிகள், போட்டிகள் அறிவிப்பு; பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு நிவாரணம் காண உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு.

வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்து அறிவியல் அலுவலர்களாக மாற்ற முடிவு: ஓசூரில் மலர்ப் பூங்கா, சென்னைக்கருகே ஆடை தயாரிக்கும் பூங்கா, கடலூரில் தொழில் பூங்கா, நாங்குநேரியில் உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா, 3000 ஏக்கரில்; வரும் நிதியாண்டில் மாத்திரம் 696 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு; வரும் நிதியாண்டில் ஆயிரம் உள்நாட்டு மீனவர் களுக்கு வீடுகட்ட முடிவு; 10 இடங்களில் மீனவர் அங்காடி முதல்கட்டமாக அமைக்கப்படும்; தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளுடைய பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேச முடிவு; குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு மற்றும் கொடிங்கால் வடிகால் அகலப்படுத்தப்படும். உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும்.

தூர் வாருவதற்கு இந்த ஆண்டும் 50 கோடி ரூபாய்; ஆலந்தூர் மாடல் பாதாள சாக்கடை வசதித் திட்டத்தைப் பரவலாக்கத் திட்டம்; 6 ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள் நியமனம்; 4 ஆயிரம் காவல் துறையினர், தீயணைப்புப் பணியாளர்கள் நியமனம்; மாநில அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு இட ஒதுக்கீடு குறித்து வெள்ளை அறிக்கை; நான்கு மாவட்டங்களில் ஊரகத் தூய்மை இயக்கம்; சொந்தக் கிராமங்களில் கல்விக்கூடங்கள், மருத்துவமனை அமைக்க முன்வருபவர்கள் பெயர் சூட்ட ஒப்புதல்; மாவட்டத் திட்டக் குழுக்கள் இனி மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் தலைமையிலே இயங்க முடிவு; தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்; கன்னியாகுமரியில் இரப்பர் தொழிற் பூங்கா. அபிஷேகப்பட்டியில் கால்நடைப் பண்ணையைச் சீர்திருத்தி மேம்பாடு செய்தல்; மதுரை மாநகரில் உயர்நீதிமன்றக் கிளை; வணிகர்களுக்கான பல்வேறு சலுகைகள் வரிக் குறைப்பு, வரி நீக்கம்; திரைப்படத் துறைக்கு வரிச் சலுகைகள்: இவ்வளவும் அடங்கியுள்ள இந்த நிதிநிலை அறிக்கை எதுவுமே இல்லாதது, ஒன்றுமே இல்லாதது என்று பேசப்பட்டதுதான் எனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, நம்முடைய அருமை நண்பர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா ஞானசேகரன் அவர்கள், அவர்களுடைய உரையின் தொடக்கத்தில் ஒன்றைச் சொன்னார்கள். வரி இல்லாத பட்ஜெட், வரி இல்லாத பட்ஜெட் என்கிறீர்களே, இதோ, நான், இன்றைய முதலமைச்சர் அன்று பேசிய பேச்சைப் படித்துக் காட்டுகிறேன் என்று, என்னுடைய பழைய பேச்சை இங்கே படித்துக் காட்டினார். அதற்கு நான் உதவியதற்காக எனக்கு நானே நன்றி கூறிக்கொள்கிறேன். 4.3.1966ல் நான் ஆற்றிய உரையை மேற்கோள் காட்டினார். அந்த மேற்கோளில் முழுப் பேச்சையும் படித்துக் காட்டியிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். அதை நான் படித்துக் காட்டுகிறேன். (சிரிப்பு) அன்று அவர்கள் மேற்கோள் காட்டிய என்னுடைய பேச்சில்.

‘‘வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே வரி போட்டால் அது பெரும் பிரச்சினை என எண்ணி, மிகத் தந்திரமாக, கடந்த

இரண்டு மாதங்களுக்கு முன்பே, போட வேண்டிய வரியை எல்லாம் போட்டு – இரண்டு மாதங்களுக்கு முன்பே, போட வேண்டிய வரியை எல்லாம் போட்டுவிட்டு'' என்று நான் பேசியதை ஞானசேகரன் படிக்கும்போது சொல்லவில்லை, அதை மாத்திரம் விட்டு விட்டுப் படித்திருக்கிறார். ''இந்த மன்றத்தினுடைய பெரும்பான்மையான ஒப்புதலையும் பெற்ற, அந்த வரிகள் இன்றையதினம் நடமாடிக்கொண்டிருக்கிற நேரத்தில், வரி இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு வாதத்தை ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுப்பிக் கொண்டிருப்பது உள்ளபடியே விந்தையாக இருக்கிறது.'' உடனே, அந்த நடவடிக்கைக் குறிப்பிலே கனம் பக்தவத்சலம் குறுக்கிட்டு, ''மேலும் வரி இல்லை என்பதுதான் வாதம்'' என்று சொல்கிறார். அப்போது நான் தொடர்ந்து பேசுகிறேன்.

''கலைஞர் மு. கருணாநிதி : மேலும் வரி இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார். தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கூறுவதைப்போல்தான் 'மேலும் வரி இல்லை' என்று கூறுவது இருக்கிறது. தோட்டா இல்லாத துப்பாக்கி என்றால், தோட்டாவே போடப்படாத துப்பாக்கி என்ற பொருளும் அல்ல. இருந்த தோட்டாக்கள், ஏழை எளியவர்கள் என்ற புள்ளிமான்களை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டு, இப்போது தோட்டா இல்லாத காலித் துப்பாக்கியாகக் காட்டப்படுகிறது. மேலும் வரி இல்லை என்று கூறப்படுகிறது. இரண்டு திங்களுக்கு முன்பாக ஏறத்தாழ 8 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டுவிட்டு, 'மேலும் வரி இல்லை' என்று தோட்டா இல்லாத துப்பாக்கி காட்டப்படுகிறது'' என்று பேசியிருக்கிறேன். தோட்டா இல்லாத துப்பாக்கிதான் என்பதற்காக அதை எடுக்காமல் விட்டுவிட்டார் ஞானசேகரன். ஆனால், அந்த 8 கோடி ரூபாய் வரி என்பது 1966ல் போட்டபோது – அது இப்போது கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் மதிப்பு என்பதை மறந்துவிடக் கூடாது – 1966ல் வருவாய்க் கணக்கில் மொத்த வருவாயே தமிழ்நாடு அரசாங்கத்திற்கு 170 கோடி ரூபாய்தான். அதிலே 8 கோடி ரூபாய் என்பது இன்றைய அளவிலே கணக்குப் பார்த்தால் 800 கோடி ரூபாய் வரி அப்போது போடப்பட்டிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்பே வரி போட்டாகிவிட்டது. அதைத்தான் நான் அன்றைக்குச் சொல்லி இருக்கிறேன்.

அதை எடுத்துக்காட்டிய அவர், நீங்கள் வரி போடவில்லையா என்றார். நாங்கள் போடவில்லையே, எங்கே போட்டோம்? உடனே, பேருந்துக் கட்டணம், சொத்து வரி என்று சொன்னார்கள். சொத்து வரி என்பது த.மா.கா.வும் ஆளுகிற உள்ளாட்சி மன்றங்களில் போடப்படுகிற வரியே தவிர, அது திராவிட முன்னேற்றக் கழக அரசு போடுகிற வரியல்ல. அது ஞானசேகரனுக்குத் தெரியும். இருந்தாலும் பேச்சு வேகத்திலேயோ அல்லது ஒன்று சொல்லிப் பார்ப்போம் என்றோ அவர் அன்றைக்கு விறுவிறுப்பாகவே பேசியிருக்கிறார். பேருந்துக் கட்டணம் உயர்த்தியிருக்கிறீர்கள் என்றார். அது வரி அல்ல. கட்டணம் வேறு. வரி வேறு. மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள் என்று சொன்னார்.

பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டாலும் நியாயம் நம் பக்கம் இருப்பது நன்றாகத் தெரியும். புறநகர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரை, ஆந்திராவில் ஒரு கிலோமீட்டருக்கு 30 காசு; கர்நாடகத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 24 காசு: கேரளாவில் ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு; மராட்டியத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 30 காசு; குஜராத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 25.56 காசு; ராஜஸ்தானில் ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு: ஒரிசாவில் ஒரு கிலோ மீட்டருக்கு 26 காசு; அரியானாவில் 1 கிலோமீட்டருக்கு 35.36 காசு; தமிழகத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 22 காசுதான்.

விரைவுப் பேருந்துக் கட்டணம் என்று எடுத்துக் கொண்டால் ஆந்திராவில் ஒரு கிலோமீட்டருக்கு 42 காசு; கர்நாடகாவில் 29.50 காசு; கேரளாவில் ஒரு கிலோமீட்டருக்கு 34.50 காசு; மராட்டியத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 39.10 காசு; குஜராத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 35.70 காசு; ராஜஸ்தானிலே ஒரு கிலோமீட்டருக்கு 34 காசு; ஒரிசாவிலே ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு; அரியானாவில் 1 கிலோமீட்டருக்கு 42.20 காசு; தமிழகத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 25 காசு; இதையும் மறந்துவிடக் கூடாது.

அதேபோல அரிசி விலையில் என்ன உயர்த்தி விட்டோம்? (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் பேசி முடிக்கட்டும்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்; பேருந்துக் கட்டணத்தைப் பற்றி மட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் இந்த அவையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 2001 வரை நாங்கள் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவே மாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது 2001க்கு முன்பாக, 2000லே உயர்த்தி இருக்கிறார் என்பதை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலில் உயர்த்திய நேரத்தில் குறைக்கச் சொன்னபொழுது, இதைவிட 2001 வரையிலும் உயர்த்த மாட்டோம் என்று சொன்னேன். பிறகு அந்தக் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டது. அதை மறந்துவிட்டு பேசக்கூடாது; முறையல்ல.

அரிசியைப் பொறுத்தவரையில் கர்நாடகாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு கிலோ 6 ரூபாய் 40 காசு; வறுமைக் கோட்டுக்கு மேலேயுள்ளவர்களுக்கு 12 ரூபாய் 75 காசு. கேரளாவிலே 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 12 ரூபாய் 40 காசு. ஆந்திராவில்

3 ரூபாய் 50 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர் களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 12 ரூபாய் 50 காசு. மேற்கு வங்கத்தில் 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 13 ரூபாய் 95 காசு. மராட்டியத்திலே 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 13 ரூபாய் 95 காசு. தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தாலும் 3 ரூபாய் 50 காசு; வறுமைக் கோட்டுக்கு மேலேயிருந்தாலும் 3 ரூபாய் 50 காசு; இதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து வரி விதிப்பு என்று பார்த்தால், கடந்த 4 ஆண்டுகளில் வரி விதிப்பு, வரிக் குறைப்பு என்று பார்க்கும் போது, வரி விதிப்பு என்பது தாங்கக்கூடியவர்களுக்குத்தான் விதிக்கப்பட்டு இருக்கிறது; தாங்க இயலாதவர்களுக்கு, நடுத்தெரு நாராயணர்களுக்கு, சாதாரண, சாமானிய மக்களுக்கு, வர்த்தகர்களுக்கு – இவர்களுக்கெல்லாம் வரிக் குறைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு எவ்வளவு இனங்களுக்கு வரி குறைக்கப்பட்டது. எத்தனை இனங்களுக்கு வரி அறவே நீக்கப்பட்டது என்பதை யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது; மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1996–97ல் 353 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1997–98 ல் 143 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1998–99 ல் 81 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1999–2000ல் 25 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. இப்போது, 2000–2001ல் 76 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டு, மொத்தம் 678 கோடி ரூபாய் மதிப்பிற்கு வரிச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையிலே கணக்கிட்டால், இந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 2700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிட முடியாது.

1996–97ஆம் ஆண்டில் பருப்பு, மஞ்சள், மிளகாய், வெல்லம், கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டி போன்ற 14 பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. சமையல் எரிவாயு, டீசல் உள்ளிட்ட 30 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது. 1997– 98ஆம் ஆண்டில் பருத்தியினால் ஆன பின்னலாடைகள், மாட்டுத் தீவனம், நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள், கயிறு போன்ற 24 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. யூரியா, தேங்காய் மற்றும் கொப்பரைகள், பருத்தி, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், வணிகச் சின்னமுடைய நெய் மற்றும் வெண்ணெய் உள்ளிட்ட 34 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

1998–99ஆம் ஆண்டில் சமையல் எண்ணெய், காசினிக் கீரை, கணினி மென்பொருள் உள்ளிட்ட 6 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. மசாலாப் பொடிகள், ஐஸ்கிரீம் போன்ற 8 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

1999–2000 ஆண்டில் சூரிய ஒளியிலே இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப் பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம் போன்ற 10 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. கணினிகள், தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர்கள், வணிகச் சின்னம் இட்ட ரஸ்க், வாழ்த்து அட்டைகள், சாம்பிராணி வில்லைகள் உள்ளிட்ட 54 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு, 2000–2001ல் நித்திய கல்யாணி இலை மற்றும் வேர், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி, அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை, தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் உள்ளிட்ட 10 இனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மொசைக் கற்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள், அனைத்து வகை மின்சக்திக் கருவிகள், உபகரணங்கள், வறுகடலை போன்ற 15 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

இந்த அளவிற்கு வரிக் குறைப்பு, முழு வரி விலக்கு தந்த கழக அரசு இந்த 5 ஆண்டுகளில் எந்தெந்த இனங்களுக்கு

வரி விதித்தது என்று பார்த்தால், 1996–97இல் மது வகையறாக்களுக்கு Vend Fee விதித்து 75 கோடி ரூபாய், அதுவரை எங்கேயோ போயக் கொண்டிருந்த வரியை அரசு கஜானாவில் சேர்த்தோம்.

1997–98ஆம் ஆண்டில் பான் மசாலாவிற்கு வரி விகிதம் 11 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும் பரிசுச் சீட்டுகளின்மீது வரி உயர்த்தப்பட்டது. மதுபானங்களுக்கு ஆயத் தீர்வையும், Vend Fee-யும் உயர்த்தப்பட்டன. 1998-99ஆம் ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளுக்கு வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணி வகைகள் மற்றும் சிகரெட்டுக்கும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கும் வரி விதிக்கப்பட்டது. கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கைப் பூங்காவில் உள்ள ஒவ்வொரு கேளிக்கை இனத்திற்கும் செல்வோர்களிடம் வசூலிக்கப்படும் தொகைமீது 20 விழுக்காடு கேளிக்கை வரியாக விதிக்கப்பட்டது. இவ்வரித் தொகையைப் பூங்காவின் உரிமையாளர் ஏற்க வேண்டும். இவ்வகையில் வரும் வருவாயில் 90 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

1999–2000 ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பான் மசாலாவிற்கு வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும் இந்தியாவிலே தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை பானங்களுக்கு 12.11.1999 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக வரி விகிதம் உயர்த்தப்பட்டது.

23.1.2000 முதல் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் – நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அந்த விஷயம், அதை நான் ஏற்கெனவே குறித்து வைத்திருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை சொல்வது நலமென்று கருதிச் சொல்லுகிறேன். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் – விற்பனை வரியில் சமச்சீர் தளமுறை நடைமுறைப்படுத்த வேண்டி வந்த வகையில் தமிழ்நாட்டில் சில பொருட்களின்மீது வரி விகிதங்களை உயர்த்த வேண்டி வந்தன. காற்றூட்டப்பட்ட பானங்கள், ஆகாய வானூர்திகள், திரைப்படத் தயாரிப்புக்கான உபகரணங்கள், மின்னணு விளையாட்டுப் பொருட்கள், மத்தாப்பு மற்றும் பட்டாசு வகைகள், மோட்டார் வாகனங்கள்

மற்றும் அதன் உதிரி பாகங்கள் P.V.C. பொருட்கள் போன்ற 19 பொருட்கள்மீது இருந்த 11 விழுக்காட்டு வரி விகிதம் 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும், சந்தனக் கட்டைக்கு 8 விழுக்காடாக இருந்த வரி விகிதம் 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. சந்தன எண்ணெய்க்கு 4 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக வரி உயர்த்தப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மற்றும் தேய்ந்த, பழுதடைந்த நகைகள்மீது இருந்த 0.5 விழுக்காடு வரி விகிதம் 1 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் பீடி நீங்கலாக, சிகரெட் போன்ற ஆடம்பரப் புகையிலைப் பொருட்களுக்கு அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல 5 விழுக்காடு ஆடம்பர வரி புதியதாக விதிக்கப்பட்டது. மதுபானங்கள்மீது ஆயத் தீர்வை உயர்த்தப்பட்டது. 2000–2001ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை ரூ.29ம் அதற்கு மேலும் உள்ள மென்பானங்களுக்கான விற்பனை வரி 12 விழுக்காட்டி லிருந்து 20 விழுக்காடாக 1.4.2000 முதல் உயர்த்தப்பட்டது.

சமையல் எண்ணெய் போன்றவற்றிற்கு எல்லாம் வரி விகிதம் ஏற்றப்படவில்லை. இதில் சமச்சீர் வரியை தமிழக அரசு ஏற்று ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்தும் எந்தப் பொருள்கள் மீதும் வரி போடப்படவில்லை, மாறாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது அல்லது குறைக்கப் பட்டுள்ளது என்பதைத்தான் நான் சொன்ன இந்தப் புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன.

இப்படி வரியைக் குறைக்கின்றீர்கள், வரியை விலக்கி விடுகின்றீர்கள், பற்றாக்குறை இருப்பதையும் காட்டுகின்றீர்கள், இதை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று அன்றைக்கு நம்முடைய நண்பர் டாக்டர் இராமன் அவர்கள் கேட்டார்கள். மிகுந்த அக்கறையோடு, இந்த அரசின் மீதுள்ள கவலையோடு அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்காக நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 665 கோடி ரூபாயாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறீர்களே பற்றாக்குறை, இதைச் சரிக்கட்ட என்ன செய்யப்போகிறீர்கள், சில நாள் கழித்து வரி போட்டு மக்களை நசுக்கப் போகிறீர்களா என்று கேட்டார். அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை. ஏனென்றால் கடந்த

காலத்தில் நாங்கள் போட்டிருக்கிற வரிகள் மக்களை நசுக்குகின்ற வரிகள் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாகவே உணர்வார்கள்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை 790 கோடியாக இருக்கும் என்று நான் படித்தபோது இதே கேள்விதான் கேட்கப்பட்டது. அப்போது 790 கோடி ரூபாய் பற்றாக்குறை என்கிறீர்களே, எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கேட்கப்பட்டது. ஆனால் அந்தப் பற்றாக்குறை சரிக்கட்டப்பட்டு 159.90 கோடியாக அது குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிவீர்கள். இது எப்படி இயன்றது என்றால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சந்தன மரங்களை ஏலம் நடத்துவதன் மூலமாக 36 கோடி ரூபாய் மாத்திரமே வருவாய் கிடைக்குமென்ற மதிப்பீட்டிற்கு மாறாக 77.7 கோடி ரூபாய் சந்தன மர ஏலத்திலே கிடைத்திருக்கிறது. வரிகள் மூலமாக 260 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு பற்றாக்குறையை சரிக்கட்ட என்ன வழி என்று மாமன்றத்திலே கேட்கப்பட்டது, எதிர்க்கட்சி உறுப்பினர்களால். நீதிமன்றங் களில் நிலுவையிலே உள்ள வழக்குகளில் வருவாய் வசூல் சட்டம் ஆகியவற்றால் ரூபாய் 6,327 கோடி பல்வேறு வரிகளில் நிலுவையாக உள்ளது. அரசுக்கு வரவேண்டிய வரி வசூலில் நிலுவை 6,327 கோடி ரூபாய். இந்த நிலுவைத் தொகையை வசூலிப்பதில் முனைப்பான நடவடிக்கை எடுப்பதன் மூலமாகக் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

11வது நிதிக் கமிஷன் அறிக்கை வரும் ஜூன் மாதத்திற்குப் பிறகுதான் தாக்கல் செய்யப்பட உள்ளது. அது தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் மாநிலங்களுக்கு எவ்வளவு கூடுதல் நிதி கிடைக்கும் என்று தெரியும். அப்போது தமிழகத்திற்குக் கூடுதலாக நிதி கிடைக்கும். அதனைக் கொண்டு இந்தப் பற்றாக்குறையை ஓரளவுக்குக் குறைக்க முடியும் என்று நான் கருதுகின்றேன். மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு மொத்த வரி வருவாயிலே 29 சதவீதம் பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசியல் சட்டத் திருத்தம் வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட உள்ளது. அத்திருத்தம் கொண்டுவரப்பட்ட பிறகு அதன் காரணமாகவும்

தமிழக அரசுக்குக் கூடுதல் நிதி வர வாய்ப்புள்ளது. அதனாலும் நமது பற்றாக்குறையை ஓரளவிற்குச் சரிக்கட்ட இயலும்.

தமிழ்நாட்டில் நிலுவையிலே உள்ள வணிக வரியைக் கூடுதலாக வசூலிக்க கடும் முயற்சிகள் மேற்கொண்டு, அதன் காரணமாகவும் இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இயலும்.

மத்திய அரசு அண்மையில் ரேஷன் அரிசி விலையை உயர்த்தியபோது தமிழக அரசு அந்த உயர்வை மக்கள் மீது திணிக்காமல் 300 கோடி ரூபாய் மானியமாக அந்த விலை உயர்வு காரணமாக தர ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது அனைத்து மாநிலங்களும், மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி விலை உயர்த்தப்பட்டதைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசோடு வாதிட்டுக்கொண்டு இருக்கின்றன. அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமேயானால், தமிழக அரசு தருவதற்கு ஒப்புக்கொண்ட 300 கோடி ரூபாய் மானியம் மிச்சப்படுவதற்கு நமக்கு வாய்ப்புள்ளது. அதன் காரணமாகவும் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தில் பேசிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் செல்வி ராணி அவர்கள் மொத்த வருவாயில் 10 விழுக்காடு மட்டுமே மக்களுக்கு நேரடியாகச் செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அது தவறான கருத்து. 2000 – 2001க்கு மதிப்பிடப்பட்டுள்ள மாநிலத்தின் மொத்த வருவாய் 18,406 கோடி ரூபாய். அதிலே 10 விழுக்காடு என்பது, செல்வி ராணி அவர்கள் சொன்னதைப் போல, 1,840 கோடி ரூபாய்தான். ஆனால் வருவாய்க் கணக்கிலே பொது விநியோகத் திட்டத்திற்கு 1,700 கோடி, முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கு 200 கோடி, இலவச வேட்டி, சேலை திட்டத்திற்கு 104 கோடி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழை திருமணத் திட்டத்திற்கு 50 கோடி, நமக்கு நாமே திட்டத்திற்கு 30 கோடி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 75 கோடி , இலவச மின்சாரத்திற்காக அரசு தரும் 250 கோடி, மாணவர்களுக்கான பஸ் பாஸ் 80 கோடி, இப்படி மக்களுக்கு நேரடியாகச் செலவு செய்யப்படும் திட்டங்களுக்கு 4,326 கோடி ரூபாய் என்கிற போது 10 சதவீதம் என்று கூறியது

தவறான தகவல் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இது 10 விழுக்காடு அல்ல; 23.50 விழுக்காடாகும். மேலும் வெளிச்சந்தைக் கடன், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன், மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற கடன் ஆகியவற்றின் மூலம் குடிநீர்த் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு 1,867 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆகவே, உறுப்பினர் பெற்ற தகவல் தவறானது என்று மீண்டும் ஒரு முறை தெரிவிக்க விரும்புகின்றேன்.

நம்முடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் 2000–2001ஆம் ஆண்டில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கும் சம்பளம் குறித்த செலவு இதிலே குறிப்பிடப்படவில்லை. எல்லாப் புத்தகங்களையும் புரட்டிப் பார்த்துவிட்டேன் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் புரட்டிப் பார்க்காத புத்தகம் ஒன்றும் இருக்கிறது. இந்தப் புத்தகத்தை அவர்கள் புரட்டிப் பார்த்திருந்தால் உண்மை நிலையைத் தெரிந்திருக்க முடியும். நிதிநிலைக் குறிப்பின், வரவு செலவுத் திட்ட வெளியீடு 72 Appendix to the Budget Memorandum – அதிலே அரசு ஊழியர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு அளிக்கும் சம்பளம், Revenue Account-லே எவ்வளவு என்கின்ற விவரம் எல்லாம் இருக்கிறது. Revenue Account-லே மாத்திரம் ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கு நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், இல்லவே இல்லை என்று சொன்னார். இவ்வளவு பெரிய தொகையை எப்படி விட்டுவிட முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, அரசு அலுவலர்களுக்கு அளிக்கின்ற சம்பளச் செலவு 8,487 கோடி ரூபாய், ஓய்வூதியப் பயன்களுக்கான செலவு 2,420 கோடி ரூபாய். இந்த இரண்டு இனங்கள் மாநிலத்தின் மொத்த வருவாயில் 66.2 விழுக்காடு. மாநிலத்தின் வரி மற்றும் வரியல்லாத Tax and Non-Tax Revenues – வருவாயில் இது 103 விழுக்காடாகும் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதிகச் செலவு, அதிகமாக அரசு ஊழியர்களுக்குத் தந்துவிடுகிறோம் என்ற அந்தக் குற்றச்சாட்டுக்காக அல்ல. திட்டம் என்றால்,

நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அரசு ஊழியர் களுடைய சம்பளமும் சேர்த்துத்தான் திட்டச் செலவு. அரசு ஊழியர்கள் அல்லாமல் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. ஆகவே, திட்டத்திற்காக, ஒரு கிணறு வெட்ட, ஒரு குளம் வெட்ட, ஒரு ஏரி வெட்ட இவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்கிறோம் என்றால் அதை, வெட்டுவதற்காகப் பயன்படுகின்ற, பணியாற்றுகின்ற அந்த ஊழியர்களுக்குத் தருகின்ற சம்பளத்தையும் சேர்த்துத்தான் திட்டச் செலவு. எனவே, அதைத் தனியாகப் பிரித்துப் பார்த்து, ஆகா! அரசு ஊழியர்கள் அரசாங்க வருமானத்திலே பாதிக்கு மேலே எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று கூறுவது சரியல்ல என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இத்தகைய செலவுகளுக்கு இடையே இந்த நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்பதை Planning Commission Deputy Chairman Mr. K.C. Pant அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இது Hindu பத்திரிகையில் 31.3.2000 அன்று வெளிவந்த செய்தி:

"Concerned over the tendency of the States to make exaggerated projections of revenue mobilisation figures to get enhanced Central assistance and to include populist schemes, the Deputy Chairman of the Planning Commission, Mr. K. C. Pant has written to most of the Chief Ministers to correct the situation. Notable exceptions to this communication are the Tamil Nadu Chief Minister Mr. M. Karunanidhi, the Karnataka Chief Minister Mr. S.M. Krishna and Gujarat Chief Minister Mr. Keshubhai Patel."

அதாவது மக்களைக் கவரும் மலிவான திட்டங்களை அறிவித்திடவும், மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியுதவியைப் பெற்றிடவும், மாநில அரசுகள் நிதி ஆதாரங்களைத் திரட்டி உருவாக்குவதாகச் சொல்லி மிகைப் படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களை அளித்துவரும் போக்கைக் கண்டு மிகுந்த கவலை கொண்டுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்கள் பெரும்பாலான முதலமைச்சர்களுக்கு அந்தப் போக்கைக் கைவிட்டு திருத்திக்கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதியுள்ளார்கள். அப்படிக் கடிதம் எழுதப்பட்ட முதலமைச்சர்களுக்கு

விதிவிலக்கானவர்கள் தமிழக முதல்வர் மு. கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக முதல்வர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா, குஜராத் முதல்வர் திரு. கேசுபாய் பட்டேல் என்று Hindu பத்திரிகையிலே ஒரு செய்தி.

அதைத் தொடர்ந்து, Economic and Political Weekly, 12.02.2000, அதிலே ஒரு கட்டுரைப் பகுதியில்,

"Overall, Tamil Nadu could be considered as one State which is most successful in reducing regional disparities in economic and social development even when there was substantial variation in the natural endowments in different parts of the State. This was achieved by a combination of public policies and private initiatives." அதாவது, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயுள்ள இயற்கை வளத்தில் மிகுந்த வேறுபாடு காணப்பட்டாலும்கூட, அவற்றிற்கிடையேயுள்ள பொருளாதார மற்றும் சமூக வேறுபாடுகளைக் குறைப்பதில் பெருவெற்றி கண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் முயற்சிகளையும், பொதுமக்களுக்கான அரசின் கொள்கை களையும் ஒருங்கிணைத்ததன் காரணமாக, இந்த வெற்றி சாத்தியமாயிற்று என்று Economic and Political Weekly என்கின்ற ஒரு பிரபலமான பத்திரிகை குறிப்பு எழுதியிருக்கின்றது.

இதிலே, இந்த அறிக்கை பற்றி உரையாற்றிய நம்முடைய அருமை நண்பர் அழகிரி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள், வெளியிலேயிருந்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இங்கே அவருடைய வாரிசாக இருந்து பேசிக்கொண்டிருக்கிற சுந்தரம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், தம்பி கணேசன் அவர்கள், என்னுடைய நீண்டநாள் நெருங்கிய நண்பர் சுதர்சனம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சயின் சார்பில் உரையாற்றிய சந்தானம் அவர்கள் (குறுக்கீடு) Forward Block கட்சியைச் சேர்ந்த சந்தானம் அவர்கள், இரண்டு பேருமே பாட்டாளிகள்தான் – இவர்களெல்லாம் விவசாயிகளுக்கு ஒன்றுமேயில்லை, ஒன்றுமேயில்லை என்று சொன்னார்கள். நான்கூட, சந்தானம் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். யானைப் பசிக்கு சோளப்பொரி மாதிரியாகத்தான்

விவசாயிகளுக்குத் திட்டம் இருக்கிறது என்று அவர் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அதை அவர் சொன்னாரோ, இல்லை, அவர் பெயரிலே போட வேண்டு மென்று போட்டார்களோ தெரியாது; பத்திரிகை வந்ததும் எடுத்துவைத்துப் படித்துப் பார்த்தேன். சரி, சோளப் பொரியாவது போட்டார்களே என்று திருப்தி அடைகிறவர் களும் சிலபேர் இருப்பார்கள்.

இதிலே, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், சாதாரண ஏழையெளிய மக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாத, கடந்தகால நிதிநிலை அறிக்கையின் மலிவுப் பதிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையை முதலமைச்சர் கருணாநிதி சமர்ப்பித்திருப்பது என்பது, தமிழகத்தின் சாபக்கேடு என்று சொன்னார்கள். இங்கே சுந்தரமும் அதையே சொன்னார். கிட்டத்தட்ட, அதே வார்த்தைகள் இல்லாவிட்டாலும், மலிவுப் பதிப்பு போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவருக்கு ஒரு உறுதி, கோபமாகப் பேச வேண்டும் என்கின்ற ஓர் ஆர்வம்; கோபமாகப் பேச வேண்டும் என்றாவது காட்டிக்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் அவருக்கு. முயற்சி பண்ணுகிறார்; வரமாட்டேன் என்கிறது. (சிரிப்பு). ஏன் தெரியுமா? என் மேலேயோ அல்லது தி.மு.க. மேலேயோ, தி.மு.க. ஆட்சி மேலேயோ உண்மையிலேயே வெறுப்பு இருந்தால்தானே கோபம் வரும்? ஏனென்றால், இதே இடத்திலே உட்கார்ந்து, 1996-97-லே "காமராஜர் ஆட்சி, காமராஜர் ஆட்சி என்கிறோம்; இப்போது நடப்பதே காமராஜர் ஆட்சிதான்'' என்று சொன்னார்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, முதலில் நீங்கள் 1996லே ஆட்சிக்கு வந்தபோது ஒரு வருடம் நன்றாக இருந்தது. உண்மையிலேயே நான் பாராட்டினேன். (சிரிப்பு). அந்த ஓராண்டு ஆட்சியை வைத்து, இது காமராஜர் ஆட்சி போல இருக்கிறது என்று சொன்னேன். ஆனால், அப்பொழுதே நான் வாபஸ் வாங்கிக் கொண்டேன். இது காமராஜர் ஆட்சி இல்லை, மக்கள் விரோத

அரசு என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வெளிப்படையாகவே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நீங்கள் தொடர்ந்து சொல்லாமல், வாபஸ் வாங்கிக்கொண்டதற்கும் நன்றி. தொடர்ந்து சொன்னால்தான் எங்களுக்கு ஆபத்து. எனவே, ஒரு வருடம் வரையிலேயும் நல்ல ஆட்சியாக இருந்தது; அதன்பின்பு மோசமான ஆட்சியாகப் போய்விட்டது என்பது எதிர்க்கட்சித் தலைவருடைய கணிப்பு. நான் யாரையும் அப்படிப் பார்ப்பதில்லை. நீங்கள் வேறுபாட்டோடு பார்க்கிறீர்கள். அல்லது, வெறுப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையிலும் யாரையும் அப்படிப் பார்ப்பதற்கு எனக்கு மனது இல்லை. நான் பழகிவிட்டேன் என்றால், விரோதியானால்கூட அந்தப் பழகிய பாசம் என்னைவிட்டுப் போகாது. அது என்னுடைய தனிக்குணம்.

நான் சொல்கிறேன் என்று தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மேற்கு வங்காளத்தில், C.P.M., C.P.I. என்று இரண்டு கூட்டணிக் கட்சிகள் இருக்கின்றன. ஆனால், அண்மையில் அவர்களுக்குள்ளே ஒரு சின்னத் தகராறு வந்தது. இப்போது என்ன ஆனது என்று தெரியாது எனக்கு. இராஜ்ய சபாவிற்கு 4 இடங்கள் காலியானது. அவற்றிலே 3 இடங்கள் C.P.M. எடுத்துக்கொண்டு. ஒரு இடத்தை C.P.I. க்குத் தர வேண்டுமென்று கேட்டார்கள். நியாயமான கோரிக்கைதான். ஏனென்றால், ரொம்ப காலமான நட்பு; ரொம்ப காலமாக C.P.M., C.P.I., இரண்டு பேருமே அங்கே இருக்கிறார்கள். அந்த 4 இடங்களிலே ஒரு இடம் எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்டார்கள். C.P.M. – ஜோதிபாசு அவர்கள் தலைமையிலேயுள்ள அந்த ஆளுங்கட்சி, அதை மறுத்துவிட்டது. அதனாலே, ஒரு மன வேறுபாடு ஏற்பட்டு, நாங்கள் வெளியிலே இருந்து ஆதரிக்கிறோம் என்று சொல்லி, வெளியே வரப்போவதாக ஒரு செய்தி முன்பு வந்தது. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், தயவு செய்து. ஓர் இடத்திற்காக, கூட்டணி சேர்ந்து, பிரியக்கூடிய அளவிற்கு ஆளானார்கள். ஆனால், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சோதனை வந்தது. டெல்லியிலே. ''நீங்கள் காங்கிரஸ் கட்சியிலே இருந்து,

இராஜ்ய சபாவிற்கு வந்துவிட்டு, எதிர்த்து நடக்கிறீர்கள்; அதனாலே உங்களையெல்லாம் விலக்கப்போகிறோம் என்ற ஒரு செய்தி வந்தது. சோதனை வந்தவுடன் வேறு வழியில்லை; இவர்கள் எல்லாம் விலகியாக வேண்டும்; அல்லது விலக்கப்பட்டாக வேண்டும் என்று செய்தி வந்தது. நான் உடனே, தலைவர் மூப்பனாருக்கு இங்கேயிருந்து டெல்லிக்கு Telephone செய்து, கவலைப்படாதீர்கள்; அந்த 3 இடங்களிலும், எங்களுடைய ஓட்டுகளைக் கொடுத்து நாங்கள் நிரப்புகிறோம்' என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நான் ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனை எல்லாம் ஒன்றும் வரவில்லை. யாரோ ஒருவர் மனு எழுதினார். இவர்கள் தமிழ் மாநில காங்கிரசா, காங்கிரசா என்று ஒரு Petition போட்டார். உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஏன் இந்த மாதிரியெல்லாம் உங்களுக்கு ஒரு வார்த்தை வர வேண்டும்? நீங்கள் இராஜினாமா செய்து விடுங்கள்; நாங்கள் அந்த இடங்களை அப்படியே கொடுத்து விடுகிறோம்; அது எங்களுடைய இடம்தான்; கொடுத்து விடுகிறோம்' என்று சொன்னார்கள். அதைக்கூட நான் இப்போது முதலமைச்சர் அவர்களுக்கு வருத்தம் வந்தாலும் பரவாயில்லை என்பதற்காக ஓர் உண்மையை வெளியே சொல்லித்தான் ஆகவேண்டும். தலைவர் மூப்பனார் அவர்களை நாங்கள் எல்லாம் சேர்ந்து கட்டாயப்படுத்தி, 'நீங்கள் உங்கள் இடத்திலே நில்லுங்கள்' என்று திரு. சிதம்பரம் உட்பட அத்தனைபேரும் கட்டாயப்படுத்தினோம். அப்போது சொன்னார்: 'நான் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தயவால் நாடாளுமன்ற உறுப்பினராக வர விரும்பவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எனக்கு அந்த இடம் வேண்டாம் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, பிறகு, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓட்டால்தான் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகி வந்தார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது, மூப்பனார் அவர்களை, அவருடைய கட்சியினுடைய முன்னோடிகளை

அவமானப்படுத்துகிற காரியமாகும். அவர் மாத்திரம் தி.மு.க. சார்பில் வரமாட்டார்; பீட்டர் அல்போன்ஸ் வரலாம்; ஜெயந்தி நடராஜன் வரலாம்; (சிரிப்பு) அவருக்குள்ள மான உணர்ச்சி, இவர்களுக்கெல்லாம் இல்லையா என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யோசிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த தொடர்ந்த ஒலி).

திரு. சோ. பாலகிருஷ்ணன்: போதும், நிறுத்திக் கொள்ளுங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கூட்டணி என்று சொல்கிறபோது, கொடுக்கல், வாங்கல் இருக்கலாம். அதைப்போய் இப்போது அசிங்கமாகச் சொல்வது, 'நான் கொடுத்த மிட்டாயைக் கக்கு' என்று சொல்வதுமாதிரி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மிட்டாயைக் கக்கு என்று சொல்லவில்லை; முழுக்க முழுங்குங்கள் என்றுதான் சொல்கிறேன்.

திரு. ஜே.ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேற்கு வங்காளத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். திரு. ஜோதிபாசு அவர்களும், C.P.I. கட்சியினுடைய தலைமையும் பேசி, அந்தப் பிரச்சினைகள் எல்லாம் சுமுகமாக முடிந்துவிட்டன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதனால்தான் நான் பேசும்போது ஜாக்கிரதையாகச் சொன்னேன். அப்போது ஆரம்பமானது ஒரு தகராறு; இப்போது முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன், ஜாக்கிரதையாக. ஏனென்றால், அரசியலிலே எதுவும் நடக்கலாம் என்பது எனக்குத் தெரியும்.

விவசாயிகளினுடைய முன்னேற்றத்திற்கு, நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே இல்லை என்ற விவாதத்திற்கு, நான் கேட்கிறேன்; விவசாயிகளை எல்லாம், நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுத் தயாரித்தோமே, இது விவசாயிகளை அலட்சியப்படுத்தியதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வேளாண்மை, முந்திரி சாகுபடித் திட்டம், பாசனம், விவசாயிகளினுடைய நலன் என்ற 4 தலைப்புகளில், பக்கம் 12 முதல் பக்கம் 17 வரை, 5 பக்கங்கள் விவசாயிகளுக்காகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது, நிதிநிலை அறிக்கையில். விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் 13 சலுகைகள், அவர்களுடைய முறையீடுகளுக்கு, அவர் களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஏற்கப்பட்டு, அவை வழங்கப்பட்டு, விவசாயிகள் அளித்த மற்ற ஆலோசனைகளும், கோரிக்கைகளும் பரிசீலித்து உரிய முடிவு எடுக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்க, உயர் நிலைக் குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. வேளாண் பொருட்களைச் சேமித்து வைக்க, குளிர்பதனக் கூடங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. கிராமங்களில் அறுவடைக்கான, சிமெண்ட் தளங்கள் அமைக்கப்படும் என்றும், அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு சேமிப்போடு கூடிய ஈட்டுறுதித் திட்டம் வகுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. பாசன நீரைப் பயன்படுத்த குழுக்கள் அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களை மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்தும் ஏற்கப்பட்டிருக்கிறது.

12.3.2000 அன்று நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற விவசாயிகளுடைய கலந்துரையாடலின்போது தான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயிகளுடைய சங்கத் தலைவர் வீரையன் பேசும்போது குறிப்பிட்டார் – அந்தப் பேச்சு அப்படியே record-ஆகி இருக்கிறது அவர் சொன்னார், – ‘‘இந்தக் கூட்டத்தினுடைய பிரதிபலிப்பாக, வரவுசெலவுத் திட்டத்திலே முதலமைச்சர் எதை அறிவிப்பார் என்று தமிழகமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த, அபராத வட்டியை முழுவதும் தள்ளுபடி செய்து, அசலையும், வட்டியையும் திருப்பிக் கொடுங்கள் என்று சொன்னாலே, பெரிய விடுதலை என்று விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; இம்மாதம் 24 ஆம் தேதி, அந்த அறிவிப்பு வரும் என்று எதிர்பார்ப்போடு

தமிழகம் காத்திருக்கிறது என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்'' என்று வீரையன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய விவசாய சங்கத் தலைவர் அந்தக் கூட்டத்திலே, அன்றைக்குப் பேசியிருக்கிறார்.

திரு.ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒவ்வொரு Point-க்கும் எழுந்து நிற்பது முறையல்ல.முதலமைச்சர் சொல்லியிருக்கிறார், இந்தப் பேச்சு record ஆகியிருக்கிறது என்று சொல்லித்தான் படிக்கிறார்.

திரு.ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள், வீரையன் அவர்களால் பேசப்பட்ட ஒரு கருத்தை மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, அங்கே ஒரு மனு கொடுக்கப்பட்டு, அந்த மனுவிலே, 5 ஏக்கரா வரையிலேயுள்ள விவசாயிகளுடைய கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், அதற்கு மேல் இருக்கக்கூடியவர்களுக்கு, குறைந்தபட்சம் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுதான் அந்த மனுவிலே சொல்லப் பட்டிருக்கிறது. அன்றைக்குப் போதுமான நேரம் இல்லாத காரணத்தினாலே, அந்தப் பிரச்சினையை, எங்களுடைய மனுவிலே நாங்கள் விளக்கியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: எப்போதுமே, ஒரு கோரிக்கை வைத்தால், அந்தக் கோரிக்கை முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதல்ல. இதையாவது நிறைவேற்றுங்கள் என்பதுதான் கோரிக்கையினுடைய முடிவாக இருக்கும். எனவே, வீரையன் அவர்கள் இதையாவது நிறைவேற்றுங்கள் என்கின்ற அளவிலேதான், அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்டார். நிலைமை அதுதான். அதற்குமேல் வட்டியைத் தள்ளுபடி செய்ய முடியாது. NABARD அதை ஏற்றுக்கொள்ளாது. NABARD நிறுவனத்தினுடைய agreement. நம்முடைய சுப்பராயன்கூடச் சொன்னார்கள், அன்றைக்கு ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த ஆட்சியிலேதான்.

"Under Development Action Plan, Memorandum of Understanding (MoU) was entered into by the State Government and the Apex Bank with NABARD on 24.12.1994 which contains several action points. One of the action points put forth under recovery performance reads as follows:-

"It also notes that NABARD's support will not be available to DCC Banks, TNSCB in the State, if any interest loan waiver is announced across the Board or any steps interfering with the recovery problem of Co-operative banks are initiated."

இப்படி ஒரு ஒப்பந்தமே, கடந்த கால அரசால் போடப்பட்டு உள்ளது. இதற்குமேல் நான் என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான், அபராத வட்டியை மாத்திரமல்லாமல், சென்ற ஆண்டு 6.25 சதவிகிதம் அரசின் சார்பில் அந்தக் கடன் வட்டியிலே, அரசின் சார்பிலே ஊக்குவிப்புத் தொகையாக, அதைக் கட்டிவிட்டால், தருவது என்று அவர்களுக்குக் கொடுத்தோம், இதை இந்த ஆண்டு 7 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். உதாரணமாக, அது எப்படிச் செயல்படும் என்று கேட்டால், 1,000 ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள், அதற்கு 150 ரூபாய் வட்டி என்றால், நாம் தருவது 70 ரூபாய், அரசாங்கம் 70 ரூபாய் வரை கட்டிவிடும். 80 ரூபாயை விவசாயி கட்டினால் போதும். அதுதான் இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கிற ஏற்பாடு. இது பாக்கி மாநிலங்களிலேயெல்லாம் கடைப்பிடிக்கப்பட்டதா என்றால், கிடையாது. கேரளாவிலே, குறிப்பிட்ட நாளுக்குள் வட்டியையும், அசலையும் திரும்பச் செலுத்துபவர்களுக்கு, அபராத வட்டி மாத்திரம்தான் தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்கு வங்கத்திலே அதுவும் இல்லை. அபராத வட்டிகூட அங்கே தள்ளுபடி கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நாம் இந்த அளவிற்குச் செய்திருப்பது பெரும் இழப்பிற்கு இடையே, பெரும் சங்கடத்திற்கு இடையே, சிரமத்திற்கு இடையேதான் செய்து இருக்கிறோம். இன்னொன்று. விவசாயிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதை கட்டணம் Track Rent - இரத்து செய்யப்பட்டுவிட்டது. கரும்பு விவசாயிகளுக்கு, தனியார் கரும்பு ஆலை தர

வேண்டிய கடன் பாக்கியை விரைவில் தீர்க்க ஆலை அதிபர்களை அழைத்துப் பேசுவோம் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு, பயிர் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும் என்பது விவசாயிகளுக்குச் செய்யப்படும் சாதனையா, அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன்.

பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் மடைவிட்டு மடை மூலம் பாசன வசதித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

விவசாயத் தொழிலாளிகளுடைய நலனுக்காகத் தனியாக விவசாயத் தொழிலாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதைப்போலவே, நெசவாளர்களுக்கான நன்மைகள், திட்டங்கள் இவையும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

திரு. பி.ஆர்.சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுந்தரம், உங்களுக்கு அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதியில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநதி: முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் முந்திரி சாகுபடிக்கு ஏற்ற, அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப் பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலே முந்திரி சாகுபடி செய்ய முன்வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததையொட்டி, குத்தகைக்கான வழிமுறைகள் பற்றி சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சில கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இப்படிக் கேள்விகள் எழுப்புவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஏதோ வேண்டியவர்

களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காகத்தான் இந்த முந்திரி சாகுபடித் திட்டம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அதெல்லாம் அந்தக் காலத்து கதைகள். உங்களுக்குத் தெரியும், மாமல்லபுரம் பழைய சாலையிலே, பையனூர் கிராமத்திலே தமது பங்களாவிற்குப் பக்கத்திலே சுமார் 2½ ஏக்கர் அரசு நிலத்தை திருமதி சசிகலா ஆக்கிரமிப்பு செய்து அந்த நிலத்திலே சுமார் 1 ஏக்கர் 25 சென்ட் பரப்பளவிலே அமைந்துள்ள குளத்தை– அந்தக் குளம் கிராமப் பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் குடிநீருக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த குளம் – அந்தக் குளத்தை ஆழப்படுத்தி நீச்சல் குளமாக மாற்றி அமைத்துக் கட்டுவதற்காக அதை ஆக்கிரமித்தார்கள். அந்த ஆக்கிரமிப்புகள், கழக ஆட்சியில் 11.2.1997 அன்று அகற்றப்பட்டு, குளத்தை பையனூர் கிராம பொது மக்களும், கால்நடைகளும் பயன் படுத்துவதற்கு வழி செய்யப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழிப்பள்ளம் கிராமத்தில் திருமதி ஜே. இளவரசி என்பவர், ஓடை, மடுவு மற்றும் குளம் என்று வகைப்பாடு செய்யப்பட்டிருந்த அரசுக்குச் சொந்தமான சுமார் ஆறரை ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து, முள்வேலியும், மதில் சுவரும் அமைத்திருந்தார். இந்த ஆக்கிரமிப்புகளும் 11.2.1997 அன்று அகற்றப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில், அதிலிவாக்கம் மற்றும் மேனகாபுரம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான 220 ஏக்கர் நிலத்தை ''மெடோ அக்ரோ பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட்'' என்ற தனியார் நிறுவனத்தின் சார்பில் கிருஷ்ணகுமார் என்பவர், பப்பாளி மரங்கள் வளர்ப்பதற்கும், அதன் அடிப்படையில் தொடங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், நில ஒப்படை கோரினார். அவை அனைத்தும் மேய்க்கால் புறம்போக்கு மற்றும் புஞ்சை அனாதீன நிலங்கள் ஆகும். அதில் 110 ஏக்கர் பரப்பளவில் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ், யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. அந்த மரங்களின் மதிப்பு 31 இலட்சத்து 25 ஆயிரத்து 963 ரூபாய். அந்த நிலங்கள் அனைத்தும் Reverse forest-ஐ ஒட்டி அமைந்துள்ளபோதிலும்,

கிருஷ்ணகுமார் வசதி படைத்தவர் அல்ல என்பதால் நிலங்களை ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலித்துக்கொண்டு ஒப்படை செய்யவும், அந்நிலங்கள் சென்னையின் புறநகர்ப் பகுதியில் தடையாணை எல்லைக்குள் வருவதால், அதற்குரிய தடையாணையை விலக்கி ஒப்படை செய்யும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது. 110 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்த சுமார் 31 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள யூகலிப்டஸ் மரங்களை வெட்டி எடுத்துவிட்டு, 200 ஏக்கருக்கு மேற்பட்ட அளவிற்கு நிலம் வழங்குவதால், தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டப் பார்வைக்குள் வரும் வாய்ப்புள்ளது என்ற நில நிர்வாக ஆணையாளரின் எச்சரிக்கையையும் ஒதுக்கிவிட்டு, அரசு கொள்கையின்படி தனிப்பட்ட நபர் மற்றும் நிறுவனங்களுக்கு பெரும் அளவிலான நிலத்தை ஒப்படை வழங்க இயலாது, குத்தகை அடிப்படையில்தான் நிலங்கள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற அரசு ஆணையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இரண்டு மடங்கு மார்க்கெட் விலை வசூல் செய்துகொண்டு, ஒப்படை செய்யலாம் என்று அ.தி.மு.க. அரசு 25.2.1995 அன்று ஆணை பிறப்பித்தது. கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த நில மோசடியை ஆய்வு செய்து, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கிய நில ஒப்படை ஆணையை 31.12.1996 அன்று இரத்து செய்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நாங்கள் இப்போது அறிவித்திருக்கிற முந்திரி சாகுபடித் திட்டம், இது போன்ற காரியங்களுக்காக நிச்சயமாக அல்ல. அரசுக்குச் சொந்தமான நிலம் குத்தகைக்கு விடப்படுவதற்கு என்று ஏற்கெனவே விதிமுறைகள் வகுக்கப்பட்டு செயல்பாட்டிலே இருக்கின்றன. அதன்படி நிலத்தின் market விலையை அனுசரித்து அதன் அடிப்படையில் குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்படும். அந்த அடிப்படையிலோ அல்லது சாகுபடிக்கு என்று தேர்வு செய்யப்படும் நிலங்களின் market விலையை அனுசரித்து, உயர்ந்தபட்ச குத்தகைத் தொகை நிர்ணயம் செய்த பிறகு, எவ்வித ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாக tender அடிப்படையிலே அரசுக்குச் சொந்தமான நிலங்களை முந்திரி சாகுபடிக்கு குத்தகைக்காக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது

வேண்டியவர்களுக்காக போடப்பட்ட திட்டமல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை குண்டுவெடிப்பு சம்பந்தமாக சுப்பராயன் அவர்கள் இங்கே நேற்றையதினம் பேசினார்கள். அங்கே இரண்டு சம்பவங்கள். நவம்பரிலே ஒரு சம்பவம். பிறகு பிப்ரவரியிலே ஒரு சம்பவம். இரண்டு சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. நீதியரசர் கோகுலகிருஷ்ணன் விசாரணை கமிஷன் பரிந்துரைத்த நிவாரண உதவிகள் என்னவாயிற்று என்பதைப்போல, அது விரைவில் தரப்படுமா என்ற கருத்துப்பட சுப்பராயன் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். கோகுலகிருஷ்ணனுடைய அறிக்கைகள், இரண்டு இடைக்கால அறிக்கைகள் இரண்டு சம்பவங்களுக்காகப் பெறப்பட்டிருக்கின்றன. ஒரு இடைக்கால அறிக்கை நவம்பர், டிசம்பர் சம்பவத்திற்காக. இன்னொரு இடைக்கால அறிக்கை பிப்ரவரியில் திரு. அத்வானி வந்தபொழுது நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்காக என்று இரண்டு அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன. இரண்டும் இடைக்கால அறிக்கைகள்.இப்பொழுது முழுமையான அறிக்கைகள் தரப்பட்டுவிட்டன. அந்த இடைக்கால அறிக்கைகளையொட்டி எடுத்துள்ள நடவடிக்கைகள் இறந்தவர்களுடைய குடும்பத்திற்குத் தலா ரூ.2 லட்சம் வீதம் தரப்பட்டு நிதியுதவி ரூ. 52 லட்சம். காயமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 2.90 லட்சம். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர் களுக்காக அரசு ஏற்றுக்கொண்ட சிகிச்சைச் செலவு ரூ. 3.69 லட்சம். மசூதி மற்றும் கோயில்கள் சேதமடைந்ததற்கு தரப்பட்ட நிதியுதவி ரூ. 1.67 லட்சம். சொத்து சேதமுற்றோருக்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ. 164 லட்சம். மொத்தம் ரூ. 2,24,26,000. முதல் இடைக்கால அறிக்கையின்படி நவம்பர் மாத, டிசம்பர் மாத நிகழ்ச்சிக்காக.

அடுத்து, 14.2.1998 அன்று கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமாக தரப்பட்ட இடைக்கால அறிக்கையின்படி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் வீதம் தரப்பட்ட நிதியுதவி ரூ. 1.06 கோடி. காயமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.31.80 லட்சம். தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெற்றவர்களுக்காக அரசு ஏற்றுக் கொண்ட சிகிச்சைச் செலவு ரூ. 22.92 லட்சம். மசூதி/

கோயில்கள் சேதமடைந்ததற்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ. 3.03 லட்சம். சொத்து சேதமுற்றோருக்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ. 1.12 கோடி. மொத்தம் ரூ. 2,75,75,000. இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ. 5 கோடி தரப்பட்டிருக்கிறது.

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து விசாரணைக்காக அமைக்கப்பட்ட நீதியரசர் கோகுலகிருஷ்ணன் விசாரணை ஆணையம் தனது அறிக்கையினை அரசுக்கு 31.1.2000 அன்று முழுமையாகச் சமர்ப்பித்து விட்டது. இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் சட்டப் பேரவையில் வைக்கப்பட்டு, இது குறித்து ஆணைகளும் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்தின்போது எழுப்பிய பிரச்சினை குண்டு வெடிப்பில் கிட்டத்தட்ட ஒருசில குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்தான், சொத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் பெரும் பகுதியினர் மனு போட்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு நட்ட ஈடு இன்னும் வழங்கப்படவில்லை. வழங்கப்படாத அனைவருக்கும் எப்போது நட்ட ஈடு வழங்கப்படும் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் நான் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டேன். இன்னும் Pendingல் இருக்கிறவர்களுக்கு எந்தக் காலவரையறைக்குள் வழங்கப்படும் என்பதை அறிவிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதைத்தான் நான் என்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறேனே. இடைக்கால அறிக்கைகள்தான் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தரப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கையொட்டி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் மிச்சம் தரப்பட வேண்டியது இருக்கிறது. முழுமையான அறிக்கை விரைவில் அவையிலே வைக்கப்படும். அதிலே எல்லா விவரங்களும் அடங்கி யிருக்கும். அதற்குப் பிறகு மிச்சம் யார், யாருக்குத் தர வேண்டுமோ, அந்த எஞ்சிய தொகை மற்றவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. சிறு தொழிலதிபர்களை நான் கூட்டிய கூட்டத்திற்கு அழைக்கவில்லை என்று சுப்பராயன் அவர்கள்

நேற்றைக்குச் சொன்னார்கள். அது சரியில்லை, தவறு. ஏனென்றால் அந்தக் கூட்டத்திற்கு – வணிகர்கள் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்திற்கு – சிறு தொழிலதிபர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

1. தலைவர், தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கம், TANSTIA

2. இந்திய சிறுதொழில் கழகங்களின் கூட்டமைப்பு (தெற்கு மண்டலம்).

3. தமிழ்நாடு சிறிய மற்றும் குறுந்தொழில் எச்.டி.பி.எப். ஓவன் சாக்குகள்/பைகள் தயாரிக்கும் சங்கம்.

4. தலைவர், தேசிய சிறு தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு.

5. தலைவர், தமிழ்நாடு சிறு Tyre retreading பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம்.

6. தமிழ்நாடு மெட்டல்வோர் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சங்கம்.

7. தமிழ்நாடு மாநில கார்டு உற்பத்தியாளர்கள் சங்கம்.

8. தென்னிந்திய பின்னலாடை உற்பத்தியாளர்கள் சங்கம்.

9. கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் ஆகிய இந்தச் சங்கங்கள் எல்லாம் அழைக்கப்பட்டு அவர்களுடைய கருத்துகளும் கேட்கப்பட்டிருக்கின்றன.

அவர் இன்னொன்றும் சொன்னார். வேளச்சேரியிலே கடந்தகால அரசு அமைத்த பெண்களுக்கான தொழிற் பேட்டையைக் கைவிட்டுவிட்டோம் என்று சொன்னார். திடீரென்று சுப்பராயன் அவர்கள், கடந்தகால அரசு அதை அமைத்தது, அதை அமைத்தது எல்லாவற்றையும் கெடுத்து விட்டீர்கள் என்று பேசினார். என்னவென்று தெரியவில்லை எனக்கு. திடீரென்று அப்படிப் பேசினார். (சிரிப்பு) நான் அவருக்குச் சொல்லிக்கொள்கின்றேன். கடந்தகால அரசு அறிவித்தது, அறிவித்ததோடு சரி. பிறகு அது என்னவோ

நிறைவேறவில்லை. ஆனால் இந்த அரசு அதே இடத்தில் என்ன அறிவித்திருக்கிறது என்றால், நிதிநிலை அறிக்கையில் 65ஆவது பத்தியிலே இருக்கிறது; பார்த்தால் தெரியும். வேளச்சேரி அருகே இந்தியாவிலேயே முதல் முறையாக கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது. இது அடுத்த சில மாதங்களில் செயல்படத் தொடங்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. அதனைப் படித்தால் புரியும்.

தமிழ்நாட்டிலே சிறு தொழில்கள் நலிந்து போயிற்று, அழிந்து போயிற்று என்று சொன்னார்கள். அதற்கு சில பேர் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே இருந்துகூட 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தார்கள். அது யார், யார் என்று எனக்குத் தெரியும். (சிரிப்பு) ஆனால் தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் நலிந்த நிலையில் உள்ளதாக எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? சுமார் 50 ஆண்டுகாலமாக, நேற்று வரையில் பார்த்தீர்கள் என்றால் 1.4.1996 வரையிலும் பார்த்தால், 50 ஆண்டுகால சிறு தொழில் வளர்ச்சி, உருவான சூழ்நிலை இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் 2,34,400 சிறு தொழில்கள் பதிவாகியுள்ளன. ஆனால் இந்த 4 ஆண்டுகாலத்திலே 1996–97–லே 29,445, 1997–98–லே 31,159, 1998–99–லே 29,623, 1999–2000–லே 27,234 (பிப்ரவரி மாதம் 2000 முடிய) மொத்தம் 1,17,461 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை என்பதை நான் மிகுந்த பெருமிதத்தோடு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர் செல்லக்குமார் தினமணியிலே வந்த ஒரு செய்தியைச் சொன்னார். அதைத்தான் நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஊக்குவிக்க மாநில அரசுகள் பல்வேறு வகையான வரிச் சலுகைகளை போட்டி போட்டுக்கொண்டு வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எல்லாம் மிக நன்றாக அறிவோம். இந்த முரண்பாடான நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து சமச்சீர் வரி விதிப்பு

முறையைக் கொண்டு வருவது குறித்து 16.11.1999 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்களுடைய கூட்டத்திலே விவாதிக்கப்பட்டு படிப்படியாக சலுகைகளையெல்லாம் நீக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எனவே வரிச் சலுகை அளிப்பது குறித்து 23.1.2000 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து அரசு ஆணை நிலை எண் 12, வணிக வரித் துறை, நாள் 23.1.2000ல் ஆணை வெளியிடப்பட்டது. ஏற்கெனவே அந்த ஆணையின்படி சலுகைகளை அனுபவித்து வரும் தொழிற்சாலைகள் தகுதிக் காலம் வரை தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும், இனிமேல் புதிதாகத் தொடங்கப் படும் தொழில் நிறுவனங்களுக்கு சலுகைகள் கிடையாது என்றும், ஏற்கெனவே கட்டுமானப் பணி தொடங்கி Pipeline உற்பத்தியைத் தொடங்காத தொழிற்சாலைகள் 22.1.2002க்குள் உற்பத்தியைத் தொடங்கியிருந்தால் அச்சலுகைகளைப் பெறலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஊக்க உதவிச் சலுகை புதிய தொழிற்சாலைகளுக்கு மட்டும் பொருந்துமா அல்லது விரிவாக்கம், மாற்றியமைப்பு செய்யும் தொழிற்சாலை களுக்கும் பொருந்துமா என்பது குறித்து விளக்கம் தேவைப் பட்டது. எனவேதான் 3.2.2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு அண்டை மாநிலமான கேரளாவிலே பின்பற்றப்படும் முறையையும் கருத்திலேகொண்டு ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் விரிவாக்கம், மாற்றுத் தொழிலிலே ஈடுபட்டு 23.1.2000 அல்லது அதற்கு முன்பாக தேவையான இயந்திரத் தளவாடங்களைப் பெற்றிருந்து அவை 22.1.2001 அல்லது அதற்கு முன்பாக தனது விற்பனை உற்பத்தியைத் தொடங்கியிருந்தால் மட்டுமே சலுகையைப் பெறலாம் என்ற முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவேதான் இரண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. எந்த முதலாளிக்கும், எந்த அதிபருக்கும் ஏதோ சலுகை செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல; இன்னும் சொல்லப்போனால் பெரிய முதலாளிகள் இதிலே பாதிக்கப்பட்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள், மறுபடியும் அதைக் கொண்டு வாருங்கள், கொண்டு வாருங்கள் என்று. நாங்கள் இப்போது

அதை முடியாது என்று சொல்லியிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல Kerala pattern மாறுமேயானால், அதனால் நமக்குப் பாதகம் ஏற்படுமேயானால் மறுபடியும் மறுபரிசீலனை செய்யவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: ஒரேயொரு Point of Order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order-ஆ, இதில் எப்படி Point of order வரும்?

திரு. ச. அழகிரி: Point of clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, இப்போது இரண்டு அரசாணைகளை அறிவித்ததைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாகவே தொழில்கள் வர வேண்டுமென்று நாமே விரும்புகிறோம். இப்போது ஒரு தொழிற்சாலை விரிவாக்கத்தில் இருக்கிறது. அவர்களுக்கு 23.1.2000ல் நீங்கள் குறிப்பிட்ட அரசாணையின் பிரகாரம் 2 ஆண்டுகளுக்குள் அவர்கள் உற்பத்தியைத் தொடங்கினால் அவர்களுக்கு 7 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரை இந்தச் சலுகை கிடைக்கும் என்று நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால், அதன் பிறகு, 7.2.2000லே அந்தச் சலுகையை மாற்றி அறிவித்திருக்கிறீர்கள். வெளியில் என்ன சொல்லப்படுகிறது என்றால், வேறொரு சிமெண்ட் ஆலை பலன்பெற வேண்டும் என்பதற்காக இன்னொரு சிமெண்ட் ஆலையை நீங்கள் நசுக்குகிறீர்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டு இந்த அரசின் மீது இருக்கிறது. எனவே, 15 தினங்களுக்குள் இரண்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன? கேரளாவில் அவர்கள் மாற்றிக்கொண்ட பிறகு தமிழக அரசு அதை மாற்றிக் கொள்ளுமா? விரிவாக்கத்திற்குச் சலுகைகள் அளிக்குமா? இதைப்போன்ற, தனிப்பட்ட சிமெண்ட் ஆலைகளை நசுக்குகிற போக்குகளை அரசாங்கம் கைவிடுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் பதிலுரையின்போது விவசாயிகளுக்கு நாங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவசாயத்தைப் பற்றி இல்லை. இப்போது இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமா?

திரு. பி.ஆர். சுந்தரம்: என்னை நீங்கள் allow பண்ணுங்கள். ஒன்றே ஒன்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் உங்களை அப்போது allow பண்ணினேன். இப்போது allow பண்ணவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றி என்றால் பேசுங்கள். இல்லையென்றால் நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இல்லை, இல்லை, நான் ஒன்றே ஒன்றை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) நான் இப்போது அனுமதிக்க முடியாது. நீங்கள் நினைக்கிற போதெல்லாம் எழுந்து நிற்க முடியாது.

திரு. பி.ஆர். சுந்தரம்: என் அண்ணன்களை எல்லாம் நீங்கள் பேச அனுமதித்தீர்கள். ஆனால், என்னை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உங்களுக்கு அண்ணன்கள்தான். நாங்கள்தான் ஆகாதவர்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: ஒரேயொரு வரி. நான் இந்நேரம் பேசியிருப்பேன். இந்நேரம் பேசி முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்படி அடிக்கடி எழுந்து நிற்பதை நான் அனுமதிக்க முடியாது. உங்களுக்கு முதலிலே அனுமதி கொடுத்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இந்நேரம் பேசி முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் செய்துள்ள திட்டங்களை

முதல்வர் அவர்கள் பட்டியலிட்டுக் காட்டினார்கள். இதே அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது எங்களை முழுமையாக 5 ஆண்டுகள் நீங்கள் ஆளவிடுங்கள்; இப்போதே நீங்கள் கேட்டால் எப்படிக் கொடுக்க முடியும் என்று ஏற்கெனவே கூறியிருப்பது அவைக் குறிப்பிலே இருக்கின்றது. ஆகவே, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வருடத்திற்கு ஐம்பதே ஐம்பது ரூபாய் கொடுத்திருந்தால்கூட, இந்த 4 ஆண்டுகளில் 200 ரூபாய்...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: 4 ஆண்டுகள் தான் முடிந்திருக்கின்றன. 5 ஆண்டுகள் ஆள விடுங்கள். இப்போது ஆளை விடுங்கள். (பலத்த சிரிப்பு).

இன்னும் ஏராளமான குறிப்புகள் வைத்திருக்கின்றேன், உறுப்பினர் செல்லக்குமார் போன்றவர்களுக்கெல்லாம் சில விளக்கங்கள் தருவதற்கு. தொடர்ந்து கூட்டம் நடைபெற இருக்கிற காரணத்தால் பல்வேறு மானியங்களில் அவற்றைப் பற்றிப் பேசலாம் என்ற அந்த அறிவிப்போடு, சில அறிவிப்புக்களை, முக்கியமான அறிவிப்புக்களை இம் மாமன்றத்தின் மூலமாகத் தமிழ் மக்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார்: ஒரேயொரு சின்ன பாயின்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு உருண்டை வாங்குவது பற்றி நான் இன்னும் பேசலாம் என்று நேற்றைக்கு நீங்கள், சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நான் உங்களைப் பேசலாம் என்று சொல்லவில்லை. நீங்கள் தவறான கருத்தைச் சொன்னால் நான் நடவடிக்கை எடுப்பேன். உங்களை ஒன்றும் பேச நான் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் பேச இருக்கிறார்கள். நீங்கள் பதிலைக் கேளுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

உங்கள் பெயரைச் சொல்லித்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் உட்காருங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார்: அது தவறான தகவல். நான் அதைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தேவையில்லை, நான் அதை அனுமதிக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தெளிவாகச் சொன்னேன். முதலமைச்சர் பதில் சொல்கிறபோது சொன்னார்கள் என்றால் கேளுங்கள். விதி 110ல் கேள்வி கேட்கக் கூடாது. முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சத்துணவு பற்றி, அது தனி இலாகா, அந்தத் தனி அமைச்சர் அதுபற்றி நேற்றைக்கே விளக்கம் அளித்திருக்கின்றார்கள்.

நான் நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியுள்ள நாங்குநேரி திட்டம் ஒரு ஒளிமயமான முன்னேற்றத்தை உருவாக்கவிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். நாங்குநேரியில் ஒரு பூங்கா அமைக்க 3000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தத் திட்டமிட்டு, அதிலே ஏறத்தாழ 2000 ஏக்கருக்கு மேற்பட்ட இடம் நம் கைவசம் வந்திருக்கின்றது. 3000 ஏக்கரும் மொத்தமாக அரசுக்கு வரவிருக்கிறது. அந்த நாங்குநேரியைப் பற்றிய ஒரு தகவலை மாத்திரம் இங்கே நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நிதிநிலை அறிக்கையில், 'நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற்பூங்காவுக்காக High-tech industrial park- சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை - Detailed Feasibility Report - ஒன்றை இரு பிரபல நிறுவனங்கள்

தந்திருக்கின்றன. அங்கு ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் - Export Promotion Zone உருவாக்க மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கக்கூடிய இந்த மாபெரும் திட்டப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்' என்று 24.3.2000 அன்று குறிப்பிட்டிருந்தேன்.

இதனையொட்டி, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் 31.3.2000 அன்று வெளியிட்டுள்ள ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையில், நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற்பூங்காவை, சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக – Special Economic Zone-- அறிவித்துள்ளார். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான மத்திய அரசின் கொள்கையில் இரண்டே இரண்டு இடங்களுக்குத்தான் Special Economic zone என்ற சிறப்புத் தகுதி வழங்கி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்று, தமிழ்நாட்டில் தென் மாவட்டத்தில் அமைந்துள்ள நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற் பூங்கா (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்று, குஜராத் மாநிலத்தில் போசித்ரா. இது அகில இந்திய அளவில் நமது மாநிலத்திற்கு. குறிப்பாக தென் மாவட்டங்களின் தொழில் முயற்சிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் ஆகும்: பெருமையுமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட பெருமைமிக்க அங்கீகாரத்தைத் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களுக்கு வழங்கியமைக்காக மத்திய அரசை நாம் பாராட்ட வேண்டும்: (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கு வாழ்த்துரைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் தொழில் முனைவோர் களாலும், பத்திரிகைகளாலும், பொருளாதார நிபுணர்களாலும் பாராட்டி, வரவேற்கப்பட்டுள்ளது மத்திய அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கை.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எனப்படும் வரியற்ற ஏற்றுமதி வர்த்தக மண்டலங்கள் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்திருப்பதை, மத்திய ஐக்கிய முன்னணி அரசில் நிதியமைச்சராக இருந்து, அனைவரும்

பாராட்டத்தக்க விதத்திலே பணியாற்றிய திரு. ப. சிதம்பரம் வரவேற்றுள்ளார்.

அதைப்போலவே திரு. வி.ஆர். பஞ்சமுகி என்கிற வளர்ந்து வரும் நாடுகளின் ஆய்வு மற்றும் தகவல் அமைப்பின் தலைமை இயக்குநர் அவர் இதை வரவேற்றிருக்கிறார். "The new Exim Policy announced by Mr. Murasoli Maran contains the right kind of messages with the right kind of emphasis required for the new millennium" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சீன நாட்டின் சாதனைகளையும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சமீபத்திய பொருளாதார நடவடிக்கைகளையும் பின்னணியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கையில் நமது நாங்குநேரி இடம் பெற்றிருப்பது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி வரலாற்றில் நிச்சயமாக ஒரு மைல் கல்லாக அமைந்திடும்.

நாங்குநேரியில் அமையவுள்ள உயர் தொழில்நுட்ப தொழிற் பூங்கா Special Economic Zone என்ற தகுதியைப் பெறுவதால், இந்தத் தொழிற் பூங்காவில் உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும், மூலப் பொருட்களையும் வரியின்றி இறக்குமதி செய்து கொள்ளலாம்; உள்நாட்டுச் சந்தையிலிருந்து அவற்றை வாங்கும் போதும் வரி கிடையாது; சுங்க வரி கட்டுப்பாடுகள் இங்கு அமையும் தொழில்களுக்குப் பொருந்தாது; வங்கிச் சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் தவிர, பிற விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நடைமுறைச் சிக்கல்களில் இருந்து ஏற்றுமதியாளர்கள் விடுவிக்கப்பட்டு விடுவார்கள். இதனால் நாங்குநேரி, வருங்காலத்தில் ஒரு சிறு சீனாவாக (Mini-China) மாறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற் பூங்காவில் 8,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஏற்படும், வேலைவாய்ப்பும் ஆயிரக்கணக்கானவர்களுக்குக் கிட்டும்.

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம்: தூத்துக்குடி விமான நிலைய மேம்பாடு; சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்று வதற்கு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தவும்,

சுற்றுச்சூழல் விளைவுகளைக் கண்காணிக்கவும் மத்திய அரசு 4 கோடியே 80 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பது; அதிநவீன வசதிகளோடு குளச்சல் துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக உருவாக்க, தமிழக அரசு மலேசிய அரசோடு இணைந்து திட்ட மிட்டிருப்பது – ஆகிய இந்தப் பின்னணியில் Special Economic Zone என்ற அந்தஸ்துடன் நாங்குநேரியில் அமையவுள்ள உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா, தென்மாவட்டங்களின் ஈர்ப்பு மையமாக விளங்கிடும் என்பதை நான் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுடெல்லியிலே அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் 'இந்திய மொழிகளின் மையம்' (Centre for Indian Languages) தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கும், தமிழ்மொழி ஆராய்ச்சிக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்திருப்பதை அறிந்து இந்த அரசு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது. அப்பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத்தின் தலைவர் பேராசிரியர் நசீர் அகமதுகான் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கும் கோரிக்கையினை ஏற்று, தமிழ்மொழி இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுகளை விரிவுபடுத்தவும், டெல்லியிலே வாழும் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகளின் மையத்தில் தமிழ் இருக்கை (Tamil Chair) ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கென்று தனியே நிதியொதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அத்துடன், ஆண்டுதோறும் 7 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு தென்னை சாகுபடி பரப்பு அதிகரித்துக்கொண்டு வருகிறது. தென்னை உற்பத்தியில் இந்தியாவிலேயே கேரளத்திற்கு அடுத்து தமிழகம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோய்களிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னை சாகுபடியை மேம்படுத்தவும், தென்னை சாகுபடி

செய்யும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும், 12.3.2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையையொட்டியும் தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் (Tamil Nadu Coconut Development Authority) உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நடத்தும் 210 நியாய விலைக் கடைகள் சிறப்பாக நடைபெற்றுவருவதைக் கருத்தில்கொண்டு அந்த எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்துள்ளேன். அத்துடன், மாவட்டங்களிலே உள்ள பெண்களின் சுய உதவிக் குழுக்கள் 500 அட்டைகளுக்குக் குறையாமல் சேர்த்து, நியாய விலைக் கடைகள் அமைத்து நடத்துவதற்கு முன்வந்தால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுமதி வழங்கவும், ஊராட்சித் தலைவர்கள் 500 அட்டைகளுக்குக் குறையாமல் நியாய விலைக் கடைகளை அமைத்து மகளிரையே நியமனம் செய்து நடத்த முன்வந்தால் ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோலவே நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகளை நடத்த முன்வந்தால் அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

வணிகர்கள் கொடுக்கும் புகார்களை உடனடியாகக் கவனித்து விசாரணை செய்து, பாதுகாப்பும் நியாயமும் வழங்கிட இப்போது நடைமுறையிலே உள்ள காவல் துறை அமைப்பில் காலதாமதம் ஏற்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் உருவாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, வணிகர்கள் தரும் புகார்களை உடனடியாக விசாரித்து நியாயம் வழங்குவதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் (S.P. Office) தனிப் பிரிவு ஒன்றை (Police Special Branch for Traders) அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலே பெரும் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு அவர்களுக்கென்று நல வாரியம் ஒன்று அமைத்துள்ளது. இதில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகளிருக்கு மகப்பேறு நலன், பணி ஓய்வுகாலப் பயன்கள் போன்ற உதவிகளைப் பெற வழிவகை செய்யப் பட்டுள்ளது. இந்த வாரியத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களின் கோரிக்கைகளை ஏற்று இவர்களுக்குத் தனித் தனியாக நல வாரியங்களை அமைக்க முடிவு எடுக்கப்பட்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதைப்போலவே முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்கள் மிகுந்த எண்ணிக்கையில் இருப்பதைக் கருத்தில்கொண்டு அந்த இரு பிரிவினருக்கும் என தனித் தனியே நல வாரியம் அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலையில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாகக் குடியிருப்போருக்கு பட்டா வழங்க வேண்டும் என்று முடிவு எடுத்து, முதலில் 20 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு என்றும், பிறகு நிதிநிலை அறிக்கையிலே அதை 10 ஆண்டுகள் என்றும் குறைத்து அறிவிக்கப்பட்டது. இ°தன்னியில் இப்போது அதைப் பற்றிய விளக்கம் ஒன்றைத் தர விரும்புகின்றேன். உதாரணமாக ஒரு சர்வே நம்பரின் மொத்தப் பரப்பளவு 2 ஏக்கர் என்று வைத்துக் கொள்ளலாம். அதில் 30 குடும்பங்கள் வீடு கட்டியும், குடிசை போட்டும் வாழ்ந்து வருகிறார்கள். அவர் களுடைய அனுபவத்திலேயுள்ள மொத்தப் பரப்பளவு 1 ஏக்கர், 25 சென்ட். மீதி 75 சென்ட் இடம் காலியாக உள்ளது. 30 குடும்பங்களில் 15 குடும்பங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலும், 10 குடும்பங்கள் 7 ஆண்டுகளுக்கு மேலும், 5 குடும்பங்கள் 2 ஆண்டுகளுக்கு மேலும் குடியிருந்து வருகிறார்கள். இந்த 2 ஏக்கரும் அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலை இருக்கு மானால் பட்டா தர வேண்டும். அங்கு 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 15

குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல் 7 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 10 குடும்பங்களுக்கும், 2 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 5 குடும்பங் களுக்கும்கூட பட்டா வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அதே சர்வே நம்பரில் காலியாகவுள்ள 75 சென்ட் இடத்தையும்கூட அதே ஊரில் வீட்டுமனை இல்லாத தகுதியுள்ள ஏழையெளியோருக்கும் பிரித்து பட்டா வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிலவரி பாக்கிக்காகவும், கூட்டுறவுக் கடன் பாக்கிக்காகவும், மாவட்டங்களில் உள்ள வெவ்வேறு மட்டங்களில் அரசு அனுமதியின்றி ஜப்தி செய்து, ஜப்தியின் மூலம் வசூல் செய்வது என்று இதுவரை முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நடைமுறையை மாற்றி, இனி இதுபோன்ற நேர்வுகளில் அரசின் அனுமதி ஆணையின்றி, ஜப்தி நடவடிக்கையிலே யாரும் ஈடுபடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறையை மக்களுக்குத் துரிதகதியில் பணியாற்றும் துறையாக மாற்றுவதற்கு ஏதுவாக மாவட்டங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தையும், விவசாயி களுக்கு பட்டா வழங்கும் திட்டத்தையும் முனைப்புடன் செயல் படுத்துவோம் என்று நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், கூட்டு பட்டா வாங்கியிருப்பது புள்ளிவிவரங்களில் சேகரிக்கப்பட்டுள்ளது. அதில் பலர் தனி பட்டா வைத்துக் கொள்ள விரும்பியும், சில நிர்வாகக் காரணங்களால் அது இயலாமல் இருக்கிற நிலை என் நேரடி கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால், இந்தக் கூட்டு பட்டாவினை விரும்பாதவர்களுக்குத் தனி பட்டாவாகக் கொடுப்பதற்கு நிர்வாக நடவடிக்கையை முடுக்கிவிடுவதற்காக தீவிரப் பதிவு மாற்றம் மற்றும் உட்பிரிவு முனைப்புத் திட்டம் ஒன்றை இன்னும் ஆறு மாத காலத்திற்குள் செயல்படுத்தி முடித்திட உள்ளோம். இதன்மூலம் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பலனடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு 4ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள், புதிய படங்களுக்குச் செலுத்தும் வரி 30 விழுக்காட்டில் இருந்து 25 விழுக்காடாகக் குறைகிறது என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இந்த வரிச் சலுகை, இணக்க வரி செலுத்தும் திரையரங்குதாரர்களுக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, கேளிக்கை வரிச் சட்டம் 5(ஏ) மற்றும் 5 (பி)ன்படி விதிக்கப்படும் இணக்க வரியிலும் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும்.

தற்போது சித்த மற்றும் யுனானி மருந்துகளுக்கு வரி விலக்கு உள்ளது. திரு. குமாரதாஸ் அவர்கள், ஆயுர்வேத மருந்துகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று கோரினார். ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் பேசவில்லை. ஒரே ஒருவர் தான் குரல் கொடுத்தார். திரு. சுப்பராயன். அவர்கள் பேசும்போது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் பேசியிருக்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தாங்கள் பேரவைத் தலைவர். எப்போதும் பேசலாம். (சிரிப்பு) சுப்பராயன் அவர்கள் பேசும்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ன ஆயிற்று, இந்த ஆண்டு நிதியே ஒதுக்கப்படவில்லையா என்று கேட்டார். எப்படி சுப்பராயனே இந்தப் புத்தகத்தைப் படிக்காமல் இருந்தார் என்று தெரியவில்லை. ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை, புத்தக எண் 27, பக்கம் 99ல் இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 117.50 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த ஆண்டு இந்தத் தொகையை உயர்த்தித்தர கோரிக்கை வைக்கவேயில்லை. சுப்பராயன் மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவில் ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதை யாரும் கேட்காததால்தான் நிதிநிலை அறிக்கையில் நானும்

விட்டுவிட்டேன். ஏனென்றால், திட்டம் நிறைவேற்றினால், கட்டாயம் கேட்பார்கள். (குறுக்கீடு) சுப்பராயன் அவர்கள் மட்டும் ஒரு கோடி ரூபாய் தர வேண்டுமென்று கேட்டார். எனினும் இத்திட்டத்திற்கு இருக்கும் மக்கள் வரவேற்பை அனுசரித்து, கடந்த ஆண்டு தொகுதி ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ரூ.60 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நல்ல பல கருத்துக்களையெல்லாம் இந்த மாமன்றத்திலே இந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் எடுத்து வைத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவிலே அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

உரை : 30 நாள் : 2.2.2001

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது தொடர்ந்து நடைபெற்றுள்ள விவாதத்தில் இறுதியாக இன்றையதினம் சில கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைக்க நான் முன்வந்துள்ளேன். 1996 ஆம் ஆண்டு 4வது முறையாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்த ஆட்சியின் சார்பில் ஐந்தாண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளை இந்த மாமன்றத்தின் முன்னால் நான் வைத்திருக்கின்றேன். தற்பொழுது வைத்துள்ளது இடைக்கால நிதிநிலை அறிக்கைதான்.

இங்கே முதலில் இதயம் திறந்து சில கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அவையை இந்த ஐந்தாண்டு காலமாக பெருமளவுக்கு அமைதியாகவும், கண்ணியத்தோடும் கட்டுப்பாடாகவும் தங்களுடைய ஆற்றலால் நடத்திச் சென்றிருக்கிற பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் துணையாக இருந்து அவையின் துணைத் தலைமை பொறுப்பை ஏற்று, சீரோடு இந்த அவையை நடத்திய பேரவைத் துணைத் தலைவர் பரிதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு தக்க யோசனைகளைக் கூறுவதிலும், குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும் கண்ணியமான முறையைக் கடைப்பிடித்து, ஒத்துழைத்துள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஐந்தாண்டு காலம் என்னோடு ஒத்துழைத்து, துணை நிற்கின்ற பேராசிரியர் உள்ளிட்ட அமைச்சரவை

சகாக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்பால் அன்பும், பாசமும் கொண்டு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் ஒரே உணர்வோடு உரிமை கொண்டாடி, அன்பு காட்டி வரும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையினுடைய செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு உறுப்பினர்களையும் உற்சாகப்படுத்துகின்ற பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

இங்கே விவாதத்திலே கலந்துகொண்டவர்கள் பல்வேறு விஷயங்களை எடுத்து இங்கே குறிப்பிட்டிருந்தாலும்கூட, அடுத்து என்ன என்ற கேள்வியைக் கேட்டு, ''இதுதான் கடைசி யாக நீ இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிற காலகட்டம். இதற்கு மேல் நீ உட்கார முடியாது'' என்றெல்லாம் ஆரூடம் கூறி அல்லது சபித்து சிலர் தங்களுடைய உரையை நிகழ்த்தி யிருக்கிறார்கள்.நான் அதைப்பற்றி உள்ளபடியே கவலைப்பட வில்லை. அதற்காக நான் வருத்தம் கொள்ளவும் இல்லை. அவர்கள்மீது நான் ஆத்திரப்படவும் இல்லை. நான் முதலமைச்சர் பொறுப்பிலே உட்கார்ந்து 14 ஆண்டுகள் ஆட்சி நடத்தியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 14 ஆண்டுகள், இராமாயண இதிகாசத்திலே இராமன் பட்டபாடுதான். 14 ஆண்டுகள் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த 14 ஆண்டு காலத்தில், 1969 முதல் 1976 வரை 7 ஆண்டுகளும், 1989 முதல் 1991 வரை இரண்டு ஆண்டுகளும், 1996 முதல் 2001 வரை 5 ஆண்டுகளும் ஆட்சியிலே இருந்து வருகிறேன். இவற்றில் 5 ஆண்டு காலம் மட்டுமல்லாமல் நான் முதன் முதலில் 1969இல் என்னை ஆளாக்கிய என் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்று ஆட்சி நடத்திய 1969 முதல் 1971 முடிய தீட்டப்பட்ட திட்டங்களில் சிலவற்றை உங்கள் முன்னால் நான் நினைவூட்ட விரும்புகிறேன். கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத்திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், மகாத்மா காந்தியடிகளுடைய மனக்குறையை தீர்க்க இந்தியாவிலேயே முதன் முதலாக அவருடைய கொள்கையை நிறைவேற்ற தீட்டப்பட்ட திட்டம்தான் மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை ஒழித்த அந்தத்

திட்டமாகும். இன்னமும் இந்தியாவிலே சில மாநிலங்களில் கை ரிக்ஷா, மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷா இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

அடுத்து ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், ஆதிதிராவிடர் பெருங்குடி மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடு கட்டித் தருகின்ற திட்டம், குடிசை மாற்று வாரிய திட்டம், குடிநீர் வாரிய திட்டம், பேருந்துகளை நாட்டுடமையாக்கிய திட்டம், போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கிய திட்டம், தொடக்கத்தில் 18 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடைந்த இந்தத் திட்டம், இன்று 1 லட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய அளவுக்கு போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதை அறிவீர்கள்.

குடியிருப்பு மனைச் சட்டம் என்ற ஒரு புரட்சிகரமான சட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேதான் 1970 ஆம் ஆண்டு வாக்கிலே கொண்டு வரப்பட்டது. நிலங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், அந்த நிலக்கிழாருடைய தயவினால் அவர்கள் தருகின்ற மனையிலே குடியிருந்து, அவர்கள் விரட்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலையி லிருந்தது. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இந்தக் கொடுமை இருந்தது. இதை நீக்குவதற்காக குடியிருப்பு மனைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, அதனால் பயன்பெற்றவர்கள் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேர். அதிலே, ஆதிதிராவிடர்கள் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர்.

இந்தத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியதற்காக பொதுவுடைமை வீரர் மணலி கந்தசாமி அவர்கள் திருத்துறைப் பூண்டியிலே அந்த விழாவிலே கலந்துகொண்டு சொன்ன சொல் இன்னமும் என்னுடைய நெஞ்சிலேயே பதிவாகியிருக்கிறது. 'பல துளி இரத்தத்தைச் செலவழித்து கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. ''பல துளி இரத்தத்தால் சாதிக்க முடியாத ஒன்றை கருணாநிதி, ஒரு துளி மையினால் சாதித்திருக்கிறார்'' என்று குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பண்ணைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக தனி அமைச்சகம், பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்றை சட்ட நாதன் அவர்கள் தலைமையிலே அமைத்து, அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் முதல் தடவையாக பிற்படுத்தப்

பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாகவும், ஆதிதிராவிடர்களுடைய இட ஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாகவும் உயர்த்தினோம்.

அதைத் தொடர்ந்து முதலாவதாக இந்தியாவிலேயே போலீஸ் கமிஷன் அமைத்து, காவல் துறையில் உள்ளவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் போக்குவதற்கு வழி கண்டோம். அதைத் தொடர்ந்து அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு தரப்பட்டது. மின் இணைப்பு இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று இந்த அவையிலே சபதம் ஏற்று அதைச் செய்து முடித்தோம்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளித்தார். அதைத் தொடர்ந்து நாங்கள் புகுமுக வகுப்பு வரையிலே அனைவருக்கும் இலவச கல்வி என்று ஆணை பிறப்பித்தோம்.

தொழிலாளர்களுடைய புரட்சி தினமான மே தினத்திற்கு ஊதியத்தோடுகூடிய அரசுவிடுமுறை வழங்கப்பட்டது. நபிகள் நாயகம் பிறந்த நாளான மிலாது நபி திருநாளுக்கு அரசு விடுமுறை வழங்கப்பட்டது.

1500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கியமான சாலைகளோடு இணைப்பதற்கு, இணைப்புச் சாலைகள் திட்டம் என்று ஒன்றை உருவாக்கி, முதலில் 1500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைத்து, அதன்பிறகு 1000 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைத்து, இப்பொழுது 500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்கின்ற திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கி இருக்கின்றோம்.

பின்னர் 1971 முதல் 1976 வரை நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்; நான் முதலிலே சொன்னவைகள் எல்லாம் 1971 வரையிலே நிறைவேற்றப்பட்டவை. 1971க்கு பிறகு 1976 வரை 5 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்.

கோவையில் இந்தியாவிலேயே முதன் முதலாக வேளாண்மைப் பல்கலைக்கழகம், அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத்திட்டம்; அது முதலில் 10 ஆயிரம் ரூபாய் என்று தொடங்கி இன்றளவில் ஒரு இலட்சம் ரூபாய் என்று பெருகி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அரசு அலுவலர் இரகசியக் குறிப்பேடு முறை ஒழிப்பு, மீனவர்களுக்கு இலவச வீட்டு

வசதித் திட்டம், சிறார்களுக்கு ஆலயங்களில் கருணை இல்லங்கள்.

நீண்டகாலக் கனவாக இருந்த சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே வாதாடி போராடி, அம்மையார் இந்திராகாந்தி அவர்கள் தலைமையிலே நடைபெற்ற அந்த மாநாட்டிலே அதை வலியுறுத்தி, வெளிநடப்புக்கூட செய்து, அதன் காரணமாக உடனடியாக சேலம் உருக்காலை வழங்கப்பட்டதை அறிவீர்கள். நில உச்சவரம்புச் சட்டம், உச்சவரம்பு 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று திருத்தம் செய்யப்பட்டு 1,78,880 ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட்டது. 1,37,236 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் 61,989 பேர் ஆதிதிராவிடர்கள்.

நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்க மின் திட்டம், தூத்துக்குடி இரசாயன உரத்தொழிற்சாலை (ஸ்பிக்), சிட்கோ சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், இராணிப்பேட்டை, ஓசூர், இருங்காட்டுக்கோட்டை, திருபெரும்புதூர், பெருந்துறை, கும்முடிப்பூண்டி, கேளம்பாக்கம், செய்யாறு ஆகிய இடங்களில் சிப்காட் தொழில் வளாகங்கள், புஞ்சை நில வரி அறவே நீக்கப்பட்ட நிலை.

மனு நீதித் திட்டம், கிராமங்களுக்குச் சென்று அதிகாரிகள் மனுக்களைப் பெற்று ஆங்காங்கே பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற திட்டம், மனுநீதித் திட்டம், நிலக்கரி போக்குவரத்துக்காக, முக்கியமாக இறக்குமதிக்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தொடங்கிய அந்தத் திட்டம், இவைகள் எல்லாம் இந்த 5 ஆண்டு காலத்திலே நடைபெற்றன.

பின்னர் 1989 – 91 ஆம் ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், வருமான வரம்பிற்கு உட்பட்டு பெண் களுக்கும் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி. அடுத்து மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வருமான வரம்பிற்கு உட்பட்டு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி.

பெண்களுக்கு சொத்து உரிமை வழங்குகின்ற சட்டம், 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய தந்தையார் திரு. பி.டி. ராஜன்

அவர்களும் கலந்துகொண்டு டபிள்யூ.பி.ஏ. சௌந்தர பாண்டியன் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பெண்களுக்கு சொத்திலே சம உரிமை வழங்க வேண்டும் என்பதாகும். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி பெண்களுக்கு சொத்து உரிமை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆசியாவிலேயே முதன்முதலாக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கினோம். சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தபொழுதே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நாமெல்லாம் வருந்துகின்ற அளவிற்கு அவர்கள் மறைந்த பிறகு, அந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக இருந்து, நானே முன்நின்று நம்முடைய ஆட்சியிலே அன்றைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிவைத்த நிகழ்ச்சி, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு. ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், விதவைகளுக்கு திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு முதன்முதலாக இலவச மின்சாரம். (மேசையைத் தட்டும் ஒலி).

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு. அதற்காக நடைபெற்ற பெரும் போராட்டத்தில் பல வீரர்கள் வீழ்ந்தார்கள். பல குடும்பங்கள் நிர்க்கதியானார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு வழங்க டாக்டர் ராமதாஸ் அவர்களை அழைத்துப் பேசி, (மேசையைத் தட்டும் ஒலி) நானும் இன்றைய வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் அவரோடு விவாதித்து மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு என்ற அறிவிப்பு. அந்தப் போராட்டத்திலே உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதியுதவியாக 23 குடும்பங்களுக்கு 3 இலட்ச ரூபாய், தலா 3 இலட்ச ரூபாய், மற்றும் அந்தக் குடும்பங்களில் இறந்து போனவர்கள் போக

மிச்சம் இருக்கின்ற அவர்களுடைய வாரிசுகளுக்கு மாதந்தோறும் 1500 ரூபாய் ஓய்வூதியம் வழங்குதல்.

ஏற்கெனவே 18 விழுக்காட்டிலேயே பழங்குடி மக்களுக்கும் என்று இட ஒதுக்கீடு இருந்தது. அதை மாற்றி, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு என்றும், பழங்குடி மக்களுக்கு 1 விழுக்காடு என்றும் மொத்தம் 19 விழுக்காடாக ஆக்கப்பட்டது.

இதற்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு, 4வது முறையாக பொறுப்புக்கு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில் - அன்றைக்குக் கூட பேசும்போது திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு அரசு செய்யக்கூடிய சாதாரண பணிகளைத்தான் செய்திருக் கிறீர்கள் என்று, பெரிய பணிகளையும் செய்திருக்கிறோம். முக்கியமான சட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நான் இங்கே காட்டிய பட்டியல்களிலிருந்து நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

பெரிய திட்டமாக, தென்பகுதியிலேயுள்ள மாவட்டங்களை, அங்கேயிருக்கின்ற மக்களை வாழவைக்கக்கூடிய திட்டமாக, அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டமாக 8000 கோடி ரூபாய் முதலீடு செய்யக்கூடிய அளவிற்கு நாங்குனேரியில் சர்வதேச தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்ப பூங்கா ஒன்றிற்கு 11 ஆம் தேதி அடிக்கல் நாட்டுவிழா நடைபெற இருக்கிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றுகூட ஒரு பத்திரிகையில் ''திருமணத்திற்காக வரப்போகிற முதல்வருக்காக இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடிக்கல் நாட்டுவிழாவிற்குச் செல்கின்ற முதல்வர் ஒரு திருமணத்திலே கலந்துகொள்கிறாரேயல்லாமல், திருமணத்திற் காகச் செல்கின்ற முதல்வர் அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துகொள்ளவில்லை. ஏனென்றால், அதைப் பற்றிச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாங்குனேரி வளாகத்திற்காக 2200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. மத்திய அரசிடமிருந்து வெளிநாட்டு முதலீட்டிற்கான ஒப்புதல் பெறப்பட்டாகிவிட்டது. மத்திய அரசு இந்த வளாகத்தை ஏற்றுமதி வளாகம் என்றும்

அதற்குப் பிறகு சிறப்பு பொருளாதாரப் பகுதி என்றும் அறிவித்து அனுமதியும் வழங்கியுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் இந்த வளாகத்திற்கு தண்ணீர் வழங்குவது சம்மந்தமான திட்டத்தை முடிவு செய்துள்ளது.

இணைத் துறையிலே இந்த வளாகத்தை நடத்த அட்மாக் லிமிடெட் என்ற கம்பெனி உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள் இதுவரை இந்த வளாகம் தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்காக ஐந்து கோடி ரூபாய் செலவிட்டுள்ள தோடு நிறுவனத்தின் கணக்கில் ஏழு கோடி ரூபாயை டெபாசிட்டும் செய்துள்ளார்கள். இந்த அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கான தேதியையும் அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள் தான் என்னிடத்திலே கேட்டுப் பெற்றார்கள். அவர்களும் இந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்கள். இத்திட்டத்திற்கான மாஸ்டர் பிளானை சிங்கப்பூரைச் சேர்ந்த ஜெ.டி.சி. நிறுவனம் தயாரித்து அளித்துள்ளது. அமெரிக்க முதலீட்டாளர்கள் உலகின் தலைசிறந்த நிறுவனங்களை இந்த வளாகத்திற்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டிட்கோ நிறுவன அலுவலர்களும் இதற்காக அமெரிக்கா சென்று அமெரிக்கா முதலீட்டாளர்களைச் சந்தித்து வளாகம் அமைப்பதை இறுதி செய்துள்ளார்கள் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, டைடல் பூங்காவை தொடர்ந்து 20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 2ஆவது கணினி மென்பொருள் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகி இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கணினியைப் பற்றிப் பேசும்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெங்களூரிலே 9,000 கோடி ரூபாய், இங்கே 2,000 கோடி ரூபாய்தானே ஏற்றுமதியாகியிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மைதான். அது 9,000 கோடி ரூபாயா, என்னவென்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) 7,500 கோடியா? இங்கே 2,000 கோடி ரூபாய் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. சிங்கப்பூர் காரிடார் என்ற ஒன்று கடந்த காலத்தில் (கடந்த காலம் என்றால் உங்களுக்குத் தெரியும்) கடந்த காலத்திலே ஒன்று இங்கே வர இருந்து, அது பெங்களூருக்குப் போய்விட்ட மர்மமும் உங்களுக்கெல்லாம் தெரிந்த உண்மைதான். அதன் காரணமாக நாம் வளர

வேண்டிய நேரத்தில் கணினி துறையில், சாஃப்ட்வேர் துறையில் வளர முடியாமல் போய்விட்டது. எனவே அவர்கள் முன்கூட்டியே வளர ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே 7,000 கோடி ரூபாய் அல்லது 8,000 கோடி ரூபாய்க்கு அவர்களால் ஏற்றுமதி செய்ய முடிகிறது.

நான் சொல்கிறேன் 1995 ஆம் ஆண்டு நம்முடைய ஏற்றுமதி மதிப்பு 12 கோடி ரூபாய். இந்த நான்கு ஐந்து ஆண்டுகால வளர்ச்சியில் நாம் எடுத்த ஆக்கப்பூர்வமான ஆர்வம் மிகுந்த செயல்பாடுகள் காரணமாக ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய்க்கான ஏற்றுமதி இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சுணக்கத்திற்குக் காரணம் நாம் அல்ல என்பதையும், ஆனால் சுறுசுறுப்புக்குக் காரணம் நாம்தான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

உழுவோரும் நுகர்வோரும் பயன்பெற 14-11-2000க்குள் 100 உழவர் சந்தைகள். தொழில் முதலீடுகள் இந்தியாவிலேயே நாம்தான் முதல் இடம்; இந்தியாவிலேயே மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் பணியாற்றுவதில் நாம்தான் முதல் இடம்; அமெரிக்காவிற்குச் செல்ல உலகிலேயே விசா பெறுவதில் நாம்தான் முதலிடம்.

தம்பி செல்லக்குமார் கூட அதைப் பற்றிப் பேசும்போது, இந்த கணினி அல்லது சாஃப்ட்வேர் எல்லாம் தானாக வளர்ந்தது, நீங்கள் ஒன்றும் வளர்த்துவிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்கும் சொல்கிறேன், மற்றவர்களுக்கும் சொல்கிறேன். இந்தியாவிலேயே எங்கேயும் எந்த ஒரு மாநிலத்திலும் மாணவர்களுக்கு கணினி கற்பிக்கின்ற காரியம் தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் நடைபெற வில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கல்லூரிகள் மற்ற பள்ளிகளிலே சேர்ந்து 1 இலட்சம் மாணவர்கள் இன்றைக்கு கணினி கல்வி பெறுகிறார்கள் என்றால் கல்வித் துறையின் மூலமாக, தனியார் துறையைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தை இந்த ஆட்சி கடந்த ஓராண்டு காலத்திலே செய்து முடிக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால்தான் அமெரிக்காவிற்குச் செல்ல உலகிலேயே விசா பெறுவதில் தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக தனி கொள்கையை அறிவித்த முதல் மாநிலமும் தமிழ்நாடுதான். அதுமாத்திரம் அல்ல, இந்தியாவிலேயே முதன்முதலாக உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தனிக்கொள்கையை அறிவித் திருப்பதும் நாம்தான். மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்கப்பட்டிருக்கிறது. மாநில உயிரியல் தொழில்நுட்ப வாரியம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்திய மாநிலங்களில் உணவு உற்பத்தியில் முதலிடம் தமிழ்நாட்டுக்கு, 1995-96ல் 64 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த தமிழ்நாட்டினுடைய உணவு உற்பத்தி 1998-99இல் 94 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தித் திறனிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. பிறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. சிசு மரண விகிதத்தைக் குறைத்துள்ளதிலும் தமிழகம் சாதனை புரிந்துள்ளது. ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் கடந்த காலத்தில் Single Tender முறை இருந்தது. அதை மாற்றியதால் ஆண்டு ஒன்றுக்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறையில் 100 கோடி ரூபாயும், மின் வாரியத்திலே 100 கோடி ரூபாயும் நம்மால் சேமிக்க முடிந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மருத்துவக் கல்லூரிகள் நான்கு, ஏற்கெனவே இரண்டு திறக்கப்பட்டுவிட்டன; மேலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்றொன்று வேலூரில். இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் போன்றவைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய 4,774 பயனாளிகளுக்கு இதுவரையில் சுமார் 8 கோடி ரூபாய் உதவி செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களை நாடிச் சென்று சிகிச்சை அளிக்கும் வரும்முன் காப்போம் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 விழுக்காடு; உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல். கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல். மனிதக் கழிவுகளை மனிதனே

சுமக்கும் அவல நிலை அகற்றப்பட்ட நிலை; பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். இந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 415 கோடி ரூபாய், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், மகளிருக்காக, 10 இலட்சம் மகளிர்கள் உறுப்பினராகக் கொண்ட 58,391 மகளிர் சுய உதவிக் குழுக்கள். சேமிப்புடன் கூடிய மகளிர் சிறுவணிகர் கடன் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம்.

சென்னையிலே அண்ணா மேம்பாலம், நெல்லையில் ஈரடுக்குப் பாலம், திருமானூர் பாலம், கோவையில் மேம்பாலம், பாம்பன் பாலம் தொடங்கி தற்போது சென்னையில் 115 கோடி ரூபாய் செலவில் 10 மேம்பாலங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதிலும் 1947 முதல் 1996 வரை 195 பாலங்கள்தான்; கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 601 பாலங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1969 முதல் பாலாறு, பொரந்தலாறு, வரதமாநதி, மருதாநதி, பரம்பிக்குளம், ஆழியாறு, சிற்றாறு பட்டினங்கால், பொய்கையாறு, நம்பியாறு, மோர்தானா உள்ளிட்ட 55 பாசனத் திட்டங்கள். 1998இல் காவிரி நீர் ஆணையம், நடுவர்மன்றம், உச்ச நீதிமன்றம் செல்ல ஒரு பிடிப்பு. நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். காவிரி நீர்ப் பிரச்சினை உங்களது காலத்திலே தீரும் என்று கருதினோம். தீரவில்லை என்று சொன்னார்கள். என் காலமே இன்னும் தீரவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவசரப்பட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவரி நீர்ப் பிரச்சினையில் நாம் பாதுகாப்பாக இருக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, சட்டப்பூர்வமாக அவ்வளவு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லா மாநிலங்களையும்விட பேருந்துக் கட்டணம் தமிழ்நாட்டில்தான் குறைவு என்பதை அனைவரும் அறிவீர்கள். மினி பஸ் திட்டத்தின் மூலம் 3030 கிராமங்களுக்கு இன்றைக்கு பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. 1957ஆம் ஆண்டு நான் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, இந்த மினி பஸ் திட்டம் என்னுடைய மூளையிலே உதித்தது. அப்போது குளித்தலைத் தொகுதி என்பது கரூரில் தொடங்கி கிட்டத்தட்ட திருச்சி எல்லைவரை உள்ள தொகுதி. அவ்வளவு

பெரிய தொகுதி. அந்தத் தொகுதியிலே மிக மிக மோசமான கள்ளிக் காடுகள் நிறைந்த கிராமங்கள் ஏராளமாக உண்டு. அங்கே எல்லாம் பேருந்துகள் செல்வதில்லை. அங்கே வேன்களை, சிறு சிறு பஸ்களை, யாரோ சிலபேர், தனியார்கள் வாடகைக்கு விட்டு அதிலே 50 பேர், 100 பேர் தொத்திக்கொண்டு சென்று ஆங்காங்கே கவிழ்ந்து பல பேர் செத்து மடிந்த கொடுமைகளை எல்லாம் நான் அப்போது பார்த்திருக்கிறேன். அன்றுமுதல் எனக்கு ஒரு நினைவு. ஏன் இப்படிப்பட்ட சிறிய பஸ்களை அரசின் சார்பில் விடக்கூடாது என்று. அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மினி பஸ் திட்டத்தை நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, அமைச்சரவைக் கூட்டத்திலே அதைப்பற்றி விவாதித்து, இன்றைக்கு 3030 மினி பஸ்கள் தமிழ்நாட்டில் விடப்பட்டு எல்லா கிராமங்களும் பெரும்பயன் அடைகின்றன.

கிராமங்களில் இருக்கின்ற இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் - இந்தச் செயலால் அறவே வேலைவாய்ப்பு இன்மை நீங்கிவிடும் என்று நான் உறுதியளிக்க விரும்பவில்லை. இருந்தாலும் அவர்கள் வேறு திசையிலே திரும்பாமல் நல்ல திசையிலே அவர்கள் திரும்புவதற்கு விளையாட்டு மையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இளைஞர் நலத்துறை சார்பாக 7000 இடங்களில் தமிழ்நாட்டிலே இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக விளையாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்குத் தெரியும் கிலோ அரிசி ரூபாய் 3.50க்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், மேலே உள்ளவர்களுக்கும் என்று எந்த வேறுபாடும் இல்லாமல் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மாத்திரம்தான் வழங்கப் படுகிறது என்கிற உண்மை உங்களுக்குத் தெரியும்.

மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் 214 அமைக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட லிட்டருக்கு 60 காசு குறைத்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்திருப்பதும், அப்படியே விற்பனையாவதும் உங்களுக்குத் தெரியும்.

தியாகிகளையும் சான்றோர்களையும் போற்றுவிக்கும் வகையில் மணிமண்டபங்கள், நினைவகங்கள், சிலைகள், நூல்கள் நாட்டுடைமை, இவைகள் எல்லாம் நடைபெற்றிருக்

கின்றன. இந்த 4½ ஆண்டுக் காலத்தில், ஏற்கெனவே 1969 முதல் 1976 வரை நடைபெற்றது. இப்போதும் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது.

60-க்கு மேற்பட்ட பல்வேறு வகை தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், இது தவிர மேலும் 10 தனித் தனி நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம். மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் குடிசைகளில் குடும்பத்தினருக்கு கல்நார் வீடுகள். சுமார் 60 கோடி ரூபாய் செலவில் 9 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள். வணிகர்களுக்கு தொலைநோக்கு வரிக்கொள்கை, 1996-க்குப் பின் இதுவரையில் 2,60,654 தொகுப்பு வீடுகள், குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டித்தரப் பட்டிருக் கின்றன. 'மெட்ராஸ்' சென்னை என பெயர் மாற்றப்பட்டது. தமிழ் இலக்கிய சங்கப் பலகை குறள்பீட விருது வழங்கப்பட்டது. 1996-க்குப் பின் 2459 கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்றிருக்கிறது. திருக்கோவில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு காரியங்கள் நடைபெறுகின்றன. அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி சிலை, சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து குமரி முனையிலே திறந்து வைக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப உதவித் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்களுக்கு மத்திய அரசின் 5-வது ஊதியக் குழு பரிந்துரை அடிப்படையில் வரலாறு காணாத ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. ஆசிரியப் பெருமக்களுக்கு அவ்வாறே சலுகைகள், இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு முன்னுரிமைப்படி செய்யப்பட்டிருக்கிறது. 10,12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமப்புற மாணவர்களுக்கு தொழில் கல்விப் பிரிவுகளில் 15 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து ஒவ்வொரு வகைத் தொழில்

கல்விப் பிரிவிலும் சேர விரும்பும் முதல் பத்து நிலை மாணவர்களின் செலவை அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரியில் சேர ஒற்றைச் சாளர முறை கடைப்படிக்கப்படுகிறது.

சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம், சென்னையில் அண்ணல் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர், பழங்குடியினர், சிறுபான்மையினர் நலம் பெற குழுக்கள், பல்வேறு திட்டங்கள் - உருது அகாடமி, அதனுடைய செயல்பாடுகள், பின்னடைவு பணியிடங்கள் முன் தேதியிட்டு நிரப்ப முடிவு செய்து வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மொத்தம் 11,264 இடங்கள் பின்னடைவு இடங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு, இந்த ஆண்டு முதற் கட்டமாக 2,374 இடங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே ஆதிதிராவிடர்களுடைய இடங்கள் 1,467 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் டெட்ராய்ட் என்று கூறக்கூடிய அளவிற்கு போர்டு, ஹூண்டாய், மிட்சுபிஷி கார் தொழிற்சாலைகள் உருவாகியிருக்கின்றன. சென்னை, திருச்சி, மதுரை, நெல்லை, கரூர், தஞ்சை, திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், உதகமண்டலம், கொடைக் கானல் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்துதல், நீர்க்கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றைத் தூர் வாருதல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல், 1,700 கோடி ரூபாய் செலவில் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியோடு ஒரு மிகப்பெரிய திட்டம் செயல்படுத்தப்பட அறிவிக்கப்பட்டு, அதற்காக மத்திய அமைச்சரவை அதனுடைய ஒப்புதலையும் வழங்கியிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளுக்கு, கழக அரசால் வழங்கப்பட்ட மிகப் பெரிய சலுகைகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், விவசாயிகளைப்பற்றி நிறைய இங்கே பேசப்பட்டிருக்கிறது. கவர்னர் உரையிலே நடைபெற்ற விவாதத்தில், குறிப்பாக வீரப்பனைப் பற்றித்தான் பேசப்பட்டது. இந்த விவாதத்திலே நிறைய விவசாயிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். வீரப்பனைப் பற்றிப் பேசியதற்குச் சில விளக்கங்களை அளித்துவிடுவது நல்லது என்று

கருதுகின்றேன். ஏதோ, 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் வீரப்பனைப் பிடிக்கின்ற செலவு, போலீசாருக்காக இதுவரையிலே ஆகியிருக்கிறது என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அது ஒரு வேளை அறியாத காரணத்தால் செய்யப்படுகிற பிரச்சாரமாக இருக்கலாம். அறிந்து வேண்டுமென்றே செய்யப்படுகின்ற பிரச்சாரமாக நான் கருதவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தரையிலே, 1993-94 முதல் 31-12-2000 வரை தமிழகத்தில் சிறப்பு அதிரடிப்படைக்கான செலவு, ஊதியம் படிகள் அனைத்தும் சேர்த்து, வீரப்பனைத் தேடிச் செல்கின்ற அந்தக் காவல் துறைக்கான செலவு, அவர்களுடைய மாதச் சம்பளம் எல்லாம் உட்பட, 7 கோடியே, 42 இலட்சத்து, 75 ஆயிரத்து 385 ரூபாய். 7 கோடியே 42 இலட்சம். கர்நாடகத்தினுடைய செலவு, 1993-94 முதல், அக்டோபர் 2000 வரை, கர்நாடகத்தில் சிறப்பு அதிரடிப்படைக்கான செலவு ஊதியம் படிகள் சேர்த்து, அந்தப் படைக்கான ஊதியம் எல்லாம் சேர்த்து, 20 கோடியே, 24 இலட்சத்து, 30 ஆயிரத்து 840 ரூபாய் கர்நாடகத்திற்கு ஆகியிருக்கிற செலவு. தமிழகத்திற்கு ஆகியிருக்கிற செலவு 7 கோடியே 42 இலட்சம் ரூபாய்.

ஏதோ, வீரப்பனிடத்திலே அணுகியிருக்கின்ற தீவிரவாதி களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், நிறைய தொடர்பு இருப்பதைப்போல இந்த அவையிலே பேசப்பட்டது. நேற்றைக்குக்கூட இது பேசப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் அறிக்கைகள் அவ்வாறு விடப்படுகின்றன. நான் அவர்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். சொல்லத் தேவையில்லை; இருந்தாலும் சொல்ல விரும்புகிறேன்; தமிழ் தேசிய மீட்புப்படையான டி.என்.ஆர்.டி., தமிழ்நாடு விடுதலைப்படை – டி.என்.எல்.ஏ. – என்று இரண்டு தீவிரவாத இயக்கங்கள் 1984 – 85 லேயிலிருந்து இருக்கின்றன. அதிலே அப்பொழுது எல்லாம் அதிகம் பேர் கைது செய்யப்படவில்லை. இப்பொழுது, அந்தத் தமிழ் தேசிய மீட்புப் படையின் சார்பிலே உள்ளவர்கள் 25 பேரும், தமிழ்நாடு விடுதலைப்படையின் சார்பிலே உள்ள தீவிரவாதிகள் 141 பேரும் கைது செய்யப்பட்டு, சிறையிலே இருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த இரண்டு தீவிரவாத இயக்கங்களையும் தடை செய்ய வேண்டுமென்று தமிழக அரசு, மத்திய அரசுக்கு

16–12–2000 அன்று கடிதம் எழுதியிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். 3.1.2001 அன்று மத்திய அரசு அதைப்பற்றி வேறு சில விவரங்களைக் கேட்டு, கடிதம் அனுப்பியிருக்கிறது. அந்த விவரங்களும் அனுப்பப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு இனியாவது ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று நண்பர்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே முதன்முதலாக 1990ஆம் ஆண்டுதான் 16 இலட்சம் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் மறந்திருக்க முடியாது. 1995-96இல் நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றிற்கு மோட்டா ரகம் 360 ரூபாய், சன்ன ரகம் 375 ரூபாய், 1.9.2000 முதல் குவிண்டால் ஒன்றிற்கு மோட்டா ரகம் 510 ரூபாய், சன்ன ரகம் ரூபாய் 540 ரூபாய், மத்திய அரசு நிர்ணய விலையை விட குவிண்டால் ஒன்றிற்கு 40 ரூபாய் இடைநிகழ் செலவாக அரசு வழங்கி வருகிறது. இது ஏகபோக கொள்முதலாக இருக்குமே யானால் 50 ரூபாய் வழங்கப்படுகிறது. இரண்டாம்தர நெல்லுக்கு, தர வெட்டுத்தொகை ரூபாய் 15 லிருந்து 5 ரூபாயகவும் மூன்றாம்தர நெல்லுக்கு 20 ரூபாயிலிந்து 10 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மைய அரசு நிர்ணய விலையைவிட முந்தைய அரசினால் கரும்பு டன் ஒன்றிற்கு ரூபாய் 50, ரூபாய் 60 என்ற அளவிலேயே விலையை உயர்த்தி பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த அரசுதான் மைய அரசு நிர்ணயித்த விலையைவிட டன் ஒன்றிற்கு ரூபாய் 180 கூடுதலாக பரிந்துரை விலையை நிர்ணயித்து உள்ளது.

சர்க்கரைக் கட்டுமானத்தைப் பொறுத்து, 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு 1995-96இல் முந்தைய அரசு பரிந்துரை விலை ரூபாய் 560. தற்போது கழக அரசு பரிந்துரை விலை ரூபாய் 740. 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிர்க் கடன், கூட்டுறவுக் கடன் கரும்பு விவசாயி ஒருவருக்கு 45 ஆயிரம் என்பது 55 ஆயிரமாகவும்,

இதர பயிர்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் என்பதும் 35 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-98 கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கழக அரசு வழங்கிய முன்பணம் 76.41 கோடி ரூபாய். 1998-99இல் இத்தொகை ரூபாய் 210 கோடி ரூபாய். 1999-2000 ஆம் ஆண்டிற்கு 30 கோடி ரூபாய், இப்போது மீண்டும் வழங்கப் பட்டிருக்கிறது. டிசம்பர் 1996இல் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக விளைபொருள் இழப்பிற்காக கழக அரசால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை 55.15 கோடி, இதன் மூலம் பயன்பெற்ற விவசாயிகள் 10 இலட்சத்து 5 ஆயிரத்து 166 பேர். மீண்டும் நவம்பர் 1997இல் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக, விவசாயிகளுக்கு கழக அரசால் வழங்கப்பட்ட பயிர் இழப்பீட்டுத் தொகை, வெள்ள நிவாரணம் உட்பட ரூபாய் 59 கோடி. இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 297.

மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் இன்ஜின்களுக்கு பதிலாக 5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் இன்ஜின்கள் வாங்க சிறு விவசாயிகளுக்கு, 25 விழுக்காடு அளவிற்கும், மிக, மிகச் சிறு விவசாயிகளுக்கு 30 விழுக்காடு அளவிற்கும், தாழ்த்தப்பட்ட மலைவாழ் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு அளவிற்கும் மானியத் தொகை கழக அரசால் வழங்கப்படுகிறது. கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும் கடன் தொகைக்கு விதிக்கப்படும் 13 சதவிகித வட்டி, 12 சதவிகிதமாகவும் 50 ஆயிரம் ரூபாய்வரை கடன் தொகைக்கு விதிக்கப்படும் 16 சதவிகித வட்டி 15 சதவிகிதமாகவும் குறைப்பது என்று 24.10.2000 அன்று அமைச்சரவையின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இ்தன்னியில் வட்டியைக் குறைப்பதற்காக வட்டியை அறவே இரத்து செய்ய முடியாத சூழ்நிலை NABARD காரணமாக நமக்கு ஏற்பட்டிருக்கிறது. வட்டியினுடைய தொகையைக் குறைப்பதற்காக நாம் ஊக்கத் தொகையாக தருவதன் மூலமாக 12 சதவிகித வட்டி என்பது நாம் தருகின்ற ஊக்கத் தொகையின் காரணமாக 7 சதவிகிதம் கொடுப்பதால், 5 சதவிகிதம் வட்டியாகக் குறைகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோல வணிகர்கள், வணிகர்களை அழைத்து வைத்துப் பேசிதான், கடந்த 2 ஆண்டு காலமாக தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையை தயார்செய்து, அவர்கள் கோருகின்ற சலுகைகள், அவர்களுடைய கோரிக்கைகள் இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து, தக்க தீர்வு கண்டு அந்த வகையிலேதான் வரி விதிப்பதை திராவிட முன்னேற்றக்கழக அரசு ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அதைப்போல, விவசாயிகளை அழைத்து வைத்துப்பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அவைகளையும் நிதிநிலை அறிக்கையிலே நாம் வெளியிட்டிருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகின்றேன். கடந்த காலத்திலே இந்த அவையில் 1996-1997, 1997-1998 வரையில் என்று வைத்துக்கொள்ளலாம். ஏராளமான பாராட்டுக்கள், நானே கூட எழுந்து வெளியிலே சென்று விடலாமா என்ற அளவிற்கு, வெட்கப்படுகின்ற அளவிற்கு ஏராளமான பாராட்டுக்கள். எதிர்க்கட்சியானாலும் சரி, தோழமை கட்சிகளானாலும் சரி, எல்லா கட்சிகளின் சார்பிலும் அப்படிப்பட்ட பாராட்டுக்கள் எனக்கு குவிந்தன. அண்ணா சொல்வதைப் போல, எனக்கு அந்தப் பாராட்டுக்கள் எல்லாம் வரும்போது, நான் மிகவும் உங்களுக்கு கடன்பட்டிருக்கின்றேன் என்று அப்போது எண்ணினேன். ரொம்ப கடன்படுகிறேனே, இவ்வளவு பாராட்டுகிறார்களே, என்ன செய்வது. எப்படி திருப்பிக் கொடுக்கப் போகிறோம் என்று எண்ணினேன். நல்லவேளையாக அவைகளை எல்லாம் குறைத்துக்கொண்டு பாராட்டுவதற்கு பதிலாக என்னை தாக்கி சில பேர் பேசி இருக்கிறீர்கள். அப்போதும் கடன் தீர்ந்ததாக சொல்ல முடியாது. பாராட்டுத்தான் அதிகம். இப்போது குறை சொல்வது குறைவு. திட்டுவது குறைவு, தாக்குவது குறைவு. இன்னும் கடன் தீரவில்லை என்ற கவலை எனக்கு இருக்கின்றது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 14 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்து, எந்தவொரு நேரத்திலும் ஆணவமாக நான் செயல்பட்ட தில்லை. உங்களுடைய கோரிக்கைகளை நான் அலட்சியப் படுத்தியதில்லை. உங்களை ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள், நான் முதலமைச்சர், நாங்கள் எல்லாம் அமைச்சர்கள் என்ற அளவிலே என்றைக்கும் உங்களைப் பார்த்ததில்லை. எல்லா

நேரத்திலும் நான் எப்படி எங்கள் திராவிட முன்னேற்றக் கழக தோழர்களை உடன்பிறப்புக்கள் என்று அழைக்கின்றேனோ, அந்த உடன்பிறப்புக்களாகத்தான் உங்களையெல்லாம் கருதிக்கொண்டிருக்கின்றேன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த 14 ஆண்டுக்காலம் செயல்பட்டு இருக்கின்றேன். குறைவுகள் இருக்கலாம். ஆனால், இந்த 14 ஆண்டுக்கால ஆட்சியில், குற்றங்கள் என்று சொல்லப்பட்டு, ஊழல்கள் என்று சொல்லப்பட்டு, அவை நிரூபிக்கப்பட்டன என்ற எந்த சான்றும் கிடையாது என்பதும் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும் நீங்கள் சொன்னவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டிருக் கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

பனியன் வரியை குறை என்று சொன்னால், குறைத்திருக் கிறோம். கோட்டை அமீருக்கு நிதி கொடு என்று சொன்னால், பதக்கம் கொடு என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால் கொடுக்கிறோம். அது மாத்திரம் அல்ல; அவர்களுக்கு வீடு கொடு என்று கட்டளையிட்டார். வீடு கொடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. வீடும் கொடுக்கப்பட்டு விட்டது. அவர்கள் குடும்பத்தினருக்கு வேலை கொடு என்று சொன்னார், அவர்களுக்கு வேலையும் கொடுக்கப்பட்டு விட்டது. இப்படி நான் ஒவ்வொன்றாகச் சொல்லவிரும்பவில்லை. தனிப்பட்ட முறையிலும் சரி, நண்பர்கள் என்ற முறையிலும் சரி, அங்கத்தினர்கள் அல்லது அவையின் உறுப்பினர்கள் என்ற முறையிலும் சரி, நீங்களும் ஆட்சியில் ஒரு அங்கம், என்கின்ற முறையில் எல்லோருக்கும் எங்களால் ஆன எங்களுடைய கடமைகளை ஆற்றியிருக் கிறோம்.

இதிலே சில நேரங்களில் நானோ, அமைச்சர்களோ ஆத்திரப்பட்டுப் பேசியிருந்தால் அவைகளையெல்லாம் நீங்கள் பொருட்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏதும் ஏற்படவில்லை. உங்களுடைய ஆத்திரத்தைத்தான் நாங்கள் தாங்கிக் கொண்டிருந்திருக் கிறோமே அல்லாமல் எங்களுடைய ஆத்திரம் எதுவும் வெளிப்பட்டுவிடவில்லை என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நேற்றைக்குக்கூட இந்த அவையிலே நிதிநிலை அறிக்கை ஒரு குப்பைக் கூடையிலே போடப்பட்டது என்று நான் கேள்விப்பட்டேன். குப்பைக் கூடையை நான்

கேவலமாகக் கருதுபவனல்ல. 'குப்பைத் தொட்டி' என்ற பெயரில் நானே ஒரு கதை எழுதி, அது பல மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டு, பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உலக மொழிகளிலே எல்லாம் 'குப்பைத் தொட்டி' மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனை நம்முடைய அழகிரி போன்றவர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன், பெயர் தான் குப்பைத் தொட்டி, ஆனால் அதிலே பல விஷயங்கள் இருக்கும். ஒரு குப்பைத் தொட்டியிலே என்னென்ன இருக்கும் என்று அதிலே போடப்படுகின்ற காகிதங்களிலே உள்ள ஒவ்வொன்றும் கதை சொல்வதைப்போல ஒரு சிறுகதை எழுதி யிருந்தேன். அது இந்தியில், மலையாளத்தில், கன்னடத்தில், தெலுங்கில், ஆங்கிலத்தில் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டு பலருடைய பாராட்டைப் பெற்ற கதை. அதனால் குப்பைத் தொட்டியிலே போட்டதால் நான் ஒன்றும் வருத்தப்படவில்லை. எனக்குள்ள வருத்தமெல்லாம் அந்த நிதிநிலை அறிக்கையிலே கருணாநிதி என்ற பெயர் இருக்கிறது என்பதால் அதைக் குப்பைத் தொட்டியிலே போட்டால் நான் வருத்தப்படப் போவதில்லை. நான் மிகவும் கேவலம், அவ்வளவு பெரிய ஆள் அல்ல. என்னைக் குப்பைத் தொட்டியிலும் போடலாம், சாக்கடையிலும் போடலாம். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படக்கூடியவன் அல்ல. அண்ணாவைப் போல எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்கின்ற அந்தக் கொள்கையைப் பின்பற்றி நடந்து கொண்டிருப்பவன் நான். ஆகவே, நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எனக்குள்ள வருத்தம் எல்லாம் அதிலே, அந்த நிதிநிலை அறிக்கையிலே, திருவள்ளுவருடைய குறளும் இருக்கிறதே. அதைக் குப்பைத் தொட்டியிலே போடலாமா? பெரியார் சமத்துவபுரத் திட்டம் இருக்கிறதே, அதைப் போடலாமா? அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இருக்கிறதே, அவருடைய பெயர் இருக்கிறதே, அதைப் போடலாமா? அருமை நண்பர் எம்.ஜிஆர் சத்துணவுத் திட்டமும் அதில் இருக்கிறதே? அதைக் குப்பைத் தொட்டியிலே போடலாமா? தியாகிகள் - பெருந் தலைவர் காமராஜருடைய பெயர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தினுடைய பெயர், அண்ணல் அம்பேத்கர் பெயர், அழகுமுத்துக்கோனுடைய பெயர், மற்றும் தலைவர்களுடைய பெயர்களெல்லாம் அடங்கிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

G00 2370

இதையெல்லாம் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டார்களே என்பதுதான் எனக்குள்ள வருத்தம். அதையெல்லாம்விட எனக்கு இன்னொன்று 77 இலட்சம் ரூபாய் கொடுக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். அதையும் போட்டு தன்னையும் குப்பைத் தொட்டியிலே போட்டுக் கொண்டு விட்டார்களே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்கின்ற அந்தக் கவலையும் எனக்கு உண்டு என்பதைச் சொல்லி நான் கேள்விப்பட்டேன், நேற்றைக்கு நம்முடைய அக்கா பொன்னம்மாள் அவர்கள் பேசிய பேச்சை பத்திரிகையிலே படித்தேன். நான் அவைக்கு வர இயலவில்லை. ஒரு தாய் உள்ளத்தோடு அவர்கள் பேசிய பேச்சுக்கு என்னுடைய கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டசபை யினுடைய கட்சித் தலைவர் தம்பி கணேசன் அவர்கள் பேசிய பேச்சும் என்னை ஊக்கப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. என்னை குறை சொல்லி சிலர் பேசிய பேச்சுக்கள் எல்லாம்கூட என்னை ஊக்கப்படுத்துவதற்காகத்தான் என்று நான் எடுத்துக் கொள்ளவேன் என்று கூறி உங்களுக்கெல்லாம் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி தெரிவிப்பதால், நாளைக்கு, நன்றி தெரிவித்துவிட்டார்; அவ்வளவுதான்; "கடைசியாக நன்றி தெரிவித்துவிட்டார் விடை பெற்றுக்கொண்டார்'' என்று யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. மீண்டும் சந்திப்போம் வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

894.8115
TAM

